UNIVERSAL
LIBRARY
OU_208221
UNIVERSAL
LIBRARY

OSMANIA UNIVERSITY LIBRARY

Call No. TM894.801 S94T Accession No. TM 490

Author Subramania Pillai K.

Title Tamizhppodal Tiraththu Vol. II

This book should be returned on or before the date last marked below.

பல வித்துவான்கள் பாடிய

தனிப்பாடற் றிரட்டு

இரண்டாம் பாகம்

தமிழப பேராசிரியரும், தாகூர சட்ட விரிவுரையாளருமாகிய
திருநெலவேலி
கிரு. கா. சுப்பிரமணிய பிள்ளை அவர்கள்
(எம் ஏ., எம. எல்., அட்வகேட)

இயற்றிய

உரையுடன்

சென்னை:
B. இரத்தின நாயகர் ரன்ஸ்
அவர்களால் பதிப்பிக்கது.

காபிரையிட்] 1955 [விலை ரு. 5–0–0.

திருமகள் விலாச அச்சகம்,
சென்னை—1.

முன்னுரை

சுமார் சென்ற இரண்டு மூன்று நூற்றாண்டுகளுள் தமிழுலகில் வாழ்ந்து நயம் நிறைந்த பலவகைச் செந்தமிழ்ப் பாடல்களியற்றிய சிறந்த பாவலர்களது தேர்ந்தெடுத்த அரிய கவிகள் இப்பகுதியிற் றொகுக்கப் பெற்றுள்ளன. பல கவிகளுக்கு அவற்றின் ஆசிரியர் திருப்பெயர் கண்டுபிடிக்கப்பெற்றுக் குறிக்கப்பெற்றுள்ளன. இப் பாகத்தின் பாதிப் பகுதி ஆசிரியர் பெயர்களோடு இலங்குவதாகும். இங்கே தொகுக்கப்பெற்ற பாடல்களின் ஆசிரியர்கள் பல சமயங்களையும், பல மரபுகளையுஞ் சார்ந்தவர்கள். பல வேறு வகைப்பட்ட அரும் பொருள்களைப்பற்றி யவர்கள் பாடியுள்ளார்கள். அவர்கள் பாடல்களால் பல வள்ளல்களின் பெயர்கள் உலகத்திற் புலனாகின்றன.

இதன்கண் பல தெய்வங்களைப் பற்றிய துதிகளோடு தமது ஆற்றல் தெரியாதாரிடம் சரணம் பெருமாட் கவிராயர்போலத் தற்புகழ்ச்சியை அழகாகப் பாடுமுறை, உலகியலைப் படமெடுத்துக் காட்டுவது போன்ற லோபிகளினியல்பு, வறுமையின் அல்லல், மாதர்களினியற்கை நுட்பங்கள், கள், ஊணுண்பாரது இயல்பு, கால மழையின் கபடம், துறவிகளின் வஞ்சக வொழுக்கம், அகத்துறை நயங்கள், மனித வியற்கை நுட்பங்கள் முதலிய அரும் பல பொருள்களின் வருணனை இயற்கையை இற்றெனக் கிளக்கும் சிறப்பு வாய்ந்திருப்பன.

தெய்வங்களின் நிந்தாஸ்துதிகள், வள்ளல்களின் புகழ்ச்சி, தலங்களின் வருணனை, மன்மதன் செயல் வருணனை, புராணக் கதை வருணனை முதலிய உயர்வு நவிற்சியைச் சிறப்பாக எடுத்துக் காட்டிக் கற்பனை நயங்களை இனிது விளக்குவன.

மேலும், வாய்மை, பணிவு, அன்பு, தீரம், தூயமனம், பக்தி முதலிய நல்லொழுக்கப் பகுதிகளும் பல பாடல்களால் செவ்விதில் தெளிவுபடுத்தப் பட்டுள்ளன. சிலேடை நயங்கள், பல பொருளொருசொல் லமைப்புகள், யமகம் திரிபுகள், நடுவெழுத்தலங்காரம், அலர்க்குறி வருணனை முதலியன செந்தமிழ் லிலக்கியத்தின் அளவற்ற சொன்னயங்களை விளக்கிக் கற்பாருள்ளத்திற் கின்பம் பயப்பன. ஒப்பற்ற பரம்பொருளின் மெய்யியல்புமை அங்கங்கே பல பாடல்களிற் றெள்ளிதிற் புலனாகும். ஆதலால், தனிப்பாடற் றிரட்டின் இவ்விரண்டாம பாகமானது கற்போர்க்குப் பெரிய தொரு அறிவு விருந்தினை யளித்தலின், தமிழன்பர் யாவரும் இதனை வாங்கி வாசித்துப் பெரும பயனைத் துய்ப்பாராக!

மணிவாசக மன்றம்
திருநெல்வேலி
2—11—39.

இங்ஙனம்,
கா. சுப்பிரமணிய பிள்ளை.

பொருளடக்கம்

எண்	புலவர்களின் பெயர்		பாடற் றொகை	பக்க எண்
1.	விநாயகர் காப்பு	....	1	1
2.	சீர்காழி அருணைசலக் கவிராயர்	....	28	3
3.	சுப்ரதீபக் கவிராயர்	....	12	13
4.	குருநமச்சிவாய தேவர்	....	9	20
5.	தொட்டிக்கலை சுப்பிரமணியத் தம்பிரான்		2	23
6.	இராமசாமிக் கவிராயர்	....	12	24
7.	அட்டாவதானம் சரவணப் பெருமாட் கவிராயர்	....	4	31
8.	சிவஞான யோகிகள்	....	1	35
9.	தில்லைவிடங்கன் மாரிமுத்துப் பிள்ளை	....	3	36
10.	வசைகவி ஆண்டான் புலவர்	....	3	37
11.	சுந்தர கவிராயர்	...	26	39
12.	இராம கவிராயர்	....	28	51
13.	திவ்யகவி பிள்ளைப்பெருமாளையங்கார்	....	5	62
14.	மாசிலாமணித் தேசிகர்	....	3	64
15.	நெற்குன்றவாண முதலியார்	....	1	65
16.	வெண்பாப்புலிக் கவிராயர்	....	2	66
17.	வெறிமங்கைபாகக் கவிராயர்	....	4	67
18.	பால பாரதியார்	....	1	69
19.	திருவாரூர்ச் சொக்கலிங்கக் கவிராயர்	....	1	70
20.	ஊனையூர்ப் பாரதியார்	....	1	71
21.	முத்தப்ப செட்டியார்	....	1	,,
22.	அரங்கநாதக் கவிராயர்	....	16	72
23.	துரிதகவி திருமலைக்கொழுந்துக் கவிராயர்		14	78
24.	முத்துராமலிங்க சேதுபதி	....	13	85
25.	சதாவதானம் சரவணப் பெருமாட் கவிராயர்	....	30	90
26.	முத்துவீரப் பிள்ளை	....	10	101
27.	முத்துச் சுப்பையர்	....	6	105
28.	இராமானுஜ கவிராயர்	....	2	107
29.	சந்திரசேகர கவிராச பண்டிதர்	....	18	108

எண்	புலவர்களின் பெயர்		பாடற் றொகை	பக்க எண்
30.	வேதநாயகம் பிள்ளை	....	50	118
31.	மகாவித்துவான் மீனாட்சிசுந்தரம் பிள்ளை		23	140
32.	திருவாவடுதுறை யாதீன வித்துவான் தாண்டவராய சுவாமிகள்	....	3	152
33.	இராமநாதபுரம் முத்துராமலிங்க சேதுபதி		7	154
34.	அருணாசலம் பிள்ளை	....	3	158
35.	சதாவதானியாகிய சுப்பிரமணிய ஐயர்	....	1	159
36.	புலிக்குட்டி இராமலிங்கத் தம்பிரான்	....	3	160
37.	மதுரைச் சம்பந்த சுவாமி மடத்துத் தமபிரான்	....	4	162
38.	திருவாவடுதுறைச் சாமிநாத கவிராயர்	....	1	165
39.	போற்றிமுத்துப் பிள்ளை	....	3	,,
40.	முத்தைய உபாத்தியாயர்	....	1	168
41.	முருகதாச சுவாமிகள்	....	1	,,
42.	சங்கரமூர்த்திக் கவிராயர்	....	2	169
43.	நமசிவாயக் கவிராயர்	....	2	170
44.	வெ. ப. சுப்பிரமணிய முதலியார்	....	3	171
45.	கொட்டாம்பட்டிக் கருப்பையாப் பாவலர்		7	172
46.	அழகிய சொக்கநாத பிள்ளை	....	27	176
47.	பொய்கையாழ்வார்	....	2	189
48.	பூதத்தாழ்வார்	....	1	190
49.	பேயாழ்வார்	....	1	,,
50.	திருமழிசை யாழ்வார்	....	1	191
51.	ஔவையார்	....	5	,,
52.	பொய்யாமொழிப் புலவர்	....	1	193
53.	கம்பர்	....	5	194
54.	அந்தகக்கவி வீராகவ முதலியார்	....	13	196
55.	பராசசிங்கம்	....	3	202
56.	கச்சியப்பர்	....	2	204
57.	கயத்தாற்றரசன்	....	1	205
58.	பல வித்துவான்கள்	....	432	,,
	ஆக பாடல்	....	865	

செய்யுளகராதி

செய்யுள்	பக்கம்	செய்யுள்	பக்கம்
அக்கப்பு	297	அரியெசில்	350
அக்கரவம்	310	அரியை	317
அக்காண்டி	339	அருகினத்தமர்	261
அக்காளை	56	அருகுகன்மதி	296
அங்கங்களவா	181	அருங்கால்	121
அகலியிடை	104	அருகிரியே	131
அகலை	108	அருணமார்	264
அசமிளப்	327	அருணசல	317
அச்சுதனு	299	அருததி	85
அசசுப்போற்	112	அருமாதவர்	292
அஞ்சக்கரத்தி	159	அலகில்லா	371
அஞ்சிமயல்	211	அலரோதி	227
அடன்மிகு	307	அலைகடலிற்	305
அடியார்களெளியன்	235	அலைகுளிர்	343
அடுகரி	375	அலையாழி	345
அடுத்தமனை	387	அல்லனுமவர்	294
அட்டமி	219	அல்லலாகிய	22
அணியார்	363	அவதார	318
அண்டரண்ட	271	அவன்கண்டாய்	190
அண்டர்	213	அவிட்டதுதக்	56
அண்டினபேரை	105	அழலை	314
அண்ணுமலையார்	20	அளகைப்பொரி	110
அதிவீர	417	அளிகொளுந்	17
அததற்கு	224	அள்ளித்திரிய	106
அதிகத்த	118	அறக்கடல்	409
அத்திக்கொம்பாலை	344	அறகாட்டிய	314
அந்தமுள்ள	333	அறமுறைத்தானும்	193
அந்தரம்	324	அறிந்ததவி	227
அம்பலவாணு	172	அற்புதக்கடலே	145
அம்பள	357	அனகனம்	9
அம்பிறைக்கு	209	அன்பட்ட	359
அம்மையிலே	222	அன்பர்	211
அரக்கனலை	25	அன்பிலா	384
அரவிந்த	354	அனமது	324
அரளாண	189	அன்னமுணற்	89
அரிகேசரி	83	அன்னமும்	187

செய்யுள்	பக்கம்	செய்யுள்	பக்கம்
அன்னமே	75	இணையிறன	388
அன்னை தயையு	389	இதனை	288
ஆகும்பிரசவத்து	138	இந்தவசை	292
ஆசைபெரிது	54	இந்திரவில்	186
ஆசரியர்	217	இந்திரனீ	131
ஆடிமாதம்	109	இந்திரன்	340
ஆடியாகஞ்	367	இப்புவியிலென்	166
ஆடுசிதமபா	339	இமையாத	157
ஆடோ	295	இமைம	414
ஆட்டுக்கா	180	இய்யூர்	109
ஆட்டுவிக்க	,,	இருகோல	29
ஆதரவா	214	இருசுடரொ	95
ஆதியையர்	121	இருடீர்	192
ஆபதனை	87	இருட்பார	402
ஆமாவிசழ்ந்திட	198	இருவிழிகள்	399
ஆமபன்	306	இருமபுழுத	315
ஆயதனுறையிற்	363	இலக்கண	125
ஆயவறதனை	63	இலையேதுணை	41
ஆயிரகண்ணுக	238	இலலென்பார்	194
ஆயிரம்	219	இலவாழ்வை	122
ஆய்வார பதிபசு	64	இவவரையு	231
ஆரண	129	இளந்தத்தையே	362
ஆரமணி	96	இளந்தென்றலை	289
ஆரமபூணும்	113	இன்பாவிற்	136
ஆரிய	400	இன்றருணை	368
ஆவந்தாலுஞ்	179	இன்னமுத	205
ஆலகுடியா	197	இன்னுயிர்	55
ஆழிகடைந்த	52	ஈட்டும்	215
ஆறணியாரா டு	41	ஈராறு	45
ஆறுகுளந்தோப்பு	43	ஈனதறிலே	119
ஆறுதலை	,,	உடையாளுக்	63
ஆறுமுக	206	உணகுகியொரு	49
ஆனமணமின்றி	139	உண்ணு	336
ஆனையாசர்	75	உண்ணீரிலாமை	134
ஆனைதனைப்	57	உண்டென்று	101
ஆனைமுக	177	உத்தரகோசமங	370
ஆனையத்	318	உயர்வார்	137
ஆன்பாலும்	196	உரகத்திலே	365
இகிதமா	214	உரவுபொலி	140
இகிருக்க	234	உலகெனும்	404
இசையுற்றேன்	88	உழைசுமந்திடு	259
இஞ்சிசெல்லி	386	உள்ளமுதலிலெடு	171

செய்யுள்	பக்கம்	செய்யுள்	பக்கம்
உற்றுயென்னும்	410	என்னையல	26
உன்பதகமல	146	என்னெடுவாழ்	188
உன்றன்மகளே	221	எகவெண்கவி	256
உன்னவினி	215	எட்டைக்கட்டி	284
உன்னே	11	எருடைக்கவி	257
ஊசிக்கழகு	290	எருமிரண்டு	193
ஊசிக்கும்	106	எழிலொரு	18
ஊடுகுகாற்	99	எழைகஇரகஇடும்	318
ஊட்டியினித்த	106	எறேறு	223
ஊழ்வினையை	215	ஐந்து சிரமுள்ள	43
ஊன்பயிலும்	21	ஐம்பதின்மர்	201
ஊன்லூகஇ	130	ஐயீ	14
எங்கணமுத்து	184	ஐயன்றிரு	158
எகுகுந்தம்	114	ஒப்புயர்	142
எகுகும்	413	ஒருகாலெழுதி	340
எண்சாணுக	368	ஒருகையிலே	169
எண்டிசைக்கும்	14	ஒருகோட்டு	48
எண்ணன்	334	ஒருநாகம்	319
எண்ணிலாக்கல்வி	398	ஒருநாளுமே	120
எததலப்புறததினும்	264	ஒருமரகாலிட்	305
எத்தனைநாள்	74	ஒருமாடு	15
எத்திசையும்	81	ஒருமானே	350
எந்தவுலகினுஞ்	154	ஒருமையுடன்	403
எப்பொருட்கு	102	ஒருவரு	370
எம்மைப்	,,	ஒற்றியூர்	195
எய்தாநுகை	423	ஒன்றுக	192
எரியொத்த	126	ஒன்றுமறியாத	63
எருதாய்ச	57	ஒன்றைவிட்டொன்றை	346
எல்லாத்திறத்தும்	424	ஓங்கு பத்மாசூரனே	71
எல்லாமுனது	65	ஓடினனென்ப	326
எல்லார்க்குங்	82	ஓடும்பொன்னும்	398
எவரையும்	369	ஓதுமைந்தி	242
எழுதரிது	283	ஓராழிதேரை	98
எள்ளுமலர்	78	ஓராறு	216
எறிகுமதிசசடை	361	ஓரொற்றியூர்	61
எறிக்கும்	352	ஓர்குடிகே	298
எனக்கு	424	ஓர்தண்டரை	228
என்பொருளென்	373	கஇகுலிலே	298
என்றுகண்ட	111	கஇகையங்	351
என்னசெயங்	71	கஇகொன்னு	
என்னிடத்திலே	210	கசசிக்குரகஇன்	329
ஏன்னின்	380	கசசிருகஇம்போது	12

செய்யுள்	பக்கம்	செய்யுள்	பக்கம்
கச்சையிட்ட	97	கன்றுகொண்டு	272
கடம்பவனஞ்	7	கன்னலெனுஞ்	288
கடவுளீ	384	கன்னனுமக்கென்ன	165
கடன்படு	375	கன்னு	182
கடாவிடுஞ்	387	காடுதொறு	88
கடிவாங்கு	300	காட்சியிலி	101
கடுவளை	338	காணத்தொழ	66
கட்டளையாக	306	காணியொரு	40
கட்டிய	128	காந்தளுகென்றன்	286
கட்டியடிப்போர்க்கும்	220	காமததா	382
கட்டிறலே	49	காமமெனுங்	87
கட்டோரம்	333	காமனூர்	282
கட்பூக்குழன்	287	காமா	217
கண்டாந்தந்த	320	காம்பாயர்	303
கண்டந்திரு	173	காயுஞ்	336
கண்டமட்டிற்	22	காய்சின	183
கண்டிருந்தும்	60	காய்தல்	393
கணனுன்	143	காரங்கமேனி	229
கத்தனூர்	395	காரார்	163
கந்தனென்றும்	207	காரே	133
கந்தா	210	காலமாலே	385
கமலாலய	59	காலெயுபாதி	349
கம்பனென்றுங்	236	கால்வீழ்ந்து	7
கயவரெலாங	44	காவியனந்த	346
கருதுகயல்	309	காவிரித்திறை	273
கருதுதே	426	காவிமலர்த்	79
கருப்பாலே	239	காவென்றுஞ்	68
கருமபுகை	179	கானக்கடன்	220
கலெயள	345	கானவர்	356
கல்லாத	175	கானோகர்	38
கல்லாலடி	177	கிழக்கோ	346
கல்லினெறிய	59	குசலிலிய	284
கல்லுமுருத்தாது	226	குடகோடக்	343
கல்வியகு	212	குணமிருந்தாலுங்	364
கவிகற்றவர்க்கும்	198	குதிரை	318
கள்ளிலகுஞ்சோலை	80	குருத்திவாழைகள்	283
கற்குங்கவி	65	குருத்துக்கதலிப்	80
கனகாசலங்கரி	321	குருந்துறைசைவ	156
கனக்கும்பொதிக்கு	64	குருந்துறையுஞ்	155
கனந்தந்தான்	4	குருமணியா	148
கனியிற்பொலி	151	குருமூர்த்தமாய்	28
கன்றினிளட்டி	302	குருவுகடிரகண	128

செய்யுள்.	பக்கம்.	செய்யுள்.	பக்கம்.
குலத்து	425	சல்லடைக்கண்	228
குவளைமலர்	86	சாரங்கபாணி	12
குவளைத்தார்	11	சாரவீடிருந்தோர்	108
குறிகொள்	164	சித்திதரு	3
குன்றுக்குடியாய்	172	சிந்தனை	405
குன்றுகுடையா	285	சிந்தாகுலங்	213
கூடிச்சிவந்த	86	சிவிகை	378
கூடியிருக்குஞ்	47	சிறியராயினோர்	16
கூப்பிட்டான்	316	சினம்	301
கூப்பிட்டேன்	7	சிரணி	304
கூறவிலை மாதர்	51	சிராருந்	251
கூஞ்சிய	180	சிரானபசுவின்	329
கெட்டசாறு	241	சிரானவண்டரும்	335
கேளந்த	348	சிரொண்ட	327
கைகொடுத்து	281	சிரூத்த	150
கைக்கார்நிறி	111	சிமலிவி	72
கைக்குடமும்	218	சினர்	258
கைத்தலத்தழற்	289	சுந்தரஞ்சேர்	186
கைத்தலத்தன்னிற்	347	சுந்தரவேடர்	158
கைப்பொருள்	379	சுரர்கோர்	116
கொக்கேறி	322	சுருதியோ	124
கொங்கருடல்	58	சூரியா	135
கொங்கை களங்	57	சூவந்து	124
கொதிதெழுந்த	284	சூலேறி	360
கொல்லா	287	சூல்வைக்கு	18
கொல்லான்	393	சூனசொல	188
கோடுதிக்கும்	224	செகமலக்கண்	210
கோதறுகல்வி	391	செங்கமல	8
கோபுரங்க	21	செகதற்	182
கோமகனே	185	செங்கான்	266
கோவை	127	செட்டியெனும்	86
சக்கரத்தி	178	செந்தமிழடை	379
சக்கரவாகங்	188	செந்தமிழால்	89
சங்கநிதி	412	செந்தமிழோ	232
சங்கரன்	355	செந்தமிழ்	162
சங்கையிலா	47	செந்தாமரை	159
சதிராயிருந்த	359	சொதிலுறை	89
சந்தனந்த	323	செந்தில்வேல்	175
சந்தமிகுங்,	147	செப்பரிய	397
சந்தனமும்	401	செயத்தகு	392
சந்தனுடவி	277	செய்யாள்	221
சந்திரன்	40	செய்யோனகு	265

செய்யுள்.	பக்கம்.	செய்யுள்.	பக்கம்.
செய்வேனென	133	தருநாணுட்கொள	153
செல்கை திருவுள	55	தருநிகரான	365
செல்லார்க்கும்	141	தலம்புகு	331
செல்லுநெறி	53	தழுவுறு	397
செல்வம்	213	தறைறீங்கின	118
செவ்வந்திமாலை	342	தலைக்காறு	285
செவ்வேறிகழ்	110	தனங்கடந்தானைகள்	198
சென்றது	399	தன்மனை	26
சென்னிமலை	325	தன்றம்பி	97
சேணளவுஞ்	93	தன்னைத்தான்	372
சேமன்	360	தன்னைப்புகழ்	389
சேய்க்கறி	365	தன்னைப்புகழ்வானுந்	5
சேலாகரே	233	தன்னையளித்தா	390
சேலூரும்	312	தாக்கசெறி	266
சேல்வண்டு	286	தாட்டாமரை	170
சொல்லியை	195	தாட்டிகஞ்சேர்	79
சோமனுடா	6	தாண்டவமேல்	152
சோமன்பதியுங்	311	தாமரைப்பூத்தேனை	211
சோரமனை	371	தாலமர	420
சோற்றுக்குந்	42	தாயிருக்க	20
சோனையொத்த	262	தாராள	356
ஞாயிறுந்திங்களுஞ்	320	தார்க்கொன்றை	325
ஞாயிறுபோய்	366	தாழ்சடையு	190
ஞானனத்தா	301	தானே	311
ஞானமறையை	62	தாளேர்	345
ஞானம்பெருமை-சாற்று	11	திக்கயங்க	274
ஞானம்பெருமை-சொல்	10	திரவியம்	372
தகுதிகொள்	388	திருக்குளத்திற்	297
தட்டானிடத்திற்	168	திருடர்க்கு	415
தணிகாசல	316	திருத்தகவி	192
தண்டமிழ்	136	திருத்தணியிரை	315
தண்டாமரை	268	திருநிறைந்திடு	250
தண்டுகொண்	119	திருமகட்குத்	108
தண்டுஞ்சிலையுஞ்	347	திருமணியை	140
தந்தைபெயரெடுப்பான்	151	திருமயிலை	178
தந்தைபோய்	217	திருமாலுமீசனும்	199
தம்பியோ	51	திருமுகங்	156
தரளாற்றுந்	107	திருவல்லிக்கேணி	23
தரித்திரங்களிப்பாங்	377	திருவாக்குஞ்	1
தரித்திரமிக்க	376	திருவாவடுதுறையிற்	154
தருக்காலு	295	திருவிருத்தி	58
தருக்குற்ரு	155	திருவேரகங்	89

செய்யுள்	பக்கம்	செய்யுள்	பக்கம்
திரைகடலோடி	361	நஞ்சுடைய	91
தில்லைவிடங்கன்	69	நஞ்சுதின்ன	178
தினந்தினம்	308	நடக்கி	16
தீர்த்தமென	425	நடந்தா	354
துங்கவட	241	நடுவு	411
துஞ்சுவரை	92	நதியமர்	310
துரிசுந்	290	நத்தையார்	328
துவரம்பருப்பிதழ்	96	நரைக்கோட்டிளங்கன்று	196
துவளவ	67	நல்லவர்கள்	10
தூற்சனன்	376	நள்ளுனர்கினிய	137
தூக்கியகால்	22	நறைமலர்ச்சோலை	306
தூதுமதுரை	229	நறையொழுகு	46
தூமமுள	102	நற்பொருளறத்தை	390
தெய்வப்பிடியை	99	நன்றிபுனையும்	20
தெள்ளிய	145	நனறைநாடாத்து	69
தென்னிலைபிற்	36	நாகஞ்சிறந்த	320
தென்னரங்க	13	நாகதந்தி	309
தென்னனிக	78	நாகத்தை	319
தென்னன்	344	நாகந்தினை	44
தென்னலங்	12	நாட்டிலே	67
தேங்கனி	94	நாட்டுக்கு	152
தேனருவளை	61	நாணிலான்	394
தேனருழல்	174	நாமம்	52
தேசீம்	291	நாரேனும்	204
தேடுகயிலாய	142	நாலடி	350
தேமன்	337	நாலாகலை	354
தேமிருகரு	232	நாலெழுத்து	225
தேவராய்	191	நாறுகடம்பு	230
தேவரீருமது	255	நாற்காணி	56
தேவருக்கு	103	நினைத்த	11
தேறுதி	395	நின்சுழுகத்தினை	149
தேளுட்டு	366	நின்னருளின்	171
தேனிலுந்	98	நீண்டபிரான்	37
தேனெடு	130	நீதிபெறு	34
தேன்படி	168	நீயாவி	189
தேன்பாயுஞ்	41	நீரகக்கொண்ட	352
தொடுத்த	243	நீருள்ள	120
தோகைநீ	279	நீரூருஞ்	222
தோமிருந்த	121	நீறணிந்திடு	244
நக்கனுர்	326	நீறுபட்ட	267
நச்சணி	357	நெஞ்சைடைந்த	8
நஞ்சிற்கொடிது	98	நேரென்று	126

செய்யுள்	பக்கம்	செய்யுள்	பக்கம்
கேற்றினு	352	பாரிகூப்பிட	268
கோகாதோ	208	பாரிலின்ப	91
பகலோன்	226	பார்க்க	304
பக்குவமாக	348	பாலனத்தை	115
பங்கயத்திருமடந்தை	254	பாலாறு	338
பசிமிகுந்த	380	பாலான	337
பசிமுடுக	201	பாலினுமின்சொற்	358
பஞ்சலகூண	253	பாலுககு	374
பஞ்சவனத்தத்தை	322	பாலிகர்	25
படித்திறையும்	184	பாலொத்த—செஞ்	308
படைத்தமதன்	17	பாலொதத—மென்	336
படைப்பானுங்	230	பாவிற்	126
பண்டிருந்தா	170	பாவேந்தர்	309
பணடுமைக்கோர்	288	பாளைகமுகு	76
பண்ணிப்பிடும்	405	பிஞ்சகன்	12
பத்துக்கான்	42	பிஞ்சுபிடக்கும்	183
பத்துரூ	5	பிரமனது	419
பதுமமலரடி	148	பிறப்பிதுதோன்	220
பரமசுகியத்தை	236	பிறப்பிலியாய்	62
பரிகொம்பு	348	பின்னர்	293
பரிதி	162	புட்டவல்	234
பலசரகசு	186	புதுவைமுத்துக்	27
பலர்பல	407	புருடனே	418
பல்லார்பகை	281	புரைதபு	381
பழுத துடைத்த	278	புலியை	353
பறவை	326	புலையனும்	414
பனமதி	80	புவியோர்	202
பன்னகசெஞ்சடை	147	புள்ளாரும்	316
பன்னிரண்டு	207	பூகமல	191
பன்னுமோர்	247	பூகோதை	283
பலள	339	பூகோதை மாமயிலே	74
பாகசாதனு	276	பூசாரி	391
பாகசாதனர்	169	பூசிலே	363
பாகுகாளே	46	பூதம்பணி	270
பாசதளே	66	பூப்பார்தது	240
பாதாதி	364	பூமன்	342
பாதியா	412	பூமாது	167
பாத்திரமீதென	81	பூவயனுற்	90
பாம்புகருத்	61	பூவுட்கும்	423
பாம்புசேர்	219	பூவென்று	132
பாயல்	87	பூவைகசு	209
பாராளு	77	பெண்ணை	128

செய்யுள்	பக்கம்	செய்யுள்	பக்கம்
பெண்ணெருததி	103	மதுகரத்தை	28
பெறவரிது	418	மதுரம்	160
பேசிகைல்லாரமும்	88	மதுவசன	84
பேசுபுகழ்	144	மந்தமாருதத்தி	76
பேயிரங்கவு	278	மந்திரத்தனனை	390
பேயோ	341	மரமது	50
பேரான	328	மருப்பங்	315
பொகுதமிழ்	204	மலைந்த	275
பொகுமிடி	200	மல்லணிந்த	54
பொயமமை	53	மற்றும்பல	411
பொருணனி	378	மற்றொருவனை	374
பொருது	289	மனைக்கு	415
பொருளிலாக	402	மனனவன்	373
பொல்லா	349	மன்னவி	73
பொறியுலவு	93	மாகதத்தை	312
பொன்முக	244	மாகமதிக்கரன்	313
பொன்றிகழு	189	மாகமுறை	330
பொனறேடி	5	மாகுயின்	247
பொனனருகு	294	மாசுபடினும்	415
பொனனைய	250	மாடில்லான	388
பொன்னரம்	109	மாதகமலை	321
பொன்னுடனே	252	மாதஞ் சிதறினை	70
பொனனெல்லை	45	மாதரின்றி	138
பொனனே	406	மாதவ	123
போதமெவாக்கும்	93	மாதவதன	176
போதம்புடனே	112	மாதொருததி	100
போதவழகன்	203	மாதரானை	355
போதணைவாய்	185	மாதவாகலா	300
போமே பொழுது	357	மாப்பிட்டெனுஞ்	216
போரேற்று	341	மாமலைவாழ்	88
போற்றுவார்	206	மாமேவு	143
மக்களாகளை	382	மாரன்	19
மகளையர்கள்	233	மாலாகதி	359
மகளையர்கொங்கை	85	மாலினை	375
மகளையாவிருந்தினர்	385	மாலே	200
மச்சமென்று	100	மாலதனை	24
மட்டுத்தார்	114	மாலையிட்ட	87
மடுகுஞ்	227	மாளாதவினை	402
மணணெடு	396	மயறுளர்திடு	249
மதலையை	392	மானேசரர்	116
மதிருடிய	342	மானேவியாச	72
மதிதவழ்	168	மிகப்பட்ட	6

செய்யுள்	பக்கம்	செய்யுள்	பக்கம்
மிக்குடைய	420	வண்டோ	197
மின்றொழில்	134	வந்தவரியாவர்	32
மின்னிய	146	வந்தவளே	226
மீனே	181	வந்துமழை	205
மீன்பார்த்து	237	வரகுகளுயிர்க்	95
முகில்போன்	77	வரையழுததுஞ்	91
முக்கணன்	307	வரையின	293
முத்தாதி	21	வல்லபெரியோரும்	96
முதலியில்	380	வல்லவகு	29
முத்துகடலிற்	39	வல்லென	246
முந்தனத்தை	80	வல்லேப்பொரு	59
முருகார்பூந்தடஞ்	144	வழங்கார்	422
முருகாமுளரியு	367	வள்ளிமானே	90
முல்லைக்கு	423	வனசன்கொடி	283
முல்லைமுலையாய்	237	வன்னகுருகும்	269
முழவொலி	321	வாகான	310
முனியதட்டு	225	வாக்குமனமு	289
முன்னமோர்	394	வாங்குசிலை	212
முன்னுளரசர்	76	வாசமலர்	161
முன்னெழுதலில்	184	வாசமாளி	381
முன்னெரு	27	வாசமேவு	280
மூகுகிலிற்	382	வாசவனும்	48
மூவாகவி	224	வாடும்	185
மூவுலகுக்	159	வாடைப்பனி	258
மெய்கழுவி	194	வாதாம்	337
மெய்சசாசமாக	237	வாமாதூ	9
மெய்யினு	358	வாயிலொன்று	201
மெய்யேபொருண்	53	வாய்சிவந்து	93
மேகுகள்	127	வாய்ந்தசிவ	92
மேகுகிற	209	வாயந்தவனம்	149
மேசம்பிறை	362	வாரணமாங்	303
மேட்டைத்தணித்துக்	105	வாராய் வியாசர்புரி	75
மேதினிசூழ்	73	வாராரகொங்கை	111
மேயும்	229	வாரிதரளஞ்	231
மேவினிய	176	வாரிமணியுங்	100
மேனியெல்லாங்	182	வாரீர்	208
மைதவழ்ந்த	263	வாருநீர்	33
மையல்கொண்டா	74	வாலேப்பொருந்துதலால்	222
மையிருண்ட	13	வாவிகணே	60
மொய்வேலை	291	வாளுரும்	84
யானும்	426	வானவரு	8
வணமெது	818	வானிமண்ணுயி	410

செய்யுள்.	பக்கம்.	செய்யுள்.	பக்கம்.
வானேடு	124	வீடேற	94
வானென்று	125	வெண்ணெயுற்று	10
வீடவாளே	291	வெண்பளிங்கு	104
வீண்டீரிருவர்க்கு	351	வெண்பாச்சொல்	31
வீண்மதிக்கு	94	வெயில்விரி	82
வீதியிருந்த	122	வெள்ளத்தே	386
வீதுகண்டு	92	வெள்ளிமலை	235
வீரகன்	203	வெள்ளே	165
வீருந்தினனுக	369	வெற்றிவேலக்கு	6
வீரும்ப	185	வேசையரே	199
வீரும்பி	421	வேண்டுங்கால்	134
வீலமதித்திடு	260	வேதவியாசர்	73
வில்லாய்வளேந்து	107	வேலாயுத	334
வில்லும்	344	வேலாவிராலிமலை	207
வீளைபொருண்	54	வேலாவுனக்கு	44
வீசுசடை	85	வேலேக்குண்	135
வீட்டுதோர்க்	95	வேளாமழகன்	353
வீடுகோகில	330	வையம்	218
வீடுநிலயகள்	119	வைதிடினும்	409

——

கடவுள் துணை

தனிப்பாடற்றிரட்டு

மூலமும் - உரையும்

(இரண்டாம் பாகம்)

விநாயகர் காப்பு

வெண்பா

திருவாக்குஞ் செய்கருமங் கைகூட்டுஞ் செஞ்சொற்
பெருவாக்கும் பீடும் பெருக்கு—மூருவாக்கு
மாதலால் வாழ்ஞெரு மானை முகத்தானைக்
காதலாற் கூப்புவர்தங் கை.

உரை:—ஆனைமுகத்தான் - ஆனைமுகக் கடவுளாகிய விநாயகர், திரு வாக்கும் - எடுத்த காரியத்தை மங்கலமுடையதாகச் செய்வர் அல்லது செல்வத்தை யுண்டாக்குவர், செய் கருமம் கைகூட்டும் - செய்கின்ற தொழிலில் காரிய சித்தியுண்டாக்கும், செம் சொல் பெருவாக்கும் பீடும் பெருக்கும் - செம்மையாகிய மொழியினலமைந்த பெரு நூலறிவையும் பெருமையையும் அதிகப் படுத்துவர், உருவாக்கும் - அழகிய திருமேனியை யளிப்பர், ஆதலால் - ஆதலினல், வாழ்ஞெரும் - தேவர்களும், காதலால் - அன்பினெடு அவரை, தம் கை கூப்புவர் - தமது கைகளினற் ருெழுவார் கள், என்றவாறு.

குறிப்பு:—ஆனை முகத்தானை என்னுஞ் சொற்ருெடரை (ஆனை முகத்தான்+ஐ) எனப் பிரித்து யானைமுகத்தை யுடைய தலைவர் என்று பொருள் கொண்டு, 'ஐ' என்பதைத் திருவாக்கு முதலிய பயனிலை களுக்கு எழுவாயாகக் கொள்க. ஆனைமுகத்தானை என்பதை இரண்டாம் வேற்றுமையாகக் கொண்டு கூப்புவர் என்பதற்குச் செயப்படு பொரு ளாகவும் கொள்க.

சீர்காழி அருணாசலக் கவிராயர்

பாடியது

இராமநாடகம் அரங்கேற்றுகை விஷயமாக
மணலி முத்துக்கிருஷ்ண முதலியார்மீது பாடியன.

1. சித்திதரு கிறவல்லி புத்திதரு கிறவல்லி
தேவர்கள் வணங்கு வல்லி
தில்லைநா யகவல்லி சிவகாம வல்லியிரு
திருவிழிக் கருணை யாலே
சத்தியவா சகனென்று பூமண்ட லாதிபர்க
டாமெங்க ணுந்து திக்குஞ்
சகலபா ஷாநிபுண மணலிமுத்துக் கிருஷ்ண
சதுரா நீ வாழி கண்டாய்
நத்துமலர் சூவுநான் மதியநீ செஞ்சாலி
நான்கருவி மழைமே கநீ
நளினநான் பரிதிநீ பிள்ளைநா னன்னைநீ
நான்கவிஞன் வழுதி நீகாண்
சுத்தமுள ராமாய ணந்தனைக் கொண்டுனது
சுழுகம துபெற வருளிறேன்
சொற்பொரு ளறிந்தளவு சொல்லுவேன் கேட்கவே
துணையாக வேணு நீயே.

உரை :—சித்திதருகிறவல்லி - காரியசித்தியை யளிக்கின்ற கொடி போனற அம்பிகை, புத்தி தருகிற வல்லி - போக மளிக்கின்ற அம்பிகை, தேவர்கள் வணங்கு வல்லி - விண்ணவர்கள் வழிபடுகின்ற தேவி, தில்லை நாயகவல்லி - தில்லைக்குத் தலைமை பூண்ட அம்பிகை, சிவகாமவல்லி - சிவ காமி யென்னும் திருப் பெயருடைய அம்பிகை என்பவளுடைய, இரு திரு விழிக் கருணையாலே - இரண்டு திருக் கண்களின் கிருபா கடாட்சத்தாலே, சத்தியவாசகன் என்று பூமண்டலாதிபர்கள் தாம் துதிக்கும் - மெய் வாக் கினனென்று பூவுலகத்தார் போற்றுகின்ற, சகல பாஷா நிபுண மணலி முத்துகிருஷ்ண சதுர - எல்லா மொழிகளிலும் தேர்ச்சிபுள்ள மணலி யென்னும் ஊரில் வீற்றிருக்கும் முத்துக்கிருஷ்ண முதலியாராகிய சாமார்த்தியவானே !, நீ வாழி கண்டாய் - நீ (நீடூழி) வாழ்வாயாக, நத்து

மலர் குவளைகான் மதியம் நீ - சங்குகள் தங்கும் குவளைப் பூப்போல்வன் நான் ; அதற்கு மலர்ச்சி தருகின்ற சந்திரனைப் போல்வாய் நீ, செஞ்சாலி நான் கருவி மழை மேகம் நீ - செந்நெற் கதிர் நான் ; கார்காலத்து மழை பொழிகின்ற மேகம் நீ, களிணம் நான் பரிதி நீ - தாமரைப் பூ நான் ; சூரியன் நீ, பின்னை நான் அன்னை நீ - குழந்தை நான் ; தாய் நீ, நான் கவிஞன் வழுதி நீ - நான் பாவலன் ; நீ (பாட்டிற்குப் பரிசளிக்கின்ற) பாண்டியன், சுத்தமூள ராமாயணந்தனைக்கொண்டு உனது சுமுகமது பெற வருகிறேன் - குற்றமில்லாமற் செய்த இராமாயணக் கீர்த்தனை யோடு உனது நன்மதிப்புப் பெறவருகிறேன், சொல் பொருள் அறிந்து அளவு சொல்லுவேன் கேட்கவே துணையாக வேணு நீயே - சொல்லின் பொருளை யானறிந்த அளவு எடுத்தியம்புவேன் (அதை எல்லாரும்) கேட்கும்படி நீ உதவி செய்யவேண்டும். காண் - அசை, எ - று.

மணலி முத்துக்கிருஷ்ண முதலியார் உதவியை வியந்தது.

2. கனந்தான் கனகாபி டேகந்தான்
களங்கமிலாக் கருப்பொருளை யழைத்துத்தான்
மனந்தான் முடிசூட்டு மாலைதான்
வாணிசிங்கா சனத்திருத்தி வரிசைதான்
இனந்தான் நிராமகதை யெவர்க்குந்தான்
னெனைராமா யணக்கவிஞனெனப் பேர்தான்
அனந்தான் மணலிமுத்துக் கிருஷ்ணபூப
னகந்தான் நிருமையிலுஞ் சுகந்தானே.

உரை :—மணலி முத்துக்கிருஷ்ண பூபன் - மணலியில் வாழ்கின்ற முத்துக்கிருஷ்ண பூபதி, கனம் தந்தான் - எனக்கு மதிப்புக் கொடுத்தான், கனகாபிடேகம் தந்தான் - பொன்னினாலே முழுக்காட்டினான், களங்கம் இலா கருப்பொருளை யழைத்துத் தந்தான் - குற்றமற்ற மூலப்பொருளைத் தோன்றும்படி செய்தான், மனம் தந்தான் - தன்னுடைய உள்ளத்தைக் கொடுத்தான், முடி சூட்டு மாலை தந்தான் - தலையில் அணியக் கூடிய பூமாலையை யளித்தான், வாணி சிங்காதனத் திருத்தி வரிசை தந்தான் - சரஸ்வதியின் சிம்மாசனத்தில் என்னை இருக்கும்படி செய்து தகுதியான பரிசளித்தான், இனம் தந்தான் - பசுக்கூட்டத்தைப் பரிசாக அளித்தான், இராமகதை எவர்க்கும் தந்தான் - இராம நாடகக் கீர்த்தனையை எல்லாரும் கேட்கும்படி செய்தான், என்னை இராமாயணக் கவிஞன் எனப் பேர் தந்தான் - எனக்கு இராமநாடகாசிரியர் என்ற பெயரைக் கொடுத்தான், அனம் தந்தான் - உணவு கொடுத்தான், அகம் தந்தான் - குடியிருப்பதற்கு வீடும் கொடுத்தான், இருமையிலும் சுகம் தந்தான் - இம்மை மறுமையில் நான் இன்பமடைதற்குக் காரணமானான், ஏ-தேற்றேகாரம். எ - று.

பாப்பையவேள்மீது பாடியது

3. பத்துரூ பாயனேர் பாப்பையவே ளேயுனக்குப்
பத்துரூபா யென்ன பஞ்சமோ—முத்தநகை
விழியாய்ப் பாலுண்ட வேந்தன் பிறந்தசீ
காழியரு ணைசலன்யான் காண்.

உரை:—முத்தநகை வீழிவாய்ப் பால் உண்ட வேந்தன் - முத்துப் போன்ற பல்லும் நீர்முள்ளிக் கனிபோன்ற வாயுமுடைய அம்பாளிடம் ஞானப்பா லுண்ட மன்னனிய திருஞானசம்பந்தர், பிறந்த சீகாழி அருணைசலன் யான் - அவதரித்த சீர்காழிப் பதியிலுள்ள அருணைசலக் கவிராயன், பத்து உரு பாயனே நேர் பாப்பை வேளே - பத்தாவதாக மெடுத்த தர்திரக்காரனிய கண்ணன் போன்ற பாப்பைய வள்ளலே!, உனக்குப் பதது ரூபாய் என்ன பஞ்சமா - எனக்குக் கொடுப்பதற்கு உனக்குப் பத்து ரூபாய் கிடையாதா, எ - று.

4. தன்னைப் புகழ்வானுஞ் சாட்சிசொல்லி நிற்பானும்
பொன்னைமிகத் தேடிப் புதைப்பானும்—ஒன்னலர்தம
நண்புத்தி கேட்பானு நாணமில்லா தானும்
பெண்புத்தி கேட்பானும் பேய்.

உரை:—தன்னைப் புகழ்வானும் - தன் பெருமை பாராட்டுகின்ற வனும், சாட்சி சொல்லி நிற்பானும் - பொய சாட்சி சொல்லுபவனும், பொன்னை மிகத் தேடிப் புதைப்பானும் - பொருளதிகமாகச சமபாதிதது நிலத்திற்குள் மறைதது வைப்பானும், ஒன்னலா தம் நணபுததி கேட்பா னும் - பகைவருடைய பொய் கட்பாகக கூறும் அறிவுரையை நம்புவானும், நாணம் இல்லாதவனும் - தன் மதிப்பில்லாதவனும், பெணபுததி கேட்பா னும் - (மயல் காரணமாக) பெண்கள் கூறுவதற்குச செவிசாயப்பவனும், பேய் - பிசாசு போல்வார், எ - று.

5. பொன்றேடி மண்புதையான் போரதனி லம்புதையான்
மன்றேடி வந்தவரை வாழ்விப்பான்—நன்றேடும்
எப்பாவலரு மியம்பும் புதுவையில் வாழ்
அப்பாசா மிக்குகி ளார்.

உரை:—பொன் தேடி மண் புதையான் - பொருட்சேர்த்து அதைப் பூமியிற் புதையாதவன், போர் அதனில் அம்புதையான் - சண்டை யிடத தில் புறங்காட்டிக் கணையினாற் றுளைக்கப்படாதவன், மன்தேடி வந்தவரை வாழ்விப்பான் - நிலபெறுவதை விரும்பித் தன்பால் வந்தவர்களை வாழ் விக்கின்றவன், நன் தேடும் எப்பாவலரும் இயம்பும் - நலத்தை நாடுகின்ற எல்லாப் புலவர்களும் துதிக்கின்ற, புதுவையில் வாழ் - புதுச்சேரியில்

வசிக்கின்ற, அப்பாசாமிக்கு நிகர் ஆர் - அப்பாசாமி வள்ளலுக்கு ஒப்பாவார் ஒருவருமில்லை, எ - று.

6. வெற்றிலைக்கு முன்னே வெறும்பிளவை வாயிலிட
நற்றிருவா மங்கை நடப்பளே—வெற்றிலையை
முன்னிட்டுப் பின்பிளவை மெல்குவரே யாமாயின்
மன்னரைப்போ லாவார் மகிழ்ந்து.

உரை.—வெற்றிலைக்கு முன்னே - வெற்றிலை வாயிற் போடுவதற்கு முன்னரே, வெறும் பிளவை வாயிலிட - வெறும் பாகுகுத்துண்டை வாயிற் போட்டால், நற்றிருவாம் மங்கை நடப்பளே - நன்மையளிக்கின்ற திருமகள் அவனை விட்டு வேறு செல்வள், வெற்றிலையை முன்னிட்டுப் பின் பிளவை மெல்குவரேயாமாயின் - வெற்றிலையை முன்னரைப் போட்டுப் பிற்பாடு பாகுகுத் துண்டைப் போட்டுக் கொண்டு சுவைப்பாராயின், மகிழ்ந்து மன்னரைப்போ லாவார் - சந்தோஷத்துடன் அரசர்களைப்போல உயர்நிலையை அடைவார்கள், எ - று.

7. மிகப்பட்ட வெம்பசியால் வெம்பருந்தின் வாயில்
அகப்பட்ட கோழிப்பார்ப் பானேன்—நகப்பட்ட
கல்லையோ கைதொழுதேன் காகமணு காமலையில்
இல்லையோ ரத்தகிரி யே.

உரை:—நகப்பட்ட கல்லையோ கைதொழுதேன் - மலையிற் பொருந்திய கறையவதனையோ நான் வழிபட்டேன, காகம் அணுகா மலையில் - காகமை போகாதபடி உயர்ந்த குன்றினையோ, இரத்னகிரி இல்லையோ - இரத்தின மலைபோன்ற சிவபெருமானில்லையோ, மிகப்பட்ட வெம்பசியால் - அளவுக்கு மிஞ்சின கொடிய பசி நோயால், வெம்பருந்தின் வாயில் அகப்பட்ட கோழிப் பாப்பானை - கொடிய பருந்தின் வாயிலகப்பட்ட கோழிக்குஞ்சுபோ லானேன், எ - று.

8. சோமனுடா வாழ்வுஞ் சோறிடா நல்லுறவும
நாமமீ றில்லாத நன்னுதலும—ஓம
நெருப்பில்லா வேதியரு நெய்பா லுடனே
பருப்பில்லாப் போசனமும பாழ்.

உரை:—சோமனுடா வாழ்வும் - ஆடை தரியாத பிழைப்பும், சோறிடா நல்லுறவும் - சாதம் போடாத தீசசுற்றத்தாரும், நாமம் நீறு இல்லாத நல்நுதலும - நாமமாவது திருநீறுவது அணியாத நீய நெற்றியும், ஓமநெருப்பு இல்லாத வேதியரும் - அக்கினி காரியஞ் செய்யாத அந்தணரும், நெய்பாலுடனே பருப்பு இல்லாப் போசனமும் - நெய்யும் பாலும் பருப்புஞ் சோறு முணவும், பாழ் - வீணனவை, எ - று.

பரிசு பெறுது தன்னைத்தானே நொந்தது

9. கால்வீழ்ந்து நம்மைக் கவிபாடச் சொன்னனே
மேல்வீழ்ந்து நாமே விளம்பினேம்—நூலறிந்து
தந்தக்காற் றந்தான் தராக்கா னமதுமனம்
நொந்தக்கா லென்னுகு மோ.

உரை :—கால்வீழ்ந்து நம்மைக் கவிபாடச் சொன்னனே (நாம் வேண்டிய செல்வன்) தானாக நம்மைக் கும்பிட்டுப் பாட்டுப்பாட நம்மைக் கேட்டுக்கொண்டானை, மேல்விழுந்து நாமே விளம்பினேம் - நாமே அவன் பால் விரும்பிச் சென்று பாட்டைப் பாடினேம், நூல் அறிந்து தந்தக்கால் தந்தான் - பாட்டின் நயந்தெரிந்து கொடுக்க விரும்பினால் அவன் கொடுப் பான், தராக்கால் நமது மனம் நொந்தக்கால் என்னுகுமோ - அவன் தராத போது நம்முடைய மனம் வருந்தினால் அது எவ்வாறு முடியுமோ, எ - று.

10. கடம்பவனஞ் சூழ்கூடற் கன்னிமத னம்பை
அடர்ந்தவிழி யங்கையற்கண் ணம்மை—நடந்த
நடைக்குவமை யன்ன நகைக்குவமை முல்லை
இடைக்குவமை யில்லை யினி.

உரை:—கடம்பவனம் சூழ் கூடல் கன்னி - கடப்ப மரங்களின் செறிவு நிறைந்த மதுரைப்பதியில் வீற்றிருக்கும் சிறு பெண்ணாகிய, மதன் அம்பை அடர்ந்தவிழி அங்கையற்கண் அம்மை - காமன் கணையைத் தோற் கடித்த மீனாட்சி யம்மையானவள், நடந்த நடைக்கு உவமை அன்னம் - அவள் நடந்த நடைக்கு உவமையாகக் கூறக்கூடியது அன்னத்தின் நடையே, நகைக்கு உவமை முல்லை - அவளுடைய பல்லுக்கு இணையாகக் கூறக்கூடியது முல்லையரும்பு, இனி இடைக்கு உவமை இல்லை - இடைக்கு நிகராகக் கூறக்கூடியது யாதுமில்லை, எ - று.

11. கூப்பிட்டேன் செங்கைதனைக் கூற்றுவனைக் கண்டஞ்சிக்
கூப்பிட்டே னென்னையாட் கொண்டருள்வாய்—கூப்பிட்டே
னமாச் சென்றுற் றிலையவளே யட்டியின்னம
னமா காமாட்சி யே.

உரை :—கூப்பிட்டு னமாச சென்றுற்று இலையவளே - பூமியைப் பிளந்துகொண்டு பன்றி வடிவெடுத்துச் சென்றவராகிய திருமாலுக்குத் தங்கையே!, காமாட்சியே - ....., செங்கைதனைக கூப்பிட்டேன் - சிவந்த கைகளால் உன்னை வணங்கினேன், கூற்றுவனைக் கண்டு அஞ்சிக் கூப்பிட் டேன் - எமன் வருவானென்று பயந்து உன்னை யழைத்தேன், என்னை யாட்கொண்டு அருள்வாய் - என்னைத் தொண்டனைக்கொண்டு காப்பாற்று

வாய், அமா இன்னம் அட்டி ஏன் - என்னே யாள்வதற்கு இன்னும் கால தாமதம் எதனால், எ - று.

12. வானவரு மிந்திரரு மால்பிரம ருஞ்செத்துப்
போனவிடம் புன்மூளைத்துப் போகாதோ—ஞானமருள்
அத்த ரருணேச ரன்பாக நஞ்சதனைப்
புத்தியுடன் கொள்ளாத போது.

உரை :—ஞானம் அருள் அத்தர் அருணேசர் - சிவஞானத்தைக் கொடுக்கின்ற தலைவராகிய அருணாசலேசுரர், அன்பாக நஞ்சுதனைப் புத்தியுடன் கொள்ளாதபோது - இரக்கம் வைத்து விடத்தை தன்னறிவு மயங்காமல் உண்ணாதிருப்பாராயின், வானவரும் இந்திரரும் மால் பிரமரும் செத்துப் போனவிடம் புல் மூளைத்துப் போகாதோ - ....., எ - று.

13. நெஞ்சடைந்த வேட்கையெல்லா நீங்கி யிருவிழியும்
பஞ்சடைந்துள் ளாவி படுமுன்னே—செஞ்சடைமேல்
வெள்ளாரு வெந்நாளும் வேள்விப் புகைமாரு
நள்ளாரு வென்றே நவில்.

உரை :—நெஞ்சு அடைந்த வேட்கை எல்லாம் நீங்கி - மனதிற் பொருந்திய ஆசையெல்லாம் ஒழிந்து, இருவிழியும் பஞ்சு அடைந்து உள் ஆவி படுமுன்னே - இரண்டு கண்ணும் மயக்கமடைந்து உடம்பிலிருக்கின்ற உயிர் நீங்குவதற்கு முன்னாலே, செஞ்சடைமேல் வெள்ளாரு - சிவந்த சடைமேல் வெண்கங்கையைச சூடியவனே!, எந்நாளும் வேள்விப் புகை மாரு - எப்போதும் ஓமப்புகை நீங்காத, நள்ளாரு - நள்ளாற்றுப் பெருமானே, என்று நவில் - என்று சொல்லி அவனைத் துதி செய்வாயாக எ - று.

14. செங்கமலப் போதலர்ந்த செவ்விபோ லும்வதனம்
தங்குமொழி சந்தனசீ தம்போலும்—அங்கியெரி
கத்திரியைப் போலுமாங் காரிகையே வஞ்சர்மனம்
குத்திரர்பான் மூன்று குணம்.

உரை :—காரிகையே - பெண்ணே; வஞ்சமனக் குத்திரர்பால் மூன்று குணம் - கபட நெஞ்சமுடைய பொய்யரிடத்தில் மூன்று தன்மைகள் காணப்படும் (அவையாவன) வதனம் செங்கமலப்போது அலர்ந்த செவ்வி போலும் - (அவருடைய முகமானது) செந்தாமரைப் பூவின் மலர்ச்சிபோல அழகுடையது, தங்கு மொழி சந்தன சீதம்போலும் - அவர்கள் வாயில் தங்கிப் பேசப்படும் சொல்லானது சந்தனத்தின் குளிர்ச்சியைப்போலும் பொங்கு இதயம் கத்திரியைப்போலுமாம் - வெப்பமுள்ள உள்ளமானது எதையும் துண்டுபடுத்துகின்ற கத்தரியைப் போல்வதாகும், எ - று.

தோழி தூது

15. அனங் கனம்பா லந்தடை யங்குழல் சொற்றையல்
அனங்கனம்பான் மெய்சோர்ந் தயர்ந்து—மனங்கலங்கி
வாடியென்னுள் பற்றியெழின் மாயவனைப் போயழைத்து
வாடியென்னுள் சேர்ந்தணைய வா.

உரை :—அனம் அந்த நடை - அன்னம் போன்ற அழகிய நடையும், கனம் அம் குழல் - மேகத்தைப்போன்ற அழகிய கூந்தலும், பால் சொல்- பால்போன்ற மொழியுமுடைய, தையல் - பெண்ணுகிய தலைவி, அனங்கன் அம்பால் மெய்சோர்ந்து அயாந்து - காமன் கணையால் உடம்பு மெலிந்து தன்னை மறந்து, மனங் கலங்கி வாடி - நெஞ்சில் வருத்தமுற்றுத் தளர்ந்து, என் தான்பற்றி - என் பதத்தைப் பிடித்துகொண்டு, எழில் மாயவனைப் போய் அழைத்து வாடி என்னுள் - அழகு மிக்க மாயவனைக் கூட்டிக்கொண்டு வருக என்று என்னை வேண்டினுள், சோந்து அணையவா - ....., எ - று.

16. வாமாதூ போகே மனமே துதுதுதுது
ஆமா பசுமாதை யத்தனூர்—தாமாய்
நடித்தவர் பாகர் நடந்தவர் வேணி
முடித்தவர் கங்கணர்கேண் மோ.

உரை: —மா பசுமாதை யத்தனூர் - பெருமை பொருந்திய பசுமாதையில் வீற்றிருக்கும் தலைவராகிய சிவபெருமான், தாமாய் - தாமாகவே, வாது நடித்தவர் - காளியோடு வாதுசெபது நிருத்தம் புரிந்தவர், மாது பாகர் - உமையை வாமபாகத்தில் வுடையவராவர், நடந்தவர் - சுந்தர மூர்த்திக் காகத் தூது போனவர், போது வேணி முடித்தவர் - கொன்றைப் பூவைச் சடைமுடியிற் றரித்தவர், நேது கங்கணர் - பாம்பைக் கடகமாக அணிந்தவர், மனமே ஆ - நெஞ்சமே அவர் மயம் ஆவாயாக, எ - று

17. கங்கொன்ற சோதுமறு கைறைகம மண்பைகு
துங்கச் சடைமேற் றுலங்கவைத்தார்—மங்கையிடப்
பாகத்தார் மாதைப் பதியார் பசுபதிப்பேர்
ஆகத்தார் வைக்கு மவை.

உரை :—மங்கை இடப்பாகத்தார் - பார்வதியை இடதுபாகத்தில் வுடையவர், மாதைப் பதியார் - மாதைத் தலத்தில் வுறைபவர், பசுபதிப்பேர் ஆக அத்தர் - பசுபதி யென்ற பேருடைய தலைவர், வைக்கும் அவை - அணி பவைகளாவன, கங்கை கொன்றை நாகம் சோமன் - (சந்திரன்) தும்பை அறுகு என்பனவாம், துங்கச சடைமேல் துலங்க வைத்தார் - அவற்றைத் தலங்கும்படி சடைமுடிமே லணிந்தார், எ - று.

18. வெண்ணெயுற்று நெய்தேட வேண்டுமா தீபமுற்று
நண்ணு கனறேட னன்றுமோ—என்மனத்தை
நாடிச் சிவனிருக்க நாடாம லூர்தோறும்
தேடித் திரிவதென்ன செப்பு.

உரை :—வெண்ணெய் உற்றும் நெய்தேட வேண்டுமா - வெண்ணெய் கையிலிருக்கும்போது நெய்யைத் தேடவேண்டுவது அவசியமில்லை, தீபம் உற்றும் நண்ணு கனல் தேடல் நன்றுமோ - விளக்கிருக்கும்போது அதில் பொருந்திய அனலைத் தேடுதல் நலமா, என்மனத்தை நாடிச சிவன் இருக்க - தன்னைத் தியானிக்கிற வுள்ளத்தை விரும்பித் தங்குவதற்குச சிவ பெருமான் தயாராயிருக்கும்பொழுது, நாடாமல் - அவரை யுள்ளத்திலே தேடிக் காணுமல், ஊர்தோறும் தேடித் திரிவதென்ன செப்பு - தலங்கள் தோறும் தேடி யலைவதற்குக் காரண மென்னவென்று கூறுக, எ - று.

19 நல்லவர்கள் வாயா னவிலுமொழி பொய்யாமல்
இல்லையெனு துள்ளமட்டு மீவார்கள்—நல்லகுணம்
அல்லவர்கள் போவாவென் றுரைசொல்லி நாட்கழித்தே
இல்லையென்பா ரிப்பாரி லே

உரை :—இப்பாரிலே - இத்தப் பூமியிலே, நல்லவர்கள் வாயால் நவிலு மொழி பொய்யாமல் - நல்ல இயல்புடையவர்கள் தம்முடைய வாயினற் கூறிய வார்த்தை தப்பாதபடி, இல்லை எனுது உள்ளமட்டும் ஈவாகன் - இரப்பவர்களுக்கு இல்லையென்று சொல்லாது தங்களிடத்தில் இருகிற அளவு கொடுப்பார்கள், நல்ல குணம் அல்லவர்கள் போ வா என்று ஆசை சொல்லி நாள் கழிதலே இல்லை என்பார் - நீக்குணமுடையவர்கள் யாசகர் கூட்டம் போகுகள் வாருங்களென்று ஆசைவார்த்தை சொல்லி வீணுகக் கால தாமதஞ் செய்து கடைசியாக இல்லையென்று சொல்லுவார்கள், எ - று.

20. ஞானம் பெருமை நயங்கருணை யுண்மையபி
மானம் பொறுமை வணக்கமுயர்—தானமுடன்
சற்குணமா சாரந் தகுகல்வி நீதிநெறி
தீர்க்குணருக் கில்லென்றே சொல்.

உரை :—ஞானம் - அறிவு, பெருமை - தன் மதிப்பு, நயம் - நியாயம், கருணை - இரக்கம், உண்மை - சத்தியம் அல்லது வாய்மை, அபிமானம் - பற்று, பொறுமை - சாந்தம், வணக்கம் - பணிவு, உயர் தானமுடன் - மேலான ஈகையென்பவற்றோடு, சற்குணம் - நல்ல தன்மை (உபசாரம்) ஆசாரம் - ஒழுக்கம், தகு கல்வி - தக்க படிப்பு, நீதி நெறி - நேர்மையான வழி யென்பன, தீர்க்குணர்க்கு இல் என்றே சொல் - தீக்குண முடையவர்களுக்கு இல்லாதன வென்று கூறுக, எ-று.

21. ஞானம பெருமை நயங்கருணை யுண்மையபி
மானம பொறுமை வணக்கமுயர்—தானமுடன்
சற்குணமா சாரந் தருகல்வி நீதிகெறி
சற்குணருக் கூண்டென்றே சாற்று.

தறிப்பு:—ஞான முதலியவெல்லாம் நற்குண முடையவர்களுக்கு உள்ளனவென்று கூறுக.

22. நினைத்த வதுவொழிந்து நேரிடும்வே றொன்று
மனித்த கருமங்கள் வாயா—கனத்த
அயணமர ராலு மரியாலுந் தெய்வச்
செயலினைக்கா ணப்படா தே.

உரை:—நினைதத அது ஒழிந்து நேரிடும் வேறு ஒன்று - எண்ணிய காரியம் நடைபெறாது எண்ணாத மற்றொரு காரியம நிகழும், மனிதத கருமஙகள் வாயா - மகளுடைய செயல்கள் நினைததபடி சித்தி பெருவதில்லை, கனதத - மேலான, அயன் அமராலும் அரியாலும் - தேவராலும் பிரமாவாலும் விஷ்ணுவாலும, தெய்வச செயலினைக் காணப்படாதே - கடவுளின் அருட்செயல் நுட்பதனைத கண்டுபிடிக்க முடியாது, எ - று.

23. உன்னைப் பணிந்தே னுனக்கடிமை யாயினேன்
என்னைக் கருணைபுரிந் தீடேற்றுய்—கன்னியுமை
வாமா பசுமாதை வாசா வலர்ந்த கொன்றைத்
தாமா பசுபதி நாதா.

உரை:—கன்னியுமை வாமா - பாவதியாகிய கன்னியை இடப்பாகததிலுடையவனே!, பசுமாதை வாசா - பசுமாத்தூரில் வீற்றிருப்பவனே! அலாந்த கொன்றைத் தாமா - விளகுகின்ற கொன்றைமாலை யணிந்தவனே!, பசுபதி நாதா - பசுபதியெனனும திருப்பெயருடைய தலைவனே!, உனனைப் பணிநதேன் உனக்கு அடிமை யாயினேன் - உன்னை வழிபட்டு உனக்குத தொணடனானேன், எனனைக் கருணைபுரிந்து ஈடேற்றுய் - எனனகு இரஙகி என்னைக் கதியடையச செய்யவேண்டும், எ - று.

24. சுவனைத்தார்த் தேவர்கடங் கோவே தணிகைக்
கவளக் கரிக்கினிய கந்தா—தவளச்
சலசத்தாள் கோலவத் தணிபூட்டி யாக்கை
அலையச்செய் தாய்நன்மை யா.

உரை:—சுவனைததார் தேவர்கள் தம கோவே - நீலோற்பல மாலையணிந்த விண்ணவர்களுக்குத தலைவனே!, கவளக்கரிக்கு இனிய தணிகை கந்தா - வளமான உணவு உட்கொள்ளுகின்ற யானை முகவனுக்குத் தம்பி

யாகிய திருத்தணிகைப் பதியில் வதியும் கந்தப் பெருமானே!, தவளச சல சித்தாள் கோவை - வெண்டாமரையிலிருக்கும் கலைமகளின் கணவனுமிய நான்முகனே, தலை பூட்டி - விலகுகிட்டு, ஆக்கை அலையச செய்தாய் - அவனது உடம்பைத் தின்பப்படுதலினும், நன்மையா - இது நீதியாகுமா? எ - று.

25. பிஞ்சகன் றிங்கள் பிறங்க வரும்புனல்
அஞ்சவிர் கொன்றை யமர்ந்திட வுஞ்சுத
பஞ்செய் தனவோ பசுபதிநாயக
விஞ்சிய செஞ்சடை மேல்.

உரை:—பிஞ்சக - தலைக்கோல மணிந்த பெருமானே!, பசுபதிநாயக - பசுபதீச்சரனே, விஞ்சிய செஞ்சடைமேல் - சிறப்புற்றோங்கும் உனது சடையின்மேல், திங்கள் பிறங்க - சந்திரன் கலைபெற்று விளங்கும்படியாகவும், வரும் புனல் அஞ்ச - கங்கை பயந்து அடங்கவும் அவிரகொன்றை - திகழ்கின்ற கொன்றைப் பூவும், அமர்ந்திடவும் - தங்குவதற்கு, சுதபம் செய்தனவோ - நற்றவம் ஆற்றினவோ, எ - று.

26. தென்னலங் காட்டத்தா சேயிழைமே ணாட்டத்தா
நன்னி யிறுதிங்க ணாட்டத்தா—வன்னிகையா
காலகா லாநாக கங்கணா கண்டத்தில்
ஆலகா லாசங்க ரா.

உரை:—தென் ஆலங்காட்டு அத்தா - அழகிய திருவாலங்காட்டில் நடனஞ் செய்யும் அப்பனே!, சேயிழை மேல் நாட்டு அததா - சிவந்த ஆபரணமணிந்த உமை யம்மையைத் திருமேனியில் வைத்துக் கொண்ட பாதிப் பாகமுடையவனே!, நல் ஞாயிறு திங்கள் நாட்டததா - நல்ல சூரியனும் சந்திரனும் கண்களாக வுடையவனே!, வன்னிகையா - நெருப்பைக கையிலுடையவனே!, காலகாலா - காலனுக்குக காலனே!, நாக கங்கண - பாம்புக் காப்பை யுடையவனே!, கண்டதில் ஆலகால - கழுத்தில் ஆலகால விடத்தை யுடையவனே!, சங்கரா - சுகங்கொடுப்பவனே!, எ - று.

மொழி மாற்றுப் பொருள் கோள்.

27. சாரங்கபாணி தலையி லிரந்துண்டான்
சீரங்கம் பாதி சிவனுண்டான்—பாருங்கள்
பாற்கடலே யாண்டான் பசுபதிநா ராயணன்முன்
ஏற்கயிலை யாண்டா னிவன்.

உரை:—அங்கம் சார் பாணி - தலையோடு அமைந்த கையில், தலையில் இடம்தோறும், இரந்து உண்டான் - ஐயமேற் றுண்டவனான சிவபெரு

மான், சேரகம் பாதி யாண்டான் - நிறப்புடைய திருமேனியிற் பாதியைத தனக்குரிமை யாகக்கொண்டான், பசுபதி ஏர் கைலை யாண்டான் - உயிர களுக்குத் தலைவனுகிய கடவுள் தனக்குத் தகுதியான கயிலைமலையில் ஆட்சி புரிந்தான், நாராயணன் தான் பாற்கடலை யாண்டான் - விண்டுவானவர திருப்பாற்கடலில் ஆட்சி செய்திருர், எ - று.

குறிப்பு :—சாரங்கபாணி யென்பதற்கு மானைக் கையிலுடையவன் என்பதும் பொருள்.

28. மையிருண்ட சோலை வளர்கச்சி யேகம்பன்
கையிரண்டுஞ் சேர்த்துக் கலவாநாள்—ஐயிரண்டு
தேரோன் மதலைத் திருமஞ் சனமாடும்
நீரோ வெழுந்த நிலா.

உரை :—மை இருண்ட சோலைவளர கசசி ஏகம்பன் - மைபோலக கருதத பொழில்கள் ஓஙகிய காஞ்சிப்பதியில் வீற்றிருக்கும் ஏகம்பநாதர் கை இரண்டும் சேர்தது கலவா நாள் - இரு கையிலுலும் ஆலிஙகனஞ் செய்து சேராத நாளில், எழுந்த நிலா - தோன்றிய சநதிரனின் ஒளியா னது, ஐ இரண்டு தேரோன் - தசரதனுடைய, மதலை - மகனுகிய இராம னுடைய, திரு - மனைவியாகிய சீதை, மஞ்சனம் ஆடும் - முழுகும, நீரோ - நீரோகிய தெருப்பா யிருப்பதோ, எ - று.

சுப்ரதீபக் கவிராயர்

பாடியது

குன்னரங்கனென்னும் அரசன் இறந்தபோது பாடியது

1. தென்னரங்க னரங்கனென்பார் வாய்நிறவான்
கண்விழியான் றிருமபிப் பாரான்
என்னரங்கன் றூங்கரங்க னேழையர்பாற்
கருணையுட னிரங்கா ரங்கன்
மன்னரங்கன் றமிழ்ப்பெருமான் மழவரங்க
னளித்தருளு மைந்தனை
குன்னரங்கா வெனக்கிரங்காய் கொண்டுவந்த
தமிழ்க்கிரங்கிக் குழைந் தெழாயே.

உரை :—தென்னரகன் - அழகிய சீரங்கதிலுள்ள பெருமானே, அரங்கன் என்பார் - சபைக்கதிபதி யென்பார்கள், வாய்நிறவான் - அவன்

பேசுவதில்லை, கண் விழியான் - கண்ணைத் திறந்து பார்க்கமாட்டான், திரும்பிப் பாரான் - தான பார்க்கும் திசையிலிருந்து மாறிப் பார்க்கமாட்டான், என்ன அரங்கன் - அவன் எத்தன்மையான அரங்கனென்றால், துயிலரங்கன் - துயில்கின்ற அரங்கன், எழையர்பால் கருணையுடன் இரங்கா ரங்கன் - எளியவர்களிடத்துத் தயவு வைத்து இரக்கங் காட்டாத அரங்கநாதசாமி, மன்னர் அரங்கன் - வேந்தர்களேத தனக்கு உறுப்பாக வுடையவனென, தமிழ்ப்பெருமான் - தமிழுக்குத் தலைவனென, மழவரங் கன் அளிததருளும் மைந்தனென குன்னரங்கா - மழவரங்க பூபதிபெற்ற மகனுகிய குனனரங்கனே!, எனக்கு இரங்காய் - என்பாற் கருணைவையா யிடினும், கொண்டுவந்த தமிழ்க்கு இரங்கி - நானியற்றிக் கொணர்ந்த தமிழ்ப் பாட்டிற்கு இரக்கம் வைத்து, குழைந்து எழாய - மனமுருகி உயிர்தெழுவாயாக, எ - று.

2. எண்டிசைக்கும புகழ்படைத்த குன்னரங்க
மகிபாலா வினிமேலிந்த
மண்டலத்துக் கரசாள வொப்பிலா
நின்புதல்வன் மழவன்போதும
விண்டலத்துக் கிந்திரனுக் கரசுநிலை
யில்லாமல் வெகுநாளாக
நண்டளந்த நாழியாக் கிடக்குதந்த
விண்ணுள நடந்திடாயே.

உரை :—எண்டிசைகளும் புகழ் படைத்த - எட்டுத திசைகளிலும் புகழ பரவப்பெற்ற, குன்னரங்க மகிபாலா - குனனரங்க பூபதியே!, இனிமேல் இந்த மண்டலதனை யரசாள - எதிர்காலத்தி லிதப் பூமியை யாள்வதற்கு, ஒப்பிலா நின புதல்வன் மழவனபோதும் - இணையற்ற உன மகனுகிய மழவரங்கன் தகுதியுடையவனே, விண்டலதற்கு இந்திரனுகு அரசுநிலை இல்லாமல் - வானுலகதில இநதிரனுடைய ஆட்சி நிலை பெறுது, வெகு நாளாக நண்டளந்த நாழியாக கிடக்குது - நெடுங்கால மாகத் தகுதியற்றவ ராட்சியி லிருகிறதாகிய, அந்த விண்ணுள நடநதி டாயே - அந்தத தேவலோகத்தை யரசாட்சி செய்வதற்குச செல்வாயாக, எ - று.

திருவாரூர்த் தியாகராசப் பெருமானைப்பற்றிப் பாடியது

3. ஐயநீ புரங்கள்வென்ற தொக்குமிக்க காலனர்
அழியவென்ற தொக்குமிவ் வனைத்து மொக்கு மாயினும
வெய்யகாம தகனரென்னும விருதுசின்ன வேரசையில்
வெட்கினே னுமக்குமிந்த விருதுசின்ன மேற்குமோ

வெய்யவா சுகங்கள்பட்டு வெருவியோடி யரணிலா
ஏழைவீடு புக்கொளித்து மின்னுமாரன் வருவனச்
செய்யமேனி பாதியும் வெளிப்படாத கமலிவாழ்
தியாகராய ரேசிறந்த தென்றல்வாச லழகரே.

உரை :—அச் செய்யமேனி பாதியும் - (உமையம்மையால் கவரப் பட்ட) அந்தச சிவந்த திருமேனியின் ஒரு பாதி, வெளிப்படாத - தோன் றுத, கமலிவாழ் தியாகராயரே - திருவாரூரில் வாழ்கின்ற தியாகராசப் பெருமானே!, சிறந்த தென்றல் வாசல் அழகரே - நல்ல தென்றற்காற்று வீசுகின்ற தெற்குச சாளர வாசலையுடைய அழகிய பெருமானே!, ஐயரீ புரங்கள் வென்றது ஒக்கும் - ஐயனே நீ திரிபுரங்களை யழித்தது வெற்றி நாட்டியது பொருந்தும், மிக்க காலனை அழிய வென்றது ஒக்கும் - எமனை யுதைத்துக் கொன்று வெற்றி நாட்டியது பொருந்தும், இவ்வனைத்தும் ஒக்குமாயினும் - இவை போன்ற பிற வீரச செயல்கள் ஒப்புகொள்ளத் தக்கனவேயாஞலும், வெய்ய காம தகனரென்னும் விருத சின்ன ஓசை யில் வெட்கினேன் - கொடிய காமனை யழித்தவரென்னும் ஊதுகின்ற வெற்றிச சின்ன ஒலியைக் கேட்டு நான் வெட்கமடைகிறேன், உமக்கு மிந்த விருது சின்னம் ஏற்குமோ - உமக்கு இந்த வெற்றிச சின்னம் தகுதியாகுமா, வெய்ய ஆசுகங்கள் பட்டு - கொடிய அம்புகள் தைக்கப் பெற்று, வெருவியோடி அரண் இலா - அஞ்சியோடிப் பாதுகாப்பில் லாத, ஏழை வீடு புகுகொளித்தது - பெண்களுடைய இல்லங்களிற் போய மறைந்து, இன்னும் மாரன் வருவன் - மன்மதன் வந்து கொண் டிருக்கிறான், எ - று.

4. ஒருமாடு மில்லாமல் மைத்துனனு
ருலகமெலா முழுதே யுண்டார்
நரைமாடோ வொன்றிருக்க வுழுதுண்ண
மாட்டாம னஞ்சை யுண்டீர்
இருநாழி நெல்லிருக்க விரண்டுபிள்ளை
தாணிருக்க விரந்தே யுண்டீர்
திருநாளு மூண்டாச்சே செங்கமலிப்
பதிவாழுந் தியாக ஞரே.

உரை :—செங்கமலப் பதிவாழும் தியாகஞரே - சிறந்த இலக்குமி வீற் றிருக்கின்ற திருவாரூரில் வாழும் தியாகராசப் பெருமானே!, ஒரு மாடு மிலலாமல் மைத்துனனார் உலகமெலாம் உழுதே யுண்டார் - உன்னுடைய மைத்துனனாகிய விஷ்ணு ஒரு மாட்டின் உதவியும் வேண்டாது பன்றி யவதார மெடுத்தபோது தனது கோட்டினாலே நிலத்தை யுழுததோடு பூமியையும் விழுங்கினார், நரைமாடோ ஒன்றிருக்க - உமக்கு வெள்ளைக்

காலை யொன்று சொந்தமாக இருக்கவும், உழுது உண்ணமாட்டாமல் கஞ்சை யுண்டீர் - . , இரு காழி செல் இருக்க - இரண்டு படி செல் உமையம்மையிட மிருக்கவும், இரண்டு பிள்ளை தானிருக்க - அவற்றை விதைப்பதற்குக் கணபதி குமரன் என்ற இரண்டு புத்திரர்க ளிருக்கும் போது, இரந்தே உண்டீர் - பிச்சை யெடுத்துச் சாப்பிட்டீர், திருநாளும் உண்டாச்சே - உமக்கு திருவீழா எற்பட்டது வேடிக்கையே, எ - று.

தக்காராதவைச் சேரவேண்டுமெனப் பாடியது

5. சிறியராயினோர் சார்பினை விழையன் மின்றிறல்கெழுபெரியோராம்
அறிஞராயினோர் சார்பினை விழைமி னெஞ்ஞை வலரிதழ்விரி கொன்றை
வெறிநறுந் தெரடை யெம்பிரான் சார்பினை விழைதலா னுரகங்கள்
மறுவிலாற்றல் சால்கலுழனை விஞையினவாழ்ந் தனையோ வென்ன.

உரை :—சிறியராயினோர் சார்பினை விழையல்மின் - அற்பரானவர்கள் நட்பில் இசைசை வையாதீர்கள், திறல் கெழு பெரியோராம் அறிஞராயி னோர் சார்பினை விழைமி னெஞ்ஞை - திறமை பொருந்திய பெரியோராகிய அறி வுடையோர் நட்பினைப் பிரியப்படுங்கள், அலர் இதழ் விரி கொன்றை வெறிநறுந தொடை எம்பிரான் - மலர்ந்த இதழ்கள் விரியப்பெற்ற கொன் றைப்பூவின் தேன மணங்கமழும் மாலை யணிப்பெற்ற எமது கடவு ளுடைய, சார்பினை விழைதலால் - ஆதரவை விரும்புவதால், உரகங்கள் மறுவிலாற்றல் சால்கலுழனை - பாம்புகள் குற்றமற்ற திறமையுடைய கரு டனை, வாழ்ந்தனையோ என்ன விஞையின - நீ சுகமா என்று அஞ்சாமல் கேட்கலாயின, எ - று.

சதுரானன பண்டிதன் மனைவி தனக்குச் செய்த வுபசாரத்தினால் அவளைப் புகழ்ந்து பாடியது

6. நடக்கி லன்னமு மாநிற்கில் வஞ்சியாம்
கிடக்கி லோவியப் பாவைகி டந்தவா
தடக்கை யான்சது ரானன பண்டிதன்
மடத்து ளானெண் மனத்துறை வல்லியே.

உரை :—என் மனத்துறை வல்லியே - என்னுடைய உள்ளத்தில் நன்றி யறிதலின காரணமாகத தங்குகின்ற கொடிபோன்ற மாதானவள், தடக்கையான சதுரானன பண்டிதன் மடத்துளான் - கொடையான் விரிந்த கையையுடைய நான்முகப் புலவனது இல்லததி லிருகின்றவ ளாவள, நடக்கில் அன்னமும ஆம் - சென்றால் அவள் நடை அன்னத்தின் நடைபோலிருந்தும், நிற்கில் வஞ்சியாம் - நின்றால் அவள் வஞ்சிகொடி போன்றவளாம், கிடக்கில் ஓவியப் பாவை கிடந்தவா - படுத்தால் படத்தி லிருக்கும் பதுமைபோல விளங்குவன், எ - று.

சேனக்கனைப் புகழ்ந்து பாடியது

7. அளிக்கொ ளுந்தொடை யானர சைசக்ரமன்
ஒளிக்கொள் சேனக னின்றுவந் திட்டசீர்ப்
புளிக்குஞ் சோறுமென் புத்தியிற் செந்தமிழ்
தெளிக்குந் தோறெலாந் தித்தியா நிற்குமே.

உரை :—அளிக்கொளும் தொடையான் - வண்டுகள் தங்குகின்ற மாலை யணிந்தவன், அரசைசக்ரமன் - அரசருருக்குத் தலைவனாகிய, ஒளிக் கொள் சேனக்கன் - புகழ் மிகுந்த சேனக்கனென்னும் வள்ளல், இன்றுவந்து இட்ட சீர் புளிக்கும் சோறும் - இன்றைக்கு விருப்பத்தோடு அளித்த செம் பாகமான புளியன்னம், என் புத்தியில் செந்தமிழ் தெளிக்குந்தோறும் - என்னுடைய அறிவினுல் செந்தமிழை யாய்கின்ற எக்நேரத்திலும், தித் தியா நிற்குமே - இனிமை தந்துகொண்டிருக்கும், எ - று.

தாசியை வியந்தது

8. படைத்தமதன் றனையெரித்த பழமலையார்
நன்னாட்டிற் பாவை யாடன்
கடையரிக்கண் ணுண்மருட்டி மயல்மூட்டி
வரவழைத்துக் கைக்குள் ளாக்கி
இடைதுவள முலைதுலுங்க வெனையணைத்த
சுகத்தைதினைத் தேங்கி யேங்கி
அடைமழைபு மூளைவழியும் பொதியெருது
மொருவனுமபோ லலைகின் றேனே.

உரை:—படைத்த மதன் தனை எரித்த பழமலையார் நன்னாட்டில் - ஆயுதபாணியாய் வந்த மன்மதனை யழித்த திரு முதுகுன்ற நாதருடைய நல்லதேசத்திலுள்ள, பாவையாள் தான - பதுமை போல்வாளாகிய பெண், கடையரிக்கண்ணுல் மருட்டி - வரிகள் படர்ந்த கடைக்கண்ணினுல் மயக்கி, மயல் மூட்டி வரவழைத்துக் கைக்குள்ளாக்கி - மோக விலங்கு போட்டுத் தன்பால் வரும்படி செய்து தன்வசப்படுத்தி, இடை துவள முலை குலுங்க எனை அணைத்த சுகத்தை நினைந்து ஏங்கி ஏங்கி-இடையும் கொங்கையும் அசையும்படி என்னை யாலிங்கனஞ்செய்து கொடுத்த இன் பத்தை யெண்ணியது கிடைக்கப்பெறுது மிக வருந்தி, அடை மழையும் உளை வழியும் பொதி யெருதும் ஒருவனும்போல அலைகின்றேனே - இடை விடாது பெய்யும் மழையில் சகதி வழியில் பொதி சுமக்கின்ற மாட்டை நடத்துகின்ற ஒருவனைப்போல மயற் சேற்றினி லீடுபட்டு வருந்துகின் றேன், எ - று.

செகநாதன் வள்ளலிடஞ் சால்வைக்காகப் பாடியது

9. சூல்வைக்கு நெல்வயல்சூழ் சிங்கரிவாழ்
செகநாத சகுண மேன்மைச்
சால்வைக்கு மனதுவைத்து மாலயன்
சங்கரனேயுற்றுற்ற சலமபூக் கல்லாம்
ஆல்வைக்குஞ் சயனனென்று நூல்வைக்கு
மார்பனென்று பூசையும் வேழத்
தோல்வைக்குந் தோளனென்று ராணியவ
ருனைக்காட்டிச் சொன்னார் மன்னே.

உரை :—சூல்வைக்கும் நெல் வயல்சூழ் சிங்கரி வாழ் செகநாத - நெற்கதிர்கள் முதிர்ந்த கர்ப்பம்போற் ரோன்றும் வயல்கள் சுற்றியுள்ள சிங்கேரிப்பதியில வசிக்கின்ற செகநாதனென்னும் சற்குண சீலனே !, மேன்மைச் சால்வைக்கு மனதுவைத்து - உயர்ந்த உத்தரீயத்தை (மேலாடையை) விரும்பி, மால் அயன் சங்கரனே யுற்றால் - அரியயன் அரனே யடைந்தால், சலம் பூக்கல்லாம் - முறையே தங்களிடம் பாற்கடல் தாமரைப்பூ மலையென்றும், ஆல்வைக்கும் சயனன் என்றும் - ஆலிலைபிற் பள்ளி கொள்வோனென்றும், நூல் வைக்கும் மார்பன் என்றும் - பூணூலைத் தரிக்கும் மார்பை யுடையவ னென்றும், அசையும் வேழத்தோல் வைக்கும் தோளன் என்றும் - அசைகிற யானைதனதோலைப் போர்த்தத தோளினை யுடையவனென்றும், ராணி - கூறி வெட்கப்பட்டு, அவர் உனைக் காட்டிச சொன்னார் - அவர்கள உன்னிடத்தில் அது கிடைக்குமென்று தெரிவித்தார்கள், மன்னே - அசை, எ - று.

கனவு வுரைத்தல்

10. எழி லொருகிரியா னேழிலே யொன்றணிவான்
எழிலே யொன்றீ யெனக்கேட்டான்—எழிலே
ஒன்றீயென் றேணுண்ப தோடென்ரு னேடென்றேன்
னன்று மறிந்தவருக் கே.

உரை:—எழில் ஒரு கிரியான் - எழுசகியில் அதாவது உயரத்தில் ஒப்பற்ற மலையாகிய கைலைமலையை யுடையவன, எழிலே ஒன்று அணிவான் - எழு நதிகளி லொன்ரூகிய கங்கையைத் தரித்தவன், எழிலே ஒன்று ஈ எனக்கேட்டான் - எழு வாரங்களி லொன்ரூகிய செவ்வாயை (சிவந்த வாயினை)க் கேட்டான், எழிலே ஒன்று ஈ என்றேன் - எழு வாரங்களி லொன்ரூகிய வியாழன் (அதாவது பொனனைக்) கொடுவென்று கேட்டேன், உண்பது ஓடு என்ரூன் - (பொன் கிடையாது) நான் உணவு கொள்வது ஓட்டிலே யென்ரூன், என்றும் அறிந்தவருக்கே ஓடு என்

றேன் - எக்காலத்தும் புலவர்களுக்கு ஒதான் கிடைக்கு மென்றேன் (அல்லது எக்காலத்தும் தெரிந்தவாகளிடம விரைந்துபோ என்றேன்) எ - று.

11. மாரன் படைத்தலைவி மங்கைசி ரோமணியாம்
தாரிலகு மாலு டனதொழிலோ—ஏர்பெரிய
துன்னுவிழி நான்மூன்று தூயதன நாலிரண்டு
பன்னிரண்டு சிற்றிடையாம் பார்.

உரை :—மாரன் படைத்தலைவி - காமனது சேனைக்கு அதிபதி, மங்கை சிரோமணி - பெண்களுக்குச் சிகாமணி போன்றவள், தார் இலகு மாலுள் தன் - மலர் விளங்குகின்ற மான் போன்றவளுமாகிய கன்னியின், எழிலோ - அழகோ, ஏர் பெரிய - எழுச்சியும் பெருமையு முடையது, துன்னு விழி - அவளுடைய கண்ணானது, நால் மூன்று - ஏழாவது இராசி யாகிய மீன் போனறது, தூயதனம் நால் இரண்டு - சுத்தமான கொங்கை எட்டாவது இராசியாகிய கும்பம் போனறது, பன்னிரண்டு சிற்றிடை யாம் - நுட்பமான இடையானது பன்னிரண்டாவது இராசியாகிய சிங்கம் போன்றது, பார் - இதைத் தெரிவாயாக, எ - று.

பாலனையும் பரத்தையரையும் பழித்தல்

12. கச்சிருக்கும் போது கரும்பானேன் கைக்குழந்தை
வச்சிருக்கும போது மருந்தானேன்—நச்சிருக்கும
கண்ணார் கருமபாணர் காணவுநான் வேம்பானேன்
அண்ணா மலைபர சுக்கு.

உரை :—அண்ணாமலை அரசுக்கு - அண்ணாமலை யென்னும் மன்ன னுக்கு, கசிந்திருக்கும்போது கரும்பானேன் - கசசு இறுக்கமாய் முலை விம்மும்படி இருந்தபோது கரும்புபோல இனியவளானேன், கைக்குழந்தை வசிந்திருக்குமபோது மருந்தானேன் - குழந்தைபெற்றுக் கையில வைத்திருக் கும்போது நோயக்கு மருந்துபோற் பயன்பட்டேன், நசிந்திருக்கும் கண்ணார் கரும்பாணர் - விடம் தங்கும் கண்களையுடைய வேலமகளிர் கரும்புபோ லானார்கள், (அப்போது) காணவும் நான் வேம்பு ஆனேன் - பார்ப்பதற்குக் கூட நான் வேமபுபோலக் கசப்பவளானேன், எ - று.

குருநமச்சிவாய தேவர்

பாடியது

திருவண்ணுமலையில் அம்பிகையை தனக்குச் சோறு கொண்டுவரும்படி வேண்டியது

1. அண்ணு மலையா ரகத்துக் கினியாளே
உண்ணு முலையே யுமையாளே —நண்ணு
நினைதோறும போற்றிசெய நின்னடியா ருண்ண
மனைதோறுஞ் சோறுகொண்டு வா.

உரை :—அண்ணுமலையா ரகத்துக்கு இனியாளே - அண்ணுமலை காதருடைய உள்ளதனிறகு உவப்பானவளே !, உண்ணுமுலையே - எக குழந்தையும் பால் பருகாத தனங்களே யுடையவளே !, உமையாளே - உமா தேவியே !, நண்ணு - விரும்பி, நினைதோறும் போறறிசெய - எண்ணுந் தோறும் துதிக்குமபடியாகவும், நின அடியா உண்ண - உன்னுடைய அன்பாகள் உணவு கொளளுமபடியாகவும, மனைதோறும் சோறு கொண்டு வா - வீடுதோறும் சோறு கொணடு வருவாயாக, எ - று.

2. தாயிருக்கப் பிள்ளை தளருமோ தாரணியில்
நீயிருகக யான்றளர நீதியோ—வேயிருக்கும
தோளியே விண்ணோ துதிக்குந் திருமுத்து
வாளியே சோறுகொண்டு வா.

உரை :—வேயிருககும் தோளியே - மூஙகிலின றண்மையமைநத தோள்களே யுடையவளே !, விண்ணோ துதிககும் திருமுதது வாளியே - வானவாகள புகழகினற அழகிய முத்து அகுகியை அணிந்தவளே !, தாயிருக்கப் பிளளை தளருமோ - (சோறூட்டும்) அன்னை யிருக்கும்போது பிள்ளை வாடுவதுண்டா, தாரணியில் நீ இருகக யான் தளர நீதியோ - உலகத்தில் தாயாகிய நீ எனனைக் காப்பதற்கு இருகுமபோது நான உணவின்றி வாடுவது நியாயமாகுமா, சோறு கொண்டுவா - ....., எ - று.

3. நன்றிபுனை யுமபெரிய நாயகி யெனுங்கிழத்தி
என்றுஞ் சிவன்பா லிடக்கிழத்தி—நின்ற
நிலைகிழத்தி மேனி முழுநீலக் கிழத்தி
மலைக்கிழத்தி சோறுகொண்டு வா.

உரை :—நன்றி புனையும் பெரிய நாயகி யெனும் கிழத்தி - நன்மையே செய்யும் பெரும் தலைவியா யிருத்தற்குரிய உரிமை பூண்டவள், என்றும சிவன்பால் இடக்கிழதது - எக்காலத்தும் சிவனது இடப்பாகதது லிருக்

கும் உரிமை பூண்டவள், நின்றநிலைக் கிழத்தி - நிறைகின்ற திருவுருவ முடைய அம்மை, மேனிமுழு நீலக் கிழத்தி - உடம்பு முழுதும் நீலநிற முடைய தாயே !, மலைகிழத்தி - மலையரையன் மகளே !, சோறு கொண்டு வா - ....., எ - று.

4. முத்தாகி சூழு முதுகுன் றுறைவாளே
பததர் பணியும பதததாளே—அததர்
இடத்தாளே மூவா முலைமேலோ ராரா
வடத்தாளே சோறுகொண்டு வா.

உரை :—முததாகி சூழும் முதுகுன்று உறைவாளே - மணி முததாகி சூழப்பெறற திருமுதுகுன்றததில வீற்றிருப்பவளே !, பததர் பணியும் பதத்தாளே - அன்பாகள வணங்குகின்ற திருவடியை யுடையவளே !, அத்தர் இடத்தாளே - நமது தந்தையாகிய சிவபெருமானது இடப்பாகதது லுள்ளவளே !, மூவா முலைமேல் ஓரார வடததாளே - ஏன்றும் இளமைத தன்மையுடைய தனங்களின்மீது முத்துமாலையை அணிந்தவளே !, சோறு கொண்டுவா - ..., எ - று.

5. ஊன்பயிலுங் காய முலராம லுந்தனது
வான்பயிலும் பொனனடியை வாழ்த்துவேன்-தேன்பயிலும்
சொல்லி யனல்லார் துதிக்குஞ் சிவகாம
வல்லியே சோறுகொண்டி வா.

உரை :—தேன பயிலும் சொல் இயல் நல்லார் துதிக்கும் சிவகாம வல்லியே - தேனபோன்ற இனிமை பொருநதிய மொழியினையுடைய நன்மாதர் வாழ்ததுகினற சிவகாம வல்லியே !, ஊன் பயிலும் காயம உலராமல் - இத்தப் புலாலுடம்பானது வாடாதபடி, உந்தனது வான்பயிலும் பொன்னடியை வாழ்ததுவேன் - உன்னுடைய தெய்வததன்மை பொருந்திய திருவடியை நான் துதிக்கின்றேன், சோறு கொண்டுவா - ....., எ - று.

சிதம்பர தரிசனப் பலன்

6. கோபுரங்க ணான்கினையுங் கண்டமட்டிற் குற்றமெலாந்
தீபரந்த பஞ்சதுபோற் சென்றதே—நூபுரங்கள்
ஆர்க்கின்ற செஞ்சரண வம்பலவா நின்பாதம
பார்க்கின்முர்க் கென்னே பலன்.

உரை:—கோபுரங்கள் நான்கினையும் கண்டமட்டில் - நான்கு கோபுரங்களையும் தரிசித்த மாத்திரத்திலேயே, குற்றம் எல்லாம் தீபரந்த பஞ்சது போல் சென்றதே - பாவங்களெல்லாம் நெருப்புப் பற்றிய பஞ்சுபோல ஒழிந்தன, நூபுரங்கள் ஆர்க்கின்ற செஞ்சரண அம்பலவா - சிலம்புகள் ஒலிக்கின்ற செவ்விய திருவடிகளையுடைய சபா நாயகரே !, நின் பாதம்

பாகின்றார்க்கு என்ன பலன் - உன்னுடைய திருவடியைத தரிசிக கின்றவர்களுக்குப் பயன் எவ்வளவு அதிகமோ அருள்வாயாக, எ - று.

தோத்தப் பலன்

7. கண்டமட்டிற் கண்டவினைச் சத்தமபோங் கையிலள்ளிக்
கொண்டமட்டிற் கொண்டவினைக் கொள்ளபோம-வண்டமி
ழாயார வேபுகழும வண்ணச்சி வகாமித் [ழோர்
தாயார் திருமஞ் சனம்.

உரை :—வண்டமிழோர் வாயாரவே புகழும் வண்ணச சிவகாமித் தாயார திருமஞ்சனம் - வளப்பமான தமிழப புலவர்கள் வாய குளிரப் போற்றுகின்ற அழகு மிக்க சிவகாமி யனனையின தீராட்டுத தீர்த்தம், கண்டமட்டில் கண்டவினைச சத்தம் போம் - பார்த்த அளவில் தத்தினகுக காரணமாகிய கருமமென்ற ஓலைசயே இலலாமற போகும், கையில அளளிக கொண்டமட்டில கொண்ட வினைக் கொள்ள போம் - அதைக கையி லெடுத்து உட்கொண்ட அளவில் முனனுக ஏறபட்டிருந்த கருமக கூட்டங கள் தொலைந்தொழியும, எ - று.

கடவுள் திருவுளம் அறிய முடியாதென்றல்

8. அல்லலாகிய விருவினைதனை யறுத்தடி யிணைத்தருவாரோ
மல்லனீடியபுவியின்மேலின்னமும் வருமபிறப்பறுப்பாரோ
நல்லமாமுலைமாதுமைநாயகர் நானிதநவின்றேத்தும்
தில்லைநாயகரமபலத்தாடுவார் திருவுளந்தெரியாதே.

உரை :—நலல மாமுலை மாதுமை நாயகர - நன்மை செயது காகுகும் பெருந தனங்களை யுடைய அழகிய உமையமமையின கணவர, நான நிதம நவினறு ஏதிதம - நான நாளதோறும தித்தித்து வணகுகும், தில்லை நாயகர அமபலததாடுவார - திலலைச சபையில் நடனமியறறும பெருமானுனவர, அல்லலாகிய இருவினைதனை யறுதது அடியினை தருவாரோ - துனபதனிற குக் காரணமான நல்வினை தீவினை யெனனும் இரு கட்டுகளையும அறுத தத தமமுடைய இரணடு திருவடி நிழலை எனகு அளிப்பாரோ, மல்லல் நீடிய புவியின்மேல இன்னமும வரும பிறப்பு அறுப்பாரோ - வளங்கள் மிகுந்த இநத நிலவுலகத்தில் இனி யேற்படகூடிய பிறவியைத தொலைப் பாரோ, திருவுளம தெரியாதே - அவர என்ன செயயக் கருதியுள்ளா ரெனபதை நாம் அறியமாட்டோம, எ - று.

அனவரத தாண்டவத்தைப்பற்றி பாடியது

9. தூக்கியகால் நோகாதோ தூட்டமுய லகன்மேல்
தாக்கியகா ருணஞ் சலியாதோ—வாக்கார்
தினவரதா தில்லைத் திருத்தாண்ட வாரீ
அனவரதங் கூத்தாடி னால்.

உரை:—வாக்கு ஆர் தினவரதா - புகழ்ச்சி பொருந்திய நாடோறும் வரங் கொடுப்பவனே !, தில்லைத் திருத்தாண்டவா - தில்லையில் அழகிய நடனஞ் செய்யும் பெருமானே !, நீ அனவரதம் கூத்தாடினால் - நீ எக்காலத்தும் ஆடிக் கொண்டிருந்தால், நாக்கிய கால் சோவாதோ - உமது குஞ்சித பாதமானது வருந்தாதா, தட்ட முயலகன்மேல் தாக்கிய கால் தானும் சலியாதோ - பொல்லாத முயலகனை மிதித்தழுத்திய பாதமும் தளர்ந்து போகாதா ?, எ - று.

தொட்டிக்கலை சுப்பிரமணியத் தம்பிரான்

பாடியது

தொட்டிக்கலை சுப்பிரமணியத் தம்பிரான் திருவொற்றியூர்ப் பெருமானைப் பாடியது

1. வல்லவகு ளத்திருக்கு மன்னவா வாசமலி
நல்லவகு ளத்திருக்கு நாதனே—மெல்ல
வடிவாளைக் கொண்ட மணவாளா கணிச்சி
வடிவாளைக் கொண்டென்னிடர் மாற்று.

உரை:—வல்லவ - எல்லாத திறமையுமுடையவனே !, குளத்திருக்கு மன்னவா - நெற்றியிற் கண்ணுடைய வேந்தனே !, வாசமலி நல்ல வகுளத் திருகும் நாதனே - மணமிறைத்த செழிப்பான மகிழமரத்தினடியின் கீழ்த் தங்கிய பெருமானே !, மெல்ல வடிவாளைக் கொண்ட மணவாளா-மென்மையான வடிவுடையவளாகிய உமாதேவியை மணந்த கணவனே ! கணிச்சி வடிவாளைக் கொண்டு - மழுவாகிய கூறிய ஒளியுள்ள ஆயுதத்தினாலே, என் இடர் மாற்று-என்னுடைய துயரத்தை மாற்றி யொழிப்பாயாக, எ - று.

2. திருவல்லிக் கேணிவடி வந்தனஞ் சொறகண் சீர்ச்சிலம்ப
திருவல்லிக் கேணியலல் குமுன் னேயருள் செய்யவெழுந்
திருவல்லிக் கேணிபஞ் சொல்லிற் கண்முத்தங்கள் சிந்துங்
திருவல்லிக் கேணி மருவிய சங்கத திருக்கரனே. [கண்டாய்

உரை:—திருவல்லிகேணி மருவிய சகுகத திருக்கரனே - திருவல்லிக் கேணிப் பதியில் வீற்றிருக்கும் பாஞ்ச சன்யமென்ற சகுகினையுடைய திருகையை யுடையவனே !, திருவடிவம - இலக்குமியின் திருவுருவையும், வல் தனம் - சூது கருவிபோன்ற கொகையையும், இக்குசசொல் - கரும்பு போன்ற மொழியையும், ஏணிக் கண் - மான் கன்றின் பார்வையை யுடைய

கண்ணையு முடையவளாய், சீர்சிலம்பு அதிர் வல்லிக்கு - செம்மையான சதங்கை காலில் ஓசை செய்யப்பெற்ற கொடிபோன்ற இந்தப்பெண்ணுக்கு, ஏண் இயல் அல்கு முன்னே-வலிமையான தன்மை குறைவதற்கு முன்னே, அருள் செய்ய எழுந்திரு - கிருபை பாலிக்கும்பொருட்டு எழுந்தருள்வாயாக, வல் இக் கேள் நிபம் சொல்லில் - வன்மையான இவள் சுற்றத்தார் புறங் கூறினால், கண் முத்தங்கள் சிந்தும் - இவள் கண்கள் முத்துக்கள்போன்ற கண்ணீரைச் சொரியும், கண்டாய் அறிவாயாக, எ - று.

இராமசாமிக் கவிராயர்

பாடியது

மணலி சோலையப்ப முதலியார்மீது பாடியது

தலைவி கூற்று

1. மாலைதனைப் புனைந்தாலும் மலரணையிற்
படுத்தாலு மருவார் பன்னீர்
எலமுறத் தெளித்தாலு மெவ்வள
வேனுங்குளிர விலையென் செய்வேன்
கோலமுறு மணலியிலே கிளைகளொடு
சுகமபடைத்துக் குலாவு மெங்கள்
சோலைதனைச் சேராமற் காமவிடாய்
தணியாதே தோகை மாரே.

உரை:—தோகைமாரே - பாகையர்களே!, மாலைதனைப் புனைந்தாலும் - பூமாலையை அணிந்தாலும், மலர் அணையில் படுத்தாலும் - பூக்கள் பரப்பிய படுகையிற் படுத்திருந்தாலும், மருவார் பன்னீர் எலமுறத் தெளித்தாலும - வாசனை நிறைந்த பன்னீரைப் போதுமான அளவு கன்றுகத் தெளித்துக்கொண்டாலும், எவ்வளவேனும் குளிரவிலை - ஒரு சிறிது கூட உடம்பு குளிர்ச்சி யடையவில்லை, என் செயவேன்-யான் யாது செய்யக்கூடும், கோலமுறு மணலியிலே கிளைகளொடு சுகம் படைத்துக் குலாவும - வனப்பு மிகுந்த மணலியூரிலே உறவினரோடு நலமுற்று வாழ கின்ற, எங்கள் சோலைதனைச் சேராமல் காமவிடாய்த தணியாதே - எங்கள் சோலையப்ப முதலியாரைத் தழுவாமல் வேட்கைத் தாபமானது நீங்காது, எ - று.

தோழி தூது

2. பாலிகர் மொழிமாதே யென்னிடத்திற்
பூரணமாய்ப் பட்சம் வைத்துக்
காலைமுகி லனையகரன் மணலியில்வாழ்
சோலையெனுங் கன்னன் பாற்போய்
மாலைகேண் மறுத்தாலென் மனத்தைக்கேண்
மறுக்கின்மதன் வாரா வண்ணம்
ஓலைகேண் மறுத்தக்காற் கிள்ளார்க்குக்
கேள்வேறொரு சோதி ட்டாயே.

உரை:—பாலை நிகர் மொழி மாதே - பால்போன்ற சொல்லையுடைய பாங்கியே!, என்னிடத்தில் பூரணமாய்ப் பட்சம் வைத்து - என்னிடத்தில் முழு அன்பு மூடையவளாய், காலை முகில் அனைய கரன் - பருவத்திற் பெய்யும் மழையைப்போன்ற கையையுடையவனுகிய, மணலியில் வாழ் சோலை யெனும் கன்னன்பால் போய் - மணலியில் வசிக்கும் சோலையப்ப வள்ளலாகிய கர்னன்போன்ற கொடையாளியிடம்போய், மாலைகேள் - அவனுடைய தார் வேண்டுமென்று கேட்பாயாக, மறுத்தால் என் மனத் தைக் கேள் - மாலை கொடுக்கமாட்டே னென்றால் அவன்பாலுள்ள என் நெஞ்சைக் கேட்டுத் திருப்பிக் கொண்டு வா, மறுக்கில் - அது கொடுக்க மறுத்தால், மதன் வாராவண்ணம் ஓலை கேள் - மன்மதன் வந்து துன் புறுத்தாதபடி அவனைக் கண்டிக்கவும் ஓலைசுருள் கேட்பாயாக, மறுத் தக்கால் கிள்ளாக்குக் கேள் - அதுவும் தராவிட்டால் சிறு சீட்டுக்கேள்; வேறு ஒன்றும் ஓதிடாயே - வேறு யாதுங கூறவேண்டாம், எ - று.

திருத்தணிகை பெருமான்மீது தலைவி கூற்று

3. அரக்கனிலை யிலங்கையையென் றேறும்மருகன்
றணிகேச னன்பர் பானெஞ்
சிரக்கனிலை யாமலுனைக் காப்பானென்
றனையடிதே மொழியே மாலை
வரக்கனிலை மதிவீசப் படுமோவவ்
வேளைதனில் வாதுக் கேம
தரக்கனிலை மதப்பயலென் மூனங்குனிக்கத்
தகுமோசொற் றேரைகி யே.

உரை:—தே மொழியே - தேன்போன்ற சொல்லுடைய பாங்கியே! அரக்கன் அலை இலங்கையை வென்றேறும் மருகன் - இராவணனுடைய கடல் சூழ்ந்த இலங்கையிற் சென்று வெற்றி கொண்டவனுகிய விஷ்ணு வின் மருமகனுகிய, தணிகேசன் - திருத்தணிகைப் பெருமான், அன்பர்

பால் சொஞ்ச இரக்கன் - பக்தரிடத்திற் கனிவான உள்ளமுடையவன், அலையாமல் உனைக் காப்பான் என்றனடி - துயரப்படாமல் உன்னைக் காப்பாற்றுவானென்று நீ கூறினையே, (அப்படியானால்) மாலை வரமதி கனலை வீசப்படுமோ - சாயங்காலம் வரும்போது சந்திரன் நெயைக் கிரணமாக விடலாமா, அவ் வேளைதனில் - அச் சோதத்தில், வாதுக்கே - சண்டைக்காகவே, மதுரக்கனலை - இனிய கரும்பை, மதப்பயல் - மன் மதச் சிறுவன், என் முனம் குனிக்கத் தகுமா - என்னெதிரில் வில்லாக வளைப்பது தக்கதா, சொல் தோகை நீயே - பெண்ணே நீயே சொல் வாயாக, எ - று.

வரதுங்கராம பாண்டியன்மீது பாடியது

4. என்னையவரறமறந்தும்யானவரை மிகநினைந்திங்கிருந்துவாட
முன்னைவிதிப்படிதானேமுற்பிறப்பிற் செய்தவினைமுடிந்தவாறே
கன்னனெங்களபிராமன்வரதுங்க ராமன்றென்காசிநாட்டில்
அன்னவயற்குருகினங்காடனித்திருக்கமுடியாதென்றறைகுவீரே.

உரை :—கன்னன் எங்கள் அபிராமன் வரதுங்கராமன் தென்காசி நாட்டில் - கர்ணனைப்போன்ற கொடையாளியாகிய நல் வளப்புடைய வரதுங்கராம பாண்டியனது தென்காசியைச சூழ்ந்த தேசத்தில், அன்ன வயல் குருகினங்கள் - நெற்கழனிகளிற் பயில்கின்ற அன்னக் கூட்டங் களே !, என்னை யவர் மறந்தும் யானவரை மிகு நினைந்து இங்கு இருந்து வாடல் - தலைவர் என்னை முற்றிலும் மறந்த பிற்பாடும் நான் அவரையே அதிகமாக நினைந்திருந்து தளர்தல், முன்னை விதிப்படி தானே - பிறக்கு முன் தலையி லெழுதிய விதிப்பிரகாரம் ஏற்பட்டதோ, முற்பிறப்பில் செய்த வினை முடிந்தவாறே - சென்ற பிறவியிற் செய்த கருமம் இப் போது அனுபவித்து முடிவதற்காக ஏற்பட்டதோ, (அது எதுவானாலும்) இனி தரிக்க முடியாது என்று அறைகுவீரே - இனித் தாமதிக்க வியலா தென்று (தலைவரிடம்) தெரிவிப்பாயாக, எ - று.

சிவன் விஷ்ணு சம்பந்தத்தைப் பற்றியது

5. தன்மனை யிரத மாக்கித் தன்மகன் வலவ னாக்கித்
தன்மகன் பேரனேடு தனக்குமைத் துனன்கா லாக்கித்
தன்னணை நாரியாக்கித் தானுமோ ரம்பு மானன்
தன்மனமி டங்கொண் டுய்த்த சங்கரன் றனக்கு மாயன்.

உரை :—தன் மனம் இடங்கொண்டு உய்த்த சங்கரன் தனக்கு மாயன் - தன் மனக் கருத்தின்படி தனது இடப்பாகத்தில் தன்னை வைத் துக் காப்பாற்றிய சிவபெருமானுக்கு விண்டுவானவர், தன் மனை இரத

மாக்கி - (திரிபுர சங்கார காலத்தில்) தன்னுடைய மனைவியாகிய பூதேவியைத் தேராயிருக்கும்படி செய்து, தன் மகன் வலவனுக்கி - தன்னுடைய புதல்வனுகிய அயனைத் தேர்ப்பாகனுக்கி, தன் மகன் போனேடு தனக்கு மைத்துனன் காலாக்கி - தன் புதல்வனுக்குப் போனுகிய பகலவனையும், தனக்கு மைத்துனனுகிய சந்திரனையும் அதற்குச் சக்கரங்களாக்கியும், தன் அணை நாரியாக்கி - தன் படுக்கையாகிய ஆதிசேஷனை நாணுக்கி, தானும் ஓர் அம்பும் ஆனன் - தானும் ஒப்பற்றக் கணையாக விளங்கினன், எ - று.

6. முன்னெரு வூரின் பேரா முதலெழுத் தில்லா விட்டால்
நன்னகர் மன்னர் பேரா நடுவெழுத் தில்லா விட்டால்
கன்னமா மிருகத் தின்பேர் கடையெழுத் தில்லா விட்டால்
உன்னிய தேனின் பேரா மூரின்பேர் விளம்பு வீரே.

உரை:—முன்னெரு வூரின் பேராம் - முதலில் முழுதாகக் கூறினுல் ஒரு வூரின் பேராக வருவது, முதல் எழுத்து இல்லாவிட்டால் நன்னகர் மன்னர் பேராம் - அச சொல்லின் முதலெழுத்தை யெடுத்து விட்டால் எஞ்சிய பகுதி வூர்த்தலைவன் பெயராகும், நடுவெழுத்து இல்லாவிட்டால் கன்னமாம் மிருகத்தின் பேராம் - அச்சொல்லின் நடுவெழுத்தை யெடுத்து விட்டால் எஞ்சிய பகுதி அருகம்புல் தின்னும் விலங்கின் பேராகும், கடை எழுத்து இல்லாவிட்டால் உன்னிய தேனின் பேராம் - அசசொல்லின் இறுதி யெழுத்தை யெடுத்து விட்டால் எஞ்சிய பகுதி உண்ணும்படியான தேனினுடைய பெயராகும், வூரின் போ விளம்புவீரே - புலவர்களே அது எந்த வூர் என்று சொல்வீராக (மதுரை - துரை - மரை - மது) எ-று.

புதுக்கோட்டைத் தொண்டமானைப் புகழ்ந்து பாடியது

7. புதுவைமுத்துக் குமரதொண்டன் தமிழ்போலக்
கவிமதுரம் பொழியப் பாடும
சதுரருண்டோ வெனவிரிஞ்சன் வினவினுன்
சேடனுன் முனென் முனேர்
பதமெனினுந் தோன்றுமன் மால்கொண்டு
கடல்வீழ்ந்தான் பதுமன் சிறி
மதமுறுமா வைப்பிளந்து காதறுத்து
மண்சுமக்க வைத்திட் டானே.

உரை:—புதுவை முத்துக் குமர தொண்டன் தமிழ்போல - புதுக் கோட்டையிலுள்ள முத்துக் குமர தொண்டமானுடைய தமிழ்ப் பாடலைப் போல, கவி மதுரம் பொழியப் பாடும் சதுரர் உண்டே என - இனிமை ததும்பும்படி பாட்டியற்றக்கூடிய திறமைசாலிக விருக்கின்றர்களா வென்று, விரிஞ்சன் வினவினுன் - அயன் தேவர்களைக் கேட்டலாயினன்,

சேடன் நான்தான் என்றான் - ஆதிசேடன் நான் அவ்வாறு பாட வல்லவ னென்றான், ஓர் பதமெனினும் தோன்றுமல் மால் கொண்டு கடல் வீழ்ந் தான்-பாடல் சொல்லத் தொடங்கியபோ தி ஒரு சொல்லும் வாயிலுதிக்கப் பெறுமல் மயக்கங்கொண்டு அல்லது திருமாலைச் சுமந்து கொண்டு திருப் பாற்கடலிற் கிடந்தான், பதுமன் சீறி - அயன் சீற்றங்கொண்டு, மதமுறு ராவைப்பிளந்து - செருக்குடைய அவனது நாக்கினே யிரு பிளவு படும் படியாகசெய்தி, காது அறுத்து மண் சுமக்க வைத்திட்டானே - காதில் லாது செய்து பூமியைத் தாங்கும்படி செய்துவிட்டான், எ - று.

கிளிவிடு தூது

8. மதுகரத்தை யிகழ்ந்துகுயில் வடிவேலர்
தமையழைதது வருவே னென்ற
இதமுரைத்துச் சென்றதென்ன வின்னமுங்கா
ணேனதனுக் கிரக்க மேது
சதமிதென வளர்ததெடுத்த தாய்க்குதவா
தார்க்குதவுந் ததைதை யேநீ
முதுமறைதேர் குமரர்தமை யழைத்துவா
மதப்பயலே முடிக்கத் தானே.

உரை :—குயில் - குயிலானது, (தனதுவிடக் கருதியபோது) மது காரத்தை இகழ்ந்து - வண்டைக் குறைகூறி, வடிவேலா தமை யழைத்து வருவேனென்றே - கூறிய வேலாயுதததை யுடைய பெருமானைத் தான் விரைவில் கூட்டிக்கொண்டு வருவதாக, இதம் உரைத்துச் சென்றது என்ன - இனிமையான வார்ததை சொல்லிப்போனது என்னுயிற்று, இன்னமும் காணேன் அதனுககு இரக்கம் ஏது - இன்னும் அது வரக் காண வில்லை அதற்குத் தயவிலலே, சதம் இது எனவளர்த்து எடுத்த தாய்க்கு உதவாது பாக்கு உதவும் - இதைத் தஞ்சமென்றெண்ணி வளர்த்துப் பாராட்டிய அன்னைக்குப் பயன்படாமல் யார்க்குப் பயன்படக் கூடும், தத்தையே - கிளியே !, மதப்பயலே முடிக்கத்தானே - நம்மை வருத்து கின்ற மன்மதச சிறுவனை ஒட்டுவதற்காக, நீ முது மறை தேர் குமரர் தமை அழைத்துவா - பழைய வேதங்கள் ஆய்ந்தறிகின்ற முருகப் பெருமா னைக் கூட்டிக்கொண்டுவா, எ - று.

தியாகரைப் புகழ்ந்து பாடியது

9. குருமூர்த்தமாய் வந்துவினையொழித்து முந்திதனைக் கொடுக்கத்தி
ருமூர்த்தியல்லாமன் மற்றுமொருமூர்தகிகளு முண்டோ [யாகர்
திருமூர்த்தியென்பார்களவரவர்வாகனமேறிச்சேணிற்சும்மா [நெஞ்
திருமூர்த்தியல்லாம லொருமூர்த்தி யுங்களியிற்சேர்த்திடாரே. [சே

உரை :—நெஞ்சே - மனமே ! குருமூர்த்தமாய் வந்து வினையொழித்து முத்தியினைக் கொடுக்க - ஞானசாரியனுய் வந்து இருவினைத் தொடர்பை யறுத்து வீட்டின்பந் தருவதற்குத் தகுதியானவர், நியாகர் ஒரு மூர்த்தியு மல்லாமல் மற்றுமொரு மூர்த்தியும் உண்டோ - நியாகராசப் பெருமான் ஆகிய ஒப்பற்ற தெய்வமேயல்லாமல் வேறொரு தெய்வம் உலகத்திலிருக் கிறதா, திரிமூர்த்தி யென்பார்கள் - மும்மூர்த்தி யென்று சொல்லப்படு கின்றவர்கள், அவரவர் வாகனமேறிச் சேணில் சும்மா திரிமூர்த்தி யல்லா மல் - தத்தம் ஊர்திகளிலேறி வானத்திற் பயன்றராது திரிகின்ற மூர்த்தி களே யல்லாமல், ஒரு மூர்த்தியும் கதியில் சேர்த்திடாரே - அவாகளில் ஒரு தெய்வமும் வீடு செல்லும் வழியிற் கொண்டு சேர்க்கமாட்டார்கள், எ - று.

நற்ரு பிரங்கல்

10. இருக்கோல மிடுங்கலைசைத் தெய்வசிகா
மணிமுகில்வந் திணங்கா ளாளில்
உருக்கோல வடிவானுன் மைந்தனுமைத்
தனனுகித மோய்வி லாமல்
மருக்கோலஞ் செய்வதினும் வடவனலைச்
சொரிவதினு மயக்க மூற்றுத்
திருக்கோலங் கொண்டமக டயங்குகின்ருண்
மயங்குகின்ரு டினமுந் தானே.

உரை :—இருக்கோலம் இடுங்கலைசை - மந்திரங்கள் கடவுளே ஒல மிட்டுக் கூவுகின்ற கலைசைப் பதியில் வதிகின்ற, தெய்வ சிகாமணி முகில் வந்து இணங்கா ளாளில் - தெய்வ சிகா மணிபாகிய மேகம் போன்ற ஈகையாளி வந்து கூடாத காளில், உருக்கோல வடிவானுன் மைந்தனும் மைத்தனனும் - பன்றி வடிவெடுத்த விஷ்ணுவின் புதல்வனு கிய மன்மதனும் மைத்தனனுகிய சந்திரனும், நிதம் ஓய்வில்லாமல் மருக் கோல் அஞ்சி செய்வதினும் - நினந்தோறும் இடைவிடாமல் வாசனை யுடைய அம்பாகிய ஐந்துவகைப் பூக்களைச் செலுத்துவதினுலும், வட அன லைச் சொரிவதினும் - வடவாமுகாக்கினியை வீசுவதினுலும், மயக்கமூற்று - பூர்த்தியாக அவற்றைப் பெற்று அல்லது அவை யிரண்டுஞ் சேரப்பெற்று, திருக்கோலங்கொண்ட மகள் நியங்குகின்ருள் மயங்குகின்ருள் தினமுந் தானே - ஒவ்வொரு காளும் இலக்குமிபோன்ற வடிவுடைய என் மகள் நினைத்து மயல் கொள்ளுகின்ருள், எ - று.

தலைவிக் கூற்று

11. மூந்தனத்தைதத் தூதுவிட்டேன் வரவுமில்லை
மதராசன் முனிந்தே வில்லால்
எந்தனத்துக்கிலக்காக மலர்வாளி யெய்கின்ரு
னினியென் செய்வேன்
கந்தனத்தை யகலாத பூமபாலை
வேல்ப்பன் கையாற் பூசுஞ்
சந்தனத்தைச் சவ்வாதை நினைந்துமன
துருகுதடிதையலாளே.

உரை :—தையலாளே - தோழியே!, மூந்து அன்னத்தைத் தூது விட்டேன் வரவும் இல்லை - முன்னமே அன்னத்தைத் தலைவர்பால் தூது போகவிட்டேன் அது திரும்பி வரவில்லை, மதராசன் முனிந்தே வில்லால் என் தனத்துக்கு இலக்காக மலர் வாளி எய்கின்ரான் - மன்மதன் கினைந்து தன் வில்லை வளைத்துப் பூங்கணைகளை என் கொங்கைமேல் குறிவைத்து செலுத்துகின்ரான், என் செய்வேன் - நான் இதனால் யாது செய்யக்கூடும், கந்தனத்தை அகலாத பூம்பாலை வேலப்பன் - அறிவென்னும் ஐசுவரியத் தைக் கைவிடாத பூம்பாலை வேலப்ப னென்னும் வள்ளல், கையால் பூசும் சந்தனத்தை சவ்வாதை நினைந்து மனது உருகுதடி - ....., எ - று.

வெறி விலக்கல்

12. குருத்துக் கதலிப் பசுந்தேனை யள்ளிக்குரங் குகுட்டிக்
கருத்திக் களிக்குங் குறுங்குடிவாழ் தருமண்ணல் வெற்பில்
பருத்திப் பொதிக்கிட் டதிப்போலக் காமம் படைத்தவிந்த
ஒருத்திக் கொருவன் பகையோ நடுச்சொல்லு மூரவரே.

உரை :—கதலிக் குருத்து பசுந்தேனை - வாழை யினத்தளிர்ச சுருளி லுள்ள புதிய தேனை, குரங்கு அள்ளி குட்டிக்கு அருத்திக்களிக்கும் - குரங் கானது எடுத்துத் தன்னுடைய குட்டிக்கு உண்பித்துச் சந்தோஷப்படு மிடமாகிய, குறுங் குடிவாழ் தரும் அண்ணல் வெற்பில் - திருக்குறுங் குடியில் வீற்றிருக்கும் பெருமாளின் மலையின்மீது, பருத்திப் பொதிக்கிட்ட தீப்போல - பஞ்சுப் பாரத்தில் வைத்த நெருப்புப் படருவதுபோல, காமம் படைத்த இந்த ஒருத்திக்கு - மிகுந்த இசலை வளரப்பெற்ற இந்தப் பெண்ணுக்கு ஒருவன் பகையோ - ஆனானது வலுத்த எதிரியாகுமோ, ஊரவரே நடுச் செல்லும் - அதைக் கொல்லுவது நியாயமா வென்பதைப் பற்றி ஊர்க்காரர்களே நீதி கூறுவீர்களாக, எ - று.

அட்டாவதானம்

சரவணப்பெருமாட் கவிராயர்

பாடியது

இவர் பாண்டி நாட்டில் மூதகுளத்தூரிற் பிறந்த வேளாளர். சிவ ஞான யோகிகளின் மாணாக்கரு ளொருவராகிய சோமசுந்தரம் பிள்ளை யின் மாணாக்கர். இவர் கல்வியிற் தேர்ச்சியுற்று அட்டாவதானஞ் செய்து சேது சமஸ்தான வித்வானுயிருந்தவர்.

1. வெண்பாச்சொல் கவிஞரே வந்ததேதும்
மீதுமெய்த் தமிழ்ப்பாடி வந்தோம்
வெகுநேர்த்தி முன்னமே நானூறு கோவையொரு
வித்துவான் பாடிவந்தான்
நண்பாக மனம்வைத்து மூன்றுபடி பெருவாகு
நான்கொடுத்தே னதற்கிங்
நாடெலாந் தெரியுமென் மனையாட்டி மூன்றுதர
நான்றுகொண் டுயிர்பிழைத்த
புண்பாடெலா மறிந்தின்ன நீர்கவிசொலும்
புலவரென் றிங்குவந்தீர்
போம்போ மெனச்சொலிப் புலியாடு புலியொடு
போராடவோ பகடைத்தாய்
தெண்பாவெ னும்பொருட் பாமாலை பூண்டுபத
சேவைதந்தருள் புரிகுவாய்
தேசிகம் பூத்தவுமைநேச பொன்னம்பலவ
தேசிகசி ரோரத்நமே.

உரை :—தேசிகம் பூத்த உமைநேச - அழகு பொருந்திய உமை யம்மையின் அன்பனே!, பொன்னம்பலவ - கனக சபையை யுடைய வனே!, தேசிக சிரோரத்நமே - குருமார்களின் சிரோமணியே!, வெண் பாச் சொல் கவிஞரே வந்ததேது - வெண்பா வியற்றுகின்ற பாவலரே நீர் வந்த காரணமென்ன வென்றபோது, உன்மீது மெய்த்தமிழ் பாடி வந் தோம் - உங்கள் மீது உண்மையான தமிழ்பாட லியற்றிக்கொண்டு வந்தோமென்று சொன்னால், வெகு நேர்த்தி - மிக நன்றாயிருக்கிறது, முன்னமே நானூறு கோவை ஒரு வித்வான் பாடிவந்தான் - உனககு முன்

ஞகவே நானூறு பாடல் கொண்ட கோவை ஒரு கல்விமான் இயற்றிக் கொண்டு வந்தான், நண்பாக மனம் வைத்து - பிரியமாகக் கருதி, மூன்று படி பெரு வரகு நான் கொடுத்தேன் - ....., அதற்கு இக்காடெலாம் தெரியும் - அதனுலேற்பட்ட செய்தி யாதென்று ஊராரெல்லாரும் அறிவார்கள் (அதாவது) என் மனையாட்டி மூன்றுதரம் நான்றுகொண்டு - என் பெண்சாதி மூன்று முறை தற்கொலை செய்யத் தொடங்கி, உயிர் பிழைத்த புண்பாடெலாம் அறிந்து - அவள் உயிரைக் காப்பாற்றுவதற்கு நான் பட்ட துன்பத்தையெல்லாம் நீ தெரிந்து, இன்னம் நீர் கவிசொலும் புலவர் என்று இக்கு வந்தீர் - அதன் பிற்பாடும் பாட்டுப் பாடுகிற புலவராக என்னிடம் வந்தீர், போம் போம் எனச் சொல்லி புலையாடு புலையோடு போராடவோ படைத்தாய் - போம்போ மென் றிகழ்ந்து இழிவான சொற் சொல்லுகின்ற கீழ் மக்களொடு சண்டையிடவோ என்னைப் படைத்தாய், தெண்பா எனும் பொருள் பாமாலை பூண்டு பதசேவை தந்தருள் புரிகுவாய் - தெளிந்த கவியாகிய பொருள் நிறைந்த பாட்டுக்களின் மாலை யணிந்து உன்னுடைய திருவடிக் காட்சியை எனக்கு அளித்தருள்வாயாக, எ - று.

2. வந்தவரி யாவர்காண் கவிராஜ ரெந்தவூர்
வடகாசி யெங்குவந்தீர்
மகராஜ னென்றனது கீர்த்தியைக் கேட்டுன்மேன்
மதுரகவி பாடிவந்தோஞ்
சந்ததமும் வித்துவா னல்லநீ யென்னுடைய
தாதைதமை தாதைவழியிற்
றமிழ்கேட்ட தியாவர்காண் டலைமுறையி லில்லாத
தாழ்வினைதச் செய்துவந்தீர்
இந்தமொழி மற்றுமொரு தரமியுரைக்கிலோ
விரணகள மாகுமப்பா
லேகுமென் றேருதிடும் புல்லர்தம் பாற்செலா
தெனையாள வித்தருணமே
சிந்திக்கு மன்பருக் கருண்மழை சொரிந்தஞ்ச
செல்வங்கொ டுக்குமுதலே
தேசிகம் பூத்தவுமை நேசபொன் னம்பலவா
தேசிகரிரோ ரத்நமே.

உரை :—சிந்திக்கும் அன்பர்க்கு அருள்மழை சொரிந்து அதிக செல்வங் கொடுக்கும் முதலே - தியானிகின்ற அடியார்களுக்குக் கருணையை மழைபோலப் பெய்து மிகுந்த ஐசுவரியத்தை யளிக்கின்ற முதல்வனே!, தேசிகம் பூத்த உமை நேச - அழகு பொருந்திய உமையம்மையின் அன்பனே!, பொன்னம் பலவ - கனக சபையை யுடையவனே!, தேசிகரிரோ

ரத்தினமே - குருமார்களின் சிகாமணியே !, வந்தவர் யாவர் காண் - வந்தவர் யாரென்று கேட்க, கவிராசர் - பாட்டரசரென்று சொல்ல, எந்த ஊர் - எந்த ஊரெனக் கேட்க, வடகாசி - வடகாசி யென்று சொல்ல, எங்கு வந்தீர் - எதற்காக வந்தீரென வினவ, மகாராசனென்று உனது கீர்த்தியைக் கேட்டு உன்மேல் மதுரகவி பாடி வந்தோம் - பெரிய அரசன் போல் வாய் நீயென்று உன்னுடைய புகழைக் கேட்டு உன்மீது இனிமையான பாட்டியற்றிக்கொண்டு வந்தோ மென்று சொல்ல, சந்ததமும் வித்துவான் அல்ல நீ - நீ எப்போதும் கல்வியாளரை இருக்கிறவளில்லை, என்னுடைய தாதை மூதாதை வழியில் தமிழ்க் கேட்டது யாவர்காண் - என்னுடைய தந்தை பாட்டனார் பரம்பரையில் தமிழ்ப் பாடலை யொப்புக்கொண்டு கேட்டவர்கள் யார், தலைமுறையில் இல்லாத தாழ்வினைச் செய்துவந்தீர் - எங்கள் பரம்பரையிலேயே இல்லாத இழிவை நீர் ஏற்படுத்த வந்தீர், இந்த மொழி மற்றும் ஒருதரம் நீ யுரைக்கிலோ இரணகளமாகும் - இந்த வார்த்தையை இன்னொருதரம் சொன்னால் உனக்கும் எனக்கும் சண்டை வந்து இந்தவிடம் போர்க்களமாகும், அப்பால் எதும் என்றேதிடும் புல்லர் தம்பால் செலாது - அப்புறம் போவென்று தூரத்துகின்ற அற்பரிடத்திற் போகாமல், எனை ஆள இது தருணமே - என்னை யாட்கொள்வதற்கு இது சமயம், எ - று.

3. வாருநீர் யாரென்ன வித்துவா னென்னவு
மதிமோசம் வந்தென்றே
வாய்ஞளறி மெய்யெலா மிகநடுக் குற்றுநீர்
வந்தகா ரியமேதெனச்
சிருலா வியகாம தேனுவே தாருவே
சிந்தாம ணிக்குநிகரே
செப்புவச னத்தரிச்சந்த் ரனேயெனலுஞ்
சினந்திருக ணுஞ்சிவந்தே
யாரைநீ மாடுகல் மரமென்று சொன்னதுமலா
லரிச்சந்த்ர னென்றே
யடாதசொற் சொன்னீயே யார்க்கடிமை யாகினே
னுர்கையிற் பெண்டுவிற்றேன்
திருமோ விந்தவசை யென்றுரைசெய் வெருகொடிய
தியரைப் பாடி நொந்தேன்
றிருமன்று ணடுநின்று நடமொன்று புரிகின்ற
தென்றில்லை நடராஜனே.

உரை :—திரு மன்றுள் நடுநின்று நடமொன்று புரிகின்ற தென்றில்லை நடராசனே - அழகிய சபையில் நியாயத்திற்குச் சாட்சியாக நின்று

இணையற்ற திருநடனம் செய்கின்ற அழகிய தில்லைப்பதியி லுறையும் நடேசப் பெருமானே !, வாரும் நீர் யார் என்ன வித்துவான் என்னவும் - வாருங்கள் நீங்கள் யாரென்று கேட்க யான் புலவனென்று சொல்ல, மதி மோசம் வந்தது என்றே வாய் குளறி மெய்யெலாம் மிக நடுக்குற்று - அறி வுக்கு மோசமான காரியம் ஏற்படப்போகிறதே என்று சொற்றடுமாறி உடம்பெலாம் நடுநடுங்கி, நீர் வந்த காரியம் ஏதென - நீர் எதற்காக வந்தீ ரென்று வினவ, சீர் உலாவிய காமதேனுவே - புகழ் பரவிய காமதேனு வைப் போன்றவரே!, தருவே - கற்பகத் தருப்போன்ற கொடையாளியே!, சிந்தாமணிக்கு நிகரே - சிந்தாமணிக்குச் சமானமானவரே !, செப்பு வச னத்து அரிச்சந்திரனே - பேசும் பேசில் அரிசசந்திரன்போல உண்மை யானவரே !, எனலும் சினந்து இரு கணும் சிவந்தே - என்று கூறியவுடன் கோபத்தால் இரு கண்களும் சிவக்கப்பெற்று, யாரை நீ மாடு கல் மரம் என்று சொன்னதும் அலால் அரிசசந்திரன் என்று அடாத சொல் சொன் னையே - காமதேனுவைப்போல் மாடென்றும் கற்பகம்போல் மரம் என்றும் சிந்தாமணியைப்போல் இரத்தினக்கல் லென்றும் வைதது மல்லாமல் அரிச் சந்திர னென்று பொருந்தாச சொல்லை யாரை நீர கூறினீர், யார்கு அடிமையானேன் - அரிசசந்திரனைப்போல யான் யாருக்கு அடியவனு ணேன், யார் கையில் பெண்டு விற்றேன் - யாரிடததில யான் பெண் சாதியை விற்றேன், தீருமோ இத்த வசை - இவவகையாக இகழ்சசி மறக்கக்கூடியதா, என்று உரைசெய் வெகுகொடிய தீயரைப் பாடி னொந்தேன் - என்று பேசிப் புலவரைக் கடிகின்ற மிகக்கொடிய தீயவர் களைப் பாடி வருந்தினேன், எ - று.

4. நீதிபெறு கல்விப்ர தானந்தெளிந்திடு
நிதானஞ்ர னப்ரகாச
நித்தியசு மங்களக்கவி தாப்ரசங்கமன்
னேயசுந்த ரிலாசம்
வேதாந்த சாகரஞ்சித் ராவதானதமிழ்
மேகஞ்சபா ரஞ்சிதம்
வித்வசன சேகரஞ்சே துபதிவாசலில்
விளங்குநவ ரத்நதீபம்
சீதரன் சோமசுந்தர குருசுவாமியிரு
திருவடிதுதிக்கு மடிமைச்
சீர்பெறுஞ் சரவணப்பெ ருமாள்கவிச் சுரச்செய
சிங்கமெழுது மோலை
மாதவன் விசயரகுநாத துரைத்தொண்ட
மானெதிர்நடந்து காண்க

வரிசைபெறு தூதொன்று பாடிவந்தன முனதுமன
மகிழ்ந்தருள் புரிவையே.

உரை:—நீதி பெறு கல்விப் பிரதானம் - முறைமையுடைய கல்வியில் முக்கிய மடைந்தவன், தெளிர்ந்நடு நிதானம் - ஆராய்சிபண்ணித் தேர்ந்த நடுவு நிலைமை யுடையவன், ஞானப்பிரகாச - அறிவு விளக்கமுடைய, நித்திய சுமங்கல கவிதா பிரசங்கமன் - என்றும் மங்கலமான கவிகளைப் பிரசங்கமாகப் பொழிகின்ற கவியரசன், நேயர் சுந்தர விலாசம் - அன்பும் அழகும் பரவிய தன்மை யுடையவன், வேதாந்த சாகரம் - வேதாந்த நூற்கடலாயுள்ளவன், சிதராவதானம் - விசித்திரமான அட்டாவதான்ஞ் செய்கின்ற, தமிழ் மேகம் - தமிழ் பொழியும் முகில்போன்றவன், சபா ரஞ்சிதன் - சபைக்கு ரம்மியம் தருகின்றவன், வித்வசன சேகரன் - கல்வி மான்களுடைய கூட்டத்திற்குத் தலைவன், சேதுபதி வாசலில் விளங்கு நவரதனதீபம-சேதுபதியின் சமஸ்தானத்தில் ஒளிவீசுகின்ற நவரத்தின விளக்குப் போல்பவன், சேதரன் - திருமகள் தங்குபவன், சோமசுந்தர குருசாமி இரு திருவடி துதிக்கும் - சோமசுந்தரம் பிள்ளை என்ற ஆச்சாரிய சுவாமிகளின் இரண்டு பொற்பாதங்களையும் வாழ்த்துகின்ற, அடிமைச சீர்பெறும் சரவணப் பெருமாள் - அவருடைய தொண்டனென்னும் பெயர்பெற்ற சரவணப்பெருமாளென்ற, கவீச்சர செயசிங்கம் - கவிராய வெற்றிச சிங்கம்போன்றவன், எழுதும் ஓலை - வரைந்து விடுக்கின்ற திரு முகமானது, மாதவன் விஜய ரகுநாத துரைத் தொண்டமான் - திரு மாலின் அபிசமான வெற்றிப் பிரதாபமுடைய ரகுநாத துரையென்கின்ற தொண்டமானின், எதிர் நடந்து காண்ட - சந்நிதியிற் போய்ப் பார்க்கப் படுவதாக, வரிசை பெறு தூது ஒன்று பாடி வந்தனம் - பரிசு பெறக் கூடிய தூது நூலொன்று பாட்டு வடிவி லியற்றிகொண்டு வந்தோம், உனது மனம் மகிழ்ந்து அருள புரியவே - ....., எ - று.

சிவஞான யோகிகள்

பாடியது

தன் விருப்பப்படி அடியார்களுக்கு அன்னமிட்ட
தன் தாயாரைப் புகழ்ந்து பாடியது

1. அருந்தி யென்னம்மை யடியவர்கட் கென்றுந்
திருந்த வமுதளிக்குஞ் செல்வி—பொருந்தவே
ஆனந்தக் கூத்த ரகமகிழத் தொண்டுசெயும்
மானந்த வாத மயில்.

உரை:—ஆனந்தக் கூத்தர் அகம் மகிழத் தொண்டு செயும் - (எனது தந்தையாகிய) ஆனந்தக் கூத்தர் உள்ளங் களிக்கும்படியாகப் பணிவிடை செய்கின்ற, மானம் தவாத மயில் - பெருமை குறைவுபடாத மயில் போன்ற சாயலுடையவளாகிய, அருந்ததி என் அம்மை - அருந்ததியோ டொத்த கற்புடைய என் தாய், பொருந்தவே - பொருத்தமாக, அடியவர் களுக்கு என்றும் திருந்த அமுது அளிக்கும் செல்வி - சிவனடியார்களுக்கு எக்காலத்தும் செவ்வையாக அன்னமிடக்கூடிய திருமகளாய் விளங்கு கின்றுள், எ - று.

தில்லைவிடங்கன் மாரிமுத்துப்பிள்ளை

பாடியது

—oo:o:oo—

வெறி விலக்கல்

1. குவளைமலர் தோறுங் குருகார் வேலூரிற்
பவளவிதழ்ச் செங்கமலப் பாவாய்—இவள்கண்ணேய்
மைபட்டாற் றீருமோ வந்து வயித்தியனூர்
கைபட்டாற் றீருநிசங் காண்.

உரை:—குவளை மலர் தோறும் - நீலோற்பலப் பூகள் ஒவ்வொன்றி லும், குருகு ஆர் - அன்னங்கள சார்ந்திருக்கும், வேலூரில் - புள்ளிருக்கும் வேலூரிலுள்ள, பவள இதழ்ச செங்கமலப் பாவாய் - பவளம்போன்ற உதட்டினையுடைய செந்தாமரையில் வீற்றிருக்கும் திருமகளைப்போன்ற பெண்ணே!, இவள் கண்ணேய் - இவளிடத்திலேயுள்ள நோயானது அல் லது இவள் கண் வியாதியானது, மை பட்டால் தீருமோ - ஆடு பலியிடப் பட்டால் நீங்குமா அல்லது மை தீட்டினால் கண்ணேய் நீங்குமா, வந்து வயித்தியனூர், கைபட்டால் தீரும் - வயிதீசுரப்பெருமான் தோன்றித் திருக்கையினாற் றொட்டால் நீங்கும், நிசம் காண் - அஃது உண்மையே எ - று.

2. தென்றலிலிற் றென்றலைத்தண் டூமதியைக் கண்டிரங்கி
மன்றனறுங் கோதை வருந்தினால்—நின்றபரு
வத்தகரைக் காட்டி மயங்குவதென் றில்லையில்வாழ்
வித்தகரைக் காட்ட விடும்.

உரை:—தென்றலில் தென்றல - அழகிய இருப்பிடத்தி லுலாவு கின்ற தென்றல அல்லது அழகிய தலைமீது வீசுகின்ற தென்றல, தண் நீ மதியை - குளிர்ந்தாலும் வெப்பஞ் செய்கின்ற சந்திரனையும் கண்டு

இரங்கி - பார்த்து அஞ்சி, மன்றல் நறும் கோதை வருந்தினால் - நறுமணம் வீசும் கூந்தலையுடைய பெண் துன்பப்பட்டால், நின்ற பருவத் தகரைக் காட்டி மயங்குவதென் - நின்ற பருமையான அந்த ஆட்டைக் காட்டி மயக்கஞ் செய்வதால் என்ன பயன், நில்லையில் வாழ் வித்தகரைக் காட்ட விடும் - நில்லையில் வாழ்கின்ற அறிவுத் தெய்வத்தைக் காட்டினால் துன்பம் நீங்கிவிடும்; எ - று.

3. பாயல் வெறுத்துப் பணிவெறுத்துப் பூவெறுத்துத்
தாயைவெறுத் தூணைவெறுத் தாடலைகக்கு—நீயுமினித்
துள்ள லடக்கியதாற் றுன்பமடங் காதுநில்லை
வள்ள லடக்குவரிம் மால்.

உரை :—பாயல் வெறுத்து - படுக்கையை விரும்பாமல், பணி வெறுத்து - நகையைப் பூணுமல், பூ வெறுத்து - மலர் சூடுவதை நீக்கி, தாயை வெறுத்து - அன்னையைப் பகைத்துக் கொண்டு, ஊனை வெறுத் தான் தலைக்கு - உணவையும் வெறுத்தவளுடைய நிலைமையின் பொருட்டு, நீயும் இனித் துள்ளல் அடக்கியதால் துன்பம் அடங்காது - அன்னையே நீ துள்ளுகின்ற ஆட்டைப் பலி செய்து அடக்குவதனால் அவளுடைய நிலைமை மாறாது, நில்லை வள்ளல் அடக்குவார் இம்மால் - நில்லையில் வீற் றிருக்கும் நடேசப் பெருமானுடைய கொடையாளி அவள் மயக்கத்தை அடங்கச் செய்வார், எ - று.

வசைகவி ஆண்டான் புலவர்

பாடியது

ஆவுடை என்னுந் தாசிக்குப் பொட்டுக் கட்டியபோது கூறியது

1. நீண்ட பிரான்கட்டி னன்றிரு மாதுக்கு நெட்டரவம்
பூண்ட பிரான்கட்டி னுமை மாதுக்குப் புண்டரிக
மூண்ட பிரான்கட்டி னன்கலை வாணிக்கு முன்னற்சிக்கல்
ஆண்ட பிரான்கட்டி னன்றிரு நாணித்த வாவுடைக்கே.

உரை :—திருநாண் - திருமங்கிலியக் கயிற்றை, நீண்டபிரான் திரு மாதுக்குக் கட்டினன் - பெரிய திருமால் திருமகள் கழுத்திற் கட்டினன்; நெட்டரவம் பூண்டபிரான் கட்டினன் உமை மாதுக்கு - நெடியபாம்பினைத் தரித்த சிவபெருமான் உமையம்மைக்குக் கழுத்தில் அணிவித்தான்; புண்டரிகம் மூண்டபிரான் கட்டினன் கலைவாணிக்கு - தாமரையிற் றங்கிய பிரமா சரஸ்வதிக்குக் கழுத்திற் கட்டினன், முன்னர் சிக்கல் ஆண்ட

பிரான் கட்டினன் இந்த ஆவுடைக்கே - முன்னே சிக்கல் என்னும் பதியினை யாண்ட குமரப்பெருமான் இந்த ஆவுடையென்னும் தாசிக்குக் கட்டினன், எ - று.

2. பேசிக்கல் லாரமும் திங்களும போனட்புப் பேணியரை
வாசிக்கல் லாலரைக் காசுக்கொ டார்கடன் வாங்கினதை
யேசிக்க லாகவெ டாதுவி டாரிவ ரென்னசென்மம்
சீசிக்க லாருற வாகாது காணிச் செகத்தென்றுமே.

உரை :—கல்லாரமும் திங்களும் போல் பேசி - நீர்க் குளிரியும் சந்திரனும் போலக் குளிர்ச்சியாகப் பேசி, நட்புப் பேணியரை - நட்புப் பாராட்டியவர்களுக்கு, வாசிக்கல்லால் அரைக்காசும் கொடார் - வட்டப் பணங் கழிக்காமல் அரைக்காசு கூடக் கொடுக்கமாட்டார்கள், கடன் வாங்கினதையே சிக்கலாக எடாது விடார் - கடன் கொடுத்த பணத்தைக் கஷ்டப்பட்டாகிலும் வசூல் செய்யாது விடமாட்டார்கள், சிக்கலார் என்ன சென்மம் - அத்தகைய சிக்கல் என்னும் ஊரிலுள்ளாருடைய பிறப்புப் பயனற்றது உறவாகாது - இப்பூமியில் அவர்களுடைய இணக்கம் எக் காலத்திலு மாகாது, எ - று.

3. காணைநகர் கண்டேன் கன்மவினையைத் தொலைத்தேன்
ஆனைமடுவிற் றீர்த்த மாடினேன்—ஞானம
பொருந்தினேன் காளீசர் பொற்றாள் மலரில்
வருந்தினேன் பெற்றேன் வரம.

உரை :—காணை நகர் கண்டேன் - திருக்காணப்பேர் என்னும் திருப் பதியைத் தரிசித்தேன், கன்ம வினையைத் தொலைத்தேன் - சஞ்சிதமான கரும வினையை ஒழித்தேன், ஆனை மடுவில் தீர்த்தமாடினேன் - ஆனை குள மென்கிற புனிதநீரில் மூழ்கினேன், ஞானம் பொருந்தினேன் - அதனால் உயர்ந்த அறிவு வரப் பெற்றேன், காளீசர் பொற்றாள் மலரில் - காளீசருடைய அழகிய திருவடிக் கமலங்களில் வழிபட்டுக் குறையிரந்தேன், வரம் பெற்றேன் - எண்ணிய வெண்ணம் பூர்த்தியாகப் பெற்றேன், எ - று.

சுந்தர கவிராயர்

பாடியது

தையூர் பொன்னுசாமி முதலியார் குமாரர் முத்து முதலிப்பார்மீது பாடியது

1. முத்துகட லிற்பூத்த முத்தையெட்டு மாக்களுந்தம்
நத்துமணிக் கிச்சைகொண்டி நண்ணுவார்—அத்தமரைப்
பேராசை சாமிபால் பெட்பகஞ்சேர் நின்பெருமைக்
காராசை கொள்ளா ரறை.

உரை:—முத்து கடலில் பூத்த முத்தை - பழமையாகிய பாற்கடலிற் றோன்றிய முத்தினை, எட்டு மாக்களும் - எண்வகைத் திருமகளும், நத்து மணிக்கு இசசை கொண்டு நண்ணுவார் - நத்து என்ற மூக்கு நகையில் வைக்கும் இரத்தினமாக அதைப் பெறுவதற்கு விரும்பி யதனைப்போ யடைவர், அத்தமா - அதனோடு ஒத்த முத்து என்னும், பேரை - அழகிய பெயரை யுடையவராய், ஆசை சாமி பால் பெட்பகம் சோ - பொன்னு சாமி முதலியாருடைய விரும்பப்பெற்ற வீட்டினிற் பிறந்த, நின் பெரு மைக்கு யார் ஆசை கொள்ளார் - உன்னுடைய உயர்வினை விரும்பாதார் யாவரென்று, அரை - சொல், எ - று.

வறுமையை வருணித்தது

2. அன்ன முணற்கரிதா மாறுமூன் றும்மரிதாம்
பன்ன மரிதாம் பகலின்கண்—துன்னிசியில்
நேய மரிதாகு நித்திரைக்குப் பாயரிதாம
காயக் கரிதாங் கலே.

உரை:—அன்னம் உணற்கு அரிதாம் - சோறு உண்பதற்குக் கிடைப்ப தில்லை, ஆறும் மூன்றும் அரிதாம் - அறுசுவை யுணவும் பால் தயிர் நெய் மூன்றும் கிடைத்தற் கரியனவாயின, பகலின் கண் பன்னம் அரிதாம் - பகற்பொழுதில் வெற்றிலை கிடைப்பது அறியதாயிருக்கிறது, துன் நிசியில்- இருள் நிறைந்த நடு இரவில், நேயம் அரிதாம் - காதலி கிடைப்பதில்லை, நித்திரைக்குப் பாய் அரிதாம் - படுத்துத் தூங்குதற்குப் பாய் கிடைப்ப தில்லை, காயக்குக் கலே அரிதாம் - உடலுக்கு உடையில்லை, எ - று.

முத்துக்கருப்பன் கொடையை வியந்தது

3. காணியொரு மாசோமன் காலிலரை யாங்குமணன்
மாணிரவி சேயைந்து மாவிருகால்—வேணிமால்
முக்காற் பலியா முழுக்கொடைமுத் துக்கறுப்பன்
இக்காலத் தீவோர்க் கிறை.

உரை:—சோமன் காணி ஒருமா - சோமனென்ற வள்ளல் மாகாணிப் பங்கு ஈகையாளனுவன்; குமணன் காலில் அரையாம் - குமண வள்ளல் அரைக்காற் பங்கு ஈகையாளனுவன்; மாண் இரவி சேய் ஐந்துமா - பெருமையுள்ள சூரியனது மகனுகிய கன்னன் காற்பங்கு ஈகையாளனுவன்; வேணி மால் இருகால் - வானிலுள்ள முகில் அரைப் பங்கு வள்ளன்மை யுடையது பலி முக்கால் ஆம் - மாவலிச சக்கரவர்த்தி முக்காற் பங்கு வள்ளல், இக்காலத்து ஈவோர்க்கு இறை - இக்காலத்திற் கொடுப்பவர்களுக்கு மன்னனு யிருக்கின்ற, முத்துக்கறுப்பன் முழுக்கொடை - முத்துக்கறுப்ப னென்னும் வள்ளல் பூர்த்தியான ஈகையாளியாவன், எ - று.

எட்டையாபுரம் அருணைசல துரையை வியந்தது

4. சந்திரன் காற்காற் குமணனே வரைக்காற்
றனிக்கொடைக் கொருகால்
கந்தர மிருகாற் பலியுமோ முக்காற்
காழவிர்கொடை யுடையவராம்
இந்தமாநிலத்தின் முழுக்கொடை யுடையோ னிதமலி
யெட்டையா புரம்வாழ்
சந்திர வதனன் மந்தர புயத்தன்
றனியருணைசல துரையே.

உரை:—சந்திரன் கால் கால் - மதியானவன் மாகாணிப் பங்கும், குமணனே அரைக்கால் - குமணன் அரைக்காற் பங்கும், தனிக் கொடை கன்னனே ஒருகால் - இணையற்ற கன்னன் ஒரு காற்பங்கும், கந்தரம் இரு கால் - மேகம் பாதிப் பங்கும், பலியுமோ முக்கால் - மாவலிச் சக்கரவர்த்தி முக்காற் பங்கும், காழ் அவிர் கொடையுடையவராம் - உறுதியாய்த் திகழு கின்ற வள்ளல்களாவர், இந்த மாநிலத்தில் - இந்த அகன்ற பூமியில், முழுக் கொடை யுடையோன் - பூர்த்தியான வள்ளலா யிருப்பவன், இதம் மலி எட்டையாபுரம் வாழ் சந்திரவதனன் - இதமலிந்த எட்டையாபுரத்தில் வசிக்கின்ற மதிபோன்ற முகத்தை யுடையவனும் மந்தர புயத்தன் - மந்தர மலையைப்போன்ற தோள்களை யுடையவனுமாகிய, தனி அருணைசல துரையே - இணையற்ற அருணைசல வள்ளலாவன், எ - று.

திருவிரிஞ்சைப் பெருமானைப் பாடியது

5. தேன்பாயுஞ் சோலைத் திருவிரிஞ்சை மார்க்கேசா
நான்பாவி வந்துன்னை நாடினுல்—என்பாவி
என்றுபே சாம லிருந்தீர் தலைவனைத்து
இன்றுதுணை யாரு மிலையே.

உரை :—தேன் பாயுஞ் சோலை திருவிரிஞ்சை மார்க்கேசா - தேன் பொழிகின்ற பொழில்களையுடைய திருவிரிஞ்சைப்பதியில் வீற்றிருக்கும் மார்க்கசகாய சுவாமியே!, நான் பாவி வந்துனை நாடினுல் - பாவியாகிய நான் உன்பால் வந்து உன்னருளே விரும்பினுல், தலை வனைத்து என் பாவி என்று பேசாமல் இருந்தீர் - தலை குனிந்துகொண்டு பாவியே என் வந்தாய் என்று கேளாம லிருந்தீரே, இன்று துணை யாரும் இலையே - இக்காலில் உன்னைத் தவிர எனக்கு உதவிபுரிவார் யாருமில்லையே, எ - று.

இதுவுமது

6. இலையே துணையெனக் கீசாமார்க் கேசா
தலையே வணக்கத் தகுமோ—அலையுமென்மேல்
ஏனைதா னேவென் றிருப்பதழ கோதீர்
தானை வழித்துணை நாதன்.

உரை :—ஈசா மார்க்கேசா - கடவுளே! மார்க்கசகாய சுவாமியே!, எனக்குத் துணை இலையே - ....., தலையே வணக்கத் தகுமோ - நீ தலை குனித்து சும்மாயிருப்பது முறையோ?, அலையும் என்மேல் ஏனை தானை என்று இருப்பது அழகோ - திரிந்தழலும் என்மீது கருணை வையாமல் எப்படியானுல் நமக்கென்ன வென்று சும்மா இருப்பது நன்றுகுமோ, நீர் தானை வழித்துணை நாதன் - நீர்தானை மார்க்க சகாயர் என்ற பெயருடை யவர், எ - று.

இதுவுமது

7. ஆறணியா நாடுசடை யாளுர்சே வூர்திகொடி
நீறணி விரிஞ்சைபுரி நித்தனைக்—கூறுவது
பித்தனென விந்திரன்றன் பெண்படைத் தலைசுமந்து
அத்திலையமார் வைத்த வதனுல்.

உரை :—ஆறு அணியார் - கங்கையை யணியாகத் தலையிற் தரித்தவர், ஆடு சடை - ஆடுகின்ற சடையையுடையவர், ஆளுர் - ஆளுரினையுடையவர், சே ஊர்தி கொடி - காளையை வாகனமாகவும் கொடியாகவு முடையவர், நீறு அணி - திருநீறு தரித்தவர், விரிஞ்சைபுரி நித்தனை - விரிஞ்சைப் பதியி லுறையும் நித்தியராகிய பெருமானை, பித்தன் எனக் கூறுவது - பைத்தி

யக்காரனென்று சொல்வதற்குக் காரணம் யாதெனில், இந்திரன் பெண் டைத் தலை சுமந்து - இந்திரன் மனைவியாகிய சசி (அதாவது சந்திரனைத்) தலையிற் சுமந்து, அந்நியை மார் வைத்தவன் ஆதல் - எலும்பு மாலையைத் திருமார்பி லணிந்து கொண்டவனு மிருப்பதே என்க, எ - று.

இதுவுமது

8. சோற்றுக்குந் தண்ணீர்க்குந் தூக்கப்பட் டெஞ்ஞான்றும்
காற்றினெளி யானென்னைக் கண்பாராய்—ஊற்றமிகு
வெங்காராக் கொன்ற விடையூர் விரிஞ்சைவாழ்
சங்காரா கங்கா தரா.

உரை :—ஊற்றமிகு வெங்காராக் கொன்ற விடையூர் - அழுத்தமானப் பிடிப்புடைய கொடிய முதலையை யழித்த விண்டுவாகிய காளைவாகனத்தி லேறிவரும், விரிஞ்சை வாழ் சங்காரா - விரிஞ்சைப்பதியில் வீற்றிருக்கும் சங்கரனே !, கங்காதரா - கங்கையைத் தரித்தவனே !, எஞ்ஞான்றும் சோற்றுக்கும் தண்ணீர்க்குந் தூக்கப்பட்டு - எப்போதும் உண்ணச சோறும் குடிக்கத் தண்ணீரும் கிடையாமல் வருத்தப்பட்டு, காற்றி லெளியான் என்னை - காற்றுப்பட்ட தீப்போல நெஞ்சந் துயரப்படுகின்ற என்னை, கண்பாராய் - ....., எ - று.

கலப்பை யோட்டுவதைக் குறிப்பது

9. பத்துக்கான் மூன்றுதலை பார்க்குங்கண் ணாறுமுகம்
இத்தரையி லாறுவா யீரிரண்டாமே—இத்தனையும்
ஓரிடத்திற் கண்டே னுகந்தேன் களிகூர்ந்தேன்
பாரிடத்திற் கண்டே பகர்.

உரை:—இத்தரையில் - இந்தப் பூமியில், பத்துக்கால் மூன்றுதலை ஆறு வாய் ஈரிரண்டாம் - பத்துக்காலும் மூன்றுதலையும் ஆறுவாயும் நான்கு கண்ணும், இத்தனையும் ஓரிடத்தில் கண்டேன் - ஆகிய இவ்வளவையும் ஓரிடத்திலேயே பார்த்தேன், உகந்தேன் - அதை விரும்பினேன், களி கூர்ந்தேன் - சந்தோஷப்பட்டேன், பாரிடத்தில் கண்டே பகர் - உலகதில் இதைக் கவனித்து என்னவென்று கூறுவாயாக, எ - று.

குறிப்பு :—இரு காளைகளைக் கலப்பையிற் பூட்டி யோட்டுங் காலத்தில் இரண்டு காளையின் கால்கள் எட்டும், ஓட்டும் மனிதன் கால் இரண்டும் ஆக பத்துக்கால்; காளையின் முகம் இரண்டும், மனிதன் தலை ஒன்றும் ஆக மூன்று தலை; இரண்டு காளையின் முகத்திலுள்ள கண்கள் நாலுடன் ஓட்டு பவன் முகத்திலுள்ள கண்களிரண்டும் சேர்ததுக் கண்களாறும் ஆவன காண்க. காளை மனிதன் முகத்தோடு கொழு முகம் மூன்றும் சேர்த்து

முகம் ஆறு—இம் மூன்று வாயுடன் நாழி வாய் ஒன்று சேர்த்து வாய் நான் காவது காண்க, எ - று.

பொதுவானவைகள்

10. ஆறு குளந்தோப்பு மணியமஞ் சத்திரமும்
கூறுவழித் தாறுநிழற் கோட்டமுடன்—மாறுமன
வேசிசபை நீர்ப்பந்தல் வேந்தன் மடமயிலே
காசினிக்கு ளேபொதுவாங் காண்.

உரை:—மடமயிலே - இளைய மயில்போன்ற சாயலுடைய பெண்ணே!, ஆறு குளம் தோப்பும் - நதி பொய்கை பொழில் என்பனவும், அணி நியமம் சத்திரமும் - அழகிய வீதியும் சத்திரமும், கூறு வழி தாறு நிழல் - பொது வாக வகுக்கப்பட்ட பாதை அதிலுள்ள பழச்சூல மர நிழலென்பனவும், கோட்டமுடன் - கோயிலும், மாறு மன வேசி - மாறுகின்ற வுள்ளமுடைய வீலை மகளிரும், நீர்ப்பந்தல் - தண்ணீர்ப் பந்தலும், வேந்தன் - அரசர் களும், காசினிக்குளே பொதுவாம் - உலகத்திலே யாவர்களுக்கும் பொது வானவைகள் என்க; காண் - அசை, எ - று.

பூட்டுவில் பொருள்கோளுக்கு உதாரணம்

11. ஆறு தலைசிவனுக் கைந்துமுக மைங்கரற்குக்
கூறுங்கை யைந்து குரவனுக்கு—வீறுதோள்
எட்டாஞ்சே டற்கிரட்டி யாயிரநா விந்திரற்குக்
கட்டா யிரங்கண் குகற்கு.

உரை:—குகற்கு ஆறுதலை - குமரக் கடவுளுக்கு ஆறுதலைகள் உள் ளன, சிவனுக்கு ஐந்து முகம் - ....., தோல் கற்கு கூறும் கை ஐந்து - யானைமுகக் கடவுளுக்குப் பேசப்படுகின்ற துதிக்கையைச சேர்த்துக் கரங்க ளைந்தாகும், குரவனுக்கு வீறு தோள் எட்டாம் - பரமசாரியனுகிய சிவ பெருமானுக்குத் தனிப்பெருமையையுடைய புயங்கள் எட்டாகும், சேடற்கு இரட்டி ஆயிரம் நா - ஆதிசேடனுக்கு இரண்டாயிரம் நாகங்கள் உள்ளன, இந்திரற்குக் கட்டு ஆயிரம் கண் - இந்திரனுக்கு உடம்பில் ஆயிரங் கண்க ளுள்ளன; எ - று.

தோழி கூற்று

12. ஐந்து சிரமுள்ள வண்ணன்மே லேயெதிர்த்த
ஐந்து சரங்கொள வங்களை—ஐந்தான
பூதங் கடாமொடுங்கிப் பொன்றிடுவ ளாதலினல்
மாதங்க மாமயிலோய் வா.

உரை :—ஐந்து சிரமுள்ள அண்ணல் மேலே எதிர்த்த - ஐந்து திரு முகங்களே யுடைய சிவபெருமான்மீது அம்பு விடுத்துப் போர் செய்த, ஐந்து சரங்கொள் அனங்களுல் - ஐந்து பூவகளேகளே விடுக்கும் மன்மதன் செய்யும் தயரால், ஐந்தான பூதங்கள் தாமொடுகி - உடம்பிலுள்ள ஐந்து பூதங்களடங்கப் பெற்று, மாது பொன்றிடுவ ளாதலினுல் - மாது மரண மடைவா ளாதலினுல், அங்கமா மயிலேரய் வா - மேன்மையுடைய மயிலே இருப்பிடமாக உள்ள முருகப்பெருமானே வந்தருள்வாயாக, எ - று.

முருகர்மேல் நிந்தாஸ்துதி

13. வேலா வுனக்குமிகு வீணை ஜம்பமினி
ஏலாது வேலாது வேலாது—தோலாடை
கொண்டணிந்துந் தந்தை கோகனத தோன்சிரததில்
பண்டிரந் துண்டான் பலி.

உரை:—வேலா - வேலாயுதப் பெருமானே!, உன் தந்தை தோலாடை கொண்டணிந்து - உன் தகப்பனராகிய சிவபெருமான் யானைத் தோலே புரித்து ஆடையாக வுடுத்திக்கொண்டு, கோகனத்தோன் சிரத்தில் - தாமரைப் பூவிலிருக்கும் அயனுடைய தலையைக் கிள்ளியதன் கபாலத்தில், பலி பண்டு இரந்து உண்டான் - பழைய காலத்திற் பிச்சைச சோறேற்று அருந்தினு ஞதலினுல்; உனக்கு வீணை ஜம்பம் இனி ஏலாது ஏலாது - இனிமேல் பயனில்லாத ஆரவாரம் உனக்கு எக்காலத்திலும் பொருந்தாது, எ - று.

சிவபெருமான் துதி

14. நாகந் தனையுரித்து நாகந் தனைவளைத்து
நாகந் தனைத்தரித்த நாதனே—நாகங்கொள்
பத்தானைக் கொன்றானைப் பாண்டி லெனவூர்ந்த
அத்தா வடியேற் கருள்.

உரை :—நாகந்தனை யுரித்து - யானைதோலை யுரித்து உடுத்தி, நாகந் தனை வளைத்து - மேரு மலையை வில்லாக வளைத்து, நாகந்தனைத் தரித்த நாதனே - பாம்பினை யாபரணமாக அணிந்த தலைவனே!, நாகங்கொள் பத்தானை - கைலைமலையை எடுத்த பத்துத் தலையையுடைய இராவணனை, கொன்றானை - கொன்ற திருமாலை, பாண்டிலென ஊர்ந்த அத்தா - வாகனமாகச் செலுத்திய அப்பனே!, அடியேற்கு அருள் - ....., எ - று.

சுயவரை யிகழ்தல்

15. கயவரெலாங் கூடியொரு காரியத்தைச் செய்தும்
பயனடைவ துண்டோவிப் பாரில்—வியலிலுறும்
சோதினிமுன் பின்னுஞ் சோர்ந்துதேய்ந் தும்பயனை
யாது மடையாது போல்.

உரை :—வியலில் உறும் சோதினி - அகன்ற வீட்டிலுள்ள விளக்கு மாருனது, முன்னும் பின்னும் சோர்ந்தும் தேய்ந்தும் - முற்பகுதியிலும் பிற்பகுதியிலும் நிலத்தி லுறைந்து குறைவுபட்டும், பயனே யாதும் அடை யாது போல் - ஒரு பயனும் பெருததுபோல, இப்பாரில் - இந்தப் பூமியில், கயவரெலாங்கூடி ஒரு காரியத்தைச் செய்தும் பயனடைவது உண்டோ - அற்பர் ஒருங்கு சேர்ந்து ஒரு முயற்சி செய்தாலும் அதன் பயனைப் பெறுவ தில்லை, எ - று.

களத்தூர் வள்ளலைப் புகழ்ந்து பாடியது

16. பொன்னெல்லே யெல்லாம் பொதிபொதியாய்ப் பூசுரர்க்குச்
செந்நெல்லே போலச் சிறந்தளித்தான்—பன்னகத்தின்
சீரார் மணியையனே செய்யாளுஞ் செய்யகளத்
தூராளுஞ் செய்கருமம் மொன்று.

உரை :—பன்னகத்தின் சீரார் மணியை னிலை செய்யாளும் - பாம்பின் சிறந்த மணியாகிய ஈசுரத்தினத்தைப் பொருட்படுத்தாதவனும், செய்ய களத்தூராளும் - செம்மையாகிய களத்தூரென்னும் பதியில் வாழ்பவனு மாகிய வள்ளல், செய் கருமம் ஒன்று - செய்கின்ற ஈகைசெயல ஒன் றுளது, பூசுரர்க்கு - உலகத்தில் தேவர்களேப்போல மதிப்புடையவரா னுக்கு, பொன் எல்லே எல்லாம் - மிகுந்த அளவுடைய தங்க முழுவதையும், பொதி பொதியாய் - சுமை சுமையாக, செந்நெல்லே போல - உயர்ந்த நெல்லேப்போல, சிறந்து அளித்தான் - யாவரும் கொடாத வகையில் மிகுதியாகக் கொடுத்தான், எ - று.

செல்வரியல்பு கூறியது

17. ஈராறு மீரைரயு மில்லேயென்றே னுதலினுல்
ஈராறு சொல்லா திருந்தீரே—ஈராறு
கட்டி யணைத்தேனீ காதலுட னேசேர்ந்தால்
வட்டியுடன் முனே வரும்.

உரை :—ஈராறும் ஈரைரயும் - பன்னிரண்டும் ஒன்றுமாகிய பதின் மூன்றுவது நக்ஷத்திரமாகிய அத்தம் அதாவது பொருள், இல்லே என்றேன் நுதலினுல் - என்னிடத்தில் இல்லேயென்று நான் சொன்னபடியாய் ஈராறு சொல்லாது இருந்தாரோ - பன்னிரண்டாவது நக்ஷத்திரமாகிய உத்திரம் அதாவது பதில் உரையாது இருந்தீரே, நீர் ஈராறு கட்டியணைத்தே காத லுடனே சேர்ந்தால் - வருடத்தில் பன்னிரண்டாவதாகிய வெகு தானி யத்தை (மிகுந்த நெல்லை) மூட்டை மூட்டையாகக் கட்டிவைத்து அவற்றை யாசையுடனே சேர்த்து வைத்தால் பொருள், வட்டியுடன் தானே வரும் - ....., எ - று.

பிரிவாற்றுமையாற் றலைவன் வருந்துதல்

18. நறையொழுகுங் குழலாளை யமுதொழுகு
மொழியாளை நயனவேலிற்
பிறையொழுகு நுதலாளைப் பிரிந்திருக்க
விப்பிறப்பிற் பெரிதுமை யான்செய்
குறையெதுவோ மதன்கணைக்கு மிகவருந்த
வெனைவிதித்த கொடியோ ளுனை
மறையவனுங் கலிமகளைப் பிரிந்திருந்தாற்
றெரியுமந்த வருத்தந் தானே.

உரை :—நறை ஒழுகும் குழலாளை - தேன் சிந்தும் மலரணிந்த கூந்தலை யுடையவளை, அமுது ஒழுகும் மொழியாளை - அமுதம்போன்ற இனிமை பயக்கின்ற சொல்லுடையவளை, நயன வேலை - வேல்போன்ற கண்ணை யுடைய, பிறை ஒழுகும் நுதலாளை - பிறைபோன்ற அழகு விளங்குகின்ற நெற்றியுடையவளை, இப்பிறப்பிற் பிறந்திருக்க - ....., பெரிதுமை யான் செய் குறை எதுவோ - பெரிதாக நான் செய்த தீவினை யாதோ, மதன் கணைக்கு மிக வருந்த எனை விதித்த - மன்மதன் அம்பினால் துயரப்படும்படி யாக என் தலையி லெழுதிய, கொடியோளுனை மறையவனும் - பொல்லாதவ ளுனை பிரமனும், கலிமகளைப் பிரிந்திருந்தால் தெரியும் அந்த வருத்தம் தானே - ... ., எ - று.

இதுவுமது

19. பாங்காளை வேளை மருட்டு கண்ணாளைப்பகற்பொழுது
தூங்காளைக் காமசுர தஞ்செய் வாளையென் சொல்லுக்குப்பின்
வாங்காளை மோகமவ ளாலைவப் பாளையென் மார்பைவிட்டு
நீங்காளை யெப்படியோ பிரிந்தா றுமென் னெஞ்சகமே.

உரை :—பாங்காளை - அன்புடையவளை, வேளைமருட்டு கண்ணாளை - மன்மதனையும் மயக்குகின்ற கண்ணை யுடையவளை, பகல் பொழுது தூங் காளை - பகற் காலத்தில் நித்திரை செய்யாதவளை, காமசுரதம் செய்வாளை - காதல் லீலைகள் செய்பவளை, என் சொல்லுக்குப் பின் வாங்காளை - என் சொற்படி நடப்பவளை, மோகம் அவளா லைவப்பாளை - தானுமவே எனக்கு ஆசை விளைப்பவளை, என் மார்பைவிட்டு நீகாளை - மறக்க முடியாதபடி என் நெஞ்சில் நிற்பவளை, எப்படியோ பிரிந்து ஆறும் என் நெஞ்சகமே - என் மனமானது எவ்வாறு பிரிந்து வருத்தத்தைத் தணியப்பெறும் எ - று.

இதுவுமது

20. கூட்டியிருக்குஞ் சப்ரமஞ்சக்
குளிர்பஞ்சணைமேல் ரத்னவீ
பூட்டியிருக்குங் கரங்களொடு
பொருந்தியழுந்திக் கிடவாமல்
மூட்டியுடுத்த சேலையுமாய்
முன்னைதலைக்கணி யாகவைத்து
வேட்டிவிரித்துப் படுக்கவென்றே
விதித்தான்கமலத் துதித்தோனே.

உரை:—கூட்டியிருக்கும் சப்ரமஞ்ச குளிர் பஞ்சணைமேல் செவ்வை யாய் அமைத்திருக்கும் மேல்விதானத்தோடு கூடிய கட்டிலில் விரிக்கப் பெற்ற குளிர்சீதரும் பஞ்சு மெத்தைமீது, இரத்தனவீபூட்டி இருக் கும் கரங்களோடு பொருந்தி யழுந்திக் கிடவாவல் - இரத்தினங்களிஞற் செய்த வளையலணிந்த கைகளால் தழுவப்பெற்று ஆலிங்கனஞ் செய்து படுத்திராமல், மூட்டி உடுத்த சேலையுமாய் - கிழியல் தைக்கப்பெற்ற துணியுடன், முன் ஸ்ரீ தலைக்கணியாக வைத்து - முன் கையைத் தலையணை போல் வைத்துக்கொண்டு, வேட்டி விரித்துப் படுகை யன்றே - ஆடை யைக் கீழே படுகையாக விரித்து அதன்மேல் படுக்கும்படியாக, விதித் தான் கமலத்து உதித்தோனே - பிரமன் விதித்திட்டான், எ - று.

இதுவுமது

21. சங்கையிலா மதன்விடுத்த பகழிதைத்த
புண்வருத்தந் தன்னைநோக்கிக்
கொங்கையையொத் திடங்கொடுத்துக் குங்குமச்சாந்
தப்பற்றுங் குளிரப்பூசிச்
செங்கனிலா யிதழ்மருந்து முள்ளுக்கே
கொடுத்தெனக்குச் செய்தநன்றி
மங்கையரே யிந்திரவி தெற்குவடக்
குதித்திடினு மறந்திடேனே.

உரை :—மங்கையரே - மாதர்களே !, சங்கையிலா மதன் விடுத்த பகழி தைத்த-உறுதியான மன்மதன் செலுத்திய கணையழுந்தியதனு லேற்பட்ட, புண் வருத்தம் தன்னை நோக்கி - காயத்தின் நோவுதன்னைக் கவனித்து அது தீரும்படி, கொங்கையை ஒத்திடம் கொடுத்து - தனங்களால் ஒற்றி யொற்றி, குங்குமச் சாந்தப் பற்றுங் குளிரப்பூசி - குங்குமப்பூச சேர்ந்த சந்த னக் குழம்பைத் தேகங் குளிரும்படியாகத் தடவி, செங்கனி வாய் இதழ் மருந்து உள்ளுக்கே கொடுத்தது - உடம்பினுல் செவ்விய கனிபோன்ற வாயி

லும் உதட்டிலும் ஊறும் நீராகிய அமுதத்தினை உட்கொள்ள அளித்து எனக்குச் செய்தான்றி-தலைவி எனக்குச் செய்த நன்மையை, இந்து இரவி தெற்கு வடக்கு உதித்திடினும் - சந்திரனும் சூரியனும் திசை மாறித் தெற்கேயாகிலும் வடக்கேயாகிலும் உதித்தாலும், மறந்திடேனே - மறந்திடமாட்டேன், எ - று.

காமத்தின் வலிமை

22 ஒருகோட்டுக் கலைமுனியு மொளிதிகழும்
புலியாடை யுடுத்தகோவு
மருமலர்வாழ் திசைமுகனும் வானவர்க
ணாயகனு மயிடன்றானும்
கரியநிறத் திருமாலும் வாலியும்ப
ராசனுமே காமனம்பால்
பெருமையிழந் தனரென்றுற் சிறுமனிதர்க்
கெப்படியோ பேசுங்காலே.

உரை:—ஒரு கோட்டுக் கலை முனியும் - கலைக்கோட்டு முனிவரும் ஒளி திகழும் புலியாடை யுடுத்த கோவும் - பிரகாசிக்கின்ற புலித்தோலைத் தரித்த அரசனும், மருமலர் வாழ்திசை முகனும் - வாசனையுடைய தாமரைப் பூவில் வீற்றிருக்கின்ற அயனும், வானவர்கள் நாயகனும் - தேவர் தலைவனாகிய இந்திரனும், மயிடன் தானும் - எருமை முகமுடைய மகிடாசுரனும், கரிய நிறத் திறமாலும் - ....., வாலியும் - ....., பராசரனும் - பராசர முனிவனும், காமன் அம்பால் பெருமை இழந்தனர் என்றால் - மன்மதன் கணையினால் தங்கள் உயர்வைக் கைவிட்டனரெனில், பேசுங்கால் சிறு மனிதற்கு எப்படியோ - ஆராய்ந்து கூறுமிடத்து அதனால் உண்டாகிய துன்பம் சிற்றறிவுடைய மனிதர்களுக்கு எவ்வளவு அதிகமாகும், எ-று.

இதுவுமது

23. வாசவனும் பிறர்நகைக்க வுடலாணை
ஞெருவனரா வடிவமானன்
தேசுபுகழ்க் கலைமதியு முடல்குறைந்தான்
மலர்வேதன் சிரமொன்றற்றான்
ஈசனுதல் விழிதிறந்தா னிராவணசுந்தோப
சுந்தரிறந்தார் மண்மேல்
காசினிப்புன் மானிடரோ மோக
சாகரமதனைக் கடக்கவல்லார்.

உரை:—வாசவனும் பிறர் நகைக்க வுடலாணை - இந்திரனும் மற்றவர்கள் பரிகசிக்கும்படியாக பலயோனிகளுடைய உடம்பைக் கவுதமர் சாபத்தா

லுடையவனுனன், ஒருவன் அரவடிவமானன் - இந்திர பதவியுற்ற நகுலன் அகத்தியர் சாபத்தால் பாம்பு வடிவமானன், தேசு புகழ்க் கலைமதியும் உடல் குறைந்தான் - ஒளியும் கீர்த்தியுமுடைய பதினாறு கலையோடு கூடிய சந்திரனும் தனது கலைகள் குறையப்பெற்றான், மலர் வேதன் சிரம் ஒன்று அற்றான் - தாமரை மலரிலுள்ள பிரமன் ஒரு தலை கிள்ளப்பெற்றான், ஈசன் நுதல் விழி நிறைந்தான் - சிவபெருமான் நெற்றிக் கண்ணைத் திறக்கலாயினர், ராவண சுந்தோபசுந்தர் மண்மேல் இறந்தார் - இராவணனும் சுந்தன் உபசுந்தன் என்னும் அசுரர் இருவரும் பிடிவாதமான பெண் மயலால் உயிரிழந்தார்கள், (இவர்கள் இவவாறுளல்) காசினிப் புன் மானிடரோ - உலகத்திலுள்ள குறைந்த ஆற்றலுள்ள மக்கள்தானே, மோக சாகர மதனைக் கடக்க வல்லார் - காம சாகர மதனைத் தாண்டத் திறமையுள்ளவராவர், எ - று

இதுவுமது

24. உணங்கி யொருகான் மூடமாகி யொருகண்
ணின்றிச் செவியிழந்து
வணங்கு நெடுவா லறுப்புண்டு மன்னு
முதுகில் வயிறொட்டி
அணங்கு மலியமெலி வெய்தியகல்
வாயோடு கழுத்தேந்திச்
சுணங்கன் முடுவல் பின்சென்றுல் யாரைக்கா
மன்றுயர் செய்யான்.

உரை :—சுணங்கன் - ஆண் நாயானது, உணங்கி - உடலுலர்ந்து, ஒரு கால் முடம் ஆகி - ஒரு கால் கொண்டியாகி, ஒரு கண் இன்றி - ஒரு கண் இல்லாமல், செவி இழந்து காது கேளாமல், வணங்கு நெடுவால் அறுப்பு உண்டு - வளைந்து நீண்ட வால் கத்தரிக்கப் பெற்று, மன்னும் முதுகில் வயிறு ஒட்டி - எலும்பாயிருக்கும் முதுகு ஒன்றுபட்ட வயிறு பொருந்தும் படியிருக்கவும், அணங்கு மலிய மெலிவு எய்தி - வியாதி வருத்த மெலிந்து போயிருப்பினும் அகல் வாயோடு கழுத்து ஏந்தி - வாயைத் திறந்து கொண்டு கழுதையை நீட்டிக்கொண்டு, முடுவல் பின் சென்றுல் - காமத்தினால் பெண்ணைப் பின்னே ஓடினால், யாரைக் காமன் துயர் செய்யான் - வேறு யாரைத்தான் மன்மதன் வருத்தாதிருப்பான், எ - று.

வெறி விலக்கல்

25. கட்டிறலி திருப்பிவைத்தாற் றலைவலிபோ
மோவந்தக் கதைபோலாட்டுக்
குட்டியி தென்னடிசகியே கெட்டிவயித்தியன்
பள்ளிகொண்டான் பாம்பின்

பெட்டியினுங் கையிடுவ னுண்டையும் பாய்ச்சிடுவ
னன்றுப்ப் பெலமாய்க்காயங்
கட்டிடுவ னிஃதல்லா லாருதேமதன்
விடும்பகழிப் புண்டானே.

உரை:—அடி சகியே - அடி தோழியே!, கட்டில் தலை திருப்பி வைத்தால் தலை வலிபோம் - படுத்திருக்கிற கட்டிலைத் தலை மாற்றி வைப்பதால் தலைநோவு தீர்ந்திடுமா அந்தக் கதைபோல் ஆட்டுக்குட்டி இது என் - அந்த வேடிக்கையைப்போல இந்த ஆட்டுக்குட்டியைப் பலியிடுவதால் என் நோய் போமோ, கெட்டி வயித்தியன் பள்ளி கொண்டான் - பள்ளிகொண்டா னென்னும் வள்ளலே சாமர்த்தியமான மருத்துவன், பாம்பின் பெட்டி யிலும் கையிடுவன் - பாம்பு இருக்கின்ற பெட்டியிற் கையிட்டாலும் குணப் படுத்திக் கொள்வான், (அல்லது அல்குலிலும் லீலை செய்வான்) உண்டை யும் பாய்ச்சிடுவன் - உருண்டை மருந்தும் கொடுப்பான் (அல்லது தனங் களின்மீது லீலை செய்வான்), நன்றுப்ப் பெலமாய்க் காயங் கட்டிடுவன் - புண்களுக்குச் செம்மையான கட்டுப்போட்டு உறுதியாய்க் கட்டி வைப் பான், (அல்லது நன்றுப்த்திறமாய் உடம்பைத் தழுவுவான்), இஃதல்லால் - இவ்விதமான சிகிசசை யல்லாமல், மதன் விடும் பகழிப் புண் தான் ஆருதே - மன்மதன் கணையாலேற்படுகின்ற சிரகுரு உலர்ந்து போகாது, எ - று.

ஆலத்தி யெடுத்தல்

26. மரமது மரத்தி லேறி மரமதைத் தோளில் வைத்து
மரமது மரத்தைக் கண்டு மரத்தினுன் மரத்தைக் குத்தி
மரமது வழியே சென்று வளமனைக் கேகுமு போது
மரமது கண்ட மாதர் மரமுடன் மரமெ டுத்தார்.

உரை:—மரமது - அரசு மரம், (அதாவது அரசன்), மரத்திலேறி - மாவிலேறி, அதாவது குதிரையிலேறி) மரமதைத் தோளில் வைத்து - வேலமரம், (அதாவது வேலினைத் தோளில் வைத்துக்கொண்டு), மரமது - அரசன், மரத்தைக் கண்டு - வேங்கை அதாவது புலியைக் கண்டு, மரத்தி னுல் மரத்தைக் குத்தி - வேலினுல் அப் புலியைக் குத்தி, மரமது வழியே சென்று வளமனைக்கு எகும்போது - அரசன் வந்த வழியே திரும்பிப் போய் வளமான தனது அரண்மனையிற் புகும்போது, மரமது கண்ட மாதர் - அரசனைக் கண்ட பெண்கள், மரமுடன் மரம் எடுத்தால் - ஆல் அத்தி எடுத்தார்கள், (அதாவது ஆலாத்தி யெடுத்தார்கள்), எ - று.

குறிப்பு:—மரமது என்பது நான்கு அடியிலும் 'அரசு' என்பதைக் குறித்து நின்றது. அரசு என்பது அரசனைக் குறிப்பதுபோல, மா, வேல்,

வேங்கை என்னும் மரத்தின் பெயர்கள் முறையே குதிரையையும், வேற் படையையும், புலியையும் குறித்தன. மரமுடன் மரமென்றபோது ஆலும் அத்தியும் என்பன குறிக்கப்பட்டு இரண்டும் சேர்த்து ஆலத்தியாயின.

இராம கவிராயர்

பாடியது

உச்சிப்பிள்ளையார் தரிசனைக்குப் போனபோது திருடன் முடிச்சவிழ்த்துக் கொண்டதைப்பற்றி பாடியது

1. தம்பியோ பெண்டிருடி தாயாருடன் பிறந்த
வம்பளே நெய்திருடி மாயனுமை—அமபுவியில்
மூத்தபிள்ளை யாரே முடிச்சவிழ்த்துக் கொண்டீரே
கோதகிரத்தி லுள்ள குணம்.

உரை :—அம்புவியில் மூத்தப் பிள்ளையாரே - அழகிய பூமி மீது (உயர்ந்த மலையுச்சியிற் றங்கும்) சிவபெருமானது முதல் குழந்தையாகிய கணபதியே!, தம்பியோ பெண திருடி - உன்னுடைய சகோதரனுகிய முருகர் வள்ளியம்மையைக் களவிற் கொண்டுபோனவர், தாயாருடன் பிறந்த மாயனும் வம்பளே - உம்முடைய அன்னையின் சகோதரனுகிய திருமாலாகிய கபட நாடகக்காரர், நெய திருடி - இடையர் பாடியில் வெண் ணெயைக் களவுசெய்தவர், முடிசசவிழ்த்துக் கொண்டீர் - நீர் எம்முடைய முடிசசை யவிழ்த்து அதிலுள்ள பொனனை எடுத்துக் கொண்டீர், உம் கோத்திரத்துக்கு உள்ள குணம - இது உமது குடும்பத்தாருக்கு இயற்கை யாக அமைந்த தன்மையாகும், எ - று.

மாறை மதுக்குளுந்தான் செட்டிமேற் பாடியது

2. கூறவிலை மாதர்வசை கொள்ளவிலை மாமரத்தில்
சிறுகுயில் கூப்பிட்டுச் செப்பவிலை—மாறை
மதுக்குளுந்தா னைப்பிறந்தாண் மாதென்றே வேளுக்
கிதுக்குளுந்தான் சொன்னவளிங் கார்.

உரை :—மாது - நம்முடைய மகள், மாறை மதுக்குளுந்தானைப் பிரித் தான் என்று - மாறையிலுள்ள மதுக்குளுந்தானென்னும் செல்வனைப் பிரிந்தாளென்று, மாதர் கூற விலை - தோழியர் யார்க்குந் தெரிவிக்கவிலை வசை கொள்ளவில்லை - ஊரார் தூற்றவுமிலலை, மாமரத்தில் சிறு குயில் கூப்பிட்டுச செப்பவில்லை - மாமரதிற் றங்கிச் சினந்து கூவுகின்ற குயிலா

னது உரத்த சத்தத்தோடு இதனைச சொல்லவில்லை, வேளுக்கு இதுக் குளுந்தான் சொன்னவள் இங்கு ஆர் - இதற்குள்ளே மன்மதனுக்கு இச செய்தியைத் தெரிவித்தவள் யார்?, எ - று.

சிவபெருமான் பத்துத்தலை சுமந்தானென்று பாடியது

3. ஆழி கடைந்த வரவின் றலையைந்தும்
தாழ்வுபடா மானின் றலையொன்றும்—சூழ
விருந்தார் தலையிரண்டு மேற்றதலை யொனறும
சுமந்தான் றலையோடும பதது.

உரை :—ஆழி கடைந்த வரவின் தலை ஐந்தும் - திருப்பாற்கடல் கடைவதற்குப் பயன்பட்ட வாசுகியின் ஐந்து தலையும், தாழ்வுபடா மானின் தலை ஒன்றும் - சிவபெருமான் திருகையில் கீழே விழாது தாங்கப்பெறும் மானுடைய தலை யொன்றும், சூழ இருந்தா தலை இரண்டும - உடம்பின் பாகததிலே தன்னைச் சுற்றியிருகும் பார்வதி, பெருமாள் என்பவர் களுடைய இரண்டு தலையும், ஏற்ற தலை ஒனறும - பிசசை வாங்க உதவிய அயன் தலையொன்றும், தனது திருமுடி ஒன்றும் - ....., பத்து சுமந் தான் - ஆக பத்துத் தலைகளைச சிவபெருமான் தாங்கினான், எ - று.

குறிப்பு :—சிவலிங்கப் பெருமானுக்கு மேல் ஐந்தலை நாகம் மரம் போல் நிழல் தருவதால் அரவின் தலை ஐநதென்று கூறினர் கவி.

பிரிவு கூறல்

4. நாமம பெறுஞ்செல்வங் கல்விக்கோ நாமம்போகத
தூமக் குழன்மாதே சொல்லென்னப்—போமென்
றுளத்தே யெழுந்த வுரையு முயிரும
களத்தே பிணங்கியவா காண்.

உரை :—தூமக குழல் மாதே - புகைபோன்ற கூந்தலையுடைய பெண்ணே!, நாமம் பெறுஞ் செல்வம - பெருமையடைதற் கேதுவாகிய பொருளின் பொருட்டே, கலவிகோ - கலவியின் பொருட்டோ, நாம் போக - நாம் செலலலாமென்று, சொல் என்ன - கூறுகவென்று தலைவி யைக் கேட்டபோது, போமென்று உளதே எழுந்த உரையும் - போவீ ராகவென்று மனதில் நினைததபோது எழுந்த சொல்லும், உயிரும் - நான் போவேனென்று சொல்லுகின்ற அவள் உயிரும், களதே பிணங்கிய வா - அவ்விடத்திலே அல்லது கண்டத்திலே ஒன்றோடொன்று சண்டை யிட் டன, எ - று. காண் - அசை.

கருத்து :—நீர் போலுல் என் உயிர் போமென்றாள்.

வன்சொல் விலக்கு

5. மெய்யே பொருண்மேற் பிரிதியேல் வேறொரு
தையலை நாடத் தகுமுனக்கு—செய்யிலைவேல்
வள்ளல் பிரிவற்றம் பார்த்தெங்கள் வாழ்நாளைக்
கொள்ள வுழலுமாங் கூற்று.

உரை :—செய்யிலை வேல் வள்ளல் - செய் தடவி இலைபோன்ற வடிவுடைய வேற்படையை ஏந்திய ஈகையாளனே!, கூற்று - எமன், பிரிவற்றம் பார்த்து - நீர் பிரியும் தருணத்தை நோக்கியிருந்து, எங்கள் வாழ்நாளைக் கொள்ள உழலுமாம் - எங்களுயிரைக் கொண்டுபோவதற்கு அலைகின்றனும், (ஆதலால்) மெய்யே பொருள்மேல் பிரியேல் - மெய்யாகப் பொருள் சேர்ப்பதன் பொருட்டு நீர் போகக் கருதினால், உனக்கு வேறொரு தையலை நாடத் தகும் - நீ இன்னொரு மனைவியைத் தேடிக்கொள்வதே பொருத்தம், எ - று.

வாழ்த்து விலக்கு

6. செல்லு நெறியனைத்துஞ் சேம நெறியாக
மல்ல னிதியம் வளஞ்சிறக்க—வெல்லும
அடற்றேர் விடலை யகன்றுறைவ தாங்கோர்
இடத்தே பிறக்கவி யாம்.

உரை :—வெல்லும் அடல் தேர் விடலை - வெற்றி யடையக்கூடிய திறமையுடைய ஆண்மகனாகிய தலைவன், செல்லும நெறி யனைத்தும் சேம நெறியாக - போகின்ற வழியெல்லாம் பாது காப்புடைய வழியாகக் கடவது, மல்லல் நிதியம் வளம் சிறக்க - தேடுகின்ற வளமான பொருள் பெருகுவதாக, அகன்று உறைவது ஆகு ஓர் இடத்தே - பிரிந்துறையுமிடத்தின் ஒரு பக்கத்தில், யாம் பிறக்க - யாம இறந்துபோய்ப் பிறப்போமாக, எ - று

தலைமை விலக்கு

7. பொய்ம்மை நெறிநீர் பொருளு மிகப்பயக்கும
எம்முயிர்க்கு மேது மிடரில்லை—வெம்மைநீர்ந்
தேக வினிய நெறியணிய வெண்ணுலும்
போக லொழிவாய் பொருட்கு.

உரை —பொய்ம்மை நெறிநீர் பொருளும் மிகப்பயக்கும் - அசதியம் கலவாத வழியிற் கிடைக்கக் கூடிய பொருள் அதிகமாக வுண்டாகக்கூடியது, எம்முயிர்க்கும் ஏதும் இடர் இல்லை - எம்முடைய ஆயுசுக்கும் எவ்வகையான இடைஞ்சலுமில்லை யென்னுலும், வெம்மை நீர்ந்து ஏக இனிய

நெறி அணிய வென்றாலும் - வழியில் வெப்பமில்லாது போவதற்குரிய நல்ல பாதையானது கிட்ட இருந்தாலும், பொருட்கு போகல் ஒழிவாய் - பொருளின் பொருட்டுப் பிரிவதைத் தவிர்ப்பாயாக, எ - று.

இகழ்ச்சி விலக்கு

8. ஆசை பெரிதுடையே, மாருயிர்மே லப்பொருண்மேல்
ஆசைசிறிது மடை கிலமால்—தேசு
வழுவா நெறியின் வருபொருண்மே லண்ணல்
எழுவா யொழிவா யினி.

உரை:—அண்ணல் - தலைவனே !, ஆர் உயிர்மேல் ஆசை பெரிதுடை யேம் - அருமையாகிய உயிரின்மேல் மிகுந்த வேட்கையுடையோம், அப் பொருள்மேல் ஆசை சிறிதும் அடைகிலம் - நீ விரும்புகின்ற அத்தச செல் வதனினும் கொஞ்சமும் விருப்பம் எங்களுக்குண்டாகவில்லை, தேசு வழுவா நெறியின வருபொருள்மேல் - நீதி தவறாத வழியில் அடையக் கருதுகின்ற பொருளின் பொருட்டு, இனி எழுவாய் ஒழிவாய் - நாங்கள் இவ்வளவு சொல்லிய பிற்பாடு புறப்படுவாயோ அல்லது புறப்படாம லிருப்பாயோ (உன்னிஷ்டம்), எ - று.

துணைசெயல் விலக்கு

9. வினைபொருண்மே லண்ணல் விரும்பினையே லீண்டெங்
கினையழுகை கேட்பதற்கு முன்னே—வினைதேன்
புடையூறு பூந்தார் புனைகழலாய் போக்குக்
கிடையூறு வாராம லேகு.

உரை :—வினை தேன் புடையூறு பூந்தார் புனைகழலாய் அண்ணல் - பூக்களிலுண்டாகின்ற தேன் பகைத்திற் கலிக்கின்ற மாலையையும் அழகான சிலம்பினையுமுடைய தலைவனே !, வினை பொருள்மேல் போக்கு விரும் பினையேல் - தேடிப் பெறக்கூடிய பொருளின் பொருட்டு நீ போவதற்கு ஆசைப்பட்டால், ஈண்டு - இங்கே, எம்மினை அழுகை கேட்பதற்கு முன்னே - நாங்களிறந்து எங்களுடைய உறவினர் அழுகின்ற ஒலி செவி யிற் படுவதற்கு முன்னே, இடையூறு வாராமல் ஏகு - உன் போக்கிற்குத் தடையேற்படாதபடி போவாயாக, எ - று.

முயற்சி விலக்கு

10. மல்லணிந்த தோளாயி தென்கொலோ வான்பொருண்மேல்
செல்க வினைநுதென் றுளந்தெளிந்து—சொல்லுதற்கே
என்று முயல்வல்யா னேகனீ யென்றிடையே
தோன்றுகின்ற தென்வாயிற் சொல்.

உரை :—மல்லணிந்த தோளாய் - மல்லுத்தத்தால் அலங்காரம் பெற்ற புயத்தையுடையவனே !, வான் பொருள்மேல் விரைந்து செல்க என்று - சிறந்த பொருளின் பொருட்டுச சிக்கிரமாகப் போகலாமென்று, உளம் தெளிந்து சொல்லுதற்கே - தெளிவான எண்ணத்தோடு கூறுவதற்கே, என்று முயல்வல் யான் - இசைந்து யான் முயற்சி செய்கின்றேன், என் வாயிற் சொல் - என் வாயிலே தோன்றுகின்ற மொழியானது, ஏகல் நீ என்று இடையே தோன்றுகின்றது - நீ போகக்கூடாதென்ற வாக்கியமாக முடிவிலுதிக்கிறது இது என் கெ லோ - இதற்குக் காரணம் யாதோ, எ - று.

பரவச விலக்கு

11. செல்லை திருவுளமேல் யானறியேன் றேங்கமழ்தார்
மல்லகந் தங்கு மாதர்விழியின்—மெல்லியைகள்
சோக்கு விலக்குமே னேவா ளிவள்காதல்
போக்கி யகல்வாய் பொருட்கு.

உரை:—செல்லை திருவுளமேல் யான் அறியேன் - போதற்கு நீ விரும்புவாயானால் அதைப்பற்றி நான் ஒன்றுஞ் சொல்ல அறியேன், தேம் கமழ்தார் - தேனின் வாசனை வீசுகின்ற உன்னுடைய மாலையைப் பார்க்கும், மல்லகந் தங்கு மாதர் விழியின் மெல்லியைகள் - வளம் பொருந்திய மாதர்ப் பனையுடைய கண்ணின மெதுவான இமைகள், சோக்கு விலக்கு மேல் - அதனைப் பார்ப்பதைத் தடுக்குமேயானால், சோவாள் - அவள் வருந்துவாள், இவள் காதல் போக்கி பொருட்கு அகல்வாய் - இவளிச சையை யொழித்துப்பின் நீ பொருளுக்காகப் பிரிந்து செல்வாயாக, எ - று.

உபாய விலக்கு

12. இன்னுயிர் காத்தளிப்பாய் நீயே யிளவேனில்
மன்னவனுங் கூற்றுவனும் வந்தணைந்தால்—அன்னோர்
தமக்கெம்மைத் தோன்றுத் தகைமையதோர் விஞ்சை
எமக்கின் றருள் புரிந்தே யேகு.

உரை:—இன்னுயிர் காத்தளிப்பாய் - எங்கள் இனிய வுயிரைக் காப் பாற்றிப் பேணுகின்ற தலைவனே !, இளவேனில் மன்னவனும் கூற்று வனும் வந்தணைந்தால் - மன்மதனும் எமனும் நீ போனபிறபாடு வந்து சேர்ந்தால், அன்னோர் தமக்கெய்மைத் தோன்றுத் தகைமையதோர் விஞ்சை - அவர்களுக்கு எங்களைக் காண்பியாத தன்மையுடைய ஒரு மந்தி ரதனை, நீயே எமக்கு இன்று அருள் புரிந்து ஏகு - நீயே எங்களுக்கு இப்போது தயைசெய்து கற்பித்துவிட்டுப் போவாயாக, எ - று.

சிவபெருமானைப்பற்றி வேடிக்கையாய்ப் பாடியது

13. அக்காளை யேறுவா னம்மானைக் கைப்பிடிப்பான்
சொக்காளைப் பக்கஞ் சொருகுவான்—நக்கனவன்
ஆட்டை யெடுப்பானு லம்பாலே யுண்டிடுவான்
காட்டிற் குடியிருப்பான் காண்.

உரை:—நக்கனவன் - திருவாணியான சிவபெருமான், அக்காளை ஏறுவான் - (திருமால் காளையாக வந்தபோது) அந்தக் காளையை வாகன மாகக் கொண்டவன், அம்மானைக் கைப்பிடிப்பான் - அழகிய மானை இடது கரத்திலுடையவன், சொக்காளைப் பக்கஞ் சொருகுவான் - சொக்காயகி யாகிய மீனுட்சியை இடப்பக்கத்திற் சேர்த்துக் கொள்பவன், ஆட்டை எடுப்பான் - ஆதலாகிய திருத்தத்தை மேற்கொள்பவன், ஆலம்பாலே உண்டிடுவான் - விஷமாகிய பாலைக் குடிப்பான், காட்டில் குடி இருப் பான் - சுடுகாட்டில் அல்லது கடப்பங்காட்டில் வீற்றிருப்பான், எ - று. காண் - அசை.

குறிப்பு:—கடப்பமரம் - மதுரைக்குத் தல விருட்சம். ஆதலால் அதைக் கடம்பவனம் என்றுங் கூறுவர்

ஓர் விடு கவி

14. நாற்காணி மீதிருந்து நாகங் குதித்திறங்கிக்
காற்காணி மீதிவரக் கண்டேன்காற்—காற்காணி
கனியிருக்கக் கொட்டைதனைக் கவ்வினது போலத்
தனியிருக்க லாகாது தான்

உரை:—நாற்காணி மீதிருந்தும் - ஒரு மாமரத்தின்மேலே இருந்து, நாகம் குதித்து இறங்கி - குரங்கானது கீழே தாவி, காற்காணிமீது வரக் கண்டேன் - மூன்றிரி மரத்தின்மேற் செல்வதைப் பார்த்தேன், காற்காணி கனியிருக்கக் கொட்டைதனைக் கவ்வினது போல - மூன்றிரிப் பழமிருக்க அது கவவின கொட்டைபோல, தனி இருக்கல் ஆகாது தான் - தலைவனைப் பிரிந்து தனியே இருக்கக்கூடாது. (இருந்தால் மனக்கவலை யேற்படு மென்பது கருத்து), எ - று.

சிவபெருமானைப்பற்றி பாடியது

15. அவிட்டத்துக் கீரைந்தொன் றுனு லுனைத்தப்
பவிட்டத்தி னுலே பலகால்—தவிட்டை
முழுங்குகின்ற செங்கோழி முட்டைக்கு நேரா
எழுந்தாய் செழுந்திங்க ளே.

உரை:—செழுங் கிங்களே - வளமான சந்திரனே! அவிட்டத்துக்கு ஈரைந்து ஒன்று ஆனல் - அவிட்டத்திற்குப் பதினென்றாவது நட்சத்திரமாகிய திருவாதிரைக்குரிய சிவபெருமான் உனைத் தப்பவிட்டதினல் - உன்னைச் சாகாதவண்ணம் காப்பாற்றிவிட்டதினல் பலகால் - பல தடவை, தவிட்டை முழுங்குகின்ற செங்கோழி முட்டைக்கு நேரா - தவிட்டை விழுங்குகின்ற சிவந்த கோழி முட்டையைப்போல, எழுந்தாய் - பூரண கலையோடு தோன்றித் தன்புறத்தகின்றாய், எ - று.

திருநாமத்தைப் பற்றியது

16. எருதாய்ச் சுமந்துபோ யேத்திக்கண் சாத்திப்
பொருதாழி வாங்கினதும் பொய்யோ—பெருமாள்
திருநாம மென்றுநெற்றி தீட்டுவதுங் கச்சி
ஒருமா விலக்கமல்ல வோ.

உரை:—பெருமாள் - விஷ்ணுவானவர், எருதாய்ச சுமந்து, போய் - திரிபுர மெரித்த காலததில் விடையாகத் தாங்கினதும், ஏத்திக் கண் சாத்திப் பொருது ஆழி வாங்கினதும்-ஆசசிதத்த தனது திருக்கண்ணைச சாத்திச சக்கரம் பெற்றதும், பொய்யோ - ....., திரு நாமம் என்று நெற்றி தீட்டுவதும்-திருநாம மென்ற பெயரால் நெற்றியிலிடப் படுவதும், கசசி ஒரு மா இலக்கம் அல்லவோ - காஞ்சிபுரத்திலுள்ள சிவபெருமான் வீற்றிருகின்ற ஒரு மாமரததின் குறியல்லவா ?, எ - று.

விடு கவி

17. ஆனெய்தனைப் பூனை யருந்தினது மல்லாமற்
பூனெய்தனை யீயெடுத்துப் போனதுவும்—மானனைய
கண்ணுர் சலையதனிற் காய்காய்த் தறுத்ததுவும்
நண்ணு மறிந்து நவில்.

உரை:—ஆனெய்தனைப் பூனை அருந்தினதும் அல்லாமல் - பசுவின் நெய்யையும் தேனையும் சாப்பிட்டது மல்லாமல், பூ நெய்தனை ா எடுத்துப் போனதுவும்-தேனில் ஈ மொய்த்ததுவும், மான் அனைய கண்ணுர் சலையதனில் காய்காய்த்து அறுத்ததுவும் - மான்போன்ற கண்ணையுடைய கன்னியின் அதாவது வாழைமரத்தின் உசசியிற் காய் காய்த்து அதை வெட்டியதுவும், நண்ணு அறிந்து நவில் - நன்றாகத் தெரிந்து கூறுக, எ - று.

நிரனிரைப் பொருள்கோளுக்கு உதாரணம்

18. கொங்கைகளங் கண்சொல் குழலிவையின் னுட்கென்று
செங்கமல வாவி திகழ்கூடற்—கங்கைகுலச்
சின்னத்தம் பிக்குத் தெரியவுரைப் பாரிலையே
வன்னத்தம் பிக்கு மழை.

உரை:—இன்னுட்கு - இப் பெண்ணிற்கு, கொங்கை களம் கண் சொல் குழல் இவை - தனமும் கழுத்தும் கண்ணும் மொழியும் கூந்தலும், வல் நத்து அம்பு இக்கு மழை என்று - சூது கருவியையும் சங்கையும் அம்பையும் கரும்பையும் மேகத்தையும் ஒப்பன என்று, செங்கமல வாவி திகழ் கூடல்- சென்தாமரைப் பொய்கை விளங்கும் கூடற்பதியில் வதியும், கங்கைகுலச் சின்னத் தம்பிக்கு - வேளாள குலத்திற் பிறந்த சின்னத்தம்பி யென்னும் வள்ளலுக்கு, தெரிய உரைப்பார் இலையே - தெளிவாக எடுத்துத் தெரிவிப் பார் இல்லையே, எ - று.

உயர்ந்தால் கவனிக்கமாட்டா ரெனல்

19. திருவிருத்தி நாதர் திருவளியா தென்னைக்
கருவிருத்தி யென்னபலன் கண்டார்—எருதுபோய்க்
கோட்டிபத்திலேறினரோ கோவணமபோய்ப் பட்டாச்சோ
ஓட்டிலிரந் துண்டதும் போச்சோ.

உரை:—திருவிருத்தி நாதர் - திருவிருத்திநாதராகிய சிவபெருமான், திரு அளியாது - வீட்டுச் செல்வத்தைக் கொடாது என்னைக் கருவிருத்தி என்ன பலன் கண்டார் - என்னைப் பிறப்பிலிருக்கும்படி செய்தது என்ன கன்மையைப் பார்த்தனர், எருது போய் கோட்டு இபத்தில் ஏறினரோ - காளையை விட்டு நீங்கி கொம்போடு கூடிய யானையின்மீது அமர்ந்தனரோ, கோவணம் போய் பட்டாசசோ - கௌபீனங் கட்டியிருந்தது போய்ப் பட்டாக வுடுத்திக் கொண்டனரோ, ஓட்டில் இரந்து உண்டதும் போசசோ - தலை யோட்டிற் பிசசையேற்று அருந்தியதும் நீங்கி விட்டதோ, (உயர்நிலை யடைந்தபடியால் கவனிக்க வில்லை போலும் என்பது கருத்து), எ- று.

பாண்டியனைப் பற்றியது

20. கொங்க ருடல்கிழியக் குத்தியிரு கோடெடுத்து
வெங்க ணழலில் வெதுப்புமே—மங்கையர்கள்
சூழத்தா மம்புனையுஞ் சுந்தரத்தோன் மீனவனுக்
கீழத்தா னிட்ட இபம.

உரை:—மங்கையர்கள் சூழத் தாமம் புனையும் சுந்தரததோன் மீனவ னுக்கு - பெண்கள் சுற்றி நின்று பார்க்கும்படி மாலைதரித்த அழகிய புயத்தை யுடைய பாண்டியனுக்கு, ஈழத்தான் - ஈழமண்டல மன்னன், இட்ட இபம் - கப்பமாகக் கொடுத்த யானைகள், கொங்கர் உடல் கிழியக் குத்தி - கொங்கு தேசதது பகைவரின் உடம்புகளைக் குதிக்கீறி, இரு கோட்டு எடுத்து - இரண்டு கொம்பினாலும் எடுத்து, வெங்கண் அழலில் வெதுப்புமே - வெம்மையான விடத்திலுள்ள நீயில் வாட்டும், எ - று.

சிவபெருமான்மீது நிந்தாஸ்துதி

21. கல்லி னெறியக் கதியளித்தார் பூவினுல்
மெல்ல வெறிய விழித்தெரித்தார்—நல்லுடைவிட்
டுட்டருக்குண் டான வுவாவி னுரிபோர்த்தார்
குட்டருக்குண் டான குணம்.

உரை :—கல்லின் எறியக் கதியளித்தார் - சாக்கிய நாயினர் கல்லைக் கொண்டு சிவலிங்கப் பெருமான்மீது எறிய அதற்காக அவர்க்கு முத்தி கொடுத்தார், பூவினுல் மெல்ல எறிய விழித்து எரித்தார் - மன்மதன் பூக்களைக்கொண்டு மெதுவாக வீசவும் நெற்றிக்கண்ணைத் திறந்து எரித் தழித்தார், நல்லுடை விட்டு - நல்ல ஆடையை வேண்டாமென்று விடுத்து, உள் தருக்கு உண்டான உவாவின் உரி போர்த்தார் - உள்ளத்தில் அகங்கார முடைய யானையின் தோலினுல் தன்னை மூடிக்கொண்டார், குட்டருக்கு உண்டான குணம் - சிறுவர்களுக்கு இயற்கையான தன்மை அது, எ - று.

செல்லப்ப னென்னும் வள்ளலைப் பற்றியது

22. வல்லிப் பொருமுலையாய் வார்த்தைமுனிந் தன்பருடன்
சொல்லப் பிரியத் துணியாதே—செல்லப்பன்
கச்சியெல்லாங் காவந்தக் காவெல்லா மாமாவின்
உச்சியெல்லாங் காமா யுதம்.

உரை: —வல்லிப்பொரு முலையாய - ஆதி கருவியை யொத்த தனங்களை முடைய பாகுகிமாரே!, வார்த்தைமுனிந்து அன்பருடன் சொல்லத் துணியாதீர் - நான் சொல்வதற்காகக் கோபித்து அதனை அன்பரிடம் கூறும் பொருட்டு என்னை விட்டு நீங்கத் துணிவு கொள்ளாதீர்கள், (ஏனெனில்) செல்லப்பன் கச்சியெலாம் கா - செல்லப்ப வள்ளல் வசிக்கின்ற காஞ்சிப்பதியில் எவவிடத்திலும் சோலைகளே யுள்ளன, அந்தக கா எல்லாம் மா - அந்தச சோலைகளிலெல்லாம் மாமரங்களே உள்ளன, மாவின் உசசியெலாம காமாயுதம் - அந்த மாமரங்களின் நுனியெங்கும மன்மதன் கணையாகிய பூக்களே உள்ளன, எ - று.

திருவாரூர்த் தியாகரைப்பற்றிப் பாடியது

23. கமலா லயமில்லாங் காரோ கணத்து
விமலா லயமில்லா மெய்யா—அமலாமன்
ரூடியபொற் பாதத் தியாக நெடுமாலன்று
தேடியபொற் பாதத் தியாகா.

உரை :—கமலாலயம் இல்லா - திருவாரூரினை வீடாகவுடைய, காரோ கணத்து விமலா - காயாரோகணத்தில் வீற்றிருக்கும் பாசமற்ற பெரு

மானே!, லயம் இல்லா மெய்யா - அழியாத தேகத்தை யுடையவனே !, அமலா - குற்றமற்றவனே!, மன்று ஆடிய பொற்பாதத் தியாகா - பொன் னம்பலத்தில் நடனஞ் செய்யத் தூக்கிய திருவடியை அடியார்களுக்கு அளித்தவனே!, மால் அன்று தேடிய பொற்பாதத் தியாகா - திருமால் முற் காலத்தில் தேடிக்காணுத திருவடியையுடைய தியாகராசப் பெருமானே! நீ என்னை ஆட்கொள்வாயாக !, எ - று.

தலைவனூரைப் பழித்தல்

24. வாவிகணே யன்றி மலரா வயல்களுமப்
பாவிகணே யன்றிப் பயிராகா—காவினிலத்
தேரோன் விருதன்றிச் சேரா பிரிந்தவர்க்கு
ஊரோ குடிதாங்கி யூர்.

உரை :—பிரிந்தவர்க்கு ஊரோ குடிதாகுகி ஊர் - நம்மைப் பிரிந்த தலைவருக்குச் சொந்தமான பதி குடிதாகுகி யூரென்பது, வாவி கணே அன்றி மலரா - பொய்கைகளில் காம னம்பாகிய தாமரை மலர்களன்றி வேறு பூக்கள் பூப்பதில்லை, வயல்களும் அப் பாவி கணே அன்றிப் பயிராகா - வயல்களிலும் அந்தத் தியவனுடைய அம்புகளே விளைகின்றன, காவினில் கால் தேரோன் விருது அன்றிச் சேரா - சோலைகளில் தென்றற் காற்றைத் தேராகவுடைய மன்மதனுடைய கொடியாகிய குயிலையன்றி வேறு பறவை கள் தங்குவதில்லை, எ - று.

மயல் விலக்கு

25. கண்டிருந்தும் கேட்டிருந்தும் கற்றிருந்தும் தோடுமலர்
வண்டிருந்த பூங்குழன்மேன் மாலானேம்—பண்டை
வெறியோ விதியோ வெளிமயக்கோ வையோ
முறையோ வதியாய மோ.

உரை:—கண்டிருந்தும் கேட்டிருந்தும் கற்றிருந்தும் - பெண் மயலின் கெடுதியை நேரே பார்த்தும் பிறரிடம் கேட்டும் நூற்களிற் படித்தும் அறிந் திருந்தாலும், தோடு மலர் வண்டிருந்த பூங்குழல் மேல் - வண்டுகளுந் தி விரிக்கின்ற இதழ்களையுடைய மலர்ந்த அழகிய கூந்தலையுடைய பெண்ணின் மீது, மால் ஆனேம் - இச்சைகொண்டோம், பண்டை வெறியோ - இதற் குக் காரணம் முற்பிறப்பின் வாசனையோ, விதியோ - வினைப் பயனோ, வெளிமயக்கோ - வெளித தோற்றத்தினால் ஏற்பட்ட மோகமோ, முறையோ அதியாயமோ - இது நீதியா அநீதியா, ஐயோ - இது பரிதாபம், எ - று.

முருகன்மீது நிந்தாஸ்துதி

26. தேங்குவளை யன்னவிழித் தேமொழியார்க் குள் றன்தை
தாங்குவளை விற்கத் தமியோங்கை—ஈங்குவளை
கொள்ளத் தலைப்பட்டாய் கோமயிலைச் செட்டிநீ
மெள்ளக் குலத்தொழிலை விட்டு.

உரை :—கோ மயிலைச செட்டி - அழகிய மயிலையில் வதியும் செட்டி யென்று பெயர் பெற்ற குமரனே !, தேங்குவளை யன்ன விழி - மணம் வீசுகின்ற நீலோற்பலம் போன்ற கண்ணையுடைய, தேமொழியார்க்கு - இனிய சொல்லுடைய மாதர்களுக்கு, உன் தந்தை தாங்குவளை விற்க - உன்னுடைய தகப்பனார் சுமந்து கொண்டுபோன வளையலை விற்கவும், நீ மெள்ளக் குலத்தொழிலை விட்டு - நீ மெதுவாக அந்தச் சாதித தொழிலைக் கைவிட்டு, ஈங்கு - இந்த இடத்தில், தமியோம் கைவளை கொள்ளத தலைப்பட்டாய் - அடியேங்களுடைய கையிலுள்ள வளையல்களை ஏற்றுக் கொள்ளப் புறப்பட்டாய், எ - று.

பிட்சாடனரைப்பற்றிய நிந்தாஸ்துதி

27. பாம்புக்குத தச்சன் பகைவனைக்கொண் டித்தெருவில்
தேம்பித் திரிவா ரிவராரோ—பாங்கியே
நான்பாவித் தேன்பாவி யுண்டார் சிலகாலம்
தான்பாவித் துண்ணுத தாழ்வு.

உரை :—பாங்கியே - தோழியே !, பாம்புக்குத் தசசன் பகைவனைக் கொண்டு - பாம்புகுப் புற்றைக் கட்டுகின்ற கரையானது விரோதியாகிய கரடியைப் பிடித துக்கொண்டு, இததெருவில் தேம்பித திரிவா யாவரோ - இந்த வீதியில் உணவுக்காக அலைந்து திரிகினறவர் யார், நான் பாவித் தேன் - நான் அவர தன்மையை எண்ணினேன், பாவி யுண்டார் சில காலம் - சிலகாலம் உள்ளத்தைக் கொடுக்க வாகயுண்டார், தான் பாவித்து உண்ணுத தாழ்வு - தான் சமையல்செய்து சாப்பிடாததால் வந்த இழிவு இதுவாகும் அல்லது தன்னுடைய பாட்டினை விற்றுப் பரிசு பெற்று உண்ணுததால் வந்த தாழ்வாகும், எ - று.

திருவொற்றியூர்ப் பெருமானைப் பாடியது

28. ஒருொற்றி யூர்மனையா வுள்ளோன் கரவென்னும்
ஈருொற்றி யூர்வல்லி யீசனே—வேரி
மலிழமருந் தாயே மலிப்பானீ புள்ள
மலிழமருந் தாயே வரும்.

உரை :—ஓர் ஒற்றியூர் மனையா உள்ளோன் - ஒப்பற்ற திருவொற்றியூரைத் தனக்கு வீட்டக வுடையவனே, காவென்னும் ஈர் ஒற்றியூர் வல்லிக் ர் என்னும் இரண்டு மெய்யெழுத்தோடு இ சேர்வதா லுண்டாகிய கிரி வல்லி மலைக்கொடியாகிய உமை கணவனுகிய, ஈசனே - பெருமானே !, வேரி மிழ் அமருந் தாயே - மணங கமழுகின்ற மிழ்மரத்தின் கீழ்த் தங்கிய அன்னைபோல்பவளே!, நீ உள்ளம் மகிழ - நீ திருவுள்ளத்திற் களி கூர்ந்தால், மலைப்பால் - உமையம்மையின் பாலாகிய ஞானப்பால், மருந் தாயே வரும் - பிறவிக்கு மருந்தாகக் கிடைக்கும், எ - று.

திவ்யகவி பிள்ளைப்பெருமாளையங்கார்

பாடியது

திருமாலின் பெருமை

1. ஞான மறையை நவின்றுரைக்கும போதெல்லாம்
ஆனமுறை யாலாதி யந்தத்தும்—ஊனமற
அந்தணர்க ளென்போ ரரியோ மெனுஞ்சொல்லைத்
தந்துரைத்தல் கேட்டிலிரோ தான்.

உரை :—ஞான மறையை நவின்றுரைக்கும் போதெல்லாம் - அறிவு தருகின்ற வேதத்தைச சுருந்தப்பாமல் ஓதுகின்ற எல்லா நேரத்திலும், ஆனமுறையால் ஆதி அந்தத்தும் - வழக்கப்படி முதலிலும் கடையிலும், ஊனம் அற - குற்றம் நீங்கும்படியாக, அந்தணர்கள் என்போர் - பிராமணர்களாயினோர், அரி ஓம் எனும் சொல்லை - அரி ஓம் என்ற மந்திர வாக்கியத்தை, தந்துரைத்தல் கேட்டிலிரோதான் - முன்னோர்கள் சொல்வதை நீங்கள் கேட்கவில்லையா ?, எ - று

திருமாலின் பிறப்புக்குக் காரணம்

2. பிறப்பிலியாய்த் தானிருந்து பேருலகின் மாயோன்
உறப்பிறக்கு மென்றுமறை யோத—மறுத்துரீர்
அச்சுதனைச் சாதமுடை யானென் றறிவிழுந்த
பிச்சரிற் பிதற்றுவதென் பேச்சு.

உரை :—மாயோன் - திருமால், பேருலகில் பிறப்பிலியாய்த் தான் இருந்து - பெரிய உலகத்தில் தனக்காகப் பிறத்தல் இல்லாதவனுயிருந்தும், உறப்பிறக்கும் என்று - காரணம் பற்றித் தோன்றுவானென்று, மறை யோத - வேதங் கூறவும், மறுத்து ரீர் - அதனை மறுத்து நீங்கள், அச்சு

தனை - அழிவில்லாத பெருமாளே, சாதமுடையான் என்று பிறப்புடையவனென்று, அறிவிழந்த பிச்சரில் பிதற்றுவது - அறிவற்ற பைத்தியக்காரரைப்போலக் குறை கூறுவது, என் பேசசு - எவ்வகையான சொல்லாகும், எ - று.

இதுவுமது

3. ஆய வறத்தை யறவோரை யாக்கவும்வெங்
தீயர்தமைப் போக்கவுமே திண்புவியில்—மாயுகங்கள்.
தோறுமுற்ப விப்பனெனத் தொல்கீதையிற் கண்ணன்
கூறுமொழி தேர்கிலிரோ கூர்ந்து.

உரை :—திண்புவியில் - உறுதியான பூமியின்மீது, ஆய் அறத்தை, அறவோரை ஆக்கவும் - சிறந்த தருமத்தையும் தருமவான்களையும் தோற்றுவிக்கவும், வெம் தீயர்தமைப் போக்கவுமே - கொடிய அரக்கர்களை அழிப்பதற்காகவும், மா யுகங்கள் தோறும் உற்பவிப்பன் என - ஒவ்வொரு பெரிய யுகத்திலும் அவதரிப்பதாக, தொல் கீதையிற் கண்ணன் கூறுமொழி கூர்ந்து தேர்கிலிரோ - பழமையான பகவத கீதையில் கண்ணபிரான் சொல்லியிருக்கின்ற வாக்கியத்தை ஆராய்ந்து நீர் நம்பவில்லையா, எ - று.

இதுவுமது

4. உடையானுக் கன்றி யுடைப் பொருளைக் காக்கப்
படையார் தமக்குண்டோ பாரம்—அடைவாகச்
சீதரனார் காக்கத் திருவவ தாரஞ்செய்வர்
சேதனருக் கேனச்செயல்.

உரை :—உடையானுக்கு அன்றி யுடைப்பொருளைக் காக்க - பொருள்களை யுடையவர்க்கு உரிமையாகிய பொருளைக காப்பதற்குப் பொறுப்புண்டே அல்லாமல், படையார் தமக்குண்டோ பாரம் - அப் பொருளை யுண்டாக்காத பிறர்க்குப் பொறுப்பிலலையே, அடைவாகக் காக்கச சீதரனார் திருவவதாரஞ் செய்வர் - பொருத்தமாக அவற்றைக் காப்பதற்கு இலக்குமி மணாளனாகிய பெருமாள் உலகத்தில் அவதரிப்பார், சேதனருக்கு ஏன் அசசெயல் - அறிவுடைய மற்ற உயிர்களுக்கு அப்படிப்பட்ட செய்கைக்கு உரிமை யேது, எ - று.

திருவரங்கத் தேர் விஷயமாகப் பாடியது

5. ஒன்று மறியாத வூமர்கா டென்னரங்கர்
இன்று திருத்தேரி லேறினர்—நின்று
வடம்பிடிக்க வாருங்கள் வையகுந்த நாட்டில்
இடம்பிடிக்க வேண்டுமென்றக் கால்.

உரை:—தென்னரங்கர் - அழகிய திருவரங்கப் பெருமாள், இன்று திருத்தேரில் ஏறினர் - இன்றைக்கு அழகிய தேரின்மீது எழுந்தருளினர், ஒன்றும் அறியாத ஊமர்காள் - அதன் பயன் யாது மறியாத மூடர்களே!, வைகுந்த நாட்டில் இடம் பிடிக்கவேண்டு மென்றக்கால் - வைகுந்த லோகத்தில் நீங்கள் போய்த் தங்குவதற்கு இடத்தை யுரிமையாக்கிக் கொள்ள வேண்டுமானால், நின்று வடம் பிடிக்க வாருங்கள் - ஓடிப்போகா மல் தேர் வடத்தைப் பிடித்திழுக்க வாருங்கள், எ - று.

மாசிலாமணித் தேசிகர்

பாடியது

தஞ்சை மன்னர் தருமபுர ஆதீனத்தார் தொழில் யாதென்று வினவ அதற்கு உத்தரமாகக் கூறியது

1. ஆய்வார் பதிபசு பாசத்தி னுண்ணமைய யாய்ந்தறிந்து
காய்வார் பிரபஞ்ச வாழ்க்கை யெல்லாங்கல்வி கேள்வியல்லால்
ஓய்வார் சிவானந்த வாரியுள்ளே யொன்றி ரண்டுமறத்
தோய்வார் கமலையுண் ஞானப்ர காசன் மெய்த் தொண்டர்களே.

உரை :—கமலையுள் ஞானப்பிரகாசன் மெய்த்தொண்டர்களே - திருவா ரூரில் வீற்றிருக்கும் ஞானப்பிரகாச குருவின் உண்மை யடியார்களாகிய தருமபுரவாசிகள், பதி பசு பாசத்தின் உண்மையை ஆய்வார் - கடவுள், உயிர், இரண்டிற்கு மிடையிலுள்ள தடை யென்பவற்றின் மெய்யியல் பினை யாராய்வார்கள், ஆய்ந்து அறிந்து பிரபஞ்ச வாழ்க்கை யெல்லாம் காய்வார் - அதனை யறிந்து தெளிவடைந்து உலக வாழ்க்கையை வெறுப் பார்கள், கல்வி கேள்வி அல்லல் ஓய்வார் - நூற்களைக் கற்கின்றதினாலும் கேட்கின்றதினாலும் ஏற்படும் தொந்தரைவைவிட்டு நீங்குவார்கள், சிவானந்த வாரியுள்ளே ஒன்று இரண்டும் அறத்தோய்வார் - சிவபெருமானின் பேரின்ப வெள்ளத்திலே கடவுள் தானென்ற வேறுபாடின்றி யழுந்தி யனுபவிப்பர், எ - று.

தமது ஞானசிரியர்மீது பாடியது

2. கனக்கும் பொதிக்கு மெருதுக்குந் தன்னிச்சை கண்டதுண்டோ
எனக்கு முடற்கு மெனதிச்சை யோவிணங் கார்புரத்தைச்
சினக்குங் கமலைபின் ஞானப்ர காச சிதம்பரவின்
முனக்கிச்சை யெப்படி யப்படியாக வுரைத்தருளே.

உரை:—இணங்கார் புரத்தைச் சினக்கும் - தேவர்களாகிய திரி புரத்து அசுரர்களைக் கோபிக்கின்ற, கமலியின் ஞானப்பிரகாச சிதம்பர - திருவாரூரில் வீற்றிருக்கும் ஞானப் பிரகாச குருவே !, ஞான ஆடை தரித் தவரே !, கனக்கும் பொதிக்கும் எருதுக்கும் தன்னிச்சை கண்டதுண்டோ - பொதிமாட்டைக் கவனிக்கும்போது பாரமான பொதிக்காவது மாட்டிற் காவது தன் விருப்பப்படி நடக்க யாராவது பார்த்தார்களா எனக்கும் உடற் கும் எனது இச்சையோ - அதுபோலப் பொதிபோன்ற எனக்கும் உடம் புக்கும் சுவாதீனமுண்டோ, இன்று உனக்கு இசைசை எப்படி அப்படியாக உரைத்தருளே - இப்பொழுது உமக்குத திருவுளமெப்படியோ அவ்வித மாகக் கிருபைபுரிவாயாக, எ - று.

இதுவுமது

3. எல்லா முனது செயலென் றறிந்து மெனதுளத்திற்
பொல்லாத சங்கற்ப மேன்வரு கோபுர மூன்றெரிக்க
வல்லாய் கமலியின் ஞானப்ர காச வரதவிது
சொல்லாய் கரண மயக்க மன்றேரென் றொழிலல்லவே.

உரை:—புரமூன்றெரிக்க வல்லாய் கமலியின் ஞானப்பிரகாச வரத - மூப்புரம் போன்ற மும் மலங்களையும் அழிக்க வல்லவனே !, திருவாரூரில் வதிகின்ற ஞானப்பிரகாச குருவே !, எல்லாம் உனது செயல் என்று அறிந் தும்——, எனது உளத்தில் - என்னுடைய மனதில், பொல்லாத சங்கற் பம் ஏன் வருமோ - தன் முனைப்பாகிய தீய உததேசம் ஏன் தோன்ற வேண்டும், இது சொல்லாய் - இதற்குக் காரணம் யாதென்று கூறுவா யாக, கரண மயக்கம் அன்றே - அத்தக் காரணங்களின் தொடர்பினல் ஏற் பட்டதாகுமல்லவா, என் தொழில் அல்லவே - உயிராகிய என் தொழில் அது வாகாதே, எ - று.

நெற்குன்றவாண முதலியார்

பாடியது

தம்மிடம் வந்த காளிப்புலவருக்குப் பரிசளித்துக் கூறியது

1. கற்குங் கவிவல்லி யத்தணர்கோ னம்பி காளிக்கியாம்
விற்கும பரிசன மாகிவிட் டோம்வட வேங்கடமும்
பொற்குன் றமும்புகழ்க் கங்கா நதியும் பொதியமுமபோல்
நெற்குன் றமுமரம் மரபுமெந் நாளு நிலைநிற்கவே.

உரை:—கற்கும் கவிவல்ல அந்தணர் சோன் - படிக்கத்தக்க பாடலியற்றும் திறமையுடைய அந்தணர் தலைவராகிய, காளிக்கு - காளிப்புலவருக்கு, யாம் விற்கும் பரிசனமாகி விட்டோம் - நாம் விற்கக்கூடிய அடிமையாகி விட்டோம், (அதனால்) வடவேங்கடமும் - தமிழ்நாட்டு வடவெல்லையாகிய திருவேங்கட மலையும், பொற் குன்றமும் - மேருமலையும், புகழ்க் கங்கா நதியும் - கீர்த்திபெற்ற கங்கையாறும், பொதியமும் - பொதியமலையும்போல, செற்குன்றமும் நம் மரபும் எந்நாளும் நிலை நிற்கவே - செற் குன்றமும் நம்மினமும் எக்காலத்திலும் நிலை நிற்பனவாக, எ - று.

வெண்பாப்புலிக் கவிராயர்

பாடியது

விநாயகர்மேற் பாடிய துதி

1. பாசத் தளையறுத்துப் பாவக் கடல்கலக்கி
நேசத் தளைப்பட்டு நிற்குமே—வாசநறுங்
காரார் வரைபயின்ற கன்னிப் பிடியளித்த
ஓரானை வந்தென் னுளத்து.

உரை:—வாசநறும் காரார் வரை பயின்ற - நறுமணங் கமழும் மேகங்கள் பொருந்திய இமயமலையரசன் பெற்ற, கன்னிப் பிடியளித்த ஓரானை - பெண்ணானை வடிவாய் இருந்து பெற்ற ஒப்பற்ற யானைமுகக் கடவுள், என் உள்ளத்து வந்து - என்னெஞ்சத்தில் எழுந்தருளி, பாசத் தளை யறுத்து - மலமாகிய தடையினை அல்லது விலங்கினைத் தறித்து ஒழித்து, பாவக்கடல் கலக்கி - தீவினையாகிய சமுத்திரத்தைக் கலக்கியொழித்து, நேசத் தளைபட்டு நிற்குமே - அன்பாகிய கட்டினிலகப்பட்டு நிலைபெறுவர், எ - று.

அம்பலவாணனைப் பாடியது

2. காணத் தொழுத்துதிக் கக்கண் கரங்கணக்கள்
சேணிந் திரன்வாணன் சேடன்போல்—வேணும்
பனகவணை யிற்றுயிலும் பச்சைமா றெடும
னகசபை யாண்டிவந்த கால்.

உரை:—பனக அணையில் துயிலும் - பாம்பணையிற் பள்ளிகொள்ளும், பச்சைமால் தேடும் - பச்சைநிறமுடைய பெருமான் திருவடி தேடப்

பெற்ற, கனக சபையான் சிவந்த கால் - பொன்னம்பலவாணனது செவ்விய பாத தரிசனம், காணக் கண் - காண்பதற்குக் கண்களும், தொழ கரங்கள் - தொழுதற்குக் கரங்களும், துதிக்க நாக்கள் - துதிப்பதற்கு நாக்குகளும், சேண் இந்திரன் வாணன் சேடன்போல் வேணும் - முறையே தேவேந்திரனைப்போல (ஆயிரங் கண்களும்) வாணனைப்போல (இரண்டாயிரம் கைகளும்) ஆதிசேஷனைப்போல (ஆயிரம் நாக்களும்) வேண்டும், எ - று.

வெறிமங்கைபாகக் கவிராயர்

பாடியது

மருங்காபுரி சமீந்தார்மீது பாடியது

1. துவளவ னோக்குமிக் கன்பொர மாதுளஞ் சோர்ந்துவரும
துவளவ னோக்கடைக் கண்பார்த் தருள்சிறி துந்தெவிட்டா
துவளவ னோக்குமுன் ஞபர்தம் மில்லந்தொ றுந்திகழ்மு
துவளவ னோக்கரத் தாய்தென் மருங்கைத் துரைசிங்கமே.

உரை:—சிறிதும் தெவிட்டாது - கொஞ்சமும் தின்று நிறைவுபெறாது, வளவு அளைக்கு - வளமான வெண்ணெயின் பொருட்டு, முன் ஆயா தொழும் இல்லம் தொறும திகழ - முன்னுளில் அதாவது கிருஷ்ணவ தாரதசில் இடையாகள் வீடுதோறும் சென்று விளகிய, முதுவள வளைத் திரட்டாய் - முதிர்ந்து வளம்பெற்ற பாஞ்ச சன்யதனைக் கையிலேந்திய வனே, தென் மருங்கைத் துரைச சிங்கமே - அழகிய மருங்காபுரியிலுறை யும் சிகம் போன்ற எஜமானனே!, துவள வளைக்கும் இக்கண் பொர - நன்றாக வளைந்த கரும்பு வில்லையுடைய மன்மதன் சண்டை செய்வதால், மாது உளம் சோர்ந்து வருந்துவள் - பெண்ணனவள் மனந்தளர்ந்து துன் பப்படுகிறாள், அவளைக் கடைக்கண் பார்த்து அருள் - ....., எ - று.

இராகுநாத வுடையான்மேற் பாடியது

2. நாட்டிலே புகழ்படைத்த வாவுடையான்
பெற்றாகு நாதாகேண்மோ
மாட்டிலே யேறுகின்ற சிவனைப்
போய்க்குதிரை மட்டங்கேட்டேன்

வீட்டிலே மூத்தமகன் பெருச்சாளி
யேறுகின்றான் வேலன்புன்செய்க்
காட்டுமயி லேறுகின்றான் வயிரவனைப்
பாரெனக்கண் காட்டினாரே.

உரை :—நாட்டிலே புகழ் படைத்த ஆவுடையான் பெற்ற ராஜநாதா சேண்மோ - தேசத்திற் கீர்த்தி பெற்ற ஆவுடையாரென்னும் வள்ளல் பெற்ற இராஜநாத துரையே கேட்பீராக, மாட்டிலே ஏறுகின்ற சிவனுரைப் போய்க் குதிரை மட்டம் கேட்டேன் - காளை வாகனமுடைய சிவபெருமானிடஞ் சென்று மட்டக் குதிரையொன்று வேண்டுமென்றேன், வீட்டிலே மூத்தமகன் பெருச்சாளி ஏறுகின்றான் - மூததமகனுகிய பிள்ளையார் வீட்டிலுள்ள பெருச்சாளியை வாகனமாகக் கொண்டார், வேலன் புன் செய்க் காட்டிலே மயில் ஏறுகின்றான் - முருகக் கடவுள் வயற் காட்டிலே உலாவுகின்ற மயிலினை வாகனமாகக்கொண்டார், வயிரவனைப் பார் எனக் காட்டினார் - (மட்டக் குதிரைகளு) வயிரவமூர்த்தியைப் போய்ப் பார்க்கும்படியாகக் கட்டளை யிட்டார், (அவருடைய நாய் வாகனம் மட்டக் குதிரையைப் போன்ற தென்க.) எ - று.

விராலிமலை முருகக் கடவுள்மீது பாடியது

3. காவென்றுஞ் சிந்தா மணியென்று நீயென்றன் கையிலள்ளித்
தாவென்று கைக்கத் தரிதரித்ர பின்சென்று தள்ளியெனைப்
போவென்று கைக்கவு நாணமங்கே யென்ன போவதிங்கு
வாவென் றிழுக்கவும வந்தேன் விராலிமலைக் கந்தனே.

உரை :—விராலிமலைக் கந்தனே - விராலிமலையில் வீற்றிருக்கும் முருகப்பெருமானே!, காவென்றும் - செல்வர்களைக் கற்பகச சோலையென்றும், சிந்தாமணி யென்றும் - சிந்தாமணி போன்றவரே என்றும் புகழ்ந்து, நீ என்றன் கையில் அள்ளித் தா என்று உரைக்க - நீ எனது கையில் பொருளை யள்ளிக் கொடுவென்று வேண்டும்படி, தரிதரித்ரம் பின் சென்று தள்ளி எனைப் போவென்றுரைக்கவும் - என்னுடைய வறுமையானது என்னைப் பின் நின்று தள்ளிச செல்வரிடம் போகும்படி எனைத் தூண்டவும், நாணம் - என்னுடைய மானமானது, அங்கே என்ன போவது இங்கே வாவென்று இழுக்கவும் - செல்வரிடதில் எதற்குப் போவது இங்கே சுவாமியினிடதில் வாவென்று என்னை இழுப்பதனாலே, வந்தேன் - உன்னிடம் வந்து சேர்ந்தேன், எ - று.

நற்றாயிரங்கல்

4. நன்றே நடாத்து மெம்மங்கை பங்காளர்தம் நாட்டினிலே
அன்றே யிராம னணைகட்டும் போதங் கவன்படைகள்
குன்றேன் சுமந்தவெம் மான்சென்ற பாலைக் குறும்பரலில்
ஒன்றே யிடலைக் கடலூற்றும் வற்ற வுறிஞ்சிடுமே.

உரை :—நன்றே நடாத்தும் எம் மகளை பங்காளர் தம் நாட்டினிலே-நன்மையையே செய்விக்கின்ற மாதோரு பாகனுடைய தேசத்திலே, அன்றே இராமன் அணைகட்டும்போது - அத்தக்காலத்தில் இராமன் கடலில் அணை கட்டும்போது, அங்கு அவன் படைகள் - அங்கே அவனுடைய குரங்கு சேனைகள், குன்று ஏன் சுமந்த - மலைகளை சுமக்கவேண்டிய அவசிய மென்ன, எம்மான் சென்ற பாலைக் குறும் பரலில்-என் மகள் தலைவனுடன் சென்ற பாலை வனத்திலுள்ள சிறு கற்களில், ஒன்றே இடில் - ஒன்றை யெடுத்துப் போட்டால், அக் கடல் ஊற்றும் வற்ற உறிஞ்சிடுமே - அக் கடலில் ஊறுகின்ற நீருங்கூட வற்றிப்போகும்படி குடித்துவிடும், எ - று.

பால பாரதியார்

பாடியது

தில்லைவிடங்கன் மாரிமுத்துப் பிள்ளையைப் புகழ்ந்து பாடியது

1. தில்லைவிடங்கன்றனில்வாழுந் தெய்வங்கள்பெருமாடிருப்புதல்வன்
றெளிந்தமனத்தன்முத்தமிழோர் தினமும்புகழுங்குறுமுனிவன்
முல்லைநகையார்மதன்மாரி முத்துப்புலமைத்திறம்போல
முயன்றசுகுணமதுபோல முழுதுந்தெளிந்தமனம்போல
எல்லையிகந்தபாரதலமெழில் வான்றனிலுமேகாண
விதயத்தெண்ணிவிழிதுயிலா திருந்துமதுவேநினைவாகி
ஒல்லையன்மாலயன்பிச்சைக் குழன்றும்பன்றிவடிவெடுத்து
மோங்கிப்பறக்குமோதிமமா யுயர்ந்துதிரிந்துங்காணோ.

உரை:—தில்லை விடங்கன் தனில் வாழும் தெய்வமகப் பெருமான் திருப்புதல்வன்-தில்லைவிடங்க னென்னும் ஊரில் வசிக்கின்ற தெய்வமகப் பெருமாள் என்னும் பெரியாரின் அழகிய குமாரரும், தெளிந்த மனத்தன்-தெளிவான வுள்ளமுடையவரும், முத்தமிழோர் தினமும் புகழும் குறு முனிவன் - முத்தமிழில் வல்ல புலவர்கள் நான்றோறும் துதிக்கின்ற

அகத்திய முனிவர் போல்பவனும், முல்லை நகையார் மதன் - முல்லை யரும்பைப் போன்ற பல்லையுடைய மாதர்களுக்கு மன்மதன் போன்றவருமாகிய மாரிமுத்துப் புலமைத் திறம்போல - மாரிமுத்துப் பிள்ளையின் கல்வித் தேர்ச்சியின் வல்லமைபோலவும், முயன்ற சுகுணமதுபோல - பொருந்திய நல்ல தன்மைபோலவும், முழுதும் தெளிந்த மனம் போல - முற்றிலும் களங்கமற்ற வுள்ளம்போலவும், எல்லை இகந்த பாரதலம் எழில்வான் தனிலுமே காண - எல்லையற்ற பூமியிலும் அழகிய வானுலகத்திலும் உண்டா வென்று பார்ப்பதற்கு, இதயத்து எண்ணி - மனதிலே ஆலோசித்து, விழி துயிலாது இருந்தும் அதுவே நினைவாகி - கண் மூடாதிருந்து அதுவே கருத்தா யிருந்து, ஒல்லை - விரைவாக, அரன் மால் அயன் - உருத்திரன் விஷ்ணு பிரமா ஆகிய இவர்கள், பிசகைக் குழன்றும் - முறையே பிச்சை யெடுத்துத் தின்றும், பன்றி வடிவெடுத்தும் - வராகவதார மெடுத்தும், ஓங்கிப் பறக்கும் ஓதிமமாய் உயர்ந்து திரிந்தும் - ஓங்கிப் பறக்கும் அன்ன வடிவாய் மேலே திரிந்தும், காணுரே - காண முடியவில்லை, எ - று.

திருவாரூர்ச் சொக்கலிங்கக் கவிராயர்

பாடியது

பன்னிரண்டு மாதப் பெயர்களு மமையப் பாடியது

1. மாதஞ்சித்திரைகடலிலைவ தனணீயன்பு
வைகாசினஞ்சிறியாளை யானிபெருக்கும்
போதமபன்போராடினனை யாவணியாய்ப்
புரட்டாதின்கலமவெறுத்தா ளைப்பசியில்லென்றே
சாதனைசெய்தேசினந்தாள் கார்த்திகைக்குங்கொடைவேம்
தாசகிமார்கழியார் கோதையுமாசிலாமல்
காதலுடன்சேர்வணல்லதிட்ட முன்பங்குனிப்பார்
கந்தனெனுங்கலியாண சுந்தரமாமுகிலே.

உரை:—கந்தனெனும் கலியாண சுந்தர மாமுகிலே - முருகனென்று சொல்லதற்க பெரிய மேகம்போன்ற கலியாண சுந்தர வள்ளலே!, மாதஞ் சித்திரைக் கடலிலை வைதனள் - காதலியானவள் பயப்பட்டு மன்மதன் (மூரசாகிய) கடலைப் பழித்தாள், வைகாசினம் சிறியாள் - மிகவும் இளமை யானவள், ஆனி பெருக்கும் - தின்பத்தை மிகச் செய்கின்ற, போதம் அம்பன் போர் ஆடினன் - மலர்க்கணையுடைய மன்மதன் சண்டையிட்டான், ஐயா, ஐயனே!, பணியா புரட்டா - பாம்புபோலப் புரண்டு, நின்கலம் வெறுத்

தான் - உண்கின்ற பாத்திரத்தை வெறுத்துத் தள்ளினன், ஐப்பசி இல் லென்றே சாதனை செய்தே சினந்தான் - நல்ல பசியுண்டாக வில்லையென்று பிடிவாதமாகக் கோபித்துக் கொண்டான், கார் திணைக்குங் கொடை வேந்தா - மேகந் திகிலடையும்படியான ஈகையுடைய அரசனே!, நீ அன்பு வைகா - நீ அவளிடம் இசைவை வைத்து அவளைக் காப்பாற்றுவாயாக, சகி மார் கழியார் - தோழிமார் உன்னைக் கழித்து விடமாட்டார்கள், கோதையும் மாலைமல் காதலுடன் சேருவாய் - பெண்ணும் குற்றமில்லாமல் விருப்பத் தோடு கூடுவாள், நல்ல திட்டம் உன் பங்கு - உன் பாகத்திற்கு நல்ல பாக் கியமே உண்டு, உனிப்பார் - இதை யோசித்துப் பார்ப்பாயாக, எ - று.

ஊனையூர்ப் பாரதியார்

பாடியது

ஜெயங்கொண்டார் சதகத்தைப் பற்றிய வினு

1. ஒங்குபத்மா சூரனைக்கண் டோடியொளித் தார்விசையன்
வாங்குதனு வாற்பூசை வாங்கினர்—ஈங்கிருக்கு
நன்னிபமச் சோளீச னர்செயங்கொண் டாரென்றல்
என்னசெயங் கொண்டா ரிவர்.

உரை:—நல் நியமச் சோளீசனர் - நல்ல முறைகளை வகுத்த சோனீசப் பெருமான், ஒங்கு பத்மாசூரனைக் கண்டோடி ஒளித்தார் - வரம் பெற்றுத் திகழ்ந்த பத்மாசூரனைப் பார்த்து அவன் தன்னைத் தீண்டாதவண்ணம் ஓடியொளித்தார், விசையன் வாங்கு தனுவால் பூசை வாங்கினர் - அர்ச சுனனது வலிமை மிக்க வில்லால் அடிபட்டார், ஈங்கு இருக்கும் செயங கொண் டார் என்றல் - அவர் இத் தலத்தி லெழுந்தருளி யிருக்கும் செயங் கொண்டாரென்று சொன்னல், என்ன செயங கொண்டார் இவர் - என்ன வெற்றி பெற்றாரிவர், எ - று.

முத்துப்ப செட்டியார்

பாடியது

ஊனையூர்ப் பாரதியார் கவிக்கு விடையாகக் கூறியது

1. என்னசெயங் கொண்டா ரிவரென்றன் மூப்புரத்தைச்
சொன்னமய மாய்ச்சமைத்த சோளீசர்—பின்னுஞ்
சிரித்துச் செயங்கொண்டார் சித்தசனைக் கண்ணால்
எரித்துச் செயங்கொண்டா ரே.

உரை :—சோளீசர் என்ன செயங் கொண்டார் என்றூர் - சோளீசர் என்ன வெற்றி பெற்றாரெனில், மூப்புரத்தைச் சொன்ன மயமாய்ச் சமைத்தார் - திரிபுரத்தைப் பொன் மயமாக முதலில் ஆக்கி யளித்தவரவரே, பின்னும் சிரித்து செயங்கொண்டார் - பின்னர்ப் புன்சிரிப்பால் அதனை எரித்து வெற்றி பெற்றவரும் அவரே, சித்தசனைக் கண்ணால் எரித்துச் செயங்கொண்டாரே - மன்மதனை நெற்றிக்கண்ணு லெரித்து வெற்றி பெற்றார், எ - று

அரங்கநாதக் கவிராயர்

பாடியது

வியாசபுரி விநாயக முதலியார்பேரில் பாடியன

1. சீர்மலிவி யாசபுரித் திண்புயவி நாயகனே
எர்மலியும் மங்கையுன திச்சையினற்—பார்தனிலே
வேனிலுக்கு மாமதிக்கும் வேள்தொடுத்த நீள்கணைக்கு
மாநிசிக்கு மேமமய்ங்கு மால்.

உரை :—சீர்மலி வியாசபுரித் திண்புய விநாயகனே - புகழ் நிறைந்த வியாசபுரியில் வசிக்கும் பலமான தோள்களையுடைய விநாயக வள்ளலே !, எர்மலி இம்மங்கை யுனது இசைசியினல் - அழகு மிகுந்த இந்தப் பெண்ணைவள் உன்மேல் வைத்த காதலினல், பார்தனிலே - பூமியிலே, வேனிலுக்கும் - வசந்த காலத்திற்கும், மாமதிக்கும் - பெரிய சந்திரனுக்கும், வேள்தொடுத்த நீள் கணைக்கும் - மன்மதன் விட்ட நீண்ட அம்புக்கும், மாநிசிக்கும் - நீண்ட இராத்திரிக்கும், மயங்கும் - அஞ்சுகின்றாள், ஆல் - அசை, எ - று.

2. மானேவி யாசநகர் வாழ்துரைவி நாயகன்பாற்
தேனேதா னென்மயலைச் செப்புமோ—காளுருங்
கோகனகத் தைத்தேடிக் கோலவினத் தைக்கூடிப்
போகுமனத் தைப்போகச் சொல்.

உரை :—மானே - தோழியே !, வியாச நகர்வாழ் துரை விநாயகன் பால் - வியாசநகரில் வாழ்கின்ற எஜமானராகிய விநாயக வள்ளலிடம், தேனே தான் என் மயலைச செப்புமோ - வண்டுதான் என்னுடைய மோகத்தைத் தெரிவிக்குமா, கான் ஆரும் கோகனகத்தைத் தேடி - அது வாசனை பொருந்திய தாமரையைத் தேடி, கோலவினத்தைக் கூடி - அழகிய தனது கூட்டத்தைச் சேர்ந்துகொண்டு, போகும் - தேடிக்கொண்டு

செல்லும், (அது தாமதமாகு மாதலின்) அனத்தைப் போகச் சொல் - அன்னத்தைத் தூது போகும்படி ஏவுவாயாக, எ - று.

3. வேத வியாசர் வியன்புரி விநாயகனே
மாதரசி தன்மயலை மாற்றுவாய்—காதல்கொளும்
மொக்குண்முலை யிக்குமொழி முத்தநகை யத்தமலர்
ஒக்குமுகின் மைத்தகுழ லோர்.

உரை :—வேதவியாசர் வியன்புரி விநாயகனே - வேதவியாசர் பேரா லமைந்த பெரிய ஊரிலே வதியும் விநாயக வள்ளலே!, காதல் கொளும் மாதரசி தன் மயலை மாற்றுவாய் - உன்பா லிசையுடைய பெண்களுக்கு அரசியா யிருக்கும் அவளுடைய மோகத்தை நீ தவிர்ப்பாயாக!, முலை மொக்குள் - அவளுடைய முலைக்காம்பு பூவரும்பு போன்றது, மொழி இக்கு - சொல்லானது கரும்பு போன்றது, முத்தம் நகை - பல்லானது முத்தைப் போன்றது, அத்தம் மலர் - கையானது தாமரைப் பூவைப் போன்றது, மைத்த குழல் முகின் ஒக்கும் - அவளுடைய கரிய கூந்த லானது மேகத்தைப் போன்றிருக்கும், ஓர் - என்பதை அறிக, எ - று.

4. மேதினிசூழ் கங்கைகுல வில்வே ளருச்சுனன்செய்
மாதவவி நாயகமா மன்னவனே—காதன்மிகு
கண்டுமொழி வண்டுவிழி கண்டிகோஞர் தொண்டுபுரி
செண்டுமுலை யண்டுமிவள் சீர்.

உரை :—மேதினி சூழ் கங்கைகுல - உலகத்தாற் போற்றும் கங்கை குலமாகிய வேளாள குலதிற் பிறந்த, வில் வேன் அருச்சுனன் சேய் - மன்மதனை யொத்த அருசசுன முதலியாரின் புதல்வராகிய, மாதவ விநா யக மா மன்னவனே - பெருந்தவமுடைய விநாயக வேந்தனே!, கண்டு மொழி - கற்கண்டுபோன்ற சொல்லையும், வண்டுவிழி கண்டு - வண்டு போன்ற கண்ணையும் பார்த்து, இளைஞர் தொண்டுபுரி - வாலிபர்கள் பணிவிடை செய்யக்கூடிய, செண்டு முலை - செண்டுபோன்ற தனங்களை யுடைய, இவள் சீர் அண்டும - இவள் சிறப்பு உன்னைச் சேர்ந்ததாகும், (ஆதலால்) காதல் மிகு - இவளிடத்தில் ஆசை மிகுதியாக வைப்பாயாக, எ - று.

5. மன்னவி யாசர்புரி மாலேவி நாயகனே
சொன்னவ லர்க்கீயுஞ் சுந்தரனே—மின்னுட்குச்
சுட்டிநெற்றிக் கிட்டுவட்டத் துட்டெனப்பொட் டிட்டடுத்
பட்டிடைக்குக் கட்டியிட்டுப் பார். [துப்

உரை :—மன்னு வியாசர்புரி மாலே விநாயகனே - அரசனே! வியாச புரியில் வசிக்கும் விநாயகப் பெரியோனே!, சொல் நாவலர்க்கு ஈயும் சுந்த

ரனே - புகழுடைய புலவர்களுக்குப் பரிசளிக்கும் அழகனே!, மின்னுட்கு - இப் பெண்ணுக்கு, சுட்டி நெற்றிக்கு இட்டு - சுட்டியாகிய ஆபரணத்தை நெற்றியி லணிவித்து, வட்டத்திட்டு எனப் பொட்டு இட்டு - வட்ட மான திட்டுப்போன்ற திலகமணிவித்து, பட்டு இடைக்குக் கட்டி இட்டு - இடுப்பில் பட்டாடையைக் கட்டி, அடித்துப் பார் - நெருங்கிப் பார்ப்பாயாக, எ - று.

6. மையல்கொண் டாளுன்மீது வந்தணைவா யிப்போதே
செய்யவள்சேர் திண்புயவி நாயகனே—தொய்யில்
முலைபசந்து குழலவிழ்ந்து மொழிமறந்து விடவயர்ந்து
மலைவுகொண்டு நிலைகலங்கி மான்.

உரை :—செய்யவள் சேர் திண்புய விநாயகனே - இலக்குமி தங்கிய வலிய புயங்களையுடைய விநாயக வள்ளலே!, தொய்யில் முலை பசந்து - சித்திர மெழுதப்பெற்ற தனங்களின்மீது தேமல் படரப்பெற்று, குழல் அவிழ்ந்து - கூந்தல் கலையப்பெற்று, மொழி மறந்து - சொன்னது இன்ன தென்று நினைவில் வையாது, விட அயர்ந்து - ஆசை விடத்தால் தளர்ச்சி யடர்ந்து, மலைவுகொண்டு - உன்னைப் பெறலாமோ என்று சந்தேகங் கொண்டு, நிலை கலங்கி - மனம் தடுமாறி, மான் - இப்பெண்ணானவள், உன் மீது மையல் கொண்டாள் - ....., இப்போதே வந்து அணையாய், எ - று.

7. பூங்கோதை மாமயிலே போசன்வி நாயகன்பால்
தாங்காம னத்துயரஞ் சாற்றுவரார்—நீங்காத
மோகமிஞ்சி யேதயங்க மோதுதென்ற லோதுமயங்கி
யாகவந்து வீசுகின்ற தால்.

உரை :—பூங்கோதை மா மயிலே - அழகிய மாலை யணிந்த மயில் போன்ற சாயலையுடைய தோழியே!, நீங்காத மோக மிஞ்சியே - தவிர்க்க லாகாத ஆசை யதிகப்பட்டு, தயங்க - வருந்தும்படியாக, மோது தென்றல் ஓதும் அகியாக வந்து வீசுகின்றது - அடிக்கின்ற தென்றற் காற்றானது சிறப்பாகப் பேசப்படுகின்ற வடவைத தீயைப்போல வந்து வீசுகின்றது, போசன் விநாயகன்பால் - போசராசனைப் போன்ற விநாயக வள்ள லிடத்தே, தாங்கா மனத்துயரம் சாற்றுவார் யார் - பொறுக்கமுடியாத என்னுடைய நெஞ்சுத் துயரத்தைச் சொல்லுபவர்கள் யார், எ - று.

8. எத்தனைநாள் காணும லேங்கித்த னித்திருப்பாள்
சித்தசவி நாயகவேள் சீமானே—தத்தைமொழி
மாதுமஞ்ஞ மீதிருந்து வாடவந்த மாமதன்செய்
வாதுகொஞ்ச மாவிரைந்து வா.

உரை:—சித்தச விராயவேள் சிமானே - மன்மதன் போன்ற விராயக வள்ளலாகிய பெருஞ் செல்வனே!, தத்தை மொழி மாது - கிளிபோன்ற சொல்லையுடைய பெண்ணானவள், மஞ்சமீது இருந்து வாட - கட்டிலின் மேலிருந்து தளரும்படியாக, அந்த மாமதன் செய் வாது கொஞ்சமா - அந்தப் பெரிய காமன் செய்கின்ற சண்டை சிறிய அளவுடையதா, எத்தனை நாள் காணுமல் ஏங்கித் தனித்திருப்பாள், விரைந்து வா - ....., எ - று.

9. வாராய்வி யாசர்புரி மன்னுவி நாயகனே
தாராய்செவ் வாயிதழைத் தான்சுவைக்க—போராடும்
வஞ்சமார னஞ்சியோட மஞ்சமீ திருந்துகூட
நெஞ்சமார வந்துசேர நீ.

உரை:—வாராய் வியாசர்புரி மன்னு விநாயகனே - வியாசர்புரிக்கு அதிபதியாகிய விநாயக வள்ளலே வருவீராக, செவ்வாய் இதழைத்தான் சுவைக்க தாராய் - அதரபானம் பண்ணுதற்கு உன்னுடைய உதட்டைத் தருவாயாக, போராடும வஞ்ச மாரன் - சண்டையிடுகின்ற கபடனுகிய மன்மதன், அஞ்சியோட - பயந்து ஓடும்படியாக, மஞ்சமீது இருந்து கூட - கட்டிலின்மேலிருந்து அணைவதற்கு, நீ நெஞ்சம் ஆர வந்து சேர - நீ மனத் திருப்தியாக வந்து சேர்வாயாக, எ - று.

10. ஆனுவி யாசர்புரிக் காதிபவி நாயகனே
மானே யழைததுவர மாட்டாயோ—கானருஞ்
சோலைகண்டு தேனேயுண்டு தூதுகொண்டு போனவண்டு
மாலைகண்ட தோமருண்ட தோ.

உரை :—கானரும் சோலைகண்டு - மணங்கமழும் பொழிலைப் பார்த்து, தூது கொண்டு போன வண்டு - நமக்காகத் தூது சொல்லப் போன வண்டானது, தேனேயுண்டு -....., மாலைகண்டதோ - மாலையில் அவரைப் பார்த்ததோ, மருண்டதோ - மயக்கமுற்றதோ தெரியவில்லை, ஆனுவியாசர் புரிக்கு ஆதிப - எப்போதும் வியாசர்புரிக்குத் தலைவனு யிருப்பவனுகிய, விநாயகனே - விநாயக வள்ளலே, மானே அழைததுவர மாட்டாயோ - தோழியே! நீ இங்கே கூட்டிக்கொண்டு வரமாட்டாயா ?, எ - று.

11. அன்னமே முன்னு ளணைந்து கலவிதந்த
மன்னன்வி நாயகன்மால் வாரானே—லென்னசுகம்
நாளெருத்தி யேதனித்து நாதனற்று மேதினிக்குள்
ளனிருக்கி றேனிதைச்சொ லாய்.

உரை:—அன்னமே - தூதுபோன தோழியே!, முன் நாள் அணைந்து கலவிதந்த மன்னன் விநாயகமால் வாரானேல் - முற்காலத்தில் வந்து

புணர்ந்துவிட்டுப் போன அரசனுடைய விநாயகப் பெரியோன் வாமம் போனால், என்ன சுகம் - என்ன இன்பம் ஏற்படும், (ஒருவிதமான இன்பமு மில்லை) மேதினிக்குள் - உலகத்தில் நாதன் அற்று தனித்து நானொருத்தி ஏன் இருக்கிறேன் - கைம்பெண்போல நானிருப்பதால் என்ன பயன், சொலாய் - இதற்குப் பதிலுரைப்பாயாக, எ - று.

12. மந்தமாரு தத்திலேறி மங்கைமார் நெருங்கமாரன்
வந்துமாத னத்தில்வாளி வைக்குமுனம்—அந்தமூள
சேடிபோடி தேடிவாடி சீலமார்வி நாயகன்கை
கூடியாடி யேகுலாவ வே.

உரை:—அந்தமூள சேடி - அழகு பொருந்திய தோழியே!, மந்தமாரு தத்தில் ஏறி, மெல்லிய தென்றற் காற்றின் இரதத்திலேறி, மங்கைமார் நெருங்க மாரன் - பெண்களாகிய சேனைகள் புடைசூழ வந்து - சேர்ந்து, மா தனத்தில் - பருத்த முலையில், வாளி வைக்குமுனம் - அம்பு செலுத்து முன்னமே, சீலமார் விநாயகன் - சிறந்த வொழுக்கமுடைய விநாயக வள்ளல், கைகூடி யாடியே குலவவே - ஆலிங்கனஞ் செய்து விளையாடிக் கலந்திருக்கும் வண்ணம், தேடி போடி வாடி - அவனைத் தேடிப்போய் அழைத்துக்கொண்டு வா, எ - று.

விநாயக முதலியார் கொடையை வியந்தது

13. பாளைக்கமுகுவயல்சூழ் வியாசர்பதிக்கிறைவன்
வாளைக்கயலைப்பொருவிழி மாதர்மயங்குமதன்
நாளைப்பினையென்றுசொல்லான் றமிழ்வலர்நற்பகியின்
வேளைக்குதவுந்துரையாம் விநாயகவிற்பனனே.

உரை:—பாளைக் கமுகு வயல்சூழ் வியாசர் பதிக்கு இறைவன் - நல்ல மடலுடைய கமுக மரங்கள் சூழ்ந்த வயல்கள் சுற்றியுள்ள வியாசர்புரிக்குத லைவன், வாளைக் கயலைப் பொருவிழி மாதர் மயங்கும் மதன் - வாளினையும் கயல்மீனையும் போன்ற கண்களையுடைய பெண்கள் மோகங் கொள்வதற்கு ஏதுவாகிய மன்மதன், தமிழ் வலர் நாளைப் பினையென்று சொல்லான் - தமிழ்ப் புலவர்களுக்கு நாளைக்கு வாருங்கள் அல்லது பிற்பாடு வாருங்க ளென்று சொல்லாமல் நல்ல பகை நேரத்தில் உணவு முதலியன கொடுத்து உதவக்கூடியவன் விநாயக வள்ளலாகிய கல்விமான் எனவறிக, எ - று.

14. முன்னுளராசர்கண்மேற்கவி வாணர்கண்முத்தமிழைச்
சொன்னலவர்தரும்வேலையைப் பார்ப்பரித்தொல்லுலகில்
இந்நாள்வியாசர்பதியான் விநாயகவேந்தனிதி
பன்னுளும்பாவலரைத்தேடி யீவுவன்பார்மின்களே.

உரை :—தொல்லுலகில் - பழமையான இந்த வுலகத்தில் முன்னுள் அரசர்கள்மேல் கவிவாணர்கள் முத்தமிழைச் சொன்னுல் - முற்காலத்தில் மன்னர்களைப் புகழ்ந்து முத்தமிழ்ப் புலவர்கள் பாடல் கூறினுல், அவர் தரும் வேலையைப் பார்ப்பர் - அவர் பரிசளிக்கும் சமயத்தை எதிர் பார்த் திருப்பார்கள், இக்காள் வியாசர் பதியான் விநாயக வேந்தன் - இக்காளில் வியாசர் பதிக்குத் தலைவனுகிய விநாயக வள்ளல், நிதிபன்னுளும் யாவ ரைத் தேடி யீகுவன் - செல்வத்தை எல்லா நாட்களிலும் புலவர்களைத் தேடி அவர்கள் சமயம் பார்த்துக் கொடுப்பான், பார்மின்களே - அவனு டைய பெருமையை நோக்குங்கள், எ - று

15. முகில்போன் முகங்கறுத் தீகின்ற மூடரைப் பாடியெந்த
னகமே சலித்தது நாவும்புண் ணுச்சு கண் ணுபிரன்கற்
பகமே நிகர்த்த கொடையா யெனைமுக பார்த்திரங்கித
தகையா யருள்செய் விநாயக பூபதயா நிதியே.

உரை :—கண்ணுயிரன் கற்பகமே நிகர்த்த கொடையாய் - இந்திரனது கற்பகத்தருபோன்ற ஈகையாளனே !, விநாயக பூப தயாநிதியே - விநாயக மன்னனென்னும் கருணைச் செல்வமே, முகில்போல் முகம் கறுத்து ஈகின்ற மூடரைப் பாடி - முகமானது மேகம்போற் கருமையடைந்து கொடுக்கின்ற அறிவிலாரைப் புகழ்ந்து பாடி, எந்தன் அகமே சலித்தது - என் மனஞ் சலிப்படைந்தது, நாவும் புண்ணுச்சு - என்னுடைய நாக்கும் நோபுற்றது, எனை முகம்பார்த்து இரங்கி தகையாய் அருள் செய் - என்னு டைய முகத்தை நோக்கி என்போரில் கிருபாகடாட்சம் வைத்துப் பரிசளிப் பாயாக, எ - று.

16. பாராளு மன்னவர் மன்னு நபாபுசபா சனவே
சோனது பெறுந்தீரா செழித்திடு மர்ச்சுனகு
மாரா சவுந்தரமாரா மயிலைநகர்க் குமரா
வீராவெவர்க்கு முதலாம் விநாயக விற்பனனே.

உரை :—பாராளும் மன்னர்கள் மன்னு - உலகத்தை யாளுகின்ற மன் னர்களுக்கு வேந்தனே !, நபாபு சபாசனவே சோனது பெறும் சோ - மகபதிய மன்னனுகிய நபாபு என்று என்றுப் புகழப்பட்ட தைரியசாலியே!, செழித்திடும் அருச்சுன குமரா - வளம் பொருந்திய அருச்சுன முதலியாரின் புதல்வரே!, சௌந்திரமாரா - அழகிய மன்மதனைப் போன்றவனே!, மயிலை நகர் குமாரா - திரு மயிலாப்பூரில் வீற்றிருக்கும் குமரன்போன்றவரே !, எவர்க்கும் முதலாம் வீரா - எல்லாரிலும் முதன்மை பெற்ற வீரனே !, விநாயக விற்பனனே - விநாயக னென்னும் பெயர் பூண்ட கல்விமானே !, எ - று.

துரிதகவி

திருமலைக்கொழுந்துக் கவிராயர்

பாடியது

விநாயக முதலியார் சத்திரத்தை வியந்து பாடியது

1. எள்ளுமலர் புரைநாசிகொண் மாதர்க்கெழின்மதனன்
விள்ளுகவியின்பயன்றேர் விநாயகவேள்புரியுந்
தெள்ளுமணிகள்பதித்தோங்குஞ் சத்திரஞ்சேர்குதிரைக்
கொள்ளுச்செலவினுக்கொவ்வா தரசர்கொளுஞ்செல்வமே.

உரை:—எள்ளு மலர் புரைநாசிகொள் மாதர்க்கு எழில் மாரன். எள்ளு மலரைப்போன்ற நாசியையுடைய (அல்லது) மூக்கினையுடைய அழகிய பெண்களுக்கு மன்மதன் போன்றவன், விள்ளு கவியின் பயன் தேர் விநாயக வேள் - புலவர்கள் சொல்லுகின்ற பாட்டின் நயத்தை யாராய்ந்து அறிகின்ற விநாயக வள்ளல், புரியும்-கட்டிய, தெள்ளுமணிகள் பதித்தோங்கும் - தூய இரத்தினங்க ளிழைக்கப்பெற்று விளங்கும், சத்திரம் சத்திரத்தில், சேர்குதிரைக் கொள்ளுச செலவினுக்கு ஒவ்வாது அரசர்கொளும் செல்வமே - போய்ச சேர்கின்ற குதிரைகளுக்கு வைக்கும் காணச் செலவுக்கு அரசர்கள் பெற்றுள்ள செல்வம் ஈடாகாது, எ - று.

2. தென்னனிகரருச் சனமால்பெறும்
விநாயகன் புரிசத்திரத்தைப்பார்க்க
இன்னலறப்பரமசிவன் முக்கணுற்றான்
முருகனுங் கண்ணீராறுற்றான்
அன்னமிசைவரு பிரமனென்கணுற்று
ணுயிரங்கணரி தாணுற்றான்
றன்னவனுகிய வாணனீராயிரங்க
ணுற்றான்வரும் நானே.

உரை :—தென்னன் நிகர் - பாண்டியனைப்போன்ற அருச்சுனப் பெரியோன் புதல்வராகிய - ....., விநாயகன் புதுச சத்திரத்தைப் பார்க்க - ....., இன்னலற - துன்பமில்லாதபடி, பரமசிவன் முக்கணுற்றார் - சிவபெருமான் மூன்று கண்களை யுடையவரானார், முருகனும் கண்ணாறு உற்றான்-குமரக்கடவுள் பன்னிரண்டு கண் உடையவரானார், அன்ன

மிசை வரும் பிரமன் என் கண்ணுற்றான் - அன்ன வாகனத்தையுடைய பிரமன் எட்டுக் கண்களே யுடையவனானான், அரி ஆயிரங் கண்ணுற்றான் - இந்திரன் ஆயிரங் கண்ணுடையவனானான், மன்னவனாகிய பாணன் ஈராயிரம் கண்ணுற்றான் - அரசனாகிய வாணாசுரன் இரண்டாயிரம் கண்ணுடையவனானான், (சத்திரத்தைப் பார்க்க) வரும் அந்நாளே - அந்த நாளே, எ - று.

3. தாட்டிகஞ்சேர் விநாயகமால் சத்திரத்துப்
பத்தரின்முன் சார்பீரங்கி
வேட்டொலிக்குப் பயந்துசிங்கங் காளியைச்
சேர்ந்தது விதியைமேவிற் றண்ணம்
காட்டிலுறு மான்சிவன் கைகலந்தது
மாயனையே திண்கலுழன் சேர்ந்தான்
மீட்டிய வேலவரிடஞ் சேர்ந்தன
தகர்மயூரமென நிகழ்ததலாமே.

உரை :—தாட்டிகஞ் சேர் விநாயக மால் சத்திரத்துப் பத்தரின் - வலிமையுள்ள விநாயகப் பெரியோனது சத்திரத்தின் முன்னுள்ள பத்தரின்மேற், சார் பீரங்கி வேட்டு ஒலிக்குப் பயந்து - அமைத்திருக்கின்ற பீரங்கி வெடியின் சத்தத்திற்கு அஞ்சி, சிங்கம் காளியைச சேர்ந்தது - சிங்கமானது காளியம்மனிடம் போய் வாகனமாக அமர்ந்தது, விதியை மேவிற்று அன்னம்-பிரமனைப் போயடைந்தது அன்னமானது, காட்டிலுறு மான் சிவன் கை கலந்தது - காட்டிலிருக்கின்ற மானானது சிவபெருமானுடைய கைத்தலத்திற் போய்ச சேர்ந்தது, மாயனையே திண் கலுழன் போய்ச சேர்ந்தான் - திருமாலிடம் வலிமையுள்ள கருடன் போயடைந்தான், மீட்டிய வேலவரிடம் சேர்ந்தன தகர் மயூரம் என நிகழ்ததலாமே - ஆடும் மயிலும் முருகப்பெருமானிடம் சேர்ந்தன என்று சொல்லலாம், எ - று.

4. காவிமலர்த் தாரழகன்பயிலை
விநாயகனென்னைக் கலந்தான் காமா
கூவியிடுமாங்குயிலைச் சுட்டருந்து
தென்றலைக்குவட்டிற் போக்கு
மேவியிடுபூவையுங்கைக் கருமையபு
மீனையும் விலைக்குவிற்றுப்போடி
தூவிவருமழன்பதியை வானகத்தோட்டளியை
மலர்தோட்டத் தோட்டே.

உரை :—காவிமலர்த் தார் அழகன் - குவளைப் பூமாலையைத் தரித்த அழகுடையவனாகிய, மயிலை விநாயகன் என்னைக் கலந்தான் - மயிலையில்

வதியும் விநாயக வள்ளல் என்னோடு சேர்ந்தான், (ஆதலால்) காமா - மன்மதனே!, கூவியிடும் மாங்குயிலே சட்டு எறிந்து - மாமரத்திலிருந்து கூவுகின்ற குயிலைப் புடைத்துத் தின்னு, தென்றலையைக் குவட்டில் போக்கு- தென்றற் காற்றை அம் மலையில் திரும்பிப் போகச் சொல்லு, மேவி இரு பூவையும் கைக் கரும்பையும் - விரும்பிச் செலுத்துகின்ற பூவாகிய அம்பை யும் கைவில்லாகிய கரும்பையும், மீனையும் - மீனக் கொடியையும், விலக்கு விற்றுப்போடு - ....., தாவி வரும் அழல் பதியை வானகத்து ஓட்டு - நெருப்பைச் சிதறி வருகின்ற சந்திரனை ஆகாயத்துள்ளே தூரத்து, அளியை மலர்த் தோட்டத்து ஓட்டு - வண்டைப் பூஞ்சோலைக்குத் தூரத்து வாயாக, எ - று.

5. கள்ளிலஞ்சோலை மலிமயிலை
விநாயகமகிபன் கங்கைகோத்ரன்
வள்ளியர்தம்மிற்சிறந்த கொடைகொடுக்கத்
துசங்கட்டி மழைபோற்கையால்
அள்ளியிறைத்ததிற் சிந்தும்பொன்னெடு
வெள்ளியுமிந்த வகிலந்தன்னில்
வெள்ளிமலைபொன்மலை யிங்கிவை யென்னப்
பெயர்மன்னி மிளிர்ந்தவன்றே.

உரை :—கள் இலகும் சோலை மலி மயிலை விநாயகன் மகிபன் - தேன் நிகழ்கின்ற பொழில்கள் மிகுந்த திருமயிலைப்பதியில் வாழும் விநாயக வேந்தன், கங்கை குலத்தவன் - கங்கை குலமாகிய வேளாள குலத்திற் பிறந்தவன், வள்ளியர் தம்மை சிறந்த கொடை கொடுக்கத் துசம்கட்டி - வள்ளல்களைப் போலச் சிறப்பான கொடை கொடுக்கக் கொடி கட்டி, மழைபோல் கையால் அள்ளி யிறைத்ததிற் - மேகம்போலக் கையினால் வாரிப் பொழிந்ததிற், சிந்தும் பொன்னெடு வெள்ளியும் - சிதறிய பொன் னும் வெள்ளியும், இந்த அகிலந்தன்னில் - இந்தப் பூவுலகத்தில், வெள்ளி மலை பொன்மலை இவை இவை என்ன - வெள்ளிமலை பொன்மலை யென்று சொல்லும்படியான, பெயர் மன்னி மிளிர்ந்த அன்றே - பெயர் பெற்று விளங்கியன, எ - று.

6. பனகமதிற்றுயில்வோனும்பங்கயத்தி லிருப்போனும்பரிவுகூர்ந்து
சனகர்முதன்முனிவர்தமக்குபதேசக் குரவனும்பைந்தருவிஞனும்
மனதமகிழ்திருமயிலைச்சத்திரத்தை வகுத்தகங்கைமரபோனை
கனகவிநாயகனெருவன்கற்ற கவிநாயகனைக்காத்தாள்வானே.

உரை :—பனகமதில் துயில்வோனும் - பாம்பணையிற் பள்ளிகொள்ளு கின்ற திருமாலும், பங்கயத்தி லிருப்போனும் - தாமரைப் பூவிலிருக்கும்

பிரமனும், பரிவு கூர்ந்து சனகர் முதல் முனிவர் தமக்கு உபதேசக் குரவனும் - கருணைமிகுந்து சனகாதி முனிவர்களுக்கு ஞானோபதேசஞ் செய்த ஆசாரியனுகிய சிவபெருமானும், பைந்தருவினனும் - புதுமையான கற்பக மரத்தினை யுடைய இந்திரனும், மனது மகிழ் திருமயிலைச சத்திரத்தை வகுத்த கங்கை மரபோனை - பார்த்து மனமகிழும்படியாகச் சத்திரங் கட்டி யமைத்த கங்கை குலத்தாராகிய, கனக விநாயகன் - செல்வம் மிகுந்த அல்லது பொன்னிறைந்த விநாயக வள்ளலாகிய ஒப்பற்றவன், கற்றக விநாயகனே காத்தாள்வானே - கல்விப் புலமையுடைய கவிராயரைக் காப்பாற்றி யருளுவான், எ - று.

7. பாத்திரமீதெனவறிந்துதருமயிலை விநாயகமால்பழுதிலாத
சாத்திரத்தாலுறமுடித்தசதத்திரத்தின் முன்புவிடுஞ்சரவாணங்கள்
நேத்திரத்தால்றியவொணுத்தூரமபோ யந்தரத்துநிறைந்துமாநட்
சேத்திரங்காண்மீனெனவிப் பூவுலகத்தார்புகலச்செறிந்தவன்றே.

உரை:—பாத்திரம் ஈது என அறிந்து தரு மயிலை விநாயகமால் - இது சற்பாத்திரமென்று அறிந்து ஈகை செய்கின்ற விநாயகப் பெரியோன், பழுதிலாத சாத்திரத்தால் உறமுடித்த சதத்திரத்தின் முன்பு - குற்றமில்லாத சாதத்திர முறைப்படி பொருததமாகக் கட்டிய சத்திரத்தின் எதிரில், விடும் சரவாணங்கள் - விடுகின்ற சரவாணங்களாகிய வெடிவகைகள், நேத்திரத்தால் அறியவொணுத் தூரம்போய அந்தரத்தில் நிறைந்து - கண்ணினுல் பார்க்க முடியாத தூரம சென்று ஆகாயத்தில் நிறைந்து, மாநட்சேத்திரங் காண் மீன் என - பெரிய நட்சத்திரங்களாகக் காணப்படுகின்ற வீண மீன்கள் இவையென்று சொல்லும்படியாக, செறிந்த அன்றே- நெருங்கி விளங்கின, எ - று

8. எத்திசையும் புகழ்மயிலை விநாயகவேள்
சத்திரத்தி னிசையத்தீற்றும்
முத்தினீறேற் றியசுண்ணக் காந்தியண்ட
முகடுமுட்டி முளரிவேதன்
சத்தியை யூர்தியைப் பரமன்கையிலைய
யேற்றினைமால் கைச்சங்கைக்கீழ்
அத்தியையிந் திரன்கரியை யப்புலியைத்
தவளநிற மாக்கிற்றன்றே.

உரை:—எத்திசையும் புகழ் மயிலை விநாயகவேள் சத்திரத்தின்- எல்லாத் திக்குகளிலும் கீர்த்தி பரவப்பெற்ற திருமயிலைப் பதியில் வாழும் விநாயக வள்ளலின் சத்திரத்திலே, இசைத்தீற்றும் - .....; முத்தினை நீற்றிச் சுண்ணக் காந்தி - பொருத்தமாகப் பூசப்பட்ட முத்துச சுண்ணும் பின் ஒளியானது, அண்ட முகடு முட்டி - அண்டத்தின் மேலிடத்திற்

போய்த் தட்டி, முளரி வேதன் சத்தியை - பிரமாவின் தேவியாகிய கலைமகளாகிய சத்தியையும், ஊர்தியை - அவனுடைய வாகனமாகிய அன்னத்தையும், பரமன் கையிலை - சிவபெருமானது கையிலமலையையும், ஏற்றினை - காளை வாகனத்தையும், மால் கை சங்கை - திருமால் கையிலுள்ள சங்கையும், கரீர அத்தியை - பாற்கடலில் தோன்றிய யானையையும், இந்திரன் கரியை - இந்திரனுடைய யானையையும், அம்புலியை - சந்திரனையும், தவளநிற மாக்கிற்றன்றே - வெண்ணிற முடையதாகச செய்தது, எ - று.

9. எல்லார்க்குங்கன்ன மிருந்திடலிவனைக்
கன்னனென விசையாதோர்ந்து
வில்லாருங்காரியெனின் வடுகனையுஞ்
சனியனையும் விளக்குங்கீர்த்திச்
செல்லாரும்பாரி யெனினில்லா
ளாங்காளத்தீச் சுட்டுக்கொல்லும்
பல்லாரும்புகழ் மயிலைவிநாயகனைத்
தியாகியெனப் பகரலாமே.

உரை:—எல்லார்க்குங் கன்ன மிருந்திட இவனைக் கன்னன் என விசையாது - எல்லார்க்கும் கன்ன மென்கின்ற முகத்தின் பாகமிருப்பதால் இவனைக் கன்னனென்று சொல்வது பொருந்தாது, ஓர்ந்து - ஆராய்ந்து, வில்லாரும் காரி எனின் - வில் வீரன் என்னும் காரியென்னும் வள்ளலின் பெயரை இவனுக்கு வைத்தால், வடுகனையும் சனியனையும் விளக்கும் - அச் சொல் வைரவரையும் சனீசுவரரையுங் குறித்தற் கூடும், கீர்த்திச சொல்லாரும் பாரி எனில் - புகழ் பெற்ற பாரி வள்ளலென்று இவனைக் கூறினால், இல்லாளாங் காளத்தீச சுட்டுக் கொல்லும் - பாரி யென்பது இல்லாளுக்குப் பெயரா யமைதலாலும் இல்லாதவளென்று பொருள் படுதலின் வறுமை யென்னும் விஷ நெருப்பானது தகித்து அழிக்கும், பல்லாரும் புகழ் மயிலை விநாயகனைத் தியாகி எனப் பகரலாமே - எல்லாருந் துதிக்கின்ற மயிலைப் பதியிலுள்ள விநாயக வள்ளலைக் கொடையாளன் இவனே என்ற அளவிற் சொல்லுதல் பொருத்தமாகும், எ - று.

10. வெயில்விரி சிந்தாமணிமன் னிருநிதியங்
தருதேனு விளங்குங்கீர்த்தி
பயிலுறுசேதக் காதிபாரி வெண்ணெய்வாழ்
சடையன் பகருங்காரி
அயிலமைதிண் கரத்தொருமா வெளிகன்னன்
காளத்தி யாதியாரும
மயிலைவிநாயகன் கொடைமுன் மகிழ்நரைக்
காண்புதுவதுலை மாதராரே.

உரை :—வெயில் வீரி சிந்தாமணி - ஒளி வீசுகின்ற சிந்தாமணி, மன் இரு நிதி - சங்கநிதி பதுமநிதி என்ற இரண்டு நிதிகளும், ஐந்தரு - தேவ லோகத்திலுள்ள ஐந்து கற்பக மரங்கள், தேனு - காமதேனு, விளங்கு சீர்த்தி பயிலொடு சேதக்காதி - புகழ் திகழ்கின்ற சேதக்காதி வள்ளல், பாரி - பாரி வள்ளல், வெண்ணெய் வாழ் சடையன் - திருவெண்ணெய் நல்லூரில் வாழ்ந்த சடையப்ப வள்ளல், காரி - செறப்பாகப் பேசப்படும் காரி வள்ளல், அயிலமை திண் கறுப்பு ஒரு மாவலி - வேல் பொருந்திய வலிய கையையுடைய ஒப்பற்ற மாவலிச சக்கரவர்த்தி, கன்னன் - கர்ணன், காளத்தியாதியாரும் - காளத்தியப்ப வள்ளலெல்லாரும், மயிலை விநாயகன் கொடு - மயிலைப்பதியில் வாழும் விநாயக வள்ளலின் ஈகைக்கு முன்பாக மகிழ்ந்தைக் காண் புது வதுவை மாதாரே - புதிதாகக் கலியாணஞ் செய்த கணவனைக் கண்ட பெண்டிர்போல நாணமடைவர், எ - று.

11. அரிகர்வி நாயகவேள் சத்திரத்தி
னளவுணர வணுமான்வேண்டும்
வரிசையுறு படத்தமைதே வரையடிய
வரைப்போற்ற வாணன்வேண்டும்
திரிவறுசித் திரமதனைக் கண்டுமகிழ்ந்
திடுதற்கிந் திரன்றான்வேண்டும்
உரிமைபெறு மதன்பெருமை சொலவந்தன்
வேண்டுமென வுரைக்கலாமே.

உரை :—அரி அரிகர் விநாயகவேள் சத்திரத்தின் அளவு உணர அணுமான் வேண்டும் - திருமாலைப்போன்ற விநாயக வள்ளலின் சத்திரத்தை யளந்து பார்ப்பதற்கு மிக நீண்ட வாலையுடைய அணுமான் தான் வர வேண்டும், வரிசையுறு படதத்தமை தேவரை யடியவரைப் போற்ற வாணன் வேண்டும் - அசசத்திரத்தில் வரிசையாக வைக்கப்பட்டுள்ள படங்களில் காணப்படும் தேவர்களையும் அடியார்களையும் வணங்குதற்கு இரண்டாயிரங் கையையுடைய வாணாசுரன் தான் வரவேண்டும், திரிவறு சித்திர மதனைக் கண்டு மகிழ்ந்திடுதற்கு இந்திரன்தான் வேண்டும் - மாற்ற மில்லாத ஓவியங்களைப் பார்த்து மகிழ்வதற்கு ஆயிரங் கண்ணுடைய இந்திரன்தான் வரவேண்டும், உரிமை பெறும் அதன் பெருமை சொல அனந்தன் வேண்டும் என உரைக்கலாமே - எல்லாருக்கும் உரியதான அச்சத்திரத்தின் பெருமையைச் சொல்வதற்கு ஆயிரம் நாவையுடைய ஆதிசேடன்தான் வரவேண்டும் என்று கூறலாம், எ - று.

12. மதுவசன னெங்கண்முத்து வீரப்பேந்த்ரன்
வளம்பாடிவந்தகவி வாணுபெற்ற
தெதுவென்ரு ளவன்றன்பா லாடையென்றே
னெனதுமகவினுக் கமுதமிடலாமென்ரூள்
பதுமமல ரடிமாதே கலியென்றேன்பின்
பாயாதோ விவ்வனத்திற் பயின்றதென்ரூள்
அதுவலவென் றேன்கட்டு வர்க்கமென்றே
னுவென்ரூளருந்தவப் பெண்டாவென்ரூளே.

உரை :—அருந்தவப்பெண் அரிய தவஞ்செய்த என் மனைவி, மது வசனன் எங்கள் முத்துவீரப் பேந்தரன் வளம்பாடி வந்த கவிவாணு. தேன்போன்ற மொழியையுடைய எங்களுடைய முத்துவீரப் பேந்திரன் செழிப்பைப்பற்றிப் பாடிப் பரிசுபெற்று வந்த பாவலரே!, பெற்றது எது என்ரூள் - பெற்ற பரிசு யாதென்று கேட்டாள், அவன் தன்பால் ஆடை என்றேன் - அவனிடத்தி லாடைபெற்று வந்ததாகச சொன்னேன், எனது மகவினுக்கு அமுதம் இடலாம் என்ரூள் - என்னுடைய பிள்ளைகு அந்தப் பாலாடையை யுணவாகக் கொடுக்கலா மென்ரூள், பதும மலரடி மாதே கலை என்றேன் - தாமரைப் பூப்போன்ற பாததையுடையவளே!, அது ஆடைகுப் பிரதி பதமாகிய கலையென்று சொன்னேன், பின் பாயாதோ இவ்வனத்தில் பயின்றது என்ரூள் - (கலை யென்பதை மானென்று எண்ணிகொண்டு) இக்காட்டிற் பழகிய மான் பாயாதோ என்று கேட்டாள், அது அல என்றேன் - நீ எண்ணும் மானல்ல வென்று சொன்னேன், கட்டுவர்க்கம் என்றேன் - அது உடுத்துகின்ற வகையைச சேர்த்தென்று சொன்னேன், ஆ என்ரூள் தா என்ரூளே - அப்படியா வென்று ஆசசரியப்பட்டு அதைத் தன்னிடம் கொடுக்கவேண்டுமென்று கேடடாள், எ - று.

13. வாளுருரும் விழியிரண்டு முத்திறைப்ப
மதியனலை வாரித்தூற்றத்
தேளுருரும விடமபோலக் குயில்கூவ
வன்றியுமென் சிறியாள்வாசம
வேளுரு மானக்கான் மெலியாளோ
மயலேயில் விளங்குங்கொன்றை
நாளுரு மலர்மருந்தை யென்றுவயித்
தியநாதர் நல்குவாரே.

உரை: —வாள் ஊரும் விழியிரண்டு முத்திறைப்ப - ஒளி வீசுகின்ற கண்களிரண்டும் கண்ணீரைச் சொரிய, மதியனலை வாரித் தூற்ற - சந்

நிரன் நெருப்பை வாரிச் சிதறவும், தேள் ஊரும் விடம்போல குயில் கூவ - தேளின் விஷம்போலக் குயிலானது ஒலிப்ப, அன்றியும் என் சிறியாள் வாசம் வேளூரும் ஆனக்கால் - அன்றியும் எனது சிறு பெண்ணின் இருக்கையில் மன்மதன் வந்து தங்கினால், மயல் நோயில் மெலியாயோ - மோகவியாதியினால் தளர்வடைய மாட்டாளோ, விளங்கும் கொன்றை நாளூரும் மலர் மருந்தை - பிரகாசமான கொன்றைமரத்தில் நாள்தோறும் பூக்கின்ற பூவாகிய மருந்தினை, வயிதனியாதர் கல்குவாரே - வயிதனியாதக் கடவுள் கொடுத்தருள்வாராக, எ - று.

14. விசுசடை மேலிருதோள் மீதரையி லணிவதெல்லாம்
வாசுகியென் றுரைத்ததல்லால் வாசுகிபென் றுரைத்தேனே
நேசமிகுந் தவர்போல நீட்டோஞ் செய்துபரி
யாசவுரை செயவேண்டா மருட்சவுந்த ரேசரே.

உரை :—அருள் சவுந்தரேசுவரே - கருணையுடைய சவுந்தரேசுவர கடவுளே!, வீசு சடைமேல் இருதோள்மீது அரையில் அணிவது எல்லாம் - அசைகின்ற சடையிலும் இருபுயங்கள் மேலும் அரையிலும் தரிப்பது எல்லாம், வாசுகி என்று உரைத்ததல்லாமல் வாசுகி என்று உரைதேனே - வாசுகியாகிய பாம்பின் இனமென்று சொன்னேனே யல்லாமல் வந்து சுகமா யிருவென்று சொல்லவில்லை, நேச மிகுந்தவர்போல் நிட்டோஞ் செய்து - காதல் மிகுதியாயுள்ளவர்போலக் கொடுஞ் செயல்கள் செய்து, பரியாச வுரை செயவேண்டாம் - கேலி முறைகள் செய்யவேண்டியதில்லை, எ - று.

முத்துராமலிங்க சேதுபதி

பாடியது

முருகன் துதி

1. மங்கையர்கொங் கைக்குடத்துள் வாடிச் சுருண்டுதுயில்
வெங்கட்பு ழையெயிற்றின் மேவுநெஞ்சே—கங்கை
யருளு மதிதுமடை யணிசெஞ் சடிலர்
குருகுகனை யென்றுங் குறி.

உரை :—மங்கையர் கொங்கைக் குடத்துள் சுருண்டு துயில் - பெண்களுடைய தனங்களாகிய குடத்துள் சுருண்டு தூண்டுகின்ற, வெங்கட்புழை எயிற்றின் - (பாம்புபோன்ற) வெம்மையான புழையுள் அமைந்த பல்லை

யுடைய, மேவு நெஞ்சே - பொருந்திய மனமே!, கங்கை அருகுமதி தும்பை அணி - கங்கையும் அருகும் சந்திரனும் தும்பையுமணிந்த, செஞ் சடிலர் - சிவந்த சடையையுடைய சிவபெருமானுக்கு, குரு குகனே என்றும் குறி - குருவாய் உபதேசஞ் செய்த இருதய குகையிலுறையும் முருகப்பெரு மானே எப்போதும் நினைத்திக்கொண்டிரு, எ - று.

இதுவுமது

2. செட்டியெனும் பேர்படைத்த சேவலவ நிற்குரிய
சட்டிகண்டே னெற்குமலர்த் தாடந்தாள்—கட்டிமணிச்
சுட்டிகட்டு மெட்டுளாள் சுரப்பெணுங் குறப்பெணுங்கை
தொட்டுமேவு மிட்டனேயி தோ.

உரை :—செட்டியெனும் பேர்படைத்த சேவலவ - செட்டி யென்ற பெயருடைய சேவற் கொடியை யுடையவனே!, நிற்குரிய சட்டி கண் டேன் - உமக்குப் பிறப்பாக உரியதான சஷ்டி தினத்திலுமைத தரிசித் தேன், கட்டுமணிச சுட்டி கட்டும் - உயர்ந்த வீரத்தினங்களாலாகிய நெற் றிச சுட்டியை யணிந்த, மெட்டுளான் - கெம்பீரமுடையவளாகிய, சுரப் பெணும் - தெய்வப் பெண்ணுகிய தேவயானையும், குறப்பெணும் - குறப் பெண்ணுகிய வள்ளியும், கைதொட்டு மேவும் இட்டனே (ஆகிய இருவரை யும்) கையிலுற்றமுவி விருப்பமா யிருப்பவனே!, இதோ எற்கு மலர்த்தாள் தந்து ஆள் - இப்பொழுதே உன்னுடைய பூப்போன்ற திருவடியைக கொடுத்தருளவேண்டும், எ - று.

ஊடலிலை வியத்தல்

3. கூடிச் சிவந்தவிதழ்க் கொவ்வையுண்டு மேவாதிவ்
வூடல் புரிவ துவப்பாமே—கூடற்
சுழிபொருந்தா தாயினுமித் தோகைமயில் செய்ய
விழிபொருந் தாதேயவ் விரா.

உரை :—இத் தோகை மயில் - கலாபத்தை யுடைய மயிலைப்போன்ற சாயலையுடைய இப்பெண்ணுவளோடு, கூடிச சிவந்த இதழ்க் கொவ்வை யுண்டு மேவாது சேர்ந்து சென்றிறமுள்ள கொவவைக்கனிபோன்ற உதட்டி லுள்ள நீரைக் குடித்துக் காதலிக்கப் பெறுது, இவ்வூடல் புரிவது உவப் பாமே - இசைறு சண்டை யல்லது புலவி நிகழ்த்தவது மனத்திற் குவந்ததே, கூடல் சுழிபொருந்தா தாயினும் - சுழிக்கின்ற கோடானது ஒன்று கூடாமற் போனலும் அல்லது கூடுவதற் கேதுவாகிய விதி ஒத்து வராவிடினும், அவ்விரா - அவ்விராத்திரியில், செய்ய விழி பொருந்தாதே - அவளுடைய சிவந்த கண்களானவை தூங்கமாட்டா, எ- று.

4. ஆபத்தை மாசை யருத்துமட மானுர்
தீபத்தை யுற்றபுழுச் சிந்தையே—நீபத்தைப்
பூண்டபணைத் தோளாணைப் போர்மயிலை யுற்றுனை
வெண்டவினை மாண்டு விடும்.

உரை :—ஆபத்தை மாசை அருத்து மடமானுர் - அபாயத்தையும் அழுக்கையும் அணுபவிக்கச செய்கிற இளமாதரெனும், தீபத்தை யுற்ற புழுச சிந்தையே - விளக்கில் விழுகின்ற புழுப்போன்ற மனமே !, நீபத்தைப் பூண்ட பணைத்தோளாணை - கடப்பமாலை யணிந்த பெரிய புயங்களையுடைய முருகனை, போர் மயிலை யுற்றுனை - போர் செய்த மயிலை வாகனமாகக் கொண்டவனை, வேண்ட வினை மாண்டுவிடும் - பிரார்த்தனை செய்தால் தீவினை யொழிந்துபோம், எ - று.

5. மாலையிட்ட நாதர் வரமாட்டோ மெனிலெனுட
லாலையிட்ட கன்னலினை யாகாதோ—வேலையிட்ட
மாகவணி வாகையனை மாகர்புகழ் வாசகனை
யாகமகிழ் வாக வழை.

உரை :—மாலையிட்ட நாதர் வரமாட்டோம் எனில் - என்னை மாலையிட்டு மணஞ்செய்த கணவன் என்னிடம் வர விசையாவிடில், உடல் ஆலையிட்ட கன்னல் இனையாகாதோ - என்னுடம்பானது ஆலையிலிட்ட கரும்பைப் போல நைந்து அழியாதோ, வேலையிட்ட - வேலாயுதத்தைப் பகைவர்கள் மேல் வீசிவென்ற, மாகவணி வாகையனை - திகசெங்கும் பரவிய வெற்றி யுடையவனை, மாகர் புகழ் வாசகனை - தேவர்கள் புகழ்கின்ற துதிப்பாடலுடையவனை, ஆகம் மகிழவாக அழை - என்னுளம் களிப்படையும் பொருட்டு அழைப்பாயாக, எ - று.

6. காமமெனுங் கள்ளுண்டு காயாது வேலர்திரு
நாமமெனுங் கள்ளுண்ண நாடுவாய்—காம
மலைத்தின்பங் காட்டுமற்றந் நாம நெஞ்சே
மிலைத்தின்பங் காட்டு மிக.

உரை:—நெஞ்சே - மனமே !, காமமெனும் கள்ளுண்டே காயாது - பெண்மயலென்னும் வெறி தரக்கூடியதை யேற்று உலர்ந்து போகாமல், வேலர்திரு நாமமெனும் கள்ளுண்ண நாடுவாய் - வேலாயுதப் பெருமானின் திருப்பெயராகிய தேனை யுண்ணுவதற்கு விருப்பங் கொள்ளுவாயாக, காமம் மலைத் தின்பங் காட்டும் - பெண் மோகமானது மலைபோன்ற துன்பத்தைத் தோற்றுவிக்கும், மற்று அந்நாமம் - அதற்கு வேறுகிய கடவுளுடைய திருப்பெயரின் உச்சரிப்பு, மிலைத்து இன்பம் காட்டும் மிக - அறிவுக்குப் பொருந்திய இன்பத்தை மிகுதியாகக் காண்பிக்கும், எ - று.

7. மாமலைவாழ் கந்தா மதனன் வெகுண்டெனுடன்
வாமலிவா னென்ன மயங்கியே—தேமலைச்சேர்
சொன்னவட்ட மாமுலையா தூதாக முன்னமுமோ
ரன்னம்விட் டாளன்னம்விட் டாளான்.

உரை :—மாமலை வாழ் கந்தா - பெரிய மலைக்குத் தலைவனாய் வதியும் குமரப் பெருமானே !, மதனன் வெகுண்டு என்னுடன் மலைவான் வா என்ன மயங்கியே-மன்மதன் கோபித்து என்னோடு சண்டைக்கு வா என்று அறை கூவுவதைக் கேட்டு மலைவடைந்து, தேமலை சேர் சொன்ன வட்டமா முலையாள் - பசலை படர்ந்த பொன்போன்ற பருத்த முலையை யுடையவள், தூதாக முன்னமும் ஓர் அன்னம் விட்டாள் - உன்னிடம் தூதாக முன்னமே ஓர் அன்னத்தை யனுப்பினாள், அன்னம் விட்டாள் - சோறுண்பதைத் தவிர்த்தாள், ஆள் - அவளை யாட்கொள்வாயாக !, எ - று.

8. இசையுற்றேன் மாயை யிருளறைக்குட் டுஞ்சு
வசையற்றே னின்னை மறவேன்—றிசையுற்ற
தோகைமயி லேறுகுக சூரகுல காலவினை
யேகமுன நீவருவை யே.

உரை :—திசையுற்ற தோகை மயில் ஏறு குக சூர குல கால - திக்கெங்குஞ் செல்லக்கூடிய பெரிய கலாபத்தையுடைய மயிலின்மீது ஏறி வருகின்ற இருதய குகையில் வசிப்பவனே !, சூரனுடைய குடும்பத்திற்கு யமன் போன்றவனே !, இசையுற்றேன் - உனை நான மணந்தேன், மாயை இருள் அறைக்குள் துஞ்சு வசையற்றேன் - மாயை யென்னும் இருட்டறைக்குள்ளே புல்லறிவோடு கிடக்கின்ற உணர்ச்சி நீங்கிப் பெற்றேன், நின்னை மறவேன் - உன்னை எப்போதும் நினைத்திருப்பேன், வினை ஏக முனம் நீ வருவையே - என்னுடைய வினை நீங்குவதற்கு முன்பாக நீ வந்து ஆட்கொள்வாயாக !, எ - று.

9. காடுதொறு மோடுவதென் காரணமோ நெஞ்சேநீ
வீடுபெறல் வீடலது வேறிலையே—தேடி நிதம்
வேலணிசெவ் வேளடியர் மெல்லியசெம போதனைய
காலணிதல் சென்னி கடன்.

உரை:—நெஞ்சே - மனமே !, காடுதொறும் ஓடுவதென் காரணமோ - நீ காடுகளெங்கும் போய்த் திரிவதற்குக் காரணமென்ன ? நீ வீடு பெறல் வீடலது வேறிலையே - நீ துன்பத்தினின்று நிவர்த்தி யடைய வேண்டுமென்றால் மேற்சத்தை நாடுவதின்றி வேறு வழியில்லையே, வேல் அணி செவவேள் அடியர் - செவ்விய வேலாயுதத்தை யுடைய முருகக் கடவுளின் தொண்டர்களுடைய, செம்போதனையை கால் - சிவந்த தாமரைபோன்ற

திருவடிகளே, நிதம் தேடி சென்னி அணிதல் கடன் - நாள்தோறும் தேடி சிரமேற் கொள்ளுதல் உன் கடமையாகும், எ - று.

10. திருவே ரகங்கொடுமூர் தென்சி ரலைவாய்
திருவாவி னன்குடிசெங் கோடு—திருமயிலந்
தென்பரங்குன் றுதிருத் தணிகை சோணகிரி
யன்பரகங் குகன்வீ டாம்.

உரை:—திருவேரகம் கொடுமூர் தென் சிரலைவாய் - சுவாமிமலை, கொடுங்குன்றம், அழகிய திருச்செந்தூர், திருவாவினன்குடி - (பழநிமலை யடிவாரத்திலிருக்கும்) திருவாவினன்குடி, செங்கோடு - திருசெங்கோடு, திருமயிலம் - அழகிய மயில்மலை, தென்பரங்குன்று - திருப்பரங்குன்றம், திருத்தணிகை -....., சோணகிரி - திருவண்ணாமலை, அன்பர் அகம்- அன்பருடைய உள்ளமும், குகன் வீடாம் - குகப்பெருமான் தங்கு மிடங்க ளாம், (தலங்களாம்), எ - று.

11. செந்நி லுறைந்திலகு செவ்வேட் டுதிக்கின்வினை
வெந்துகெட வியற்றுமவே லொன்றே—வந்தழலும்
பந்தனத்தைப் போக்குமப லத்தைப் தேக்குமுற்சொல்
கந்தனத்தை சொந்தமுறுங் காண்.

உரை :—செந்நி லுறைந்து இலகு செவ்வேள் துதிக்கின் - செந்நிலில் வீற்றிருந்து விளங்குகின்ற முருகப்பெருமானை வாழ்த்தினால், வேலொன்றே வினை வெந்து கெட இயற்றும் - அவனுடைய வேலாயுதமொன்றே கருமங் களை நீறுசெய்யும்படி செய்யும், வந்தழலும் பந்தனத்தைப் போக்கும் - பிறவி யெடுத்துத் திரிவதற்கு ஏதுவாகிய பாசபந்தத்தைத தொலைக்கும் பலகலை யும் தேக்கும் - பல வித்தைகளையும் நிறையும்படிச செயயும், முற்சொல் கந்தன் அத்தை சொந்தம் உறும் - முன் சொல்லப்பட்ட குமரப் பெருமா னின் மாமியாகிய திருமகள் உரிமையாய்ப் பயனளிப்பள், காண் அசை, எ - று.

12. செந்தமிழால் யாணுரைக்கும் தேனருந்த நின்செவிக்குச்
சொந்தமிலை யாவதிலுன் சொத்துக்கு—வந்தசெல
வேதுகலப மயிலேறு முருகாவிதனை
யோது விரைவாக வுவந்து.

உரை:—கலபமயில் ஏறு முருகா - தோகை மயிலை வாகனமாகக் கொண்ட குமரப்பெருமானே!, செந்தமிழால் யாணுரைக்கும் தேன் அருந்த நின் செவிக்குச சொந்தமிலையா - செவ்விய தமிழில் யாளியற்றுகின்ற பாடலாகிய தேனை யுண்பதற்கு உன்னுடைய திருசசெவிக்கு உரிமை யில்லையா ?, அதிலுன் சொத்துக்கு வந்த செலவேது - அப்படிசசெய்வதால்

உன் பொருளுக்கு ஏற்பட்ட செலவு யாது ?, இதனை உவர்த்து விரைவாக ஓது -இதனைத் தயவுசெய்து விரைவாகச் சொல்வாயாக !, எ - று.

13. வள்ளிமானே யெம்மரபி லுதித்துத் தினைமா
வள்ளிக்கு கற்களித்த வண்ணியே—யுள்ளபடி
யெங்கடுயரை யையற்கியா ருரைப்பார் நின்னையன்றி
மங்கையே காப்பாய் மகிழ்ந்து.

உரை:—வள்ளிமானே எம் மரபிலுதித்து - வள்ளி நாயகியே எங்கள் குலத்திற் றோன்றி, தினைமா அள்ளி குகற்கு அளித்த அன்னையே - தினை மாவைக் கையிலெடுத்து முருகப் பெருமானுக்கு வாயிலூட்டிய தாயே !, நின்னையன்றி - உன்னைத்தவிர, உள்ளபடி எங்கள் துயரை ஐயர்க்கு யார் உரைப்பர் - எங்கள் தின்பத்தைப் பெருமானுக்கு உண்மையாக எடுத்துச சொல்கின்றவர்கள் யார், மங்கையே காப்பாய் மகிழ்ந்து - அன்னையே நீ எங்களைச் சந்தோஷத்துடன் காப்பாற்றி யருளுவாயாக !, எ - று.

சதாவதானம்
சரவணப்பெருமாட் கவிராயர்
பாடியது

முத்துராமலிங்க சேதுபதியவர்கள் விஞக்கட்கு
சதாவதானம் சரவணப்பெருமாட் கவிராயர் விடைகள்

1. பூவயனும் பூவிலுண்டாம் புன்மரங்கள் வேறுறிற
மேவாதொன் றுபதென்ன விள்ளுவீர்—தாவசர
மெய்யறிவொன ருனமையால் வேறுறிற மின்றுசர
மையறிவாற் பன்னிற மதாம.

உரை:—பூ அயனும் - பூவிலிருக்கும் பிரமனும், பூவிலுண்டாம் புன் மரங்கள் - உலகத்திலே இருக்கின்ற புல் மரங்கள் முதலியவைகள், வேறு நிறம் மேவாது ஒன்றுயது என்ன விள்ளுவீர் - ஒரே பசசை நிறந்தவிர வேறு நிறங்கள் பொருந்தாமைக்கு காரணம் யாதென்று கூறுவீராக ! தாவசர மெய்யறிவொன் ருனமையால்-வளரக்கூடிய நிலைப் பொருளாகிய தாவரம் ஆறறிவில் ஓரறிவுடைய உடம்புடைமையால், வேறு நிறமின்று - ஒரே நிறந்தான் அதற்குண்டு, சரம் ஐயறிவால் பன்னிறமதாம் - இயங்கும் உயிர்கள் ஐந்தறிவுடைமையால் அவற்றின் உடம்புகள் பல நிறமுடையன வாம், எ - று.

2. நஞ்சுடைய கண்டத்து நாதன் முடிமீது
குஞ்சுமதி யணிந்து கொள்வானே—னஞ்சாமன்
மூத்தபிள்ளை யன்றுமுறித்த கொம்பைக் கேட்குமென்று
சேர்த்துவைத்துக் கொண்ட திறம்.

உரை :—நஞ்சுடைய கண்டத்து நாதன் முடிமீது - விடத்தைக் கழுத்திலுடைய சிவபெருமான் தமது தலையில், குஞ்சுமதி அணிந்து கொள்வானேன் - இளம் பிறையைத் தரித்துக்கொள்வதற்குக் காரண மென்ன, அஞ்சாமல் மூத்தபிள்ளை அன்று முறித்த கொம்பைக் கேட்கு மென்று - தைரியமாக விநாயகக்கடவுள் பிறையைத் தான் முறித்த தந்த மென்றெண்ணி அதனைக் கேட்கக்கூடுமென்று கருதி, சேர்த்து வைத்துக் கொண்ட திறம் - அதனைச சடைக்குள் மறைத்து வைத்துக்கொண்ட வகையா மென்க, எ - று.

3. பாரிலின்ப துன்பம் படரவிதித் தானே
வாரிசத்தான் யாதுகவி வல்லவா—வோர்தொழுவிற்
பல்லாவுட் கன்றுதன்ருய் பார்த்தணுகல் போர்புவியி
லெல்லாருஞ் செய்வினையா லே.

உரை:—வாரிசத்தான் பாரில் இன்ப துன்பம் படர விதித்தானே - தாமரைப் பூவிலுள்ள அயன் உலகத்தில் இன்ப துன்பங்களை யனுபவிக்கும் படி வகுத்திருக்கிறான், யாது கவி வல்லவா - அது எப்படி பாவலனே சொல்வாயாக, ஓர் தொழுவில் - ஓர் மாட்டுமந்தையிலுள்ள, பல்லாவுள் - பல பசுக்களுள், கன்று தன் தாய் பாத்து அணுகல்போல் - கன்றுக்குட்டி தன் தாயைக கண்டுபிடித்தது சோவதுபோல, புவியில் எல்லாரும் செய் வினையாலே - உலகத்தில எல்லாருஞ் செயகின்ற வினைகள் அவரவரைப் போய்ச சேர்கின்ற காரணத்தாலே அவற்றிற்குரிய பலனை விதித்தான், எ - று.

4. வரையழுத்துஞ் சேடனெடு மாருதம்போர் செய்தாற்
றரையைச்சுமந் தவர்யார் சாற்றுய்—விரைமலர்த்தா
ரேந்துபுயத் துலகமேந்து நின்போ னின்குலத்து
வேந்தர்சும வாதுவி டார்.

உரை :—வரையழுத்துஞ் சேடனெடு - மலைகள் அழுந்தவும் தாங்கு கின்ற ஆதிசேடனோடு, மாருதம் போர செய்தால் - வாயுவானது சண்டை யிட்டால், தரையைச சுமந்தவர யார சாற்றுய - உலகத்தைத தாங்குபவர் யாரென்று சொல்வாய, விரை மலர்த்தார் ஏந்து புயத்து உலகம் ஏந்து நின்போல் - வாசனை பொருந்திய மலர மாலையை யணிந்த தோள்களி னாலே உலகத்தைத் தாங்குகின்ற உன்னைப்போல, நின் குலத்து வேந்தர்

சுமவாது விடார் - நின் மாபிலுள்ள அரசர்கள் உலகைத் தாங்காதிருக்க மாட்டார்கள், எ - று.

5. விதுகண்டு கூம்பாத மென்கமல மூண்டோ
விதுகண்டு சொல்கவிதைக் கேந்தான்—முதிருமெழின்
மாதர் வதன மதிகண்டு மலர்பருவப்
போதிரண் டுண்டாகம புடைத்து.

உரை :—விதுகண்டு கூம்பாத மென்கமலம் உண்டோ - சந்திரனைக் கண்டு குவியாத மெல்லிய தாமரையுண்டா?, கவிதைக்கு ஏந்தால் இது கண்டு சொல் - பாவிற்குத தலைவனே! இது இன்னதென்று தெரிந்து கூறுவாயாக!, முதிரும் எழில் மாதர் வதன மதிகண்டு - அழகு மிகுந்த பெண்களுடைய முகமாகிய சந்திரனைக் கண்டு, ஆகம் புடைத்தது - உடல் பூரித்தது, மலர் பருவப்போது இரண்டுண்டு - வீரியும் தன்மைபுடைய மலர்களாகிய கண்களிரண்டு உள்ளன எ - று.

6. தஞ்சுவரை மூட்டைதுளைக் கச்சகங் கொடுக்கும
பஞ்சணைய மோதுவதென் பாவலவா—வஞ்சகரைச்
சேர்ந்தவரு மன்னவர்தந் தெண்டனைக்கு ளாவதுபோற்
சார்ந்ததனல் வந்தவினை தான்.

உரை :—தஞ்சுவரை மூட்டை துளைக்க - தாங்குகின்றவர்களை மூட்டைப் பூசியானது கடித்தித தூளாகவும், சுகந கொடுக்கும் பஞ்சணையை மோதுவதென் பாவலவா - சுகந் தருகின்ற பஞ்சு மெத்தையை அடிப்பதற்குக் காரணமென்ன? கவிஞனே!, வஞ்சகரைச் சேர்ந்தவரும் அன்னவர் தம் தண்டனைக்குள் ஆவதுபோல - கபடமுடையவர்களைச சேர்ந்தவர்களும் அவர்களைப்போலத தண்டனைக்குள்ளாவதை யொப்ப, சார்ந்ததனல் வந்த வினைதான் - மூட்டையைச சார்ந்ததனல் படுக்கைக்கு வந்த தீவினையாகும், எ - று.

7. வாய்ந்தசிவ ஞானபுரி வாழ்முருகன் சந்நிதியிற்
சேர்ந்தமனங் கண்கை திரும்பாதெ—ஞய்ந்தநால்
வேதமுங்கா ணாப்பதத்தை விட்டுவரு மோநூன்தேன்
போதகலு மோவறுகாற் புள்.

உரை :—வாய்ந்த சிவஞான புரிவாழ முருகன் சந்நிதியில் - நலங்கள் பொருந்திய சிவஞானபுரியில் வீற்றிருக்கும் குமரப்பெருமான் சந்நிதானத்தில் சேர்ந்த மனம் கண் கை திரும்பாதென் - போய்த் தரிசித்த மனமும் கண்ணும் கையும் அவ்விடத்தைவிட்டு மீளாமைகளுக் காரணம் யாது?, ஆய்ந்த நால்வேதமும் காணாப் பதத்தைவிட்டு வருமோ - ஆராய்ந்த நால் வகை வாக்குகளும் கண்ணுக்குப் புலனாகாத நாததத்துவத்தைவிட்டு

நீங்குமோ, அறுகால் புள் நறுந்தேன் போதகலுமோ - ஆறு காலுடைய வண்டானது தேன் மனங்கமழும் பூவைவிட்டு நீங்குமா? (நீங்காது), எ - று.

8. வாய்சிவந்து மெய்பசந்த வாலிமண வாளனெரு
வேய்பெறவந் தானதென்ன வில்லுவாய்—தூயரெலா
மன்னேபிதா வில்லாவனுதி யென்பரப் பழிச்சொற்
றன்னைமரு வாதிருக்கத் தான்.

உரை :—வாய் சிவந்து மெய் பசந்த வாலை மணவாளன் - சிவந்த வாயும் பச்சைநிற வுடம்புமுடைய கன்னியாகிய உமையம்மையின் கணவனாகிய சிவபெருமான், ஒரு வேய்பெற வந்தான - ஒரு மூங்கிலிலுதித்தான், அது என்ன வில்லுவாய் - அதற்குக் காரணம் யாதென்று சொலலுவாய், தூயரெலாம் - பரிசுத்த மனமுடைய எல்லாரும், அன்னே பிதா இல்லாத அனுதி என்பா - தாய் தந்தை யில்லாத அனுதி மூதல்வனென்று அவனைக கூறுவார்கள், அப் பழிசசொல் தன்னை மருவாது இருக்கத்தான் - அந்த இழிசசிச சொல்லானது தன்னைப் பொருந்தாதிருகத்தான் மூங்கிலிலே உதித்தானென்க, எ - று.

9. பொறியுலவு பாலவிழப் புத்தே ளொருநாட்
சிறுவனைத்தின் ரூனதென்ன செப்பீர்—செறியலைவாய்
நஞ்சுண்டு பித்தேறி காடுமன்னந் தானறியா
தஞ்சதலை யாகிலென் செய்வான்.

உரை :—பொறியுலவு பால விழிப்புத்தேன் - தீபபொறி பறகின்ற நெற்றிக கண்ணையுடைய கடவுள், ஒரு நாள் சிறுவனைத தின்ரூன அது என்ன செப்பீர் - ஒருதினம் பிள்ளைக கறியைத தின்ரூன் அதற்குக காரணம் யாதென்று சொல்லுக, செறியலைவாய் நஞ்சுண்டு பித்தேறி - செருங்கிய அலைகளையுடைய பாற்கடலி லெழுந்த விடததையுண்டு பைதியம் பிடித்து, அன்னம் தானறியாது அஞ்சுதலையாகில் என் செயவான் - சோறு அறியாது (அன்ன வடிவான பிரமனைற் காணப்படாது) பயம் எற்படுமானால் (அஞ்சுதலையை யுடையவனானால்) அவன் என்ன செய்யக்கூடும், எ - று.

10. போதமெவர்க் கும்புகன் ஞானசோதி யென்போன்
மாதுமயல் கொண்டுடலம் வாடியதென்—ஞாதரவாந்
தானசைந்தல் லாலணுவுஞ் சற்றசையா போகமுயி
ரானவைக்கெ லாம்விளைவிப் பான்.

உரை :—போத மெவர்க்கும் புகல் ஞான சோதி என்போன் ஞானத்தை யெல்லார்க்கும் அறிவித்தருளுகின்ற பேரரிவும் ஒளி வடிவு மானவன், மாது மயல்கொண்டு உடலம் வாடியதென் - பெண் மோகங கொண்டு மேனி தளர்ந்த காரணம் யாது?, ஆதரவாம் தான் அசைந்து அல்

லால் அணுவும் சற்று அசையா - எல்லாவற்றிற்கும் ஆதாரமான தான் அசையாமற் போனால் ஒரு சிறு அணுவும் அசையாது, (ஆதலால்) உயிராளவைக் கொலாம் போகம் விளைவிப்பான் - எல்லா வுயிர்களுக்கும் போகத்தை யூட்டுவிப்பதற்காகத் தான் போகியாய் நடிப்பனென்க, எ - று.

11. வீடேற வுன்னுமன்பர் மெய்யில்வள ரீசனெரு
மாடேறு நீதி வழுத்துவீர்—நாடோறென்
கண்மலரைத் தாங்குமிரு காண்மலரைத் தாங்குவனென்
றெண்ணிமால் வேண்டுகையா லே.

உரை :—வீடு ஏற உன்னும் அன்பா மெய்யில் வளர ஈசனெரு மாடு ஏறும் நீதி வழுத்துவீர் - மோட்சமடைய வெண்ணுகின்ற அன்பர்களுடைய மெயயுணர்ச்சியிற் றிகழ்கின்ற இறைவன் காளை வாகனத்தி லேறுவதற் குரிய நியாயத்தைச சொல்லுவீராக!, நாடோறு - பல நாட்கள்தோறும், என் கண்மலரைத் தாங்கும் இருகால் மலரைத் தாங்குவன் - என்னுடைய கண்ணை அருசனை மலராக ஏற்றுக்கொண்ட இரண்டு திருவடிகளையும் காளையாக நான் தாங்குவேனென்று, எண்ணி மால் வேண்டுகையினே - தியானித்துத் திருமாலானவர் பிராததனை செயது கொண்டபடியினலே காளைவாகனம் ஏறினரென்க, எ - று.

12. விண்மதிக்கு மேனிமெலிவு கறைவளர்ச்சி
நண்ணலுடன் பாமபடுத்த நாட்டமெவன்—எண்ணு
தடாதனசெய் தாரெவரா னுலுமதனலே
படாதன படாரோ பரிந்து.

உரை :—விண்மதிக்கு மேனி மெலிவு கறை வளர்சசி நணணலுடன - ஆகாயத்திலுள்ள சந்திரனுக்குத தேய்தல் வளர்தல் களங்கம் முதலிய குற்றங்கள அமைந்திருப்பதுடன, பாமபு அடுதத நாட்டம எவன் - பாம்பு அதனை விழுங்குவதற்காக நெருங்கின நோக்கம் யாது?, எண்ணது அடாதன செய்தார - ஆலோசியாமல் பொருத்த மில்லாத தவறுகளச செய்தவர்கள், எவரானலும் - யாராயிருந்தாலும், அதனலே பரிந்து படாதன படாரோ - அதனலே வருந்திப் படமுடியாத துயரங்களை யனுபவிக்க மாட்டாரோ?, எ - று.

13. தேங்கனி தாம்பூலந் தினமபடைப்பார் தெய்வத்திற்
காங்கதனை யுண்டகுறி யாதுசொல்வீ—ரோங்குதெய்வ
மெய்யுருக்கண் டார்துண்ட மென்குறியுங் காண்பதன்றி
வையமதில் யார்காண்ப வர்.

உரை :—தெய்வத்திற்கு தேங்கனி தாம்பூலம் தினம் படைப்பார் - கடவுளுக்குத தேங்காய் பழம் வெற்றிலை பாக்குத தினந்தோறும் நிவே

நிப்பார்க்கு, ஆங்கு அதனை உண்ட குறியாது சொல்வீர்-தெய்வம் அவற்றை யேற்றுக்கொண்டதற்கு அடையாளம் யாது சொல்வீர், ஒங்கு தெய்வ மெய் யுருக் கண்டார் - சிறந்த தெய்வத்தின் உண்மையான திருமேனியைக் காணப்பெற்றவர்கள், தண்டமென் குறியும் காண்பதன்றி - ஏற்றுக் கொண்ட தெய்வத்தின் மட்பமான திருமுகக் குறிப்பை யறிவாரே யன்றி, வையமதில் யார் காண்பவர் - உலகத்தில் பிற யார் அதனைக் காண முடியும், எ - று.

14. வீடடுத்தோர்க் கீயும் விமலனை ரண்ரெருநா
ளோடெடுத்துப் பிச்சையெடுத் துண்டதென்னே—வீடின்
பத்தினிமார் கற்பழித்த பாவமழிந்தோ ருயர்ந்தோ [முனி
ரெத்தகைய ரேனும்விடா தே.

உரை :—வீடு அடுத்தோர்க்கு ஈயும் விமலனை - தன்னை யடுத்தவர் களுக்கு மோட்சத்தைக் கொடுக்கவல்ல குற்றமற்ற பெருமான், அன்று ஒரு நாள் ஓடு எடுத்துப் பிசசை எடுத்து உண்டதென்னே - முன்னொரு நாள் தலையோட்டில் ஐயமேற்றுண்ட காரணமேது?, வீடில் முனி பத்தினிமார் கற்பழித்த பாவம - அழிதலில்லாத தாருகாவனத்து முனிவர்களுடைய மனைவியர்கள் கற்பை யிழக்கும் பொருட்டுச செய்த குற்றம், இழிந்தோர் உயர்ந்தோர் எத்தகையரேனும் விடாதே - (அப்படிப்பட்ட பாவம) தாழ்ந் தவரா யிருந்தாலும் உயர்ந்தவரா யிருந்தாலும் எப்படிப்பட்டவரையும் பற்றித் தொடராமல் நீங்காது, எ - று.

15. இருசுடரொ ருங்கெதிர்க்கி னெய்துமிரு ளென்னே
மருவுமுரை நிச்சயமா மன்ரே—விரவியுட
றண்ணெயராத் தீண்டுஞ்சமை யத்திருண்மி குக்கு
மன்னதறி யாருலகில் யார்.

உரை :—இருசுடர் ஒருகுக எதிர்க்கின் எய்தும் இருள் என்னே மரு வும் - சந்திரனும் சூரியனும் ஒருங்கு சேர்ந்து எதிர்த்தால் அவர்களுக்கு முன் இருளானது எங்கிலேயடியும், உரை நிசசயமாம அன்ரே - இருள் ஒழிந்துபோகுமென்ற வாக்கியமானது உறுதியல்லவா? இரவியுடன் தன்னை அராத் தீண்டும் சமயத்து இருள் மிகுகும் - சூரியனைப்போல மதியையும் பாம்பு மறைக்குஞ் சமயத்தில் இருளதிகப்படும், அன்னது அறி யார் உலகில் யார் - அதை யுலகத்தில் தெரியாதவர்கள் யாரிருகிறார்கள், எ - று

16. வரங்களுயிர்க் கீந்தளிக்கு மால்வால் படைத்த
சுரங்குதுணைக் கொண்ட சூறிப்பென்—னுரங்கொண்ட
வல்லவர்க்குப் புல்லும் வலியபடை யென்பாரச்
சொல்வலி காக்கைகக்கு மதித்து.

உரை:—வரங்கள் உயிர்க்கு ஈந்து அளிக்கும் மால் - எல்லா வுயிர்களுக்கும் வரங்களைக் கொடுத்து அருள்செய்கின்ற திருமால், வால் படைத்த குரங்கு துணைக்கொண்ட குறிப்பு என் - வாலுடைய குரங்குகளைத் தனக்குத் துணையாகக் கொண்ட காரணம் யாது ?, உரம் கொண்ட வல்லவர்க்குப் புல்லும் வலிய படை என்பார் திறமையுடைய வல்லவனுக்கு அற்பமான புல்லும் ஓர் ஆயுதமாகும் என்பவருடைய, சொல்வலி காகைக்கு மறித்து - சொல்லின் திறத்தைப் பொருட்படுத்திக் காப்பாற்றுதற்காக வென்க, எ - று.

17. ஆரமணி வேணியர ளர்கிளி யேறு
மாரனைக்கண் ணுலெரித்த வாறென்னே—யாரழலில்
வீழ்ந்தா ருய்வாரோ விளக்கில்விழும் விட்டிலுயிர்
வாழ்ந்ததுண்டோ தேவைமன்ன வா.

உரை:—ஆரம் அணி வேணி அரளுர்-முத்துமாலையைத் தரித்த சடைமுடியையுடைய சிவபெருமான், கிளி ஏறு மாரனைக் கண்ணுல் எரித்த வாறு என்னே-கிளியை வாகனமாகவுடைய மன்மதனை நெற்றிக் கண்ணுல் எரித்த காரணம் யாது ?, தேவை மன்னவா - இராமநாதபுரத்து வேந்தனே !, ஆர் அழலில் வீழ்ந்தார் உய்வரோ - நிறைந்த நெருப்பில் வீழ்ந்தவர்கள் பிழைப்பார்களா ? விளக்கில் விழும் விட்டில் உயிர் வாழ்ந்ததுண்டோ - விளக்கில் விழுகின்ற விட்டில் பிழைத்த துண்டா ?, எ - று.

18. வல்லபெரி யோரும்வனி தையர்தஞ் செவ்விதழி
லில்லையெச்சி லென்பது வென்புலவீர்—மெல்லதர
பானதைத்தே தேனென்றும பாலென்றுங் கூறுமபி
மானத்தான் மாலான் மறித்து.

உரை:—புலவீர் - புலவரே !, வலிய பெரியோரும் - பெரியோர்கள் பலரும், வனிதையர் தம் செவ இதழில் இல்லை எச்சில் என்பார் - பெண களுடைய சிவந்த உதட்டு நீர்க்கு எசில் இடையாதென்பார்கள், என் - அதற்கு என்ன காரணம் ?, மெல் அதர பானத்தை - மென்மையான உதட்டு நீர் பருகுவதை தேனென்றும் பாலென்றும் கூறுமபிமானத்தால்-பாலுந் தேனுங் கலந்ததாகக் கூறுகின்ற புகழ்ச்சி காரணமாகவும், மாலால் மறிதது - மயக்கத்தால் நோக்குதல் காரணமாகவும் அவ்வாறுரைப்பர் எ - று.

19. துவரம் பருப்பிதழ்கண் டுயரகை வண்ணங்
கவரம பருப்பதக் கொங்கைகம்மான்—புவிசூழ்
கடலைச் சுண்டற்கயில் கொள்கந்தன் புயஞ்சேர்
மடலைக்கொள் கூந்தல்வள்ளி மான்.

உரை:—துவர் இதழ் - பவளம்போன்ற இதழும், அம்பு கண் - அம்பு போன்ற கண்ணும், அருப்பு ஞாய முலை - அரும்பு போன்ற சுத்தமான பல்லும், வண்ணம் கவர் - நல்ல பொன்னிறத்தைக் கவர்ந்த, அம் பருப்பத கொங்கைமான் - அழகிய மலைபோன்ற தனங்களுமுடைய பெண் (யாரெனில்), புவிசூழ் கடலைச சுண்டற்கு, உலகத்தைச சூழ்ந்த கடலை வற்றச் செய்வதற்கு, அயில் கொள் கந்தன் - வேல் வீசிய குமாரப்பெருமானுடைய, புயம் சேர் - தோள்களைத் தழுவுகின்ற, மடலைக் கொள் கூந்தல்-தாழம்பூத் தரித்த குழலையுடைய, வள்ளிமான் - வள்ளிநாயகி யம்மையாவர், எ - று.

20. தன்றம்பி பெண்டிரண்டைச் சார்ந்திருந்தான் றக்கிமுகன்
மன்றலின்னஞ் செய்யாதென் மன்னவரா—வென்று
மிருகொம் புடையானை யில்லையென்றூர் சொன்னு
மொருகொம்பு கையிலுள தே.

உரை:—மன்னவரா - வேந்தனே !, தந்திமுகன் தம்பி பெண்டிரண்டைச சார்ந்திருந்தான் யானைமுக கடவுளின் தம்பியாகிய முருகப்பிரான் இரண்டு பெண்களை மணந்த பின்னும், மன்றல் இனனஞ் செய்யாதென் - இன்னும் ஆனைமுகக் கடவுள் கலியாணஞ் செய்யாதிருப்பதற்குக் காரண மென்ன ?, என்றும் இரு கொம்புடையானை இலலையென்று யார் சொன்னார் - எப்போதும் இரு கொம்புடைய விநாயகரைப் பெண்ணில்லாதவ ரென்று யார் கூற முடியும்?, (கொம்பு என்பது பெணணென்று பொருள் படுதலின்) ஒரு கொம்பு கையிலுளது-ஒரு கொம்புதான் திருமுகத்திலுள்ள தெனில் மற்றொரு கொம்பு அவர திருகரதது லிருகின்றது (வல்லபை யென்ற ஒரு பெண் துதிக்கையின் சார்பிலிருகிறது), எ - று.

21. கச்சையிட்ட மென்முலையங் கன்னிதுரோ பதையை
மெச்சியிட்டங் கொண்டவுவர் மேவாரோ—நிச்சயமா
மின்னனை யாள்சூழ்ந்தி வியந்துமுனம பயந்த
கன்னனைநீக் காதிருந்தக் கால்.

உரை:—கசசை யிட்ட மென் முலையங்கன்னி துரோபதையை - வாரணிந்த மெல்லிய தனங்களையுடைய அழகிய கன்னியாகிய துரோபதையை, மெசசி இட்டங்கொண்டு அவுவர் மேவாரோ-புகழ்ந்து காதலித்து ஆறு பேர் சேர்தலில்லையா?, நிச்சயமாய் உறுதியாக ஆறுபேர் ஆவர், மின்னனையாள் சூழ்ந்தி வியந்து முனம பயந்த - மின்னலைப் போன்ற சாயலையுடைய சூழ்ந்திமாதானவள் சூரியனைக் கண்டு அதிசயத்தினாற் பெற்ற, கன்னனை நீக்காது இருந்தக்கால்-கர்ணனை விலக்காதிருந்தாலென்க; எ - று.

22. தேனிலுந்தித்திப் புளதுதிண் புலியின்மிக் கவலி
யானதுவு மியாதுபுவி யாளரசே—கானமல்ர்த்
தேனிலதிக மின்னர்செவ் விதழே வெங்கலியே
கானப் புலியி லதிகம்.

உரை:—புவியாள் அரசே - பூமியை யாளுகின்ற வேந்தனே !, தேனிலும் தித்திப்புளதும் - தேனைப் பார்க்கிலும் இனிமையானதும், திண்புலியின் மிக்க வலியானதுவும் - பெலமுள்ள புலியிலும் அதிக வலிமையுடையதும், யாது - யாவை என்று கூறுக !, கானமலர்த் தேனிலதிக மின்னர் செவ்விதழே - மணம் பொருந்திய பூவிலுள்ள தேனைப் பார்க்கிலும் பெண்கள் அதரபானமே இனிது, வெங்கலியே காணப்புவியில் அதிகம் - கொடிய வறுமையே காட்டுப் புலியைப் பார்க்கிலும் அதிக வலுமை யுடையது, எ - று.

23. சேணளவுஞ் சிந்தளவுந் தெள்ளியவிண் மீனளவுங்
காணினுங்கா ணுமைபென்ன காவலவ—பூணுமனத்
தாசையளத் தற்கரிய தாயினுமவேற் கண்வீசும்
வேசைமனம போலுமல்ல வே.

உரை:—காவலவா - காப்பதில் வல்லவனே ! சேணளவும் - வான் வரையும், சிந்தளவும் - கடலினெல்லையளவும், தெள்ளிய விண் மீனளவும் - தெளிவான நட்சத்திர மண்டலத்தினளவும் காணினும் காணுமை என்ன - தேடிப் பார்த்தாலும் காணமுடியாதது எது ?, பூணும் மனதாசை அளத்தற்கு அரியதாயினும் - மனதிலுதிக்கும் ஆசையானது அளவிடுதற்கு அரியதாயிருந்தாலும், வேல் கண் வீசும் வேசை மனம்போலும் அல்லவே - வேல்போன்ற கணணை வீசுகின்ற விலைமாதாது மனம்போல அது அவ்வளவு அளவிடற்கரியதல்ல, எ - று.

24. நஞ்சிற்கொடிது நமனிற் கொடுஞ் செய்கை
மிஞ்சியதும யாதுவிறல வேந்தே—நெஞ்சத்
திடங்கனி விலாதா ரிடுமமுது மிக்க
கொடுங்குணப் பெண்டிருமெனக் கொள்.

உரை:—விறல் வேந்தே - வலிமையுடைய அரசனே !, நஞ்சில் கொடிது - விடத்தைப் பார்க்கிலும் கொடுமையானதும், நமனில் கொடும் செய்கை மிஞ்சியதும் யாது - இயமனைப் பார்க்கிலும் அதிகக்கொடுமையான செயலுடையதும் யாவை, நெஞ்சத்து இடங்கனிவிலாதார் இடும் அமுதும் - மனதில் இரக்கத்திற் கிடமில்லாதவர்கள் படைக்கின்ற சோறும், (நஞ்சிற் கொடியது) மிக்க கொடுங்குணப் பெண்டிரும் எனக்கொள் - மிகுந்த கொடுமையான குணமுடைய பெண்களும் என (முறையே இவ்விரண்டையும்) கொள்க, எ - று.

25. ஓராழிநீரை முகிலுண்டு பொழியி னல்ல
நீராவ தென்னைநில வேந்தே—சீராய்ந்த
மேலோர் தமைச்சார்ந்த வீணருமே லாவரன்றே
நூலாய்வல் லோயுளக்க ணேக்கு.

உரை :—நிலவேந்தே - பூமியாளும் அரசனே !, ஓராழி நீரை முகிலுண்டு பொழியின் நல்ல நீராவது என்னை - ஒப்பற்ற கடலின் உப்புநீரை மேகமானது நுகர்ந்து மழையாகப் பெய்தால் அது நல்ல நீராக இருப்ப தெப்படி ?, சீராய்ந்த மேலோர்தமைச் சேர்ந்த வீணரும் மேலாவர் அன்றே - புகழ் பெற்ற உயர்ந்தோர்களைச சேர்ந்த கீழ்மக்களும் நல்லவர்க ளாவரல்லவா?, நூலாய் வல்லோய் உளக்கண் நோக்கு - நூலாராய்சசி செய் கின்ற கல்வித திறமையுடையவனே ! உன்னுடைய மனக் கண்ணினால் இதனைப் பார், எ - று.

26. ஊடுங்காற் புன்னகையு மோர்மடந்தை கொண்கனெடு
கூடுங்கா னெட்டுயிர்ப்புங் கொண்டதென்னே—பாடவண்
மாற்றுள் பிரிவை மதித்துமன்னுள் பெற்றசுக [றேய்
மாற்றுமை யாலு மவள்.

உரை :—ஓர் மடந்தை கொண்கனெடு - ஒரு பெண்ணானவள் தன் கணவனெடு, ஊடுங்கால் - சிறு சண்டையாகிய புலவி நிகழுமிடத்தில், புன் னகையும் - புன்சிரிப்பு ம, கூடுகாலி - புணரும்போது, நெட்டுயிர்ப்பு கொண்டதென்ன - ....., ஆடவன் தோய் மாற்றுள் பிரிவை மதித்தும் - கணவன் போயச சேருகின்ற தனக்கெதிரியாகிய பெண்ணை அவன் பிரிந்து வந்து விடுவானென்ற புன்சிரிப்பும், அன்னுள் பெற்ற சுகம் ஆற்றுமை யாலும் அவள் - முன்னுளிலடைந்த சுகம் போதாமையாலுமென்க, எ - று.

27. தெய்வப்பிடியை மணஞ்செய்த குகன்மேவடார் குலத்
தையன்மணஞ் செய்ததென்ன தார்வேந்தே—செய்பதரு
மேவுலகத் தேவரைப்போல் வேண்டெமையுங் காவென்ற
பூவுலகத் தேவர் பொருட்டு.

உரை :—தார் வேந்தே - வெற்றிமாலை யணிந்த மன்னனே!, தெய்வப் பிடியை மணஞ்செய்த குகன் - தெய்வயானையைக் கலியாணஞ் செய்து கொண்ட முருகப்பெருமான், வேடாகுலத் தையல் மணஞ்செய்த தென்ன - வேட சாதியிற் றோன்றிய பெண்ணையும மணந்துகொண்டதற்குக் காரண மென்ன?, செய்ய தரு மேவுலகத் தேவரைப்போல் - செய்மையான கற்பக மரங்களையுடைய விண்ணுலகத்திலுள்ள தேவர்கள் பிரார்த்தித்ததுபோல, வேண்டு எமையும் காவென்ற பூவுலகத்தேவர் பொருட்டு - பிரார்த்தித்த எங்களையுங் காப்பாற்றுக என்று அப்பெருமானைக் கேட்டுக்கொண்ட பூமியி

லுள்ள உயர்ந்தவர்கள் பொருட்டு வள்ளிநாயகியை மணஞ் செய்தாரென்க, எ - று.

28. வாரிமணியுந் திருவுமா யவனுக்கீர் தாற்குக்
காரிகொடுத்த தென்ன காவலவா—வாரணத்தோ
லாடையான் சின்னமதியார் சடையான்வெம் பணியான்
றோடுடையா னென்று மதித்து.

உரை :—காவலவா - காப்பதில் வல்லவனே!, வாரிமணியும் திருவும் மாயவனுக்கு ஈந்து - திருப்பாற் கடலானது தன்னிடத்திலுண்டான இரத தினத்தையும் அல்லது கௌத்துவ மணியையும் இலக்குமியையும் திருமா லுக்குக் கொடுத்து விட்டு, அதற்கு - சிவபெருமானுக்கு, காரி கொடுத்த தென்ன - கருநிறமுடைய விஷத்தைக் கொடுத்ததென்ன?, வாரணத்தோல் ஆடையான் - யானைத்தோலை யுடையாக தரித்துக்கொண்டவ ரென்றும், சின்னமதியார் சடையான் - இளஞ் சந்திரன பொருந்திய சடையையுடையவ ரென்றும், (அற்ப அறிவும் சடையு முடையவரென்றும்) வெம் பணியான் - கொடிய பாம்பை யாபரணமாக வுடையவனென்றும், தோடுடையான என் றும் - தோட்டினை யணிந்தவனென்றும், மதித்து - எண்ணி யவவாறு கொடுத்தது என்க, எ - று.

29. மச்சமென்று செம்பருந்து வாரிப்பறந் தோட
விச்சைகொண்டு மண்ணுண்டி நந்தானே—நிச்சயமாய்
மாமியாமே லேறிமானத் தைக்கைக் கொண்டா
ணமதனைப் பேச னலனு.

உரை :—மச்சமென்று செம்பருந்து வாரிப் பறந்தோட - சிவந்த பருந்துபோன்ற கருடன் மச்சாவதார மெடுத்ததால் மீனென்று திருமாலை யெண்ணித னகங்கொண்டு போக, இச்சைகொண்டு மண்ணுண்டு இருந் தானே - அதன்மேலிருப்பதற்குப் பிரியப்பட்டுப் பூவுலகத்தை வயிற்றி னகத்தே கொண்டிருந்தான், நிச்சயமாய் - உறுதியாகவே, மாமியார் மேலேறி மானத்தைக் கைக்கொண்டான் - தன்னுடைய மார்பில் பொருந் திய திருமகளைப் புணராது தன் பெருமையும் குறைவுபடா திருந்தான், நாம் அதனைப் பேசல் நலனு - நாம் அதனைப் பேசுதல் தக்கதாகுமா?, எ - று.

30. மாதொருத்தி பெற்ற மதலைதனை மூனிந்து
போதுயிலென் முள்புதுமை போர்வேந்தே—மாதமொன்று
வாராக் கணவன்மல ரணையில்வந் திருக்கு
நேரம்பா லென்றழுதா னென்று.

உரை:—போர் வேந்தே - போர் செய்வதில் வல்ல அரசனே !, மாதொருத்தி பெற்ற மதலைதனை முனிந்து - ஒரு பெண்ணானவள் தான் பெற்ற பிள்ளையைக் கோபித்து, போ துயில் என்றுள் புதுமை - நீ போய்த் தூங்கு என்று தாயினுள் இது ஆச்சரியமல்லவா ?, மாத மொன்று வாராக் கணவன் - ஒரு மாதமாகத் தன்னிடத்தில் வராத நாயகன், மலர் அணையில் வந்திருக்கும் நேரம் - பூம்படுக்கையிற் சேர்வதற்கு வந்திருக்குஞ் சமயத்தில், பால் என்று அழுதானென்று - குழந்தை பால் வேண்டுமென்று அழுததற்காக அவளாறு சொன்னாளென்க, எ - று.

முத்துவீரப்பிள்ளை

பாடியது

பொன்னுசாமித் தேவரவர்கள் வினவிய வினாக்களுக்கு விடைகள்

1. உண்டென்று மில்லையென்று மொப்பிலா மெய்ப்பொருளை
விண்டுபழி கொள்ளுமவிதமெவனே—மண்டலஞ்சேர்
பொற்போங்கு மற்புயனே பொன்னுச்சா மித்துரையே
தற்போத நீங்காமை தான்.

உரை:—ஒப்பிலா மெயப்பொருளை உண்டு என்றும் இல்லை என்றும் - இணையற்ற மெயப்பொருளாகிய கடவுளை உண்டெனவும் இலையெனவும், விண்டு பழிகொள்ளும் விதம் எவனே - சொல்லிச சண்டையிட்டு பழியுண்டாகிக் கொள்வதற்குக காரணமென்னே ?, மண்டலஞ் சேர் பொற்பு ஓங்கும் மல் புயனே - பூலகத்திற் சிறந்த அழகுடைய வளமான தோள்களை யுடையவனே!, பொன்னுசாமித் துரையே - ....., தற்போதம் நீங்காமைதான் - (அதற்குக் காரணம்) தன்னறிவின் மூண்டெழுகின்ற அகங்காரம் நீங்காததேயாம், எ - று.

2. காட்சியிலி லாதிருக்கக் கர்த்தனுண்டென் றூகித்த
மூட்சியன்றே மாட்சிமைசேர் சற்குணனே—சேட்கிளர்ந்த
தூமத்தால் வன்னியுண்மை சொற்றதுபொய் யோவீண்ட
நாமத்தார் வேலோய் நவில்.

உரை :—மாட்சிமை சேர் சற்குண மாண்பமைந்த நல்ல குணவானே!, கர்த்தன் காட்சியில் இலாதிருக்க உண்டென்று ஊகித்தல் - கடவுள் கண்ணுக்குத் தோன்றுமலிருக்கும்போது அவரிருக்கின்றாரென்று கருதுதல், தாட்சியன்றே - பொருந்தாதல்லவோ, வீண்ட நாமத்தார் வேலோய் -

பெருமை பொருந்திய நெடிய வேலையுடையவனே!, சேட்கிளர்ந்த ஞமத்தால் வன்னி யுண்மை சொற்றது பொய்யோ, ஞாயத்தில் தோன்றிக் காணப்படும் புகையைப் பார்த்து தோன்றுத நெருப்பு இருக்கிறதென்று ஊகித்தல் பொய்யாகுமா ?, நவில் - சொல்வாயாக, எ - று.

3. தூமமூள தேனெருப்புத் தோன்றுமென வறிஞர்
நாமறியச் சொற்றதெதை நாட்டிடுவான்—பாமலியும்
வண்புகழா யிவ்வுலகம் வைகுதற்கோர் காரணமாம
பண்புறுதே வைத்தெரிப்பான் பார்.

உரை :—பாமலியும் வண்புகழாய் - கீர்த்தி நிறையப்பெற்ற பாடல்களையுடையவனே!, ஞம மூளதேல் நெருப்புத தோன்றுமென அறிஞர் நாமறியச சொறறது - புகை யுண்டானால் நெருப்புண்டென்று அனுமானப் பிரமாணத்தை அறிஞர்கள் ஏற்படுதியது எதை நாட்டுவான் - எதை நிலை நாட்டுவதற் கென்னில், இவ்வுலகம் வைகுதற்கு ஓர் காரணமாம் - இந்த வுலகம் தோன்றி நடைபெறுவதற்கு ஒப்பற்ற காரணராகிய, பண்புறு தேவைத் தெரிப்பான் - நலமுடைய கடவுளைத் தெரிவிப்பதற்காக வென்று, பார் - அறிக, எ - று.

4. எம்மைப் புரந்தருளு மீசனிற நெருப்பென்
றும்மைப்போல் வாண ருரைப்பதெவன்—கொம்மைக்
குவிமுலையார் வீழ்மதனு கூடிநின்று காட்டுஞ்
சவியுடையோ ஞதலினும் முன்.

உரை:—எம்மைப் புரந்தருளும் ஈசன் நிறம் நெருப்பென்று - நன்மை காப்பாற்றுகின்ற இறைவனது நிறம் தீயின் நிறமென்று, உம்மைப்போல் வாணர் உரைப்பதெவன் - உம்மைப்போன்ற கல்விமான்கள் கூறுவது எதனால், கொம்மைக குவிமுலையார் வீழ் மதனு-இளமையுடைய குவிந்த தனங்களையுடைய பெண்கள் காதலிகளின் மன்மதனே !, கூடி நின்று காட்டுஞ் சவியுடையோ ஞதலினுல்தான் - பொருள்களோடு சேர்ந்து நின்று அவற்றை விளக்கும் ஒளியுடையோன் இறைவனுதலா லென்க, எ - று.

5 எப்பொருட்கு மூட்பொருளா யீச னிருக்கமதத்
தப்புப் பலதுவந்த தன்மையெனே—துப்புடையோ
ரந்தக ராணைக் கடையாளங் காட்டியவர்
தந்தமுணர் வாலிழைத்த தால்.

உரை:—எப்பொருட்கும் உட்பொருளாய் ஈசனிருக்க - எல்லாப் பொருளுக்கும் அந்தர்யாமியாய் அல்லது உள்ளாதாரவாய் இறைவன் ஒருவனே இருக்கவும், மதத்தப்புப் பலது வந்த தன்மை எனே - குறைபாடுடைய பல சமயங்கள் தோன்றுவதற்குக் காரணம் யாதோ, துப்புடை,

யோர் அந்தகர் - வலிய குருடர்கள், ஆனைக்கு அடையாளம் காட்டியவர் - ஆனை யெப்படி யிருக்குமென்று சொன்னவர்கள், தந்தம் உணர்வால் இழைத்ததால் - தாம் தாம் அறிந்த அளவில் வெவவேறு அடையாளங்கள் கூறியதுபோல வென்றுணர்க, எ - று.

6. தேவருக்குப் பெண்டிருத்த தீதன்றே தேர்ந்திடுநீ
யாவ திதவிண் டலறகுவா—யேவருக்குங்
கற்புடைமா தோடு கலந்திருத்த லாற்பழுதின்
றெப்புரவோய் நீயறியா யோ.

உரை:—தேவருக்குப் பெண்டிருத்தல் தீதன்றே - தேவர்களுக்கு மனைவியிருத்தல் குற்றமாகு மல்லவா ?, தேர்ந்திடு நீயாவது விண்டு அறைகு வாய் - ஆராய்சியுடைய நீ இதற்குக் காரணம் யாதென்று தெளிவாகக் கூறுவாயாக !, எவருக்கும் கற்புடைய மாதோடு கலந்திருத்தலால் பழு தின்று - யாருக்குமே கற்பொழுக்கமுள்ள பெண்களோடு கூடியிருத்தல் குற்றமாகாதென்று, ஒப்புரவோய் நீ அறியாயோ - உலக நடையை யறிந்த வனே! உனக்கு அது தெரியாதா ?, எ - று.

7. பெண்ணொருத்தி மெய்யிருக்கப்
பேதையொன்றைப் பேணுசடைக்
கண்ணிருக்க வீசன்வைத்த
காரணமென்—னுண்ணிடையை
வேணிமிசைக் கொள்ளானேல்
விண்ணுமண்ணும வெள்ளமுண்டு
கோணிநிலே பேருமெனக்
கொள்.

உரை :—பெண்ணொருத்தி மெய்யிருக்க - உமையம்மையாகிய ஒரு பெண் திருமேனியி லிருக்கவும, பேதை யொன்றைப் பேணு சடைக் கண் ணிருக்க - மற்றொரு பெண்ணைச சடையினிடத்தி லிருக்கும்படியாக, வைதத காரணமென - வைத்த காரணம யாது ?, நுண்ணிடையை - நுட்ப மான இடையையுடைய அந்தப்பெண்ணை, வேணிமிசைக் கொள்ளானேல் - சடையின்மேல் இறைவன் வைக்கவில்லையாயின், விண்ணும் மண்ணும் வெள்ளமுண்டு கோணி நிலே பேருமெனகொள் - ஆகாயத்திலும் பூமியி லும் நீர்ப்பெருகு அதிகரித்து நிலேதடுமாறி யழிபுமென்று அறிக, எ - று.

8. அங்கையன லாகமதைச் சுட்டிடா தாவிதுவெண்
சங்கைசிவன் முணு சயமபிற்குச்—சங்கரனூர்
மேனிபனல் கண்ணுமனல் வேகவிட மூண்டழியா
மோனியையென் செய்யு மொழி.

உரை :—சிவன்தாணு சயம்பிற்கு - சுயம்பாக நிலைபெற்ற சிவபெருமானுக்கு, அங்கை அனல் ஆமையை சுட்டிடாதா - உள்ளங்கையில் விருக்கின்ற நெருப்பானது திருமேனியை வேகும்படி செய்யாதா ?, இது என் சங்கை - இது என்ன சந்தேகம், சங்கரனுர் மேனி அனல் கண்ணும் அனல் - சிவபெருமானுடைய திருமேனியும் நெருப்பு மயம், நெற்றிக் கண்ணிலும் நெருப்பிருக்கின்றது, வேகவிடம் உண்டு அழியா மோனியை- வெப்பமுடைய விடம் உண்ணப்பட்டும் தடிக்க முடியாத மௌனக் கடவுளே, என் செய்யும் மொழி - நெருப்பு என்ன செய்யக் கூடுமென்று சொல்லு, எ - று.

9. அங்கியிடை வெப்பு மருநீரி டைக்குளிருந்
தங்கியிருத் தற்குவமை தானுளதோ—செங்கதிரோன்
றன்னிடத்துச் சூடுளது சந்திரன்பாற் றட்பமுள
தென்னினிவண் டும்முவமை யே.

உரை :—அங்கியிடை வெப்பும் - நெருப்பிற் சூடும், அருநீரிடை குளிரும் - அருமையான நீரிற் குளிர்ச்சியும், தங்கியிருத்தற்கு உவமைதான் உளதோ - நிலைபெற்றிருப்பதற் குவமையாகக் கூறுதற்குப் பொருள்களுண்டா?, செங்கதிரோன் தன்னிடத்துச் சூடுளது - சிவந்த சூரியனிடத்தில் வெப்பமிருக்கிறது, சந்திரன்பால் தட்பமுளது - சந்திரனிடத்திற் குளிர்ச்சி யிருக்கிறது, என்ன இனி வேண்டும் உவமை - இவற்றிற்கு மேல் வேறு என்ன உவமானங்கள் வேண்டும், எ - று.

10. வெண்பளிங்கு தண்ணியதா மேவியிருந் துஞ்சுடர்ங்
கண்கரிப்பச் செய்வதென்ன காரணங்கா—ணெஞ்கழலாய்
தீயருப சாந்தகரைச் சேரினுந்தந் தீயவியல்
பாயதொழில் செய்வா றறி.

உரை :—வெண்பளிங்கு தண்ணியதா மேவியிருந்தும் - வெண்ணிற முள்ள படிகம் அல்லது கண்ணுடியானது தண்ணியல்பிலே குளிர்ச்சியா யிருந்தாலும், சுடா நம் கண் கரிப்ப செய்வதென் காரணங்காண் - அதிற் படுஞ் சூரிய வொளியானது நமது கண் காந்தும்படி செய்தது அதற்குக் காரணமென்ன, ஒண் கழலாய் - ஒளியுடைய சிலம்பு அணிந்தவனே!, தீயர் உபசாந்தகரைச சேரினும் - தீய குணமுடையவர்கள் விருப்பு வெறுப்பற்ற அமைதியுடைய பெரியாரைச சார்ந்தாலும், தம் தீய வியல்பாய் தொழில் செய்வார் அறி-தமது கெட்ட தன்மைக்கேற்ற செயல்களையே செய்வார்களென்று அறிவாயாக, எ - று.

முத்துச் சுப்பையர்

பாடியது

கலிகால வியல்பைப் பற்றியது

1. மேட்டைத் தணித்துக் கடுந்தாவை விண்வரை மேவலைத்துக்
காட்டைப் புறஞ்செய்து காடாக்கி யூரைக் கருதிமரா
மூட்டைப் பிடுங்கித் தலைகீழ்நட்டு முளைக்க வைக்குஞ்
சேட்டைக்கென் றேகலி யேயுன்னை வேதன் சிருட்டித்ததே.

உரை :—மேட்டைத் தணித்து - உயர்ந்த விடத்தைப் பள்ளமாக்கி, கடுந்தாவை விண் வரை மேல வைதது - பெரிய பள்ளத்தை வானம் வரை யுயரும்படி யுயர்த்தி, காட்டைப் புறஞ் செயது காடாகி - காட்டிடத்துள்ள மரங்களைக் களைத்து காடுபோலச செய்து, ஊரைக் கருதி - ஊரைத் தொலைக்க வெண்ணி, மரமூட்டைப் பிடுங்கி தலைகீழ் நட்டு முளைக்க வைக்கும் - மரத்தை வேரோடு பிடுங்கித் தலைகீழாக நட்டு அதனையும் முளைக்கும்படியாகச செயயும், சேட்டைகென்றே - குறும்பு செய்வதற்காகவோ, கலியே உன்னை வேதன் சிருட்டித்ததே - கலிபுரு டனே உன்னைப் பிரமன் படைத்ததுபோலும், எ - று.

2. அண்டின பேரைக் கெடுப்போரு மொன்றுபத் தாய்முடிந்து
குண்டணி சொல்லுங் குடோரிகளுங் கொலையே நிதஞ்செய்
வண்டரைச் சேர்த்தின்ப சல்லாபம பேசு மறையவருஞ்
சண்டிப் பயல்களுமே கலிகாலத்திற் ருட்டிகளே.

உரை :—அண்டினபேரைக் கெடுப்போரும் - தன்னை யடைந்தவர் களைக் கெடும்படி செய்பவரும், ஒன்று பததாய முடிந்து குண்டுணி சொல் லும் குடோரிகளும் - ஒன்றைப் பததாகப் பெருகிப் பொய் சொல்லி விரோதம் விளைக்கின்ற கோடாரிகளைப் போன்றவர்களும், கொலையே நிதஞ்செய்வண்டரைச சேர்த்து இன்ப சல்லாபம் பேசு மறையவரும் - தினந்தோறும் கொலை செய்கின்ற திட்டர்களோடு பழகி, அவரோடு அளவளாவுகின்ற பிராமணரும், சண்டிப் பயல்களுமே - குதர்க்கவாதி களுமே, கலிகாலத்தில் தாட்டிகரே - கலிகாலத்திற் பெலமுள்ளவர்களா யிருப்பவர்கள், எ - று.

3. ஊசிக்கும் நூலுக்கு மாகாமற் செய்தொழி லுள்ளவெகு
தோசிக்குஞ் சாமித் துரோகிகட்குந் தொலையா வழக்காய்ப்
பேசிக்கொள் வோருக்குங் கற்பா லிலங்கிய பேதையரை
யாசிக்கும் பேர்கட்குமே கலிகாலம் யதார்த்த மதே.

உரை :—ஊசிக்கும் நூலுக்கும் ஆகாமல் செய் தொழிலுள்ள வெகு தோசிக்கும் - நூல் ஊசியோடு பொருந்தாமற் செய்வதுபோலப் பொருந்தும் காரியங்களைப் பொருந்தவிடாமற் றடுக்கும் பெரிய பாவிகளுக்கும், சாமி துரோகிக்கும் - எஜமானர்களுக்குத் துரோகஞ் செய்கிறவர்களுக்கும், தொலையா வழக்காய்ப் பேசிக்கொள்வோருக்கும் - தீராத விவகாரம் பேசு கின்றவர்களுக்கும், கற்பால் இலகுகும் பேதையரை - கற்பிற் சிறந்து விளங் கும் பெண்களை, யாசிக்கும் பேர்களுக்கும் - (தங்களைப்) பிச்சையாகக் கொடுக்க வேண்டுமென்பவர்களுக்கும், கலிகாலம் யதார்த்தமதே - கலிகாலம் உண்மையாய்ப் பொருத்தமுடையதாகும், எ - று

4. அள்ளித் திரவிய மீந்தாலும் பொய்யுரையா தவரை
கள்ளரென் றேதுங் கலியுகத்தே கடைந்தெ டுத்துத்
தெள்ளமு தொக்க நொடிக் காயிரமபொய் செலுத்துமகி
யுள்ளவரே பெரியோர் புவியோர்க்கு முவந்தவரே.

உரை :—அள்ளித் திரவியம் ஈந்தாலும் பொய்யுரையாதவரை கள்ள ரென்று ஏதுங் கலியுகத்தே - பொருளை மிகுதியாக அள்ளிக் கொடுத்தாலும் பொய் சொல்லாதவர்களை திருடரென்று சொல்லுகின்ற கலிகாலத்திலே, கடைந்தே எடுத்துத் தெள்ளமுது ஒக்க நொடிக்கு ஆயிரம் பொய் செலுத் தும் - தெளிவான அமுதத்தைக் கடைந்தெடுத்ததுபோல வடித்தெடுத்த உறுதியான பொய்ச சொற்களை விநாடிக்கு ஆயிரம் வீதம் சொல்விக்கின்ற, மதியுள்ளவரே பெரியோர் - அறிவுள்ளவர்களே உயர்ந்தவர்கள், புவியோர்க் கும் உவந்தவரே - உலகத்தார்களும் இணிமையானவர்கள் அவர்களே, எ - று.

5. ஊட்டி யினித்தசொல் லுத்தமி யென்றுள் ளொருத்திவரக்
காட்டிக் கணவனைக் கண்ணுறக் காட்டிக் கனத்தமதக்
கோட்டி கொண்டா ரையுமே குடிமாதர்கள் கூடுவதால்
ராட்டுலவைத் தார்களின்றே கலிபிற்ருசி நங்கையரே.

உரை :—ஊட்டி இனித்த சொல் உத்தமியென்று உள் ஒருத்தி வர - தொண்டையிலேயே இனிய சொல்லையுடைய உத்தமியென்று பேசப்படு கின்ற ஒரு பெண் வீட்டினுள் வரவும், காட்டி - அவளைக் காண்பித்து, கணவனைக் கண்ணுறக் காட்டி - கணவன் அவளைப் புணர்ச்சிபடியாகக் குறிப்பித்து, கனத்த மத கோட்டி கொண்டாரையுமே - மிகுந்த காமப பித் தைக் கொண்ட பரபுருடரையும், குடி மாதர்கள் கூடுவதால் - குடும்பப் பெண்

கள் சேருவதால், கலியில் தாசி நங்கையரே - கலியுகத்தில் வேசிப்பெண்கள், இன்றே மாட்டு வைததார்கள் - இக்காலத்தில் பிழைக்க ஊதியமில்லாமல் இராட்டினத்தை வைத்து நூற்பாராயினர், எ - று.

6. வில்லாய் வளைந்து நிசங்காட்டி வாங்குவர் மீளவந்தே
யல்லும் பகலுங் கடன்கொடுத் தோர்க ளலைந்திடினும்
வல்லங்கம் பேசுவ ரில்லையென் றேதுவர்வா ளுருவிக்
கொல்லவும் பார்ப்பர் கலிகாலத்தே கடன் கொள்ளிகளே.

உரை :—வில்லாய் வளைந்து நிசங்காட்டி வாங்குவர் - வில்லுப்போல மரியாதையாய்க் குனிந்து உண்மையாய் மீளக கொடுப்பவர்போலத தோற்றுவித்துக் கடன் வாங்குபவர்கள், கடன் கொடுததோர்கள் அல்லும் பகலும் மீள வந்து அலைந்திடினும் - ....., கலிகாலததே கடன் கொள்ளி கள் - கலிகாலத்திற் கடன் வாங்கினவர்கள், வல்லங்கம் பேசுவார் - வல் வழக்குப் பேசுவார்கள், இல்லையென்று ஓதுவார் - வாங்கின தில்லையென்ற சொல்வார, வாள் உருவிக கொல்லவும் பார்ப்பார் - கத்தியெடுத்துக் கொலை செய்யவும் முயல்வார்கள், எ - று.

இராமாநுஜ கவிராயர்

பாடியது

1. தரளாற்றுந் தொட்டிக் கலைத்தமிழ்வேதா சலன்றிகிரி
வரலாற்றிம் மான்முலைக் கேற்றடிபட்ட வரைக்குலங்கள்
உரலாய்த திரிசைய தாயம்மியாய்ச்சின்ன வுண்டைகளாய்ப்
பரலா யுறுதுகளாய்ச் சிறுகாற்றிற் பறக்கின்றதே.

உரை :—தரளாற்றும் தொட்டிகலைத் தமிழ வேதாசலன் - இரவ லர்க்கு வேண்டியதைத தரும் ஆற்றலுடைய தொட்டிக்கலையில் வாழு கின்ற தமிழ் வாணரையிய வேதாசல வள்ளலது, திகிரி வரலாற்று இம் மான் முலைக்கு - மலையில் வருவதைச செயத இப்பெண்ணின் தனங் களுககு, ஏற்றடிப்பட்டவரைக் குலகங்கள் - எதிர்த்துத் தோல்வியடைந்த குனறினகன், உரலாய்த் திரிசையதாய் அம்மியதாய் சின்ன உண்டை களாய் - உரலாயும மா அறைக்கும் இயந்திரமாயும் அம்மியாயும் சிறு உருண் டைக் கற்களாயும் வரவரத் தேய்ந்து, பரலாய் ஒருதுகளாய் - பருக்கைக் கற்களாயும் பொடியாயுமாகி, சிறு காற்றிற் பறக்கின்றதே - இலேசான காற்று அடித்தாற்கூடப் பறந்து போகும் தன்மையுடையன, எ - று.

கிருஷ்ணப்ப நாய்க்கன் குளத்தைப் புகழ்ந்து பாடியது

2. சாரவீடிருந்தோர் படிந்துசார்ந்திடிற் சீர்தருபுகழிலையென்றேவீடு
தூரமா யினரும படிந்துவீ டடையுந் தோற்றமற் றறிந்தத னலே
வீரவேளலைத்த நுதற்கணான் சென்னி மேயதச் சுரதனியென்றுல்
மாரகண் ணப்பநா யகன் குளத்து மகிமையா முரைசெய வற்றே.

உரை :—வீடுசார இருந்தோர் - மோட்சத்தை யடைய விரும்பினவர் கள், படிந்து சார்ந்திடில் - மூழ்கியதனைப் பெற்றால், சீர் தரு புகழிலை என்றே - சிறப்பான கீர்த்தி தனக்கில்லை யென்றறிந்து, வீடுதூர மாயின ரும் - மோட்சத்திற்குத் தூரத்திலிருப்பவர்களும், படிந்து - குளத்திற் படிந்து, வீட்டையும தோற்றமற்று அறிந்ததனலே - வீட்டின் காட்சியை யும் பெற்றுரென்பது தெரிந்து, அசசாரந்த - அந்தத் தெய்வ சுபகையானது, வீரவேள் அலைத்த நுதற்கணான சென்னிமேயது - வீரமாய் வந்த மன்மதனை யழித்த நெற்றிக்கண்ணை யுடைய சிவபெருமானது தலையைச சேர்ந்தது என்றால், மார கண்ணப்ப நாயகன் குளத்து மகிமை உரை செய அற்றே - மன்மதன் போன்ற கணப்ப நாயகன் குளத்தின் பெருமையை நாம் கூறமுடியுமா?, எ - று.

சந்திரசேகர கவிராச பண்டிதர்

பாடியது

பொன்னுசாமித் தேவர்மீது பாடியவை

தலைவி கூற்று

1. திருமகட்குத தன்னிறமாஞ் செய்யும புயமும
பொருகடட்குப் பொன்னம் புயமும்—தருபொனனு
சாமிவள்ளல் மாலைதந்தான் றண்கமல மானேநற்
சாமிவண்ண மாலைதரா தான்.

உரை :—தண் கமல மானே - குளிர்ந்த தாமரைப் பூவிலிருக்கும் திரு மகள்போன்ற தோழியே!, கல்சாமி வண்ணமாலை தராதான் - நல்ல சுமது எஜமான் நிறமான தாரினைக் கொடாமையால், திருமகட்குத் தன்னிறமாம் செய்யும் புயமும் - இலக்குமிக்குத் தன் மார்பாகிய செங்கமலப் பூவையும், பெருமகட்கு - வீரலட்சுமிக்கு, பொன் அம்புயமும் - பொன் மலைபோன்ற தோள்களையும், தரு பொன்னுசாமி வள்ளல் - கொடுத்த பொன்னுசாமித் தேவரென்னும் கொடையாளி, மாலை தந்தான் - மயல் கொடுத்தான், எ - று.

செவிலி கூற்று

2. இய்யூர் தகரவெடுத்த திருமான் மருகன்
மையூர் குமரன் மலரடிக்கு—மெய்யூர்
மனத்தை யளித்தபொன்னு சாமிக்கு மானே
அனத்தை மறந்தாளென் றறை.

உரை :—மானே - பாங்கியே !, இ ஊர் தகர எடுத்த - தக்கர் என்னும் மெயயோடு இகரஞ் சேர்வதா லுண்டாகிய திகிரி அதாவது சக்கராயுதத்தைத் திருக்கையி லேந்திய, திருமால் மருகன் - விண்டுவின் மருமகனாகிய, மையூர் குமரன் மலரடிக்கு - ஆட்டு வாகனத்தையுடைய முருகனது திருவடிக மலமகளுக்கு, மெய்யூ மனத்தை யளித்த - உண்மையான வுள்ளன்பைக் கொடுத்த, பொன்னுசாமி வள்ளலுக்கு - ....., அனதைத மறந்தாளென்று அறை - தலைவி சோறுண்பதை மறத்துவிட்டாளென்று தெரிவிப்பாயாக, எ - று.

வெறி விலக்கல்

3 ஆடிமா தம்பவணி புயத்தா ரன்றியே
ஆடிமாதம் பார்கண் ணீர்மாற்றி—நீடுமயல்
போக்குமோ வன்னுய் புலவர்மிடியைக் கொடையான்
நீக்குபொன்னு சாமி நிருபன்.

உரை :—அன்னுய் - அன்னையே!, புலவா மிடியைகொடையால் நீகு பொன்னுசாமி நிருபன - கற்றோ தரிதநிரத்தைத தனது வள்ளற் றன்மையா லொழிகின்ற பொன்னுசாமி மன்னனுடைய, மாதம்ப புயத்து-பெரிய தூண்போன்ற தோள்களில், ஆடி யணிதா அனறியே - அசைந்து அழகு செயகின்ற மாலையே அல்லாமல், ஆடு - பலியிடும் ஆடானது, இம் மாது அம்பு ஆ கண்ணீர மயல மாற்றி நீடுமயல் போகுமோ - இத்தப் பெண்ணினுடைய அம்புபோன்ற கண்களில வடிகின்ற கண்ணீரை நிறுத்தி நீண்ட மோகத்தைத தொலைக்குமோ ?, எ - று.

தலைவி கூற்று

4. பொன்னரம் பூணும் புகழ்ப்பொன்னு சாமிவள்ளல்
தன்னுகாள் ராமன் றுபர்புரிவான்—மன்னளிதேன்
நற்கருமபு மற்கரும்பு நற்கருமபுங் கைக்கொளுமவேள்
எற்கருமபுண் ணுய்க்கவெய்வ னே.

உரை :—பொன் ஆரம் பூணும் புகழ்ப் பொன்னுசாமி வள்ளல்-பொன் மாலையணிந்த கீர்த்தியையுடைய பொன்னுசாமித தேவராகிய ஈகையாளன், தன்னு நாள் - பொருந்காத நாட்களில், ராமன் - இரவுக்கு அரசனுகிய சந்

திரன், தயர் புரிவான் - என்னை வருத்துவான் (அது எப்படியெனில்) மன் அளி தேன் நக்கரும்பும் அற்சுரும்பும் நற்கரும்பும் கைக்கொளும் வேள் - நிலைபெற்ற வண்டுகளோடு கூடிய தேன் விளங்கும் பூவரும்புகளையும் நல்ல வண்டு காணையும் நல்ல கரும்பு வில்லையும் கையிற் கொண்டுள்ள மன்மதன், எறகு அரும்புண் உய்கை எய்வனே - என்மீது குணப்படுத்த முடியாத புண்ணுண்டாகும்படி அம்புகளை விடுப்பான், எ - று.

தோழி கூற்று

5. அளகைப் பொறித்த கொடியண்ண லடிபோற்றும்
அளகைக்கோனும பொன்னு சாமி—துளிமதுத்தார்
தந்தான் மதனடங்கத் தண்மதியர் தானடங்க
இந்தாவிந் தாமுகத்தா யீது.

உரை :—அளகைப் பொறித்த கொடி அண்ணல் அடிபோற்றும் - கோழியின் வடிவமெழுதிய கொடியையுடைய குமரப் பெருமானின் பாதங்களைத் துதிக்கின்ற, அளகைக் கோனும் பொன்னுசாமி - குபேரனுகிய பொன்னுசாமி வள்ளல், மதனடங்க - மன்மத னடங்கும்படியாகவும், தண் மதியம் தானடங்க - குளிர்ந்த சந்திரன் நடுங்கும்படியாகவும், மதுத்துளித் தார் தந்தான் - தேன் சொரிகின்ற மாலையைத் தந்தான், இந்து ஆமுகத் தாய் - சந்திரன்போன்ற முகத்தை யுடையவளே !, இந்தா இது - இதோ இம்மாலை யிருக்கிறது பார், எ - று.

புறங்காட்டல் மாற்று

6. செவ்வே றிகழ்கரன் மாமலர்ச் சேவடி சிந்தைசெய்யும
தெவ்வேறி கல்பொன்னு சாமிபூ பாலனற்சீர்க் கிரிவாய்
வெவ்வே றினமணி மேவ முதக்கட நீர்மறைத்து
உவ்வேறின மதகவ்வினைக் காட்ட லென்னெண் டொடியே.

உரை :—செவவேல் திகழ் கரன் மாமலர்ச சேவடி சிந்தை செயயும் - சிவந்த வேற்படை விளங்குகின்ற திருக்கையையுடைய பெரிய திருவடிக் கமலங்களைத் தியானிக்கும், தெவவேல் இகல் பொன்னுசாமி பூபாலன நற்சீர்க் கிரிவாய் - சதுரருக்களை வெல்லுகின்ற போர்த்திறமையுடைய பொன்னுசாமி வள்ளலென்பவனது சிறந்த மலையினிடத்தே, ஒண்டொடியே - ஒள்ளிய வளையலணிந்தவளே!, நீ வெவவே றினமணிமேவ அமுதக்கடம் மறைதது - வெவவேறு விதமான இரத்தினங்கள் அணியப்பெற்ற அமுதகுடம் போன்ற தனங்களை நீ மறைத்துக்கொண்டு, உவவேறின மதகவ்வினைக் காட்டல் என் - ம் தக் என்பவைகளோடு உகரங் கலந்ததாலுண்டாகிய முதலைக் காட்டியது எதனால் ?, எ - று.

செவ்வி கூற்று

7. கைக்கார் நிதிதரு தேனுசிந் தாமணி கன்னன் கார்த்தி
கைக்கார் நிகரல வாங்கொடை யோன்பொன்னு சாமிகடக்
கைக்கார் வரையிற் பவனிவந் தான்கண்டு மால்கொள்காரி
கைக்கார் துணைபுரிவா நிறவாது கருணை செய்தே.

உரை:—கைக்கார் நிதிதரு தேனு-கையிற் பொருந்தும் செல்வத்தைத் தரக்கூடிய காமதேனுவும், சிந்தாமணி கன்னன் கார்த்திகைக்கார் - சிந்தாமணியும் கருணையும் கார்த்திகை மாதத்து மழை மேகமும், நிகரலாம் கொடையோன் பொன்னுசாமி - ஒப்பில்லையென்று சொல்லும்படியான ஈகையுடைய பொன்னுசாமி வள்ளல, கடக்கைக்கார் வரவே பவனி வந்தான் - மதம் பொழியும் துதிக்கையையுடைய கரிய மதம்போன்ற யானை மேல் ஊர் கோலமாய் எழுந்தருளி வந்தான், கண்டு மால்கொள் காரிகைக்கு - பார்த்து மோகங்கொண்ட பெண்ணுக்கு, இறவாது கருணை செயதே துணைபுரிவார் யார - அவள் சாகாதபடி திருவுளமிரங்கி உதவி செயபவர் யார்?, எ - று.

8. என்றுகண்ட விந்துவைப்போ லிவண்முகஞ் சோர்ந்தாளம்மா
என்றுகண்ட னம்பாலு மெனவயிலா ளென்கண்ணே
என்றுகண்டங் கமமவழைத் திடினுமுரை யாக்கிளிக்கே
என்றுகண்டன் னீர்தடுப்பா யெழிற்பொன்னு சாமிமன்னு.

உரை:—என்று கண்ட இந்துவைப்போல் - சூரியன் முன் சந்திரன் ஒளி யிழப்பதுபோல, இவன் முகம் சோர்ந்தாள் - இவள் முகம் வாடினாள், அம்மா என்று கண்டு அனம் பாலு என - அம்மா என்று கூப்பிட்டுப் பார்த்தது பாலும் சோறும் உண்ணென்று கூற, அயிலாள் - உண்ணமாட்டாள், என் கண்ணே என்று கண்டம் கம்ம அழைத்திடினும் - என் கண்ணே என்று உரத்த குரலோடு கூப்பிட்டாலும், உரையார் கிளிக்கே - பதில் கூறா கிளிபோன்ற என் பெண்ணுக்கு, எழில பொன்னுசாமி மன்னு - அழகிய பொன்னுசாமி வேந்தனே!, என்று கண்டு அன்னீர் தடுப்பாய் - எப்பொழுது பாரதது அந்தத தன்மையை மாற்றுவாய், எ - று.

9. வாராரக் கொங்கைமிசை மருவுபொன்னு சாமிவள்ளல்
வாராரா வெல்லாமதி யழலார்தென் றலன்றில்
வாரார்கலி யொலியும் வருத்த மனதொந்த னள்சொல்
வாரார்நீ யல்லாலம மன்னர் பெருமான் றனக்கே.

உரை:—வார் ஆர் அக்கொங்கை மிசை மருவு பொன்னுசாமி வள்ளல்-கசசுப்பொருந்திய அந்த தனங்களின்மீது தழுவுகின்ற பொன்னுசாமி மன்னன், வாராரா ராவெல்லாம்-வராத இரவு முழுவதிலும், மதியழலாம் - சந்தி

ரன் அக்கினி மயமாகத் தோன்றுகிறது, தென்றல் அன்றில் வாரார் கலி ஒலியும் வருத்த - தென்றலும் அன்றில் பறவையும் பெரிய கடலோசையும் அவளைத் துன்புறுத்த, மனம நொந்தனள் - ....., மன்னர் பெருமான் தனக்கே நீயல்லாமல் சொல்வார் யார் - அரசர் தலைவனுக்கு இதனைத் தோழியாகிய உன்னையன்றி வேறு யார் சொல்லக்கூடும், எ - று.

10. போதம் புடனே மதியளி நற்பூங் குயிறென்
வாதம புரிதுய ராவ்வா டுமிவளைப் புரப்பாய்
போதம் புரமெரித் தோர்க்கோ தமவேள் பொற்கமல
பாதம புனைபொன் னுசாமி யெனுமபார்த் திபனே.

உரை:—போதம் புரமெரிததோர்க்குப் போதம் ஓதும் - திரிபுரத்தை யழித்த அரனுக்கு ஞானவுபதேசஞ் செய்யும், வேள் பொற் கமல பாதம் புனை - குமரப்பெருமானது அழகிய திருவடித்தாமரைகளைச சிரமேற் கொள்ளுகின்ற, பொன்னுசாமி யெனும் பார்த்திபனே - பொன்னுசாமி யெனும் வேந்தனே!, போது அம்புடன் - மலர்க்கணைகளும், மதி - சந்திர னும், அளி - வண்டும், நற்பூங குயில் - அழகிய குயிலும், தென்வாதம்- தென்றலுமாகிய இவைகள், புரியாரால் வாடும் இவளை - செயகின்ற வருததததால் தளாகின்ற இப்பெணணை, புரப்பாய - பாதுகாப்பாயாக!, எ - று.

11. அச்சுப்போற் புலவோரை மதித்திடு மண்ணலே
பொருமங்கசன் வாளியாம
நச்சுப்போது துறக்கத் துறந்தன ணுணும
பூணுந்துகிலு மிவடனங்
கச்சுப்போனதுங் காணுன் முகவைவாழ் காவலா
வளகேச விவள்கண்டுங்
கைச்சுப்போனக முண்டிலள் கெண்டைடநேர் கண்ணிையைப்
புரப்பாய்பொன்னு சாமியே.

உரை:—முகவை வாழ் காவலா - இராமநாதபுரத்தில் வாழுகின்ற மன்னனே!, அளகேச - குபேரனைப்போன்ற செல்வமுடையவனே!, புல வோரை அசசுப்போல் மதிதிடும் அண்ணலே - கல்விமான்களை யுயிர் போலக கருதிக காகின்ற வீரனே!, பொன்னுசாமியே - ....., பொரும் அங்கசன் வாளியாம் நசசுப்போது துறக்க - போரிடுகின்ற மன்மதன் அம் பாகிய நஞ்சுத்தன்மை பொருந்திய பூக்களை விடுக்கவே, இவள் நாணும் பூணும் துகிலும் துறந்தனள் - இவள் வெட்கத்தையும் தரித்த ஆடையை யும் நீகுகினுள், தனம் கசசுப் போனதும் காணுள் - கொஙகைமேலிருந்த ரவிக்கை நழுவினதையும் பார்க்கவில்லை, இவள் கண்டும் கச்சுப் போனகம் உண்டிலள் - இவள் கற்கண்டையும் வெறுத்து உணவும் உட்கொள்ள

வில்லே, கெண்டை நேர்கண்ணியைப் புரப்பாய் - கெண்டைமீன் போன்ற கண்ணுடைய இவளைக் காப்பாற்றுவாயாக, எ - று.

கிளிவிடு தூது

12. அத்திகத்த வதித்துக் காவினை யட்டவாழி
செடுமான் மருகனற்
சத்திகத்தன் சந்தாசலச் செந்தூர்வாழ் தாருகாரி
வலாரிமக ணைகைப்
பத்திமுத் துக்குறத்தி மனுளனைப் பணியும்நம்
பொன்னுசாமி மகிபனைத்
தித்திக்கத் தகுமென் மொழிகூறிநீ சேரச்
செய்திடுவாய்மடக் கிள்ளையே.

உரை :—மடக்கிள்ளையே - இளங் கிளியே!, அத்தி கத்த அதித்து - யானை ஒலியிட அதனை அணுகி, அக்காவினை அட்ட ஆழி நெடுமால் - அந்த முதலையைக் கொன்ற சகராயதத்தை யுடைய பெரிய விண்டுவுக்கு, மருகன் - மருமகனும், சற்சத்தி கர்த்தன் - நல்ல திறமையுடைய முதல் வனும், சந்தாசலச செந்தூர் வாழ் - சந்தன மலைபோன்ற செந்திற்பதியில் வாழ்கின்ற, தாருகாரி - தாருகாசுரனைக் கொன்றவனும், வலாரி மகள் - இந்திரன் மகளாகிய தெய்வயானைக்கும், கைப்பத்தி முத்துக் குறத்தி - முத்துப்போன்ற பல் வரிசையுடைய வள்ளி நாயகிக்கும், மனுளனை - கணவனு மானவனை, பணியும் நம் பொன்னுசாமி மகிபனை - தொழுகின்ற நமது பொன்னுசாமி வேந்தனுக்கு, தித்திக்கத தகும் மென்மொழி கூறிநீ சேரச செய்திடுவாய் - இனிமை பயக்கதக்க மெல்லிய சொற்களை நீ சொல்லி அவன்வந்து அணையும்படி நீ செய்வாயாக, எ - று.

13. ஆரம்பூணும் வரைக்குயமீதிலே யனங்கவேட
னலர்க்கணை தூவவே
ஆரமபூணுண் டுகிலுந் துயிலுநன் னம்மனை
கழங்குமட கிள்ளையும
ஆரம்பூணுந் துறந்துமெய் சோர்ந்தன ளவனைக்காத்
தணைத்தாள்வதுன் பாரமே
ஆரம்பூணுடை நற்குந்தவீரனே யண்ணலே
பொன்னுசாமி குபேரனே.

உரை :—ஆரம் பூணுடை நற்குந்த வீரனே - மாலையும் அணியும் தரித்த அழகிய வேலாயுதததை ஏந்திய வீரனே!, அண்ணலே - சிறந்த ஆண்மகனே!, பொன்னுசாமி குபேரனே - பொன்னுசாமி யென்னும் பெருஞ் செல்வனே!, ஆரம்பூணும் வரைக்குய மீதிலே - முத்துமாலை

தரித்த மலைபோன்ற கொங்கைமேலே, அணங்கவேள் தன் மலர்க்கணை ஐவவே - மன்மதன் தன்னுடைய மலர்வாளிகளைச் சிதறவே; ஆரம் பூண் முண்டகிலும் - பூமாலை முதலை மெல்லிய ஆடை யென்பவற்றையும், துயிலும் கல்லம்மனை கழங்கும் மடக்கிள்ளையும் - அக்கத்தையும் அம்மானை விளையாடுதற்குரிய அழகிய கழற்சிக்காய்களையும் இளங் கிளிகளையும், ஆர் அம்பு ஊணும் - உட்கொள்வதற்குரிய தண்ணீரையும் உணவையும், துறந்து மெய் சோர்ந்தனள் கைவிட்டு உடல் வாடினள், அவளைக் காத்து அணைத்து ஆள்வதன் பாரமே - அவளைப் பாதுகாத்துத் தழுவி யாட்கொள் வது உன் பொறுப்பே ஆகும், எ - று.

பவனிச் சிறப்பு

14. எங்குந்தம் புகழோங்க வளித்தமூ வேழ
வள்ளல்களு மிவனீகையால்
தங்குந்தங்கு மிவற்கே புகழெனச் சாற்றுஞ்
சற்குணனும் பொன்னு சாமிமா
தங்கமேற்கொடு போந்தனனோர் தினஞ்சாரும
வீதியிற்கண்டார் மயல்கொடு
சங்குந் தங்கலையுந் தரியாதுளந் தளர்ந்து
நாணமுந்தா மிழந்தார்களே.

உரை :—எங்கும் தம்புகழ் ஓங்க அளித்த மூவேழு வள்ளல்களும் - எவ்விடத்திலும் தம் புகழ் நிலைத்து விளங்கும்படியாக ஈகையியற்றிய முதலேழு இடையேழு கடையேழு சோந்து ஆகிய இருபத்தொரு வள்ளல்களும், இவன் ஈகையால் தங்கும் தங்கும் இவற்கே புகழ் எனச சாற்றும் - மிகுந்த கொடையினாலே இவனுடைய புகழே நன்றாக நிலைக்க வல்ல தென்று கூறக்கூடிய, சற்குணனும் பொன்னுசாமி - நற்குணவாகிய பொன்னுசாமி வள்ளல், மாதங்க மேற்கொடு போந்தனன் ஓர் தினம் - ஒருநாள் யானைமேற் பவனி வந்தான, சாரும் வீதியிற் கண்டார் மயல் கொடு - பவனிபோன தெருவில் அவனைப் பார்த்தவர்கள் மேகதினாலே, சங்கும் தங்கலையும் தரியாது உளம் தளர்ந்து - சங்கையும் தாங்கள் அணிந்திருந்த ஆடையையும் நழுவவிட்டு மனம் வாடி, நாணமும் தாமிழந்தார்களே - வெட்கத்தையும் கைவிட்டாராகள், எ - று.

தார் வேண்டல்

15. மட்டுத்தார்க் கணையான் மதன்மாதினை வருத்தத்
தாண்மனநொந்து மயங்கிப்போர்க்
கட்டுத்தார்ப் புவிக்கொரு வீரனின் கருத்துத்
தானிரங்கிப் புயமேவுபூ

மொட்டுத்தார் தரவாங்கி வரச்சொன்னுன் முத்தத்தார்
நிரையொத்த முறுவலாள்
தட்டுத்தா னுரையாம லருளரிச் சந்திரனே
பொன்னுசாமி நரேந்திரனே.

உரை :—போர்கட்டுத்தார் புரவிக்கொரு வீர - போரில் கிண்கிணி மாலைக் கட்டப்பெற்ற குதிரைகளைச செலுத்துவதில் இணையற்ற வீரனே!, அரிசசந்திரனே - அரிசசந்திரன் போன்ற மெய்யனே!, பொன்னுசாமி நரேந்திரனே - பொன்னுசாமி மன்னனே!, மட்டுத்தார்கணையான் மதன் - தேன் துளிகளும் பூமாலை யணிந்த அமபினையுடைய மன்மதன், மாதினை வருத்த - பெண்ணைத் தன்புறுதலியதால், தான் மனம் கொந்து மயங்கி - ... .., முத்தத்தார் நிரைபொத்த முறுவலாள் - முத்துமாலை போன்ற பல் வரிசையுடைய மாதானவன், நின் கருத்துத தானிரங்கி மேவு பூமொட்டுத் தார் தர வாங்கி வரச சொன்னுர் - நீ நெஞ்சில் இரக்கம் வைத்து உன் தோளில் பொருந்திய முகை மாலையைத தரும்படி கேட்டு வாங்கி வரும் படி சொன்னுன், தட்டுத்தான் உரையாமல் அருள் - தடை கூறாமல் அதை யளித்தருள்வாயாக, எ - று.

தோழி கூற்று

16. பாலனத்தை விடுதலுநின் கண்ணிவள்
பாலனத்தைவிடுத்தனள் வேணுகோ
பாலனத்தை யுடையோன் மருகன்கோ
பாலனத்தையல் பாகனருள்பரன்
பாலனத்தை யணிநாகி வள்ளிகோபாத
பத்மமபணி பொன்னுசாமிநீ
பாலனத்தைப் புரிசிலை மாரனமபால்
வருததப்படாம லிப்பாவையே.

உரை:—நத்தை யுடையோன் வேணுகோபாலன் மருகன் - சங்கைத் தரிததவனுகிய வேணுகோபாலனது மருமகனும், கோபாலன் அத்தையல் பாகன் பரன் அருள் பாலன்-நெற்றிக்கண்ணை யுடையவனுகிய உமையொரு பாகனுகிய மேலோன் பெற்ற புதல்வனும், நத்தையணி நாகி வள்ளி கோ-நதென்ற மூக்கணியை மூகிற் றரித்த வள்ளியம்மை தலைவனுமாகிய முருகப் பெருமானது, பாதபத்மம் பணி பொன்னுசாமி - திருவடித தாமரைகளைப் பணிகின்ற பொன்னுசாமி வள்ளலே!, பாலனத்தை விடுத்து நின்கண் இவள் பாலனதத்தை விடுத்தனன் இவள் உண்ணிடத்தில் பாலுண்ணும் அன்னத்தை தனாக விடுத்துத் தான் பாற் சோறுண் பதைத் தவிர்ந்தாள், இப்பாவை சிலை மாரன் அம்பால் வருத்தப்படாமல்

பாலனதனைப் புரி - இத்தப் பெண்ணினவன் வில்லபுடைய மன்மதன் கணையால் துயரப்படாதபடி பாதுகாத்தலே நீ செய்வாயாக, எ - று.

தலைவி கூற்று

17. மானேசரந் தொடுத்த மதனங்கம
விழித் தெரிததோன் மான் மலர்க்கோன்
மானேசாதவர் பரவும் பரணன்பன்
சேதுபதி மன்னன் வாயில்
மானேசராம் பொன்னுசாமிவள்ள
லென்னையவர்மருவ நல்ல
மானேசராகும்வணைகநீ புரிந்தா
லிவ்வுலகில் வாழுவேனே.

உரை:—மானே - தோழியே !, சரம் தொடுத்த மதன் அங்கம் விழித்து எரிததோன் - தன்மேல் அம்பு விடுத்த மன்மதனுடலை நெற்றிக் கண்ணால் பார்த்து எரித்தவனும், மான் மலர்க் கோமான் நேசர் ஆதவர் பரவும் பரன் - திருமாலும் மலரோனுகிய பிரமனும் நேசத்தில் சூரிய னென்று சொல்லத்தகவர்களும் வழிபடுகின்ற மேலான கடவுளுமாகிய சிவபெருமானுக்கு, அன்பின் சேதுபதி மன்னன் - அன்பனுகிய சேதுபதி யரசனின், வாயில் மானேசராம பொன்னுசாமி வள்ளல - அரண்மனை மானேசராகிய பொன்னுசாமி வள்ளலென்பவர், என்னை அவர மருவ நல்லமா நேசராகும் வரை - என்னை யவர் வந்து தழுவத்தக்க நல்ல காதல ராகும்படி, நீ புரிந்தால் - நீ செயதால் இவ்வுலகில் வாழுவேனோ- ... ., எ - று.

18. சுரர்க்கோர் சுலையமுதைத் தூநெடுமா லீந்தனன்பூ
சுரர்க்கோ ரறுசுலவசேர் தூவமுதை யீந்தனீ
மண்டலத்தின் மூன்றடிமண் மாவிரந்தான் றீனர்கள்க
மண்டலத்தி னல்குரவு மாறறிதி சொரிந்தனீ
எனவாங்கு.
சக்கரத்தா னிருதர்களைத் தான்றுணித்தா ரைணனஞ்
சக்கரத்தா னுட்பகையைத் தான்றுணித்தாய் நீசபையில்
எல்லார் வஞைக்காடை யீந்தரிமா னங்காத்தான்
எல்லார்க்கு நீயாடை யீந்தபி மானங்காத்தாய்
நல்லா ரணிகவர்ந்தா ஞாயண னறிந்த
நல்லா ரணியவணி நல்கினீ நானிலத்தில்
வான்றரு வெனவே வழங்கு கொடையோய்
மீன்றரு கண்ணினள் விழைவெனு நறவை

உண்டு களித்தே யொளிவளை சோரக்
கண்டுபா லனமுங் கொண்டில ளணைமேற்
கண்டுயி லாது தொண்டைவாய் துடிப்பக்
காவிநீர் வார வோவியம் போன்றனள்
கருப்புக் கழையைக் குழைத்துத் தேற்றுளி
அருப்புக் கணையை விடுத்தன னனங்கவேள்
வெமபுலி யேறென விண்மிசை யூர்தரும
அமபுவி யோவிவ ளாவிமேற் றீவின
தோவறு தென்றலுங் காவுறு குயிலும
தண்ணுறுஞ் சிந்தும பெண்ணைவா ழுன்றிலும
சந்தத முடற்றும் வெந்துயர் தணிப்பாய்
நன்னய விராம நாதபுர வாழ்
பொன்னு சாமியெனும் பூபதியே.

உரை :—சுவர்க்கோர் சுவை யமுதைத் தானெடுமால் ஈந்தனன் - பரிசுத்தமான பெரிய திருமால் தேவாகளுகு ஒரு சுவையுடைய அமுதத்தையளித்தான், பூசுராகளோர் அறுசுவை சோறு அமுதை ஈந்தனை நீ - நீ உலகத்தில் வாழும் தேவர்களுக்குப் பரிசுததமான அறுசுவை யுண்டியளித்தாய், மண்டலதலில் மூன்றடி மண் மாலிரந்தான் - உலகத்தில மூன்றடி மண் வேண்டுமென்று விஷ்ணு மாவலிச சக்கரவர்த்தியிடம் பிசசை கேட்டனர, நீ தீனாகள் கமண்டலதலில் நல்குரவு மாறநிதி சொரிந்தனை - வறிய வாகள் கைப்பாததிரத்தில் அவர்களுடைய வறுமை நீகும்படியாக நீ செல்வத்தை வழகினாய், நாரணன் சகரததான் நிருதாகளேத தான் துணிததான் - நாராயணன் சகராயுதத்தால் அரக்கர்களைக்கொன்று அழித்தான், நீ அஞ்சக்கரத்தான் உட்பணையைத் தான் துணித்தாய் - நீ பஞ்சாட்சர செபததால் காமக் குரோத முதலிய மனப் பகையை ஒழித்தாய், சபையில் எல்லார் வளைக்கு ஆடை ஈந்து அரி மானங் காத்தான் - துரியோதனன் சபையில் ஒளி பொருந்திய வளையலணிந்த துரோபதைக்கு உடை வளரும்படி செய்து திருமால் அவளுடைய மானத்தைக் காப்பாற்றினர், எல்லார்க்கும் நீ ஆடை ஈந்து அபிமானங் காத்தாய்-எல்லார்க்கும் நீ உடைகொடுத்து உன்னன்னைப் பேணினை, நாணிலதில் - இவ வுலகத்தில், நாராயணன் நல்லரர் அணி கவாந்தான் - கண்ணன் பெணகளுடைய ஆபரணங்களைக் கவர்ந்து விளையாடினன், அறிந்த நல்லார் அணியை நீ அணி நல்கினை - அறிஞர்களாகிய நல்லவர்கள் அணியும்பொருட்டு நீ ஆபரணகளைக் கொடுத்தாய், வான்தருவெனவே வழகு சொடையோய் - கற்பக மரம்போலக் கொடுக்கின்ற வள்ளற் றன்மையை புடையவனே !, நன்னய இராமநாத புரம் வாழ் பொன்னுசாமி யென்னும் பூபதியே - நலங்கள் பொருந்திய

இராமநாதபுரத்தில் வசிக்கின்ற பொன்னுசாமி வேந்தனே!, மீன் தரு கண்ணினள் விழைவெனும் நறவை உண்டு களித்தே - மீன்போன்ற கண்ணையுடைய பெண்ணினவள் விருப்பமென்னும் தேனை யுண்டு மகிழ்ந்து, ஒளி வளை சோர - ஒளி பொருந்திய தன் வளையல்கள் நழுவப்பெற்று, கண்டு பாலனமும் கொண்டிலன் - கற்கண்டும் பாற்சோறும் உண்ணவில்லை, அணைமேல் கண் துயிலாது - படுக்கைமேற் றூங்கமாட்டாமல், தொண்டை வாய் துடிப்ப - தொண்டைக் கனிபோன்ற சிவந்த இதழ் துடிக்கவும், காவி நீர் வார - குவளை போன்ற கண்களி லிருந்து கண்ணீர் சொரியவும், ஓவியம் போன்றனள் - சித்திரப் பதுமைபோல அசைவற்றிருந்தாள், அங்க வேள் - உருவில்லாத மன்மதன், கருப்புக கழையைக் குழைதது - கருப்பு நிறமுள்ள கரும்பு வில்லை வளைதது, தேன் துளி அருப்புக் கணையை விடுதனன் - தேனைச சிந்துகின்ற அரும்பாகிய அம்புகளைச செலுத்தினன், வெம்புலி எறென - கொடிய வேங்கைபோல, விண்மிசை யூர்தரும் அம்புலிபோ இவளாவிமேல் தாவினது - ஆகாயத்திற் செல்லு கின்ற சந்திரன் இவள் உயிமேல் பாய்ந்தான், ஓவறு தென்றலும் காவுறு குயிலும் - ஓயாத தென்றற் காற்றும் சோலையிலிருந்து கூவும் குயிலும், தண்ணுறுளு சிந்தும் - குளிராசசி பொருந்திய கடலும், பெண்ணைவாழ் அன்றிலும் - பனை மடலிலிருக்கும் அன்றிற் பறவையும், சந்ததமுடற்றும் - எப்போதும் துன்பஞ்செயயும், வெந்துயர் தணிப்பாய் - இவற்றாலாகிய கொடிய துன்பதைதத தீர்ப்பாயாக!, எ - று.

வேதநாயகம் பிள்ளை

பாடியது

உத்தியோகத்திலிருந்து ஆறுதலைப்பற்றிப் பாடியது

1. *தறைநீங் கினவுத்தி யோகத்தைக் கைவிட்ட தண்மையினற்*
சிறைநீங் கினமபல தீயர்க்குள் ளாகிச் சிறுமையுறுங்
குறைநீங் கினந்துட்டர் கூட்டமு நீங்கினங் கூடிந்துன்பப்
பொறைநீங் கினரங் கறைநீங் கினமகிழ் பூனெஞ்சமே.

உரை:—நெஞ்சமே - மனமே!, தறை நீஙகின உத்தியோகத்தைக் கைவிட்ட தன்மையினல் - தறையிட்டாற்போல் ஓரிடத்தி லொட்டிக் கொண்டிருப்பதாகிய உத்தியோகத்தைவிட்டு நீங்கினமையால், சிறை நீங கினம் - கட்டுப்பாட்டை விட்டு நீஙகினேம், பல தீயர்களுள்ளாகிச சிறுமை யுறும் குறை நீஙகினம் - பொல்லாதவர் பலர்க்குக் கீழ்ப்பட்டிருந்து இழி வடையும் நிலைமையை நீங்கினேம், துட்டர் கூட்டமும் நீங்கினம் - குறும்பா

களுடைய சாவகாசமும் தொலைந்தது, கூடுந் துன்பப் பொறை நீங்கினம் - வந்து சேரும் துன்பங்களின் சுமையும் ஒழிந்ததது; நம் கறை நீங்கினம் - நம் மூடைய குற்றமும் நீங்கப்பெற்றோம், மகிழ்வுண் - (ஆதலால்) களிப் படைவாயாக, எ - று.

2. தண்டுகொண் டோட்டினும் போகாம னம்மைத் தரிசிக்கவே
பண்டுவந்தோ ரின்றுதாம பூலமலைவத்துப் பரிந்தழைத்துத்
திண்டுமிண்டுஞ் சொல்லி வாரா திருந்தனர் செய்கையெல்லாம்
கண்டுகொண்டோமினித்தொண்டுகொண்டோநங் கடவுளுக்கே.

உரை :—தண்டுகொண்டு ஓட்டினும் போகாமல் - கோலெடுத்துத் தாக்கினாலும் நம்மைவிட்டுப் போகாமல், நம்மைத் தரிசிக்கவே பண்டு வந்தோர் - நம்மைப் பார்க்கவேண்டுமென்று உத்தியோகமுள்ள போழ்து வந்தவர்கள், இன்று தாம்பூலம் வைததும் பரிதது அழைத்தும் - இப்போது வெற்றிலைபாகு வைததுப் பிரியமாய்க கூப்பிட்டாலும், திண்டு மிண்டுஞ் சொல்லி வாராதிருந்தனர் - சாகுப் போக்குச சொல்லி வாராமலிருந்தார் கள், எகை எல்லாம் கண்டு கொண்டோம் - அவர்கள் இயற்கையான செய் கைகள முற்றும் அனுபவித்துப் பார்த்தோம், இனி நம் கடவுளுக்கே தொண்டு கொண்டோம் - இனிமேல் நம்முடைய தெய்வத்திற்கே நாம அடியவராயினும், எ - று.

3. வீடு நிலங்கள் பொருளை விற்பாரிந்த மேதினியில்
நீடு மெண்சாண் மெய்யை யோர்சாணுதர நிமித்தமவிற்று
நாடு மரசர்க் கடிமையென் றேமுன்பு நாங்கொடுத்த
ஏடு கிழிபட்ட தன்றே வுத்யோக மிழந்ததுவே.

உரை :—மேதினியில் வீடு நிலங்கள் பொருளை விற்பார் - இந்த வுலகத் தில் தாவரச சொத்தான வீடு நில முதலியவைகளையும் சங்கமச சொத்தா கிய மற்றப் பொருள்களையும் மனிதர்கள் விற்பனை செயவார்கள், நீடும் எண்சாண் மெயயை ஓர் சாண் உதர நிமித்தம் விற்று - ஒரு சாணளவுள்ள வயிற்றின் பொருட்டு எட்டுச சாணுள்ள உடம்பினை விற்பனைசெயது, நாடும் அரசர்க்கு அடிமையென்றே - நாம் உத்தியோகத்தின் பொருட்டு நாடிய அரசர்க்கு நா அடிமை யென்பதாகக் குறிப்பிட்டு, முன்பு நாம் கொடுத்த ஏடு கிழிபட்டதன்றோ - உத்தியோகம் ஏற்பட்டபொழுது நாம் ஏற்படுத்திய அடிமைச சீட்டு கிழிகப்பட்ட தென்பதல்லவா உத்தியோகம் போனது, எ - று.

4 ஈனத்தி லேபிறந் தோனிறை யாய்வரி னென்றுமது
பானத்தி லேபரி தானத்தி லேஜை பழகியவ
மானத்தி லேமிகுத் தோர்க்கதி காரம வழங்கிடுவன்
ஞானத்தி லேசிறந் தோரையெல் லாந்தள்ளி ஈசுவிப்பனே.

உரை :—ஈனத்திலே பிறந்தோன் - மிகத் தாழ்வான நிலையிற் பிறந்தவன், இறையாய் வரின் ஆலைமை யதிகாரியாய் வந்தால், என்றும் - எக்காலத்திலும், மதபானத்திலே பரிதானத்திலே கைபழகி - கட்குடியிலும் லஞ்சம் வாங்குவதிலும் தேர்ச்சிபெற்று, அவமானத்திலே மிகுத்தோர்க்கு - மானக்கேடு பெறுவதிலே சிறந்தவர்களுக்கு, அதிகாரம் வழங்கிடுவன் - உத்தியோக அதிகாரம் கொடுத்திடுவான், ஞானத்திலே சிறந்தோரை எல்லாம் தள்ளி வைப்பனே - அறிவிலே சிறந்தவர்களை யெல்லாம் வேலையை விட்டு நீக்கித் தண்புறச செய்வான், எ - று.

5. ஒருநாளு மேயுனைப் பாராதி ரோமுனை யுற்றிடுநாள்
திருநாள்மற் றியாவும் வெறுநா ளெனமுன்பு செப்பியவர்
அருநாள் பலசென்றும் பாரா திருந்தன ரண்டிடநம்பால்
வருநா ளவர்க்குக் கருநாளென் றுயதென் மாயநெஞ்சே.

உரை :—மாய நெஞ்சே - கபடமான மனமே!, ஒரு நாளுமே உனைப் பாராது இரோம் - ஒரு நாள்கூட உன்னைப் பாராமல் நாங்களிருக்க மாட்டோம், உனை உற்றிடுநாள் திருநாள் - உன்னை நெருங்கிப் பார்த்த நாளே சுபதினம், மற்று யாவும் வெறுநாள் எனச செப்பியவர் - உன்னைப் பாராத நாளெல்லாம் பயனற்ற நாள் என்று பொய்யாய்ப் புகழ்ந்து பேசியவர்கள், அருநாள் பல சென்றும் பாராது இருந்தனர் - அருமையான நாட்கள் பல கழிந்தும் நம்மை வந்துப் பாராமலிருந்தார்கள், அண்டி நம்பால் வருநாள் அவர்க்குக் கருநாள் என்று ஆயதென் - நெருங்கி நம்மிடம் வரக்கூடிய நாள் அவருக்கு அமங்கலமான நாளானதற்குக் காரணமென்ன ?, எ - று.

6. நீருள்ள மட்டுங் குளநாடும் பக்கி நிதிமடவார்
சீருள்ள மட்டுந் தொடர்வாருத் யோக சிலரக்கியமாம்
பேருள்ள மட்டு முறவாடிப் பின்பு பிரிந்திடுவார்
பாருள்ள மட்டும பழிச்சுமை தாங்கிய பாதகரே.

உரை :—நீருள்ள மட்டுங் குளநாடும் பக்கி - குளத்தில் தண்ணீரிருக்குமவரை பறவைகள் அந்தக் குளத்திற்கு விரும்பிச் செல்லும், மடவார் நிதி சீருள்ளமட்டும் தொடர்வார் - பெண்கள் செல்வச் சிறப்புள்ளவரையொருவனைப் பின்பற்றுவார்கள், பாருள்ள மட்டும் பழிசசுமை தாங்கிய பாதகரே - உலகமுள்ளவரை யிகழ்சசிச் சொல்லைத் தாங்கக்கூடிய கீழோர், உத்தியோக சிலாக்கியமாம் பேருள்ளமட்டும் உறவாடிப் பின்பு பிரிந்திடுவார் - உத்தியோக மேன்மையுடையவர் என்ற சொல் நிலைக்கும் வரை யன்பு காட்டி உத்தியோகம் நீங்கியபின் தாங்களும் நீங்கிவிடுவார்கள், எ - று.

7. தோமிருந்த தொழிலொன்றே தொலைந்ததன்றி
யறிவொழுக்கஞ் சுகங்களோடு
நாமிருந் தோமுரை யாடநாவு மிருந்தது
பழைய நட்பிலேருந்
தாமிருந் தாரவர் நடக்கத் தாளுமிருந்தன
திதமுந்தடை யொன்றின்றித்
தேமிருந்த நம்வீடு திறந்திருந்து மவர்
வாராச்செய்கை யென்னே.

உரை:—தோமிருந்த தொழில் ஒன்றே தொலைந்ததன்றி - குற்றங் கலந்த உத்தியோக மொன்றே போனதல்லாமல், அறி வொழுக்கம் சுகங்க ளோடு நாமிருந்தோம் - ஞானம் ஒழுக்கம் நல்லதன்மை யென்பவற்றோடு நாமிருந்தோம், உரையாட நாவுமிருந்தது - பேசுவதற்கு நாக்குமிருந்தது, பழைய நட்பிலேரும் தாமிருந்தார் - .., அவர் நடக்கத் தாளு மிருந்தது- அவர்கள் நடந்து நம் வீட்டிற்கு வருவதற்கு அவர்களுக்குப் பாதங்களும் இருந்தன, எதும் தடையொன்றின்றி தேமிருந்த நம்வீடு திறந்திருந்தது - நம்முடைய இனிய வீட்டிற்குள் வருவதற்கு வீட்டு வாசல் திறந்திரு னிருந்தது, அவர் வாராச செய்கை எனனே - அருமை சினேகிதர் வராம லிருந்ததற்குக் காரணம் யாதோ?, எ - று

8. அருங்கால் பதரை யகற்றல்போர் பாரில்
ஒருங்கா வதிகார மோய—தெருங்கிவருந்
துட்டரெலா நமமைவிட்டுத் தூரவகன் றூர்நமபால்
சிட்டரெலாம் வந்தார் தெரிந்து.

உரை:—பாரில் அருங்கால் பதரை அகற்றல்போல் - உலகத்தில் அரு மையான காற்றானது பதர்களை யடித்துகொண்டு போவதுபோல, ஒருங்கா அதிகாரம் ஒய - பொருந்தாத உத்தியோகம் ஒழியவே, தெருவகி வரும் துட்டரெலாம் நம்மை விட்டுத் தூர அகன்றூர் - ..., நம்பால் தெரிந்து சிட்டரெலாம் வந்தார் - நாம் அதிகாரத்திலிருந்து அகன்றிருப்பதைத் தெரிந்து நல்லொழுக்கமுடைய எல்லாரும் நம்மிடம் வந்தார்கள், எ - று.

9. ஆதியையர் சுப்பைய ரப்பய்ய ரென்றுபய
வாதியைய ராகவரு வோர்பே—ரோதிய
பன்னுள் கழிததேன் பரனையுன் னுமமினி
எந்நாளும் பேசவர மீ.

உரை: —ஆதியையர் சுப்பையர் அப்பய்யரென்று-ஆதியையர் முதலிய பேர்களோடு வருகின்ற, உபயவாதி ஐயாக வருவோர் - இருகட்சி யையன் மாரும் நியாய மன்றத்திற்கு வருவதால், பேரோதியே பன்னுள் கழித்

தேன் - அவர்கள் பெயர்களைச் சொல்லியே பலநாள் செலவழித்தேன், பரனே உன்னுமம் இனி எந்நாளும் பேச வரம் ஈ - கடவுளே உன்னுடைய பெயரை எப்போதும் சொல்லும்படியான வரத்தைக் கொடுத்தருள்வீராக !, எ - று.

திருவாவடுதுரைச் சுப்பிரமணிய தேசிகர்மீது பாடியவை

10. விதியிருந்த பதியெனுஞ்சுப் பிரமணிய
தேசிகமெய்ஞ் ஞானக்குன்றே
துதியிருந்த நின்புலவன் சொல்வழியே
பல்வழியுந் தோன்றுகீயென்
மதியிருந்தாய் பிரிந்திடவு மனமபொருந்தா
யெனவிருந்தேன் வான்கோமுத்திப்
பதியிருந்தா யெனவந்த மாபுலவன்
பொய்சொலவும் படித்தான்மாதோ.

உரை:—விதி இரும் தபதியெனும் சுப்பிரமணிய தேசிக - பிரமன் போன்ற பெரும் தவதனினென்று சொல்லத்தகக சுப்பிரமணிய குருவே !, மெய்ஞ்ஞானக் குன்றே - உண்மை யறிவென்னும் மலையே, துதி இருந்த நின் புலவன் சொல்வழியே - புகழோடு கூடிய உனது வித்துவான் சொன்ன சொல்லின் கருத்தினை யாய்ந்து பார்க்கின், பல் வழியும் தோன்றும் - பல முறைகளும் மனதிற் புலனுகின்றன, நீ என்மதி இருந்தாய - என்னறி வீடமாகத் தங்கினை, பிரிந்திடவும் மனம் பொருந்தாய் என இருந்தேன் - அங்கே யிருந்து பிரிந்துபோகவும் நீ ஒருப்படமாட்டாயென்று எண்ணி யிருந்தேன், வான்கோ முத்திப் பதியிருந்தாயென - நீ திருவாவடு துறைத்தலத்தி. விருந்தாயென்று, பொய் சொலவும் - ....., வந்த மாபுலவன் படித்தான் - வந்த பெரிய வித்துவான் கற்றுக்கொண்டான், மாதோ - அசை, எ - று.

11. இல்வாழ்வை நீத்தறமேற் கொண்டநீ பிறரில்லிடத்துச்
செல்வாழ்வு சற்றும்விரும்பா யென்பா ரிதுசித்திரமே
புல்வாழ்வுடையவன் வீடெங்குநீ பரிபூரணஞப்
நல்வாழ்வுற் றுய்சுப்பிர மணியானந்த நற்றவனே.

உரை:—சுப்பிரமணியானந்த நற்றவனே - சுப்பிரமணியப் பேருடைய பேரின்பத்திற் கேதுவாகிய நல்ல தவமுடையவனே !, புல் வாழ்வுடை என்றன் வீடெங்கும் - சிறிய வாழ்க்கையை யுடைய எனது இல்லத்தில் எவ்விடத்திலும், நீ பரிபூரணஞய நல வாழ்வுற்றுய் நீ முழுமுதற் கடவுள் போல நன்றாக நிறைந்திருக்கின்றாய், இல்வாழ்வை நீத்து அறமேற் கொண்ட நீ - இல்லற வாழ்க்கையைத் துறந்து துறவறத்திற் புகுந்த நீ

பிறர் இல்லிடத்துச செல் வாழ்வு சற்றும் விரும்பாய் என்பார் - மற்றோர்க ளுடைய வீட்டுக்குப் போகின்ற வாழ்க்கையைக் கொஞ்சமும் இசைக்க மாட்டாயென்று உலகினர் கூறுகின்றார்கள், இது சித்திரமே - இது அதி சயமே, எ - று.

12. குருவுங் கிரகணமுங் கூடலாற் கங்குன்
மிகுவென் றுளமே வெருவல்—நகுதுறையைச்
செப்பரிய மாச்சுப் பிரமணிய தேசிகனும
அப்பரிதி யீங்குதித்த தால்.

உரை:—குருவுங கிரகணமும் கூடினால் - அமாவாசையும் கிரகணமும் ஒன்றாக ஏற்பட்டால் கங்குல் மிகுமென்று - இருள் மிகுதிப்படுமென்று, உளமே வெரு வால் - நெஞ்சமே பயப்படாதே, நகுதுறையைச செப்பரிய மா சுப்பிரமணிய தேசிகனும் - விளக்கமுடைய திருவாவடுதுறையில் வாழும் பேசுதற்கரிய மேன்மையுடைய சுப்பிரமணிய தேசிகராகிய, அப் பரிதி ஈங்கு உதித்ததால் - அந்தக் கதிரவன் இவ்விடத்தில் உதயம் செய்வ தால், என்க, எ - று.

13. மாதவச்சுப் பிரமணிய தேசிக மேலோ
யுவர்ப்புவாரி மூழ்குமு
ஆதவன் கீழ்த்திசை யுதிக்குஞ் சுடுமணுகு
மதியழிக்கு மத்தமிக்குமு
சாதகமேற் றிசையுதிப்பாய் கிழலளிப்பாய்
மதியளிப்பாய் தாணிமீது
போதகுணக் கடல்படிவா யத்தமியா யுனைக்
கதிரோன் பொருவானன்றே.

உரை:—மாதவச சுப்பிரமணிய தேசிக மேலோய் - பெருந் தவமுடை யவரே, சுப்பிரமணிய தேசிகரே! உயர்ந்தவரே !, ஆதவன் உவாப்பு வாரி மூழ்கும்-சூரியன் உவர்கடலில் மூழ்துவான், கீழ்த்திசை யுதிக்கும் - கீழ்த் திக்கில் உதயமாகும, சுடும் - வெப்பஞ் செய்யும், அணுகும் மதி யழிக்கும்- நெருங்குகின்ற சந்திரனுடைய ஒளியைக் கெடுப்பான், அத்தமிக்கும் - மாலை யில் மறையும், சாதக மேற்றிசை யுதிப்பாய் - உயர்வான மேலைதிசையிற் றோன்றுவீர் !, கிழல் அளிப்பாய் - நிழலைக கொடுப்பீர், மதியளிப்பாய்- அறிவு தருவீர், தவறுமல் நாளும் - தவறுமல் நாளதோறும், போத குணக் கடல் படிவாய் - ஞானத் தன்மையாகிய கடலில் மூழ்குவீர், அத்தமியாய்- மறையமாட்டீர், உனைக் கதிரோன் பொருவான் அன்றே - (ஆதலால்) உமக்குச சூரியன் ஒப்பாக மாட்டான், எ - று.

14. சுருதியோ ருருக்கொண் டன்னசுப் பிரமணிய மேலோய்
கருதி யின்னெருகா லுன்னைக் காணலா மெனுமவாவாற்
பொருதி யென்மனம பின்னீர்க்கப் பொறையுறும்பண்டிபூட்டு
மெருதுகள் முன்னே யிர்க்க வென்பதி யடைந்தேனனே.

உரை:—சுருதியோருருக் கொண்டன்ன சுப்பிரமணிய மேலோய் - ஞான நூல்களே ஓர் வடிவெடுத்ததாற்போல வந்த பெரியோய் !, கருதி இன்னெருகால் உன்னைக் காணலாம் எனும் அவாவால் - உன்னைப் பார்த்த பின்னும் மற்றொருமுறை பார்க்க வேண்டு மென்னும் விருப்பத்தாலே அங்ஙனஞ்செய்ய வெண்ணி, பொருது என் மனம் பின்னீர்க்க - என்நெஞ்ச மானது சண்டையிட்டுக் கொண்டு பின்னிழுக்கவும், பொறையுறும் பண்டி பூட்டும் எருதுகள் முன்னே ஈர்க்க - சுமை கொண்ட வண்டியிற் பூட்டின காளைகள் முன்னே இழுக்கவும், என் பதியடைந்தேன் - என்னிருப்பிடத் தைப் போய்ச சேர்ந்தேன், எ - று.

15. சூர்வந்து வணங்குமேன் மைச்சுப்பிர மணியதேவே
நேர்வந்து நின்னைக்கண்டு நேற்றிராதிரியே மீண்டேன்
ஊர்வந்து சேர்ந்தேனென்ற வுளமவந்து சேரக்காணேன்
ஆர்வந்து சொலினுங்கேளே னதனையிங் கனுப்புவாயே.

உரை:—சூரவந்து வணங்கு மேன்மைச சுப்பிரமணிய தேவே - சூரன முதலிய அசுரர்கள் வந்து தொழுகின்ற உயர்வுடைய சுப்பிரமணியக் கட வுள் போன்றவனே !, நேரவந்து நின்னைக் கண்டு நேற்று இராதிரியே மீண்டு என் ஊர வந்து சேர்ந்தேன் -....., என்றன் உளம் வந்து சேரக காணேன் - என்னுடைய மனமானது உனனிடம் தங்கிவிட்டபடியால் அது இங்கே வந்து சேரவிலலை, ஆர வந்து சொலினும் கேளேன்-அது இங்கே வந்து இருப்பதாக யார் சொனனாலும் ஒப்புககொள்ள மாட்டேன, அதனை இங்கு அனுப்புவாயே- ....., எ - று.

16.வானுடு மண்ணுடு மலிபுகழ் சுப்பிரமணிய வள்ளலேநின்
பானுடு மாவீர பத்திரவே லெனக்கினியன் பாலர்க்காசான் [றந்
தானுடுந்தொழிலுறுவான்சூரியமூர்தஙிச்செல்வன்றனக்கோர்மாற்
தேனுடுன்றிருவாக்காற்செப்பின்மனேபீட்டமெலாஞ்சித்திபாமே.

உரை:—வானுடும் மண்ணுடும் மலிபுகழ் சுப்பிரமணிய வள்ளலே - வானுலகத்திலும் பூவுலகத்திலும நிறைநத கீர்த்தியையுடைய சுப்பிரமணிய தேசிகராகிய சிறந்த கொடையாளியே, நின்பால் நாடு மா வீரபததிரவேள் எனக்கு இனியன் - நின்னிடதில் விருப்பதோடு வருகின்ற வீரபத்திர பிள்ளை எனக்கு நண்பன், பாலர்க்கு ஆசான் - குழந்தைகளுக்குப் போதகா சிரியன், தான் ஆடு தொழில் உறுவான் - தான் நாட்டியத தொழிலிற்

பயின்றவன், சூரிய மூர்த்திச செல்வன் - சூரிய மூர்த்தியின் மகன், தனக கோர் மாற்றம் - அவனுக்கு அனுகூலமான ஒரு சொல்லே, தேனூடும் உன் திரு வாக்கால் செப்பின் - தேனின் இனிமை கலந்த உன்னுடைய திரு வாக்கினைற் கூறினால், மனோபீட்டம் எல்லாம் சித்தியாமே-அவன் மனததில் விரும்பியதெல்லாம் நிறைவேறும், எ - று.

17. வானென் றுதவவருஞ் சுப்ரமண்ய வரோதயனே
தானென்று வெண்ணரன் பாடையிந்நாட்டிற் றலையெடுக்க
வேனென்று கேட்பவரில் லாத்தமிழை யினிதளிக்க
நானென்றுகங் கணங்கட்டிக் கொண்டாயிந்த நானிலத்தே.

உரை :—இந்த நானிலததே - இந்தப் பூமியின்மேல், வானென்று உதவவரும் சுபபிரமணிய வரோதயனே - மழைபோல உதவிசெயய வரு கின்ற சுப்பிரமணிய தேசிகராகிய வரததாற் பிறந்தவரே !, தானென்று வெண்ணரன் பாடை இந்நாட்டில் தலை எடுக்க - வெள்ளை மனிதனுடைய மொழியானது தானே உயர்ந்ததென்று சொல்லும்படியாக இந்த நாட்டில் மேன்மை பெறவும், ஏனென்று கேட்பவரில்லாத தமிழை - ஆதரிப்பா ரில்லாத தமிழ் மொழியை, இனிது அளிக்க நானென்று கங்கணங் கட்டிக் கொண்டாய் - நன்றாகப் பேணுவதற்கு நானிருக்கிறேனென்று விரதம் பூண்டீர், எ - று.

வாந்திபேதி காலத்திற் பாடியது

18 இலக்கணமெய்க் கரைமாத்தி ரையாமிவ் வளவுமின்றி
மலக்கண்வினை பிணியாற்பலர் மாய்ந்தனர் மண்டுமிந்நோய்
விலக்கவருள் புரிமூம்மல நோய்கெட வித்தகனே
நிலக்கணமார் சுப்பிரமணி யானந்த நின்மலனே.

உரை :—மூம்மல நோய்கெட வித்தகனே - ஆணவம் கன்மம் மாயை யாகிய மூவகைப் பாசங்களாகிய வியாதியைத தொலைப்பதறகு, நிலக்க ணமா சுப்பிரமணியானந்த நின்மலனே - நிலவுலகத்திற் றங்கியிருக்கின்றப் பேரின்ப வாணராகிய சுப்பிரமணிய தேசிகரே !, இலக்கணம் மெயக்கு அரை மாத்திரையாம் - இலக்கண நூலிற் கூறிய மெயயெழுத்திறகு மாத்திரை அரையே அதாவது இந்த விடத்தில் உடம்புக்கு வேண்டியது அரை மாத்திரையே. இவ்வளவும் இன்றி - அந்த அளவுங்கூடக கிடையா மல், மலக் கண் வினை பிணியில் பலர் மாய்ததனர் - மிகுதியாக மலங் கழிகின்ற பேதி நோயினால் மனிதர் பலரிறந்தார்கள், மண்டும் இந்நோய் விலக்க அருள்புரி - தொடருகின்ற இந்த வியாதியானது ஒழியும்படியாக அருள் செய்க, எ - று.

பஞ்சகாலத்தில் சுப்பிரமணிய தேசிகர்மேற் பாடியது

19. எரியொத்த பஞ்சமி டங் கரையொத்த திடங்கர்பற்றுங்
கரியொத்தன பல்லுயிர்க ளப்பஞ்சக் காமமடிக்க
வரியொத்தனன் சுப்பிரமணி யையனரிச் சக்கரஞ்
சரியொத்தன வவ்னீர்திடும் பொன்வெளிச் சக்கரமே.

உரை :—எரியொத்த பஞ்சம் இடங்களை யொத்தது - தீப்போலப் பரவின பஞ்சமானது முதலேயைப் போனறது, பல்லுயிர்கள் இடங்கா பற்றும் கரியொத்தன - பஞ்சத்தி லகப்பட்ட பல மனிதர்களும் முதலே பிடித்த யானேயைப் போன்றனர், பஞ்சகராமடிக்க அரியொத்தனன் சுப்பிரமணி ஐயன் - பஞ்சமாகிய முதலேயைக கொலவதற்குத திருமாலேப் போன்றவா சுப்பிரமணிய தேசிகா ஆவா, அவன் ஈரதிடும பொன் வெள்ளிச சக்கரமே அரிச சகரஞ் சரியொதத்தன - அவன் அளிதத்திடும பொற காசுகளும் வெள்ளிக் காசுகளும் திருமாலின் சகராயுதத்திற்குச சமமாவன, எ - று

20. ரேரென்றுமில் சுப்பிரமணி யாதிபின் னேப்பல்லோர்
காரென்றுசொல் வரக்காருமவஞ் சித்தவிக் காலத்திலே
ஊரென்றும் வாழுவறு சுவையுண்டி யுதவியுன்றன்
பேரென்று நிற்கச்செய் தாயுனைக்கா ரெனல்பேதைமையே

உரை :—ரேரென்றும் இல் சுப்பிரமணியாதிப - ஒருவரும் ஒப்பாக எப்போதும் சொல்லகூடாத சுப்பிரமணிய தேசிக முதல்வனே, நின் னேப் பல்லோ கா ா எனறு சொல்வா - உன்னேப் பலா மேகமென்றவ னென்பாகள், அக்காரும் வஞ்சிதத இகாலதத்திலே - மேகமும் மழை பெய்யாது பொயதத இந்தக் காலதத்திலே, ஊரென்றும் வாழ அறுசுவை உண்டி உதவி உன்றன் பேரென்று நிற்கச செய்தாய - ஊராா எப்போதும் பிழைக்கும்படியாக அறுசுவையோடு கூடிய உணவை யளித்து உன் பெயரை எகாலதத்திலும் நிலேதிறுத்தினாய், உனேக் கா ா எனல் பேதமையே - உனனே மேகதத்திற்கு ஒப்பானவ னென்பது அறியாமையாகும் (நீ மேகத்தினுஞ் சிறந்தவனென்பது கருதது), எ - று.

21. பாலிற் பெரியவன் மீனுட்சிசுந்தரப் பாவலனே
தாவிற் பெரியனவன் சேய்நினக்கஞ்சித் தானுரைக்க
நாவிற் பெரியவனு னென்சொற்கேட்டு நலமபுரியப்
பூவிற் பெரியவனீ சுப்ரமண்ய புராவலனே.

உரை :—பாலில் பெரியவன் மீனுட்சி சுந்தரப் பாவலனே - பாட்டுப் பாடுவதில் உயர்ந்த வித்வான் மீனுட்சிசுந்தரம் பிள்ளையாவர், தாவிப் பெரியவன் அவன் சேய் - இப்பொழுது படுறை தன்பத்தில் மிகுந்திருப்ப

வன் அவரது குமாரன், இனக்கு அதைத் தானுரைக்க நாவிற் பெரியவன் நான் - அவன் வருத்தத்தை யெடுத்துச சொல்ல மிகவும் ஆசைப்பட்டவன் நான், சுப்பிரமணியப் புலவனே - சுப்பிரமணிய தேசிகரெனும் பாதகாப் பாளரே!, என் சொற்கேட்டு நலம் புரிய - என்னுடைய சொல்லைக் கேட்டு நன்மை செய்வதற்கு, பூவிற் பெரியவன் நீ - இவ்வுலகத்தில் பெருந் தகுதி யுடையவர் நீரே, எ - று.

22. கோவைமறைப் பொருளையெலா முரைத்திடு சுப்பிரமணிய
குருவே வண்டு
பூவைமறப் பினும்வறியர் பொன்னைமறப் பினுந்தமிழ்நூற்
புலவ ரெல்லாம
பாவைமறப் பினுங்கமலம் பகலைமறப் பினும்நேசம
பழுத்த தொண்டர்
தேவைமறப் பினுனது சேவைமறப் பறியாதென்
சிந்தை தானே.

உரை :—கோவை மறைப்பொருளையெலாம் உணர்த்திடு சுப்பிரமணிய குருவே - தொகுதியாயுள்ள நூட்பமான நூல்களின் கருத்தை யெல்லாம் போதிக்கின்ற சுப்பிரமணிய தேசிகரே!, வண்டு பூவை மறப்பினும - வண் டானது மலரை மறந்தாலும், வறியர் பொன்னை மறப்பினும - தரித்திரர் கள் பொருளை மறந்தாலும, தமிழ்நூற் புலவரெல்லாம் பாவை மறப்பினும் - தமிழ்ப் புலவரெல்லாம தமிழ்ப் பாடலையே மறந்தாலும், கமலம் பகலை மறப்பினும் - தாமரைப்பூ சூரியனை மறந்தாலும், நேசம் பழுத்த தொண்டர் தேவை மறந்தாலும் - அன்புடைய அடியார்கள் கடவுளை மறந்தாலும், இனது சேவை மறப்பறியாது என் சிந்தைதானே - உன்னுடைய வழிபாட்டை என்னுடைய மனமானது மறப்பதற்கு அறிய மாட்டாது, எ - று.

கூடா வொழுக்கத்தாரைப் பழித்தல்

23. மேகங்கள் யாவுமுயர் விண்ணீங்கி வேசையர்தம்
தேகங்க ளில்வாசஞ் செய்கையான்—மாகமிசை
ஆசைக்குங் கார்காணை மவ்வேசை யர்கொடுப்பர்
காசைக் கொடுப்பவர்க்குக் காண்.

உரை :—மேகங்கள் யாவுமுயர் விண் ணீங்கி வேசையர்தம் தேகங்களில் வாசஞ் செய்கையால் - மேகங்களெல்லாம் உயர்ந்த ஆகாயத்திலிருந்து வில கிப்போய் வேல மாதருடைய உடம்புகளில் நோயாய்த தங்கிவிட்டபடியால், மாக மிசை ஆசைக்கும் கார் காணும் - வானத்தின்மீது ஆசையாய்ப் பார்ப் பதற்குக்கூட ஒரு மேகமுமில்லை, அவவேசையர் கொடுப்பா காசைக்

கொடுப்பவர்க்குக் காண் - அந்த வீலைமாதர் தங்களுக்குக் காசு கொடுப்பவர் களுக்குக் காசுக்குப் பதிலாக மேகரோயைக் கொடுப்பார்கள், எ - று.

சவுளி விற்பவரைப் பற்றியது

24. கட்டியகந்தல்புதிதென்று விற்பர்கணக்கிற்றொகை
யொட்டியெழுதுவர்கைமேல் விலையையுடன்றரினும்
வட்டியிலாபங்களொன்றுக்கு நூறெனவாங்குமந்தச்
செட்டிகட்கஞ்சியலவோ நம்மீசன்றிகம்பரனே.

உரை:—கட்டிய கந்தல் புதிதென்று விற்பர் - உடுத்திக் களைந்த கந்தல் துணியைப் புதிய துணியென்று விற்பார்கள், கணக்கில் தொகையொட்டி எழுதுவர் - கடனாக வாங்கினால் கணக்குப் புத்தகத்தில் வீலைத் தொகையைச சேர்த்து மிகுதியாக எழுதுவார்கள், கைமேல் வீலையை உடன் தரினும் வட்டி இலாபங்கள் ஒன்றுக்கு நூறென வாங்கும் - வாங்கும் ஆடைக்கு உடனே வீலை கொடுத்தாலும் அவவீலையிலுங்கூட ஒன்றுக்கு நூறாக வட்டி யும் இலாபமுஞ் சேர்த்து வாங்குகினற, அந்தச செட்டிகளுக்கு அஞ்சி யலவோ நம் ஈசன் திகம்பரனே - அந்தச செட்டிகளுக்குப் பயப்பட் டல்லவா நம்முடைய பரமசிவன் திக்கையே ஆடையாக உடுத்திகொண் டான், எ - று.

துறவோர் சடையைப் பழித்தல்

25. பெண்ணைச்சடையில் வைத்தவன்போற்
பெண்கள்பலரை யொளிப்பதற்கோ
பிறர்கண்டாலு மாண்பெணுமப
பேதந்தெரியா திருப்பதற்கோ
பண்ணைப்பழிக்கு மொழியரொடு
பாய்போல்விரிதுப் படுப்பதற்கோ
பாசக்கயிறுபோற் பிறரைப்
பற்றியிழுத்துப் பறிப்பதற்கோ
மண்ணைத்தழுவ நடக்குமின்னர்
மலர்க்காற்றாகி தட்டுதற்கோ
மாயத்துறவு பூண்டதன்றி
மயிருந்துறவோ மென்றுகொலோ
விண்ணைத்தழுவப் பழிச்சுமைபோல்
மிகவேசடையை நீர்வளர்க்கும்
விதமென்சொல்வீர் பண்டார
வேடம்பூண்ட மேலோரே.

உரை:—பண்டார வேடம் பூண்ட மேலோரே - சன்னியாசி வேடம் பூண்ட பெரியோர்களே!, பெண்ணைச் சடையில் வைத்தவன்போல் பெண்கள் பலரை யொளிப்பதற்கோ - கங்கையைச சடையில் வைத்த கடவுள் போலச சடையில் பெண்ணை வைத்து மறைப்பதற்கோ, பிறர் கண்டாலும் ஆண் பெண் எனும் பேதம் தெரியாதிருப்பதற்கோ - மற்றவர்கள் பார்த்தாலும் ஆண் பெண்ணென்னும் வேறுபாடு தெரியாதிருப்பதற்கோ, பண்ணைப் பழிக்கும் மொழியாரொடு பாய்போல் விரித்துப் படுப்பதற்கோ - இசையை வென்ற சொல்லுடைய பெண்களோடு சடையைப் பாய்போல் விரித்துப் படுப்பதற்கோ, பாசக் கயிறுபோல் பிறரைப்பற்றி இழுத்துப் பறிப்பதற்கோ - இயமனது பாசம்போலப் பிறரைச் சுற்றி யிழுத்து அவரிடத்துள்ள பொருளைக் கொள்ளை கொள்வதற்கோ, மண்ணைத் தழுவ நடக்கும் மின்னார் மலர்க்கால் தூசி தட்டுதற்கோ பூமியிலே தோன்றும் மின்னலைப் போன்ற பெண்களுடைய பூப்போன்ற பாதங்களின் புழுதியைத் தட்டித் துடைப்பதற்கோ மாயத்தறவு பூண்டதன்றி மயிருந் துறவோம் என்று கொலோ - பொய்யாகச் சன்னியாசங் கொண்டதல்லாமல் உண்மையாகச சன்னியாசம் பூணுததால் மயிரை விட்டுவிடமாட்டோமென்று காட்டுவதற்கோ, விண்ணைத் தழுவப் பழிசசுமைபோல் மிகவே சடையை நீர் வளர்க்கும் விதம் என் சொல்வீர்-ஆராயத்தை யளாவும்படியாகப் பழிக்குஞ் சுமையைத் தலையில் தாங்கிக்கொள்வதைப்போலச சடாபாரத்தை வளர்க்கின்ற காரணம் என்னென்று கூறுவீர், எ - று.

மது வுனுண்ணும் அந்தணரைக் குறித்துப்பாடியது

26. ஆரண வாயினர் மாடாடு கூயடித் தவித்துப்
பாரணஞ் செய்யப் பழகிக் கொண்டார்மது பானத்திலும்
பூரண ராயின ரின்னவர்க் கிந்தத்துற் புத்திதந்த
காரணங்கண் டயற்கோர் சிரங்கொய்தனன் கண்ணுதலே.

உரை:—ஆரணர் வாயினா மாடு ஆடுகளை அடித்து அவித்துப் பாரணஞ் செய்யப் பழகிக் கொண்டார் - வேத மோதுகின்ற வாயையுடையவர்கள் ஆடு மாடு என்பனவற்றின் ஊனை வெந்து உண்ணுகின்ற பழக்கத்தை மேற்கொண்டனர், மதுபானத்திலும் பூரணர் ஆயினர் - கட்குடிப் பதிலும் முழுப் பழக்க முடையவராயினர், இன்னவர்க்கு இந்தத் துற்புத்தி தந்த காரணங் கண்டு - இவர்களுக்கு இந்தக் கெட்ட புதியைக் கொடுத்த காரணத்தினாலே, அயற்கு ஓர் சிரம் கொய்தனன் கண்ணுதலே-பிரமனுக்கு ஓர் தலையை நெற்றிக் கண்ணையுடைய சிவபெருமான் கிள்ளிவிட்டார், எ - று.

27. தேனேடு மூனுணு மந்தணர்க் கஞ்சிச் சிவன்கரத்தில்
மானேடிப் புக்கதசங் கோழிபுக்கண் மைந்தனிட
மீனேடிப் புக்கன விண்ணினுஞ் சிந்தினும் வெவ்விலங்கும்
வானேடி யேபல்லி ராசிக ளாயுயிர் வாழ்ந்தனவே.

உரை:—தேனேடும் ஊன் உண்ணும் மானிடர்க்கு அஞ்சி - கள்ளும் புலாலும் புசிக்கின்ற மனிதர்களுக்குப் பயப்பட்டு, சிவன் கரத்தில் மான் ஓடிப் புக்கது-சிவனுடைய திருக்கையில் மான் ஓடிப் புகுந்து கொண்டது; அசுங்கோழி புக்கன மைந்தனிடம் ஆடும் கோழியும் சிவன் மகனுகிய குமரக் கடவுளிடம் ஓடிப் போயின, மீன் விண்ணிலும் சிந்தினும் ஓடிப் புக்கன-மீன்கள் வானத்தில் நட்சத்திரங்களாகவும் கடல் நடுவிலும் போய் ஒளித்தன, வெவ்விலங்கு - கொடிய மிருகங்களும், வானேடி - வானத்திற் சேர்ந்து, பலராசிகளாய் உயிர் வாழ்ந்தனவே - ....., எ - று.

மது மாமிசத்தைப் பழித்தல்

28. கூனுக்கிய கடலாறு குளங்களைக் கூட்டிமது
தானுக்கித் தமையையு மீனுக்கி மற்றச் சராசரத்தை
யூனுக்கித் தாமுண்ணவே னுக்கிலனென் றுருக்கிநிதந்
தேனுக்கி னுரந்தவா னுக்கினன்றனைச் சீறுவரே.

உரை:—கூனுக்கிய கடல் ஆறு குளங்களைக் கூட்டி மது தானுக்கி - வளைந்த கடல்கள் ஆறுகள் குளங்கள் எனபவைகளெல்லாம் ஒரு சேரக் கள்ளு மயமாகப் படைத்து, தம்மையும் மீனுக்கி தங்களையும் மீன்களாக்கி, மற்ற சராசரத்தை யூனுக்கி - மற்ற நிற்பன நடப்பனவற்றை யெல்லாம் மாமிசமாக்கி, தாமுண்ண வனுக்கிலன் என்று - தாங்களுண்ணும்படி ஏன் படைக்கவில்லை யென்று, நிதம் தேன் நாகினுல்-தினந்தோறும் களை ருசி பார்க்கும் நாக்கை யுடையவர்கள், உருகி - பரிதாபமுற்று, அந்த வான் நாக்கினுன் தனைச சீறுவரே - அந்தப் பெரிய நாவுடைய பிரமனைக் கோபிப்பார்கள், எ - று.

மாமிச முண்ணும் பிராமணர்களைப் பழித்தல்

29. ஊன்றாக்கி யுண்ணும் பிராமணர்க் கஞ்சியுமா பதியு
மான்றாக்கி னுன்கையில் வேலவன் றாக்கினன் வாரணத்தை
மீன்றாக்கினன் கொடியாக வுருவிலி மேடமது
தான்றாக்க வேயதி லேறிக்கொண் டானந்தச் சண்முகனே.

உரை:—ஊன் தாக்கி யுண்ணும் பிராமணர்க் கஞ்சி - ஊனை யெடுத் தசை சாப்பிடுகின்ற பிராமணர்களுக்குப் பயந்து, உமாபதியும் மான் தாகினன் கையில்-பார்ப்பதி கணவனுகிய சிவபெருமான் திருக்கரத்தில் மானை யெடுத்துக் கொண்டார், வேலவன் தாக்கினன் வாரணத்தை - முருகக்

கடவுள் கோழியைக் கொடியாக மேற்கொண்டார், மீன் தூக்கினன் கொடியாக உருவிலி - மன்மதன் மீனைக் கொடியாகக் கொண்டான், மேடமது தான் தூக்கவே - ஆடானது தன் தலையைத் தூக்கி நிற்க, அதில் ஏறிக் கொண்டான் கந்தச சண்முகனே - அழகிய ஆறுமுகக் கடவுள் அதன்மே லேறிக் கொண்டாரா (வாகனமாகக் கொண்டார்), எ - று.

முகஸ்துதியைக் கண்டித்தது

30. அருங்கிரியே கற்பகமே காளையே
யனந்தனே யரியேயென்ன
வொருங்குநமை யேபுகழ்ந்து பொருள்கேட்ட
வொருவனையா மூற்றுநோக்கி
யிருங்கல்லே மரமேமரடே பாமபே மிருகமே
யென்றேங் காய்ந்தான்
மருங்கவன் வார்த்தையைத திருப்பிநாஞ் சொன்ன
லவனுக்கேன் வருத்தமம்மா.

உரை :—அருங்கிரியே - அருமையான மலைபோன்றவனே!, கற்பகமே - கற்பகத் தருபோன்ற கொடையாளியே!, காளையே - காளை போன்ற வலிமை யுடையவனே!, அனந்தனே - ஆதிசேடன் போன்ற அறிவுடைய வனே!, என்ன ஒருங்கு நமையே புகழ்ந்து பொருள் கேட்ட ஒருவனை நாம உற்று நோக்கி - என்று முழுவதும் நம்மையே புகழ்ந்து பணம் வேண்டு மென்று கேட்ட ஒரு புலவனைப் பாராது, இரும கல்லே மரமே மாடே பாமபே மிருகமே என்றேம - ...., காயநதான - அவன் கோபித்துக கொண்டான, மருங்கு அவன வாாத்தையைத திருப்பி நாம் சொன்னால் அவனுககேன் வருததம - அவன சொனன வாாத்தையை அவன் பக்கமே சாரும்படி கூறினால் அவனுககு வருததம் வருவதற்குக் காரணம் யாது?, அம்மா - வியப்புச சொல், எ - று.

குறிப்பு:—முகஸ்துதியாகக் கூறும்போது உயர்வுபற்றி மரியாதையாகப் பேசப்படும் சொற்கள உயர்வு குறிக்கும் அடைமொழிகளை யெடுத்துவிட் டால், அவை இழிவை யுணாத்துமென்பது குறிப்பிததவாறு.

முகஸ்துதிக்குப் பொருள் வேறுபாடு கொள்ளுதல்

31. இந்திரனீ சந்திரனீ யென்னல் பிறன்மனையத
தந்திரமாக் கூடுஞ் சழக்கினீ—வந்தகுரு
பத்தினியைச் சேர்ந்தபடு பாவியீ யென்பதார்
துத்தியமோ நிந்தையோ சொல்.

உரை :—இந்திரன் நீ சந்திரன் நீ என்னல் - (ஒருவனை) நீ இந்திரன் போன்றவன்; நீ சந்திரன் போன்றவன் என்று சொல்லுதல், பிறன் மனையைத் தந்திரமாகக் கூடுஞ் சழக்கன் நீ - கௌதமர் மனைவியாகிய அகலிகையை இந்திரன் தந்திரமாகப் போய்ச சேர்ந்ததுபோலப் பிறர தாரத்தைச் சேருகின்ற நீதிகேடன் நீ யென்றும், வந்த குரு பத்தினியைச சேர்ந்த படுபாவி நீ - சந்திரனைப்போலக் குரு பத்தினியைச் சேர்ந்தவன் நீ யென்றும், என்பதாம் - பொருள்படும் என்று கொண்டால், துதியமோ நிந்தையோ சொல் - அது புகழவதாகுமோ இகழ்வதாகுமோ நீ சொல்வாயாக, எ - று.

குறிப்பு :—இந்திரனைப்போலச செல்வன் நீ, சந்திரனைப்போலத தண்ணெளியுடையவன் நீ என்று கொண்டால் புகழ்சசியும், பாட்டில் கண்டவாறு கொண்டால் இகழசசியுமாதல் காண்க.

32. கன்னபொன் னெழிற் காமாவென் றேகவி கட்டியென்முன்
னுன்ன நிரக்குங் கவிப்புலவீ ருமக்கொன் றுங்கொடேன்
முன்னநும பாடலெனக் கலக்கன்னன் முதலியர்க்கே
யன்னரி டஞ்சென் றரங்கேற்றிக் கொண்மி னருகிதியே.

உரை :—கன்ன பொன்ன எழில் காமா என்றே கவி கட்டி-கன்னனே! பொன்னனே! காமனே என்று புகழ்ந்த பாட்டியற்றி, என் முன் உன்ன நிரக்கும் கவிப் புலவீர் - ஆலோசனையில்லாது எனனெதிரில வந்து யாசிகின்ற பாவலரே!, உமக்கு ஒன்றும கொடேன - உமக்கு யாதும் ஈயமாட்டேன், முன் நாம் நும் பாடல் எனக்கல - முன்னே இருக்கின்ற உம்முடைய பாடல் என்னைக குறித்தனவல்ல, கன்னன முதலியாக்கே - கன்னன் பொன்னன் காமன் முதலியவர்களே அந்தப் பாடல்கள் உரியன, அன்னரிடஞ்சென்று அரங்கேற்றிக கொணமின் அருகிதியே - அவர்களிடமபோய ஒப்புவித்து அருமையான பொருளைப் பெற்றுகொன்வீராக!, எ - று.

33. பூவென்றுமா வென்றகண்ணார்
பொன்னெனறிச்சை பூண்டற்பரைக்
காவென்று கோவென்றுதாவென்று
பாடுங்கவிப் புலவீர்
தூவென்றுமே யொன்றுமானன்று
தானென்று தோன்றுமொன்றைத்
தேவென்றுகோவென்று காவென்று
பாவென்றுஞ் செப்புமினே.

உரை :—பூ என்று - நிலம் வேண்டுமென்றும், மா வென்ற கண்ணார் - மானை வென்ற கண்ணையுடைய பெண்கள் வேண்டுமென்றும், பொன்

என்று இசைசை பூண்டு - பொன் வேண்டுமென்றும் ஆசைப்பட்டு அற்பரைக் கா என்று கோ என்று தா என்று பாடுங் கவிப் புலவீர் கீழ்மக்களைக் கற்பகத் தருவென்றும் அரசனென்று புகழ்ந்து பரிசு கொடுமென்று பாடும் புலவர்களே !, னை என்றுமே ஒன்றும் - எப்பொழுதும் பரிசுத்தமே பொருந்திய, மா நன்று தானென்று தோன்றும் - மேலான நன்மை தானே வந்ததென்று தோன்றுகின்ற, ஒன்றை - ஒரு மெய்ப்பொருளை, தே என்று கோ என்று - தெய்வமே என்றும் அரசனே என்றும் புகழ்ந்து, கா என்று - காப்பாற்றி யருளுவாயென்று, பா என்றும் செப்புமினே - எப்போதும் கவி இயற்றுவீர்களாக எ - று.

மழை காலத்துப் பாடியன

34. காரேயுன் னீரையெல்லாங் கள்ளன் கவர்ந்தானே
நீரே யுதவாய் நெறியாமோ—நேரேதான்
வாரியுண்டு வாரிமொண்டு வாரியுண்டு வானிருண்டு
பேரிகொண்டு நீதிரண்டு பெய்.

உரை :—காரே - மேகமே !, உன் நீரை யெல்லாம் கள்ளன் கவர்ந் தானே - உன்னிடத்திலுள்ள தண்ணீரை யெல்லாம் திருடன் கொண்டு போய் விட்டானே, நீரே உதவாய் நெறியாமோ - தண்ணீரைக் கொடுக் காத வழக்கம் தகுதாகுமா ?, நேரேதான் வாரியுண்டு - உனகு நேரே தான் கடலிருக்கிறது, வாரி மொண்டு - கடலிலே முகந்து, வாரி யுண்டு - அள்ளிக குடித்து, வானிருண்டு - வானத்திலே செனறு கரு முகிலாகத் தோன்றி, பேரிகொண்டு - இடி முழக்கஞ்செயது, நீ திரணடு பெய் - நீ தொகுதியாக ஒன்று சேர்ந்து மழையைப் பொழிவாயாக, எ - று.

35. செய்வே னெனச்சொல்லிச் செய்யாவு லோபரைப்போற்
பெய்வே னெனக்காட்டிப் பேர்முகிலே—ஐமவானி
லோடுவாய் நிற்பா யுருமுவாய் மின்னுவாய்
நீடுவாய் பின்பெய்யாய் நீ.

உரை :—பேர் முகிலே - பெரிய மேகமே !, செய்வேன் எனச சொல் லிச் செய்யா உலோபரைப்போல் - கொடுப்பேனென்று சொல்லிக் கொடாத லோபிகள்போல, பெய்வேன் எனக் காட்டி - மழை பெய்வதைப்போலத தோற்றஞ்செய்து, மைவானில் ஓடுவாய் நிறபாய் உருமுவாய் மின்னுவாய் - இருண்ட ஆகாயத்தில் செல்லுவாய் நிற்பாய் இடிமுழக்கஞ் செய்வாய் மின் னல் வீசுவாய், நீடுவாய் பின் பெய்யாய் நீ - நெடுநேரம் வானிலிருப்பாய் கடைசியாக மழை பெய்யாதிருப்பாய், எ - று.

36. வேண்டுங்கால் நீபெய்யாய் வேண்டாத போதுபெய்வாய்
தாண்டுநீ செய்வதெல்லாந் தப்புகளே—நீண்டுலவும
வட்டமுகி லேயுனக்கு மாசெனப்பேர் தந்தோர்க்குப்
பட்டமது கட்டுவேன் பார்.

உரை:—நீண்டுலவும் வட்ட முகிலே - நெடுந்தூரம் உலாவுகின்ற வட்ட வடிவான மேகமே!, தாண்டும் நீ - வானிலே தாவிச செல்லுகின்ற நீ, வேண்டுங்கால் பெய்யா - வேண்டுங காலத்திலே பெய்யமாட்டாய், வேண்டாம்போது பெய்வாய் - வேண்டாத காலத்திலே பெய்வாய், செய்வதெல்லாம் தப்புகளே - ....., உனக்கு மாசு எனப்பேர் தந்தோர்க்குப் பட்டமது கட்டுவேன் பார் - உனக்கு மாசு எனப் பெயர் தந்தவர்களுக்கு முடி சூட்டு வேன் பார்ப்பாயாக, எ - று.

37. உண்ணீரி லாமையினு லுண்ணீரும் வற்றியழக்
கண்ணீரு மவ்வற்றியது கந்தரமே—தண்ணீரின்
பஞ்சமுனக்கு முண்டோபா ரோர்க்கிரங்காத
நெஞ்சமுனக் கிரும்பு நேர்.

உரை:—கந்தரமே - மேகமே!, உண்ணீரிலாமையினால் - குடிப்பதற்கு நீரில்லாமையினால், உள் நீரும் வற்றி-உடம்பிலுள்ள நீரும் உலாந்து போய, அழக் கண்ணீரும் வற்றியது - அழுவதற்குக கண்ணிலுங்கூட நீரில்லாமற போயிற்று, தண்ணீரின் பஞ்ச முனகுண்டோ - தண்ணீர் அற்றுப்போதல் உனக்கு ஏற்படுமோ, பாரோர்கு இரங்காத நெஞ்சம் உனகு - உலகத்தார் மீது தயவு வையாத உன்னுடைய மனது, இரும்பு நேர் - இரும்புகு ஒப்பாகும், எ - று.

38. மினருழில்சூரியன்றன் ருழிருங்குதன்மிக்கபுவி
யின்ருழிநீகருச்சுடுந் தொழிற்காற்றுக்கியங்குந்தொழி
லுன்ருழில்பெய்தன்மழையே யுனையுண்டுயிருய்குவ
தென்ருழிலுன்ருழினீ மறந்தாற்புவிக்கென்ருழிலே.

உரை:—மின் தொழில் சூரியன் தன் தொழில் - பிரகாசமாக ஒளி வீசுகிற தொழில் சூரியனுடைய தொழிலாகும், தாகுதல் மிக்க புவியின் தொழில் - பொருட்களைத தாகுதல் சிறந்த பூமியின் தொழிலாகும், தீக்குச சுடும் தொழில் - நெருப்புக்குத் தொழில் சுடுவது, காறறுகு இயங்கும் தொழில் - வாயவுக்கு அசைதல் தொழிலாகும், மழையே உன் தொழில் பெயதல - மேகமே உன்னுடைய தொழில் நீரைப் பொழிவதாகும், உனை உண்டு உயிர் உயவது என் தொழில் - அந்த நீரையுண்டு பிழைப்பது என்னுடைய வேலையாகும், உன் தொழில் நீ மறந்தால் புவிக்கு என் தொழிலே-உனது தொழிலை நீ செய்ய மறந்தால் பூமியிலுள்ளவர்களுக்கு என்ன வேலை யிருக்கிறது, எ - று.

வேனிற்கால வெப்பமிகுதியைப் பற்றியது

39. சூரியா நின்பரிகள் சோம்பன்மேற் கொண்டனவோ
ஆரியத்தே ரச்சாணி யற்றதோ—ஓரிமையிற்
செல்லென்றுற் செல்லாமற் றீமாரி பெய்துநின்றாய்
நில்லென்றார் சொன்னார் நினை.

உரை:—சூரியா - கதிரவனே!, உன் பரிகள் - உன்னுடைய குதிரைகள், சோம்பல் மேற்கொண்டனவோ - ...., ஆரியத் தேர் அச்சாணி அற்றதோ - உம்முடைய உயர்ந்த தேரின் அசசாணி முறிந்துபோய் விட்டதோ, ஓர் இமையில் செல்லென்றால் செல்லாமல் தீமாரி பெய்து நின்றாய் - ஓரிமைப் பொழுதிற் போய்விடென்றால் போகாமல் அக்கினி மழையைச சொரிந்தாய், நில்லென்று ஆர் சொன்னார் நினை - உன்னை நிற்கும்படியார் சொன்னார்கள் யோசித்துப் பார், எ - று.

40. வேலைக்குண் மூழ்கினு மேகத்துட் சேரினும் விண்ணின்மண்ணி
மூலைக்கு மூலையொளி யினுங்கா ரிருண்மொய்க்குங் குளிர்ச்[ன்
சோலைக்குண் மேவினுங் கோடைப்பரிதி தொடர்ந்து சுடு
மாலைக்கனங்கன் சுடுமென்று பொய்சொல்வர் வம்பர்களே.

உரை:—வேலைக்குள் மூழ்கினும் - கடலில் மூழ்கிக் கிடந்தாலும், மேகத்துள் சேரினும் - மேக மண்டலத்திற் போயிருந்தாலும், விண்ணின் மண்ணின் மூலைக்கு மூலை யொளியினும் - ஆகாயத்திலோ பூமியிலோ மூலைக்கு மூலையாகப் போய் மறைந்திருந்தாலும், கார் இருள் மொய்க்குங குளிர் சோலைகளுள் மேவினும் - கரிய இருன் நிறைந்த குளிர்ந்த சோலைக்குள் போய்ச சேர்ந்தாலும், கோடைப் பரிதி - வேனிற்காலததுச் சூரியன், தொடர்ந்து சுடும் - பின்பற்றி வந்து வெப்பந்தரும், மாலைக்கு அனங்கன் சுடுமென்று பொய் சொல்வர் வம்பர்களே - மாலைக் காலத்தில் மன்மதன் வெப்பமுண்டாக்குவன் என்று வம்பர்கள் பொய் சொல்வர், எ - று.

காரைக்கால் தனக்கோடி முதலியாருக்கு எழுதிய நிருபம்

41. வாடும்பயிர்க்குநன்மாரி யென்கோபல்வறுமையுற்றுத்
தேடுமவர்க்குநற்செல்வ மென்கோபெருந்தீவினையைச்
சாடுமவர்பெற்றசித்தி யென்கோவித்தரணியெங்கு
நீடும்புகழ்த்தனக்கோடிமன் விட்டநிருபத்தையே.

உரை :—இத்தரணி யெங்கும் நீடும் புகழ்த் தனக்கோடிமன் - இந்த வுலகமெங்கும் பரவிய புகழையுடைய தனக்கோடி முதலியார், விட்ட நிருபத்தையே - அனுப்பிய திருமுகத்தை, வாடும் பயிர்க்கு நன்மாரி யென்கோ - வாடுகின்ற நெற்பயிருக்குப் பெய்த நல்ல மழையென்று நான்

சொல்லவா?, பல் வறுமையுற்றுத் தேடுமவர்க்கு நற் செல்வ மென்கோ-பலவகையாகத் தரித்திரப்பட்டவர்கள் பெற நாடுகின்ற நல்ல ஐசுவரிய மென்று சொல்லவா?, பெரும் தீவினையைச் சாடு மவர்பெற்ற சித்தி யென்கோ - பெரிய கருமங்களைத் தொலைத்தற்குரிய தவஞ் செய்பவர்கள் அடைந்த நற்பயனென்று சொல்லவா?, எ - று.

மீனாட்சி சுந்தரம்பிள்ளையவர்கள் பாடிய
சீர்க்காழிக்கோவையைச் சிறப்பித்தது

42. இன்பாவிற் கோவைசொன்ன மீனாட்சி
சுந்தரப் பேரிறைவயானு
முன்பாவிற் கவிசொல்வே னென்கவிபார்ப்போ
ரதைமீண்டோ ராதான்மூர்
முன்பாச்சொன் னூல்களையே துதிப்பருன்பா
வுணர்வோர்கண் முன்னோர்நூலைப்
பின்பாகச் சொலிவெறுப்பர் நல்லவனு
னேநீயோ பேசுவாயே.

உரை:—இன்பாவிற் கோவை சொன்ன மீனாட்சி சுந்தரப் பேர் இரைவ - இனிய பாடல்களினால் சீர்காழிக்கோவை யியற்றிய மீனாட்சி சுந்தரம் பிள்ளை யென்னும் பெயருடைய கவித் தலைவனே! யானும் உன் பாவிற் கவி சொல்வேன் - யானும் உன் பாட்டைப் போன்ற கவியை யியற்றுவேன், என் கவி பார்ப்போர் அதை மீண்டு ஓராது-என் பாட்டைப் படிப்போர் அதனை மறுபடியும் ஆராயசிசெய்யாமல், ஆன்மூர் முன்பாச சொன்ன நூல்களையே துதிப்பர் - பெரியோர் முற்காலத்திற் சொன்ன பாடல்களைப்போற்றுவர், உன்பா உணர்வோர்கள்-உன்னுடைய பாட்டைக் கற்கின்றவர்கள், முன்னோர் நூலைப் பின்பாகச சொலி வெறுப்பர் - முன்னோர்களுடைய இலகியங்களை உன்னுடைய நூலுக்குப் பிற்பட்ட சிறப்புடையன வென்று கருதி யொதுக்குவர், நல்லவன் நானே நீயோ பேசுவாயே - முனனோர்கள் நூல்களைப் பேணுமபடி செய்கின்ற நான் நல்லவனை அவற்றை வெறுக்கும்படியாகச செய்கின்ற நீ நல்லவனை சொல்லுவாயுக!, எ - று.

43. தண்டமிழ்முன் னீர்பெருகி மீனாட்சிசுந்தரப்
பேர்த்தருமக் கொண்டல்
தொண்டர்கள்சூழ் சிரபுரத்திற் பொழிகோவை
யெனுமமுத தாயவாரி

மண்டலமும் விண்டலமுங் கரைபுரண்டு
திரைசுருண்டு வருதலேக்கி
அண்டர்தொழும் புகலியிறை தோணியுற்ரு
னஃதின்றே லமிழுவானே.

உரை :—தண்டமிழ் முந்நீர் பருகி - குளிர்ந்த தமிழாகிய கடலிலே நீரைக் குடித்து, மீளுட்டி சுந்தரப்பேர்த் தருமக் கொண்டல் - மீளுட்டி சுந்தரனென்னும் அற வடிவான மேகமானது, தொண்டர்கள்சூழ் சிரபுரத் திற் பொழி கோவையெனும் அமுதவாரி - அடியார்கள் நிறைந்த சீர்காழியில் பெய்த கோவையாகிய அமுதத்தின் வெள்ளமானது, மண்டலமும் விண் டலமும் கரை புரண்டு திரை சுருண்டு வருதல் நோக்கி - பூமியிலும் வானத் திலும் பெருக்கெடுத்துக் கரைகளைத் தாக்கி யலைவீசி வருவதைப் பார்த்து, அண்டர் தொழும் புகல் இறை - தேவர்கள் வணங்குகின்ற சீர்காழிப் பெரு மான், தோணி யுற்ரூன் - தோணியின்மேல் வீற்றிருந்தான், அஃதின்றேல் அமிழுவானே - தோணியில்லாமற் போனால் அவன் அந்த அமுதவெள் ளத்தில் மூழ்கி விடுவான், எ - று

சி. வை. தாமோதரம் பிள்ளையவர்கள்மீது பாடியது

44. உயர்வாந்தாமோதரபூபாவுன்னைச் சசியொவ்வானவன்ரூன்
சுயமாஞ்சோதியிலன்ஞானச் சோதியுடையாய்நீயன்ஞன்
கயரோகத்தாற்கலேதேய்வன் கலேயுமதியும்வளர்வாய்நீ
யயர்வாமவனேகளங்கமுற்ரு னகளங்கன்ரூனீதானே.

உரை :—உயர்வாம் தாமோதர பூபா - மேன்மையான தாமோதர மன்னனே!, உன்னைச் சசி ஒவ்வான் - உனக்குச் சந்திரன் ஒப்பாக மாட் டான், அவன் தான் சுயமாஞ் சோதி இலன் - அவன் தனக்குச் சொந்தமான ஒளி யில்லாதவன், நீ ஞானச் சோதி யுடையாய் - நீ சொந்தமான அறிவு ஒளியினையுடையாய், அன்ஞன் கயரோகத்தால் கலே தேய்வன் - அவன் கய ரோகத்தினாலே கலைகள் குறையப் பெறுகின்றவன், நீ கலைமதியும் வளர் வாய் - நீ கல்வியும் அறிவும் வளரப்பெற்றவன், அயர்வாம் அவனே களங்க முற்ரூன் - தளர்கின்ற அவன் களங்க முடையவன், அகளங்கன்ரூன் நீ தானே - களங்க மற்றவன் நீதானே, எ - று.

45. நள்ளுரர்க்கினியதாமோதர ராசிபன்ரூளும
தெள்ளுதண்டமிழாற்செய்யுந்தீங் கவியமுதந்தன்னைக்
கொள்ளுவோர்செவிதிதிக்குங் கூறுவோர்வாய்தித்திக்கும்
உள்ளுவோர்மனந்தித்திக்கும் மென்னில்யாமுரைப்பதென்னே.

உரை :—நள்ளுரர்க்கினிய தாமோதர ராசிபன்ரூன் - நண்பர்களுக்கு இனியவனான தாமோதர மன்னன் என்பவன், நாளும் தெள்ளு தண் தமி

மால் செய்யும் கீர்த்தி அமுதத்தன்னை - நான்தோறும் தெளிவான குளிர்ந்த தமிழ் மொழியிலே இயற்றும் இனிய பாடல்களாகிய அமுதத்தை, கொள்ளுவோர் செவி நிரப்பிக்கும் - கேட்கின்றவர்களுடைய செவிக்கு அது இனிக்கும், கூறுவோர் வாய் நிரப்பிக்கும், - சொல்லுகின்றவர்களுடைய வாயானது இனிமை யுடையதாகும், உள்ளுவோர் மனம் நிரப்பிக்கும் என்னில் - தினைப் பவர்களுடைய உள்ளம் இனிமை யுடையதாகு மென்றல், யாம் உரைப்பது என்னை - நாம் அதற்குமேற் கூறக் கூடியது யாது ?, எ - று.

மனைவி தேகவியோக மடைந்தபோது பாடியது

46. என்னெடுவாழ் சாகாதே யென்றுபல முறைநா
னுன்னெடுதான் சொன்னவுரை கடந்து—மின்னெடுசேர்
பொன்னே பிறந்தாய் புருடன்மொழி யைக்கடந்த
தென்னே மின்னேநீ யியம்பு.

உரை:—மின்னெடு சேர் பொன்னே - மின்னுகின்ற ஆபரணங்களோடு கூடிய இலக்குமி போன்றவளே !, என்னெடு வாழ் சாகாது என்று பல முறை நான் உன்னெடு சொன்ன வுரை கடந்து - என்னெடு கூடி யிரு இறவாதே என்று பலதரம் உன்னெடு நான் கூறிய வார்த்தையை மீறி, இறந்தாய் - நீ மரண மடைந்தாய், புருடன் மொழியைக் கடந்ததென்னே · நீ கணவன் சொல்லைத் தட்டிய தெப்படி, மின்னே நீ இயம்பு - பெண்ணே நீ சொல்வாயாக!, எ - று.

47. ஆகும் பிரசவத்துக் கப்பனூர்க் கென்னைவிட்டுப்
போகும் படியிசையாப் பூவையே—யேகமாய்
மூக்காலமு முணர்ந்த மூலனை மப்பனூர்க்
கிக்காலநீ போன தென்.

உரை :—ஆகும் பிரசவத்துக்கு அப்பனூர்க்கு என்னை விட்டுப்போகும் படி இசையாப் பூவையே - பிள்ளை பெறுவதற்கு உன்னுடைய தந்தை யூருக்குப் போக மனம் ஒவவாத பெண்ணே !, ஏகமாய் மூக்காலமும் உணர்ந்த மூலனும் அப்பனூர்க்கு இக்காலம் நீ போனதென் - ஒரே பொருளாய் மூன்று காலத்தையும் அறிந்த, எவற்றிற்கும் மூலகாரணனாகிய பரம பிதாவினுலகத்திற்கு இந்தக் காலத்தில் நீ போனதற்குக் காரணம் யாது !, எ - று.

48. மாதரின்றி வாழின் மதன்பகையா நாமணஞ்செய்
காதலியர் மீதுபகை காலனும்—பூதலத்திற்
கள்ளமின் னைரக்கூடிற் கத்தன்பெரும் பகையா
முள்ளமே வேறென் செய்வோம்.

உரை :—மாதரின்றி வாழின் மதன் பகையாம் - பெண்களோடு கூடாமல் வாழ்ந்தால் மன்மதனுடைய விரோதம் ஏற்படுகின்றது, நாம் மணஞ் செய் காதலியர் மீது பகை காலனும் - நாம் கலியாணஞ் செய்து கொண்ட மனைவிமீது எமன் விரோதங் கொள்கின்றான், பூதலத்தில் கள்ள மின்னை கூடில் கத்தன் பெரும் பகையாம் - உலகத்திற் பரத்தையரைக் கூடினால் கடவுளுடைய பெரிய வெறுப்பு ஏற்படும், உள்ளமே வேறு என் செய்வோம் - மனமே வேறு யாது செயவோம், எ - று.

49. ஆனமண மின்றிச்சும மாவிருப்போ மென்றாலோ
வீனவுட லேயுற்றெனை வருத்து—மானனைய
மாதர்தமை யேகொண்டான் மண்ணிலவ ரிரார்
நாதனே யென்செய்வே னான்.

உரை :—ஆன மணமின்றிச சும்மா இருப்போ மென்றாலோ - பொருத்தமான கலியாண மில்லாமல் சும்மா இருக்கலாமென்றால், ஈன உடல் நோயுற்று எனை வருத்தும் - குறையுடைய இந்த உடம்பானது எனைத் தன்பப்படுத்தும், மான் அனைய மாதர் தமையே கொண்டால் - மான் போன்ற பெண்களே மணஞ் செய்து கொண்டால், மண்ணில் அவர் இரார் - உலகத்தில் அவர்கள் தரிப்பதில்லை, நாதனே என் செய்வேன் நான் - ....., எ - று.

50. யோவி நானுடல நீபோனாய் நானிருந்தேன்
மாயாமல் வெற்றுடம்பு வாழுமோ—தூயாளே
நானேநா னல்லவோ நாட்டினேன் வேறொருவன
றானேவி தென்னகவஞ் சாற்று.

உரை:—தூயாளே - பரிசுத்த முடையவளே !, நீ ஆவி நான் உடலம் - நீ உயிர் நான் உடம்பு, நீ போனாய் நான் இருந்தேன் - நீ இறந்து போனாய நான் உயிரோடு இருக்கின்றேன், மாயாமல் வெற்றுடம்பு வாழுமோ - உயிரில்லாத உடம்பு அழியாமல் பிழைத்திருக்குமா ?, நானே நானல்லவோ - ....., நாட்டில் நான் வேறொருவன் தானே - உலகத்தில் நான் மற்றொருவனே, இது என்ன கபம் - இது என்ன புதுமை, சாற்று - சொல்வாயாக, எ - று.

———

மகாவித்துவான்

மீனாட்சிசுந்தரம் பிள்ளை

பாடியது

திருவாவடுதுரை மகாசந்நிதானம்
ஸ்ரீலஸ்ரீ சுப்பிரமணிய தேசிகர்மீது பாடியவை

1. உரவுபொலிமறை முடிவாஞ்சிவக்கொழுந்தைப்
பராநந் தத்துவாலைவநாளுங்
கரவுதவிரன்ப ளருத்தகலாம
லமுதூற்றுங் கருணைவாழ்வைப்
புரவுமலிமெய்ஞ்ஞான வாரிதியைத்
துறவரசைப் பொருவிலாத
பரவுபுகழ்த்துறைசையிற் சுப்பிரமணிய
குருமணியைப் பரவிவாழ்வாம.

உரை:—உரவு பொலி மறை முடிவாஞ் சிவக்கொழுந்தை - அறிவு மிகுந்த நுட்ப நூல்களின் முடிந்த பொருளாக விளங்குகின்ற சிவ சோதியை, பராநந்தத்து வாலைவ - மேலான இன்பத்தைக் கொடுக்கும் முழுமதியை, நாளும் கரவு தவிர் அன்பா உளத்து அகலாமல் அமுதூற் றும் கருணை வாழ்வை - கபடமில்லாத அடியாருடைய நெஞ்சத்து விலகாம லிருந்து நாள்தோறும் அமுதத்தைச சொரிகின்ற தயவாகிய ஐசுவரி யத்தை, புரவுமலி மெய்ஞ்ஞான வாரிதியை - பாதுகாப்பு மிகுந்த உண்மை யறிவுக் கடலை, துறவு அரசை - துறவிகளுக்கு வேந்தனை, பொருவிலாத - ஒப்பற்ற, பரவு புகழ்த் துறைசையில் சுப்பிரமணிய குருமணியை - எங்கும் பரவிய கீர்த்தியையுடைய திருவாவடுதுறையில் வீற்றிருக்கின்ற சுப்பிர மணிய தேசிக ரத்தினத்தை, பரவி வாழ்வாம் - வணங்கி வாழ்வோமாக !, எ - று.

2. திருமணியை நிறத்தமைத்த நீன்மணிமெய்ம
மால்பிரமன் றேடிக்காணு
வருமணியென் னீயும்பொரு ளாவாண்ட
சிந்தாமணியன்ப ரகத்தேமேய

வொருமணியம் பலவாண சிரோமணிகண்
மணியடிமை யுவந்தார்கண்ணுட்
கருமணிவண் டுறைசையிற் சுப்பிரமணிய
குருமணியைக் கருத்துள்வைப்பாம்.

உரை:—திருமணியை நிறத்தமைத்த நீல் மணி மெய்ம்மால் - இலக்ஷ்மியாகிய விரத்தினத்தை மார்பில் வைத்துக்கொண்ட நீலமணிபோன்ற உடம்பினையுடைய விஷ்ணுவும், பிரமன் - அயனும், தேடிக்காணு அருமணி - தேடி அடியும் முடியுங் காணமுடியாத அரிய விரத்தினமும், என்னையும் பொருளாய் ஆண்ட சிந்தாமணி - அடியேனையும் மதித்து ஆட்கொண்ட சிந்தாமணி போல்பவனும், அன்பர் அகத்தே மேய ஒரு மணி - அடியார்கள் உள்ளத்தே தங்கிய ஒப்பற்ற விரத்தினமும், அம்பலவாண சிரோன்மணி கண்மணி - அம்பலவாண தேசிகராகிய தலைமணி போன்றவருக்குக் கண்மணிபோல் உதவினவரும், அடிமை யுவந்தார் கண்ணுள் கருமணி - தனக்கு அடியவராக விருக்க விரும்பினவர்களுடைய கண்ணினுள் விளங்கும் கருமணிபோல்வாருமாகிய, வண்துறைசையில் சுப்பிரமணிய குருமணி - வளமான திருவாவடுதுறையில் வீற்றிருக்கும சுப்பிரமணிய தேசிக விரத்தினத்தை, கருத்துள் வைப்பாம் - சிந்தையுள் வைத்துப் போற்றுவோம், எ - று.

3. செல்லார்க்கும பெருமுழக்க மணமுழக்கமென
மேற்போய்த் திகழ்மாடத்தாற்
சொல்லார்குங் கழனிகளாற் றெலியாத
வளங்காட்டுந் துறைசைமேவிக்
கல்லார்க்கு நல்லார்க்கும் வல்லார்க்கு
மல்லார்க்குங் கணக்கிலாமற்
றெல்லார்க்கு மொப்பில்வைப் பாஞ்சுப்பிர
மண்ணியகுரவ னிருதாள்போற்றி.

உரை:—செல்லார்க்கும் பெருமுழக்க மணமுழக்கமென - மேகம் ஒலிக்கும் பேரோசையானது கலியாண முழக்கம்போல, மேற் போய் திகழ் மாடத்தால் - மேலோங்கி விளங்கும் உப்பரிகையில் கேட்கத்தக்கதாக வுயர்ந்த மாடங்களாலும், சொல்லார்க்கும் கழனிகளால் - நெற்கதிர்களின் ஓசையானது கேட்கும் வயல்களாலும், தொலையாத வளங்காட்டும் துறைசை மேவி - நிலைபெற்ற நலத்தைக் காட்டும் திருவாவடுதுறையையடைந்து, கல்லார்க்கும் அல்லார்க்கும் - படித்தவர்களுக்கும் படியாதவர்களுக்கும், வல்லார்க்கும் அல்லார்க்கும் - திறமை யுடையவர்களுக்கும் திறமையில்லாதவர்களுக்கும், கணக்கிலா மற்று எல்லார்க்கும் - அளவற்ற வேறுவகை மனிதருக்கும், ஒப்பில் வைப்பாம் - இணையற்ற செல்வமாக

விளங்கும், சுப்பிரமணிய குரவன் இருதாள் போற்றி - சுப்பிரமணிய தேசிகரது இரு பாதங்களும் நம்மைக் காப்பனவாக !, எ - று.

4. ஒப்புயர் வில்லவன் சிவன்மூன்றும் முடைமை
யாலிரண்டு மொன்றுமேற்றூர்
தப்பறத் தாழ்ந்தவ ரென்றேர்ந்தனந் திருவா
வடுதுறைநற்றவத் துளார்தம
வைப்பனைய சுப்பிரமணியக் குரவன்றன்
பெயரைவகித் துளாரை
யெப்படியும விலக்கலின் மற்றிவண்மூன்று
மிலனென்றே யியம்புவோமே.

உரை:—ஒப்பு உயாவு இல்லவன் சிவன் மூன்றும் உடைமையால் - படைத்தல் காத்தல் அழித்தலாகிய மூன்றுகரும் சிவன் ஒருவனே அதிகாரி யாதலால் அவன் தனக்கு ஒப்பானவரும் உயர்ந்தவரு மில்லாதவன், இரண்டு ஒன்றும் ஏற்றூர் தப்பறத் தாழ்ந்தவர் - இரண்டு தொழிலுடைய மாலும் ஒரு தொழிலுடைய பிரமனும் சரியானபடி அவனுக்குத் தாழ்ந்தவர்களே, என்று ஓர்ந்தனம் - என்று நாம் ஆராய்ந்து தெளிந்தோம், திருவாவடுதுறை நற்றவத்துளார் தம் வைப்பனைய சுப்பிரமணிய குரவன்- திருவாவடுதுறையிலிருக்கின்ற நல்ல தவமுடைய சேமநிதிபோன்ற சுப்பிரமணிய தேசிகர், தன் பெயரை வகித்துளாரை எப்படியும் விலக்கின் - தன் திருநாமத்தை மனத்திற் றியானிப்பவரை எவ்வுலகிலும் பிறவாதபடி நீக்குதலின், இவை மூன்றும் இலன் என்று இயம்புவோமே - இந்த தேசிகன் முதறொழி லுட்படாதவனென்றே நாம் கூறுவோம், எ - று.

5. தேடுகயிலா யபரமபரைத் துறைசை
மேயநமச்சிவா யன்றன்னைக்
கூடுதன்மு னுள்ளபதினல் வருமுற்
றேர்ன்றலெனக் கொண்டாரவ்வா
றாடுதவிர் தாக்கொண் டுயிபிற்றேர்ன்ற
லெனவுங்கொண்டு வக்ஞங்கோமா
னீடுபெரும் புகழமை சுப்பிரமணிய
குருமணியை நிணைந்துவாழ்வாம்.

உரை:—தேடு கயிலாய பரம்பரைத் துறைசை நமசிவாயன் தன்னை - தேடிப்போய் அடைதற்குரிய கைலாய பரம்பரையில் வந்த திருவாவடு துறை யாதீனத்தை ஸ்தாபித்த நமசிவாய குருமூர்த்தியை, கூடுதல் முன்- தான் சேர்வதற்கு இடையில், உள்ள பதினல்வரும் முன்றேன்றலெனக்

கொண்டார் - பட்டத்தி லிருந்த பதினென்கு தேசிகரும் தங்களுக்கு முன்னே தோன்றிய பரமாச்சாரியரென அவரைக் கருதினார்கள்; அவ்வாறு ஊடுதவிர்தரகொண்டும் - அப்பதினென்கு தேசிகரும் அப்படி ஆதிமூர்த்திக்கும் தமக்கு மிடையிலிருந்தும், பின்றேன்றலெனவுங் கொண்டு உவக்குங் கோமான் - பின்னும் தமக்குத் தோன்றி யருள்புரியும் முதல்வனெனக் கருதி மகிழும் தலைவராகிய, நீடு பெரும் புகழமை - நீண்ட பெரிய கீர்த்தியைப் பொருந்திய, சுப்பிரமணிய குருமணியை - சுப்பிரமணிய தேசிகவிரத்தினத்தை, நினைந்து வாழ்வாம் - தியானித்து உய்வோமாக, எ - று.

6. மாமேவுபுகழ்த் திருவா வடுதுறைச்
சுப்பிரமணிய வள்ளலாய
தூமேவு சூரவன்பேர் சொற்றபொழு
தென்பிறப்புத் தொலைந்ததம்மா
பாமேவு மிதுகண்டும் பிறப்பொழிப்பா
னிவனென்று பலருஞ்சொல்வார்
தேமேவு நலந்தெரி யென்வாயினேயே
புகழாத செய்கையென்னே.

உரை :—மாமேவு புகழ்த் திருவாவடுதுறைச் சுப்பிரமணிய வள்ளலாய - பெருமை பொருந்திய புகழ் மிக்க திருவாவடுதுறையில் வீற்றிருக்கும் சுப்பிரமணிய அருளாளராகிய, தூமேவு சூரவன்பேர் சொற்றபொழுது என் பிறப்புத் தொலைந்தது அம்மா - பரிசுத்தம் பொருந்திய தேசிகருடைய திருநாமத்தைச் சொன்னபொழுதே வியகதகக்க விதமாய் என் பிறவியொழிந்து போயிற்று, பாமேவும் இதுகண்டும் பிறப்பு ஒழிப்பான் இவனென்று பலரும் சொல்வார் - உலகத்திற் பரவிய இச் செயதியை எல்லாருந் தெரிந்திருந்தும் பிறப்பொழிக்கின்றவர் இத தேசிகரென்று சொல்லுகின்றார்கள், தேமேவு நலந்தெரியென் வாயினேயே புகழாத செய்கை யென்னே - அவரது தெய்வதன்மை பொருந்திய பெயரை யறிந்து சொல்லிய என் வாய்தான் பிறப்பை யொழித்ததென்று அதனைப் புகழாத காரணம யாதோ?, எ - று.

7. கண்ணுன் மதனைக் கடிந்ததற்கேற் பப்பரப்பாற்
பெண்ணுளு ருச்சுப் பிரமணிய—வண்ணு
திருவா வடுதுறையாய் சிற்றடியேற் கின்ப
மருவா வடுமா றவை.

உரை :—கண்ணுல் மதனைக் கடிந்ததற்கேற்ப - நெற்றிக் கண்ணுல் மன்மதனை யழித்த செயலுக்கு ஒத்தபடி, பரப்பால் - எவருக்கும் தெரிந்தபடியே, பெண்ணுள் உருச் சுப்பிரமணிய அண்ணு - பெண்ணுட்டியைப்

பொருந்தாத சுப்பிரமணிய தேசிக மேலோனே !, திருவாவடுதுறையாய் - திருவாவடுதுறையில் வீற்றிருப்பவனே !, சிற்றடியேற்கு - சிறிய தன்மை புடைய அடியேனுக்கு, இன்பம் மருவா வடு - பேரின்பத்தைப் பொருந்தாத குற்றத்தை, மாறவை - நீங்கி வைப்பாயாக !, எ - று.

ஆதீன சம்பிரதாயத்தைக் குறித்துப் பாடியது

8. பேசுபுகழ் சுப்பிர மணியதே சிகன்பொன்
வீசு கழற்கடியேன் விண்ணப்பம்—நேசம்
வருதிரு மாளிகைத்தே வன்பூசை யாயே
கருதுபந்தி யாதல் வழக்கம்.

உரை :—பேசுபுகழ்ச் சுப்பிரமணிய தேசிகன் பொன் வீசு கழற்கு - பலரும் பேசுகின்ற கீர்த்தியையுடைய சுப்பிரமணிய தேசிகரின் பொன் ஒளி வீசும் திருவடிகளுக்கு, அடியேன் விண்ணப்பம் - ....., நேசம் வரு திருமாளிகைத் தேவன் பூசையாயே - இறைவர்க்கு அன்பராகிய திரு மாளிகைத் தேவரின் வழிபாடு முடிந்தே, கருது பந்தியாதல் வழக்கம் - குறித்த மகேசுவர பூசைக்குப் பந்தி வைப்பது ஆதீன வழக்கம்

9 முருகார்பூந் தடஞ்சுலவு வாவடுதண்
டுறைத்தலத்து முதல்வதெய்வத்
திருநாவுக் கரசர்முதன் மூவர்தமிழ்த்
தேனுண்டு தெவிட்டிநிற்குத்
தருநாவுக் கினிமையிஃ தெனக்கொடிமூன்
றிரிக்கனியான் றருதலன்பி
னெருவேடன் றருதசையு மமிழ்தினுஞ்சீர்த்
தெனவுண்ட வுறுதிகொண்டே.

உரை :—முருகார் பூம் தடம் சுலவு - வாசனை பொருந்திய பூம்பொழில் கள் சூழ்ந்த, தண் ஆவடுதுறை தலத்து முதல்வ - குளிர்ந்த திருவாவடு துறைப் பதியில வீற்றிருக்குந் தலைவரே !, தெய்வத் திருநாவுக்கரசர் முதல் மூவர் தமிழ்த் தேனுண்டு தெவிட்டும் நிற்கு - தெய்வத்தன்மை பொருந்திய திருநாவுக்கரசர் முதலிய தேவார முதல்வரின் மூவருடைய தமிழ்ப்பாடல்க ளாகிய தேனையுண்டு திருப்தியடைவு மெமக்கு, இஃது நாவுக்கு இனிமை தரும் எனக் கொடி மூன்றிரிக் கனி யான் தருதல் - இது உம்முடைய நாவுக்கு இன்சுவை யளிக்குமென்று கொடி மூன்றிரிப்பழத்தை யான் கொடுத் தல், அன்பின் ஒரு வேடன் தரு தசையும் - அன்பினால் ஒப்பற்ற வேடர் குலத்தவராகிய கண்ணப்பர் கொடுத்த ஊனையும், அமிழ்தினுஞ் சீர்த்தென உண்ட உறுதிகொண்டே - அமிர்தத்தினும் சிறந்ததாகக் கருதி ஏற்றுக் கொண்ட நிச்சயத்தை வைத்தேயென்க, எ - று.

10. தெள்ளியசெந்தமிழ்க் கடலேக்குறுமுனிவற்
கெதிராசச் செவியாலுண்ட
வெள்ளலிலாமுனிவர் குழாமலிதுறைசைப்
பதியதனிலெவரும் போற்றும்
வள்ளலெனத் திருவுருவாயெளியன்மனத்
தருவாகிவதியும பிள்ளை
வெள்ளமதிகரந்தருள் சுப்பிரமணிய
பிரானடியை வேண்டுவேனே.

உரை:—குறு முனிவர்க்கு எதிராச - உவர்க்கடலைக் குடித்த அகத்திய முனிவருக்கிடாக, தெள்ளிய செந்தமிழ்க் கடலைச் செவியால் உண்ட - தெளிவான செந்தமிழிலக்கியமாகிய சமுத்திரத்தைக் காதினால் கேட்டுப் பருகிய; வெள்ளலிலாமுனிவர்குழாம் மலிதுறைசைப்பதியதனில்-இகழ்சியில்லாத துறவிகள் கூட்டம் நிறைந்த திருவாவடுதுறைத் தலத்தில், எவரும் போற்றும் வள்ளலெனும் திருவுருவாய் - எல்லாரும் துதிக்கின்ற அருளாளனாகத திருவுருவங்கொண்டு, எளியன் மனதது ஆருவாகி வதியும் - அடியேனது நெஞ்சத்தில் அருவமாகத் தங்கும், பிள்ளை வெள்ளை மதி கரந்தருள் சுப்பிரமணியபிரான் - வெள்ளிய இளஞ் சந்திரனை மறைத்துச் சுப்பிரமணிய தேசிகராக வீற்றிருக்குஞ் சிவபெருமானே!, அடியை வேண்டுவனே - உம்முடைய திருவடித் தாமரையைப் பெற விரும்புகின்றேன், எ - று.

11. அற்புதக்கடலே கற்பகக்கனியே
யடியவ ராருயிர்க்குயிரே
நற்பரம்பொருளே மூப்புரமபொருத
நாதனே கடற்பெருவழுதே
பொற்புறுமுனதுதிரு வடிக்கமலம
போற்றினேன் பிறவிமாற்றுவையீ
சொற்பொருளறிந்தகைப் பணிகாந்த
சுப்பிரமணிய சற்குருவே.

உரை :—அற்புதக் கடலே - அதிசயமான கன்மை நிறைந்த சமுத்திரமே!, கற்பகக் கனியே - கற்பக மரத்தின் பழம் போன்றவனே!, அடியவர் ஆருயிர்க்கு உயிரே - ....., நற்பரம் பொருளே - ....., மூப்புரம் பொருத நாதனே - திரிபுர மெரித்த கடவுள் வடிவானரே!, கடற்பெரு அமுதே - திருப்பாற் கடலிற் றோன்றுது தனியே அமைந்த அமுதமே!, பொற்புறும் உனது திருவடிக் கமலம போற்றினேன் - அழகிய உனது பாத தாமரையை வழி பட்டேன், சொற்பொருள் அறிந்த கைப்பணி காந்த சுப்பிரமணிய சற்குருவே - திருக்கையிலணிந்த சொல்லும் பொருளுந்

தெரிந்த ஆதிசேட னினமாகிய பாம்பு அணியை மறைத்துச சுப்பிரமணிய நற்றேசிகராய் வந்த சிவபெருமானே !, நீ பிறவி மாற்றுவை - நீ என் பிறவியை யொழிப்பாயாக !, எ - று.

12. மின்னியமதியு மன்னியநதியு
மிளிர்மலைப் பதியையுங் கரந்த
முன்னவவேண்டு மொருவரம்யாரு
மொழியுநின் றிருப்புகழ்கேட்க
வென்னிருசெவிகள் போதுமோபோதா
வின்னநூ றாயிரகோடி
தன்னவேயருளி லொருவிதமமையுஞ்
சுப்பிரமணிய சற்குருவே.

உரை :—சுப்பிரமணிய சற்குருவே - சுப்பிரமணிய நற்றேசிகனே !, மின்னிய மதியும் மன்னிய நதியும் மிளிர மலைப்பதியும் கரந்த - ஒளி வீசும் சந்திரனையும் நிலைபெற்ற கங்கையையும் பிரகாசிக்கின்ற கைலைமலை தலத்தையும் மறைத்து இங்கெழுந்தருளிய முதல்வனே !, ஒரு வரம் வேண்டும் - நான் உன்னிடம் ஒரு வரம் கேட்கின்றேன், யாரும் மொழியுநின் திருப்புகழ் கேட்க - எல்லாரும் பேசுகின்ற உன்னுடைய சிறந்த கீர்த்தியைப் பற்றிக் கேட்பதற்கு, என்னிரு செவிகள் போதுமோ போதா - என்னிரண்டு செவிகளும் காணமாட்டா, (ஆதலால்) இன்னம் நூறுயிர கோடி தன்னவே அருளி - இன்னும் இலட்சகோடி காதுகள் பொருந்தும்படியாக அருள் செய்வாயானால், ஒருவிதம் அமையும் - அவை யொருவிதம் போதியனவாகும், எ - று.

13. உன்பதகமல மலரைநாயடியே
னுளமெனுங் குளத்திடையூறு
மண்புரீர்பெருகி யிருந்ததாலதனு
ளலர்ந்திடத் திருவருள்புரிவாய்
மன்பதையுலகிற் றரித்திரநோயின்
வருந்திடா திருநிதியமுதந்
தன்புறுதளிக்குந் துறைசைவாழ்பரனே
சுப்பிரமணிய சற்குருவே.

உரை :—மன்பதை யுலகில் தரித்திர நோயின் வருந்திடாது - உலகத்திலுள்ள சனங்கள் வறுமையென்னும் வியாதியால் துன்புறுதலவண்ணம், இருநிதி யமுதம் தன்புறுத அளிக்கும் துறைசைவாழ் பரனே - மிகுந்த செல்வத்தையும் உணவையும் மனவருத்தப்படாமற் கொடுக்கின்ற திருவாவடுதுறையில் வாழ்கின்ற மேலானவனே !, சுப்பிரமணிய சற்குருவே - சுப்பிரமணிய நற்றேசிகனே !, உன் பதாமல மலரை - உன்னுடைய பாத

மாகிய தாமரைப் பூவை, நாயடியேன் உளமெனும் குளத்திடையூறும் அன்புநீர் பெருகி இருந்ததால் - நாய் போனற அடியேனுடைய நெஞ்சமாகிய பொய்கையில் ஊற்றெடுத்த துண்டாகின்ற அன்பாகிய நீர் நிறைந்திருப்பதால், அதனுள் அலர்ந்திட - அக் குளத்திற் பூத்து விளங்கும்படியாக, திருவருள் புரிவாய் - ... , எ - று.

14. சந்தமிகுங்கயிலை யெனுந்துறைசையினி
லருள்வடிவாய்ச் சடைகரந்து
வந்தருள்சுப்பிரமணிய குருபரனேத்
தரிசிக்க மதுரவாய்ச்சொற்
சுந்தரன்போலுதவி செய்தானெளியவெனக்
குங்கந்த சுவாமியென்னு
முந்துகவிநாணு மதனலருள்பெற்
றிருவினையின் முதலற்றேனே.

உரை :—சந்த மிகுங கயிலையெனும் துறைசையினில் - அழகு மிகுந்த கயிலாய மென்று சொல்லக்கூடிய திருவாவடுதுறையில், அருள் வடிவாய - அருள் திருமேனி கொண்டு, சடை கரந்து - சடையை மறைத்து, வந்தருள் சுப்பிரமணிய குருபரனே - எழுந்தருளி வந்த சுப்பிரமணிய தேசிகனுகிய மேலோனே, தரிசிக்க - பாதத்து வணங்கும்படியாக, எளிய எனக்கும் - அடியேனுக்கும், கந்த சுவாமியெனும் முந்து கவிஞனுக்கும - எனக்கு முற்பட்ட புலவராகிய கந்தசாமிப் பாவலருக்கும், மதுரவாயச சொல் சுந்தரன் பேருதவி செய்தான் - இனிய மொழி பேசும் சுந்தரன் பெரிய உதவி செய்தார, அதனால் அருள்பெற்று இருவினையின் முதலற்றேனே - அதனால் அக் குருவின் திருவருளைப்பெற்று நல்வினை தீவினை யென்னும் இரண்டும் வேரறப் பெறறேன், எ - று.

சுப்பிரமணிய தேசிகரிடம் விடைபெறுமல் வந்ததற்காக உத்தரங் கூறியது

15. பன்னகச்செஞ்சடைகரந்துவந்தருள் சுப்பிரமணியபரமனேநீ
யென்னகத்துளகலாமலிருந்ததனற் றுறைசையுறறிங்குவந்தே
னன்னதறியாதுசிலர்குற்றமெனப் பலதரமுமறைந்திட்டாலு
முன்னுடையதிருவுளத்திலுணராத தொன்றேனுமுளதோ
[மன்னே.

உரை :—பன்னகச் செஞ்சடை கரந்து வந்தருள் சுப்பிரமணிய பரமனே - பாம்பு தங்கும் சிவந்த சடையினை மறைத்து எழுந்தருளி விளங்கும் சுப்பிரமணிய தேசிகனென்னும் பெரியோனே !, நீ என் அகத்துள் அகலாமல் இருந்ததனல் துறைசையுறறிங்கு வந்தேன் - நீ என்னுடைய

நெஞ்சத்தில் நீங்காமலிருத்தமையால் திருவாவடுதுறைக்குச் செல்லாமல் இவ்விடத்திற்கு வந்தேன், அன்னது அறியாது சிலர் குற்றமெனப் பலதா மும் அறைந்திட்டாலும் - அதனைத் தெரியாமல் நான் செய்தது தவறென்று சிலர் பல தடவை வற்புறுத்திக் கூறினாலும், உன்னுடைய திருவுளத்தில் உணராதது ஒன்றேனும் உளதோ - , மன்னே - அரசே, எ - று.

16. குருமணியா யெழுந்தருள்சுப் பிரமணிய
பராதகுணக் குன்றேயான்
மருமலியென் னூர்ககேக விடையளிப்பா
யெனக்கேட்க வருவேனுகில்
திருமலியெம் விடைவேலைக் கனுப்பிவிட்டோ
மில்லையினஞ் சிலநாட்சென்று
தருவுவமென் பாயதனு னின்னையுரு
தூர்க்குவந்தேன் றருமமூர்த்தி.

உரை :—குருமணியாய் எழுந்தருள் சுப்பிரமணிய பராத குணக் குன்றே - தேசிக விரதினமாய வீற்றிருகின்ற சுப்பிரமணியப் பேரு டைய மேலான நாதத்தத்துவத்தி லுறையும நற்குண மலைபோன்றவனே !, யான் மருமலி என்னூர்க்கு எக விடையளிப்பாய எனக் கேட்க வருவேனு கில் - மணம் பொருந்திய என்னுடைய ஊருக்குப் போவதற்கு விடை கொடுப்பா யென்று உன்னிடம் கேட்க வந்தால், திருமலி யெம் விடை வேலைக்கு அனுப்பி விட்டோம - எமது காளையாகிய இலக்குமியோடு கூடிய திருமாலைப் பாற்கடலுக்கு அனுப்பி விட்டோம், இல்லை-இப்போது இககே இல்லை, இனம சிலநான சென்று தருகுவம் என்பாய் - இன்னும் சிலநாள் கழிதது விடை கொடுப்போமென்று கூறுவாய, தரும மூர்த்தி - அறவடிவானவனே !, அதனால நின்னை யுருதி ஊர்க்கு வநதேன - ஆத லால் உன்னிடம் வராமல் என்னூர்கு வந்து விட்டேன, எ - று.

17. பதுமமல ரடிபரவி யேகவிடை
யளிப்பையெனப் பகர்வேனுகி
லிதுவரையும் யாவருக்கு முரையாத
வீலையெனுஞ்சொ லெனக்குச்சொல்வா
யதுநினது கொடைதன்மைக் காகாதென்
றுரையாம லகன்றேன்யானீ
யெதனுலென் மேற்சினங்கொண் டாயருள்
சுப்பிரமணிய வினியதேவே.

உரை :—சுப்பிரமணிய இனிய தேவே - சுப்பிரமணிய தேசிகரென் னும் இன்பமளிக்கும் கடவுளே !, பதும மலரடி பரவி எக விடையளிப்பை

யெனப் பகர்வேனுஇல் - உனது தாமரைத் தாள்களைப் பணிந்து என் னூர்க்குப் போவதற்கு விடைகொடுக்க வேண்டுமென்று கேட்டால், இதுவரையும் யாவருக்கும் உரையாத இலையெனுஞ் சொல் எனக்குச் சொல்வாய் - இதுவரை யொருவருக்குஞ் சொல்லாத இல்லை யென்னுஞ் சொல்லை எனக்கு நீ சொல்லுவாய், அது நினது கொடைத் தன்மைக் காகா தென்று - அப்படிச் சொல்வது உன்னுடைய வள்ளற் றன்மைக்குப் பொருந்தாதென்று, உரையாமல் அகன்றேன் யான் - உன்னிடம் சொல் லாமல் நான் போயினேன், நீ எதனால் என்மேற் சினங் கொண்டாய் அருள் - நீ என் என்மீது கோபித்துக் கொண்டாயென்று கூறி யருள் வாயாக!, எ - று.

18. நின்சுமுகத் தினைப்பார்க்க நின்னமுத மொழிகேட்க
நின்பாற் பேச
வெண்ணிருகண்ணிருசெவிவாய்க் கெப்பொழுதுங்கிடைக்கவிலை
யிவைகண் மூன்றும்
மன்னுபெரும் பாதகங்கள் புரிந்திருக்க லாமெனது
மன மெப்போது
முன்னையக லாதிருத்திக் கொள்ளவென்ன தவம்புரிந்த
துரைப்பாய் மன்னே.

உரை:—நின் சுமுகத்தினைப் பார்க்க நின்னமுத மொழி கேட்க நின்பாற் பேச - உன்னுடைய நல்ல திருமுகத்தைப் பார்க்கவும் அமுதம் போன்ற நின்னுடைய திருவாக்கைக் கேட்கவும் உன்னிடத்தி லுரையாட வும், என்னிரு கண் இரு செவி வாய்க்கு எப்பொழுதும் கிடைக்கவிலை - முறையே என்னுடைய இரு கண்களுக்கும் இரு காதுகளுக்கும் வாய்க்கும் எப்பொழுதும் அமையவில்லை, இவைகள் மூன்றும் மன்னுபெரும் பாதகங் கள் புரிந்திருக்கலாம் - கண் காது வா யென்ற இவை மூன்று நிலைதத பெரிய குற்றங்களைச செய்திருக்கலாம், எனது மனம் எப்போதும் உன்னை அகலாதிருத்திக் கொள்ள என்ன தவம் புரிந்தது - ....., உரைப்பாய்- நீ கூறுவாயாக !, மன்னே - அசை, எ - று.

சின்னப்பட்டத்திலிருந்த நமச்சிவாய தேசிக
சுவாமிகள்மீது பாடியவை

19. வாய்ந்தவளம் பொலிதிருவா வடுதுறைவாழ்
குருநமச்சி வாயாநின்பே
ராய்ந்தநிரு வைந்தெழுத்துஞ் சிலையெழுத்தா
வடியேனு ளழுத்தலாற்பூத்

தோய்ந்தவிதி மூயன்றெழுது தலியெழுத்து
நீரெழுத்தால் தொலைந்ததென்ரு
லேய்ந்தநின் பேரினைப் புகழ்கோவெனைப்
புகழ்கோநினைப் புகழுமியல்பொன்றுண்டே.

உரை:—வாய்ந்த வளம் பொலி திருவாவடுதுறை வாழ் குரு நமசிவாயா - பொருத்தமான வளங்கள் மிகுந்த திருவாவடுதுறைத் தலத்தில் வாழ்கின்ற நமசிவாய தேசிகரே!, நின்பேர் ஆய்ந்த திரு ஐந்தெழுத்தும்- உமது பேராகிய ஆராயப்பட்ட மகாமந்திரமாகிய பஞ்சாட்சரமானது, சிலை எழுத்தா அடியேன் உன் அழுத்தலால் - கல்லில் வரைந்த எழுத்துப் போல அடியேனுடைய நெஞ்சத்தில் பதிவித்தலால், பூத்தோய்ந்த விதி மூயன்று எழுது தலை எழுத்து - பூவிற்றங்கிய பிரமன் வினைக்குத் தக்க படி கண்டு அதன் பயனுக என் தலையில் எழுதிய எழுத்தானது, நீர் எழுத்தால் தொலைந்தது என்ரூல் - தண்ணீரிலெழுதிய வெழுத்துப்போல நிலையாது ஒழிந்ததென்ரூல், எய்ந்த நின் பேரினைப் புகழ் கோ எனைப் புகழ் கோ - பொருத்தமான உன்னுடைய திருப்பெயராகிய பஞ்சாட்சரத்தைப் புகழவா அல்லது அதை நெஞ்சத்திற் கொண்ட என்னைப் புகழவா நினைப் புகழும் இயல்பு என்று உண்டே - உன்னைப் புகழும் இயற்கை எப்போதும் உள்ளதே, எ - று.

20. சீர்பூத்த கயிலாய பரம்பரையி
னுமாபதி தேசிகப்பிரான்ற
னேர்பூத்த கண்மணியிற் சிவப்பிரகாசப்
பெரியோ னென்பாற்குற்ற
பார்பூத்த கண்மணியிற் றுறைசையிற்
சுப்பிரமணிய பரமற்குற்ற
வார்பூத்த கண்மணியாங் குருநமச்சி
வாயனினை மலர்த்தாள்போற்றி.

உரை:—சீர்பூத்த கயிலாய பரம்பரையில் - சிறப்புப் பொருந்திய திருக்கைலாய குரு பரம்பரையில், உமாபதி தேசிகப் பிரான்றன் - உமாபதி சிவாசாரிய சுவாமிகளின், ஏர் பூத்த கண்மணியில் - அழகு பொருந்திய கண்மணியாக, சிவப்பிரகாசப் பெரியோன் என்பானுற்ற சிவப்பிரகாச தேசிகரென்னும் பெரியவர் அமைந்ததுபோல, பார் பூத்த கண்மணியிற் துறைசையிற் சுப்பிரமணிய பரமற்கு உற்ற - உலகத்திற்குக் கண்மணிபோன்ற திருவாவடுதுறைச சுப்பிரமணிய தேசிகர்க்குச சின்னபட்டமா யமைந்த, வார்பூத்த கண்மணியாம் குரு நமசிவாயன் - மீட்சி பொருந்திய கண்ணின் மணிபோன்ற நமசிவாய தேசிகரின், இணை

மலர்த்தாள் போற்றி - இரண்டு திருவடித் தாமரைகளும் நம்மைக் காப்பன வாகும், எ - று.

21. தந்தைபெய ரெடுப்பானிம் மைந்தனென
வொருவரைமண் சாற்றல்பொய்யே
நிந்தையில்லாத் தந்தைபெயர் தோற்றும்போ
தேயெடுதேதோ னீயேநீயே
அந்தையிலா நினைப்போல்வார் நினைப்பணியு
மெனைப்போல்வா ரகிலத்தியாரே
சிந்தைகளிப் புறத்திருவா வடுதுறைவாழ்
குருநமச்சி வாயதேவே.

உரை :—சிந்தை களிப்புறத திருவாவடுதுறைவாழ் குரு நமசிவாய தேவே - எல்லார் மனமும் மகிழும்படியாகத் திருவாவடுதுறையில் வீற்றி ருக்கின்ற நமசிவாய தேசிக சுவாமியே !, தந்தை பெயர் எடுப்பான் இம் மைந்தனென ஒருவரை மண் சாற்றல் பொயயே - ஒருவரை இந்த மகன தனது தந்தையின் பெயர் எடுப்பானென்று எதிர்காலததால் உலகத்தார் கூறுதல் எப்போதும் உண்மையில்லை, நிந்தையில்லாத தந்தை பெயர் - இகழ்சியற்ற ஞான பிதாவாகிய நமசிவாய தேசிகரின் திருப்பெயரை, தோற்றுமபோதே எடுத்தோன் நீயே நீயே - பிறக்கும்போதே மேற கொண்டவன் நீதானே ஆகும், அந்தையிலா நினைப்போல்வார் - சோம்ப லில்லாத உன்னைப்போல் உயாந்தவர்களும், நினைப்பணியும் எனைப்போல் வார் - உன்னை வணங்குகின்ற என்னைப்போல் தாழ்ந்தவாகளும், அகிலத தில் யாரே - உலகத்தில் யாரிருக்கின்றார்கள். (உலகத்தில வேறில்லை என்பது கருத்து.) எ - று.

வேதநாயகம் பிள்ளைமீது பாடியது

22. கனியிற்பொலி பொழில்சூழ்குளத் தூரன்கரி சறுத்த
வனியிற்பொலி யுமபுகழ்வே தநாயக வள்ளனட்பு
நுனியிற்கரும் புதினல்போ லினிக்குநுவ லரிய
பனியிற்பொலி பிறைபோல் வளராநிற்கும் பான்மதியே.

உரை:—கனியில் பொலிபொழில் சூழ்குளத்தூரன் - பழஙகள் நிறைந்த சோலைகள் சூழ்ந்த குளத்தூரில் வாழ்கின்றவரும், கரிசறுதத அவணியிற் பொலியும் புகழ் வேதநாயக வள்ளல் - குற்றததை யொழிதது ப்பூமியில் சிறந்து விளஙகுகின்ற வேதநாயகம்பிள்ளை யென்னும் அருளாளன், நட்பு - நினைகமானது, நுனியில் கரும்பு தினல்போல் இனிக்கும் - கரும்பை அடியி லிருந்து தின்றுகொண்டு போனால் எவவாறு இனிமை மிகுமோ அவவாறு இனிமைபெறற் கேதுவாகும், நுவலரிய பனியிற் பொலி பிறைபோல் வளரா நிற்கும் பால் மதியே - சொல்லுதற்குக் கூடாத குளிர்சசியையுடைய

பிறைச் சந்திரனைத வளர்வதுபோலப் பால்போன்ற தூய்மையான அறிவானது அதிகப்படுதற் கேதுவாகும், எ - று.

23. நாட்டுக்கு நல்ல குளத்தூர்வேத
நாயகநன் னுமமாலே
வீட்டுக்கு வாயிலெனுங் காளிக்கோர்
கோவையெனை விளம்பச்செய்தே
யேட்டுக்கு மடங்காத தூதிகவிபல்
சொற்றனினின் னியற்பாட்டுள்ளோர்
பாட்டுக்கு நான்செய்த தொன்றேபல்
செய்தாலும் பற்றுதன்றே.

உரை :—நாட்டுக்கு நல்ல குளத்தூர் வேதநாயக நன்னுமமாலே - தேசத்தில் சிறந்த நன்மையையுடைய குளத்தூரில் வாழும் வேதநாயக மென்ற நல்ல திருப்பெயருடைய பெரியோனே !, வீட்டுக்கு வாயிலெனும் காழிகோர் கோவையெனை விளம்பச் செய்தே - மோட்சத்திற்கு வாச லென்று சொல்லக்கூடிய சீர்காழிப்பதியின்மீது ஒரு கோவை நூற் பாடும் படி என்னைத தூண்டி, எட்டுக்கும் அடங்காத தூதி கவிபல் சொற்றனை - நூலிலடங்காத பெருமையையுடைய பல புகழ்ப் பாடல்களைப் பாடினீர், நின் இயல் பாட்டுள் ஓர் பாட்டுக்கு - பாவிலக்கணம் நன்றாக அமைத்த உன் பாடல்களில் ஒரு கவிக்கு, நான் செய்தது ஒன்றே பல் செய்தாலும் பற்றுது - நான பாடிய ஒரு பாட்டோ டீடாகும் பல பாடல்கள் நான் சொன்னாலும் அவை டீடாவன வல்ல, எ - று.

திருவாவடுதுறை யாதீன வித்துவான்
தாண்டவராய சுவாமிகள்
பாடியது

திருவாவடுதுறை மகா சந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ சுப்பிரமணிய தேசிகர்மீது பாடியது

1. தாண்டவமேல் வருராயன் சற்குருமா
மணிதனக்குச் சாற்றுமாறிங்
காண்டவனீ யடியேனியா னுண்டவன்பா
லடிமையுற வழகேயாமால்

எண்டவஞ்சே ராண்டவன்றன் னடிமைதனைப்
பன்முறையு மீர்த்துமெய்தா
வீண்டவஞ்சேர் வினையேற்குன் மெய்யருள்வந்
தெவ்வண்ண மேவுமாறே.

உரை:—தாண்டவன்மேல் வருராயன் - தாண்டவராய னென்னும் பெயருடையவன், சற்குருமா மனிதனுக்குச சாற்றுமாறு - நல்ல தேசிக மூர்த்தியாகிய பெரிய விரத்தினம்போல்வாருகு விண்ணப்பஞ் செய்வ தாவது, ஆண்டவன் நீ அடியேன் யான் - ....., ஆண்டவன்பால் அடிமை யுறல் அழகே ஆமா - ஆண்டவனிடத்தில் அடியான் போய்ச சேர்தல் முறையான செயலே ஆகும், எண் தவம் சேர் ஆண்டவன் - வலிமையான தவத்தையுடைய முதல்வன், தன் அடிமைதனைப் பன்முறையும் ஈர்த்தும் - தன்னடியவனைப் பல தடவைத் தன்பா லிழுததபோதிலும், எய்தா வீண் தவம் சேர்வினையேற்கு - வந்து சேராத அவநெறியில் நிற்கும் தீவினை யுடைய எனக்கு, உன் மெய்யருள் வந்து எவ்வண்ணம் மேவுமாறே - உன் னுடைய உண்மையான திருபை எவ்வாறு வந்து பொருந்தும், எ - று.

2. தருநாணுட் கொளவருஞ்சற் குருமா
மணியேயென் ருயேயுன்றன்
மருநாண்மட் டலர்கமல மலரடிகள்
வந்திக்க வருநண்ணுளே
திருநாள்வந் திக்கவராச் சிறுநாளே
கரிநாளென் செய்கேனந்தோ
ஒருநாளு நினைமறவேன் விரைவினில்வந்
துன்சேவை யுளங்கொள்வேனே.

உரை:—தரு நான் உட்கொளவரும் சற்குரு மாமணியே - கற்பகத் தருவு வெட்க மடையும்படியாக வள்ளற்றன்மையோடு தோன்றிய நல்ல தேசிக மகா ரத்தினமே !, என் தாயே - ....., உன்றன் மருநாள் மட்டு அலர் கமல மலரடிகள் - வாசனையும் தேனுமுடைய புதுப் பூந்தாமரை போன்ற உன்னுடைய திருவடிகளை-வந்திக்கவரும் நன்னளே திருநாள் - வணங்கக் கிடைக்கும் நல்ல நாளே சுபதினமாகும், வந்திக்கவராச் சிறு நாளே கரிநாள் - வணங்கக் கிடையாத அற்ப நாளே அமங்கல நாளாகும், என் செய்கேன் அந்தோ - உன் தரிசன மில்லாவிட்டால் நான் என் செய் வேன், ஒரு நாளும் நினை மறவேன் - ....., விரைவினில் வந்து உன் சேவை உளங்கொள்வேனே - சீக்கிரம் வந்துசேர்ந்து உன்னுடைய வழி பாட்டை நெஞ்சத்திற் பதித்துக்கொள்வேன், எ - று.

3. திருவா வடுதுறையிற் சேர்வோரை முத்தித்
திருவா வடுதுறையிற் சேர்கென்—றருளுங்
குருசுப் பிரமணிய கோமான்ரு ணெஞ்சே
குருசுப் பிரமணியாக் கொள்.

உரை :—திருவாவடுதுறையில் சேர்வோரை - திருவாவடு துறையில் தன்னே வந்து வழிபடுபவரை, முததிதிரு ஆ - வீடாகிய செல்வம் உண டாவதாக, அடுதுறையில சேர்க - பாசததைத தொலேக்கும் ஞான மார்க் கத்தை யடைக, என்று அருளும் குரு சுப்பிரமணிய கோமான்தாள் - என்று உபதேசித்தருளுகின்ற சுப்பிரமணிய தேசிகத் தலேவரின் திரு வடியை, நெஞ்சமே - உள்ளமே !, குரு - உயாவான, சுப்பிர-சுததமான, மணியெனக்கொள் - இரத்தினமாகக கருதுவாயாக !, எ - று.

இராமநாதபுரம்

முத்துராமலிங்க சேதுபதி

பாடியது

---

1. எந்தவுலகினுஞ் சைவப் பயிர்கதிப்ப வருண்மழைபெய்
தெமமனேர் போல்
வந்தருள்சுப் பிரமணிய தேசிகதே சமைந்தகலே
வலத்தாற் றீட்டித்
தந்திருமு கச்செய்யுட் டனித்தனியா ராயமகிழ்
தந்த துள்ளன்
புந்தவெழு மானந்தப் பெரும்புணரிக் கெல்லையெடுத்
துரைக்கொ ணுதால்.

உரை :—எந்த வுலகினும் சைவப்பயிர் கதிப்ப - எந்த விடத்திலும் சைவ சமயமாகிய பயிர் வளர்ந்தோங்கும்படி, அருள் மழை பெய்து - அரு ளாகிய நீரைப்பொழிந்து, எம்மனோபோல வந்தருள் சுப்பிரமணிய தேசிக - மனித வடிவமெடுததுத் தோன்றிய சுப்பிரமணிய தேசிகரே!, தேசு அமைந்த கலேவலத்தால் தீட்டி - ஒளிபொருந்திய கல்வித் திறமை யால் எழுதி, தந்த திருமுகசசெய்யுள் - விடுத்த ஓலேச சுருளிலுள்ள பாட் டுக்கள், தனித்தனி ஆராய மகிழ்தந்தது - ஒவவொன்றையும் ஆய்ந்து பார்த்தபோழ்து அது நிறைந்த மகிழ்ச்சியளித்தது, உள்ளன்பு உந்த எழும் ஆனந்தப்பெரும் புணரிக்கு - அதனல் மனத்திலுண்டான அன்பு காரண

மாக ஏற்பட்ட பேரானந்தக்கடலுக்கு, எல்லை எடுத்துரைக்க ஒணாதை - கரை யிதுதானென்று சுட்டிக் கூற முடியாது எ - று.

2. குருந்துறையுஞ் சிவக்கொழுந்தைத் தவக்கொழுந்தா
நினையன்பாற் சூறுகிக் காண்பான்
பெருந்துறைசார்ந் திடநினைத்த துண்மைசில
லெளகீகப் பெருக்கமாங்கு
வருந்துறையைத் தட்பவிவண் வல்லிவந்தான்
றிககூடல்வாய்நிற் காண்பான்
இருந்துளகா தலைத்தழைதற் கேதுவுமற்
றதுவாக விருந்த தாமால்.

உரை :—குருந்துறையும் சிவக்கொழுந்தை - குருந்த மரத்தடியில் வீற்றிருகும் சிவமூர்தியையும், தவக்கொழுந்தாம் நினை - தவத் தலைவரா யுள்ள உம்மையும், அன்பால் சூறுகிக காண்பான் - அன்போடு போய்த் தரிசிப்பதறகு, பெருதுறை சார்ந்திட நினைதத்து உண்மை - திருப்பெருந துறைகுவர எண்ணியது மெயயே, சில லெளகீகப் பெருக்கம் ஆகுவரும் தழ்ப்ப - சில உலக காரிய மிகுதி அககே வரும் வழியைத தடைசெய்ய, இவன் வல்லிவந்து - இகு கட்டாயமாக வந்து சோந்து, அககே - அதுவு மலலாமல், இக கூடல்வாய் நிறகாணபான - இந்த மதுரை நகரத்திலே உனனைத தரிசிகுமபடி, இருந்துள காதலைத தகைதற்கு - உள்ளதில் விருந்த விருப்பதைத வளாப்பதற்கு எதுவும மற்ற அதுவாக இருந்த தாமால் - காரணமும் அககே வராமையே யாம் என்க, எ - று.

3. கருக்குற்ரு லங்கதனைத் தணிப்பாரின்
மூனிமுகிலைச் சைவமாக்குந்
திருக்குற்ரு லம்புகுவான் கருத்துளதந்
நான்வலிதிற மேறடிநின்பால்
நெருக்குற்ரு லங்காணும பயிரிற்கண்
டகமகிழ்வ னேயர்சன்மக்
கருக்குற்ரு லமபரித்த களத்தனென
வரத்திலுயர் கருணைவள்ளால்.

உரை:—தருக்குற்ரல் அகுகு அதனைத தணிப்பாரில் - ஒருவனுக்குச் செருகேற்பட்டால் அதனை அவனிடதிலேயே அடகுவாகள்போல, மூனி - அகதிய முனிவா, முகிலை - முகிலைபோன்ற நிறத்தையுடைய திருமாலை, சைவமாகுகும் - சிவ வடிவினராகச செய்யும், திருக் குற்ரூலம் புகுவான் கருத்துளது - திருகுகுற்ரூலம்போகின்ற வெண்ணமிருக்கின்றது, னேயர் சென்ம கருக்குற்ரூலம் பரித்த - அன்பர்களுடைய பிறவியாகிய

கரிய குறுகிய விடத்தைத் தொலைத்து விடக் தாகிய, களத்தன் என-கண்டத்தை யுடையவனென்று, வரத்தில் உயர் கருணை வள்ளால் - என்று சொல்வதற் கேதுவாகிய வரதநிலையர்ந்த அருளாளரே!, அண்ணல் - திருக் குற்ருலம் வருகிற அந்த நாளில், வலிதிற் றேடி நின்பால் நெருக்குற்று-வலிய நாடிவந்து உம்மை யணுகி, ஆலமுகாணும் பயிர்கண்டு அகமகிழ்வன்-மழைகண்ட பயிர்போல மனமகிழ்ச்சி யடைவேன், எ - று.

4. குருந்துறைசை வக்கொழுந்தின் றிருப்பணிகைக்
கொடுவழுதி குலத்தோ டாண்டு
பெருந்துறைசை யோகமுறப் பெற்றவரில்
யாஞ்செய் தவப்பேற்ருல் வெண்பொன்
றிருந்துறைசை யத்தினின்று சிவஞானத்
திருவுருவாய்ச் சேர்ந்தோர்க் கன்பு
தருந்துறைசை வந்தருள்சுப் பிரமணிய
குருமணியாஞ் சாற்றக் கேண்மோ.

உரை:—குருந்துறை சைவக் கொழுந்தின் - குருந்த மரத்தடியில் வீற் றிருக்கும் சிவபெருமானின், திருப்பணி கைக்கொண் - திருப்பணி மேற் கொண்டு, வழுதி குலத்தோடு ஆண்டு - பாண்டியன் குலத்தோடு தாம் ஆளப்பெற்று, பெருந்துறை சையோகம் உறப் பெற்றவரில் - பெரிய வழி யாகிய வீட்டு வழியிற் பொருந்தப் பெற்ற மாணிக்கவாசக சுவாமிகளைப் போல, யாம் செய் தவப் பேற்ருல் - நாகளும் செய்த தவத்தின் பயனல், வெண் பொன் திருத்துறை சையதனில் நின்று - வெள்ளியும் பொன்னும் சிறப்பாகப் பொருந்திய கைலாய மேருமலையிலிருந்து, சிவஞானத் திருவுரு வாய் - .., சேர்ந்தோர்க்கு அன்பு தரு துறைசை வந்தருள் - தன்னை யடைந்தவர்க்குப் பத்தியை விளைகின்ற திருவாவடுதுறையில எழுந்தருளி வந்த, சுப்பிரமணிய குருமணி - சுப்பிரமணிய தேசிக ரத்தினமே!, யாம் சாற்றக் கேணமோ - நாகள் விண்ணப்பித்ததைக் கேட்டருள்க, எ - று.

5. திருமுகங்கொண் டணைந்தவற்கெச் சிறப்புமருள்
கோதைதல்குந் தேவே தன்பா
லொருமுகங்கொண் டணையிலவ னுதவியவோ
வடிகள்புகுந் துளதோ வின்ன
விருமுகனி லிறும்பூதிங் கெஃதென்பே
மஃதுநிற்க வெம்பா லன்பு
தருமுகமன் விரிகடிதத் தனிப்பாக்க
ளினிப்பாகத் தழைத்தமாதோ.

உரை :—திருமுகங் கொண்டவர்க்கு எச்சிறப்பும் அருள் கோதை நல்குந் தேவே - ஓலைச் சுருள் கொண்டுபோய்ச சமர்ப்பித்தவனுக்கு எல்லா வகையான சிறப்புந் தரத்தக்க மாலையை அளித்த சுவாமியே!, தன்பாற் ஒருமுகம் கொண்டணையில் - தன்னிடத்தில் இயற்கையாயுள்ள ஒரு முகத் தோடு வந்து சேர்ந்தால், அவன் உதவியவோ அடிகள் புகுந்துளதோ - அவன் கொடுத்த ஓலைச சிறப்போ சந்திதானத்திலுல் அவனுக்கு ஏற்பட்ட சிறப்போ, இன்ன இரு முகனில் - இந்த இரண்டு காரணங்களிலும், இரும் பூது இங்கு எஃது என்பேன் - ஆசசரியப்படத்தக்க இங்கு எதுவென்று நாம் சொல்லக் கூடும், அது நிற்க - அது ஒரு புறமிருக்க, என்பால் அன்பு தரும் முகமன் - எம்மிடத்தில் வைத்த அன்பினுல் கூறிய உபசார வார்த்தை கள், விரிகடித தனிப்பாக்கள் - விரிவாக அடங்கிய கடிதத்திலுள்ள சிறந்த பாடல்கள், இனிப்பாகத் தழைத்த - இனிமையாக விளங்கின, மாதோ - அசை, எ - று.

6. இமையாத கனற்கண் மறைத்திமைக்கும
விழிபடைத் துலகத் திறைஞ்சுந்தொண்டர்
தமையாதல் புரிந்துசைவப் பயிர்வளர்த்தின்
னருள்விளைவு தருமுன் னுள்ளத்
தமையாத தமையாதவ் வமைதிவசத்
தொழுகலன்றே வரசர் செய்யுங்
கமையாத லாதலினின் கருத்தின்வண
மியற்றுகவுட் களித்து மாதோ.

உரை :—இமையாத கனற்கண் மறைத்து - மூடப்படாத நெற்றிக கணணை யொளிர்வது, இமைக்கும் விழி படைத்து - இமைத்தல் செயயக கூடிய கண்களையுடைய மனித வுடம்பெடுத்து, உலகத்து இறைஞ்சும தொண்டர் தமையாதல புரிந்து - உலகத்திலே தன்னை வழிபடுகின்ற அடி யார்கட்கு ஆகமம்செய்து, சைவப் பயிர் வளர்த்தி - சைவசமயமாகிய பயிரை விருத்தி செய்து, இன்னருள் விளைவு தரும் உன் உள்ளத்து - இனிமை யாகிய திருவருள் என்னும் பயனை அளிக்கின்ற உன்னுடைய நெஞ்சத்தில், அமையாதது அமையாது - பொருந்தாத காரியங்கள் பொருந்த மாட்டா, அவ வமைதி வசத்து ஒழுகல் அன்றே - திருவுள்ளத்தில் பொருந்தியபடி நடப்பதல்லவா, அரசர செய்யும் கடமையாதல் - மன்னர்கள் செயய வேண் டிய கடமையாகும், ஆதலின் நின் கருத்தின் வணம் இயற்றுக உன் களித்து - ஆதலால் மனமகிழ்ந்து உன் நோக்கத்திற்கு இசைந்தவாறே செய்தருள்க, மாதோ - அசை, எ - று.

7. ஐயன்றிரு நாமமைந் தெழுத்துள்ளார்ந் தவன்முண்
மெய்யன்பர் சொல்லருந்து மென்குழைக்கு—ணெய்யவென்
ஒவ்வாறு மாமுகன்பே ருற்றகுரு மாமணியே [சொல்
எவ்வாறுட் போந்த விசை.

உரை :—ஒவ்வாறு மாமுகன பேருற்ற குருமாமணியே - ஒன்றே டொன்றொத்த ஆறு திருமுகங்களை யுடைய கடவுளின் திருப் பெயரைப் பெற்ற தேசிக மகாரதத்தினமே!, ஐயன் திருநாமம் ஐந்து எழுதது உள ஆர்ந்து - முதல்வனுடைய திருப்பெயராகிய பஞ்சாட்சரம் உள்ளதிற் பொருந்தப்பெற்று, அவன் தான் மெய்யன்பர் - அவனுடைய திருப் பாத தில் உண்மையான அன்புடையவர்களுடைய, சொல்லரும்பும் மெனகுழைக குள் - மொழியைக் கேட்டு அனுபவிக்கின்ற மென்மையான குண்டலமணிந்த உன் திருச செவிக்குள்ளே, நொய்ய என் சொல் - சிறுமை பொருந்திய எனது வாத்தைகள், எவ்வாறு உட்போந்த - எப்படி உள்ளே புகுந்தன, இசை - கூறியருள்க, எ - று.

அருணைசலம் பிள்ளை

பாடியது

1. சுந்தர வேடந் தாங்கிச் சுருதிநூற் புராண மியாவுஞ்
சொந்தமா யுளத்திற் கொண்ட தோன்றலே சுகுணக் குன்றே
தந்தையுந் தாயு மாகித் தமியனே யாண்டு கொண்ட
செந்தளிர்க் கழல்க ளன்றி மற்றொன்றுஞ் சிந்திக் கேனே.

உரை :—சுந்தர வேடம் தாங்கி - சுந்தர வேடமென்னும் சிவசின்னங் களைக் காதிலணிந்து, சுருதி நூல் புராணம் யாவும் சொந்தமாய் உளத்திற் கொண்ட தோன்றலே - மறைகள் ஆகமங்கள் புராணங்கள் முதலிய எவ வகை இலக்கியங்களையும் தமக்குரியனவாகச சிந்தையிலே பதிப்பித்துக் கொண்ட வீரரே!, சுகுணக் குன்றே - நல்ல பண்பின் வடிவாகிய மலையே!, தந்தையும் தாயுமாகி - எனக்குப் பெற்றோர்கள் நிலையில் நின்று, தமியனை யாண்டுகொண்ட செந்தளிராக் கழல்கள் அன்றி - தனியனை என்னை யாட் கொண்டருளிய சிவந்த தளிர்போன்ற பாதங்களேயல்லாமல், மற்றொன்றுஞ் சிந்திக்கேனே - வேறு யாதொன்றும் நான் எண்ணுவதில்லை, எ - று.

2. செந்தா மரையடி ஒருவெண்டாமரை சேர்ந்தது போல்
அந்தா மரைத்தடம் வாழனங் காளன்று செய்தவத்தால்
எந்தாயு மீசனு மாகின்ற கோமுத்தி யேர்க்குருபால்
வந்தோது வீரங்ஙன் யான்விடு தூதினே வாழ்த்துதற்கே.

உரை:—செந்தாமரையடி ஒரு வெண்டாமரை சேர்ந்ததுபோல் - செந்தாமரைப் பூவினடியில் வெண்டாமரை போய்ச சேர்ந்ததுபோல, அத தாமரைத்தடம் வாழ் அன்னங்காள் - அழகிய தாமரையின் அடியில் தங்கு கின்ற அன்னங்களே !, அன்று செயதவததால் - முன் பிறப்பிலியற்றிய புண்ணியத்தால், எந்தாயும் ஈசனுமாகின்ற கோமுத்தி யேர்க்குருபால் - எனக்கு அன்னையாயும் கடவுளாயு மிருக்கின்ற அழகிய திருவாடு துறைத் தேசிகரிடம், யான விடுதூதினே வாழ்த்துதற்கே - நான் அனுப்பிய உடை யினே ஆசி அல்லது வாழ்தலித் தரும்படி, அங்ஙன் வந்து ஓதிவீர் - அவ விடத்திற் சென்று அவர்க்கு உரைப்பீராக !, எ - று.

3. அஞ்சக் கரத்தி னருள்வடிவாம் வெண்ணீற்றைக்
கஞ்சக் கரத்தளிராற் கற்பிக்க—மிஞ்சுபுகழ்
கொண்டோங்கி வாழ்கின்ற கோமுத்தித் தேசிகற்குத்
தொண்டீடாமிவ் வட்டகைதான் ரூபெய்ந்து.

உரை:—மிஞ்சு புகழ் கொண்டோங்கி வாழ்கின்ற கோமுத்தி தேசி கற்கு - மிகுந்த கீர்த்தியோடு தழைத்து வீற்றிருக்கின்ற திருவாவடுதுறைக் குருமூர்த்திக்கு, அஞ்சக்காத்தின் அருள்வடிவாம் வெண்ணீற்றை - பஞ் சாட்சரத்தின் அருள் வடிவாக விளங்குகின்ற வெள்ளிய திருநீற்றினை, கஞ்சகரத்தளிரால் கற்பிக்க - கமலம்போன்ற மெல்லிய கைகளால் எடுத்து வழங்குவதற்கு, இவ வட்டகைதான் தேய்ந்து தொண்டாம் - கிண்ண வடிவான இசசம்புடம் அமைத்து பயன்படுவதாக, எ - று.

சதாவதானியாகிய சுப்பிரமணிய ஐயர்

பாடியது

1. மூவுலகுந் தொழுதுறைசை வாழ்குருசுப்
பிரமணிய மூர்த்திதன்சீர்
பாவுக ழெனுமவெள்ளந் தோன்றவயன்
வெருவுற்றுப் பகர்மாலுந்திப்

பூவுலறப் புகலவனு மரனுடலிற்
புகவவனும் புக்கதோர்ந்து
மேவுமுதற் காரணனு மவனுள்ளக்
குகைநுழைந்து விளங்குற்றனே.

உரை:—மூவுலகுந் தொழுதுறைசை வாழ் குரு சுப்பிரமணிய மூர்த்தியின் - மூன்றுலகமும் வழிபடுகின்ற திருவாவடுதுறையில் வீற்றிருக்கின்ற சுப்பிரமணிய தேசிக மூர்த்தியினுடைய, சீர்பாவு புகழெனும் வெள்ளந் தோன்ற - சிறப்புப்பரவிய கீர்த்தியெனும் வெள்ளமானது பெருக்கெடுக்க, அயன் வெருவுற்றுப் பகர்மாலுந்திப் பூவுலற - பிரமதேவர் பயந்து சிறப்பாகப் பேசப்படும் விஷ்ணுவின் உந்திக் கமலத்திற் சென்று தங்க, புகலவனும் அரன் உடலில் புக - சொல்லப்பட்ட அத் திருமாலும் ருத்திர மூர்த்தியின் திருமேனியிற் பாகங்கொள்ள !, அவனும் புகழ்ந்து ஓர்ந்து - திருமால் புகுந்ததை யறிந்து!, மேவு முதற்காரணனும் அவனுள்ளக் குகை நுழைந்து விளங்குற்றனே - அவன் மூவர் தோன்றுதற்கும் காரணனான முழுமுதற் கடவுளின் இருதயத்திற்குள் புகுந்து திகழ்வதானால், எ - று.

புலிக்குட்டி இராமலிங்கத் தம்பிரான்

பாடியது

---

1. மதுரம்பழுத்துத் தேன்றுளிக்கும் வளச்செம்பாகக் கவிபுகலும்
வலிமையடியேன் பெற்றதுகின் மலர்ந்த கருணையாலன்றே
இதுவன்றியுமப் பாடலியின் னிசையோ டெவருஞ் சிரமசைக்க
விசைக்குமவலிமை பெற்றதுகின் னினிய கருணையாலன்றே
சதுர்தங்கியவிப் புவியடியேஞ் சாமிவருக வென்றுகரந்
தலைமேற்குவிக்கப் பெற்றதுகின் சாலுங்கருணை யாலன்றே
கதுவுமிந்தநன்றியினைக் கடையேன் மறப்பனே துறைசைக்
கண்வாழ் குருசுப் பிரமணிய கருணைதியே கற்பகமே.

உரை:—துறைசைக் கண்வாழ் குரு சுப்பிரமணி கருணைதியே கற்பகமே - திருவாவடுதுறையில் வீற்றிருக்கும் சுப்பிரமணிய தேசிக மூர்த்தியே! கற்பகத்தரு போன்ற வள்ளலே!, மதுரம் பழுத்துத் தேன் துளிக்கும் - இனிமை நிறைந்து தேனைச் சிந்துகின்ற, வளச்செம்பாகக் கவிபுகலும் வலிமை - சொல்வளம் பொருள் வளமமைந்து யாவருக்கும் விளங்கக்கூடிய செவ்விய நடையில் பாட்டியற்றக்கூடிய திறமை, அடியேன் பெற்றதும்

நின் மலர்ந்த கருணையாலன்றே - அடியேனுக்குக் கிடைத்தது உன்னுடைய விளக்கமான தயவினாலல்லவா ?, இதுவன்றியும் அப்பாடலை இன்னிசையோடு எவரும் சிரமசைக்க இசைக்கும் வலிமை - இவ் வகையாகப் பாட்டியற்றுவது மல்லாமல் அப்பாட்டைக் கேட்டு எல்லோரும் தலையசைக்கும் படியாக அதனைச சொல்லும் திறமையும், பெற்றதும் நின் இனிய கருணையாலன்றே - எனக்குக் கிடைத்தது உன்னுடைய இனிமையான தயவினாலல்லவா?, சதுர் தங்கிய இப்புவிய - திறமையுடைய இவ்வுலகத்தார், அடியேஞ் சாமி வருக என்று கரம் தலைமேற் குவிக்கப்பெற்றதும் - என்னைப் பார்த்துத் தலைமேற் கை கூப்பி அடியேங்கள்பால் சாமி வருக என்று உபசரிக்கும்படி எனக்கேற்பட்டது, நின்சாலும் கருணையாலன்றே-உனது மிகுந்த தயவினாலல்லவா?, கதவும் இந்த நன்றியினைக் கடையேன் மறப்பனே - கான் பொருந்தி யனுபவிக்கும் இந்த உபகாரத்தை யெப்பொழுதும் நினையா திருப்பேனே?, (எக்காலமும் மறக்க மாட்டேன் என்பது கருத்து), எ - று.

2. வாசமலர்வாய் திறந்தென்னை வாவென்றழைத்துப் படித்தோர்கள்
மல்குஞ்சபையி னடுவிருத்தி மகாவலர்கள் காளிதாசன்
காசனையான் கற்பனைப்பாச் சாற்றுமவலிமை யாலென்று
தமியேன்புகன்ற கவிமுழுதுஞ் சாற்றுகேட்டப் பெருஞ்சபை
நேசவந்தப் பாவலர்போ னீபுமெலிக்கும் பெருமைபேறு [யில்
நீசனேன்பெற் றுய்யாம னெடுந்தூரத்தி லிருப்பதுவே
ஈசபெருந்தண் டனையன்றே விதம்மேலுந்தண் டனையுண்டோ
இசைசப்பாய்குருசுப் பிரமணிய வெந்தாயருட்சித் தாமணியே.

உரை:—குரு சுப்பிரமணிய எந்தாய் அருட் சித்தாமணியே - சுப்பிரமனிய தேசிகராகிய ஞானபிதாவே! திருபை யளிப்பதிற் சித்தாமணியைப் போன்றவரே !, வாசமலர் வாய் திறந்து எனனை வாவென்று அழைத்துப் படித்தோர்கள் மல்குஞ் சபையின் நடுவிருத்தி-மணம் பொருந்திய தாமரைப் பூப்போன்ற திருவாய் மலர்ந்து என்னை வரும்படி கூப்பிட்டுக் கற்றவர்கள் கூடிய சபை நடுவில் என்னை இருக்கசெய்து, மகாவலர்கள் - (அங்குள்ள கற்றவர்களைப்பார்த்து) பெரிய புலவர்களே !, இவன் கற்பனைப் பாச்சாற்றும் வலிமையால் காளிதாசன் அனையானென்று - கற்பனைகள் அமைந்த பாடல்கள் பாடுவதில் இவன் காளிதாசனைப் போன்றவனென்று சொல்லி, தமியேன் புகன்ற கவி முழுதும் சாற்றுகேட்ட பெருஞ் சபையில் - அடியேன் பாடிய பாடல்க ளெல்லாவற்றையுங் கேட்டுக்கொண்டிருந்த மகா சபையில், நேசவந்தப் பாவலர்போல் நீயும் வியக்கும் பெரும் பேறு - பிரியமாய் அந்தப் புலவர்கள் என்னைப் புகழ்வதுபோல நீயும் புகழ்ந்து பேசுகின்ற பெரும் பாக்கியத்தை, நீசனேன் பெற்றுய்யாமல் நெடுந்தூரத்தில் இருப்பதுவே - பாவியேன் பெற்று வாழாமல் மிகவும்

தரமான வீட்டில் நானிருப்பதே, ஈச பெருந்தண்டனையன்றே - தலைவனே எனக்குப் பெரிய தண்டனை யாகுமல்லவா? இதன்மேலும் தண்டனை யுண்டோ இசைப்பாய் - இதைப்பார்க்கிலும் கடுமையான தண்டனை இருக்கிறதா கூறி யருள்வாயாக!, எ - று.

3. செந்தமிழ்பா டும்வாய் திருவாய்மற் றெவ்வாயும்
நிந்தை மலஞ்சொரிவாய் நீர்சொரிவாய்—மூந்தவே
நாறும்வா யாரு நகைக்கும்வாய் மூடனே
தேறுவா யிச்சங்கதி.

உரை:—மூடனே அறிவில்லாதவனே!, செந்தமிழ் பாடும் வாய் திருவாய் - செவ்விய தமிழ்ப் பாடல்களைப் பாடுகின்ற வாயே மங்கலமான வாயாகும், மற்றெவ்வாயும் நிந்தை மலஞ் சொரிவாய் - மற்றெவ்வகையான வாயும் நிந்திக்கத்தக்க அழுக்கை உமிழுகின்ற வாயாகும், நீர் சொரிவாய் - அத்தகைய நீரையும் கக்குகின்ற வாயாகும், மூந்தவே நாறும் வாய் - அருகே வருகின்றதற்கு முன்னமேயே நாற்றம் வீசும் வாயாகும், யாரும் நகைக்கும் வாய் - எவரும் இகழ்கின்ற வாயாகும், தேறுவாய இச்சங்கதி - இதை உண்மையைத தெளிவா யறிவாயாக!, எ - று.

மதுரைச்

சம்பந்த சுவாமி மடத்துத் தம்பிரான்

பாடியது

மதுரைச் சம்பந்த சுவாமிமடத்துத் தம்பிரான்
இராமநாதபுரம் பொன்னுசாமித் தேவர்மீது பாடியது

1. பரிதியினமண விருணீக்கி யியசம்பந்த
தேசிகற்குநற் பாலின்
இருதிறஞானங் குழைத்கருள்கயற்க ணெமபெரு
மாட்டிசே ரிற்றவன்
கருதருமெண் ணெண்டிருவிளை யாடல்புரிதரு
கருணையங் கடல்சீர்ச்
சுருதிசொன் மதுரைப் பதிவளர்சோம
சுந்தரக்கடவுளின் னருளால்.

உரை :—பருதியின் அமண இருளை நீங்கிய சம்பந்த தேசிகர்க்கு - சூரியன்போல சமண மத விருளை யொழித்த திருஞானசம்பந்த குரு மூர்த்திக்கு, நற்பாலின் இருநிற ஞானம் குழைத்து அருள் - நல்ல திரு மூலப் பாலில் பரஞானம் அபர ஞானமென்னும் இருவகை ஞானத்தையுங் கலந்து கொடுத்த, கயற்கண எம்பிராட்டி சேர் இறைவன் - மீனாட்சியம்மை யைப் பாகத்திலுடைய பெருமான், கருதரும் எண்ணெண் திருவிளையாடல் புரிதரு - நினைத்தற்கரிய அறுபதது நான்கு திருவிளையாடல்களைச செய் தருளிய, கருணையங் கடல் - அழகிய கிருபைக் கடலானவன், சீர் சுருதி சொல் - சிறந்த வேதாகமத்திற்குப் பொருள் கூறிய, மதுரைப் பதிவளர் சோமசுந்தரக் கடவுளின் அருளால் - மதுரைத் தலத்தில் வீற்றிருக்கின்ற சோமசுந்தரக் கடவுளின் கிருபையால், எ - று.

2. மதிதவழ் புரிசைப் புதுமைவாழ் பொன்னுச்
சாமிமா மீகி பதிக்கென்றும்
துதியொடு பகைவெல் சூழ்ச்சியு மாட்சி
துலங்கர சாட்சியுமலராள்
வதிதரு திருவும புகழுரை மயமாம்
வச்சிரயாக்கையு மகவும்
புதியபோ கமுநீ டூழிவாழ் நாளும
பொலிவொடு மலிகுகமாதோ.

உரை :—மதி தவழ் புரிசைப் புதுவை வாழ் பொன்னுசசாமி மாமகி பதிகு - சந்திரன் தவழ்கின்ற மதில்களையுடைய இராமநாதபுரத்தில் வாழ் கின்ற பொன்னுசாமி மனனனுக்கு, என்றும் - எப்பொழுதும், துதியொடு பகைவெல் சூட்சியும் - புகழும் பகைவரை வெலலுகின்ற தந்திரமும், மாட்சி துலகுர அரசாட்சியும் - பெருமை விளகுகின்ற அரசாளுர திறமும், மலராள் வதி தரு திருவும் - இலக்குமி கடாட்சததோடு கூடிய செல்வ மும், புகழ் அமரமயமாம் வசசிர யாக்கையும் - நிலைபெற்ற புகழோடு கூடிய வயிரம் போன்ற உறுதிபான உட்பும், மகவும் - பிள்ளைப்பேறும், புதிய போகமும் - நவநவமான இன்ப அனுபோகங்களும், நீடூழி வாழ் நாளும் பொலிவொடு மலிகுக - நீண்ட காலம்வரை ஆயுளும் சிறப்பொடு பெருகு வனவாகுக, மாதோ - அசை, எ - று.

3. காராா முகிலே மயிலின நோக்கிடுங் காதலித்தே
ஏரார் சகோரமதி யினைநாடி டுமேய முல்லைத்
தாராா புயப்பொன்னுச் சாமி மகிபனின் சால்பிலகு
சீரார் வசனச்சுவை நோக்கிடுமென் சிரவணமே.

உரை :—ஏய முல்லைத் தார் ஆர் புயப் பொன்னுசாமி மகிப - அழகிய முல்லைமாலை பொருந்திய புயங்களை யுடைய பொன்னுசாமி மன்னனே !,

கார் ஆர் முகில மயிலினம் நோக்கிடும் - கருமை பொருந்திய மழை மேகத்தை மயிற் கூட்டங்கள் விருப்பத்தோடு எதிர்பார்த்திருக்கும், காதலித்தே வர் ஆர் சகோரம் மதியினை நாடிடும் - அழகு பொருந்திய சக்கரவாகப்புள் நிலவொளியை விருப்பத்தோடு கருதியிருக்கும், என் சிரவணம்- எனது காதுகள், நின் சால்பு இலகு சீர் ஆர் வசனச சுவை நோக்கிட - மேன்மை விளங்கும் சிறந்த உன்னுடைய மொழியின் இனிமையை எதிர் பார்த்திருக்கும், எ - று.

4. குறிகொள்சவ் வாய்விசய ரகுநாத மகாராச
மெய்க்கங்கோ பாலப்பேர்
நெறிகொள் புரவலன் கொடுத்தல் வல்லோ
னென்றெல்லோரு நிகழ்த்தல்செய்வார்
செறிகொள்பகை யுற்றூர்க்கும் பின்கொடான்
நட்படைந்து சேர்வா னுற்ற
வெறிகொள்சூழற் பரமாதர் தமக்குமுன்
கொடானெனில்யாம் விளம்பலென்னே.

உரை :—குறிகொள் சவவாய் விசய ரகுநாத மகாராச மெய்க்கு - கன்மையே ஆயகின்ற நோக்கத்தையுடைய விசய ரகுநாத சேதுபதியின் திருமேனிக்கு; அம் கோபாலப் போ நெறி கொள் புரவலன்-அழகிய பாது காப்பாள னென்னும் பெயா கொண் _ ஒழுகலமுடைய பொன்னுசாமி மன்னன், கொடுத்தல் வல்லோன் எனறு எலலோரும நிகழ்த்தல் செயவா - ஈகையிற் சிறந்தவனென்று எல்லோரும் சொல்லுவார்கள், செறி கொள் பகை யுற்றூர்க்குப் பின் கொடான் - நெருங்கிய விரோத முடையவருக்கு கூட வரிசையாகப் பரிசளிப்பதன்றி, காலந்தாழ்த்தாத கொடுப்பதில்லை நட்படைந்து சோவாணுற்ற வெறி கொள் சூழற் பரமாதா தமக்கு முன் கொடான் எனில் - சிநேகஞ் செய்துள்ள வாசனை வீசும் கூந்தலையுடைய, பரத்தையர்கு முறைக்குமாறாக முற்பட்டுக் கொடை கொடுப்பதமில்லை, யாம் விளம்பல் என்னே - அவனுடைய நீதி முறையைப்பற்றி நான் அதிக மாகச் சொல்ல வேண்டியதில்லை, எ - று.

———

திருவாவடுதுறைச் சாமிநாத கவிராயர்

பாடியது

நூலுக்கு நீருக்குஞ் சிலேடை

1. வெள்ளிறத் தாற்செயற்கை மேவியே வேறுநிறங்
கொள்ளலாற் றோய்க்குங் குறியினால்—வள்ளலென
வாழ்சந்திர சேகரக் கவிஞன்மால் வரையில்
ஆழ்நீரு நூலுநிக ராம்.

உரை :—வெள்ளை நிறத்தால் - (தண்ணீரும் நூலும் இயற்கையாக) வெண்ணிற முடைமையாலும், செயற்கை மேவிய வேறு நிறங் கொள ளுதலால் - செயற்கை காரணமாகவே மற்ற நிறங்களை ஏற்பதாலும், தோய்க்கும் குறியினால் - தோய்ப்பதற்கு உரிய தன்மையை யுடைமையி னாலும், வள்ளல் என வாழ் சந்திரக் கவிஞன்மால் வரையில் - ஈகையாளனாக வாழ்கின்ற சந்திரசேகரப் பாவலரது உயர்ந்த குணத்தின்மீது, ஆழ் நீரும் நூலும் நிகராம் - ஆழமான தண்ணீரும் நூலும் தம்முள் ஒப்பனவாகும், எ - று.

போற்றி முத்துப்பிள்ளை

பாடியது

பொன்னுசாமித் தேவர்மீதியற்றியன

1. கன்னனுமக் கென்னசெய்தா னதுபோகட்டுங்
கருணைமிகு குமணனுமக் கென்ன செய்தான்
றென்னனுமக் கென்ன செய்தா னளனென்செய்தான்
சிசுபால னென்னசெய்தான் யாதொன்றுமிலையே
யன்னவர்கள் பெற்றபுகழ்ச் சேயர்நாண
வடுத்தவர்கள் கலிகளீ கெடுத்தேபோட்டாய்
பொன்னுசுவா மித்துரையே புதுவைவாழும்
புரந்தரீ செய்ததும் நீதிதானே.

உரை :—பொன்னுசாமித் துரையே புதுவை வாழும் புரந்தர - பொன்னுசாமித் தேவரே !,* இராமநாதபுரத்தில் வாழ்கின்ற இந்திரன் போன்ற செல்வரே !, கன்னன் உமக்கென்ன செய்தான் - கருணன் உமக் கென்ன கெடுதி செய்தான், அதுபோகட்டும் - அது கிடக்க, கருணைமிகு குமணன், தென்னன், நளன், சிசுபாலன் என்ன செய்தான் - தயவு மிகுந்த குமுண வள்ளல், பாண்டியன், நளசக்கிரவர்த்தி, சிசுபால மன்னன் என்னும் வள்ளல்கள் எல்லாரும் உமகென்ன கெடுதி செயதார்கள், யாதொன்று மிலையே - ஒரு கெடுதியும் அவர்கள் செய்யவில்லையே, (அப்படி யிருக்கவும்) அன்னவர்கள் பெற்றப் புகழ்சேயர் நாண - அவர்கள் பெற்ற கீர்த்திகளாகிய பிள்ளைகள் வெட்கப்படும்படி, அடுத்தவர்கள் கலிகளை நீ கெடுத்தே போட்டாய் - அண்டினவர்கள் வறுமையை முற்றிலும் நீ தொலைத்து விட்டாய், நீ செய்தது அநீதிதானே - ....., எ - று.

2. இப்புவியி லென்கவலை யெப்பொழுதுதீருமினி
யேதுமொரு வழியுமறியே
னீசனுர்தம்மிடம பேசுவோமென்னினு
மிரந்தவனு மஃகிருனே
மற்புயன்றிருமா லிடத்தினிற்செல்லவோ
மண்ணுண்ண டுறங்கினனே
மலரயனுமனமெடுத் தலைகிருனேபுதுவை
வளர்பொன்னு சாமிசமூக
மிப்பொழுதுசோலா மொப்பிலாமுத்தமிழி
லெதிலும்வல் லவனுச்சுதே
யென்கவிபவன்செவிக் கன்பாயிருக்குமோ
விருதிய முதவுவாயே
செப்புநீபுகலிடம ஞானநெறியடையவோ
சித்தமொரு நிலையில்லையே
தினமெனுளமவேண்டவரு கருணைமழைசார்ந்துபொழி
திருவருள்செய் காந்திமதியே.

உரை:—தினம் என் உளம் வேண்ட வருகருணை மழைசார்ந்து பொழி திருவருள் செய் காந்திமதியே - நாடோறும் என்னுடைய நெஞ்சம் உன் னைப் பிரார்த்தனை செய்யக் கருணை யென்னும் மேகத்தின் வாயிலாகத் திருவருளென்னும் நீரைப் பொழிகின்ற காந்திமதி யம்மையே !, இப்புவி யில் என் கவலை எப்பொழுது தீரும் - இந்த உலகத்தில் என்னுடைய கவலையானது எப்போது நீங்கும், இனி எப்போது ஒரு வழியும் அறி யேன் - ....., ஈசனுர் தம்மிடம் பேசுவோ, மென்னினும் இரந்து அவ னும் அலைகின்றனே - செபெருமானிடத்திற் போய் ஒன்றைக கேட்போ

மென்ருல் அவரும் பிச்சை யெடுத்துத் திரிகிறரே, மல்புயன் திருமாலி டத்தில் செல்லவோ மண்ணுண்டு உறங்குகிறரனே - வளமிக்க தோளை யுடைய மெருமாளிடத்திற் போவோமெனில் அவர் பூவுலகத்தை விழுங்கி விட்டுத் தூங்குகிறர், மலரயனும் அனமெடுத்து அலேகின்றரனே - தாம ரைப் பூவிலுள்ள பிரமனும் அன்னத்தின் மேலேறித் திரிகின்றரே, புது வைவளர் பொன்னுசாமி சமூகம் இப்பொழுது சேரலாம் - இராமநாதபுரத் தில் வாழ்கின்ற பொன்னுசாமி மன்னனுடைய சந்நிதானத்திற்கு இப் பொழுது போகலாமென்னில, ஒப்பிலா முதற்றமிழ் எதிலும் வல்லசுரசே- இணையற்ற முத்தமிழிலக்கிய மெதிலும் அவன் தேர்ச்சி யுடையவனயிற்றே, என் கவி அவன் செவிக்கு அன்பாய் இருக்குமோ - என்னுடைய பாட்டு அவனுடைய காதுக்கு உவப்பானதா யிருக்குமா ? இரு திகியம் உதவு வானே - பெரிய செல்வத்தை யவன் கொடுப்பானு அலலது கல்விச செல் வத்தையும் பொருட் செல்வத்தையும் அவன் அளிப்பானு, செப்புநீ புக லிடம் - நான் அடைக்கலஞ் சேரக்கூடிய விடத்தை நீ அறிவிப்பாயாக, ஞான நெறி யடையவோ சித்தமொரு நிலே இல்லேயே - ..., எ - று

3. பூமாதுவீற்றிருக்குமிடமதனிற் கலேமாதுபோகாளென்றே காமாதிகோரமற்றசமணர்சொன்ன நாலடியிற்கண்டதுபொய் [ப் போமாவென்றேமெய்யாவெண்ணினேனவ்வெண்ணமபொய்யதாக பாமாலேபுனேபொன்னுச்சாமியுன்பா லிருவரையுமபார்த்திட்டேனே.

உரை:—பாமாலே புனே பொன்னுசாமி - பாடல்களாகிய பூக்களே மாலே போலத் தொடுக்கின்ற ஆற்றலுடைய பொன்னுசாமித தேவரே !, பூமாது வீற்றிருக்கும் இடமதனில கலேமாது போகாளென்றே - திருமகள் தங்கு மிடதிறகு நாமகள் செலலமாட்டாளென்று, காமாதி கோரமற்ற சமணர் சொன்ன நாலடியாற் கண்டது - காமம் முதலிய உட்பகைகளே யொழித்த நாலடியாக பாடிய சமண முனிவர்கள் கூறியது, பொய் போமா என்றே மெய்யா எண்ணினேன் - பொய்யாய்ப் போகுமா என்று நினேததேன், அவ் வெணணம் பொய்யதாக உன்பால இருவரையும் பார்ததிட்டேனே - அந்த எணணம் பொய்யாகப் போகும்படி உனனிடதில் திருமகளேயும் கலேமகளேயும் ஒருங்கே இருக்கக்கண்டேன், எ - று.

முத்தைய உபாத்தியாயர்

பாடியது

சிவஞான தேவர்கள்மீது பாடியது
நாணிக்கண் புதைத்தல்

1. தேன்படி யாத்தரு மூல்லையந் தாரணி திண்புயமோ
மான்படி காக்குஞ் சிவஞானசாமி மணிவரைமேல்
மீன்பிடி கைவலை வீசிக் களிற்றினை விட்டுக்கெண்டை
தான்பிடித் தாயதை நான்பிடிப் பேனடி தார்குழலே

உரை:—தேன்படியாத்தரு - வண்டு தங்காத கற்பக மரம்போன்ற, மூல்லையம் தாரணி - அழகிய முல்லை மாலையையணிந்த, திண்புயக் கோமான் படிகாக்கும் - வலிமையான தோள்களையுடைய அரசனது பூமியைக் காகின்ற, சிவஞானசாமி மணிவரைமேல் - சிவஞான தேவரது அழகிய மலையின்மீது, மீன்பிடி கைவலை வீசி - மீனைப் பிடிக்கின்ற கையாகிய வலையை வீசி, களுத்தினை விட்டு - யானைபோன்ற தனங்களைத் தொடாமல், கெண்டைதான் பிடித்தாய் - கெண்டை மீனபோன்ற கண்ணைப்பற்றி மூடிக்கொண்டாய், அடிதார் குழலே - மாலையணிந்த கூந்தலையுடைய பெண்ணே !, அதை நான் பிடிதேன் - அந்த யானையை நான் பற்றிக்கொள்வேன், எ - று.

தண்டபாணி சுவாமிகளென்னும்

முருகதாச சுவாமிகள்

பாடியது

1. தட்டா னிடத்தினிற் றங்கப் பணிகள் சமைப்பதுவும்
வட்டாடு வாரைத் திருத்திநன் மார்க்கத்தில் வைப்பதுவும்
பட்டாங்கி லுள்ளதைக் காகிதத் தச்சிற் பதிப்பதுவும்
தொட்டார் மனத்தைப் பலவாறு நாளுந் துயர்செய்யுமே.

உரை:—தட்டானிடத்தினிற் றங்கப் பணிகள் சமைப்பதும் - தட்டானிடத்தில் தங்க நகைகளைச செய்வித்துக் கொள்வதும், வட்டாடுவாரைத்

திருத்தி நன்மார்க்கத்தில் வைப்பதுவும் - வட்டாடுகின்ற குழந்தைகளைச் சேர்திருத்தஞ்செய்து நல்ல வழியிற் றிருப்புவதும், பட்டாங்கி லுள்ளதைக் காதிதத் தச்சிற் பதிப்பதுவும் - ஓலைச் சுவடிகளிலுள்ள நூல்களைத் தாள்களில் அச்சியற்றி வைப்பதும், தொட்டார் மனத்தைப் பலவாறு நாளுந் துயர் செய்யுமே - இவ்வேலையைத் தொடங்கி நடத்துவார்களுடைய உள்ளத்தைப் பல நாட்கள் தின்புறுத்தக் கூடியன, எ - று.

சங்கரமூர்த்திக் கவிராயர்

பாடியது

சிவப்பிரகாச வள்ளலைப் புகழ்ந்தது

1. ஒருகையிலே யன்ன மொருகையிலே சொன்னம்
வருகையிலே சன்மான வார்த்தை—பெருகுபுகழ்ச்
சீமானு மெங்கள் சிவப்பிரகா சத்திருவக்
கோமானுக் குள்ள குணம்.

உரை :—ஒரு கையிலே அன்னம் - ஒரு பக்கத்திலே நல்ல உணவு, ஒரு கையிலே சொன்னம் - மற்றொரு பக்கத்திலே வளமான பொன் பரிசு, வருகையிலே சன்மான வார்ததை - மீளும்போது நல்ல மதிப்பான உபசார மொழிகள் என்பவற்றை வழக்கமாகப் புலவர்க்கு அளிப்பது, பெருகுபுகழ்ச சீமானும் எங்கள் சிவப்பிரகாசத திரு அக்கோமானுக்குள்ள குணம - வளர்கின்ற கீர்த்தியையுடைய செல்வராகிய எங்கள் சிவப்பிரகாச மன்னனுக்குள்ள அழகிய மங்கள குணமாகும், எ - று.

தேவதான உற்சவ காலத்திற் பாடியது

2. பாகசாத னர்போற்று மலைக்கொழுந்தைத்
தன்பிராண பத்தா வெண்ணும
ஏகநா தனைச்சேரை வீதியிலே
யொருபூத மெடுத்துக் கொண்டு
போகவே மனஞ்சகியாள் பெற்றநா
யகிசூலப் போர்வே லேந்தி
வாகைசூ டியவீர சிங்கவா
கனமேறி வருகின்றாளே.

உரை :—பாகசாதனர் போற்று மலைக்கொழுந்தை - இந்திரர்கள் வழிபடுகின்ற மலையின் மீதிருக்குஞ் சிவபெருமானை, தன் பிராண பத்தா என்

னும் எகாதனே - தன்னுடைய பிராண நாயகனுகிய ஒரு தனிக்கடவுளே, சேறை வீதியிலே ஒரு பூதம் எடுத்தகொண்டு போகவே - சேற்றூர் வீதியிலே அவர் ஒரு பூதவாகனத்தின்மேல் எழுந்தருளிப்போக, மனஞ் சுயாள் பெற்ற நாயகி - தன் கணவனைப் பூத மெடுத்துக்கொண்டு போவ தைக் கண்டு மனம் பொருது தாய்போன்ற அம்பாள், சூலப் போர் வேல் எந்தி - சூலமாகிய போராயுதத்தைக் கையி லெடுத்துக்கொண்டு, வாகை சூடிய வீர சிங்கவாகனம் ஏறி வருகின்றாளே - வெற்றிமாலை சூடிய வீரம் பொருந்திய சிங்கவாகனத்தின்மே லெழுந்தருளி வருகின்றாளே, எ - று.

நமசிவாயக் கவிராயர்

பாடியது

பாபநாசத்து உலகம்மைமீது பாடியது

1. தாட்டா மறைதந் தருளுலகே பட்ட சஞ்சலங்கள்
கேட்டாரு ருகுவர்கெட்டே னினியென் கிலேசமெலாம்
பாட்டா வுரைசெயப் பட்டோலை கோடிபற் றுதகற்றே
ரேட்டா யிரம்வரி தீட்டவல் லார்சற் றெழுதுவரே.

உரை :—உலகே - உலகம்மையே !, பட்ட சஞ்சலங்கள் - நான் அனு பவித்த துன்பங்களே, கேட்டால் உருகுவர் - கேட்டவர்கள் மனமிளகு வார்கள், கெட்டேன் இனி என் கிலேசமெல்லாம் - பாவியேனுடைய கவலை களே யெல்லாம் இனிமேல், பாட்டா உரைசெய பட்டோலை கோடி பத்தாது - கவியாகக் கூறவேண்டுமென்றால் எட்டோலைகள் கோடியிருந்தா லும் அவற்றை யெழுதப் போதமாட்டா, கற்றோர் எட்டாயிரம் வரி தீட்ட வல்லார் - படித்தவர்கள் ஒரு எட்டில் ஆயிரம் வரிகள் எழுத வல்லவாகள், சற்று எழுதுவரே - கொஞ்ச மெழுதுவார்கள், (ஆதலால்) தான் தாமரை தந்து அருள் - உன்னுடைய திருவடிக் கமலத்தை யெனக்குக் கொடுத் தருள்வாயாக !, எ - று.

2. பண்டிருந்தா ரின்றிருந்தா ரநுபவியாத்
துன்பமனு பவித்தே னின்ப
முண்டிருந்தா யறிந்திலீ யுண்ணுதார்
பசிவருத்த முண்டார்க் குண்டோ
வண்டிருந்து வயிரமறத் துளைத்தமர
மானேனென் வாட்டங் கண்ணுற்
கண்டிருந்தா ருயிர்விடுவர் காணுர்கேட்
டுளங்கரைவர் கயிலை வாழ்வே.

உரை :—கயிலை வாழ்வே - கைலையில் வீற்றிருக்கும் அம்மையே !, பண்டிருந்தார் இன்றிருந்தார் அநுபவியாத் துன்பம் அனுபவித்தேன் - முற் காலத்தி லிருந்தவர்களும இக்காலத்தி லிருந்தவர்களும் அநுபவியாத துய ரங்களே நான் அனுபவித்தது வருந்தினேன், இன்பம் உண்டிருந்தாய் அறிந் திலை - இன்பத்தை யனுபவித்துக் கொண்டிருக்கும் உனக்கு என் துயரம் தெரியாது, நீ உண்ணுதார் பசி வருத்தம் உணடார்க்கும் உண்டோ - சாப் பிடாதவர்களுடைய வருத்தத்தை நன்றாகச் சாப்பிட்டவாகள் அறிவாகளா ?, வண்டு இருந்து வயிரம் அறித்த துளைத்த மரம் ஆனேன் - வண்டு தங்கி உறுதியான பாகங்கள் அழியும்படி துவாரமிட்ட மரம்போல வலியிழந்த வன் ஆனேன், என் வாட்டம் கண்ணுர் கண்டிருந்தார் உயிரிடு வர் - என் துயரத்தைக் கண்டவர்கள் உயிர் துறப்பா, காணுர் கேட்டு உளம் கரைவர் - அதனை நேரிலே பாராதவாகள் கேள்வியாலறிந்து மன முருகுவார்கள், எ - று.

வெ. ப. சுப்பிரமணிய முதலியார்

பாடியது

திருவாவடுதுறைப் பண்டார சந்நிதியைப் பற்றிப் பாடியது

1. நின்னருளின் வெள்ள நிமிர்ந்து பரந்தனது
பொன்னடியார் தமமைப் பொதிந்ததனை—யின்னும்
தெரியாரே நின்னன்பர் செமமேனி வெண்ணை
பரவியது நீற்றுனெண் பார்.

உரை :—நின் அருளின் வெள்ளம் நிமிர்ந்து பரந்து - உன்னுடைய திருவையின் பெருக்கானது உயாந்து பரவி, உனது பொன்னடியார் தமைப் பொதிந்தனை - பொனமேனியுடைய உனனுடைய அடியார்களை முற்றிலும் மூடிக்கொணடதை, நின அன்பா இனனும் தெரியாரே - உனனுடைய தொண்டாகள் இன்னும் அறியவில்லை, செம்மேனி வெணமை பரவி யது - தங்களது செவவிய உடம்பில வெண்ணிறம் பரவியிருப்பதற்குக் காரணம், (நின்னருள் வெள்ள மென்று சொல்லாது) நீறருள் எனபார்- நிருநீற்றுலெனறு சொல்வார்களா, எ - று.

2. உள்ள முதலினெடு மூழியஞ் சேர்ப் பான்புக்கு
விள்ளு முதலிழந்தோன வீழவே—வள்ளலே
உன்னை யடைந்திடுவா னுன்பா லடைந்தவியா
னென்னையிழந் தேனிஃதென் னே.

உரை:—வள்ளலே-அருளாளரே !, உள்ளம் முதலினெடும் ஊதியம் சேர்ப்பான் புக்கு - உள்ளமாகிய முதற் சொத்தோடு லாபத்தையும் அடைவதற்காகப் போய், வள்ளு முதலிழந்தேன் - பேசப்படுகின்ற முதலையே இழந்துவிட்டேன், வீழவே உன்னை அடைந்திடுவான் - உன்னைச் சேருவதற்கு விரும்பிய வுடனே, உன்பால் அடைந்த யான் - உன் பக்கம் வந்து சேர்ந்த நான், என்னை இழந்தேன் - தற்போதத்தை யிழந்துவிட்டேன், இஃதென்னை - இது என்ன வியப்பா யிருக்கிறது, எ - று.

3. அம்பல வாணு வளக்கப் படாதபொரு
ளிமபரிரண் டேயலவதா மேலவையெனி—னம்ப
வொருபொரு ணின்னருண்மற் றோர்பொருளோ நாயே
னரிய பவமாகு மால்.

உரை:—அம்பலவாணு - அம்பலவாண தேசிகரே !, அளக்கப்படாத பொருள் இம்பர் இரண்டே - அளக்க முடியாத பொருள்கள் இவ்வுலகத்தில் இரண்டு உளளன, அவைதான் எவை எனில் - அவையெவை என்றால, நமப ஒரு பொருள நின்னருள் - நம்பத்தக்க ஒப்பற்ற பொருள் தன்னுடைய திருவருளாகும், மற்றோர் பொருளோ - இரண்டாவது பொருளாவது, நாயேன் அரிய பவமாகுமால் - நாய போன்ற அடியேனுடைய கடத்தற்கு அரிய பிறப்புக் கடலாகும், ஆல் - அசை, எ - று.

கொட்டாம்பட்டிக்
கருப்பையாப் பாவலர்
பாடியது

குன்றுக்குடிக் குமரன்மீது பாடியது

1. குன்றுக் குடியாய் குமரா குகாவெண்ணெக்
குன்றுக் குடியாயாட் கொண்டருள்வா—யன்றுவந்து
மனறுடி னற்கு வருகுருவே யானுரின்பான்
மன்றுடி னேனைகைவிடா மல்.

உரை:—குன்றுக்குடியாய் - குன்றுக குடியென்னும் திருப்பதியில் வீற்றிருப்பவனே !, குமரா குகா - முருகக்கடவுளே !, இருதயக் குகையிலிருப்பவனே !, என்னைக குன்றுக் குடியாய் ஆட்கொண்டு அருள்வாய்- குறைவிலாத குடும்ப வாழ்க்கை யுடையவனுக என்னை யாகவி யருள்வாய், அன்று உவந்தி மன்று ஆடினர்க்கு வருகுருவே - அக்காலத்தில் விருப்பத்

தோடு அவையில் நடனஞ்செய்த சிவபெருமானுக்குப் பிரணவ உபதேசஞ் செய்ய வந்த ஆசாரியனே!, கை விடாமல் யானும் நின்பால் மன்று ஆடி னேன் - என்னை நீ கை விடாமல் காப்பாற்றும்பொருட்டு உன்னை நான் வேண்டிக்கொண்டேன், எ - று.

திருவாலங்காட்டு நடேசர்மீது பாடியது

2. கண்டந் திருவாலங் காட்டினுய் நின்னையன்பாக்
கண்டந் திருவாலங் காட்டிலே—யண்டமுற்றுங்
காக்கையரன் காணரிய கண்ணுதலே யெம்பவத்தைப்
போக்கையா ஞானம புரி.

உரை:—கண்டம் திருவாலங் காட்டினுய் - கழுத்தில் அழகிய விடத்தை யடையாளமாகத் தோற்றுவித்தாய், திருவாலங் காட்டிலே நின்னை அன்பாற் கண்டம் - திருவாலங்காட்டு ஸ்தலத்திலே உன்னை அன் போடு தரிசனஞ் செய்தோம் அண்டமுற்றுங காகையின் காணரிய கண் ணுதலே - உலக முழுதிலும் காகினைற திருமால் தேடிக் காண முடியாத நெற்றிகண்ணை யுடைய பெருமானே!, என் பவத்தைப்போக்கு - என் னுடைய பிறவியை யொழிப்பாயாக !, ஐயா ஞானம்புரி - ஐயனே ஞானத்தை விரும்பிக் கொடுத்தருள்வாயாக !, எ - று.

பன்னிரண்டு ஊர்வரப் பாடியது

3. திருமயிலை வான்மியூர் முகிலையன சாயற்
றிகழ்கோதைத் திருவல்லிக் கேணிலைமை யுற்ற
ஒருமுல்லை வாயினகை யாலங்காட் டுவிழி
யொற்றியூர் வதவசமோ வெனநொந்துன் மயலால்
வருமணிமே கலைக்காஞ்சித் துகில்வளைக ணழுவ
மலைத்தண்ணு மலைமுலையின் வார்கிழிய வந்தாள்
தருமதுரை யேசெந்தில் வேலரசே யண்ணு
டணைப்புலியூ ருக்கணுப்பிற் சார்பாக்க முனதே.

உரை:—திருமயிலை அனசாயல் - அழகிய மயிலைப்போன்ற சாயலும், வான்மியூர முகிலையன திகழ்கோதை - வானதத்தின்மேலே யூர்ந்து செல்லு கின்ற கரிய மேகம்போல் விளங்குகின்ற கூந்தலும், திருவல் என்-அழகிய சொகுகட்டான் காயைப்போன்ற வலிய முலையும, இகழு நிலைமை - கரும்பு போன்ற உடம்பும், உறற ஒரு முல்லைவாயில் நகை-ஒப்பற்ற முல்லைபோன்ற வாயிற் பற்களும், ஆலங்காட்டு விழி-விடத்தன்மை காட்டகூடிய கண்ணு முடைய பெண, ஒற்றியூர்வது அவசமோ என நொநது-அணைந்து சேர்வது தன் வசப் படாததோ என்று வருந்தி, உன் மயலால் - உன்பாலுள்ள மோகத்தால், வருமணி மேகலை காஞ்சித் துகில் - என் கோவை மணிகள்

கலந்த ஆடையும், வளைகள் - வளையல்களும், நழுவ - கழலும்படியாக, மலைத்து-வருத்தத்தால் மெலிந்து, அண்ணுமலை முலையின் வார்கிழிய வந்தாள் - உயர்ந்த மலைபோன்ற முலையானது விம்மப்பெற்று கச்சு அறும்படியாக உன்பால் வந்து சேர்ந்தான், தரும தரையே - அறவாணன முதலாளியே, செந்தில் வேல் அரசே - செந்தில் வேலென்னும் பெயருடைய மன்னனே!, அன்னவள்தனைப் புலி - அவளைத் தழுவி, ஊருகநு அணுப்பில் - உன்னுடைய ஊருக்கு அனுப்பினால் சார்பு ஆக்கம் உனதே - சேரக் கூடிய பாக்கியம் உன்னைச சார்ந்ததாகும், எ - று.

பன்னிரண்டு பலகாரப் பெயர்கள் வரப் பாடியது

4. தேங்குழலப் பந்தோசை யித்தியமா வுடலிற்
திகழ்வடையப் பழம்பணியா ரங்களெலா நீத்தே
ஒங்கியழு தலட்டுபல காரமுள வனைமார்க்
கொடுங்கிப்பா யசங்கர்த்த வுற்றூர்க்கு மஞ்சி
வீங்கிபக்கோ டாமுலையிற் பூந்தினவு கொண்டுன்
விரகத்தி லதிரசமுற் றன்பிட்டு வந்தாள்
தாங்குதனின் கடன்செந்தில் வேலரசே யவணின்
றன்பாலா யடைதலெழி றருமுறுக்குத் தானே.

உரை:—தேன் குழல் - வாசனை வீசும் கூந்தலும், அப்பந்து - அழகிய பந்துபோன்ற, தோசைத்தியம் - இரண்டு திரண்ட முலைகள், மாவுடலில் திகழ்வடைய - மானிற முடைய உடம்பில் விளங்கவும், பழம் பணியாரங்களெல்லாம் நீத்தே - பழய ஆபரணங்கள் முத்துமாலைகளெல்லாவற்றையு மொழித்து, ஒங்கி யழுதல் அட்டு - ஒங்கி அழுவதைத் தவிர்த்து, பலகார முள அனைமார்க்கு ஒடிங்கி-பல வகையான அசசமூள்ள மனத்தோடுகூடிய தாய்மார்க்கு அடங்கி, பாய் அசம் நிகர்த்த உற்றூர்க்கும் அஞ்சி - பாய்கின்ற ஆட்டைப்போன்ற உறவினர்களுக்கும் பயப்பட்டு, வீங்கு இபக்கோடு ஆம் முலையில் பூந்தினவுகொண்டு - விம்முகின்ற யானைக் கொம்புபோன்ற தனங்களின்மீது அழகிய தேமல் படரப்பெற்று, உன் விரகத்தில் அதிரசமுற்று-உன்னுடைய மோகததில் அதிக வின்பததை யுடையவளாய், அன்பிட்டு வந்தாள் - அன்புடையவளாய் வந்து சேர்ந்தாள், செந்தில்வேல் அரசே-செந்தில் வேலென்னும் பெயருடைய மன்னனே!, தாங்குதல் நின் கடன்-அவளை ஆதரித்தல் உன்னுடைய கடனுகும், அவள் நினறன்பாலா யடைதல் - அவளுன் பக்கமாய்ச சேர்தல், எழில் தரு முறுக்குத்தானே - அழகும் கெம்பீரமும் தருவதாகும், எ - று.

ஏழுமரப் பெயர்கள் வரப் பாடியது

5. செந்தில்வேல் வள்ளாநின் றிண்புயத்தார் பற்றநித்தம்
வந்தில்வேண் டுஞ்சீர் வனப்புடைய—வந்தமின்வேல்
ஆலமரங் கண்ணரசா மல்குலத்திக் கோங்குமுலை
பாலிவேம் பென்றுண்ணுள் பார்.

உரை :—செந்தில்வேல் வள்ளால் - செந்தில் வேலனுகிய வள்ளலே! நின் றிண்புயத்தார்பற்ற - உன்னுடைய வலிமையான தோளின்மேலுள்ள மாலையைக் கைக்கொள்வதற்காக, நித்தம் இல் வந்து வேண்டும் - நான் தோறும் வீட்டுக்குவந்து பிரார்த்தனை செய்கின்ற, சீர் வனப்புடைய - சிறந்த அழகுடைய, அந்தமின்வேல ஆலமரம் கண் - அழகிய ஒளியுடைய வேலும் விடமும் அரமும்போன்ற கண்ணையும், அரசாம் அல்குல் - அரசிலை போன்ற கடிதடமும், அத்திக் கோங்குமுலை - யானைபோன்ற தனமும் கோங்கினரும்புபோன்ற முலைக்காம்புமுடைய பெண், பாலி வேம்பு என்று உண்ணுள் - பாலை வேப்பிலைபோன்ற கசப்புடையதென்று அருந்தமாட்டாள், பார் - கவனிப்பாயாக, எ - று.

பழனிக்குமாரப் பிள்ளைமீது பாடியது

6. கல்லாதமூடர்கள்பாற்கவியுரைக்கிற் கற்பனைசொற்கனிவின்சாரம்
எல்லாநன் கறிவரா வறியாதார்க் குரைத்தல்கமி னிலை பாலி
இல்லாமற்கவிழ்த்ததொக்குமென்பதுநீயறியாயாவின்பாச்சொல்ல
வல்லாருன் பாலன்றி யெவர்க்குரைப்பார் பழனிக்கு மாரவேளே.

உரை:—பழனிக்குமார வேளே - பழனிக்குமார மன்னனே!, கல்லாத மூடர்கள்பால் கவி யுரைகளில் - படியாத அறிவிலிகளிடம் பாட்டுப் பாடினால், கற்பனை சொல் கனிவின் சாரம் எல்லாம் நன்கு அறிவரா - பாட்டின் அணிகள் சொன்னயங்கள் உணர்ச்சி நயங்க ளென்பவற்றை யவர்கள் அறியக்கூடுமா?, அறியாதார்க்கு உரைத்தல் கமினிலை பாலி இல்லாமல் கவிழ்த்தது ஒக்குமென்பது நீ அறியாயா - நயந் தெரியாதவர்களிடம் பாட்டியம்புதல் நிலவெடிப்பிலே நிலமுரிஞ்சும்படி பாலைக் கொட்டுவது போலாகுமென்பது உனக்குத் தெரியாததா?, இன்பாச் சொல்ல வல்லார் உன்பாலன்றி எவர்க்கு உரைப்பார் - இனிய பாட்டுப் பாடவல்லவர்கள் உன்னிடத்தில் தங்கள் பாட்டைச சொல்லாமல் வேறு யாரிடஞ் சொல்வார்கள், எ - று.

சிவகங்கை விசையச்சாமித் தேவர்பால் உரைத்தது

7. மாது வதன மதிதா மரைமலியே
மாது வதன மதித்தணைவாய்—ஓதுதமிழ்ப்
பாவிசையச் சாமிதரும் பண்புடையாய் நண்புடையாய்
மாவிசையச் சாமிபூ மா.

உரை :—ஓது தமிழ்ப்பா இசைய சாமிதரும் பண்புடையாய் - சொல்லு கின்ற தமிழ்ப் பாட்டுக்குப் பொருத்தமாகப் பொன்னை யளிக்கும் நற்குண முடையவரே !, நண்புடையாய் - சிநேகிதரே !, மாவிசையச் சாமி - பெரிய விசையச்சாமி முதல்வரே !, பூமா - உலக பாலகரே !, மாது வதனம் மதிதாமரை - மாதினுடைய முகம் சந்திரனையும் தாமரையையும் ஒக்கும், மாதுவதனம் மலையே - பெரிய விரண்டு தனங்களும் மலைபோன்றன, மதித்து அணைவாய் - அவளைப் பொருளாகக் கருதித் தழுவுவீராக !, எ-று.

அழகிய சொக்கநாத பிள்ளை

பாடியது

சரஸ்வதி தோத்திரம்

1. மேவினிய பேரமுதின் மிக்கான வாக்குநல்கும்
பூவினர சாட்சி பொருந்தநல்கு—நாவினிடத்
தாள்கமலத் தாளபயத் தாள்வரதத் தாளெகினத்
தாள்வெண்ணிறத் தாள்கனகத் தாள்.

உரை :—நாவினிடத்தாள் - நாவில் வீற்றிருப்பவள், கமலத்தாள் - வெண்டாமரைப் பூவில் வீற்றிருப்பவள் அபயத்தாள் வாதத்தாள் - அபயம் வரதமென்ற திருகரை அடையாள முடையவள், எகினதாள் - அன்னதின்மீது எழுந்தருள்பவள், வெண்ணிறதாள் - வெள்ளை நிறமுடையவள், கனகதாள் - பொனமுடி தரிததவள், (அத்தகைய சரஸ்வதி) மேவு இனிய பேரமுதின மிகான வாகு நலகும் - பெறுதற்கு இனிமையான பெரிய தேவாமிாததைப் பாாகிலுஞ சிறந்த சொல்வன்மையை அளிப் பான், பூவின் அரசாட்சி பொருந்த நல்கும - பூவுலகதில் அரசு செய்யும் அதிகாரத்தைப் பொருந்தும்படி அருள் செய்வாள், எ - று.

முத்துசாமிப் பிள்ளைபேரிற் பாடிய சிலேடைகள்
சிவனுக்கும் மகாவிஷ்ணுவுக்கும்

2. ஆனைமுகங் காணுதலா லஞ்சக்கரங் கொளலான்
மேனியுமை சேர்வணத்தால் வெண்கோட்டா—னனிலத்தின்
மங்காத கீர்த்திபெற்ற வள்ளன்முத்து சாமிமன்னு
கங்காதரன் றிருமால் காண்.

உரை :—தானிலத்தில் மங்காத கீர்த்தி பெற்ற வள்ளல் முத்துசாமி மன்னு - உலகத்தில் அழியாத புகழ்படைத்த வள்ளலாகிய முத்துசாமி வேந்தனே!, ஆனை முகங் காணுதலால் - ஆனைமுகக் கடவுள் தோன்று வதற்குக் காரணமா யிருப்பதாலும், அஞ்சக் கரங் கொளலால் - பஞ்சாட் சரத்தை மந்திரமாக வுடைமையாலும், மேனி உமைசேர் வணத்தால் - திரு மேனியில் உமையம்மை ஒரு பாகத்திற் சேர்ந்திருக்கின்றபடியினாலும், வெண்கோட்டால் - வெள்ளிய திருநீற்றுக் கோட்டினை யுடைமையாலும், கங்காதரன் - கங்கையைத் தரித்த சிவபெருமானும்,

ஆனைமுகங் காணுதலால் - கஜேந்திரனுக்குத் தரிசனங் கொடுத்தா லும், அஞ்சக்கரங் கொளலால் - அழகிய சக்கரத்தைக் கையில் கொள்ளுத லாலும், மேனியு மைசேர் வணத்தால் - உடம்பானது மேகம்போன்ற நிற முடைமையாலும், வெண்கோட்டால் - வெள்ளைப் பன்றியின் கொம்பை யுடைமையாலும், திருமால் காண் - திருமாலும சமமாவார்கள், எ - று.

சிவனுக்கும் தேங்காய்க்கும்

3. கல்லா லடியுறலாற் கண்மூன் றிருப்பதனல்
எல்லோரும் பூசைக் கெடுத்திடலால்—வல்லோடு
கொள்ளுகையாற் கங்கா குலமுத்து சாமிமன்னு
கள்ளிதழி யானிகர்தேங் காய்.

உரை :—கங்காகுல முத்துசாமி மன்னு - கங்கை குலமாகிய வேளாள குலத்திற் பிறந்த முத்துசாமி வேந்தனே!, கல்லால் அடியுறலால் - கல்லால மரத்தினடியில் தெக்ஷிணமூர்த்தியாய் எழுந்தருளியிருப்பதனாலும், கண் மூன்றிருப்பதனல் - முக்கண்ணுடைமையாலும், எல்லோரும் பூசைக்கு எடுத்திடலால் - எல்லாரும் வழிபாட்டிற்குச் சிவலிங்கத்தைச் செப்பாக எடுத்துக்கொள்வதாலும், வல்லோடு கொள் கையால் - வலிய தலையோட் டைப் பிச்சைக்காகக் கையிற் கொண்டமையினாலும், கள் இதழி யான் - தேன் சொரியும் கொன்றைமாலையுடைய சிவபெருமானும்,

கல்லால் அடியுறலால் - தேங்காயானது கல்லிலடித் துடைக்கப்படு லாலும், கண் மூன்றிருப்பதனல் - அதற்கு மூன்று கண்கள் விருப்பதனாலும, எல்லோரும் பூசைக்கு எடுத்திடலால் - எல்லோரும் பூசையிற் சுவாமிக்கு

சிவேதிப்பதற் கெடுத்தக்கொள்ளுதலாலும், வல்லோடு கொள்ளு கையால் - பெலமான சிட்டை யுடைமையாலும், தேங்காய் சிவபெருமானுக் கொப் பாகும், எ - று.

சிவனுக்கும் வாழைப்பழத்திற்கும்

4. நஞ்சுதின் னப்பெறலா னற்றேரு ரித்திடலான்
மிஞ்சுங் கனிதலைமேற் கொளலால்—விஞ்ச
வுரமருவுஞ் சீப்பணியா லோங்குமுத்து சாமீ
பரமசிவன் வாழைப் பழம்.

உரை :—ஓங்கு முத்துசாமி - சிறப்புற்றோங்கும் முத்துசாமி மன்ன வனே !, பரமசிவன் - சிவபெருமான், நஞ்சு தின்னப் பெறலால் - பாற் கடலிலெழுந்த விடமுண்ணப் பெறுதலாலும், நல் தோல் உரித்திடலால் - நல்ல யானைத்தோலை யுரித்திடுதலாலும், மிஞ்சும் கனி தலைமேல் கொள லால் - வெள்ளமாகப் பெருக்கெடுத்து வந்த கங்கைக் கன்னியைத் தனது சிரமேற்கொள்ளுதலாலும், விஞ்ச உர மருவும் சீப்பணியால் - மார்பிலே பொருந்திய மிகச் சிறந்த பாமபை யுடைமையால்,

நஞ்சு தின்னப் பெறலால் - நையப்பெற்றபின் அருந்தப் படுதலாலும், நல் தோல் உரித்திடலால் - நன்றாகத் தோலுரிக்கப்படுதலாலும், மிஞ்சும் கனிதலை மேற்கொளலால் - மிகுதியாகக் கனிந்து பழமாகின்ற தன்மை யாதலாலும், விஞ்ச உரமருவும் சீப்பணியால் - நல்ல வளம் பொருந்திய சீப்பாக அலங்கார முறுவதாலும், வாழைப்பழம் சிவபெருமானுக் கொப் பாகும், எ - று.

விஷ்ணுவுக்கும் கைக்கெடியாரத்துக்கும்

5. சக்கரத்தி னுலரவந் தாங்குதலி னேடுமுள்ளெட்
டக்கரத்தி னுல்வேலை யாவதினை—மிக்கவன்பர்
முக்கியமாய்க் கைக்கொளலான் முத்துசுவா மித்துரையே
கைக்கெடியா ரந்திருமால் காண்.

உரை :—முத்துசுவாமி துரையே - முத்துசாமி எசமானே !, திரு மால் - மகாவிஷ்ணு, சக்கரதினுல் - சக்காராயுததை யுடைமையாலும், அரவம் தாங்குதலின் - ஆதிசேஷனுகிய பாம்புமேல் தாங்கப்படுதலினை டும், உள் எட்டு அக்கரத்தினுல் - தியானிக்கப்படுகின்ற அட்டாட்சர மென் கிற மந்திரத்தினுலும், வேலை யார்வதினுல் - திருப்பாற்கடலில் தங்குவதி னுலும், மிக்க அன்பர் முக்கியமாய்க் கைக்கொளலால் - மிகுந்த அன்பர் முக் கியமாய்க் கைகூப்புவதினுலும்,

சக்கரத்தினுல் - சக்கரமாகிய கருவியை யுடைமையாலும், அரவந் தாங்குதலினேடும் - ஓசை கொண்டுள்ளமையாலும், முள் எட்டு அக்கரத்தி

னல் - முன் தொடுகின்ற எழுத்துக்களே யுடைமையாலும், வேலை யார்வதி னல் வேலைப் பாடுடைமையாலும், மிக்க அன்பா முக்கியமாய்க் கைக் கொளலால் - பல அன்பர்கள் முக்கியமாக உபயோகத்திற்குக் கையில் வைத்துக்கொள்வதினாலும், கைக்கடியாரம் திருமாலுக்குச் சமமாகும், எ-று.

மன்மதனுக்கும் நெருப்புக்கும்

6. கருமபுகையி னெலெரியுங் காட்சியினல் யாரும்
விருப்புதலான் மையல் விளக்க—வருமபொலிவா
லெத்திசைக்கு நீர்த்திபெற்ற வெங்கண்முத்து சாமிமன்னு
சித்தசனே யொப்பாகுந் தீ.

உரை:—எத்திசைக்கும் கீர்த்தி பெற்ற எங்கள் முத்துசாமி மன்னு - வர்தத் திகிலும் புகழ் பரவப்பெற்ற எங்களுடைய முத்துசாமி வேர் தனே!, கரும்பு கையினல் - கரும்பினே வில்லாகக் கையிலுடைமையினாலும், எரியும் காட்சியினல் - சிவபெருமான் நெற்றிக்கண்ணால் எரிந்த தோற் றத்தையுடைமையாலும், யாரும் விரும்புதலால் - யாரும் விரும்பத்தக்க வடிவத்தை யுடைமையாலும், மையல் விளக்கவரும் பொலிவால் - மோகத் தைக் காட்டுவதற்கு வருகின்ற பொருத்த முடைமையாலும், சித்தசன் - மன்மதனும்,

கரும்புகையினல் - கரிய நிறமுடைய புகையினாலும், எரியுங் காட்சி யால் - எரிகின்ற தோற்றத்தை யுடைமையாலும், யாரும் விரும்புதலால் - ஒளியின் பொருட்டு யாரும விரும்புவதாலும், மை அல் விளக்க வரும் பொலிவால் - மைபோனற இருட்டில பொருளக் காட்டுதற்கு வருகினற விளக்கதனை யுடைமையாலும், தீ ஒப்பாகும - நெருப்பும் சமமாகும், எ-று.

வேசைக்கும் சவுளிக்கடைக்கும்

7. ஆர்வந்தாலுஞ் சேலையைத் தூக்கிக் காட்டுதலாற்
பார்வையி னுலேபணங்கைப் பற்றிடலாற்—சேரு
மவிநயத்தாற் றேடுதலி னுன்முத்து சாமி
சவுளிக்கடை நிகர்வே சை.

உரை:—முத்துசாமி - ....., வேசை - வீலை மகளிர், ஆர்வந்தாலும் சேலையைத்தூக்கிக் காட்டுதலால் - ....., பார்வையினுலே பணங்கைப் பற்றிடலால் - பார்த்த அளவிலேயே தனக்குரிய பணத்தைப்பற்றிக் கொள்ளுதலாலும், சேரும அவிநயத்தால் தேடுதலினுல் - தங்களிடத்திற் பொருந்திய அவிநயங்களைக் காட்டி ஆடவரைத் தேடுதலினாலும்,

ஆர் வந்தாலும் சேலையைத் தூக்கிக் காட்டுதலால் - யார் வந்தாலும் யார்க்கும் புடவைகளே யெடுத்துக் காட்டுதலாலும், பார்வையினுலே பண

கைப் பற்றிடலால் - தணிகளைக் கட்டுவதற்கு முன் பார்த்து வாங்கு மனை லேயே அதற்குரிய விலையை வாங்கிக்கொள்வதாலும், சேரும் அவியத்தால் தேடுதலினால் - சூரிய வெளிச்சத்திலே தேடி அடையப் பெறுதலாலும் அல்லது வினயத்திலுலே வாங்குகின்றவர்களைத் தேடுதலினாலும், சவுளிக் கடை நிகர் - சவுளிகடை விலை மகளிர்க்கு ஒப்பாகும், எ - று.

வேசைக்கும் நாய்க்கும்

8. ஆட்டுக்கா வற்படலா லாரிடத்தி லுந்நயப்புக்
காட்டிச்சுணங் கிக்கடித் திடலா—னூட்டிலெங்கும்
போமியல்பாற் றம்மினமேற் போராட லான்முத்து
சாமிமன்னு நாய்க்கிணைவே லைசை.

உரை :—முத்துசாமி மன்னு - முத்துசாமி வேந்தனே !, ஆட்டுக்கு ஆவல் படலால் - நடனஞ் செய்வதற்கு விரும்புவதாலும், ஆரிடத்திலும் நயப்புக் காட்டிச் சுணங்கிக் கடித்திடலால் - ஆருக்கும் இனிமை காட்டிச் சரசஞ்செய்து கவ்வுதலாலும், நாட்டிலெங்கும் போம் இயல்பால் - தேசத் தில் எவ்விடதிற்கு செல்லும் தன்மை யுடைமையாலும், தம்மினமேல் போராடலால் - தன் சாதியாரோடு சண்டையிடுதலாலும், வேசை - விலை மகளிரும்,

ஆட்டுக்கு ஆவல் படலால் - ஆட்டு ஊனுக்கு விரும்புவதாகிலும், ஆரிடதிலும நயப்புக்காட்டிச் சுணங்கிக் கடித்திடலால் - ஆரிடதிலும் வாலை குழைத்துப் படிவதுபோற் காட்டி நெருங்கிக் கடிப்பதனாலும், நாட் டில் எங்கும்போம் இயல்பால் - ஊரிலே எங்கும நிரிவதாலும், தம் இன மேல் போராடலால் - மற்ற நாய்களோடு சண்டை யிடுவதாலும் நாய் - நாயானது, இணை - வேசைக்குச சமமாகும், எ - று.

வேசைக்கும் பேய்க்கும்

9. ஆட்டிவிக்க வாடுதலா லாரையும்பற் றிப்பிடித்துச் [ற்
சேட்டைசெய்யலான்மயக்கஞ்சேர்த்திடலாற்—கூட்டமதா
ருய்க்கிணையாய் வாணர்தமைத் தாங்குமுத்து சாமிமன்னு
பேய்க்கிணையாய் வேசைகளைப் பேசு.

உரை :—தாய்க்கிணையாய் வாணர்தமைத் தாங்கு முத்துசாமி மன்னு - தமிழ் கற்றவர்களை அன்னைபோல ஆதரிக்கும் முத்துசாமி வேந்தனே !, ஆட்டுவிக்க ஆடுதலால் - நட்டுவன் நடனஞ் செய்விக்க நாட்டிய மாடுத லானும், ஆசையும்பற்றிப் பிடிதலச் சேட்டை செய்யலான் - எவரையும் கைப்பற்றி விளையாடச் செய்வதாலும், கூட்டமதால் மயக்கம் சேர்த்திட லால் - தழுவுதலால் மயல் (மோகம்) விளைவித்திடுதலாலும், வேசைகளை - விலை மகளிர்களையும்,

ஆட்டுவிக்க ஆடுதலால் - மந்திரவாதி யாட்டுவித்தால் ஆடுதலாலும், ஆசையும்பற்றிப் பிடித்துச் சேட்டை செய்யலால் - யாரையும் பிடித்துக் கொண்டு குறும்புகள் செய்வதாலும், கூட்டமதால் மயக்கம் சேர்த்திட லால் - தான் பிடித்த உயிரோடு கலந்து அறிவு மயக்கத்தை யுண்டு பண் ணுவதாலும், பேய்க்கு - பைசாசுக்கு, இணையாய்ப் பேசு - விலைமகளிரை யொப்பாகக் கூறு, எ - று.

சந்திரனுக்கும் தாம்பர வன்னிக்கும்

20. மீனைப் பொருந்திடலான் மிக்கஅஜ தோய்ந்திடலாற்
முனைக்க மண்டலமே சார்ந்திடலான்—மானத்தா
லமபுவிக்கோ ராபரண மானமுத்து சாமிமன்னு
செமபுநதி நேர்சந்தி ரன்.

உரை:—மானத்தால் அம்புவிக்கோர் ஆபரணமான முத்துசாமி மன்னு - பெருமையால் அழகிய பூமிக்கு ஓர் அணியாய் விளங்குகின்ற முத்துசாமி வேந்தனே!, மீனைப் பொருந்திடலால் - விண் மீனுகிய நட் சத்திரத்தைத் கூடுவதாலும், மிக்க கலே தோய்ந்திடலால் - கலேகள் வளரப் பெறுவதாலும், தான் நக்க மண்டலமே சார்ந்திடலால் - தான் ஒளி வட்டத்தை யடைந்திருப்பதாலும், சந்திரன் - சந்திரனுக்கு,

மீனைப் பொருந்திடலால் - நீரில் வாழும் மீன்களைப் பொருந்தி யிருப் பதனாலும், மிக்க கலே தோய்ந்திடலால் - மிகுதியான ஆடைகள் துவைக் கப்படுதலாலும், தானக் கமண்டலமே சார்ந்திடலால் - தான பாத்திரமாகிய கமண்டலத்தில் நிறைக்கப் படுதலாலும், செம்பு நதி - தாம்பர வர்ணியாறு, சேர் - (சந்திரனுக்கு) ஒப்பாகும், எ - று.

திருடனுக்கும் செருப்புக்கும்

11. அங்கங் களவா லதுகண்டு தைப்புறலா
லெங்கு மிதியடியென் றேசொலலால்—வெங்கற்
காடுமுட் கஞ்சாததி னற்காமர் முத்துசாமி
திருடனையொப் பாருஞ்செ ருப்பு.

உரை:—காமர் முத்துசாமி - அழகிய முத்துசாமி வள்ளலே!, அக்கங் களவால் - களவு அடையாள முடைமையாலும், அது கண்டு உதைப்பு உற லால் - அந்த அடையாளத்தினால் உதை வாங்குதலாலும், எங்கும் மிதியடி என்றே சொலலால் - எவரும் மிதிக்க வேண்டும் அடிக்க வேண்டுமென்ற சொல்லுக்கிலக்கா யிருப்பதனாலும், வெங்கல் காடு முட்கு அஞ்சாததினால்- கொடிய பாறை கடினமான வழி முள்ளு என்பவற்றிற்குப் பயப்படாது ஓடுவதாலும், திருடனை - கள்ளனை,

அங்கங்கு அளவால் - காலின் ஒவ்வோர் உறுப்புக்கும் தக்கபடி அளவான பகுதியை யுடைமையாலும், அதுகண்டு தைப்புறலால் - அளவுகண்டு அதற்குத் தக்கபடி தைக்கப்படுதலாலும், எங்கும் மிதியடி என்றேசொல்லால் - எவ்விடத்திலும் மிதியடி யென்ற பெயரை யுடையமையாலும், வெம் கல் காடு முட்கு அஞ்சாதலினால் - கடுமையான கல்லு முள்ளு காடானவழி யென்பவற்றை யஞ்சாது மிதிக்கப் பயன் படுவதாலும்! செருப்பு ஒப்பாகும் - செருப்பு (இருடனுக்கு) ஒப்பாகும், எ - று.

மயிலுக்கும் கரும்புக்கும்

12. மேனியெல்லாங் கண்ணுறலால் வேள்விரும்புந் தன்மையினா
னபசுந் தோகையினு லாடலினுன்—மீனவனேர்
மானபரா நெல்லூகர் வாழுமுத்து சாமிமன்னு
கானமயி லொப்பாங் கருமபு.

உரை:—மீனவனேர் மானபரா - பாண்டியனே யொத்த மேலான பெருமை யுடையவனே !, நெல்லை நகர் வாழ் முத்துசாமி மன்னு -....., மேனியெல்லாம் கண்ணுறலால் - உடம்பு முழுதும் கண்போன்ற பகுதிகளிருப்பதாலும், வேள விரும்பும் தனமையினால் - முருகவேள் வாகனமாக விரும்பிக்கொள்ளும் இயல்பினாலும், ஆன பசுந்தோகையினால் - பச்சை நிறமுடைய கலாப மூடைமையாலும், ஆடலினால் - நிருத்தனஞ் செய்வதினாலும், கானமயில் - காட்டில் வசிக்கின்ற மயிலுக்கு,

மேனி யெல்லாம் கண்ணுறலால் - எல்லாப் பாகதிலும் கணுக்களிருப்பதாலும், வேள் விரும்பும தன்மையினால் - மன்மத வேள் வில்லாக விரும்பு மியற்கையாலும், ஆன பசுந்தோகையினால் - அழகான பசிய இலைச சருகை யுடைமையாலும் ஆடலினன் - ஆலையிலாட்டப் படுதலாலும், கரும்பு ஒப்பாம் - கரும்பானது (மயிலுக்குச்) சமமாகும், எ - று.

ஒட்டுத் திண்ணைக்கும் கண்டச் சரத்துக்கும்

13. செங்கற் பதித்திடலாற் சீராய் மெழுகிடலா
லிங்கிதமாய்க் கோலமிடுதலாற்—றங்கவிலை
நண்ணுதலால் வாணர்கட்கு நல்குமுத்து சாமிமன்னு
திண்ணைநிகர் கண்டசரஞ் செப்பு.

உரை:—வாணர்கட்கு நல்கும் முத்துசாமி மன்னு - கவிவாணருக்குப் பரிசளிக்கும் முத்துசாமி வேந்தனே!, செங்கல்பதிதலிடலால் - செங்கல்கள் பதித்துக் கட்டப் படுவதினாலும், சீராய் மெழுகிடலால் - நன்றாக மெழுகப் படுதலாலும், இங்கிதமாய்க் கோலம் இடுதலால் - இனிமையாகக் கோலமிடப் படுவதினாலும், தங்க இலை நண்ணுதலால் - வந்தவர்கள் தங்கும்படியாக இல்லமாகிய வீட்டை யொட்டியிருப்பதாலும், திண்ணை - ஒட்டுத்திண்ணைக்கு,

செங்கற்பதித்திடலால் - சிவந்த இரத்தினங்கள் பதிக்கப் பெறுதலாலும், சீராய் மெழுகிடலால் - அளவாய் மெழுகு சேர்க்கப்படுதலாலும், இலகிதமாய்க் கோலம் இடுதலால் - இனிமையான அலங்காரத்திற்காக அணியப்படுதலாலும், தங்க வீலை கண்ணுதலால் - பொன்னிலையோடு சேர்க்கப் பெறுதலாலும் அல்லது தங்கதனின் வீலை பெறுதலாலும், நிகர் கண்ட சரம் செப்பு - கண்ட சீரம் (ஒட்டுத் தின்னைக்கு) ஒப்பாகும் எனச் சொல், எ - று.

மரத்திற்கும் பீற்றற் குடைக்கும்

14. பிஞ்சு கிடக்கும பெருமழைக்குத் தாங்காது
மிஞ்ச வதனுள் வெயிலொழுகும்—தஞ்சமென்றோர்
வேட்டதருண் முத்துசுவா மித்துரைரா ஜேந்த்ராகேள்
கோட்டுமரம் பீற்றற் குடை.

உரை :—தஞ்சமென்றோர் வேட்டது அருள் முத்து சுவாமித் துரை ராசேந்திரா கேள் - அடைக்கலம் புகுந்தவர்கு விரும்பியதைக் கொடுக் கின்ற முத்துசாமிப் பெருஞ் செல்வ முதலாளியே சேட்பாயாக !, கோட்டு மரம் - கிளையையுடைய மரம், பிஞ்சு கிடக்கும் - பிஞ்சுக் காய்களுடைய தாயிருக்கும், பெரு மழைக்குத் தாங்காது - பெருமழைகு மரத்தினடியில் ஒதுங்க முடியாது, மிஞ்ச வதனுள் வெயிலொழுகும் - அதன் வழியாக வெயிற் கதிர்கள் பாய்ந்து செல்லும்,

பீற்றற்குடை - பீற்றற் குடையானது, பிஞ்சுகிடக்கும் - கிழிந்திருக் கும், பெருமழைகுத் தாங்காது - பெருமழையைத் தடுக்காது, மிஞ்ச அதனுள் வெயில் ஒழுகும் - வெயில அதிகப்பட்டவுடன் அதன் வழியாக உட் செல்லும், (ஆதலால் பீற்றற்குடை மரத்தைக கொப்பாகும்), எ - று.

காயென்றெடுத்து இலை என்று முடித்தது

15. காய்சின மில்லாதான் கருணைமுத்து சாமிவள்ளல்
வாய்மையுளான் பாடிவரு வோர்க்குத்—தாய்நிகர்வான்
எல்லையில்லா மாண்பொருளீ யீவா னிவனிடத்தி
லில்லையென்ற சொல்லே யிலை.

உரை :—காய்சின மில்லாதான் கருணை முத்துசாமி வள்ளல் - கொதிக் கின்ற கோபமில்லாத கருணை மிக்க முத்துசாமி யென்னும் கொடையாளன் வாயமையுளான் - சத்தியவாஞ யிருப்பவன், பாடி வருவோர்க்குத் தாய் நிகர்வான் - பாட்டியறறி வருகின்ற புலவர்களுகு அன்னைபோலவான், எல்லை இல்லா மாண்பொருளை ஈவான் - அவ்வற்ற சிறந்த செல்வதனைக் கொடுப்பான், இவனிடத்தில் இல்லையென்ற சொல்லே இல்லை - ....., எ - று.

படித்துறை யென்றெடுத்துக் குளக்கரையென்று முடித்தது

16. படித்துறையும் வாணரைக்காப் பாற்றிடவும் பொல்லா
மிடித்துயரா லேழையரை மேன்மேற்—றுடித்துநித
நையவிடா தாண்டிடவு நாட்டின்முத்து சாமியெனு
மையவுண்போல் நூர்க்குளக் கரை.

உரை :—படித்து உறையும் வாணரைக் காப்பாற்றிடவும்-கல்வி கற்று விட்டு ஊதியமில்லா திருக்கும் தமிழ்வாணரைப் பேணுவதற்கும், பொல்லா மிடித்துயரால் ஏழையரை மேன்மேல் துடித்து நிதம் நையவிடாது ஆண் டிடவும் - கெட்ட வறுமையின் துன்பமானது ஏழைகளைத் தினந்தோறும் துடிக்கும்படியாக வருத்தாதிருக்கும்படி அவர்களைப் பாதுகாத்து ஆட் கொள்ளவும், நாட்டில் - தேசத்தில், முத்துசாமி யெனும் ஐய - முத்துசாமி யெனும் ஐயனே !, உன்போல் யார்க்கு உள் அக்கரை - உன்னைப்போல் உள்ளத்தில் யார்க்குக் கவலை அல்லது ஆதரமிருக்கிறது, எ - று.

கைதேறுத ஒருவன் மத்தளம் அடித்ததைப் பார்த்துச் சொல்லியது

17. எங்கண்முத்து சாமிமன்னு விங்கே யொருவன்மிரு
தங்கமதை யோயாமற் றட்டினு—னங்கங்கே
கூடிநின்ற பெண்களெருக் கொள்வதற்குக் கூடையெடுத்
தோடிவந்தார் நீ பார்த்தா யோ.

உரை :—எங்கள் முத்துசாமி மன்னு - எங்களுக்குச சொந்தமான முத்துசாமி வேந்தனே !, இவனே ஒருவன் மிருதங்கமதை ஓயாமல் தட்டி னான் - ....., அங்கங்கே கூடிநின்ற பெண்கள் எருக்கொள்வதற்குக் கூடை யெடுத்து ஓடி வந்தார் - மிருதங்கத்தின் ஓசையைக் கேட்டுப் பக்கத்திற் கூட்டமாய் நின்ற பெண்கள் (அது சாணி தட்டுகிற சத்தம் போலிருந்த தனால்) எரு வாங்குவதற்குக் கூடைகளைத் தூக்கிக்கொண்டு ஓடி வந்தார் கள், நீ பார்த்தாயா - நீ அதைக் கவனித்தாயா ?, எ - று.

18. முன்னெழுத்தில் லாக்கமலி மொய்ம்பா முழுக்கமலி
மன்னும்வத னாடு மேவாக்கமலி—தன்னிண்மிகு
முத்துசுவா மித்துரையே முற்றுங்கவியி னின்பம்
வைத்துங் கமலி மகிழ்.

உரை :—முன்னெழுத்தில்லா கமலிமொய்ம்பம் - (கமலி யென்பதில் ககரம் போனால் உளதாம்) மலிபோன்ற தோளையுடைய, முழுக்கமலி மன் னும் வதனம் - கமலியாகிய திருமகள் நிலையாகத் தங்கும் முகத்தவனே, நாமேவாக் கமலிதன்னில் மிகு முத்துசாமித் துரையே - கலைகளில் வல்ல முத்துசாமி யென்னும் பெயருடைய எஜமானே !, முற்றும் கவியில் இன்

பம் வை - முழுவதும் பாட்டில் பிரியம் வை, துங்கமலை மகிழ் - அதன் சிறந்த வளத்தை யனுபவித்து மகிழ்வாயாக !, எ - று.

ஒரு பெண் முத்துசாமி வள்ளலைப் பார்த்துக் கூறியது

19. கோமகனே யிங்குன்கொடைக் கென்கொடை யதிகம்
வாமமுத்து சாமிமகி பாலா—நீமுன்
ஒருகைதனங் கொடுத்தா லுண்மைவைத் திப்போதே
இருகைதனங் கொடுப்பேன் யான்.

உரை :—வாம முத்துசாமி மகிபாலா - அழகிய முத்துசாமி பூபதியே!, கோமானே இங்கு உன் கொடைக்கு என் கொடை யதிகம் - அரசனே, இவ்வுலகத்தில் உன் கொடையைப் பார்க்கிலும் என் கொடை யதிகமாகும்! நீ முன் ஒருகை தனங் கொடுத்தால் - நீ முன்பாக ஒரு கையிலுலே செல்வதை யெனக்கு அளிப்பாயானால், உண்மை வைத்து இப்போதே யான் இருகை தனம் கொடுப்பேன - சத்தியமாய் இப்போதே உன்னிருகைகளும் பற்றுதற்குரிய தனங்களைத் தருவேன், எ - று.

20. போதணைவாய் வாதுரையே பூமணம்போ லேயெனையிப்
போதணைவாய் வாதுரையேன் பூசலேன்—மாதயைசே
ரஞ்சொன்முத்து சாமிமன்ன வைஞ்சரத்தை மீதுமென்மேல்
வெஞ்சினதி லேவி னன்மா வேள்.

உரை:—மாதயைசேர் அம் சொல் முத்துசாமி மன்ன - மிகுந்த தயையுடைய அழகிய மொழி பேசும் முத்துசாமி வேந்தனே!, போதணைவாய் வாதுரையே - பூப்போன்ற படுக்கையின்மீது எழுமானே வருக !, பூமணம் போல எனை இப்போது அணைவாய் - பூ மணத்தினுடு சேர்ந்திருப்பது போல இப்போது என்னை நீ சேருவாயாக!, வாது உரையேல் - விவகாரம் பேச வேண்டாம், பூசல் என் - சண்டை யெதற்கு, மா வேள் - பெரிய மன்மதன், வெம் சினத்திலே - கொடிய கோபத்தோடு, மென்மேல் மீது - மெல்லிய உடம்பின்மேல், ஐஞ்சரத்தை - ஐந்து பூக்களினையே, எவினன் - விடுத்தான், எ - று.

தோழி கூற்று

21. விரும்ப வனிதையர்சூழ் வேண்முத்து சாமீ
வரும்பவனி தையல்கண்டுன் மாலே—பொருந்திநிதந்
தாகமிகுந் தாள்வனையுந் தாணிழந் தாள்கரையுந்
தேகமறந் தான்சொலவந் தேன்.

உரை :—விரும்ப வனிதையர் சூழ் வேள் முத்துசாமீ - காதலிப்பதற்குப் பெண்கள் சூழ்ந்து நிற்கும் முத்துசாமி வள்ளலே !, வரும் பவனி

தையல் கண்டு - நீ பவனி வருவதை யென் பெண்ணெனவள் பார்த்து, உன் மாலே பொருந்தி நிதம் தாகம் மிகுந்தாள் - உன்பால் மோகத்தை யடைந்து தினந்தோறும் வேட்கை யதிகரிக்கப்பெற்றாள், வளையும் தானே இழந்தாள் - கட்டிய உடை நழுவப் பெற்றாள், கரையும் தேகம் மறந்தாள் - மெலிகின்ற தன் மெய் மறந்தாள், சொல வந்தேன் - இதை யுனக்குத் தெரிவிக்க வந்தேன், எ - று.

22. இந்திரவில் வாணுதலா ளெப்பொழுது மையல்கொண்டே
யிந்திரவில் வந்தழலே யீந்ததனற்—சந்ததமும்
வாடிமுத்து சாமிமகீ பதியையீ யழைத்து
வாடியென்றாள் சேரவரு வாய்.

உரை :—இந்திரவில் வாள் நுதலாள் - வானவில் போன்ற ஒளியை புடைய நெற்றியை யுடையவள், எப்பொழுதும் மையல் கொண்டே - எப் போதும் மோகங்கொண்டு, இந்து இரவில் வந்து அழலே ஈந்ததனால் - சந் திரன் இராத்திரி வந்து நெருப்பை வீசியதால், சந்ததமும் வாடி - நிரந் தரமாய் வாட்டமடைந்து. முத்துசாமி மகீபதியை நீ யழைத்து வாடி என்றாள் - முத்துசாமி வேந்தனே நீ அழைத்ததுவா எனறு கட்டளையிட் டாள், சேர வருவாய் - அவளை அணைவதற்கு வருவாயாக!, எ - று.

23. சுந்தரஞ்சேர் முத்துசுவாமி மால்கைத் தலமு
மந்தரஞ்சேர் மஞ்சுலுமொப் பானதுவே—சந்ததமு
நன்றுபத முண்டாக்கி நாட்டிற்கலி யகல
வன்றுகன கமபெய்ய லால்.

உரை :—சுந்தரஞ்சேர் முத்துசாமிமால் - அழகிய முத்துசாமிப் பெரி யோனுடைய, கைதலமும் - கையும், அந்தரம சோ மகுலும் - ஆகாயத்தி லுள்ள மழை மேகமும், ஒப்பானதுவே - சமமானவை, சந்ததமும் - எப் போதும், நன்று பதமுண்டாக்கி நாட்டிற் கலியகல - நல்ல சோற்றுக்குரிய பயிரை விளைவித்து நாட்டில் வறுமை நீங்கும்படியாக, அன்று கனகம் பெய்யலால் - மழை மிகுந்த நீரைப் பெய்தலாலும் முத்துசாமி வள்ளல் நல்ல உணவைக் கொடுத்துப் பொன்னையும் பரிசாக அளித்தலாலுமென்க, எ - று.

24. பலசரக்குப் பையெடுத்தான் வேள்ராய புரியாள்
பயந்தேனென் றுளரிநி வசம்போவென் றழுதாண்
மலர்சூடன் சாம்பிராணி யாரேனென் றுணீ
வரக்காண மென்றழுதி துவரையெதிர் பார்த்தா

எலேகடலே லைகின்ரு னென்னமா யக்கா
யான்பிழைப்பே னென்ருள்பேச் சுக்குமதி மதுரா
கலமுத்து சாமிசீ ரகமிளகன் பாக்கு
கடுகவா விதில்வெகு சகாயமுண்டு குணமே.

உரை:—வேள் பல சரக்குப்பை யெடுததான் - மன்மதன் பல அம்புக் குவியலை யெடுதது விடுத்தான், ராய புரியாள் - இராயபுரியென்னும் பதியி லுள்ள பெண், பயந்தேனென்ருள அருஞசினேனென்று சொன்னாள், அரி சிவ சம்போ என்று அழுதாள் - .., மலா சூடன் - பூசசூடமாட்டேன், சாம்பிராணி யானேனென்ருள் - இறகினறை பிராணிபாக வாகிவிட்டே னென்ருள், நீ வரக்காணம் என்று அழுது இதுவரை எதிர் பார்த்தான் - நீ வரவில்லை என்று அழுது துன்பப்பட்டு இத்தநேரம் வரைத்துன்பப்பட்டு எதிர் பாராதிருந்தான், அலேகடலே லைகின்ருள் - அலையுடைய கடலை யேசு கின்ருள், என்னமாய் அகக்கா நான் பிழைப்பே னென்ருள் - எப்படி அக் காளே நான் உயிரவாழ முடியுமெனறுள, பேசசுகசு அதிமதுர - பேசசுக கும் அதிக இனிமையான, அகல முத்துசாமி - (அழகிய) மார்பினையுடைய முத்துசாமி வள்ளல், சீர அகம் - சிறநத உள்ளமானது, இளகி அன்பு ஆக்கு - இளகி யெனகசு அன்பா யிருகசும்படி செய் எனறுன் ஆதலால், கடுகவா - விரைவாக வாகதிசேர், இதில் வெகு சகாயம் உண்டு - அதில் மிகுந்த சகாயம் உண்டு, குணமே - நன்மையே, எ - று.

25. அன்னமுமவேம்பாகும வெறுத்தழுதகுழுகுரலா
யங்கல்லதநியிலேறுங் கரும்பனைக்கண்டுடையுஞ்
சின்னமாதென்னைவிட்டாள் பொய்யிலவமபலவே
செல்வாகையிலுப்பைவைததுச் சொல்வேன்சதியமாய்
வன்னமலர்கொய்யாது ளவலுற்ருள்புலிபோல்
வருமவாதமடக்கியந்தக் கருவேலமின்னைப்
புன்னையாதகதியம் வாழுதசுவாமியெனும
பூவரசேராஜவல்லி புரத்தரசேயிரங்கே.

உரை:—முத்துசாமி யெனும் பூவரசே - முத்துசாமி பூபதியே !, ராஜவல்லிப் புரததரசே - இராஜவல்லி புரதநிற்ருேன்றிய மன்னனே !, சின்னமாது - சிறு பெண்ணானவள், அன்னமும் வேமபாகும் - என் கன் னிகசு சோறும வேப்பிலைபோலக் கசப்பாகும வெறுதது அழுது - ... .., குழுகுரலால்-கமழுகினற ஒலி யுடையவளாய, அம - அழகு, அல் அத்தி - இருளாகிய யானையின்மீது, ஏறும கருமபனைக் கண்டு உடையும் - ஏறி வருகினற மனமதனைப் பாராதது உடைகினறுள், என்னை விட்டாள் - எனனை புன்பால னாதாக விடுத்தாள, பொயயில - இது பொயயல்ல, வம்பு அலவே - வீணை காரியமும் அல்ல, செல்வா - செல்வனே!,

கையில் உப்பை வைத்துச் சொல்வேன் சத்தியமாய் - ....., வன்னமலர் கொய்யாது உன் ஆவல் உற்றுள் - பல நிறமான பூக்களைக் கொய்யாமல் உன்மீது மோக மடைந்தாள், புலிபோல் வரும் வாதமடக்கி - புலிபோல் வருகின்ற தென்றலை யடக்கி, கருவேல மின்னைபுல் - கருஆலம்போன்ற அந்தப் பெண்ணைத் தழுவுவாயாக, நையாத அகதநியம் வா - அவள் வருந்தாதபடி நீ கட்டாயம் வருவாயாக !, இரகசே - இரக்கம் வைப்பா யாக !, எ - று.

அம்மான் மகன் மருமகன் என்று பாடியது

26 சூன்சொலக் கூடாத சொரூபா தனக்கீடு
தான்சொலக் கூடாத முத்துசாமிமன்னு—நான்சொலக்கேள்
செமமான் மழுவேந்துஞ் செங்கைச் சிவனுருக்
கம்மான் மகன்மரு மகன்.

உரை:—சூன் சொலக்கூடாத சொரூபா - குற்றம் கூறமுடியாத வடிவ முடையவனே !, தனகீடுதான் சொலகூடாத முத்துசாமி மனு - தனகு ஒப்பாக யாவரையுஞ் சொல்லமுடியாத முதுசாமி மன்னனே !, நான் சொலகேள் - ....., செம்மான் மழுவேநதும் செஙகைச சிவனு ருக்கு - செமமையான மானேயும் மழுவையும் தனது திருகரததில் வைத திருகிற சிவபெருமானுககு, அம்மான மகன மருமகன் - அத்தத திருமால் னுடைய மகளுகிய மனமதன அல்லது பிரமன் (மைததினர் மகனதலின) மருமகனுவான, எ - று.

அடைமொழிகளின்றிப் பாடியது

27. சக்கரவா கங்கிளியாந் தைநாரை யன்னங்க
ளிக்குருவி கௌதாரி காடையன்றில்—கொக்கு
குயில்கருடன் காக்கைபுரு கோழியிரா சாளி
மயில்கழுகு கோட்டானவெள வால்.

உரை :—இதற்குப் பொருள் வெளிப்படை, எ - று.

பொய்கை யாழ்வார்

பாடியது

அரனையும் அரியையும் ஒன்றுபடுத்திப் பாடியது

1. அரஞ ரணநாம மாவிடைபுள் ளூர்தி
உரைநூன் மறையுறையுங் கோயில்—வரைநீர்
கருமம ழிப்பளிப்புக் கைமழுவே நேமி
உருவமெரி கார்மேனி யொன்று.

உரை :—அரன் நாரணன் நாமம் - அரன் நாராயண னென்பது பெயர்களாம், மா விடை புள் ஊர்தி - பெரிய காளையும் கருடனும் வாக னங்கள், உரை நூன மறை - திருவாக்கு ஆகமமும் வேதமுமாகும, உறை யும் கோயில் வரை நீர் - தங்குமிடம் கைலையும் பாற்கடலுமாகும், கருமம் அழிப்பு அளிப்பு - தொழில் அழித்தலும் காத்தலுமாகும, கை மழுவே நேமி - கையிலுள்ள ஆயுதங்கள் மழுவும் சக்கரமுமாகும், உருவம் எரி கார் மேனி யொன்று - வடிவம் நெருப்பு நிறமும் கருப்பு நிறமுங கூடிய ஒன்று, எ - று.

2. பொன்றிகழு மேனிப் புரிசடையெம் புண்ணியனும்
நின்றுலகந் தாய நெடுமாலும்—என்னும்
இருவரங்கத் தாற்றிரிவரேனு மொருவன்
ஒருவரங்கத் தென்று முளன்.

உரை :—பொன் திகழும் மேனி புரிசடையன் புண்ணியனும் - பொன் போல விளங்கும் உடமபையும் பின்னிய சடையையுமுடைய எமது புண்ணிய மூர்த்தியாகிய சிவனும், நின்று உலகம் தாய நெடுமாலும் - உலகதைதைப் பெருவடிவாய நின்று கடந்த நெடிய மேனியுடைய திரு மாலும், என்னும் இருவர் அங்கத்தால் பிரிவரேனும் - ஆய இருவரும் உடம்பினாலே வேறுபட்டிருந்தாலும், ஒருவன் ஒருவர் அங்கத்து என்று முளன் - ஒருவா மற்றொருவருடைய திருமேனியில எப்பொழுது மிருக கிறார், எ - று.

பூதத்தாழ்வார்

பாடியது

1. அவன்கண்டாய் நன்னெஞ்சே யாருருவங் கேடும்
அவன்கண்டா யைம்புலனுய் நின்றான்—அவன்கண்டாய்
காற்றுநீர் வானங் கருவரைமண் காரோதம்
சீற்றத்தீ யாவானுஞ் சென்று.

உரை :—நல் நெஞ்சே - நல்ல மனமே!, அவன் கண்டாய் ஆர் அருளும் கேடும் - நிறைந்த அருளாகிய நன்மையும் தீமையும் ஆகிய இரண்டுக்கும் அவனே காரண னென்றறி, அவன் கண்டாய் ஐம்புலனுய் நின்றான் - ஐம்பொறி யறிவோடு கலந்து நிற்பவனும் அவனே என்றறிக, சென்று - வியாபகமாய், காற்று நீர் வானம் கருவரைமண் காரோதம் சீற்றதீ - காற்றும் நீரும் வானமும் கரிய மலை நில முதலியனவும் கருங்கடலும் கோபித் தெரிகின்ற தீயும், ஆவானும் அவன் கண்டாய் - ஆனவனும் அவனே என்று அறிக, எ - று.

பேயாழ்வார்

பாடியது

1. தாழ்சடையுநீ ண்முடியு மொண்மழுவுஞ் சக்கரமுஞ்
சூழரவும் பொன்னுஞ் சுமந்தாமால்—சூழும்
திரண்டருவி பாயுந் திருமலைமே லெந்தைக்
கிரண்டுருவ மொன்று மிசைந்து.

உரை :—சூழும் திரண்டருவி பாயும் திருமலைமேல் - சுற்றியுள்ள நிரட்சியான அருவிகள் குதிதோடும் திருப்பதி மலைமேலே வீற்றிருக்கும், எந்தைக்கு - எனது தந்தையாகிய திருமாலுக்கு இரண்டுருவம் ஒன்று மிசைந்து - இரண்டு வடிவமும் ஒன்றுபட சேர்ந்து, தாழ் சடையும் நீள் முடியும் - தாழ்ந்த சடையும் நீண்ட முடியும், பொன மழுவும் சக்கரமும் - ஒளியுள்ள மழுவாயுதமும் சக்காராயுதமும், சூழ் அரவும பொன்னும் - இடுப்பைச் சுற்றியுள்ள பாம்பும் பொன்னலாகிய அரைஞாணும், தோன்றும் - விளங்கும், ஆல் - அசை, எ - று.

திருமழிசையாழ்வார்

பாடியது

1. தேவராய் நிற்குமத் தேவுமத் தேவரின்
மூவரா நிற்கு முதுபுணர்ப்பும்—யாவராய்
நிற்கின்ற வெல்லா நெடுமாலென் றோராதார்
கற்கின்ற வெல்லாங் கடை.

உரை :—தேவராய் நிற்கும் அத்தேவும் - பல தேவர்களாய் நிற்கின்ற ஒரு பெரிய தெய்வமும், அத்தேவரின் மூவராய் நிற்கும் முது புணர்ப்பும் - அப்படிப்பட்ட பல தேவர்களுள் தலைமையான மும்மூர்த்திகளாய் நிற்கும் சம்பந்தமுடைய ஆதிகடவுளும், யாவராய் நிற்கின்ற எல்லாம் - பிற எவராயும் நிலவுகின்ற எல்லாப் பொருளும், நெடுமால என்று ஓராதார் - பெரிய திருமாலென்று அறியாதவர்கள், கற்கின்ற எல்லாம் கடை - படிக்கின்ற எல்லா படிப்பும் கடைப்பட்டதாகும், எ - று.

ஔவையார்

பாடியது

அதிகமான் அருமையாய்க் கொடுத்த நெல்லிக்கனிக்காகக் கூறியது

1. பூங்கமல வாவிசூழ் புல்வேலூர்ப் பூதனையும
ஆங்குவரு பாற்பெண்ணை யாற்றினையு—மீங்கே
மறப்பித்தாய் வாழதிகா வன்கூற்றி னாவை
யறுப்பித்தா யாமலகந் தந்து.

உரை :—வாழ் அதிகா - நன்றாக வாழ்கின்ற அதிகமானே!, பூங்கமல வாவி சூழ் புல்வேலூர் பூதனையும் - அழகிய தாமரைகள் பூத்த பொய்கைகள் சூழ்ந்த புன்வேலூரிலுள்ள பூதனென்னும் வள்ளலையும், ஆங்கு வருபால் பெண்ணையாற்றினையும்-அதற்கு அருகிலே வந்த பாலோடுகூடிய பெண்ணையாற்றையும், ஆமலம் தந்து - நெல்லிக்கனியைக் கொடுத்து, ஈங்கே மறப்பித்தாய் - இத்தவிடத்திலே மறக்கசெய்தாய், வன் கூற்றின் நாவை அறுப்பிதாய் - வலிய எமனுடைய நாவை யறுக்கும்படி செய்தாய் (என் மீது எமன் ஆதரை யேவாமலிருக்கும்படிச செய்தாய், எ - று.

திருக்குடந்தையில் ஈகையுடையவனைப் புகழ்ந்தும்
உலோபமுடையவனை யிகழ்ந்தும் பாடியது

2. திருத்தங்கி தன்வாழை தேம்பழுத்து நிற்கும்
மருத்தன் றிருக்குடந்தை வாழை—குருத்தும்
இலையுமில்லை பூவுமில்லை காயுமில்லை யென்றும
உலகில் வருமவிருந்தோ டுண்டு.

உரை :—திருக்குடந்தை - கும்பகோணத் திருப்பதியில், திருத்தங்கி தன் வாழை - திருத்தங்கி யென்பவனுடைய வாழை, என்றும் உலகில் வரும் இனத்தோடு உண்டு - எப்போதும் உலகத்தில் அவன் வீட்டுக்கு வருகின்ற விருந்தாளிகளுடனே உணவு கொண்டு, தேம்பழுத்து நிற்கும் - இனிமையாகக கனிந்து நிற்கும், மருததன் வாழை - உலோபியாகிய மருத்தனுடைய வாழைக்கு, குருத்தும் இலையும் இல்லை - இளந் தளிரும் பெரிய இலையும் இல்லை, பூவும் இல்லை காயும் இல்லை - வாழைப்பூவும் இல்லை காயும் இல்லை, எ - று.

ஏழிற் கோமீது பாடிய வங்கதம்

3. இருளீர் மணிவிளக்கத் தேழிலார் கோவே
குருடேயு மன்றுநின் குற்றம்—பொருடேறும்
பாட்டு முரையும் பயிலா தனவிரண்
டோட்டைச் செவியு முளை.

உரை :—இருள் தீர மணி விளக்கத்து எழிலார் கோவே - இருளை நீக்குகின்ற விரதினங்களின் ஒலியுடைய எழில் ஊருக்குத் தலைவனே!, குருடு ஏயும் அன்று நின் குற்றம் - உன்னுடைய குற்றம குருடாய் இருப்பது மாதிரமல்ல, பொருள் தேறும் பாட்டும் உரையும் பயிலாதன - பொருளை யாராயந்தறியகூடிய பாட்டும் வசனமும கேட்டுத் தங்கப் பெறுதனவாகிய, இரண்டு ஓட்டைச செவியும் உளை - இரண்டு பயனற்ற காதுகளையும் நீ உடையாய், எ - று.

தத்துவங் கூறியது

4. ஒன்றுகக் காண்பதே காட்சி புலனைந்தும்
வென்றுன்றன் வீரமே வீரமற்—றொன்றுமம
சாகாமற் கற்பதே வித்தை தனைப்பிறர்
ஏவாம லுண்பதே யூண்.

உரை :—ஒன்றுகக் காண்பதே காட்சி - ஒரு பொருளாகிய கடவுளை யெங்குங கலந்திருபபதாகப் பார்ப்பதே அறிவாகும, புலனைந்தும் வென்றுன் தன் வீரமே வீரம - ஐம்பொறி யறிவையும் அடக்கி வென்றவனுடைய

ஆண்மையே ஆண்மையாகும், மற்றொன்றனும் சாகாமற் கற்பதே வித்தை- ஒரு பொருளாலும் மரண மேற்படாதபடி கற்கின்ற கல்வியே சிறந்த கல்வி யாகும், தானைப் பிறர் ஏவாமல் உணபதே ஊண் - தன்னைப் பிறர் ஏவாத படி (சுயாதீனமாக) வாழ்ந்து உண்ணும் உணவே சிறந்ததாகும், எ - று.

உழவுக்குறிய நன்மைகளை யுரைத்தது

5. *ஏரும் இரண்டுளதா யில்லத்தே வித்துளதாய்*
நீருகே சேர்ந்த நிலமுமாய்—ஊருக்குச்
சென்றுவர வண்மையதாய்ச் செய்வாருஞ் சொற்கேட்டால்
என்று முழவே யினிது.

உரை:—ஏரும் இரண்டுளதாய்-கலப்பை ஒன்று போனால் மற்றொன்று பயன்படுமபடியாக இரண்டிருக்க வேண்டும், இல்லதே வித்துளதாய் - விதைத்தற்குரிய நெல் வீட்டிலே இருத்தலவேண்டும், நீர் அருகே சேர்ந்த நிலமுமாய் - தண்ணீருகருப் பக்கத்திலே வயலிருக்க வேண்டும், ஊருக்குச் சென்றுவர ஆண்மையதாய் - வரிகரும் ஊருகரு அருகில் எளிதாய்ப் போய் வரக் கூடியதாக நிலமிருக்க வேண்டும, செயவாரும் சொல் கேட்டால் - வேலையாட்களும் நமது சொல்லினபடி கீழ்ப்படிந்து நடக்கவேண்டும், என்றும் உழவே இனிது - (அப்படி இருந்தால) எக்காளும் உழவுத் தொழிலே நன்மையாகும, எ - று.

பொய்யாமொழிப் புலவர்

பாடியது

பாண்டியன் நேரே உயர்ந்த புலவர் என்றபோது பாடியது

1. *அறமுரைத் தானும் புலவன்மும் பாலின்*
நிறமுரைத் தானும புலவன்—குறுமுனி
தானும புலவன் றாணி பொறுக்குமோ
யானும புலவ னெனில்.

உரை:—அறம் உரைத்தானும் புலவன் - தருமங்களை வகுத்துரைத்த பிரமன் புலவனாவான், மும்பாலின் நிறமுரைத்தானும் புலவன் - அறம் பொருள் இன்பமென்னும் மூன்று உறுதிப்பொருளின் தன்மையை யுரைத்த திருவள்ளுவர் புலவராவர், குறு முனிவன் தானும் புலவன் -

அகத்தியரும் புலவர், யானும் புலவன் எனில் தரணி பொறுக்குமோ - (அவ்வளவு பெரியவர்கள் புலவர்கள் ஆனால்) என்னையும் புலவன் என்று கூறினால் பூமிதேவி பொறுப்பாளா ?, எ - று.

கம்பர்

பாடியது

காவிரி எச்சினீரெனப் பாடியது

1. மெய்கழுவி வந்து விருந்துண்டு மீளுமவர்
கைகழுவு நீர்போலுங் காவிரியே—பொய்கழுவும்
போர்வேள் சடையன் புதுவையான் றன்புகழை
யார்போற்ற வல்லா ரறிந்து.

உரை:—மெய் கழுவிவந்து விருந்துண்டு மீளுவர் - (சடையப்ப வள்ளல் வீட்டில்) விருந்தாக வந்து புகிய உணவையுண்டு திரும்புகின்றவர் கள் தங்கள் எச்சிற் கையைக் கழுவியது காவிரி நீரைப்போலப் பெருகி யது, பொய் கழுவும் போர்வேள் - பொய்யை யொழித்துச சண்டை செய் யும் மன்மதன்போன்ற, புதுவையின் சடையன் தன் புகழை - புதுவையில் வசிக்கும் சடையப்ப வள்ளலின் கீர்த்தியை, அறிந்து யார் போற்ற வல்லார் - அருமை யறிந்து முற்றினும் புகழ்ந்து கூற வல்லவர்கள் யார்?, எ - று.

திருவொற்றியூரிற் கண்ட தாசியை வியந்து கூறியது

2. இல்லென்பார் தாமவரை யாமவர்தம் பேரறியோம
பல்லென்று செவ்வாமபன் முல்லையும் பாரிதது
கொல்லென்று காமனையுங் கண்காட்டிக் கோபுரக்கீழ்
நில்லென்று போனரென் னெஞ்சைவிட்டுப் போகாரே.

உரை:—இல்லென்பார் தாமரை - வீட்டுக்குப் போய் வருவதாகச் சொல்லிப் போன மாதரை, யாம் அவர் தம் பேர் அறியோம் - அவர் இன்ன பெயருடையவரென்று நாமறிய மாட்டோம், பல்லென்று செல் வாம் பல்முல்லையும் பாரித்து - செவ்வல்லி மலரோடு சேர்ந்த முல்லைப் பூவின் வரிசைபோல உதட்டினிடையே தோன்றும் பல்லையும் திறந்து நகைத்துக் காட்டி, கொல்லென்று காமனையும் கண் காட்டி - கொன்றாற் போல வருத்தும்படியாக மன்மதனுக்கும் கண்ணினால் சாடைகாட்டி, கோபுரக்கீழ் நில்லென்று போனர் - கோபுரத்தின் கீழே என்னை நிற்கும்

படியாகச்சொல்லி விட்டுப் போன அம்மாதர், என் நெஞ்சை விட்டுப் போகாரே - என் மனத்தைவிட்டு அகல்வதில்லை, எ - று.

விரகத்தினால் கூடிய தாசியின் பொருத்த மின்மையைக் குறிப்பித்தது

3 சொல்லியைச் சொல்லினமுதான செல்வியைச் சொற்கரும்பின்
வில்லியை மோக விடாய்தவிர்ப் பாளை விழியம்பினாற்
கொல்லியைக் கொல்லியம் பாவையொப்பாளைக் குளிரொற்றியூர்
வல்லியைப் புல்லிய கைக்கோவிவர்வந்து வாய்ப்பதுவே.

உரை :—சொல்லியை - பேசுதில் வல்லவளை, சொல்லினமுதான செல்வியை - சொல்லிலமுதம்போன்ற தன்மையுடைய பொருளாட்டியை, சொற் கரும்பின் வில்லியை மோகவிடாய் தவிர்ப்பாளை - புகழப்படுகின்ற, கரும்பு வில்லையுடைய மன்மதனது வேட்கைத் தாகத்தைத் தணிக்க வல்லவளை, விழியம்பினால் கொல்லியை - கண்ணாகிய அம்பினால் வருத்து கின்றவளை, கொல்லியம்பாவை யொப்பாளை - சொல்லி மலையிலுள்ள தெய்வப் பாவை போன்ற அழகுடையவளை, குளிர் ஒற்றியூர் வல்லியைப் புல்லிய கைக்கோ - ஒற்றியூரிலுறையும் குளிர்ந்த கொடி போன்றவளாகிய மாதைத் தழுவிய என் கைகளுக்கோ, இவர் வந்து வாய்ப்பதுவே - இந்த மோசமான உடம்புடைய பெண்ணானவள் வந்து பொருந்த சேர்ந்தது, எ - று.

இராமாயணம் எழுதியபோது பந்தம் பிடிக்கப் பாடியது

4. ஒற்றியூர் காக்க வுறைகின்ற காளியே
வெற்றியூர்க் காகுத்தன மெய்ச்சரிதை—பற்றியே
நந்தா தெழுதற்கு நல்லிரவின் மாணுக்கர்
பிந்தாமற் பந்தம் பிடி.

உரை :—ஒற்றியூர் காக்க உறைகின்ற காளியே - திருவொற்றியூருக் குப் பாதுகாப்பாகவுள்ள கிராம தேவதையே !, வெற்றியூர் காகுத்தன் - ஜெயத்தை மேற் கொண்ட காகுத்தன் வமிசத்தில் வந்த இராமனது, மெய்சரிதை பற்றியே நந்தாது எழுதுதற்கு - உண்மையான வரலாற்றைத் தொடர்ந்து செவ்வையாக ஏட்டில் எழுதுவதற்கு, நல்லிரவில் - நடுராத் திரியில், மாணுக்கர் பிந்தாமல் பந்தம் பிடி - ஏடெழுதும் சிடர்கள் ஒளிக குறைவுபற்றிப் பின் வாங்காதபடி தீப்பந்தத்தை வாய்ப்பாகப் பிடிப்பா யாக, எ - று.

தானிறக்கும்போது கூறியது

5. ஆன்பாலுந் தேனு மரம்பைமுதன் முக்கனியும்
தேம்பாய வுண்டு தெவிட்டுமனந்—தீம்பாய்
மறக்குமா வெண்ணெய் வருசடையா கம்பன்
இறக்கும போதாயு மினி.

உரை :—வெண்ணெய் வரு சடையா - திருவெண்ணெய் நல்லூரில் வந்து தங்கிய சடையப்ப வள்ளலே!, ஆன்பாலும் தேனும் - பசுவின் பாலையும் தேனையும், அரம்பை முதல முக்கனியும் - வாழைப்பழம் முதலிய மூன்றுவகைக் கனிகளையும், தேம்பாய உண்டு தெவிட்டு மனம் - இனிமை தரும்படியாக அருந்தி அதனால மிகுந்த திருப்தியடைந்த மனமானது, கம்பன இறக்குமபோதாயும இனி - கம்பனது மரணததருவாயிலுங்கூட, தீம்பாய் மறக்குமா - தவறுக அதனை மறத்தல் கூடுமா, எ - று.

அந்தகக்கவி வீராகவ முதலியார் பாடியது

ஈழநாட்டரசனைக் காணப் போனபோது அவன் திரையிட்டிருந்ததைப் பற்றிக் கூறியது

1. நரைக்கோட் டிளங்கன்று நல்வளநாடு நயந்தளிப்பன்
விரையூட்டு தார்புயன் வெற்பீழமன்னனென் றேவிரும்பிக்
கரையோட்டமீதின் மரக்கலம போட்டுன்னைக் காணவந்தால்
திரைபோட்டு நீயிருந்தாய் சிங்கபூப சிரோமணியே.

உரை :—சிங்க பூப சிரோமணியே - சிங்கம் போன்ற அரசர் தலை மணியா புள்ளவனே!, விரை பூட்டு தார் புயல் வெற்பு ஈழமன்னன் - வாசனை கலந்த மாலைதரித்த தோளகளாகிய மலைகளையுடைய ஈழ மண்டலதது வேந்தன், நரைகோட்டு இளங்கன்றும் நல்வளநாடும் - வெண்மையான கொம்பையுடைய இளைய பசுங்கனறுகளையும் செழிப்பான நல்ல ஊரையும், நயாதளிப்பன என்றே விரும்பி - விரும்பித தருவானென்று ஆசைப்பட்டு, கரையோட்டமீதில் - கரைகளுச செலலுதறகுரிய கடல் வழியிலே, மாகலம் போட்டு உனனைக காண வந்தால - கப்பலேறி புனனைப் பார்ப்பதற்கு வந்தால், திரைபோட்டு நீ இருந்தாய் - திரையிட்டு உன்னை மறைதது கொணடு நீயேனிருந்தாய், எ - று.

ஒரு தலைவியின் அழகை வியந்தது

2. வண்டோ விழிநுதல் வான்பிறையோவல்குன் மான்குளம்போ
செண்டோ முலைமித் திலமோநடையிடை சேர்துடிகற்
கண்டோ மொழிகுரல் காரோமுகங்கம லம்பவளத் [கே.
துண்டோ யிதழ்கன்னித் தண்டோதொடையிந்தத் தோகையற்

உரை :—இந்தத் தோகையற்கே - இந்தப் பெண்ணுக்கு, விழி வண்டோ - கண்ணானது வண்டென்று சொல்லும்படியாக விருக்கின்றது, நுதல்வான் பிறையோ-நெற்றியானது ஆகாயத்திலுள்ள இளஞ் சந்திரனே எனவும், அல்குல் மான் குளம்போ-அரை முன்பக்கமானது மான்குளம்போ எனவும், முலை செண்டோ - தனங்கள் செண்டுகள் போலவும், நகை நித திலமோ - பல்லானது முத்துப்போலவும், இடை சேர்துடியோ - இடையானது பொருந்தமான உடுக்குப்போலவும், கண்டோ மொழி - வார்த்தையானது கற்கண்டு போலவும், குழல் காரோ - கூந்தல் மேகம்போலவும, முகம் கமலம் - முகம் தாமரைப்பூ போலவும், இதழ் பவளத் துண்டோ-இதழ்கள் பவளத் துணுக்குப் போலவும் உள்ளன, எ - று.

ஒருத்தி கண்ணை வியந்தது

3. ஆலங்குடியர்சங் கஞ்செறியதரஞ் சக்கரர்பொன்
மேலமபரத்தினர் நாகமெடுத்தவர் மேவிடையர்
சூலக்கண் மெய்யினர் பார்வதிகோன்மதி தோய்சடையர் [கே.
பாலன்னைக் கோற்படைக் கூர்மைக்கண்ணுமித்தப் பைந்தொடிக்

உரை :—இந்தப் பைந்தொடிக்கு - புதிய வளையலணிந்த இப் பெண்ணுக்கு, ஆலங் குடியர் - விடத்தைப் பானஞ் செய்தவரும், சங்கஞ் செறியதர் - இடப்பாகத்தில் சங்கை வளையலணிந்த கையை யுடையவரும், அஞ்சக கரர் - ஐந்தெழுத்தை மந்திரமாகவுடையவரும், பொன் மேலம்பரதினர் - அழகிய உயர்ந்த சிற்சபையில் நடித்தவரும், நாகம் எடுததவர் - பாம்பை யணிந்தவரும், மேலிடையார் - காளை வாகனதத்தை யுடையவரும், சூலக கண் மெயயினர் - சூலமும் நெற்றிக்கண்ணுமுடைய திருமேனியை யுடைய வரும், பார்வதிகோன் - உமாபதியும், மதி தோய் சடையர் - சந்திரனைத் தரித்த சடையை யுடையவருமாகிய சிவபெருமானுடைய, பாலன் - மகனாகிய முருகக் கடவுளின், கைக்கோர் படை - திருக்கரதிலுள்ள வேலாயுதமபோலக், கூர்மைக் கண்ணும் - கண்ணானது கூர்மை யுடையதாகும், எ - று.

முருகனை வேண்டல்

4. ஆமாவிகழ்ந்திட லாமாவெனையுனை யன்றிவினை
போமாவுனைவிட்டுப் போமாவெனக்கிந்தப் புன்மைவர
லாமாபராமுக மாமாபுயத்தி லணிகடப்பந்
தாமாகுகனெனு நாமாவயிற்கரச் சண்முகனே.

உரை :—புயத்தில் அணிகடப்பந் தாமா - தோளி லணிந்த கடப்ப மாலையை யுடையவனே !, குகனெனும் நாமா - இருதய குகையிலுள்ள குகன் என்னும் திருப்பெயரை யுடையவனே !, அயில் கரச சண்முகனே - வேலைக் கையிலேந்திய ஆறுமுகப் பெருமானே !, எனை இகழ்ந்திடலாமா ஆமா - அடியேனை இழிவாக நினைத்தல் உன் பெருமைக்கு ஏற்றதா ! ஏற்றதா !!, வினை யுனையன்றிப் போமா - தீவினைப் பயனானது உன்னுடைய அருளில்லாமல் நீங்குமா ?, உனை விட்டுப் போமா - உன்னை நீங்கி நான் போதல் கூடுமோ ?, எனக்கு இந்தப் புன்மை வரலாமா - எனக்கிந்தத் தாழ்வு வருதல் கூடுமா ?, பராமுகம் ஆமா - நீ என்னைக் கவனியாதிருத்தல் தக்கதா, எ - று.

வறுமைக்குரியவரைப் பற்றிக் கூறியது

5. கவிகற்றவர்க்குங் கணிகற்றவர்க்குங் கம்மாளருக்கும்
ஒவிகற்றவர்க்கு முபாத்திகளுக்கு மூயர்ந்தமட்டும்
குவிலைவக்கு மொட்டர்க்குங் கூத்தாடிகட்குங் குருக்களுக்கும
இவரெட்டுப் பேர்கட்கு நீங்காத தரித்திர மென்றைக்குமே.

உரை :—கவி கற்றவர்க்கும் - பாட்டு பாடத தெரிந்தவர்களுக்கும், கணி கற்றவர்க்கும் - சோதிடம் கணிக்கத் தெரிந்தவர்களுக்கும், கமமாளருக்கும் - தட்டார் வேலை செய்பவர்களுக்கும், ஒவி கற்றவர்களும் - ஓவியம் எழுதத் தெரிந்தவர்களுக்கும், உபாத்திகளுக்கும் - போதகாகளுக்கும், உயர்ந்த மட்டும் குவிலைவகளும் ஒட்டருக்கும் - உயரமான அளவு சுவர் வைக்கின்ற தொழிலையுடைய ஒட்டசசாதியினருக்கும், கூத்தாடிகட்கும் - ....., குருக்களுக்கும் - ஆசாரியர் தொழில் செய்கின்றவர்களுக்கும், இவரெட்டுப் பேர்கட்கும் - ஆகிய இந்த எட்டு வகையார்க்கும், நீங்கா தரித்திரம் என்றைக்குமே - வறுமை எப்போதும் ஒழியாது, எ - று.

ஸ்ரீராமர் துதி

6. தனங்கடந் தானைகள் யாவையும் வெல்லுஞ் சராசன
அனங்கடந் தானை நடைசொல் விடைமுலை யாளுடனே
வனங்கடந் தானைகல் லாழ்வார்கள் பன்னிரு வர்க்குமிகக்
கனங்கடந் தானைத் துதிசெஞ்ச மோற் கதிபெறவே.

உரை:—தனங்கள் தானைகள் யாவரையும் வெல்லும் சர நயன - பெரிருள்கள் படைகள் ஆகிய எல்லாவற்றையுஞ் செயிக்கின்ற அம்பு போன்ற கண்ணையும், அன்னம் நடை - அன்னம்போன்ற நடையையும், கள் சொல் - தேன்போன்ற மொழியையும் தந்து இடை - நூலிழை போன்ற இடையையும், ஆனை மூலையாளுடனே - ஆனைபோன்ற தனங் களையுமுடைய சிதாபிராட்டியுடனே, வனம் கடந்தானை - காட்டைக் கடந்து சென்ற இராமபிரானை, நல் ஆழ்வார்கள் பன்னிருவர்க்கும் மிகக் கனங்கள் தந்தானை - சிறந்த பன்னிரண்டு ஆழ்வார்களுக்கும் மிகுந்த பெருமைகளை யளித்தவனை, நற்கதி பெறவே - நல்ல நிலைமை யடை தற்கு, நெஞ்சமே துதி - மனமே வாழ்த்துவாயாக !, எ - று.

ஸ்ரீ வில்லிபுத்தூரை இகழ்ந்து துரைத்தது

7. வேசையரே மல்குமூர் வீதியிலார் வந்தாலும்
பேசிவலிவீசிப் பிடிக்குமூர்—ஆசைமயல்
பூட்டுமூர் கையிற் பொருள்பறித்தே போடுகொடுத்
தோட்டுமூர் சீவிலிபுத் தூர்.

உரை:—வேசையரே மல்கும் ஊர் - விலைமகளே மிகுதியான ஊரும், வீதியிலார் வந்தாலும் பேசி வலை வீசிப் பிடிக்கும் ஊர் - தெருவில யார் போனாலும் அவர்களிடம் வார்த்தையாடி விலை மகளிர் வலைவீசிப் பிடிப் பதுபோல அவர்களைப் பிடிக்கின்ற ஊரும், ஆசை மயல் பூட்டும் ஊர் - வேட்கையாகிய மயக்கத்தை யுண்டாக்குகின்ற ஊரும், கையில் பொருள் பறித்தே யோடுகொடுத்து ஓட்டும் ஊர் - போகின்றவர்களுடைய கைப் பொருளைப் பறித்துக்கொண்டு அவர்கள் கையில் பிசையெடுக்கும் திரு வோட்டைக் கொடுத்து விரட்டும் ஊரும், ஸ்ரீ வில்லிபுதூர் - ஸ்ரீ வில்லி புத்தூரேயாகும், எ - று.

விசையராயன் தன் பல்லக்கின்பின் வந்தபோது பாடியது

8. திருமாலு மீசனும் பின்போயுந் தூது செலத்துணிந்தும்
அருமா தரியத் தமிழ்வளர்த் தாரவ ரோடுபங்காய்
வருமா மறையவன் பேர்சாதித் தேமிக வண்டமிழ்க்குப்
பெருமான் சிவிகைப் பின்சென்றுன் விசயப் பிரமனுமே.

உரை:—திருமாலும் ஈசனும் - அரியும் அரனும், பின்போயும் தூது செலத் துணிந்தும் - முறையே ஆழ்வார்க்குப் பின்னே சென்றும் சுந்த ரர்க்குத் தூது போவதற்குத் துணிவுகொண்டும், அருமா தரிய தமிழ் வளத்தால் - அருமையான இனிய தமிழை வளர்த்தார்கள், அவரோடு பங்காய் வருமா மறையவன் பேர் சாதித்தே - அவரோடு பங்கு போட்டுத் தமிழை வளர்க்க வந்த அயனுடைய பேரை நிலைநிறுத்தி, மிக வண்

டமிழ்க்கு - மிக வளமான தமிழின் பொருட்டு, விசயப்பிரமனுமே - விசய ராயனென்னும் பெயருடைய அயன்போன்ற வள்ளல், பெருமான் இவிகைப் பின்சென்றான் - நாவலர் பெருமானுடைய பல்லகுக்குப் பின்னே போயினர், எ - று.

பரராசசிங்கம் பொற்பந்த மளித்தபோது கூறியது

9. பொங்குமிடி யின்பந்தம் போயதே யென்கவிதைக்
கெங்கும விருதுபந்த மேற்றதே—குங்குமந்தோய்
வெற்பந்த மானபுய வீரபர ராசசிங்கம
பொற்பந்த மின்றளித்த போது.

உரை:—குங்குமந் தோய் வெற்பந்தமான - குங்குமக் குழம்பு சாத்தப் பெற்ற மலைபோனற அழகிய, புயவீர பரராச சிங்கம் - தோள்களையுடைய வீரனுகிய பரராசசிங்க மன்னன், இன்று பொற்பந்தம் அளித்தபோது - இக் காலில் பொன் கட்டியை அல்லது பொன் முடிசரைப் பரிசாகத் தந்த போது, பொங்குமிடியின் பந்தம்போயதே - மிகுந்த தரித்திரத்தின கட்டுப் பாடு விலகியது, என் கவிதைக்கு எங்கும் விருது பந்தம் ஏற்றதே - என் பாட்டுக்கு எகுமை வெற்றி யடையாளங்கள் அமைதல் ஏற்பட்டது, எ - று.

சந்திரவாணன்மீ துரைத்தது

10. மாலே நிகராகுஞ் சந்திர வாணன் வரையிடத்தே
பாலேரி பாயச்செந் தேன்மாரி பெய்யநற் பாகுநற்கண்
டாலே யெருவிட முப்பழச் சாற்றி னமுதவயன்
மேலே முளைத்த கருமபோ விமமங்கைக்கு மெய்யெங்குமே.

உரை:—மாலே நிகராகும் சந்திரவாணன் மலையிடத்தே - திருமாலுக் கொப்பான சந்திரவாணனது மலையிடத்தில், பால் ஏரி பாய - பாலாகிய குளத்து நீர் பாயவும், செந்தேன் மாரி பெய்ய - செம்மையாகிய தேன் மழை பொழியவும், நற்பாகு நற்கண்டாலே எருவிட-நலல கருப்பஞ்சாறு கற்கண்டு முதலியவற்றை யுரமாகப் போடவும், முப்பழசசாற்றின் அமுத வயல் - வாழை பலா மா என்ற மூன்று வகைக் கனிகளாலாகிய அமுதம் விளையும் வயலில, மேலே முளைத்த கருமபோ - மேலாகத் தோனறிய கரும்புதானே, இம் மயகைக்கு மெய் எகுமே - இரத மாதுக்கு உடம்பு முழுவது மென்க, எ - று.

இலக்கண விளக்க நூலாசிரியராகிய வைத்தியநாத நாவலரைப் புகழ்ந்தது

11. ஐம்பதின்மர் சங்கத்தா ராகிவிடா ரோநாற்பத்
தொன்பதின்ம ரென்றே யுரைப்பரோ—இமபர்புகழ்
வன்மீக நாதனருள் வைதகியநா தன்புடவி
தன்மீதந் நாட்சரிதகக் கால்.

உரை :—இம்பர் புகழ் வன்மீக நாதனருள் வைத்தியநாதன் - இவ்வுலகத்தார் புகழ்கின்ற புற்றிடங்கொண்ட பெருமான் அருளால் வந்த வைத்திய நாத நாவலர், புடவி தன்மீது அந்நாட் சரிதககால் - பூமியின்மீது அந்தக் காலத்தில் நிலவியிருப்பா ரென்றால், ஐம்பதின்மர் சங்கத்தார் ஆகிவிடாரோ - (சங்கப் புலவர்கள் முன்னிருந்த நாற்பததொன்பதின்மரொடு இவருஞ் சேர்த்து) ஐம்பது பேர்கள் எனறு ஆகிவிடமாட்டார்களா, நாற்பததொன்பதின்ம ரென்றே யுரைப்பரோ - ....., எ - று.

இடும்பா வனத்திற் பாடியது

12. பசிமுடுக நோவதல்லாற் பாழ்வீட்டிற் பாழ்க்த
கொசுக்கடி யாலுங் குமைந்தோம—இசையில்
நெடுமபாவம் யாஞ்செய்தா னீரென்ன செய்வீர்
இடும் பாவன நாதரே.

உரை :—இடும்பாவன நாதரே - இடும்பாவனத்தி லெழுந்தருளி யிருக்கும் சிவபெருமானே!, பசி முடுக - பசியானது தொந்தரவு செய்வதால், நோவதல்லால் - துன்பப்படுவதலலாமல், பாழ் வீட்டில் பாழ்தத கொசுக் கடியாலும் குமைந்தோம் - நாங்கள் தங்கியிருந்த பாழடைந்த வீட்டில் கேவலமான கொசுப் பூசியின உபததிரவதகினாலும் குழைந்து வருந்தினோம், இசையில் நெடும்பாவம் யாஞ்செயதால நீர் எனன செயவீர் - பொருததமில்லாத பெரிய பாவங்களை யாங்கள் செயதிருந்தால் நாங்கள் அவறறின் பயனை யனுபவிக்கவேண்டுமே யொழிய நீர் யாதஞ் செய்ய முடியாது, எ - று.

நாகதேவனிட்ட வுணவைக் குறித்துரைத்தது

13. வாயிலொன்று கல்லுமொன்று நெல்லுமான வன்னமும
வாடலாக வாறுமாதம வைதகிருந்த கதரிக்
காயிலிட்ட கறியுமுப்பி லாதகஞ்சி வனனமுங்
காம்பொடிந்த வோரகப்பை கைபபிடித்த வண்ணமும்

தூயதாகத் தலைக்கலின்றி யழுக்கடைந்த பாத்திரந்
தூக்கியுள் ளசுத்தநீர் துறத்துவந்த நேர்த்தியும்
ஓயலின்றி யீக்கள்வீழ்ந்து மொலுமொலென்ற சட்டியு
மூடன்கொணர்ந்த நாகதேவ னூண்மறப்ப தில்லையே.

உரை :—வாயிலொன்று கல்லுமொன்று செல்லுமான அன்னமும் - வாயிலே ஒரு கல்லும் ஒரு செல்லுமாகச் சமைத்த சோறும், வாடலாக ஆறு மாதம் வைத்திருந்த கத்திரிக்காயிலிட்ட கறியும் - வாடிப்போகும்படியாக ஆறுமாதங் காயப்போட்டிருந்த கத்தரிக்காய்கொண்டு செய்த பொரியலும், உப்பில்லாத கஞ்சி அன்னமும் - உப்புப்போடாத சஞ்சி நீரும், காம்பொடிந்த ஓர் அகப்பை கைப்பிடித்த வண்ணமும் - காம்பில்லாத அகப்பையினல் பரி மாறின விதமும், னயதாகத் தலைகலினறி அழுக்கடைந்த பாதத்திரம் - சுத்தமாக விளக்காமல் மாசடைந்த பாத்திரத்தில், னுகையுள்ள சுதத நீர் துறத்துவந்த நேர்த்தியும் - எடுக்கப்பட்ட தண்ணீரானது அழுக்கோடு கலந்து வந்த அழகும், ஓயலின்றி யீக்கள்வந்து மொலுமொலென்ற சட்டி யும் - ஓயாமல் ஈக்கள்வந்து ஒலி செய்கின்ற மலை பாத்திரமும், உடன் கொணர்ந்த நாகதேவன் னூண் மறப்பது இல்லையே - இவற்றோடு கூடப் படைக்கப்பெற்ற நாகதேவனுடைய சாப்பாட்டை என்றும் மறக்க முடி யாது, எ - று.

பராராச சிங்கம்

பாடியது

அந்தகக்கவி வீரராகவ முதலியார் செய்த திருவாரூருலாவை வியந்து பாடியது

1. புவியோர் பெருந்திரு வாரூ ருலாவைப் புலவர்க்கெல்லாஞ்
செவியே சுவைபெறு மாறுசெய் தான்சிவ ஞானவநு
பவியே யெனுநங் கவிவீ ராகவன் பாடியகற்
கவியே கவியவ னல்லாத பேர்கவி கற்கவியே.

உரை :—புவியோர் பெறுந் திருவாரூர் உலாவைப் - பூவுலகதிலுள் ளோர் பெறத்தக்கதாக வியற்றப்பட்ட திருவாரூர் உலாவென்னும் பிர பந்தத்தை, புலவர்களெலாம் செவியே சுவை பெறுமாறு செயதான் - கற்ற வர்களுக்கெல்லாம் செவிசெல்வம் கிடைக்கும்படியாக இயற்றினவராகிய, சிவஞான அனுபவியே எனும் நம் கவி வீரராகவன் - சிவஞான அனுபவ

முடையவரென்று சொல்லத்தக்க நம்முடைய அந்தக்க கவி வீராகவ முதலியார், பாடிய நற் கவியே கவி - பாடிய பாட்டே தக்க பாட்டாகும், அவன் அல்லாத பேர் கவி - அவனல்லாத பிறருடைய பாட்டானது, கல் கவியே - மனமுருகாத கல்லுப்போன்ற பாட்டாகும், எ - று.

தன்மீது கூறிய வண்ணங் கேட்டுப் புகழ்ந்துரைத்தது

2. *விரகன் முத்தமிழ் வீராகவன்*
வரகவி மாலையை மதிக்கும போதெல்லாம்
உரகனும் வாணனு மொப்பத் தோன்றினற்
சிரகர கபிதஞ் செய்ய லாகுமே.

உரை:—விரகன் முத்தமிழ் வீராகவன் - முத்தமிழில் அன்பும் அறிவும் சிறந்து விளங்கிய வீராகவ முதலியாருடைய, வரகவி மாலையை- வரத்தா லியற்றப்பெற்ற பாமாலையை, மதிக்கும்போதெல்லாம் - நயங காணும் பொழுதெலலாம், உரகனும் வாணனும் ஒப்பத தோன்றினல் - ஆயிரம தலையுடைய ஆதிசேடனும் இரண்டாயிரக கை யுடைய வாணசுரனும் ஒன்றாக ஒருங்குவந் திருப்பாரானல், சிரகரகம்பிதஞ் செய்யலாமே- தக்கபடி தலை யசைப்பும் கை முழக்கமும் ஏற்படுவதாகும், எ - று.

பராராச சிங்கமென்ற அரசனுடைய பத்தினியார் பாடியது

3. *போத வழகன் கவிவீர ராகவன் போற்றுகவி*
யோதையைக் கேட்டுகொண் டாடாத பேரில்லை யோங்குபுவி
மாதை யெடுக்கும வலன்முடிச் சேட மகிபற்கன்றே
காதைவகுக்கிலன் வேதா சிரக்கம்பங் காண்பதற்கே.

உரை:—போத அழகன் கவி வீராகவன் போற்றுகவி - அறிவாகிய அழகை யுடையவராகிய கவி வீராகவ முதலியாருடைய பேணத் தக்கப் பாட்டு, ஓதையைக் கேட்டுக்கொண்டாடாத பேரில்லை - ஓசை நயத்தைக் கேட்டுப் பாராட்டாதவர்களிலலை, ஓங்கு புவிமாதை எடுக்கும் வலன்முடிச சேட மகிற்கு அன்றே - பூமாதேவியைத தலையிற் சுமக்கின்ற வல்லமை யுடைய ஆயிரம் முடியுடைய ஆதிசேட மன்னனுடைய, சிரகம்பம் காண் பதற்கு - தலை யசைப்பைப் பாப்பதற்கு, வேதாகாது வகுக்கிலன் - பிரமா (பாட்டைக் கேட்பதற்குரிய) செவியைப் படைக்க வில்லை, எ - று.

கச்சியப்பர்

பாடியது

கவி வீரராகவ முதலியாரைப் புகழ்ந்தது

1. பொங்குதமி ழயோத்தியில்வாழ் தசரதனென்
போனிடததும் பூதூர்வேந்தன்
துங்கவடு கன்னிடத்தும வீரராகவரிருவர்
தோன்றி னரால்
அங்கொருவ னெருகலிமா னெய்திடப்போய்
வசைபெற்ரு னவனிபாலன்
இங்கொருவன் பல்கலிமா னெய்திடப்போய்க்
கவியினு லிசைபெற்ருனே.

உரை :—பொங்கு தமிழ் அயோத்தியில் வாழ் தசரத னென்போன் இடத்தும் - இனிமை மிகுந்த அயோதத்தியில் வாழ்ந்த தசரத சக்கரவர்த்தி யென்பவருக்கும், பூதூர் வேந்தன் துங்க வடுகன் இடத்தும் - பூதூருக்கு அதிபதியாகிய சிறந்த வடுகனுத முதலியா ரென்பவருக்கும், வீரராகவர் இருவா தோனறினா - வீரராகவர் எனற இருவர் தோனறினார்கள், அங்கு ஒருவன் ஒரு கலிமான் எயதிடப்போய் வசை பெறறான் - அவர்களுள் தசரதன் புதல்வனுகிய ராகவன் ஒரு கலிமானை எய்து கொல்லப்போய்ப் பழிகருக் காரணமாயினன், அவனி பாலன் - அவன் பூமியைக் காக்கின்ற அரசன், இஙகு ஒருவன் பல்கலிமான் எய்திடப்போய்க கவியினுல் இசை பெற்ரான் - இக்காட்டில் மற்ரொரு வீரராகவன் பல் வகையான கலிகளை மிகுதியாகப் பெற்றுப்போய்ப் புகழடைந்தான், ஆல் - அசை, எ - று.

இதுவுமது

2. நாரேனும் பூவா ணறுமணமா நின்கவிதை
ஆரேனுங் கேட்கி லவர்க்குந் தமிழ்வருங்காண்
போரேறே யெங்கும பொழியவருங் கல்விக்குக்
காரே கடலே கவிவீர ராகவனே.

உரை: —போரேரே - கல்வி வாதத்திற் சிங்கம் போன்றவனே !, எங்கும் பொழியவரும் கல்விக்குக் காரே - எஙகும் கவி மழையைச் சொரிய வருகின்ற கல்வி மேகமே !, கடலே - கடல்போன்ற அறிவுடையவனே !, கவி வீரராகவனே - அத்தகக்கவி வீரராகவ முதலியாரே !, நாரேனும்

பூவால் நறுமணமாம் - பூவோடு கூடிய நார் நல்ல மணத்தை யடையும், நின கவிதை யாரேனும் கேட்கில் அவர்க்கும் தமிழ் வரும் - உன்னுடைய பாட்டை யார் கேட்டாலும் அவருக்குத் தமிழ்க்கல்வி தானே அமையும், காண் - அசை, எ - று.

கயத்தாற்றரசன்

பாடியது

கவி வீரராகவ முதலியார் தேகவியோகங் கேட்டு வருந்தி யுரைத்தது

1. இன்னமுதப் பாமாரி யிவ்வுலகத் திற்பொழிந்து
பொன்னுலகி னும்பொழியப் போயதால்—மன்னும்
புவிவீர ராகமன்னர் பொன்முடிமேற் சூட்டுங்
கவிவீர ராகவமே கம.

உரை :—மன்னும் புவிவீரராகவ மன்னர் பொன் முடிமேல் சூட்டும் - நிலைபெற்ற இவ்வுலகில் வீரமுடைய இராமனைப் போன்ற அரசர்கள் தங்களுடைய அழகிய முடிமேல் வைத்துக் கொண்டாடத் தக்க, கவி வீர ராகவ மேகம் - கவி வீரராகவ மேகமானது, இன்னமுதப் பாமாரி இவ வுலகதத்திற் பொழிந்து - இனிய அமுதம்போன்ற பாட்டு மழையை இவ வுலகதத்திற் பெயதுவிட்டு, பொன்னுலகிலும் பொழியப் போயது - தேவ ருடைய உலகதத்திலும் அதனைப் பெயவதற்காகச் சென்று விட்டது, ஆல் - அசை, எ - று.

பல வித்துவான்கள்

பாடியது

திருச்செந்தூர்த் திருவிழாக் காலத்தில் மழையை நிறுத்தப் பாடியது

1. வந்தமழை பொழியும் வானேவெஞ் சூர்தடிந்த
கந்தர் திருவிழாக் காலத்தில்—தொந்தரையா
நீர்ததுளியை யூற்றிவிட னேர்த்தியல மாற்றிவிடு
கீர்த்திவரு நாட்டென்மொழி கேள்.

உரை :—வந்த மழை பொழியும் வானே - கார் காலத்திற் றோன்றி மழை பெய்கின்ற மேகமே!, வெம்சூர் தடிந்த கந்தர் திருவிழா காலத்தில் - கொடிய சூரனை செற்ற முருகப்பெருமானது கந்தசஷ்டித் திருவிழாக் காலதத்தில், தொந்தரையாம் நீர்த்துளியை யூற்றி விடல் - இடைஞ்சலான நீர்த்துளியைப் பெய்வது, நேர்தலியல - அழகல்ல, மாற்றிவிடு - மழையை நீக்கிவிடு, நீர்தரி வரும் - உனக்குப் புகழேற்படும், நாட்டு என் மொழி கேள் - உனக்குப் புகழை நாட்டக் கூடிய என்னுடைய சொல்லைக் கேட்பா யாக, எ - று.

திருச்செந்தூர்க் கந்தர்மேற் பாடியது

2. போற்றுவார் வல்வினையைப் போக்குமே பூமலர்கொண்
டேற்றுவா ரைக்கயிலை யேற்றுமே—தோற்றரிய
சந்தந்தங்குஞ் செஞ்சொற்சங்கம பொங்குஞ் செந்திற்
கந்தன்செம பொனறண்டைக் கால்.

உரை :—தோற்றரிய சந்தம் தங்கும் செம்சொல் - அமைததுப் பாடு தற்கரிய வண்ண நயங்க ளமைந்த செம்மையான மொழிகளைக் கூறும், சங்கம் பொங்கும் செந்தில் - தமிழ்ச சங்கத்தார் பொலிவுற்று விளங்கும் திருச்செந்திற் பதியில் வீற்றிருக்கும், கந்தன் செம்பொன் தண்டைக் கால் - குமரப் பெருமானது செம்பொற் சதங்கை யணிந்த திருவடிகள், போற்று வார் வல்வினையைப் போக்குமே - வழிபடுகிறவர்களுடைய கொடிய கர்மங களை யொழிக்கும், பூமலர் கொண்டு ஏற்றுவாரைக் கயிலை ஏறறுமே - அழகிய பூக்களினால் அர்சசனை செய்வார்க்குக் கயிலாய பதவியைக் கொடுக் கும், எ - று.

இதுவுமது

3. ஆறுமுக மென்றளவி லச்சந் தவிர்க்குமே
வேறுவினை வந்தால் விலக்குமே—கூறுபுகழ்
மாரியொத்த சூரபன்மன் மார்பிளக்க வேதொடுத்த
வீரசத்தி யானமிகுத்த வேல்.

உரை :—கூறு புகழ் - பேசப்படுகின்ற கீர்த்தியையுடைய, மாரி யொத்த சூரபன்மன் மார்பிளக்கவே - இடிபோன்ற சூரபன்மனது மாபி னைக் கீறும்படியாக, தொடுத்த - விடுக்கப்பட்ட, வீர சத்தியால் மிகுத்த வேல் - வீரததோடு மிக்க வல்லமை பொருந்திய வேலாயுதமானது, ஆறு முகம் என்ற அளவில் அச்சம் தவிர்க்குமே - ஆறுமுக மென்ற நாமத்தைச சொல்லிய அளவிற் பயத்தை யொழித்துவிடும், வேறு வினை வந்தால் விலக்குமே - நமக்கு மாறுபாடான கரும பலன் வந்தால் அதனை யகற்றும், எ - று.

இதுவுமது

4. வேலா விராலிமலை வீராவுனக் கொருபெண்
மாலாகி யேயின்று வாடுகிறாள்—நீலான
உற்பலக் கயற்கணிச்சி யுத்தரித் திடச்சமர்த்தி
அற்பசிற்றி டைக்கொடிச்சி யாள்.

உரை:—வேலா - வேலாயுதத்தை யுடையவனே !, விராலிமலை வீரா- வீராலி மலையில் வீற்றிருக்கும் அண்ணலே !, உனக்கொரு பெண் மாலாகி நின்று வாடுகிறாள்-ஒரு மாது உன்மீது மோகங்கொண்டு தளர்வடைகிறாள், நீலான உற்பலக் கயல் கணிச்சி - நீல நிறமுள்ள குவளைப் பூப்போன்ற கயல் மீனை யொத்த கண்ணையுடைய காதலியவள், உத்தரித்திடச சமர்த்தி - உமக்குப் பதில் சொல்லக்கூடிய திறமை யுடையவள் அற்ப சிற்றிடைச்சி - நுட்பமான சிறிய இடையை யுடையவள், கொடிச்சியாள் - அவள் குறிஞ்சி நிலப் பெண்ணாவள், எ - று.

இதுவுமது

5. கந்தனென்றும் வேலனென்றுங் கானமயில் வீரனென்றும்
செந்தனென்று மேன்புலவீர் செப்புகிறீர்—மூந்தவிளம
கூனற்பிறை சூடச்சிவ னருக்குப தேசித்தருள்
ஞானக்குரு வேடப்பய லே.

உரை:—மூந்த இளம் கூனல் பிறைசூடி அசிவனுக்கு - முற்காலத் தில் வளர்ந்த இளஞ் சந்திரனைச் சூடின அந்தப் பரமசிவனுக்கு, உபதேசித் தருள் - பிரணவப் பொருளை யறிவித்தருளிய, ஞானக்குரு வேடப் பயலே- ஞானாசாரிய வடிவமுடைய சிறு குழந்தையை, கந்தனென்றும் வேலனென் றும்-கந்தனென்ற பெயராலும் வேலனென்ற பெயராலும், கான மயில் வீரனென்றும் - காட்டின் மயிலின்மீது வரும் அண்ணலென்றும், செந்த னென்றும் - சேந்தன் அதாவது சிவந்த நிறமுடையவ னென்றும், என் புலவீர் செப்புகின்றீர்-கல்விமான்களே! என அழைக்கின்றீர்கள், எ - று.

குறிப்பு:—சேந்தன் என்ற சொல் செந்தன் என்று முதல் குறு கிற்று.

இதுவுமது

6. பன்னிரண்டு தோளா பரங்குன்று வெப்பொழுதும்
எண்ணிரண்டு தோண்மீதி லேயிருப்பாய்—பொன்னின்
கதிர்முடியப் பாகுகிடக் கனவரையப் பாபழனிக்
கதிபதியப் பாகுமரப் பா.

உரை:—பன்னிரண்டு தோளா - பன்னிரண்டு திருக்கரங்களை யுடைய வனே!, பரங்குன்று - திருப்பரங்குன்றப்பெருமானே!, பொன்னின் கதிர் முடியப்பா - பொன்னொளி வீசும் கிரீடத்தைத் தரித்த அப்பனே!, குஞ்சரக் கனவரை யப்பா - கோழியாகிய கனத்த குன்றினையுடைய தந்தையே!, பழநிக்கு அதிபதியப்பா - பழனிக்குத் தலைவனான பெருமானே!, குமரப்பா - முருகையனே!, எப்பொழுதும் என்னிரண்டு தோள் மீதலே இருப்பாய் - எப்போதும் என்னுடைய இரண்டு புயதின்மீ தமர்ந்து என்னை வாகன மாகக் கொள்வாயாக!, எ - று.

இதுவுமது

7. நோகாதோ லேலாகீ நோக்குமட மானுக்காப்
போகாவ னந்தேடிப் போனக்கால்—வாகாத்
தினநினைந்திட் டினைவணங்கித் திரியுமன்பர்க் கருள்செயும்பொற்
கனகதண்டைச் சிறுசதங்கைக் கால்.

உரை:—வேலா கீ - வேலவனே கீ, வாகாத் தினம் நினைந்திட்டு உனை வணங்கித் திரியும் அன்பர்க்கு - முறையாக நாள்தோறும் உன்னைத் தியானித்து வணங்கி யுனை வலஞ் செய்கின்ற அடியார்களுக்கு, அருள் செயும் பொற்கனக தண்டைச் சிறு சதங்கைக் கால் - திருப்பாவிக்கின்ற அழகிய பொற்சிலம்பும் சிறிய சதங்கையு மணிந்த உன்னுடைய திருவடி, நோகுமட மானுக்காப் போகா வனம் தேடிப் போனக்கால் - அழகிய இளமான் போன்ற பெண்ணுக்காக நடந்துபோகக் கூடாதகாட்டில் தேடி கீ போனால், நோகாதோ - (உன்னுடைய கால்கள்) வருந்தமாட்டாவோ, எ - று.

இதுவுமது

8. வாரீர் பழனிவடி வேலரே கடமைபைத்
தாரீரென் சிந்தையினிற் ருணுறையீர—சேரீர்நீர்
கன்றுநஞ்சு பிஞ்சுமஞ்சு கண்களுஞ் சிவந்துபொங்க
என்றனங்க ளுங்கசங்க வே.

உரை:—பழனி வடிவேலரே - பழனியில் வீற்றிருக்கும் கூர்மையான வேலாயுதத்தை யுடையவரே!, வாரீர் - வருவீராக!, கடம்பைத தாரீர் - கடப்பமாலையைக் கொடுப்பீராக!, என் சிந்தையினிற்றுன் உறையீர் - என்னுடைய மனத்திற் றங்குவீராக!, கன்றும் நஞ்சு பிஞ்சும் அஞ்சு கணைகளும் சிவந்து பொங்க - சினமுடைய இளம் பாம்பின் விடமானது பயப்படத் தக்க என் கண்கள் சென்னிறதோடு விளங்கும்படியாகவும், என் தனங்களும் கசங்கவே - என்னுடைய முலைகள் அமுக்கும்படியாகவும், நீர் சேரீர் - நீர் என்னைத் தழுவுவீராக, எ - று.

இதுவுமது

9. மேகநிற மான்மருக வீறுதணி கேசவிது
வாகடின மேவுமிவ ளாவியருள்—வாகுவலீ
ரத்தத்தற் றிற்பற்றி ரச்சுப்பைக் குட்டத்து
ளிர்த்ததிற் கிச்சித்த நீர்.

உரை :—வாகு வலீ ரத்து அத்தத்திற் பற்றி - வலப் பக்கமாக வளைந்த சங்கைக் கையிலேந்தி, ரச்சுப்பைக் குட்டத்து - நஞ்சையும் படமு முடைய பாம்புள்ள குளதத்தில், ளிர்த்தத்திற்கு இச்சித்த - உடனஞ் செய்வ தற்கு விரும்பிய, நீர் மேக நிறமான் மருக - மழை மேகத்தின் கருநிற முடைய திருமாலினது மருமகனே!, வீறு தணிகேசா - திருத்தணியில் தனிச் சிறப்போடு வீற்றிருக்கும் பெருமானே!, மேவும் இவள் ஆவி அருள் - விரும்புகின்ற இவளுக்கு உயிரைக் கொடுத்தருள்வீராக!, இதுவா கடினம் - இது வுமக்கு வருததமா?, எ - று.

இதுவுமது

10. பூவைக்கு ணண்ணுபகற் போதுகம தாமெலிந்தாள்
வாவிக்க விற்றணிகை வாழ்குமரா—பாவிமதன்
அம்புரம் புகுந்தலைக்க வம்பகந்த ணந்தெறிக்க
வெம்பிநெஞ்ச முந்திகைக்க வே.

உரை :—வாவிக் கவின் தணிகை வாழ் குமரா - அழகிய பொய்கையை யுடைய திருத்தணிகையில் வாழும் முருகப் பெருமானே!, பூவைக்கு - பெண்ணுக்கு, பாவி மதன் அம்பு - தீயவனுகிய மன்மதனுடைய கணையா னது, அம்புரம் புகுந்து அலைக்க - அழகிய பின்பக்கமாக வூடுருவிச் சென்று வருததவும், அகம் தணந்து எறிக்க - அறிவு மயங்கி யொழியவும், வெம்பி நெஞ்சமும் திகைக்க - நெஞ்சம பதைத்துத் திகிலடையவும், ணண்ணு பகற் போது - நேர்ந்த பகற்பொழுதானது, உகமதாம் - ஒரு யுகமாய்க் கழிந்தது, மெலிந்தாள் - அவள அதனால மிகவும் தளர்வுற்றாள், எ - று.

இதுவுமது

11 அம்பிறைக்கு மைந்துமல ரம்பிறைக்கு நொந்துமிக
அம்பிறைக்குங் கண்ணுட் கருள்புரிவாய்—நமபுதணி
கைக்கிரிக்கு ளுறறறிதர சச்சுடைத்த னக்குறத்தி
யைக்களித தணைத்தவத்த னே.

உரை :—நம்பு தணிகைக் கிரிக்குளுற்ற - எல்லாரும் நம்பி வழிப.
கின்ற தணிகைமலை யென்னு மிடத்திற் பொருந்திய, சித்ர கச்சுடைத

தனக்குறத்தி - அழகிய வாரணிந்த தனங்களையுடைய குறமாதாகிய வள்ளி நாயகியை, களித்து அணைத்த அத்தனே - மகிழ்ந்து தழுவிய அப்பனே!, அம் பிறைக்கும் - அழகிய இளஞ் சந்திரனுக்கும், ஐந்து மலர் அம்பு இறைக்கும் - ஐந்து பூங்கணைகளைச் செலுத்துகின்ற மன்மதனுக்கும், நொந்து மிக அம்பு இறைக்கும் கண்ணுட்கு - அதிகமாக வருந்திக் கண்ணீர் விடுகின்ற விழியுடைய பெண்ணுக்கும், அருள் புரிவாய் - ....., எ - று.

12. என்னிடத்தி லேதுமரா வெண்ணுதே பேதகமா
உன்னிடத்திற் கொண்டமயற் கோதாயோ—துன்னிரவு
செல்லாப் பகட்டுமென்கண் செல்லாப் புரட்டுமங்கம்
பொல்லாப் பாத்தைவஞ்சி போல்.

உரை :—துன்னிரவு செல்லாப் பகட்டும் எங்கண் - நெருங்கிய இரவானது கழியாமல் என்கண் மயக்க மடைகின்றது, செல்லாப் புரட்டும் அங்கம் - எழுந்து நடக்க முடியாது உடம்பானது புரளுகின்றது, குமரா - குமரக் கடவுளே!, பொல்லாப் பாதகை வஞ்சிபோல் - தீய வினைகளை ஈப்போல, என்னிடத்திலே பேதகமா எண்ணுதே - எனனிடத்திலே மாறுபாடாக நினைக்க வேண்டாம், உன்னிடத்திற் கொண்ட மயற்கு ஓதாயோ - உன்னிடத்திலே எனக்கேற்பட்ட மோகத்தைத் தீர்ப்பதற்கு வழி கூறமாட்டாயா, எ - று.

13. செங்கமலக் கண்கலங்கிச் சிந்தைநொந்து ராமுழுதும்
வெங்கலிக்குஞ் சங்கலிக்கும் வேலோனே—அங்கசன்றன்
பூங்கணைமெத் தத்தைத்துப் பூங்கொடிகத் தும்பட்டுத்
தாங்கணைமெத் தித்தைதுதை தான்.

உரை :—வேலோனே - வேலாயுதப் பெருமானே!, பூங்கொடி - அழகிய கொடிபோன்ற மாதானவள், அங் சன்றன் பூங்கணை மெத்தத் தைத்து - மன்மதனுடைய மலர் வாளி மிகுதியாகத் தைக்கப்பெற்று, செங்கமலக் கண் கலங்கி - சிவந்த தாமரைப் பூப்போன்ற கண் கலக்கமடைந்து, இரா முழுதும் சிந்தை நொந்து - ....., பட்டுதாங்கு அணை மெத்தை தைத்தான் - பட்டினாலாகிய படுக்கைமீது பொருந்தி, வெங்கலிக்கும் - கொடிய கலிசசந்திரனுக்கும், சங்கு அலிக்கும் - சங்குகள் உள்ள கடலுக்கும், அஞ்சி - ....., தைதும் - கதறினாள், எ - று.

14. கந்தா கடம்பா கயிலாய மாமலையான்
மைந்தா சுவாமி வடிவேலா—சந்தக்
குறமகளாசை கொள்கணவா சூரபர னகியகுமரா
அறுமுகவா பழனியின் வேலா.

உரை :—கந்தா - ஆறு முகமும் ஒன்றுப்ச் சேர்ந்த பெருமானே !, கடம்பா - கடப்பம் பூமாலை யணிந்தவரே !, கயிலாய மாமலையின் மைந்தா - கயிலாயப் பெருங்குன்றத்திற் சிவபதியாகிய சிவஞரின் குமாரனே!, சுவாமி-ஏசமானே !, வடிவேலா - கூரமையான வேலை யுடையவனே !, சந்தக் குற மகள் ஆசைகொள் கணவா - அழகிய குறமாதின்மீது காதல்கொண்ட தலைவனே !, குருபரனாகிய குமரா - மேலான ஆசாரியனாகிய முருகப்பெரு மானே !, அறு முகவா - ஆறுமுகக் கடவுளே !, பழனியின்வேலா - பழனி மலையின் வேலவரே !, எ - று.

15. அன்பர்பயங் கெடுக்குமத்தி கிரியைத் தூளாக்கும்
இன்பவள்ளி கண்ணுக் கெதிராகும்—மின்பரந்த
வாகுதோளி லேறிமீறி வாகுசாரி யோடியாடி
வேகசூரன் மார்பிடந்த வேல்.

உரை :—மின்பரந்த வாகுதோளிலேறி - மின்போல ஒளி வீசுகின்ற வீரவாகுதேவர் புயத்திலமர்ந்து, மீறி - அங்கிருந்து மேலே கிளம்பி, வாகு சாரி ஓடி ஆடி - அழகாக வலசாரி யிடசாரியாகப் பாய்ந்தசைந்து, வேத சூரன மாபிடந்த வேல - விரைவு மிகுந்த சூரபதமனுடைய மாமரத்தைத் தூளாத்த வேலாயுதமானது, அன்பர் பயம கெடுக்கும - அன்பாகளுடைய அசசத்தை நீக்கும், அதகிரிரியைத தூளாக்கும் - அதக கிரௌஞ்ச மலையை ஊடுறுவிச செலலுத இனபவள்ளி கண்ணுக்கு எதிராகும் - இன பக்கொடிபோன்ற உமைய மமையின் சந்நிதானதில நிலபெறும், எ - று.

16. அஞ்சி மயல்சகிமா தகமுரு கிகின்ற
வஞ்சியைச்சேர் தென்றணிகை வள்ளலே—பஞ்சமலர்
அங்கசனுக் குங்கிரணத் தருதிமதிக் குங்கடலுக்
குங்குழலுக் குங்குயிலுக் கும.

உரை :—தென் தணிகை வள்ளலே - அழகிய தணிகைப்பதியில் வீற் றிருக்கும் அருளாளரே !, பஞ்ச மலர் அங்கசனுக்கும் - ஐந்து பூங்கணைகளை யுடைய மனமதனுக்கும, கிரணத்தி அருதிமதிக்கும் - நிலாக்கதிர் வீசுகின்ற மாலைச சந்திரனுக்கும், கடலுக்கும் - சமுத்திரத்திற்கும், குழலுக்கும் - புல்லாங் குழலுக்கும், குயிலுக்கும் - குயிலி னோசைக்கும், அஞ்சி - பயந்து, மயல் சகியாது - மோகத்தைத் தாங்க மாட்டாது, அங்கம உருகி நின்ற வஞ்சியைச்சேர் - உடல் இளகி நின்றபெண்ணை யணைவாயாக, எ - று.

17. தாமரைப்பூந் தேனையுண்டு தாதளைந்து வண்டிழிந்து
காமரஞ்செய் வாவிகள்சூழ் கந்தர்சிவ—மாமலைவாழ்
பூவையரங் கந்தங்கம பூகமிலங் குங்கண்டம
காவையரங் கஞ்சங்கங் காண்.

உரை:—வண்டு தாமரைப்பூர் தேனே உண்டு தாது அனைத்து - வண்டுகள் தாமரைப் பூவிலுள்ள தேனே யுண்டு மகரந்தப் பூவிற் படிந்து, இமிர்ந்து கர்மரஞ் செய் - ரீங்காரஞ் செய்து இசைப்பாட்டுப் பாடவும், வாவிகள் சூழ் - பொய்கைகள் சுற்றி யிருக்கப்பெற்ற, சிவமா மலைவாழ் பூவையர் - சிவகிரியென்னும் பெரிய பதியில் வாழ்கின்ற மாதர்களுடைய, அங்கம் தங்கம் - உடம்பு பொன் மயமானது, கண்டம் பூகம் இலகுகும் - கழுத்தானது கமுகைப்போலப் பிரகாசிக்கும், வை அரம் கஞ்சம் கண் - கண்களானது கூர்மையான அரம்போலவும் தாமரைப்போலவும் உள்ளன, கந்தா காண்கா - முருகப்பிரானே கவனித்து அவர்களைக் காத்தருள்வாயாக !, எ - று.

விநாயகர் வணக்கச் சிறப்பு

18. கல்விக்கு ஞானக் கருத்துண்டாங் காயமுறும்
தொல்வினைக ளெல்லாந் தொலையுமே—வில்லேத
னிற்புயற்றி ருக்கணத்த னிததன்வச் சிரப்புயத்தோர்
கற்பகத்தி னேத்துதித்தக் கால்.

உரை:—வில்லேதனில் - வில்வாரண்ய மென்னும் தலத்தில், புயல் திருக்கண் அததன் - மேகம்போல அருளைப் பொழிகின்ற திருக்கண்களையுடைய அப்பனும், நித்தன் - நிதநியமானவனுமாகிய, வசிரப் புயத் தோர் கற்பகதினே - வயிரம்போன்ற தோள்களையுடைய ஒப்பற்ற கற்பக விநாயகப்பெருமானே, துதித்தக்கால - புகழ்ந்து பாடினால், கல்விக்கு ஞானக் கருத்துண்டாம் - கலவி வளர்தற்குக் காரணமாகிய அறிவுக் கருத்துகள் உள்ளத்திற்றோன்றும், காயம் உறும் தொல்வினைகளெல்லாம் தொலையுமே - உடம்பைப் பாதிக்கின்ற பழைய கருமவகள் யாவும் ஒழியும், எ - று

இதுவுமது

19. வாங்குகிலை நுதலார் மாயக் கல்வியிலே
ஏங்கி மனமே யிளையாதே—மாங்கனிகாகாத் [றைச்
தம்பியொக்கச் சண்டையிட்டுத் தந்தையைச்சுற் றந்தவொற்
கொம்பனைச்சற் றண்புவைத்துக் கூறு

உரை :—மனமே - நெஞ்சமே !, வாகுகு நிலை நுதலார் வளை விற் போன்ற நெற்றியையுடைய பெண்களது, மாயக் கல்வியிலே - அறிவு மயக்கஞ் செய்யக்கூடிய சேர்க்கையிலே, ஏங்கி இளையாதே - அழுந்தியேக்கமுகொண்டு தளர்ந்து போகாதே, மாங்கனிகாகா தம்பியொக-சண்டையிட்டு - மாம்பழம் பெறுவதறகாகத் தம்பியோடு சமமாகச் சண்டை போட்டு, தந்தையைச சுற்று அந்த ஒற்றைக் கொம்பனை

தகப்பனுரைப் பிரதட்சணமாக வந்த ஒரு கொம்பைக் கையி லேந்திய அந்த விநாயகப்பெருமா னிடத்தில், சறறு அன்பு வைத்துக் கூறு-சிறிது பகதி செலுததி அவரைத் துதிப்பாயாக, எ - று.

20. சிந்தா குலந்தீருஞ் செய்கருமங் கைகூடுங்
சந்தான மென்றுந் தழைததேறும—பைந்தாமத்
தானைவயத் தானையிலைப் பாவையளித் தானைமகத்
தானைமுகத் தானைநினைத் தால்

உரை:—பைந்தாமத்தானை - புதுமலர் மாலை தரித்த பெருமானை, வயத்தானை - சுயாதீன முடையவனை, மலைப் பாவை யளித்தானை - மலை மகன் புதல்வனை, மகத்து ஆனை முகத்தானை - பெருமை பொருந்திய யானைமுகக் கடவுளை, நினைததால் - தியானித்தால், சிந்தா ஆகுலம் தீரும் - மனைக்கவலை தீரும், செய் கருமம் கை கூடும் - செய்யு முயற்சி வினிதாக நிறைவேறும், சந்தானம் என்றும் தழைததேறும் - பரம்பரை யெப்போதும் வளர்ந்தோங்கும், எ - று.

விரிஞ்சைப் பதியிலுள்ள சிவபெருமான்மீது பாடிய துதி

21. செல்வம பெறலாஞ் செழித்தபுகழ் சேரலாம்
வில்வம புனைவார் விரிஞ்சேசர்—புல்லுமதன்
கோமுழுதி தாரிமயக் கோதையிடத் தார்கமலத்
தாளைமனத் தூடுநினைத தால்.

உரை:—வில்வம் புனைவார விரிஞ்சேசர் - வில்வத்தழையை அணிபவ ராகிய திருவிரிஞ்சைப்பெருமான், புல்லு மதன கோளை முடித்தார் - நெருங்கிய மன்மதனது வீரதததை தொலைததார், இமையக்கோதை யிடத் தார் - இமயமலை யரசன் மகளாகிய பார்வதியை இடப்பாகத்தில் வைத்துக் கொண்டார், கமலததாளை மனத்தோடு நினைத்தால் - அவருடைய திரு வடித்தாமரையை யுள்ளததில் தியானித்தால், செல்வம் பெறலாம் - ஐசுவரி யத்தை யடையக்கூடும், செழிதத புகழ் சேரலாம் - நிரைந்த கீர்தியைப் பெறுதல் கூடும், எ - று.

வேற் சிறப்பு

22. அண்டர்தமக்கரசா மன்புபட ரக்கொமபாம்
மண்டவுணர் தமமுயிர்கடு வண்ணியாம—பண்டுநிறற்
கஞ்சனஞ் சடுங்கடம பணிந்தெழுந்து கந்துசூரை
மிஞ்சிமெஞ்சு றிந்தெறிந்த வேல்.

உரை:—பண்டுநிறல் கஞ்சனஞ்சிடும் - முற் காலத்தில வலிமையை யுடைய பிரமதேவன் பயப்படும்படியான, கடம்பணிந்து எழுந்து உகந்து -

கடப்பமாலையை விருப்பமாயணிந்து எழுந்து புறப்பட்டு, சூரை மிஞ்சி - சூர பதுமனுடைய ஆற்றலுக்கு மேற்பட்டு, நெஞ்சுறிந்து எறிந்த வேல் நெஞ் சைக் கிழித்துத் தள்ளிய வேலாயுதமானது, அண்டர் தமக்கு அரசாம் - விண்ணவர்களுக்கு வேந்தாகும், அன்புபடாக் கொம்பாம் - அன்பாகிய கொடி படருவதற்குரிய கொம்புபோல்வதாகும் மண்டு அவுணாதம் உயிர்க்கு வன்னியாம் - நிறைந்த அசுரர்களுடைய உயிருக்குத் தீப்போல்வ தாகும், எ - று.

இதுவுமது

23. ஆதரவா யென்னருகி லஞ்சலென்று வந்துநின்று
போதரவு செய்யுமெப் போதுமே—ஓதுதமிழ்ச்
சந்தமுந்த லங்கிர்தஞ்செ றிந்துநன்கு யர்ந்துதங்கு
விந்தைகொண் டிலங்குசெந்தில் வேல்.

உரை:—ஓதுதமிழ் சந்தமுந்து அலங்கிர்தஞ் செறிந்து சிறப்பாகப் பேசுகின்ற தமிழ் வண்ணப்பாட்டுகளுள் அளவு மிகுந்த பகுதிகளில் மிகுதி யாகப் போற்றப்பட்டு நன்கு உயர்ந்து - நன்றாக வுயாவடைந்து தங்கு விந்தை கொண்டு-நிலைவரமான வியப்பினை யுடையதாய, இயங்கு செந்தில் வேல் - விளங்குகின்ற செந்திற் பெருமானுடைய வேலாயுதமானது, எப் போதுமே ஆதரவாய் என்னருகில் அஞ்சல் என்று வந்து - எக்காலதிலும் அருள் கூர்ந்து என் பக்கத்தில் வந்து அஞ்சாதே என்று அபயங் கூறி, நின்று போதரவு செய்யும் - நிலைபெற்று எனனை நல்வழியிற் செல்லும்படி நடத்தும், எ - று.

இதுவுமது

24. இங்கிதமா நல்வாழ் வெமக்களிக்கு முற்பகல்செய்
சங்கடமாம வேலை தணிக்குமே—பொங்குமுறத்
தற்பரற்கு ணுக்கிரகித்திடக் கருத்த னித்தசத்த
வெற்பினைத் துளைததவுக்ர வேல்.

உரை:—பொங்குமுற தற்பரற்கு அனுக்கிரகித்திட கருத்தன் - விளக்க மிகும்படி பரம்பொருளாகிய சிவபெருமானுக்குப் பிரணவப் பொருளை அருள் செய்த ஆசாரியனுயிவனுடைய, நிதத சத்த வெற்பினைத் துளைதத உக்ரவேல் - நிதியத் தன்மையுடைய ஏழு மலைகளையும் ஊடுருவிய வீர மிகுந்த வேலாயுதமானது, இங்கிதமாம் நல்வாழ்வு எமக்கு அளிக்கும் - இனிமையான சுக வாழ்க்கையை எங்களுக்குத் தரும், முற்பகல் செய் சங் கடமாம் வேலைத் தணிக்குமே - முன்னாளில் செய்த தீவினைப் பயனாக வந்த துன்பமாகிய கடலை வற்றச செய்யும், எ - று.

இதுவுமது

25. ஈட்டும வினைகளறுத் தின்பமுற வேயெனது
பாட்டுக்கு கந்தருள் பாலிக்கும்—நாட்டமிகும்
மண்டலங்க லங்ககண்டர்கண்டர் துண்டர் மிண்டராவி
விண்டொடுங்க மண்டியுண்ட வேல்.

உரை :—நாட்ட மிகும் மண்டலம் கலங்க - உறுதி மிகுந்த பூவுலகம் கலக்க முறுதற் கேதுவாகிய, அகண்டர் கண்டர் - எல்லை யில்லாதவர்களாகிய முட்போன்றவர்களும், துண்டர் - குறும்பர்களும், மிண்டர் - வலிமையுடையவர்களுமாகிய பல பொல்லாதவர்களுடைய, ஆவி விண்டு ஒடுங்க - உயிர்கள் பிரிந்து அடங்கும்படியாக மண்டி உண்ட - அவவுயிர்களை நெருங்கியுட்கொண்ட, வேல் - வேற்படையானது, ஈட்டும் வினைகளறுத்து - நமது செய்கையில் மிகுகின்ற இருவினை (ஆகாமிய)ப் பயன்களை யொழித்து, இன்ப முற - இன்பதத்தை யானடையும்படியாக, எனது பாட்டுக்கு உகந்து அருள் பாலிக்கும் - எனது கவிக்கு மகிழ்ந்து கிருபை செய்யும், எ - று.

இதுவுமது

26. உன்னவினி தாயிருக்கு மோங்குசெல்வ மும்பெருக்கும்
நன்னலரு லோக்கொடுக்கு நாடோறும்—பன்னும்
சகடமுருள நெருடுகமல சரணகருணை யரியின்மருகன்
விகடகரியி னிளையமுருகன் வேல்.

உரை :—பன்னும் சகட முருள நெருடு கமல சரண - பேசப்பட்ட சகடாசுர னுருண்டு சாகும்படி தேய்த்த திருவடித் தாமரைகளையுடைய, கருணை அரியின் மருகன் - அருளுடைய திருமாலின் மருமகனும், விகடகரியின இளையமுருகன் - விகட சகர விநாயகனின் தம்பியுமாகிய குமரக் கடவுளின், வேல - வேலாயுதமானது, உன்ன இனிதாய் இருக்கும் - நியானிப்பவர்களுக்கு இன்ப மயமாயிருக்கும், ஓங்கு செல்வமும் பெருக்கும் - செழிதது வளராகின்ற செல்வத்தை மிகுதியாகக் கொடுக்கும், நாடோறும் நன்னல் அருளைக் கொடுக்கும் - ஒவவொரு நாளும் சிறந்த திருவருள் பாலிக்கும், எ - று.

இதுவுமது

27. ஊழ்வினையைப் போக்குமே யுள்ளொளியைக் காட்டுமே
வாழ்வதற்கோர் வித்தாய் வளருமே—தாழ்வார்
தடபட வெனவதிர் சடலதன் மூடிமிசை
விடவதி பொடிசெயும் வேல்.

உரை :—தடபடவென அதிர் கடலதின் - தடபடவென ஒலி செய் கின்ற சமுத்திரத்தின், முடிமிசை விட - முடியாகிய அலைகளின்மீது செலுத்த, அதிபொடி செயும் வேல் - கடலைத் தூள் தூளாகச செய்யவல்ல வேலாயுதமானது, தாழ்வார் - வழிபடுபவருடைய, ஊழ் வினையைப் போக் குமே - முன் செய்த பாவத்தின வலியை யொழிக்கும், உன் ஒளியைக் காட்டுமே - அகவொளியாகிய ஞானத்தை யுணாததும், வாழ்வதற்கோர் வித்தாய் வளருமே - நல்வாழ்க்கைக்கு அடிப்படியாய் நின்று அதனை விருத்தி செய்யும், எ - று.

இதுவுமது

28. ஓராறு சென்னி யொருமூருகா வென்றளவில்
தீராத வல்வினைநோய் தீருமே—போராடிக்
கொக்கரித்து வெற்படர்த்துக் கொக்கரக்க னைத்துணித்த
விக்ரமத்தி ருக்கரத்து வேல்.

உரை:—போராடிக் கொக்கரித்து வெற்படர்த்து - சண்டையிட்டு ஆர வாரஞ் செய்த இரௌஞ்ச மலையை தாகித்த தூளாத்து, கொக்கு அரக் கனைத் துணித்த - மாமரதத்தின உருவகங்கொண்ட சூரபதமனை யிருகூறுகப் பிளாத, விகரமத் திருக்கரத்து வேல் - பராகிரமமான திருக்கையிலுள்ள வேலானது, ஓராறு சென்னி ஒரு முருகா என்றளவில் - இணையற்ற ஆறு முகங்களையுடைய குமரப் பெருமானே என்று கூறிய மாத்திரத்தில், தீராத வல்வினை நோய் தீருமே - நீங்காத கொடிய கருமங்களாகிய வியாதியைக் குணப்படுத்தி யொழிக்கும், எ - று.

மீனாட்சியம்மை நிந்தாஸ்துதி

29. மாப்பிட்டெனுஞ்சிறுதூட்பிட்டுக் காகமண்ணைச்சுமந்தே
ஆப்பிட்டுக்கொண்டடிபட்டசொக் கேசருக்காசைபட்டுச்
சேப்பிட்டுமையிட்டுப்பூமாலை கந்தஞ்சிமிர்ந்துமஞ்சட்
காப்பிட்டுவாழ்க்கைப்பட்டாள் கூடல்வாழுங்கயற்கண்ணியே.

உரை :—கூடல் வாழும் கயல் கண்ணியே - திருவாலவாயில் வீற்றிருக் கும் கயலமீன்போன்ற கணணையுடைய மீனாட்சியமமை, மாப்பிட்டு எனும் சிறு தூள் பிட்டுகாக - மாவை யவித்தசை செய்யும் பிட்டினில் உதிர்ந்த சிறு தூள் வடிவமாகிய பிட்டை விரும்பி, மண்ணைச சுமந்து - மண் சுமந்து, ஆப்பிட்டுகொண்டு அடிபட்ட சொகசேசருக்கு - அகப்பட்டுக்கொண்டு அடி பட்ட சொக்கலிங்கப் பெருமான்பால், ஆசைப்பட்டு - காதல்கொண்டு, சேப் பிட்டு - இவந்த திலத மிட்டுகொண்டு, மையிட்டு - கண்ணுக்கு மை யெழுதி, பூமாலை கந்தம திமிர்ந்து - பூமாலை தரித்தச் சந்தன முதலிய பூசிகொணடு, மஞ்சள் காப்பிட்டு - மஞ்சளும் கங்கணமு மணிந்து, வாழ்க் கைப்பட்டாள் - மணம் புரிந்து வாழ்க்கைக்குரியவ ளானுன், எ - று.

30. காமர கயற்கண்ணி கோபம்பொ ருளென்றென் கண்பனிநீர்
சீமான் கரத்திற் றுடைக்கரி தேசெக மேழுமெச்சும்
கோமான் கரத்திற் குனிசிலை ராயன் குகன்சிலம்பில்
மாமாவின் காலல்ல வேமன்ன வாவுன் மலர்க்கரமே.

உரை :—செக மேழு மெச்சும் கோமான் - ஏழுலகமும் புகழுகின்ற அரசனும், கரத்திற் குனிசிலை ராயன் - கையில் வளைந்த வில்லையுடைய அரசனுமாகிய, குகன் சிலம்பில் - குகனுடைய மலையில் மன்னவா - வேந்தனே !, காமர - மன்மதனே !, கயற்கண்ணி கோபம் பொருள் - கயல்மீன் போன்ற கண்ணையுடையவளாகிய தலைவி (நீ எனக்கு அருள் செய்வது தெரிந்தால்) கோபித்துப் பொறுக்கமாட்டாள், (ஆதலினால்) என்றன் கண் பனிநீர் - என்னுடைய கண்ணிலிருந்து சுடுக்ததோடு விழுகின்ற கண்ணீரை, சீமான் கரத்தில் துடைக்கரிதே - செல்வனுடைய உம்முடைய கையினால் துடைப்பது அரிதாகும், மாமாவின் காலல்லவே உன் மலர்க் கரமே - பெரிய லட்சுமியின் தாமரை தங்குகின்ற திருவடியை வைக்கின்ற இடமல்லா உன்னுடைய தாமரைக் கையானது, எ - று.

தலைவி கூற்று

31. ஆச்சரியந் தென்னமர மத்தனையுங் குத்துமுலை
காய்ச்சிருக்குந் தென்குடந்தைக் காவலா—மாச்சன்
வரக்குப்பை யாநீ மருவாநா ளெல்லாம்
சரக்குப்பை யாமே தனம.

உரை :—ஆசரியம் - வியக்கத் தக்கதாக, குத்துமுலை - குவியலான தனங்கள்போல, தென்னமரம் அத்தனையும் காய்சிருக்கும் - தென்ன மரங்கள் முழுவதும் காய்த்திருகின்ற, தென் குடந்தைக காவலா - அழகிய கும்பகோணத்துக்கு மன்னனே !, மாசசன் - மாய்சசனுடைய, வரக்குப் பையா - வரத்தினாற் பிறந்த மகனுகிய குப்பையனே !, நீ மருவா நாளெல்லாம் - நீ என்னை யணையாத நாட்களி லெல்லாம், தனம் - என்னுடைய கொங்கையானது, சரக்குப்பையாமே - மன்மதனது அம்பின் கூட்டம் நிறையப் பெறுகின்றது, எ - று.

ஆபத்துச் சகாயர்மீது பாடிய நிந்தாஸ்துதி

32. தந்தைபோய்த் தாய்போய்த் தமர்போயென் சுற்றமுமபோய்
வெந்தபுரி யாகிவிட் டேனே—முந்தவே
ஆழாழி நஞ்சுண்ட வாபற்ச காயனெனும்
பாழாவான் கண்ணேறு பட்டு.

உரை :—முந்தவே - முற் காலத்திலேயே, ஆழாழி நஞ்சுண்ட - ஆழ மான பாற்கடலில் உண்டான விடததை யருந்திய, ஆபற் சகாய னென் னும் - ஆபச் சகாயனென்னும் திருப்பெயருடைய, பாழாவான் கண்ணேறு பட்டு - மாயைக்கு அப்பாலுள்ள பெருமானது திருக்கண் பார்வை பொருந் தப்பெற்று, தந்தை போய்த் தாய் போய்த் தமர் போய் என் சுற்றமும் போய் - பெற்றோரையும் நண்பரையும் உறவினரையு மிழந்து, வெந்தபுரி யாகி விட்டேன் - சுட்டிஞற் கருகிய வைக்கோற் புரியின் தன்மையை யடைந்து விட்டேன், எ - று.

விடலையிருவன் பெண்கள் இடைக்கு இரங்கிக் கூறியது

33. கைக்குடமும ரெண்டு கனகசுமபக் குடமும்
முக்குடமுங் கொண்டான் முறியாதோ—மைக்குழலீர்
வேய்க்காற்றி னல்வீளங்கும் வீரனந்தி மாநகரில்
ஈக்காற்றுக் காற்று விடை.

உரை :—வேய்க்காற்றினல் வீளங்கும் - மூங்கில் வனத்தின் காற்று மிகுந்த பேர் பெற்ற, வீரன் நந்திமா நகரில் - வீர பாண்டியனது நந்திபுர மென்னும் ஊரில், மைக்குழலீர் - (வாழுகின்ற) மேகமேபோன்ற கூந்தலை யுடைய பெண்களே !, ஈக்காற்றுக்கு ஆற்று இடை - ஈப்பறக்கும்போ தண் டான காற்றினல் தாங்க முடியாத உங்களுடைய இடையானது, கைக் குடமும் ரெண்டு கனகக்கும்பக் குடமும் முக்குடமும் கொண்டால் - உங் கள் கைக் குடத்தோடு உங்கள் தனங்களாகிய இரண்டு பொன் குடங்களு மாகிய மூன்று குடங்களும் தாங்கினல் முடியாதோ - ஒடிந்து போகாதோ எ - று.

திருமால் சிவனை யர்ச்சித்தது

34. வையம புகழு மலரா யிரமெடுத்துக்
கையிலொரு மாமலரைக் காணுமல்—வையகத்தில்
செங்கண்மா லீசன் திருவடிக்கெண் ணுயிரமாத்
தங்கண்மலர் சாத்தினுன் முன்.

உரை :—வையகத்தில் - இப் பூமியின்மேல், செங்கண்மால் - சிவந்த கண்ணையுடைய விண்டுவானவர், ஈசன் திருவடிக்கு - சிவபெருமானுடைய திருவடிக்கு அர்சனை செய்வதற்காக, வையம் புகழும் மலர் ஆயிரம் எடுத்து - உலகினர் துதிக்கும் ஆயிரம் தாமரைப்பூக்களை யெடுத்து அர்ச் சனை பண்ணும்போது, கையில் ஒரு மாமலரைக் காணுமல் - கையில் ஒரு தாமரைப் பூக் காணப் பெருமல், எண்ணுயிரமா - ஆயிரம் என்ற எண் குறைவில்லாமலிருக்கும்படி, தம் கண மலர் சாத்தினுர்தான் - தன்னுடைய கண்ணை ஒரு மலராகத் திருவடியிற் சாத்தினர், எ - று.

சிவனை வணங்காரை மாரியம்மன் தண்டித்தல்

35. பாம்புசேர் தோளிணையாள் பாளயத்து மாமாரி
சாம்பசிவன் றன்னடியைச் சாராரை—வேம்பின்
இலையையு டுத்தியவ ரீனமானம் போக்கித்
தலையில்விளக் கேற்றிவைப்பா டான்.

உரை:—பாம்பு சேர் தோளிணையாள் - பாம்பை யணியாகத் தரித்த இரு தோள்களையுடைய தேவியாகிய, பாளையத்து மாமாரி - பாளையத்தி லுள்ள பெரிய மாரியம்மன, சாம்பசிவன் தன்னடியைச சாராரை - பரம சிவனது திருவடியை வணங்காதவாகளை, வேம்பின் இலையை உடுத்தி - வேப்பிலையினலாகிய ஆடையை யுடுக்கும்படி செய்து, அவர் ஈனம் மானம் போக்கி - அவர்களுடைய குறைவுபட்ட மதிப்பையும் தொலைப்பதற்கு (அவர்களது) தலையில் விளகேற்றி வைப்பாள்தான் - ....., எ - று.

கல்வி கற்கக் கூடாத நாட்கள்

36. அட்டமியி லோதினு லாசாணுக் காகாது
சிட்டருக்குப் பன்னன்கு தீதாகும—கெட்டவுவா
வித்தைக்கு நாசமாம வெய்ய பிரதமையில்
பித்தரும பேசார் பிழை.

உரை:—அட்டமியில் ஓதினுல் ஆசானுக்கு ஆகாது - எட்டாவது திதி யில் படித்தால் உபாதியாயருக்குக் கெடுதியுண்டாக்கும், சிட்டருக்கு-பன் னன்கு தீதாகும் - சதுர்த்தசியில் ஓதினுல் அது மாணக்கர்களுக்குத் தீமை விளைக்கும், கெட்ட உவா வித்தைக்கு நாசமாம - பௌர்ணமி கலவிக்குக் கெடுதி யுண்டாக்கும், வெய்ய பிரதமையில் பிழை - கேடு செய்யக்கூடிய பாட்டிமையிற் படித்தால் தப்பு ஏற்படும், பித்தரும் பேசார் - பைதலியங் கொண்டவாகளகூட, பாட்டிமையில் பேச மாட்டாகள், எ - று.

செவிலி கூற்று

37. ஆயிரம்பாக் கன்னமூலை யன்னநடைக் கன்னிபதி
னாயிரமபாக் காளுநன் னுசையினுல்—நீயிரங்கி
வந்தாள வேண்டுமலைப் பழனிவே லவனே
சந்தாள வேறில்லை தான்.

உரை:—மலைப்பழனி வேலவனே - பழனி மலையிலுள்ள வேலாயுதப் பெருமானே !, ஆயிரம் பாக்கன்ன முலை - கலசமபோன்ற தனத்தையும், அன்ன நடைகனனி - அன்னம்போன்ற நடையையுமுடைய சிறு பெண், உன் ஆசையினுல் பதினுயிரம் பாகாளுள் - உன்பாலுள்ள மோகததால் உடை யிழந்து திருவாணமாளுள், நீ இரஙகி வந்தாள வேண்டும் - நீ கருணை

செய்துவந்த அவனே யாட்கொள்ள வேண்டும், சந்த ஆன - அதுவிட, வேறு இல்லைதான் - வேறு ஆட்களில்லை, எ - று.

தந்தையர் இவர்களா மெனல்

38. பிறப்பித்தோன் வித்தைதனைப் பேணிக் கொடுத்தோன்
சிறப்பினுப தேசஞ் செய்தோன்—அறப்பெரிய
பஞ்சத்தி லன்னம பகர்ந்தோன் பயந்தீர்த்தோன்
எஞ்சாப்பி தாக்களென வெண்.

உரை:—பிறப்பித்தோன் - பெற்றெடுத்தவன், வித்தை தனைப் பேணிக் கொடுத்தோன் - கல்வியை விரும்பிக் கற்பித்தவன், சிறப்பின் உபதேசம் செய்தோன் - வீடு பெறுவதற்குக் காரணமாகிய உணமையை யறிவித்தவன், அறப்பெரிய பஞ்சத்தில் அன்னம் பகர்ந்தோன் - மிகுந்த கொடிய கருப்பில் ஏழைகளுக்கு உண வளித்தவன், பயந்தீர்த்தோன் - அச்சதை நீகினவன், (ஆகிய இவர்கள்) எஞ்சாப் பிதாக்கள் என எண் - கிலைத்த தந்தையர்களாகக் கருதுக !, எ - று.

தலைவி கூற்று

39. கானக் கடன்மல்லைக் கார்வண்ணன் ரூணுமால்
நானக் குழன்மடவீர் நாணுமால்—ஆனக்கால்
தன்கையிற் சங்காழி தாமிருக்கப் போவதேன்
என்கையிற் சங்காழி யின்று.

உரை :—கானக்குழல் மடவீர்-கத்தூரிச சாந்தணிந்த கூந்தலையுடைய தோழிகளே !, கானக்கடல் மல்லை காவண்ணன் ரூணுமால் - சோலை யடுக் கப்பெறற சமுத்திரஞ்சூழ்ந்த மாவலி புரத்திலிருக்கும் மேகம்போன்ற கரியநிறமுடைய திருமால் மாலெனப்படுவர், நாணுமால் ஆனக்கால்- நான்மால் அடைந்தால், (இருவருகும் மாலென்ற பெயரே யேற்படும், ஆனால்) தன் கையில் சங்காழி தாமிருக்க - அந்தத் திருமால் கையில் சங்குஞ் சக்கரமும் நீங்கா திருக்கவும், இன்று என் கையில் சங்காழி போவ தேன் - இங்ஙனில் என் கையிலுள்ள சங்கும் ஆழியும் அதாவது வளைய லும் மோதிரமும் கழன்று போவது எதனாலே, எ - று.

புலவரை யாதரியாரை யிகழ்தல்

40. கட்டியடிப் போர்க்குங் கன்மீதி லேற்றுவர்க்கும
எட்டியடிப் போர்க்கு மீவரே—திட்டமுடன்
பாடுவோர்க் கீயாரே பல்லுதிரத் தாடையினிற்
போடுவோர்க் கீவார் பொருள்.

உரை :—திட்டமுடன் இடுவோர்க்கு ஈயாரே - முறையாகக் கவி யியற்றுவோர்க்குப் பொருள் கொடாதவர்கள், பல்லுதிரத் தாடையினில் போடுவோர்க்குப் பொருள் ஈவார் - பல்லு திதறும்படியாகக் கன்னத்தில் அடிக்கின்றவர்களுக்குப் பொருள் கொடுப்பார்கள், கட்டி யடிப்போர்க்கும் கன்மீதி லேற்றுவர்க்கும் எட்டி யடிப்போர்க்கும் ஈவரே - தங்களைத் தாணில் கட்டி அடிக்கின்றவர்களுக்கும், தங்களைக் குனியவைத்து முது கில் கல்லேற்றுகின்றவர்களுக்கும், ஓங்கிக் கன்னத்தி லறைகின்றவர்களுக் கும் பணம் கொடுப்பார்கள், எ - று.

செவிலி கூற்று

41. செய்யாள் கணவா செகராஜ சேகரா
அய்யா வடகங்கைக் காரியா—துய்யா
குடஞ்சுட்டுப் பின்போன கோபாலா முத்து
வடஞ்சுட்டுக் கண்டுயிலாண் மான்.

உரை :—செய்யாள் கணவா - திருமகளுக்கு நாயகனே!, செகராஜ சேகரா - உலக மன்னர் முடிமேலிருப்பவனே!, அய்யா - ஐயனே, வட கங் கைக்கு ஆரியா - வடபாலுள்ள கங்கைக் கரையில் உயர்வாகப் போற்றப் படுபவனே!, துய்யா - புனித மானவனே!, குடஞ்சுட்டுப் பின்போன கோபாலா - பசுத தொகைகளின் பின்னே சென்ற பசுக் காவலனே!, மான் - என் மகள், முததவடஞ்சுட்டு - மாபிலணிந்த முதத மாலையினால் தணிக்கப்பெற்று, கண் துயிலாள் - தூங்காதிருக்கிறாள், எ - று.

தாய் கூற்று

42. உன்றன் மகளை யொறுப்பதற்கு காரணமென்
என்றன் மகட னியல்புகேள்—குன்றச்
சிராப்பளிய னேறிவருஞ் சேவின்மணி யோசைக்
கிராப்பளியுங் கொள்ளா ளிவள்.

உரை :—உன்றன் மகளை ஒறுப்பதற்குக் காரணம் என் - உன் மகளை நீ கண்டிப்பதற்குக் காரணமென்ன, என்றன் மகள் தன் இயல்பு கேள் - என் புதல்வியின் தன்மையைக் கேட்பாயாக!, குன்றச் சிராப் பளியன் ஏறிவரும் சேவின் மணியோசை - குறைவில்லாத திருச்சிராப்பளிப் பெரு மான் எழுந்தருளி வருகின்ற காளையின் கழுத்திற் கட்டிய மணி யொலி யைக் கேட்டு, இவள் - என் மகள், இரா - இராததினியில், பளியுங் கொள் ளாள் - படுக்கையிற் படுத்துத் தூங்குகிறாளில்லை, எ - று.

இதுவுமது

43. நீரூருஞ் செஞ்சடைமே னீரூரும பாம்பணிந்து
நீரூரி லேவருத னீதியோ—நேரே
படவரவஞ் சாடப் பலியிடென வந்தால்
இடவர வஞ்சாளோ விவள்.

உரை :—நீரூருஞ் செஞ்சடைமேல் - கங்கை பாய்கின்ற சிவந்த சடையின்மீது, நீரூரும் பாம்பு அணிந்து - நீரிலே செல்லக்கூடிய பாம்பை யாபரணமாகக்கொண்டு, நீர் ஊரிலே வருதல் நீதியோ - நீர் ஊருக்குள்ளே வருவது முறையா?, நேரே பட அரவம் சாட - கண்ணெதிரிலே படத்தையுடைய பாம்பானது சீறிப் பாய, பலி இடு என வந்தால் - பிசசை போடென்று நீர் சொல்லிக்கொண்டு வரின், இவள் இடவர அஞ்சாளோ - இவள் சோறிடவருவதற்கு அஞ்சமாட்டாளா?, எ - று.

கருடனுக்குஞ் சந்திரனுக்குஞ் சிலேடை

44. வாலைப் பொருந்துதலால் வல்லரவம் பற்றுதலால்
மாலை யெடுததுநெடு வானுறலால்—சோலைதிகழ்
உமபர்பூ சிக்கருளு மொற்றியூ ரன்வரையில்
அம்புலியு நன்கருட னும.

உரை :—வாலைப் பொருந்துதலால் - சந்திரன வெண்மை யுடைமையாலும், வல்லரவம் பற்றுதலால் - கொடிய ராகு கிரகதத்தால் பற்றப்படுதலாலும், மாலை எடுத்து நெடுவான் உறலால் - சாயங்காலதத்தை யணுகிப் பெரிய ஆகாயத்தில் தோன்றுதலாலும்,

(கருடன்) வாலைப் பொருந்துதலால் - வாலுடைமையாலும், வல்லரவம் பற்றுதலால் - பெரிய பாமபுகளைப் பிடிப்பதாலும், மாலையடுத்து நெடுவான் உறலால் - திருமாலை யணுகி வைகுண்டதத்திற் சோதலாலும், உம்பாபூசிக்க அருளும - விண்ணவா வழிபட அவாகளுகுக கிருபை செய்கின்ற, சோலை திகழ ஒற்றியூான வரையில - பொழில்கள் திகழ்கின்ற திருவொற்றியூர்ப் பெருமானது மலையில், அம்புலியும் நன் கருடனும் சந்திரனும் நலல கருடனுகு ஒப்பாவான, எ - று.

முருகனே வேண்டல்

45. அமலமயிலே யேறி யடியே னிடர்தீர
இம்மைமயிலே வந்தென்னை யீடே ற்றி—மும்மைமயிலே
ஏந்தப்பா வஞ்செய்தே னந்தப்பா வந்தீரக்
கந்தப்பா வந்திப்போ கா.

உரை :—கந்தப்பா - குமரப் பெருமானே !, அம்மையிலே ஏறி - அழகிய மயில்மீதிலே எழுந்தருளி, அடியேன் இடர் தீர இம்மையிலே வந்து - அடியேனுடைய துயர மொழியும்படி இந்தப் பிறவியிலே எனக்குத் தோன்றியருளி, என்னை யீடேற்றி - என்னை நற்கதிக்குச் செலுத்தி, மும்மையிலே எந்தப் பாவஞ் செயதேன் அந்தப் பாவந்தீர - மூப்பிறவியிலே செய்த பாவம் தொலையும்படியாக, வந்து இப்போ கா - இப்பொழுது அருள்செய்து காப்பாற்றுவாயாக !, எ - று.

கல்வி முறை

46. எழுதரிது முன்ன யெழுதியபின் னத்தைப்
பழுதறவா சிப்பரிது பண்பா—முழுதுமதைக்
கற்பரிது நற்பயனைக் காண்பரிது கண்டக்கால்
நிற்பரிது தானந் நிலை.

உரை :—முன்னம் எழுது அரிது - முதலில் கற்பதை யெழுதுவது அருமையான செயலாகும், எழுதிய பின் அத்தைப் பழுதற வாசிப்பது பண்பாம - எழுதிய பிற்பாடு எழுதியதைக் குற்றமில்லாமற் படிப்பது நல்ல முறையாகும, முழுதுமதைக் கற்பரிது - எழுதியதை முற்றிலும் மனப்பாடஞ் செய்தல் அரிய செயலாகும், நற்பயனைக் காண்பரிது - எழுதிய சொல்லின் தக்க பெரிருளறிதல் அதனினும் அரிய செயல், கண்டக்கால் தான் அந்நிலை நிற்பது அரிது - தக்க பொருளை அறிந்தபின் நூல் கூறிய அந்த வொழுக்கத்திலே நிலை பெறுதல் அதனினும் அரிய செயலாகும், எ - று.

விடு கவி

47. ஏறேறு நீரேறு மெண்ணிலுயிர்க் குயிராம்
பாரேறுங் காலாற் படியளக்கும்—வீறேறும்
அண்ணங்கா ணீசனரி யயனுந்தா மன்று
தண்ணுபுகழ் மாரியப்பா சொல்.

உரை: —ஏறேறு - காளை யேறுவது அதாவது காளையினல் சுமக்கப்படுவது அல்லது உழப்படுவது, நீரேறும் - நீர் பாயப்பெறுவது, எண்ணில் உயிர்க்கு உயிராம் - ஆலோசிக்கும்பொழுது உயிர் உடம்பில் நிலை பெறுதற்குத் துணை செய்வதால் உயிர்க்குயிராவது, பாரேறும் காலால் - உலகத்தார் ஏற்றிப் பேசும் அளவு கருவியால், படியளக்கும் - படி படியாக அளக்கப்படுவது, வீறேறும் - தனிச சிறப்புடைய, அண்ணங்காண் - உணவாக இருப்பது, ஈசன அரி அயனும் தாமன்று தண்ணுபுகழ் மாரி - மும்மூர்த்திகளுக்கும் நிவேதனமாக வழங்கப்படுவதால் அவர்களைச் சார்ந்த புகழ் மிகுதியை யுடையது, அப்பா சொல்-அப்பனே ! இது என்னவென்று சொல் (இது சொல் என்பது கருத்து), எ - று.

தலைவன் ஏமாற்றமடைந்து தன்னுட் சொல்லிக்கொண்டது

48. கோடுதிக்குங் கும்பமுலைக் கோதையரைக் கூடவென்றல்
மாடுதின்னி யென்னே மறித்தானே—மாடுதின்னி
தன்பொழுதும் போச்சுதே தன்னைந் தனித்திருந்த
என்பொழுதும் போச்சுதே யென்.

உரை :—இன்று - இன்றைக்கு, கோடுதிக்கும் கும்பமுலைக் கோதையரைக் கூட என்றல் - யானைக் கொம்புபோல் தோன்று சிறந்த தனங்களையுடைய தலைவியைச் சேர்வதற்கு இருளிற் சென்றல், மாடு தின்னி என்னை மறுத்தானே - மாடு தின்னுவதாகிய வைக்கோலினைச் செய்த பாவை வடிவம் உண்மையான ஆள்போல என்னைத் தடுப்பதாகத் தோன்றிற்று, மாடு தின்னி தன் பொழுதும் போசுதே தன்னைத் தனித்திருந்த என் பொழுதும் போசுதே - வைக்கோல் வடிவம் விலகாதிருந்து நின்ற விடத்திலே நிற்கப் பொழுது விடிந்தது அதற்குப் பயந்து தனியே நின்ற என்னுடைய பொழுதும் வீணாகப் போயிற்று, எ - று.

வறுமையைக் கூறல்

49. அத்தற்கு மூன்றுகண் ணாயிரங்க ணிந்திரற்குப்
பத்தா யிரங்கணைந்தன் பச்சைவடம—இத்தையான்
மெள்ள விரித்துடுத்தேன் வெண்ணைநல் லூர்ச்சடையா
எள்ளிருக்க வில்லை யிடம்.

உரை :—வெண்ணெய் நல்லூர் சடையா - திருவெண்ணெய் நல்லூரில் வாழ்கின்ற சடையப்ப வள்ளலே !, அத்தற்கு மூன்று கண் - அப்பனாகிய சிவபெருமானுக்குக் கண்கள் மூன்றுள்ளன, ஆயிரங்கண் இந்திரற்கு - இந்திரனுக்கு ஆயிரங் கண்கள் உள்ளன, எந்தன் பச்சை வடம் பத்தாயிரம் கண் - அழுக்கடைந்து பச்சையான கயிறுபோன்ற என்னுடைய ஆடை பத்தாயிரம் கண் அதாவது பீத்தலுடையது, இத்தையான் மெள்ள விரித்து உடுத்தேன் - இதனை மெதுவாக விரித்துக் கட்டினேன், எள் இருக்க வில்லை இடம் - என்னுடை அதிலே தங்க இடமில்லாதபடி எல்லாங் கிழிசலாக விருந்தது, எ - று.

சிவ தலங்கள் ஆயிரத்தெட்டென்பது

50. மூவர்கவி மூன்றாறு முன்சோழ னேந்நூறு
நாவலர்மா ணிக்கர்தல நாற்பதெட்—டோவறுசீர்
நூதனசி வாலயங்க ணூற்றறுப தும்கூட
ஓதவரு மாயிரத்தெட் டோர்.

உரை:—மூவர்கவி மூந்நூறு - சம்பந்தர் அப்பர் சுந்தரரென்ற மூவர் தேவாரப் பதிகங்கள் பெற்ற திருப்பதிகள் மூந்நூறுகும், முன் சோழன் ஐநூறு - சோழ மன்னர் முன்னதாக அமைத்த தலங்கள் ஐந்நூறுகும், நாவலர் மாணிக்கர் தலம் நாற்பததெட்டு-போறிஞராகிய மாணிக்கவாசக சுவாமிகள் பாடிய திருப்பதிகள் நாற்பத்தெட்டாகும், ஓ அறுசீர் நூதன சிவாலயங்கள் நூற்றறுபதுங்கூட - நீங்காத கீர்த்தியையுடைய புதிய சிவன் கோயில் நூற்றறுபதையுஞ் சேர்த்து, ஆயிரத்தெட்டு ஒத வரும் ஓர்-ஆயிரத்தெட்டு எண்ண முடியுமென்று தெரிவாயாக, எ - று.

புகையிலை வர்ணனை

51. நாலெழுத்துப் பூடு நடுவே நரம்பிருக்கும
காலுந் தலையுங் கடைச்சாதி—மேலாக
ஒட்டி முதலெழுத்து மோதுமூன்று மெழுத்தும்
விட்டார் பரமனுக்கு வீடு

உரை:—நாலெழுத்துப் பூடு-நாலெழுதினாலாகிய ஒரு பூண்டு, நடுவே நரம்பிருக்கும் - அதன் நடுவில் நரம்புபோன்ற சிறு தண்டிருக்கும், காலும் தலையும் கடைசரசாதி - முதலெழுத்தையும் கடைசி யெழுதையுஞ் சேர்ததால் இழிந்த சாதியை யுணர்ததும், மேலாக ஒட்டு முதலெழுத்தும் ஓதும் மூன்று எழுதும் விட்டார் பரமனுக்கு வீடு - எஞ்சி நின்ற பகுதி சிவபெருமான் இருப்பிடத்தை யுணாத்தும, எ - று.

குறிப்பு:—புகையிலை, புலை, கைலை.

கைத்தடியின் குணம்

52. முனியதட்டு முட்டுக்கு முன்னீ ளாக்கும
கனியுதிர்க்குங் கவ்வுநாய் காக்குமம—தனிவழிக்குப்
பத்திரம தாக்கும் பயந்தீர்க்கும பாமபடிக்கும
கைத்தலத்திற் றண்டிருந்தக் கால்.

உரை:—கைத்தலத்தில் தண்டிருந்தக்கால் - கையில் ஒரு கோலானது இருக்குமாயின், முனி யதட்டும் - பிசாசைப் பயமுறுததும், முன் னாக்கும்-முள் கிடந்தால் அதை யெடுத்தது தூரப்போடும், முன்னீர் அளக்கும் - எதிரே இருகின்ற தண்ணீரின் ஆழததை யளந்து காட்டும், கனி யுதிர்க்கும் - மரத்திலிருகும் பழதததைதட்டிக் கீழே உதிரசெயயும், கவ்வு நாய காக்கும்-கடிக்க வருகிற நாயை யோட்டி நம்மைக் காக்கும், தனி வழிக்கு பதநிரமதாக்கும் - தனியே வழிச செல்லுங காலத்திற் பாதுகாப்பான துணையாகும், பயம் தீர்க்கும்-அசசிததை நீக்கும், பாம்பு அடிக்கும் - ....,, எ - று.

குடையின் குணம்

53. பகலோன் றெறுங்கிரணம் பாய்பறவை யெச்சம்
மிகமேலு முதகற்றும விண்ணின்—முகிலதனுல்
பெய்யுமழை யையத்தடுக்கும பேரழகு மாமொருவர்
கையிற்கு டையிருந்தக் கால்.

உரை:—ஒருவர் கையில் குடை யிருந்தக்கால் - ஒருவருடைய கையிற் குடை யிருக்குமானுல் அது, பகலோன் தெறும் கிரணம் - நம்மைத் துன் புறுத்தும் சூரியனுடைய கதிர், பாய் பறவை எசசம் - வானில் பறக் கின்ற பட்சிகளின் எசசமென்னு மிவற்றை, மிக மேல் உறுதபடி அகற் றும் - அதிகமாக நம்முடைய உடம்பில் விழாதபடி விலக்கும், விண்ணின் முகிலதனுல் பெய்யு மழையைத தடுக்கும் - ஆகாயததில் மேகத்தினுல் சொரியப்படும் மழை நீரைத தடுக்கும், பேரழகுமாம் - மிகுந்த அழகு தருவதுமாகும், எ - று.

பாதரட்சையின் குணம்

54 கல்லு முருத்தாது காலின்முட் டையாது
எல்லோமார்த் தாண்டன்சூ டேறுது—தொல்லைவரு
மாலை யிருளில் வழிநடக்கக் கூசாது
காலிற் செருப்பிருந்தக் கால்.

உரை:—காலில் செருப்பு இருந்தக்கால் - ஒருவன் காலில் செருப்புப் போடப்பட்டிருந்தால், கல்லும உருததாது - பாதததை வழியிலுள்ள கல்லு வருத்தப் படிததாது, காலில் முள் தையாது -....., எல்லோமார்த் தாணடன் சூடு ஏறுது - காலி னெல்லைக்குட் பட்ட சூரிய வெப்பத்தைத் தடுக்கும், தொல்லை வருமாலை இருளில் வழி நடக்கக கூசாது - இடைஞ் சல் வரக்கூடிய முன்னிருட்டில் வழி நடப்பதற்குக கால் பின் வாங்காது, எ - று.

தோழி கூற்று

55. வந்தவளைக் கையாது வாய்மூந்தந் தந்தருள்வாய்
தொந்தவளைக் கையாது வாரகையா—சந்தவளை
கோசையிடத் தானே குயிலோசைக் கஞ்சியுளத்
தாசையிடத் தானே யறிந்து.

உரை:—தொந்த வளைகையா - பொருத்தமான சங்கைக் கையி லேந்தியவனே !, துவாரகையா - துவாரகைப் பதிக்குரியவனே !, சந்த வளை கோசை யிடத்தானே - சநதன மரஙகள் சூழ்ந்த கோசைப்பதியில் வீற்றிருப்பவனே !, குயிலோசைகு அஞ்சி - குயிலின் ஒலிக்குப் பயப்

பட்டு, உளத்து ஆசையிடத்தானே அறிந்து - அது உள்ளத்திலாசையை மிகுதியாக உண்டாக்க இதைத் தானறிந்து, வந்தவளே - உன்னை நாடி வந்த பெண்ணே, கையாத - வெறுப்புக்கொள்ளாது, வாய் முத்தம் தந்து அருள்வாய் - திருவாயினல் முத்தம் அளித்தருள்வாயாக !, எ - று.

56. அறிந்ததவிப் பாரை யருள்கோசை யாண்மால்
செறிந்ததவிப் பாரைத நிருத்தும்—நிறந்தழைந்த
வைகுந்த னூர்வாய் மடமானே கொவ்வைநிகர்
வைகுந்த னூர்வாய் மடுத்து.

உரை :—கொவவை நிகர் மடமானே - கொவ்வைப் பழம்போன்ற இதழையுடைய இளையமாதே !, வைகுநதன ஊர்வாய் மடுத்து - தவகு கினற தன்னுடைய ஊரிலுஞ் சோநது, அறிந்து தவிப்பாரை யருள் கோசை யாள்மா - தன் பெருமையை யறிந்து அருள்பெறும் தாகமுடைய வர்க்கு அருளாக கொடுகின்ற கோசைப்பதிகருத் தலைவனிய நிருமால், தெரிந்து உதவிப்பாரைத நிருததும் - அனபுகூரநது உதவிசெயது உல கத்தவரைத் நிருததஞ் செயகின்ற, நிறம தழைநத - வலிமை நிறப்புற் றோங்குதற்கேதுவாகிய வைகுந்தன் ஊர்வாய - வைகுந்ததனை மனதில் தியானிப்பாயாக !, எ - று.

57. மடுக்குஞ் சரமழைக்கும வான்கோசை மாலே
விடுக்குஞ் சரமழைகரு மேலாய்—முடுக்கும
அரங்கனே யஞ்சங்க மடுத்தேனே யாள்வாய்
அரங்கனே யஞ்சங்க மலர்.

உரை :—மடு குஞ்சரம் அழைக்கும் வான் கோசை மாலே - நீர் மடுவில் முதலை வாயிலகப்பட்டுகொண்ட யானை யழைதத கோசைப்பதியில் வீற்றி ருகினற பெருமாளே !, விடுக்கும் சரமழைகரு மேலாய் - தான் செலுதது கின்ற அம்புமாரிகரு மேலாக, முடுகரும் அனகனே - தாகதகின்ற மன் மதனுகரு, அஞ்சு அகம் அடுத்தேனே - பயப்படுகின்ற உடம்பைப் பொருநிய வெனகரு, அனகம் நை - அறிவின்மையை யொழிகின்ற, அம் சகத மலா - அழகிய சகமபோனற பூவைக்கொடுத்து, ஆள்வாய் - ஆட்கொள்வாயாக!, எ - று.

58. அலரோதி மத்தா னறைகோ சைமாலே
அலரோதி மதகா லடிக்கும—அலரோதி
நந்தனகத் தாளுறவே நண்ணினின்ரு யானடைந்தேன்
உந்தனகத தாளுறவே யோர்ந்து.

உரை :—அலா ஓதிமததான் - தாமரைப் பூவில் வீற்றிருக்கின்ற அயன், அறை - போற்றுகின்ற, கோசை மாலே - கோசைப் பதியிலிருக்கும் பெரு

மாளே !, அலர் ஒதி - அற்றுகின்ற சொல்லைச் சொல்லி, மத்தால் அடிக்கும் - தயிர் கடையு மத்தினுலே தாக்கிய, அலர் ஒதி - பூமுடித்த குழலையுடைய ஒரு இடைசசி, நந்தன் அகத்து ஆன்ப - நந்தகோபன் வீட்டில் ஆட்சி செய்யும்படியாக, நண்ணி நின்றாய் - நீ அவனுக்கு அருள்புரிந்து நெருக்கமாய் நின்றாய், ஓர்ந்து - உன் பெருமையை யாராய்சசி செய்து, உந்தன் நகு அத்தாள் - விளங்குகின்ற உன்னுடைய அந்தத் திருவடியைப் பொருந்துவதற்காக, யான் அடைந்தேன் - யான் உன்பால் வந்து சேர்ந்தேன், (நீ எனக்கு அருள் செய்வாயாக!, எ - று

59. ஓர்ந்தண் டலரயாளு முத்தமநற் கோசையனே
ஈர்ந்தண் டலரயாளு மிந்திரையும்—சேர்ந்திலகு
தூயத் திருக்கறுப்பா தோற்றியடி யேனுடைய
மாயத் திருக்கறுப்பாய் வந்து.

உரை :—ஓர்ந்து அண்டரை யாளும் உத்தம - தகுதியறிந்து விண்ணவர்களே யாட்கொள்ளுகின்ற உத்தமனே !, நற் கோசையனே - நல்ல கோசைப் பதியிலுள்ள பெருமானே!, ஈர்ந் தண்ண தரையாளும் இந்திரையும் - மிகுந்த குளிர்சசியுடைய பூமிக்கு அதிபதியாகிய பூதேவியும் சீதேவியும், சோதி இலகு தூய திருக் கறுப்பா - ஒன்றுகூடித் திகழும் புனிதமான அழகிய கரிய நிறமுடையவனே !, தோற்றி வந்து - எழுந்தருளி வந்து, அடியேனுடைய - ....., மாயத் திருக்கு அறுப்பாய - வஞ்சகமான குற்றத்தை யொழித்தருள்வாய, எ - று.

60. சல்லடைக்கண் ணுகித் தளர்ந்தா ளருள்புரிவாய்
மல்லடையுங் கோசைநகர் வைகுந்தா—கல்லடையும்
பாந்தளிரை தேர்காலான் பாணம வருத்துதலால்
மாந்தளிரை தேர்காலாண் மார்பு.

உரை :—மல்லடையுங் கோசைநகர் வைகுந்தா - செழிப்பு நிறைந்த கோசைப்பதியி லுறைகின்ற வைகுந்தப் பெருமாளே!, கல்லடையும் பாந்தள் இரை - மலையினின்று வருகின்ற பாம்பின் உணவாகிய, காலதேரான் - தென்றற் காற்றுகிய தேரினையுடைய மன்மதனது, பாணம் வருத்துதலால் - அம்பு துன்புறுத்துவதினால், மாந்தளிரை தேர் காலாள் - மாந்தளிரை யொத்த பாதமுடையவரது, மார்பு - மாரபானது, சல்லடைக் கண்ணுகித் தளர்ந்தாள் - அரிப்புக கண்கள்போலத துளைக்கப்பட்டு மெலிந்தாள், அருள் புரிவாய் - அருளிச செய்வாயாக !, எ - று.

விடு கவி

61. தூது மதுரை துவரை கடையிடைமுன்
ஓதுகின்ற மூவெழுத்து மொக்குமே—நீதி
செகராஜ சேகரன்வாழ் சிங்கையெனுஞ் செல்வ
நகரா யிழையார் நலை.

உரை:—நீதி செகராச சேகரன் வாழ் - நியாய நெறியில நிற்கும் செக ராச சேகர மன்னன் வாழ்கின்ற, சிங்கை யெனும் செல்வ நகர - சிங்கைப் பதியாகிய வளநிறைந்த ஊரிலே உள்ள, ஆயிழையார் நலை-தெரிந்தெடுத்த நலைகளே யணிந்த பெண்களுடைய பலலானது, தூது மதுரை துவரை கடையிடைமுன் ஓதுகினற மூவெழுதும ஒகுமே - தூது மதுரை துவரை யென்ற சொற்களில் இறுதியிலும நடுவிலும் முதலிலுமுள்ள மூவெழுத்தும் குறித்தால் ஆசசொல் வருமோ அச சொலலைக் காட்டும் பொருளே யொப்பதாகும். (அதாவது முதலுப்போல்வதாகும்), எ - று.

62. காரங்க மேனிக் கருணைக டலான
சீரங்க நாதரே செலவரே—நீரங்கே
அள்ளியுண்ட வெண்ணெயகா வம்மையடிப் பாளென்று
பள்ளிகொண்டாற பேமோ பயம

உரை:—கார அகமேனி - கரு நிறமுடைய உறுப்புகளோடு கூடிய திரு வடிவுதனினராகிய, கருணைக கடலான - கிருபா சமுததிரமாகிய சீரஙக நாதரே - சீரஙகப் பெருமானே!, செல்வரே - ....., நீர அஙகே அள்ளியுண்ட வெணணெயகா - நீர இடையா சேரியில எடுதது தின்ற வெண்ணெயகாக, அமமை அடிப்பாள் என்று - தாயார உம்மை மோதுவா ளென்று இஙகே ஓடிவநது, பள்ளிகொணடால் - படுகையிற் படுதது கொண்டால், பயம் போமோ - அசசம ஒழிது விடுமோ?, எ - று.

63. மேயும பசுவதனை வேங்கை யடித்ததென
ஆயனுரை செய்த தறியாயோ—மாயன்
விழிசுமக்குஞ் சோணகிரி வித்தகா நின்மேல்
பழிசுமக்கு நன்றுகப் பார்.

உரை:—மாயன விழிசுமகும் சோணகிரி வித்தகா - திருமால் தன கணணே மலராக ஆசசரிதததலுல அக கமலமலரைத திருவடியிற சுமககும திருவண்ணாமலையில் வீறறிருகும வீரோதப் பெருமானே! மேவும பசு வதனை வேஙகை யடிதத தென - மேயகினற பசுவதனைப் புலியடித்து விட்டதென்று, ஆயன் உரை செய்தது அறியாயோ - இடையன உனக்குத் தெரிவித்ததை நீ அறிய மாட்டாயா?, நின்மேல் பழி சுமக்கும் நன்றுகப்

பார் - அதைக் கவனியாவிட்டால் பழி யுமக்குண்டாகும் (ஆதலால் கவனிப்பாயாக), எ - று

குறிப்பு :—பசு வென்பதை இளம் பெண்ணைப் பொருள்கொண்டு வேங்கையாகிய பொன்போன்ற பசலை படரப்பெற்று வருந்துவதைத் தோழி உணர்ததவும், அப் பெண்ணைக் கவனியாது இருப்பது பழிகேடு மாகு மென்றவாறு.

64. படைப்பானுங் காப்பானும் பார்க்கி லருணேசன்
படைப்பா னயனென்றல் பாவம—படைக்கிலயன்
ஐந்தலையி லொன்றையர னறுத்த போதிலவன்
தன்றலையைப் பண்ணறியான் ருன்.

உரை:—பார்க்கில் படைப்பானும் காப்பானும் அருணேசன் - ஆராயுமிடத்து உள்ளபடி எல்லாவற்றையும் படைப்பவனும் காப்பவனும் அருணாசலேசுவராகிய சிவபெருமானே யாவர், படைப்பான் அயன் எனறல் பாபம் - சிருட்டி செயபவன் பிரமாவென்று சொல்லுதல் தவறு, அவன் படைக்கில் பிரமா முற்றிலும் படைக்கக் கூடுமானால், ஐந்தலையில் ஒன்றை அரன் அறுத்த போதில் - அவனது ஐந்து தலையில் ஒரு தலையைச சிவபெருமான் கிள்ளியபோது, அவன் தன் தலையைப் பண்ணறியான் தான் - கிள்ளப்பட்ட தன் தலையைப் பழையபடி யுண்டாக்கிக்கொள்ள அவனால் முடியாது போயிற்று, எ - று.

பழநி வேலவர்மீது நிந்தாஸ்துதி

65. நாறுங் கடம்பு நடையுடையும் பாவனையும்
வீறுமுனக் கேன்பழநி வேலவா—ஆறுதனில்
வெட்டுண்டா னுங்களையன் வெண்ணெய்தனை யேதிருடிக்
கட்டுண்டா னுங்களமமான் காண்.

உரை :—பழநி வேலா - பழநி வேலவரே !, நாறும் கடம்பும் - நல்ல வாசனையுடைய கடப்பம் பூமாலையும், நடையுடையும் பாவனையும் - கெம்பீரமான நடையும் பட்டுடையும் அழகிய தோற்றமும், வீறும் - இறுமாப்பும், உனககு ஏன் - ... , (ஏனென்றால்) உங்கள் ஐயன் - உனது தகப்பனார், ஆறுதனில் வெட்டுண்டான் - திருநெல்வேலியில மூவகிலடியில் பால் இடையனபோகிற வழியிலிருந்து அவனால் வெட்டுப்பட்டார், உங்கள் அம்மான் வெண்ணெய்தனையே திருடி - உனது மாமனாகிய திருமால் இடையர் சேரியில வெண்ணெயைத திருடிக் கட்டப்பட்டு அடிப்பட்டார் காண் - அசை, எ - று.

கணிகையர் கூற்று

66. பூங்கோதை மாதர் புனைகின்ற முத்தாரம்
வாங்கோங் குடிக்குவடு வென்றே—நாங்கள்
முலைக்கோ டணிவதெல்லா முக்கண்ணன் சென்னித்
தலைக்கோடு பட்ட தழும்பு.

உரை :—பூங்கோதை மாதர் புனைகின்ற முத்தாரம் - அழகிய கூந்தலையுடைய இல்லறப்பெண்டிர் கண்ணிலிருந்து சிந்திய கண்ணீர்த் தொகுதியாகிய முத்து வடத்தை, குடிக்கு வடுவென்றே வாங்கோம் - எங்கள் குலத்திற்குக் குறைவென்று நாங்கள் வாங்குவதில்லை, (முலைமேல் கண்ணீர் சிந்துவதில்லை) நாங்கள் முலைக்கோடு அணிவதெல்லாம் - நாங்கள் முலைக் குவட்டின்மேல் அல்லது கொம்பின்மேல் அணிந்து கொள்வனவாயும், முக்கண்ணனை சென்னி தலைக்கோடு - சிவபெருமான் தலையில் தரித்த மூன்றாம் பிறைபோன்ற நகக்குறி, பட்ட தழும்பு - பட்டதனால் உண்டாகிய வடுவேயாகும், எ - று

67. இவ்வரையு மாவிக் கிரங்குவோர் தாமில்லை
ஐவ்வரையுங் காததவ ஞதலினால்—மைவரைசெல்
வானிரங்கு முத்துகிருஷ்ண மன்னனது தொண்டை
மானிரங்கு வானென்றான் மான்.

உரை :—மான் - என் மகள் கூறுவான், இவ்வறையும் ஆவிக்கு இரங்குவோர் தாமில்லை - இதுவரை என்னுடைய உயிருக்கு இரக்கம் வைப்பவர்கள் யாரையுங் காணேன், மைவரை செல்வானிரங்கு - கரிய மலைமேல தவழுகின்ற மேகமானது இரங்கிப் பெயயக்கூடிய நாட்டையுடைய, முத்துக்கிருஷ்ண மன்னன் அது தொண்டைமான - நமது தொண்டைமானாகிய முத்துகிருஷ்ண வேந்தன், ஐவரையுங்காத்த அவன் ஆதலினால் - பஞ்ச பாண்டவர்களைக் காப்பாற்றிய கண்ணன் அமிசமாதலினால், இரங்குவான் என்றான் - என்மீது இரக்கம் வைப்பானென்று கூறினாள், எ - று.

68. வாரிதரளஞ் சொரியமா மலையினூ டுருவிச்
சேரனமர் நாளடவுஞ் சேர்ந்ததே—மூரிமதன்
அமபோ டலைகின்ற வாயிழைக்கு நீகுகிரைக்
கொம்போ குலோத்துங்கா கூறு.

உரை :—குலத்துங்கா - குலத்துங்க சோழனே ! அல்லது குலதிற் சிறந்த மன்னனே !, மூரிமதன் அனபோடு அலைகின்ற ஆயிழைக்கு - வலிமையுள்ள மன்மதனது கணையினாலே துன்புறுகின்ற மாதுக்கு, வாரிதரளஞ் சொரிய - கடல்போன்ற கண்ணனது முதத்ப்போன்ற கண்ணீரைத சிந்த, மாமலையின் ஊடுருவி - அக் கண்ணீரானது பெரிய வழம்

பொருந்திய முகத்தின் வழிவாகச்சென்று, சேரன் அமர் நாடு அளவும் சேர்ந்ததே - கொங்கைநாடு வரை யெட்டிற்று, நீ குதிரைக்கொம்போ கூறு - நீ அவளுக்குக் குதிரைக் கொம்புபோல அரியவனு யிருக்கின்றாயோ சொல்வாயாக, எ - று.

குயிலைப் பழித்தல்

69. தேமிருக்கு மாந்தளிரைச் செந்தீ வனமென்றும்
பூமுருக்கை யத்தீப்பொ றியென்றும—நாமிருக்கும்
மாப்படுமே யென்றெண்ணி வாடிமனந் தளர்ந்து
கூப்பிடுமே யந்தக் குயில்.

உரை :—அந்தக்குயில் - அழகிய குயில்கள், தேமிருக்கு மாந்தளிரைச் செந்தீவனமென்றும் - மணத்தோடுகூடிய மாமரத்தின் தளிர்த்தொகுதியை சிவந்த நெருப்புக காடென்றும, பூ முருக்கை - அதன் பக்கத்திலுள்ள முருகம்பூவை, அதுதீப்பொறி யெனறும் - ....., எண்ணி - நினைந்து, நாமிருககு மாப்படுமே என்று - நாம் வசிககின்ற மாமரம் தீயினு லழிபு மென்று பயந்து, வாடி மனம் தளர்ந்து - ..... , கூப்பிடுமே - கூக்குர லிடுகின்றது, எ - று.

இதுவுமது

70. காமனார் வீட்டினிலே கள்ளன் புகுந்தானே
சோமனைப் பாம்பு சூழ்ந்ததோ—மாமரந்தான்
தீப்பட்டு வேகிறதோ தியாகேசர் நன்னாட்டில்
கூப்பிட்ட தேயக் குயில்.

உரை :—தியாகேசர நன்னாட்டில் அக்குயில் கூப்பிட்டதே - தியாக ராசப் பெருமானது செழிதத தேசததில் அநதக குயில்கள் கூப்பாடு போட்டதறகுக காரணம, காமனார விட்டிலே கள்ளன் புகுந்தானே - மன் மதன் இலலதிலே திருடன் பிரவேசித்தானு, சோமனாரைப் பாம்பு சூழ்ந்ததோ - திங்களே யிராகு சுற்றிக் கொண்டதோ; மாமரந்தான் தீப் பட்டு வேகுதோ - அக் குயிலகள் குடியிருக்கும் மாமரமானது நெருப்புப் பட்டு எரிகிறதோ தெரியவில்லை, எ - று.

71. செந்தமிழோ ருய்பவண்பு செய்யவந்த சோழவள்ளல்
சந்ததமுஞ் சேராகா டாழ்குயிலே—வந்தனைசெய்
ஐங்கரனே வேலவனே யனறழற்கண் வந்தவனைச்
சங்கரனே வாசகியைத தானை.

உரை :—தாழ் குழலே - வளர்ந்து தாழ்கின்ற அளகத்தையுடைய தோழியே !, செந்தமிழோரா உய்ய அன்பு செய்யவந்த சோழ வள்ளல் -

செம்மையான தமிழ் வாணர்கள் நன்கு வாழும்படி அவர்களுக்கு ஆதர வளிக்கும்படி தோன்றிய சோழமன்னனாகிய கொடையாளன், சேரா நாள் - என்னைத் தழுவாத நாட்களில், சந்ததமும் - எப்போதும், ஐங் கரனை - ஐந்து கைகளையுடைய யானைமுகக் கடவுளையும், வேலவனை - குமர கடவுளையும், அன்று அழற்கண் வந்தவனை - சிவபெருமானது நெருப் புள்ள நெற்றிக் கண்ணிலிருந்து தோன்றிய வீரபத்திரக் கடவுளையும், சங் கரனை - சிவபெருமானையும், வாசுகியை - வாசுகியாகிய பாம்பையும், வந் தனை செய் - வணங்குவாயாக !, எ - று.

குறிப்பு:—கருப்பு வில்லை முறிக்க ஐங்கரனையும், கடலை யடைக்க வேலனையும், சந்திரனைத் தேய்க்க வீரபத்திரனையும், மன்மதனை யெரிக்க சங்கரனையும், தென்றலை யுண்ண வாசுகியையும் வணங்கு என்பது கருத்து.

சேலத்தை யொரு புலவர் புகழ்ந்தது

72. சேலநக ரேமதுரை சீர்ச்செழிய னேசெழியன்
சாலவதி லுள்ளோரே சங்கத்தார்—சீலமிகும்
கம்பால தேவர் கடம்பவன வாசர்
தமபாரி மீனுட்சித் தாய்.

உரை:—சேலநகரே மதுரை - சேல மென்னும் பட்டினமே மதுரைப் பதி போல்வதாகும், சீர்ச செழியனே செழியன் - அதனையுள்ள புகழுடைய செழியனென்னும் வள்ளலே பாண்டியன் போலாவான், சால அதிலுள் ளோரே சங்கதத்தார் - அதிற் சிறப்பாக விருக்கும் புலவர்களே சங்கப்புலவர்க ளாவர், சீல மிகும் கம்பால தேவர் - ஒழுக்கத்திற் சிறந்த கம்பால தேவ ரென்னும் பெரியவர், கடம்பவன வாசர் - கடம்ப வனத்தில வசிப்பவ ராகிய சோமசுந்தரக் கடவுளுக் கொப்பாவார், தம்பாரி மீனுட்சித தாய் - அவன் தேவி மீனுட்சியம்மைக் கீடானவன், எ - று.

சிவ பக்தியின் பெருமை

73. மங்கையர்கள் மேனிமிசை வைத்திருக்கு மாசைதனைப்
பங்குசெய்து நூற்றிலொரு பங்கெடுதது—கங்கைமதி
வேணிபரன் பாதார விந்தத்தில் வைத்தாக்கால்
காணலாங் காணுக் கதி.

உரை:—மங்கையர்கள் மேனி மிசை வைத்திருக்கும் ஆசைதனை - பெண்களுடைய உடம்பினிடத்திற் கொண்டுள்ள இச்சையை, பங்கு செய்து நூற்றிலொரு பங்கெடுத்து - நூறு பங்கு வைத்து அதிலொரு பங்கை யெடுத்து, கங்கை மதி வேணியரன் பாதார விந்தத்தில வைத்தக் கால் - கங்கையையும் சந்திரனையும் அணிந்த சடை முடியையுடைய பரம

வெனது திருவடித் தாமரையிற் செலுத்திஞல், காணுக்கரி காணலாம்-பிறர் காணமுடியாத வீட்டு நெறியை நாம் பெறலாம், எ - று.

நமச்சிவாயனென்னும் செல்வனே யிகழ்ந்தது

74. புட்டவல் பட்டாணி பொரிதேங் குழலப்பம்
மட்டவிழுந் தோசை வடையுடனே—சட்டமுடன்
ஓயாமற் சோறுகறி யுண்டையுண்டை யாயடைக்கும்
வாயா நமச்சி வாயா.

உரை:—புட்டு அவல் பட்டாணி பொரி தேங்குழல் அப்பம் - பிட்டு அவல் பட்டாணிக டலே நெற்பொரி தேங்குழல் என்னும் பணியாரம் அப்பம், மட்டு அவிழும் தோசை வடையுடனே - வாசனை கமழும் தோசை வடை முதலிய இவற்றோடு கூடி, சட்டமுடன் - முறையாக உணவுகளை ஏற்பாடு செய்துகொண்டு, ஓயாமல் - நீக்குப் போக்கில்லாமல், சோறு கறி-அன்னத்தையும் பலவகைக் கறிகளையும் உண்டை உண்டையா யடைக்கும் - உருட்டி உருட்டிப் போட்டு வயிற்றை நிரப்பும், வாயா - வாயினையுடையவனே!, நமசிவாயா - நீயோ நமசிவாயன், எ - று

75. குச்சிலிய மாதர்குய முங்குவல யததோர்
மெச்சுதமிழ் மாதர்வியன் முலையுமே—சிச்சி
தெனுங்கமட மாதர்சிங் காரக கொங்கைகள்
கலிங்கமென வேசொல் கவி.

உரை:—குசலிலியா மாதா குயமும் - குசலிலியப் பெண்களின் முழு வதம் மூடின தனங்களும், குவலயததோர் மெசசு தமிழ் மாதாவியன் முலையும் - பூவுலனோ பாராட்டும் தமிழ்ப் பெண்களின நன்கு மூடாத பருதத முலையும், சிசசி - வெறுப்பை விலைக்கக்கூடியன வாதலால், தெலுங்க மடமாதர் சிங்காரக கலிங்கக் கொங்கையெனவே - இலைய தெலுங்கப் பெண்டிரது அழகு தெரிபும்படி தூணியிஞல் மூடியும் மூடப் படாமலுமிருகிற தனங்களைப்போல விருக்கும்படியாக, கவி சொல் - பாட்டு இயற்றுவாயாக !, எ - று.

குறிப்பு:—அழகும் பொருளும் முற்றிலும் விளங்காமலும், வெற்றென விளங்கும்படியாகவும் பாடாமல் தெரிந்தும தெரியாமலு மிருக்கும்படியாக வும் பாட்டு கூறவேண்டு மென்பது கருத்து.

76. இங்கிருக்க வென்ரு லெமனெட்டா னிவ்விடமிட்
டங்கிருக்க வென்ரு லயனெட்டான்—எங்குவைத்துப்
பேணுவே னிவ்வுடலைப் பித்தா பிறைசூடும்
தாணுவே சொக்க நாதா.

உரை:—பித்தா பிறை சூடும் தாணுவே சொக்கநாதா - பிதற்றனெண் ணும் பெயர் பெற்றவரே!, சக்கிரனைத் தரித்த சுயம்பு மூர்த்தியே!, சொக்க லிங்கப் பெருமானே!, இவரு இருக்கவென்றால் எமன் ஒட்டான் - இந்த வுலகத்தி லிருக்கலா மென்றெண்ணினால் எமன் அதற்கிடங் கொடுக்கமாட் டான், இவ்விடம் விட்டு அங்கு இருக்கவென்றால் அயன் ஒட்டான் - இந்த வுலகத்தை விட்டு அந்த வுலகத்திற் போய் நிலையாமாக இருக்கலா மென் றால் அயன் மீளவும் பிறப்பிப்பதனால் அங்கிருக்க விடமாட்டான் இவ வுடலை எங்கு வைத்துப் பேணுவேன் -....., எ - று.

77. வெள்ளிமலை பொன்னின்மலை மேவமகிழ் வீடாகி
பிள்ளைகளோ புதற்சொலும பிள்ளைகளாய்—தெள்ளுமுகம
வாடா வடிவுடையாண் மாமனையா ளானக்கால்
ஆடாரோ வொற்றியப்ப னார்.

உரை :—வெள்ளி மலை பொன்னின்மலை மேவ மகிழ வீடாகி - கையிலை மலையும் மேருமலையும் விரும்பி மகிழவோடு தங்கும்படியான இல்லங்களாக வும், பிள்ளைகளோ புதற்சொலும் பிள்ளைகளாய் - புதல்வர்களோ தனக்கு அறிவுரை கூறக்கூடிய சிறந்த புதல்வர்களாகவும், தெள்ளு முகம் வாடா வடிவுடையாள் மா மனையாள் ஆனக்கால் - தெளிவான திருமுகம் வாடப் பெறுத அழகுடைய உமையம்மை பெரிய தேவியாகவும் அமைந் தால், ஒற்றி அப்பனார் ஆடாரோ - திருவொற்றியூர்ப் பெருமானுடைய தர் தையார் நடனஞ் செய்ய மாட்டாரா ?, எ - று.

உமாபதி சிவத்துக்கு அம்பலவாணர் எழுதிய திருமுகம்

78. அடியார்க் கெளியன் சிற்றம்பலவன் கொற்றங்
குடியார்க் கெழுதியகைச் சீட்டுப்—படியின்மிசைப்
பெற்றான் சாமபாணுக்குப் பேதமறத் தீக்கைசெய்து
முத்தி கொடுக்க முறை.

உரை:—அடியார்க்கு எளியன் சிற்றம்பலவன் - அன்பர்களுக்கு எளிதில அருள் புரிந்த பெரியோனான ஞானசபைப் பெருமான், கொற்றம் குடியார்க்கு எழுதிய கைச்சீட்டு - கொற்றவன் குடியிலிருக்கும் உமாபதி சிவாசாரியாருக்குச் சிறு சீட்டு விவரம் யாதெனில், படியின் மிசை - இவ்வுலகினில், பெற்றான் சாம்பாணுக்கு - பெற்றான் சாமபானென்னும பறையனுக்கு, பேதமறத் தீக்கை செய்து - வித்தியாச மில்லாத ஞான தீட்சையைச் செய்வித்து, முத்திகொடுக்க முறை - வீடளித்தல் பொருத்த மாகும், எ - று.

79. பரம ரகசியத்தைப் பாழான வாயால்
இரவுபக லெந்நே மின்றிக்—குரனெரியக்
கூப்பிட்டுங் காணுமோ கோலமட நெஞ்சேமால்
பூப்பிட்டுங் காணாப் பொருள்.

உரை:—கோலமட நெஞ்சே - கொண்டதே பேரற்றும் மூட மனமே!, மால் பூப்பிட்டும் காணாப்பொருள் - திருமால் பூமியைப் பிளந்துதோய்க் காண முடியாத பரம்பொருளாகிய, பரமரகசியத்தை - மிக அந்தரங்கமான கடவுளே பாழான வாயால் - வீண் வாயால், இரவு பகல் எந்நேரமும் இன்றி - இரவு பகலென்ற காலவரையரை யில்லாமல், குரல்கெரியக் கூப் பிட்டுங் காணுமோ - தொண்டை கெரியும்படியாகக் கதறினதினால் காண முடியுமா !, எ - று.

கடலொடு கூறல்

80. காந்தனுக் கென்றன் கொடியகாம விகாரமெலாம
போந்தறிவித் தாலுனக்குப் புண்ணியமாம—சேர்ந்தோடும
தேளிபட வாடுந்திரைக் கடலேமண் மதன்கை
வாளிபட வாடு மனம்.

உரை:—சேர்ந்தோடும் தேளிபட ஆடும் திரைக்கடலே - கூட்டங கூட்டமாய்ச செலகின்ற தேளி மீன்கள் கரையிற பொருந்தும்படி அசை யும் அலைகளையுடைய சமுதாரமே!, மன்மதன் கை வாளிபட மனம் வாடும்- காமன கைகளை பட்டு நெஞ்சந் தளர்கின்றது, காந்தனுக்கு எனதின் கொடிய காம விகாரமெலாம - என்னுடைய நாயகனுக்கு என்னுடைய பொல்லாத இசசை வேறு பாடுகளே யெல்லாம், போந்து அறிவிததால் உனக்குப் புணணியமாம் - நீ போய்த தெரிவிததால் உனகு நன்மை யுணடாகும், எ - று.

81. கம்பனென் றுங் குமபனென் றுங் காளியொட்டக் கூத்தனென்
குமபமுனி யெனறுமபேர் கொள்வாரே—அமபுவியில் [றும
மனனுவலர் புடைசூழ் வாழ்குடந்தை மாரியப்பன்
அந்நாளி லேபிறந்த கால்.

உரை:—அம்புவியில் மன் நாவலர் புடை சூழ் வாழ் குடந்தை மாரியப் பன் - அழகிய பூவுலகில் நிலையான புகழுடைய கல்விமானகள் பகுதிற் சூழ்ந்திருகப்பெற்ற குமப கோணதால் வாழுகினற மாரியப்ப னென் னும புலவன, அநாளிலே இருநதக்கால - பெரிய புலவர்கள் வாழ்ந்த காலதில் வாழ்ந்திருநதால் கமபனென்றும் கும்பனென்றும் காளி யொட் டக் கூதனென்றும் கும்ப முனி யென்றும் போ கொள்வாரே - கம்பன்

கும்பன் காளி முத்து ஒட்டக்கூத்தன் அசத்தியரென்ற பெரும் புலவர்கள் கோத்தி யுடையவராக மாட்டார், எ - று.

82. மெய்ச்சரசமாகவிளை யாடும்வேளையிலே
கைச்சரசமென்றதல்லாற் கைச்சரசமென்றேனே
அச்சனகியார்மீதி லாசைகொண்டராவணனைத்
தச்சுருவவாளிதொட்ட தாமோதரேந்திரனே.

உரை :—அச சனகியார் மீதில ஆசைகொண்ட ராவணனை - அந்த சீதா பிராட்டியாரிடத்தில் தவறான இசசைகொண்ட இராவணன் உடம்பில் தசசுருவ - தைதது ஊடுருவும்படியாக, வாளி தொட்ட - கணை செலுதிய, தாமோதரேந்திரனே - தாமோதரப் பெருஞ் செல்வனே !, மெய்ச சரசமாக விளையாடும் வேளையிலே - உடம்பு படும்படியாக விளையாடுஞ் சமயத்தில், கைச்சரசம் என்றதல்லால் - இது கைக்கலப்பென்று கூறினேனே அன்றி, கைச்சரசம் என்றேனை - வெறுப்புச சுவைக்குரிய விளையாட்டு என்றேனை, எ - று.

83. மீன்பார்த்துவிண்பார்த்து வேளைபுமபார்த்தாள்வரவு
தான்பார்த்தெனைப்போற் சரிபார்க்கும்வெண்குருகே
மான்பார்த்துவாளிதொட்ட மால்சிவநாராயணனை
நான்பார்த்துமாதர்நகை பார்த்திருந்தேனே.

உரை :—மீன் பாரதது - குளததிலுள்ள மீனையும் கவவுவதற்கு நேரம் பாரதது, விண் பாரதது - ஆகாயதததைபு நோககி, வேளையும் பாரதது - இன்னபொழுது இன்ன செய்யலாமென்று கருதி, ஆள் வரவுதான் பாரதது - மனிதா வருவதையும் நோக்கி, எனைப்போல சரிபாரக்கும் வெண் குருகே - எனைப்போல் காரியத்தை முடிகக கருதும் வெணணிற முடைய நாரையே !, மான் பார்தது வாளி தொட்டமால் சிவ நாராயணனை - மாய மானைக் குறி வைத்து அம்பு செலுதிய திருமாலமிசமான சிவ நாராயணனென்னும் வள்ளலை, நான் பார்தது - நானடையகருதி (அடையாமையால்) மாதர் நகை பார்த்திருந்தேனே - பிறபெண்கள் என்னைப்பார்த்துச சிரிப்பதை நான் பார்த்திருக்க லானேன், எ - று.

84. முல்லைமுல்லையாய்த்தொடுத்து மோகமதனெய்யவந்த
வில்லைவில்லையாய்நறுக்கி மெல்லமெல்லத்தாராயோ
இல்லைஇல்லையென்றுசொல்லி யேற்கவருமபாவலர்கள்
தொல்லைதவிர்க்குங்களத்தைச் சுப்பிரமண்யபூபதியே.

உரை :—இல்லை இல்லை என்று சொல்லி ஏற்க வரும் பாவலர்கள் - தஙகள் வறுமையை மிகுத்துக்கூறிப் பரிசு பெற வரும் கவிஞர்களுடைய, தொல்லை தவிர்க்கும் களத்தைச சுப்பிரமணிய பூபதியே - துயரததை

யொழிக்கும் திருக்களந்தையில் வாழ்கின்ற சுப்பிரமணிய மன்னனே !, முல்லை முல்லையாய்த் தொடுத்து மோக மதன் எய்ய வந்த விலலை - முல்லைப்பூவைத தன் வெற்றிக் கறி குறியாக அம்பாகச செலுத்துவதற்கு மயல் விளைக்கும் மன்மதன் உபயோகிக்குங் கரும்பு வில்லினை வில்லையாய் நறுக்கி - வட்டத் துணடுகளாக நறுக்கி, மெல்ல - வாயிலிட்டுச் சுவைக்கும் படியாக, மெல்லத தாராயோ - மெதுவாகக் கொடுக்க மாட்டாயா, எ - று.

85. ஆயிரங்கண்ணுகமத னமபுமேலம்புவிட
வீயிரங்குசெந்தேனி ருலினங்கமானேனே
தாயிரங்கவேணபெண்க டாமிரங்கவாணிரங்க
வேயிரங்கும்வாயா விசயரகுநாயகனே.

உரை :—ஆனிரங்க - பசுகள் மன முருகும்படியாக, வேயிரங்கும் வாயா - வேய்ங குழலை யூதும் வாயை யுடையவனே !, விசைய ரகுநாய கனே - விசைய ரகுநாத வள்ளலே !, தாயிரங்க - என் தாய் மனம் வருந் தும்படியாகவும், வேண பெண்கள் தாமிரங்க - மிகுந்த தோழிகள் வருந் தும்படியாகவும், மதன் அம்புமேல் அம்புவிட - மன்மதன் கணைகளைத் தொடர்ச்சியாக மிகவுஞ் செலுத்துவதால், அங்கம் - உடம்பானது, ஆயி ரங் கணணுக - ஆயிரந் துவார முடையதாகவும், ஈ இரங்கு செந்தேன இருலினங்க மானேனே - தேனீக்கள் ஒலிக்கின்ற செந்தேன் கூடுபோல வும ஆனேன், எ - று.

86. கன்னலெனுஞ்சிறுகுருவி ககனமழைக்காற்றுமல்
மின்னலெனுமபுழுவெடுதது விளக்கேற்றுங்காகாலம
மண்ணவனுர்தென்மதுரை மாவலிவாணனைப்பிரிந்து
கென்னபிழைப்பென்னவிருப் பென்னநலகப்பினனுமே.

உரை :—கன்னலெனும் சிறு குருவி - சிறு தானக்கணங் குருவி, ககன மழைககு ஆற்றுமல் - வானில் நிறைந்த மேகஙகள் பொழியும் மழைக் காலதது இருளைப் பொறுக்க முடியாமல், மின்னலெனும் புழுவெடுத்து - மின்மினிப் பூசசியைத் தானக்கொண்டு போய, விளகேற்றுங காற் காலம - தனது கூட்டில் தீபமாக வைத்தற்குரிய மழைக காலததில், மன்ன வனும் தென்மதிரை மாவலிவாணனைப் பிரிந்து - அழகிய மதுரைககு அரசனுகிய மாவலி வாணனென்னும் வள்ளலை விட்டுப் பிரிந்திருத்தல், இகுகு என்ன பிழைப்பு - இவவிடத்தில் என்ன வாழ்வாகும், என்ன விருப்பு - எதை யாம் விரும்பகூடும், இன்னமுமே என்ன நலைப்பு - இன்னும் எதனைப் பார்த்து நாம் களித்தல் கூடும், எ - று.

தலைவி கூற்று

87. கைத்தலத்தழற்கணிச்சி வைத்திடப்புறத்தொருத்தி
கட்கடைப்படைக்கிரைத்த நிறலோராம்
முத்தலைப்படைக்கரத் தெமத்தர்சிற்சபைக்குணிற்கு
முக்கணக்கருக்கொருத்தர் மொழியாரோ
நித்திலத்திணைப்பதித்த கச்சறுத்தடிக்கனத்து
நிற்குமற்புதத்தனத்தி னிடையேவேள்
அத்திரத்திணைதொடுத்து விட்டுநெட்டயிற்கணத்த
லக்கணுற்றிடச்செய்விக்கு மதுதானே.

உரை :—கைத்தலத்து அழல் கணிசசி வைதது - திருக்கரதினிட மாகத் தீயையும் மழுவையும் வைத்துக்கொண்டு, இடப்புறதது ஒருததி கட் கடைப்படைக்கிரைதத நிறலோராம் - இடப்பாகதது லிருக்கின்ற உமை யம்மையின் கடைகண்ணுகிய ஆயுதத்திற்குத தோற்ற வலிமை யுடையவ ராகிய, முத்தலைப் படைகரத்து எமது அததர் - மூன்று கிளையுடைய சூலததைக கையிலேந்திய எமது தலைவரும், சிற்சபைக்குள் முக்கண் ணுகருக்கு - சிற்றம்பலத்தினின்று நடமாடும் மூன்று கண்ணையுடைய சோதி வடிவானவருமாகிய பெருமானுக்கு, நித்திலத்திணைப் பதிதத - முதது மாலைகள பதியப்பெற்று, கச்சறுதது - விம்மி வாரினைக கிழிததுகொண்டு, அடிக்கனதது - புடை பரந்து, நிறகும் அற்புதத் தனத்தினிடையே - நிலைபெறுகின்ற எனது அதிசயமான முலைகளுக் கிடையில, வேள அத்தி ரத்தினைத் தொடுதது விட்டு - மன்மதன் அமபுகளைச செலுததிப் பாயச செய்து, நெட்டயில் கணதது அலக்கணுற்றிடச் செய்விக்கும அதுதானே - அந்த நீண்ட அம்புக் கூட்டதினால தனபப்படுமபடி செய்கின்ற அச செயலை, ஒருவர் மொழியாரோ - ஒருவரொடுதது சொல்ல மாட்டாரா ?; எ - று.

பால் விற்கும் இடைச்சியரை நோக்கி யொருவன் கூறியது

88. கருப்பாலேபணையடித்துப் பனிநீர்தேக்கிக்
கதலிபலாக்கனியதனால் வரம்புகட்டும்
திருப்பாலைவாழீசர் பவனியாடுந்
தெருவிற்பால்விலைபகர்சிற் றிடைச்சியாரே
அருட்பாலோபொருட்பாலோ காமப்பாலோ
ஆழிதனைக்கடைந்தெடுத்த வமுதப்பாலோ
இருப்பாலேமனமபடைத்தீர் நில்லீர்செல்லீர்
ஏந்தப்பால்விற்கவந்தீரியம்புவீரே.

உரை :—கருப்பாலே பணையடித்து - கரும்பைக்கொண்டு வயலே யடித்துப் பண்படுத்தி, பனி நீர் தேக்கி - பனி நீரை வயல் நிரம்ப நிற்கும்படியாகச் செய்து, கதலி பலாக் கனியதனால் வரம்பு கட்டும் - வாழைப்பழம் பலாப்பழம் முதலியவற்றின் தொகுதிகளைக்கொண்டு வயல்களுக்கு எல்லை யமைகின்ற, திருப்பாலை வாழீசர் பவனியாடும் தெருவில் - திருப்பாலையில் வீற்றிருக்கின்ற பரமசிவன் திருவுலாப் போகின்ற வீதியில், பால வீலை பகர் சிற்றிடைசியாரே - பாலின் விலை கூறுகின்ற நுண்ணிய இடையையுடைய இடைக்குல மகளிரே !, அருட்பாலோ பொருட்பாலோ காமப்பாலோ - அறம் பொருள் இன்பமென்னும் மூன்றின் பகுதிகளாகிய பால்களோ, ஆழிதனைக் கடைந்தெடுத்த அமுதப்பாலோ - திருப்பாற் கடலைக் கடைந்தெடுத்த அமுதமாகிய பாலையோ, எந்தப்பால் விற்க வந்தீர் - எவ்வகையான பாலை விற்பதற்கு நீங்கள் வந்தீர்கள், இருப்பாலை மனம் படைத்தீர் - இரும்புபோல வல் நெஞ்சுடையவர்களே !, நல்லீர் - நல்லவர்களே !, செல்லீர் - போகாமல் நின்று, இயம்புவீரே - கூறுவீர்களாக !, எ - று.

வறுமை கூறல்

89. பூப்பார்த்துப்புகழ் பார்த்துப் பொருள்பார்த்துக்
கவிதைசொல்லும புலவோர்தங்கள்
நாப்பார்த்துக்கொடை கொடுக்கநல்லதம்பி
நற்சொக்க நாதாவென்னல்
காப்பாற்றமுடியாது கையிலொருகாசுமில்லை
கடனென்ன சூலும
பார்ப்பாத்திசோறிடுவா ளிருந்தாலுமுறங்கமதப்
பயலொட் டானே.

உரை :—பூப்பார்த்துப் புகழ் பார்த்துப் பொருள் பார்த்து - நிலத்தின் வரவு கருதியும் புகழ் மிகுதியாக வுண்டாவது கருதியும் தனனிடத்திலுள்ள பொருளின் அளவை நோக்கியும், கவிதை சொல்லும் புலவோர் தங்கள் நாப்பாராதது - பாவலர்களின் சொல் வன்மையினை யளவாது பாராத்தும், கொடை கொடுக்கும் நல்லதம்பி தந்த சொக்கநாதா - பரிசளிக்கின்ற நல்ல தம்பி யென்பவரின் புதல்வராகிய சொக்கநாதரே !, எனனால் காப்பாற்ற முடியாது - என்னால் என்னைச சௌகரியமாகப் பாதுகாத்துக்கொள்ள முடியாது, கையிலொரு காசுமில்லை - ....., கடன் எனசூலும் - கடனுக வேண்டுமானாலும், பாரப்பாத்தி சோறிடுவாள் - சோறமைசசாலை வைத்திருக்கிற பிராமணத்தி யன்னமிடக்கூடும், இருந்தாலும் மதப்பயல் உறங்க ஒட்டானே - அது அவளாலுனனும் மன்மதச சிறுவன் என்னைச சுமமா இருக்கவிடமாட்டான், எ - று.

உள்ளன்பொடு இட்ட கூழின் சிறப்பை யுரைத்தது

90. கெட்டசாறுதவிடுகஞ்சி கிருமியுண்டமாவறைக்
கீரைவேர்தெளிந்தமோர் முறிந்தபாகுகிண்டிமா
இட்டசோறுகொழியலுப்பி டாதபுற்கையாயினும்
எங்குமன்பதாகநுங்க ளின்பமாயிருக்குமே
பட்டபாகுபசுவினெய் பருப்புமுக்கனிக்குழாம்
பாளிதங்கடாளிதங்கள் பண்ணியாரவகையுடன்
அட்டபாற்குழம்புகன்ன லமுதமோடுமுதவினும்
அன்பினோடளித்திடாத வசனமென்னவசனமே.

உரை:—கெட்டசாறு - சுவை கெட்டரசமும், தவிடு கஞ்சி - தவிடும் கஞ்சியும், கிருமி யுண்டமா - புழுப்பிடித்த பொரிமாவும், அறைக்கீரை வேர் - அறைக்கீரை வேரும், தெளிந்த மோர் - நீர் மோரும், முறிந்த பாகு - பதங் கெட்ட கருப்புக் கட்டிப்பாகும், மா கிண்டி இட்ட கொழியல் சோறு-வரகுமாவிட்டுக் கலந்த கொழியலரிசிச சோறும், உப்பிடாத புற்கை யாயினும்-உப்பில்லாத கூழுமாகிய இக் கேவல வுணவுகளாயினும், எங்கும் அன்பதாக - எவ்விடத்திலும் அன்போடுகூடி யிடப்படுமாஞல், நுங்க இன்பமா யிருக்குமே - உண்ணுதற்கு அவை யினியனவா யிருக்கும், பட்ட பாகு - நன்ரு யமைந்த வெல்லப் பாகினையும, பசுவின் நெய் பருப்பு மூக் கனிக குழாம் - பசுநெய் பருப்பு வாழை பலா மாவென்னும் மூன்று வகைப் பழத்தொகுதிகள், பாளிதம் பாலன்ணம், தாளிதங்கள் - தாளித்த உணவு வகைகள், பண்ணியார வகையுடன் - இன்பண்ட வகைகள் என்ப வற்றினையும், அட்ட பால் குழம்பு - நன்ருகச சமைத்த பாற்குழம்பு, கன்னல் - கற்கண்டு, அமுதமோடு உதவினும் - பாயச முதலியவற்றோடு உணவு அளித்தாலும், அன்பினோடு அளிதத்திடாத அசனமென்ன அச னமே - அன்போடு போடாத சோறு நல்ல வுணவாகாது, எ - று.

சிறப்புச் சிவத்தலங்கள்

91. தங்கவடகயிலாய முதலாமைந்து
தலமுவமொன்றுதொண்டைவள நாட்டெண்ணென்கு
தங்குசோழநாட்டிருபத் திரண்டுபொன்னித
தலநூறமுத்தொண்ணூறு மலைநாட்டொன்று
கொங்குகழுசிங்களத்தி லிரண்டுவையகக்
குளிர்தமிழ்நாட் டிரேழுமேலாஞ்சூலச்
செங்கையார்தலமிருநூற் றெழுபானிலில்
தென்பாகங்கயிலாயந் திருக்குற்ருலம்.

உரை :—துங்கவட கயிலாயம் முதலாம் ஐந்து - உயர்ந்த வடதிசை கயிலாய முதலிய ஐந்து தலங்களும், துளுவம் ஒன்று - துளுவ நாட்டிலுள்ள தலமொன்றும், தொண்டை வளநாட்டு எண்ணான்கு - செழிப்புள்ள தொண்டை நாட்டுத் தலங்கள் முப்பத்திரண்டும், தங்கு கடு நாட்டு இருபத்திரண்டு - கடு நாட்டிலுள்ள தலங்கள் இருபத்திரண்டும், பொன்னித் தலம் நூற்றுத் தொண்ணூறும் - காவிரிபாயும் சோழ நாட்டிலுள்ள தலங்கள் நூற்றுத் தொண்ணூறும், மலைநாட்டு ஒன்று - மலையாள நாட்டுத் தலமொன்றும், கொங்கு ஏழு - கொங்கு நாட்டுத் தலமேழும், சிங்களத்து இரண்டு - ஈழ நாட்டுத்தல மிரண்டும், வையைக்குளிர் தமிழ் நாட்டு ஈரேழும் - வையை நதி பாய்கின்ற தமிழ் நாடாகிய பதினான்கு மாக, மேலாஞ் சூலச் செங்கையார் தலமிரு நூற்றெழுபானூறில் - சூலந்தரித்த சிவந்த கையையுடைய சிவபெருமானது உயர்ந்த தலங்களாகிய இருநூற் றெழுபத்து நாலினில், தென் பாகத கயிலாயம் திருக்குற்றாலம் - தென் பக்கத்திற் கயிலாயம் திருக்குற்றால மாகும், எ - று.

92. ஒதுமைந்திலொன்றிலைந்தி லொன்றுமன்னவன்பிதா
ஊர்திதொட்டோரேழின்மீதி லுற்றசாபிருபனர்
தாதுகொண்டகோபிதாரன் தமபிதமபிதம்பிசேய்
தண்குடைப்பிணைவன்மற் றலைக்கிரீடதுவசனர்
காதனண்பன்றந்தைபாகன் பின்னவன்பகைச்சுமைக்
கலியெடுத்தகையரையர் கதிபெறத்தவஞ்செய்தோன்
தீதிருதைகொண்டுவந்த சிலேவதிந்தபதியினன்
சிறமறிந்தவன்கொள்பாரி சேரிலாலுறைந்ததே.

உரை :—ஓதும் ஐந்தில் ஒன்று - பேசப்படுகின்ற ஐம்பூதங்களில் ஒன்றாகிய நிலம், ஐந்தில் ஒன்று - நிலத்தின் பகுதியாகிய ஐந்திணையுள் ஒன்று குறிஞ்சி நிலம், மன்னவன் - அந்நிலத்திற்குத் தலைவன் முருகன், அவன் பிதா - அவனுடைய தகப்பனாகிய பரமசிவன், ஊர்தி - அவனுடைய வாகனம் இடபம், தொட்டோர் ஏழின மீதிலுறற - அதிலிருந்து ஏழாவதாகிய விருசசிகத்திற் கடித்தாற்போலுள்ள, சாப நிருபனர் - தனுசுக்குத் தலைவனாகிய பரசுராமன், தாதுகொண்ட கோபிதாரன் தம்பி - வாசனைத் தூள் கலந்த சந்தனத்தாலணிந்த தசரதராமன் அவன் தம்பி, தம்பி தம்பி சேய் - அவன் தம்பியாகிய பலராமன் தமபியாகிய கண்ணனின் புதல்வனாகிய மன்மதன், தண் குடை - அவனுடைய குளிர்ந்த குடையானது திங்கள், பின் ஐவன் - திங்களுக்குப்பின் ஐந்தாவதாகட் கிரகமாவது சனி, மற்று அலைக் கிரீடம் - அவன தலையிலுள்ள கிரீடம் பாம்பு, துவசனர்-பாம்பைக் கொடியாக வுடையவன் துரியோதனன், காதல் நண்பன் - அவனுடைய விருப்ப மிகக் கிருஷ்ணன் கர்ணன், தந்தை - அவன் தந்தை சூரியன், பாகன் - சூரியனது தேர்ப்பாகன் அருணன், பின்னவன் - அவன் தம்பி

கருடன், பகை - அவனுக்கு விரோதி ஆதிசேடன், சுமை - ஆதிசேடனுடைய பாரம் பூமி, கலை - பூமியின் ஆடை கடல, எடுத்த கையர் - அக கடலை யெடுத்துக்குடித்த கையையுடையவர அகத்தியர, ஐயர் - அவர தகப்பனர பிரமர, கதிபெறத் தவஞ்செயதோன் - பிரம பதவியை யடைவதற்குத தவஞ் செயதவன் அநுமான், தீதில்தாதை - அவனுடைய குற்றமற்ற தகப்பனர் வாயுபகவான், அவன் கொண்டுவந்த சிலை - அவன் மோதியடித்துப் பிடுங்கிக்கொண்டுவந்த கல்லு மேருவின் சிகரம், வதிந்த பதியினன் - சிகரங்கள் போய்த தங்கிய விடததை யுடையவன் இராவணன், சிரம் அரிந்தவன - அவன் தலையை வெட்டியவன் இராமனுடைய திருமால், கொள் பாரி - அவன் மணந்த மனைவி இலக்குமி, சோ இல் - அவள் போய்ச சோகின்ற வீடு தாமரை, ஆல உறைத்தலே - அதத தாமரைப்பூ ஆலமரத்தின் மேலிருந்தது, எ - று.

93. தொடுத்தமுததமிழுக் ககத்தியனெனவே
தோன்றியபுவனச்சே றையர்கோன்
சொலக்கணப்புலவ னிலக்கணக்கவியைத
துதித்தகங்களித்திடும களியேம்
மடத்தினிற்புகுந்து மதுத்திறந்தவனர்
வடித்தகட் குடித்துநின்றவனர்
வறுத்தசுட்கடித்துக் குதட்டுகின்றவனர்
மயக்கியுட் டியக்கமுற்றவனர்
கடுக்கனைமிடற்றி லொடுக்கிபிட்டவனே
கையிலே சிலமணையிட்டவனே
கனதநூற்கொடியை காவிலிட்டவனே
கண்ணிலே குழையையிட்டவனே
முடுக்கியவயிற்றி லாழியிட்டவனே
முகததிரு பதக்கமிட்டவனே
முனைத்ததோளிருபான் சதங்கையிட்டவனே
முழுப்புரட் டவர்க்கலாதிலையே.

உரை :—தொடுதத முததமிழுக்கு அகத்தியன் எனவே - பாமாலையாகத் தொடுகப்பெற்ற இயல இசை நாடக மென்னும் முததமிழுகும் அகததியரென்று சொல்லும்படியாக, தோன்றிய புவனச சேறையர் கோன் - உலகத்திலவதரித்த சேற்றூர மன்னன், சொல் அகணப்புலவன் - சொற்களின் தொகுதியை நன்ரக ஆராய்ந்த கல்வீமான், இலக்கணக் கவியை - அவனது பாட்டு இயல்பு நிறைந்த பாடல்களை, துதித்து அகம் களித்திடும் களியேம் - போற்றி மனமகிழ்ச்சி யடைகின்ற களியர் நாஙகள், மடத்தினில் புகுந்து மதுததிறந்தவன் யார் - எஙகள் மடத்திலே புகுந்து

எங்கள் கட் குடத்தைத் திறந்தவன் யார், வடித்த கள் குடித்து நின்றவன் யார் - தயார் செய்த மதுவைக் குடித்தவன் யார், வறுத்த சுள் கடித்துக் குதட்டுகின்றவன் யார் - மதுபானத்திற்குத் துணையாகவுள்ள கருவாட்டு வறுவலைத் தின்று மெல்லுகின்றவன் யார், மயக்கியுந் தியக்கமுற்றவனுர் - கள்ளினாலே மயக்கமடைந்து திட்டுமுட்டுப்படுகின்றவன் யார், கடுக்கனை மிடற்றில் ஒடுக்கி இட்டவனே - ஆசாரிக்கின்ற விடத்தைக் கண்டத்தில் அடக்கிவிட்ட பரமசிவனே, கையிலே சிலம்பை இட்டவனே - கையிலே மலையை யெடுத்துப் பிடித்த கோபாலனே, கனத்த நூல் கொடியை காவிலிட்டவனே - மேன்மையான கல்விப் பெண்ணுகிய கலைமகளை நாவில் வைத்துக்கொண்ட பிரமனே, கண்ணிலே குழையை இட்டவனே - கண்ணிலே காதையுடைய ஆதிசேடனே, முடுகிய வயிற்றிலே ஆழி இட்டவனே - வயிற்றிற் கடலை யடக்கிய அகத்தியனே, முகத்து இருபது அகலம் இட்டவனே - முகத்திலிரு பது கண்களையுடைய இராவணனே, முளைத்த தோள இருபான் சதம் கை இட்டவனே - தோளில் முளைத்த இரண்டாயிரது கைகளையுடைய வாணுசுரனே, முழுப்புரட்டு அவர்களுக்கு அல்லாது இலையே - முழுத்தன்மையான சூழ்ச்சிகள் அவர்களுக்குத் தெரியுமேயல்லாது பிறருக்குத் தெரியாது, எ - று.

94. பொன்முக நோக்கிமின் றன்முக நோக்குமுன் போயினளென்
றுன்னிட வீழ்ந்தனள்கை தொடவுய்ந்தன ளுன்னுடனே
பின்னும புணர்ந்திடமுன் னறிவுற்றிடப் பெற்றபிறப்
பென்னலமென் றனளோகத் தான்மலையீர்ங் கொடியே.

உரை :—ஓரகத்தான் மலை யீருகொடியே - சுவாமிகாதப் பெருமானது மலையிலுள்ள குளிர்ந்த கொடிபோன்ற பெண, பொன் முகம் நோக்கிமின் தன் முகம் நோக்கும் - தலைவனது அழகிய முகத்தைப பாராதுப் பிற்பாடு தனதுடம்பையும் உற்று நோக்குவாள், முன்பு போயினன் என்று உன்னிட வீழ்ந்தனள் - தலைவன் தன்னைவிட்டு முனபாகவே சென்று விட்டானென்று கேட்டவுடன அயர்ந்து கீழே வீழ்ந்தாள், கை தொட உய்ந்தனள் - அவன திரும்பி வந்து கை தொட்டவுடன் உயிர் பிழைத்தவள் போலானுள், உன்னுடனே பின்னும் புணர்ந்திட - உன்னோடு பிற்பாடு கலவியானபோது, முன்னறி வுற்றிடபெறற பிறப்பென்ன நலம் என்றனனே - முனனமே உன்னை யறியும்படியாகப் பிறந்த சென்மம் எவ்வளவு நன்மையானதென்று சொன்னுள், எ - று.

சமுத்திரராசன் கூறியது

95. நீறணிந் திடுபரம னிவனுக் கணிந்துகொள
நிகரில் பிறை யொன் றீந்தனன்
நீலவண் ணன்றனக் கூதவுங் கூடவும்
நிலவுதற் சங்க மோடு

கூறரிய பூமாது தமமையீந் திட்டனன்
கோபதி தனக்கு நிதியும
குளிர்பஞ்ச தருவுமளி நற்காம தேனுங்
கொடுத்தனன் றேவர்கட்கு
மாறுநரை திரைமூப்பு வீவிலை யிலாததோர்
மாவமுத முங்களிகடேர்
மன்னுமசு வனிதேவ ரிருவரையு மீந்தனன்
மாவுலகர் மீதிலன்பு
வீறுபெறவைத் திருக்கின்ற வெனையங்கைகொடு
விறன்முனிவ னுண்டபோது
மிகுகருணை கடலரச னுபகாரி யென்றிருவர்
வில்லா திருந்த தென்னே

உரை :—நீறணிந்திடு பரமசிவனுக் கணிக்துகொள நிகரில் பிறை யொன்று ஈந்தனன் - திருநீறு தரித்த சிவபெருமானுக்குத் திருமுடியிற சூடிக கொள்வதற்காக ஒப்பற்ற சந்திரனை நான் கொடுத்தேன், நீல வண்ணன் தனக்கு ஊதியமும் நிலவுநற் சங்கமோடு - நீல நிறமுடைய திருமாலுக்குத் திருவாயில் வைத்து ஊதுதற்குப் பாஞ்சசன்னிய மெனற சங்கத்தையும், கூடவும் கூறரிய பூமாது தம்மை ஈந்திட்டனன - மனைவியாகக் கூடுதற்குச சொல்லுதற்கு முடியாத அழகுடைய தாமரைப்பூவில வாழும் இலக்குமியையும் கொடுத்தனன், கோபதி தனக்கு நிதியும குளிர்பஞ்சதருவும அளிநற் காமதேனும் கொடுத்தனன் - இந்திரனுக்குச சங்கநிதி பதுமநிதி யென்ற இருநிதிகளையும குளிர்ந்த கற்பகம் பாரிசாதம் சந்தனம் தேவதாரு மந்தாரமென்ற ஐந்து தேவ மரங்களையும் வேண்டியவற்றைக கொடுக்கின்ற காமதேனுவையும் கொடுத்தனன், தேவர்கட்கு மாறு நரை திரை மூப்பு வீவு இவை இலாததோர் மகா அமுதமும் - வேறுபாடான நரை திரை மூப்பு மரணம் இவைகளிலலாமல் செயயவல்ல ஒப்பறற பெரிய அமுதத்தையும், கலைகள் தோ மனனும் அசுவனி தேவா இருவரையும் ஈந்தனன் - மருத்துவக்கலை முதலிய கல்வித துறைகளில தோச்சிபெற்ற அசுவனிதேவரிருவர்களையும் அளித்தேன், மாவுலக மீதில் அன்பு வீறு பெற வைத்திருக்கின்ற எனை - பெரிய உலகத்தார் மீதில் சிறப்பான அன்பு வைத்திருக்கின்ற என்னை, அங்கைகொடு விறல் முனிவன் உண்டபோது - உள்ளங்கையில் உளுந்து அளவாகச செயத நிறமையுடைய அகத்திய முனிவர் பருகினபோது, மிகு கருணை கடலரசன் உபகாரி என்றிருவர் வில்லாது இருந்தது என்னே - மிகுந்த தயையுடைய சமுத்திர மன்னன் பல போகங்கும் உதவி செய்தவனென்று ஒருவரும் அந்த முனிவனிடஞ் சொல்லாதிருந்தது எதனால், எ - று.

தலைவி கூற்று

96. வல்லெனச் சொன்முலை யில்லெனச் சொல்லிடை
வல்லியே யெனது வாய்மைகேள்
வளமிகுத்திடு விரிஞ்சைவாழ் கடவுள்
வருமுன் மன்மதன் பகைத்தெனைக்
கொல்லவே தனத் தேரிலேறி முன்
குறுகினை னவன் றேரினைக்
குலவு மங்குலுண் டுவகை யானபின்
கூறும் யானமிசை வந்தனன்
சொல்லு நூலிடை கண்டவ் வானையைத்
தோற் றிரிந்திட வென்றபின்
தூரமாகவே பூவிருந் தென்மேற்
சூத பாணமொன் றேவினை
ஒல்லை வந்தமதி முகமுனக்கணை
ஒளியிழக் திகழ் குயியவே
ஓவியத்தைதிக ரொத்த நந்துணைவ
ணுருவு கண்டுசென் றனரோ.

உரை :—வல்லெனச சொல் முலை இல்லெனச் சொல் இடை வல்லியே - சொகுகட்டான் காயென்று சொல்லக்கூடிய தனங்களையும் இல்லை யென்று சொல்லகூடிய நுட்பமான இடையையுமுடைய கொடிபோன்ற பெணணே !, எனது வாய்மை கேள் - யான் சொல்லுகின்ற உண்மையைக் கேட்பாயாக !, வள மிகுதிடு விரிஞ்சை வாழ் கடவுள் வருமுன் - செழிப்பு மிகுந்த விரிஞ்சைப்பதியில் வீற்றிருகும் சிவபெருமான் எனகுத தலைவ ராக வரு முன்பாக, மன்மதன் பகைதெனைக் கொல்லவே தனது தேரில ஏறி முன் குறுகினன் - காமகடவுள் என்னிடம் விரோதங்கொண்டு என்னை கொல்வதற்காகத தென்றலாகிய அவனுடைய தேரின்மீது ஏறி வந்தான், அவன் தேரினை குலவும் அல்குல் உணடு உவகையான பின் - அவனுடைய தேர் போன்ற கடிதடததில் தலைவர் புணர்ந்து மகிழ்ந்த பின், கூறும் யானை மிசை வந்தனன் - சிறப்பாகப் பேசப்படும் யானைமேல் அவன் வந்தான், செல்லும் நூல் இடை கணடு அவ்வானையை - நூலென்று சொல லக்கூடிய இடை சுமகின்ற யானையாகிய முலையை, தோல் திரிந்திட வென்ற பின் - தோல் திரையும்படியாக அழுதிய பின் (அல்லது மன்மத னுடைய யானை தோற்று ஓடும்படியாக அதனை வென்றடகிய பின்) தூரமாகவே பூவிருந்த என்மேல் சூதபாண மொன்று எவினன் - தூரமாய் ஓடிப்போய் தாமரைப்பூமே லிருந்துகொண்டு என்மேல் மாம்பூவாகிய கணை யைச செலுதினனன், ஒல்லை வந்து மதிமுகம் உனை- தலைவன் விரைவாக

வந்து சந்திரன்போன்ற என் முகத்தை விருப்பத்தோடு கருதிப்பார்த்த அளவில், கணை ஒளி இழந்து இதழ் குவியவே - பூகணையானது பிரகாச மற்றுக் கூம்பிப் போகவே, ஓவியத்தை நிகர் ஒத்த நம் தலைவன் உருவு கண்டு சென்றனன் - சித்திரம்போன்ற தம் தலைவனுடைய அழகிய உரு வத்தைப்பார்த்து மன்மதன் ஓடிப்போயினன், அரோ - அசை, எ - று.

விநாயகர் பவனி வருதல்

97. மாங்குயின்மொழி கொண்டவ னிதையே
மாநிலத்தி லிலாத புதுமைகேள்
கோங்குசண்பகங் கொன்றைபொற் கூவிளம்
கோதின் மாதெங்கு வாழை வருக்கைபார்
பாங்குபா னதிசூழுஞ் சேண்பாலைவாழ்
பண்ணும்வீ தியில் யாவரும் பார்க்கவே
வீங்குமோரெலி மேலொரு யானைகொல்
வெம்புலிப் பலகொண்டு நடந்ததே.

உரை:—மாங்குயில் மொழிகொண்ட வனிதையே மாநிலத்தில் இலாத புதுமை கேள் - மாமரத்திலுள்ள குயில்போலு மினிய சொல்லினையுடைய பெண்ணே! இந்த பெரிய உலகத்திலில்லாத ஒரு அதிசயத்தை நான் சொல்லுகிறேன் கேள், கோங்கு சண்பகம் கொன்றை பொற் கூவிளம் கோதிலமா தெங்கு வாழை வருக்கையார் - கோங்க மரமும் சண்பக மரமும் கொன்றை மாமும் அழகிய வில்வ மரமும் குற்றமற்ற மாமரமும் தென்னை மரமும் வாழை மரமும் பலாமரமும் பொருந்திய, பாங்கு பால் நதி சூழும் சேண்பாலை - கரையினையுடைய பாலாறு சூழப்பெற்ற சேண் பாலை யென்னும் ஊரில், பண்ணும் வீதியில் - புகழப்படுகின்ற தெருவினில, வாழ் யாவரும் பார்க்கவே - வாழுகின்ற ஜனங்களெல்லாரும் தரிசிக்கும் படியாக, வீங்கும் ஓர் எலிமேல் - ஒப்பற்ற பெருச்சாளியின்மேல், ஒரு யானை - ஒப்பற்ற யானைமுகக் கடவுள், வெம்புலி பல கொண்டு நடந்ததே - விரும்பத்தக்க அறுகம்புல் மாலையை யணிந்துகொண்டு எழுந்தருளி வந்தனர், எ - று.

பாதாதி கேசம் உருவகம்

98. பண்ணுமோர்வணி கனுக்குறுந் தூணவர்
பாரிலோர் புதுமை வஞ்சிகேள்
பசியதா மோர்கொடி யசையவேயிரு
பதும மாமலர் வதிந்தன
துண்ணுமம் மலரின்மேல் வராலுகள்
தொக்க ளெண்டடி விருக்கவீள்

துணைகுறங்கதனி லுற்றிருக்க மிசை
துவ்ட நாகமொன் றுற்றதே
அன்னதின் மேலொரு சிங்கமே வதில்
அளவிலா வெறும் பேறிமேல்
அடர்ந்த நாகமணி பணிகள் கொண்டவிரு
ஆரமார் மலையைத் தூக்கின
மன்னுமம் மலையிற் சங்கிருக்கவதில்
மதிய மொன்றுதவை காட்டவெம்
மதியின்மீது செற்றுரைத்தனஞ் செயும்
வகைசெரல் வார்கள்கவி வாணரே.

உரை :—வஞ்சி பாரிலோர் புதுமை கேள் - வஞ்சிக்கொடி போன்ற பெண்ணே உலகதிலிலோர் அதிசயம் சொல்கின்றேன் அதைக கேள் !, பண்ணுமோர் வணிகனுக்கு உறும் துணைவர் - ஒரு செட்டிக்குச சிறப்பாகப் பேசப் படுதற்குரிய தெருவகிய வாழ்கதைத துணைவரைப்பறறி யான் சொல்லுகின்றேன், பதியதாம் ஓர் கொடி - பசுமையான ஒரு கொடியானது (அதாவது இளமையான ஒரு பெண்ணின் கொடிபோனற வுடம்பு) அசை யவே இருபது மாமலர் வதிந்தன - அசைத்து செலவதற்குரிய இருபதாமரைப் பூக்களினமேல் அகொடி தங்கிற்று (அதாவது அப் பெண்ணுக்குப் பாதங் கள இரண்டு தாமரை மலர்களை யொத்திருந்தன) கன்னும் அம்மலரின் மேல் வரால் உகள - வரால் மீன்போன்ற கணைக்கால்க ளசைய, தொக்க ளெண்டு அதிலிருக்க - கண்டுபோல இரண்டு முழங்கால்க ளிருந்தன, நீள் துணை குறங்கு அதனில உற்றிருக்க - நீண்ட இரண்டு துடைகள் அதி விருந்தன, மிசை துவ்ட நாகம் ஒன்று உற்றதே - அதற்குமேல் துவ்டத் தனமுள்ள பாம்புபோல அல்குலிருந்தது, அன்னதின்மேல ஒரு சிங்கம் மேவ - அதன்மேல சிங்கம்போனற இடையிருக்க, அதில் அளவிலா எறும் பேறி - அளவற்ற எறும்புபோன்ற உரோம ஒழுங்கமைந்து, அடர்ந்த நாக மணிபணிகள் கொண்டவிரு ஆரமார மலையைத் தூக்கின - நெருக்கமான நாகரதினங்களைப் பதிதத ஆபரணங்களை யணிந்த சந்தனம் பூசப்பெற்ற மலைகளைப்போன்ற இரண்டு முலைகளைத் தாங்கிற்று, மன்னும் அம்மலையில் சங்கிருக்க - நிலைபெற்ற அந்த தனங்களுக்குமேல சங்குபோன்ற கழுத்து அமைந்திருக்கவும், அதில் மதியம் ஒன்று நகைகாட்ட - அதற்குமேல் சந்தி ரன்போன்ற முகம் விளங்கவும், வெம் மதியின்மீது - விரும்பப்பெற்ற மதி போன்ற முகதிற்கு மேலாக, செல் துரைத்தனம் செயும் - மேகம்போன்ற கூந்தலானது நிலைமையாக அமைந்திருக்கும், வகை சொல்வார்கள் கவி வாணனே - இவற்றின் நயத்தைக் கண்டு சொல்பவர்கள் பாவலர்களே, எ - று.

99. மாறுகொந்திடு தாறு விட்டிடு
வாழை தாழைவன் மாழைசூழ்
மாநிலத்தினி லேயொ ரற்புதம்
வாய்த்த துண்டதை வஞ்சிகேள்
கூறுவாரண மொன்றினிற் றலை
கொண்டவாயிர பாம்பின் மேல்
கூடியே யெடுநாள தாகவே
கோரசிங்க மிருந்து பின்
தேறுகாலை யளிக்க வஃதொரு
சரியோர் நரிமுன்பு போய்ச்
செகத்தில் யாவரு மறியொணு வகை
செய்த போரினை யென்சொல்வேன்
வீறுமந்நரி திட்டி பட்டிட
வெந்து சாம்பலாய் விட்டது
விருப்ப மோடிதை யுற்றுணர்ந்து
விளம்ப வல்லவர் புலவரே.

உரை:—மாறுகொந்திடு தாறு விட்டிடு - ஒன்றோடொன்று மாறுகப் பின்னிக் கிடக்கின்ற குலைகளைத் தள்ளிய, வாழை தாழை வன்மாழை சூழ் - வாழை மரங்களும் தென்னமரங்களும் மாமரங்களும் சூழப்பெற்ற, மா நிலத்திலே - பெரிய நாட்டில், ஓர் அற்புதம் வாய்ததது உண்டு அதை வஞ்சி கேள் - ஒரு அதிசயமான கதை நடந்தது அதைப் பெண்ணே கேட்பாயாக !, கூறுவாரணம் ஒன்றினில் - சிறப்பாகப் பேசப்படும் ஐராவதம் போன்ற, தலை கொண்ட ஆயிரம் பாம்பின்மேல் - தலைகளாயிர முடைய ஆதிசேடன்மீது, கூடியே நெடு நாளதாகவே கோர சிங்க மிருந்து - பொருந்தி நெடுநாளாக வீரமிக்க நரசிங்கமாகிய விஷ்ணு தங்கி, பின் தேறு காலை அளிக்க - தேன்போன்ற மன்மதனைத் தோற்றுவிக்க, அஃது ஒரு சரியோர் நரிமுன்பு போய் - அது நீதி செலுத்துகின்ற ஒப் பற்ற சம்புவின் முன்போய, செகதில் யாவரும் அறியொணு வகை செய்த போரினை என் சொல்வேன் - உலகத்தில் யாவருக்குந் தெரியாத முறையில் செய்த சண்டையை என்னென்று சொல்வேன், வீறும் அந் நரி திட்டி பட்டிட வெந்து சாம்பலாய் விட்டது - தனிச சிறப்புடைய அந்தச் சிவபெருமானின் நெற்றிக்கண் நோக்கமானது பட்டவுடன் மன் மதன் வெந்து சாம்பலாகி விட்டான், விருப்பமோடு இதை யுற்றுணர்ந்து விளம்ப வல்லவா புலவரே -....., எ - று.

100. திருநிறைந்திடு நளினவாவியு மருவழங்கிய சோலையும்
செம்பொனாலய மூர்த்தலங்கிய சிகரகோபுர மதில்களும்
பரிதிமண்டல மளவுமண்டப வளமைகொள்பக மாதவாழ்
பசுபதீச்சுர னடிமையாகிய பாவையேசில புதுமைகேள்
அரிமகன்றிரு நாதன்மெச்சிய வஞ்சுதாய்மக னல்லவோ
ஆடுமாடுமெ டுக்கவந்தவ னப்பன்மைந்தனு மல்லவோ
கரியோராணையை யீன்றதும்பட நாகப்பாமலை யெடுத்ததும்
நண்டுமேலொரு சிங்கநின்றது நவவிசித்திர மாகுமே.

உரை:—திருநிறைந்திடு நளின வாவியும் - இலட்சுமிகரம் பொருந்திய தாமரைப்பூப் பொய்கைகளும், மரு வழங்கிய சோலையும் - வாசனை வீசுகின்ற பொழில்களும், செம்பொன் ஆலயமும் - சிவந்த பொன்னிலு லமைக்கப் பெற்ற கோயில்களும், தலங்கிய சிகர கோபுர மதில்களும் - விளக்கமான முடிகளையுடைய கோபுரமும் பெரிய சுவர்களும், பரிதி மண்டல மளவும் மண்டப வளமைகொள் - சூரிய மண்டலதலை யளாவுகின்ற மண்டபங்களும் நிறைந்திருக்கின்ற, பசுமாதை வாழ் பசுபதீசுரன் அடிமையாகிய பாவையே சில புதுமை கேள் - பசுமாதைப் பதியில் வாழ்கின்ற பசுபதீசுவர சுவாமியின் அடியாளாகிய பெண்ணே சில அதிசயங்களைக் கேட்பாயாக! அரிமகன் - அபிமன்னன், திருநாதன் மெசிய இலக்குமி கணவனுகிய கண்ணனுல் புகழப்பட்ட, அஞ்சுதாய் மகனல்லவோ - பாஞ்சாலியின் புதல்வனல்லவா, ஆடு எடுக்க - நடனஞ் செய்வதற்காக, மாடு எடுக்க வந்த காளை வாகனத்தின்மேல் எழுந்தருளி வந்த, அப்பன் - தந்தையாகிய சிவபெருமான், மைந்தன் அல்லவோ - மகா வீரனல்லவோ, கரி ஓர் ஆனையை ஈன்றதும் - சம்புவாகிய சிவபெருமான் ஆனைமுகக் கடவுளாகிய விநாயகரைப் பெற்றதும், படரக பரம்பை எடுத்ததும் - அந்த யானைமுக கடவுள் நாகப் பாம்பைப்போன்ற வல்லபை சதியின கிதம்பதலை துதிக்கையால் தொட்டதும், நண்டு மேல் ஒரு சிங்கம் நின்றதும் - முழங்காலமேல இடையிருப்பதும், நவவிசித்திரமாகுமே - புதிய ஆசரியங்களாகும், எ - று.

101. பொன்னனைய தாமரைக்குப் போதான் போதப்
புளகிதமா மலர்மாரன் புரக்குமாமன்
முன்னவனன் மருகனவன் றந்தைதோழன்
மொழிக்கிணையா னுதியனக ருறையும் பூபன்
நன்வரையி லரிவையர்க்க மொன்றுமான
நம்மிரண்டு வாய்மூன்று காமநான்கு
நுண்ணிடையைந் தூராறு விழிகளேழு
நூற்புலவீ ரிப்புதுமை நுவலுவீரே.

உரை :—பொன் அனைய தாமரைக்குப் போதான் - பொன்போன்ற தாமரைகளுக்குப் பகைவனாகிய சந்திரன், போத - உதிக்க, புளகிதமாம் - மகிழ்ச்சியோடு விரிகின்ற, மலர் - குவளை மலரையுடைய, மாரன - மன்மதனை, புரக்கும் - பெற்றுக காத்த, மா - திருமகளின் அபிசமான ருக்குமணியின், மன் - தலைவனாகிய கண்ணனது, முன்னவன் - அண்ணனாகிய பலராமனின், நன் மருகன் அவன் - நல்ல மருமகனாகிய முருகனுடைய, தந்தை தோழன் - தந்தையாகிய சிவபெருமானுடைய தோழனாகிய குபேரன், மொழிக்கு இணையான் - என்ற சொல்லுக்குத் தகுதியுடையவனாய, உறையும் நகர் உறையும் பூவன - பாண்டிபனூராகிய மதுரையில் வாழ்கின்ற பூபதியின், நன் வரையில் - நல்ல மலைமீது, அரிவையர்க்கு அம் ஒன்றும் - பெண்ணுக்குத் தலை ஒன்றுவது ராசியைக் குறிக்கும் மை அதாவது மேசமாகும், ஆனனம் இரண்டு - முகமானது இரண்டாவது நாளைக குறிக்கும் திங்கள் போன்றது, வாய் மூன்று - செவ்வாயாகும், நாமம் நான்கு - பெயர் உரோகணி, நுண இடை ஐந்து - நுண்ணிய இடையானது ஐந்தாவது ராசியாகிய சிங்கம போன்றது, ஊர் ஆறு - துடை ஆறுவது இராசியாகிய கன்னி அதாவது வாழைத்தண்டைப் போன்றது, விழிகள் ஏழு - கண்கள் ஏழாவது இராசியாகிய துலாக்கோல் அல்லது அம்பு போனறது, நூற் புலவீர இப்புதுமை நுவலுவீரே - நூலாராய்சியுடைய புலவர்களே இந்த அதிசயத்தைத் தெரிந்து கூறுங்கள் !. எ - று.

புகையிலை

102. சீராருந் திருநெடுமா லானிரைப்பின்
புகையிலைக்காம பெடுத்துக்கொண்டான்
வாராரு முலைபுமை சேரனைசமபு
கையிலையில் வசிப்பதானுன்
சீராரு மக்கினிக்குப் புகையிலையே
யென்றுற்பின சிவன்போகும்
பேராரும புகையிலைதன் பெருமைதனை
யெவராலும் பேசொணாதே.

உரை :—சீராரும் திரு நெடுமால் ஆனிரைப்பின் புகையிலைக் காம் பெடுத்துக்கொண்டான் - சிறப்பு பொருந்திய திருமா லகிசமான கண்ணன் பசுகூட்டத்திற்குப் பின்னே செல்லுகையில் அவற்றை யோட்டுவதற்கு முகஞ்சிறகோலைக கையிற்கொண்டான், வார் ஆரும் முலையுமைசேர் அரனே சம்பு கையிலையில் வசிபபதானுன் - கசசு நிறைந்த தனங்களையுடைய உமை யம்மையின் கணவனாகிய சம்பு கைலை மலையில் வாழ்கின்றவனாகை, சீராரும் அகினிக்குப் புகையிலையே என்றல் பின சிவன போகும் - சிறப்பு பொருந்திய நெருப்புக கடவுளுக்குப் புகையில்லையானால் உயிரில்லையாகும்,

பேராரும் புகையிலைதன் பெருமைதனை எவராலும் பேசொணுதே - பேர் போன புகையிலையின் பெருமையை யாவராலும் அளவிட்டுச சொல்ல முடியாது, எ - று.

திருமாலுக்கும் தட்டானுக்கும் சிலேடை

103. பொன்னுடனே தினமபழகிக் குழல்வா யூதிப்
போந்துருக்கு மணிசேர்ததுப் படியுங்கொண்டு
மின்னுமா தங்கமதை நிறுத்து மச்ச
வேலையிலே வரையெடுத்து விரும்பி நாளும்
மன்னுகணே யாழிசங்கு வட்டங் காட்டி
வடிவுளசிற் றிடைச்சிகளே வணக்கையாலே
அன்னசதர சோமனக ரழகன் றன்னை
அலங்காரப் பொற்கொல்ல னென்னலாமே.

உரை :—பொன்னுடனே தினமபழகி - இலக்குமியோடு நாள்தோறும பயினறு, குழல் வாய ஊதிப் போநது - பசுக்களை யழைப்பதற்காகப் புல்லாஙகுழலை வாயில் வைத்துஇச சென்று, ருக்குமணி சேர்ததது - உருக்கு மணியை மனைவியாகச சோத துகொண்டு, படியும் கொண்டு - பூமியையும் வயிற்றுட்கொண்டு, மாதஙக மதை நிறுதது - யானையைக் காப்பாற்றி, வேலையிலே மின்னும் மசசம - சமுத்திரத்திலே மின்னுகின்ற மசசமாக அவதரிதது, வரை எடுதது - கோவர்த்தன கிரியைக் குடையாக எடுத்துப் பிடிதது, விரும்பி நாளும - விருப்பதோடு எந்நாளிலும், மன்னு கணை ஆழி சஙகு வட்டம் காட்டி - அம்பு சகதரம் சஙகு வளைதடி என்பனவற்றைத திருகதரஙகளில் வைத்துக் காட்டி, வடிவுள சிற்றிடைசசிகளை வணகதைகையாலே - அழகிய சிற இடையுடைய கோபிகாஸ்திரீகளை தன் கைகளால் வளைப்பதனாலே, அன்ன சதர சோமன் நகர அழகன் தன்னை - அன்ன சத்திரம் வைதத சோமனுடைய பதியில வீற்றிருக்கும் அழகனான திருமால்,

பொன்னுடனே தினம் பழகி - பொற்கொல்லன் பொன்னைகொண்டு தினந்தோறும் வேலைசெயது, குழல் வாய ஊதி - ஊதுகுழல் வாயிலாக நெருப்பை யூதி, உருகுமணி சோத்து - இரதினஙகளோடு உருகுகின்ற தஙகதததை சேர்ததது, படியும் கொணடு - கட்டளைப் படிக்கல்லை வைத்து, மின்னும் மாதஙகமதை நிறுதது - மின்னுகின்ற பெரிய தஙகத்தைத தராசில் நிறுத்து, மசசம் எடுத்து - பொன் மசசமெடுதது வைத்து, வேலையிலே வரை எடுத்து - தொழிலிலே அளவு எடுதது, விரும்பி நாளும் கணையாழி சஙகு வட்டம் காட்டி - விருப்பமாக ஒவ்வொரு நாளும் நிலைபேறான மோதிரம் சஙக வளையல்கள முதலியவற்றைச செய்து காட்டியும் - சேதாரம் சாட்டியும், வடிவுள சிற்றிடைச்சிகளை வணக்கையாலே - அழகான சிறிய

இடையுடைய பெண்கள் நகை விரும்பிச் சூழவதிலே, அலங்கார பொற் கொல்லன் என்னலாமோ - அணி செய்யும தட்டானென்று சொல்லலாம், எ - று.

104. பஞ்சலக்ஷண மதனிலோ ரிலக்கணமேழு
பாரையடியா லளந்த
பகவனது பேர்கொண்டு பாண்டிமா நகர்தனைப்
பார்த்துக்கை யால்வளைத்து
அஞ்சக் கரக்கடவு ளணியினது பெயர்மறந்
தயனூர்தி பெயர்வெறுத்து
யானையின் பெயராகி மதனவேள் போர்கிலக்
காயினுள் வந்தணுகுவாய்
வஞ்சியிடை முன்சொன்ன தனிலொன்று சூழல்பின்
வகுத்தமொழி தன்னிலொன்று
வாருண்முலைராசி தனிலொன்று பல்லோர்கிலம
வதனமகபதி மனைவிபேர்
கொஞ்சுமொழி யாணதுசவுக்கியப் பெயர்பெற்ற
குருவியிதழோர் பிரபந்தம்
குணமாண்டி லொன்றுநற் கோவளம் வாழும்
குபேரசங்கர லிங்கனே.

உரை :—கோவளம் வாழும் குபேர சங்கரலிங்கனே - கோவளத்தில வாழும குபேரன போன்ற செல்வமுடைய சங்கரலிங்க வள்ளலே !, பஞ்ச லட்சண மதனிலோர் இலக்கணம் - ஐந்திலக்கணங் கூறும் யாப்பிலக்கணங் களி லொன்றிய காரிகை (அதாவது பெண்) பாரை யடியாலளந்த பகவனது பேர கொண்டு - ஏழுலகையும் திருவடியாலளந்த கடவுளுடைய பெயரை அதாவது மால்கொண்டு, பாண்டிமாநகரதனைப் பார்த்துக் கையால வளைத்து - சுழி கூடல் கைவிரலினு லிழைத்துப் பாத்து, அஞ்சக்கர கடவு ளணியினது பெயர மறந்து - பஞ்சாட்சரத்தை யுடையவராகிய சிவ பெருமான் அணிகின்ற ஆபரணமாகிய பாம்பை அதாவது பணியை மறந்து, அயன் ஊர்தி பெயர் வெறுத்து - பிரமாவின் வாகனமாகிய அன்னத்தை அதாவது சோற்றை வெறுத்து, யானையின் பெயராகி - யானையின பெய ராகிய அததி அதாவது எலும்பாய்ப் போய், மதன வேள் போற்கு இலக் காயினுள் - மன்மதனுடைய சண்டை செய்வதற்குக் குறியாயினுள், வந்து அணுகுவாய் - வந்து அவளைத் தழுவுவாயாக, வஞ்சியிடை முன் சொன்ன தில் ஒன்று - பெண்ணிடையானது முன் சொன்ன காரிகை அதாவது நூல் போன்றது, குழல் பின் வகுத்த மொழி தன்னிலொன்று - அவளுடைய கூந்தலானது பின் சொன்ன மால் அதாவது மேகம் போன்றது, வாருள

மூலை ராசிதனி லொன்று - அவள் கசசுக்குள்ளாக இருக்கின்ற தனமானது இராசிகளி லொன்றிய கும்பம் போன்றது, பல் ஓர் நிலம் - அவளுடைய பல்லானது ஐவகை நிலங்களி லொன்றிய முல்லை போன்றது, வதனம் மகபதி மனைவிபேர்-அவளுடைய முகமானது இந்திரன் மனைவியாகிய சசி அதாவது சந்திரன் போன்றது, கொஞ்சு மொழியானது சவுக்கியப் பெயர் பெற்ற குருவி - அவள் கொஞ்சிப் பேசுஞ் சொல்லானது சுகம் அதாவது கிளியின் மொழி போன்றது, இதழ் ஓர் பிரபந்தம் - அவளுடைய உதடானது மடல் அதாவது தாமரை யிதழ்போன்றது, குணம் ஆண்டில் ஒன்று- அவளுடைய குணமானது (சுபகிருது) சுபமான தன்மையுடையது, எ - று.

105. பங்கயத் திருமடந்தை மேவிய படர
குங்கும புயாசலன்
பனசகாத னருளாளன் மெச்சுதமிழ்
பாடியாடி வருகளியரேம்
திங்களொத்த நிழலெங்கள் பஞ்சமிதெளிந்த
பூசையி னலத்திலுலே
சேரவே மதுவைத் தெளியவிட்டபடி
செப்புவார்கள் கவிவாணரே
கங்கை பெற்றமகன் வாலிவாலிதரு
காவிவாளபின னல்லவோ
காமனுக்குவிழி யாயிரங்கமழு
கப்புவிட்டது சூடத்திலே
மங்கையர்க்கு முலைகாலலே யெருமை
வாலிலே பனைபழுத்ததும்
மல்லிகைக் கொடியை யானைதின்றெரு
மருப்புமாவினை யளித்ததே.

உரை :—பங்கயத் திருமடந்தை மேவிய படர குங்கும புயாசலன் - தாமரைப் பூவிலிருக்கும் இலக்குமி பொருந்திய செங்குங்கும மணிந்த புயங்களை யுடையவனுகிய, பனசகாதன் அருளாளன் - பனசை நகரக் கதிபதியாகிய கொடையாளியை மெசசு தமிழ்ப் பாடியாடி வருகளியரேம் - புகழ்கின்ற தமிழ்ப்பாடலைப் பாடி ஆட்டமாடி வருகின்ற களிப்புடையோம் நாகங்கள், திங்களொத்த நிழல் எங்கள் பஞ்சமி தெளிந்த பூசையின் நிலத்திலே சேரவே - வளர்பிறைப் பஞ்சமியிலே நாகங்கள் செயகின்ற பூசையில் நிலத்திலே சேரும்படியாக, மதுவைத தெளிய விட்டபடி செப்புவாகள் கவிவாணரே - கள்ளினைத் தெளிவாக எடுக்கின்ற முறையைப் புலவர்கள் கூறுவாகள், கங்கை பெறற மகன் வாலி - கங்கையின் புதல்வன் பரிசுத்தனுகிய பீஷ்மன், வாலிதரு காவிவாள் அபினனல்லவோ - வெள்ளை நிறமுடைய

பாண்டவின் புதல்வன் ஒளியுடைய அர்சுன னல்லவா ?, காமனுக்கு விழி யாயிரம் - கற்பகக் காவினுக்குத் தலைவனுகிய இந்திரனுக்குக் கண்களாயிரம், கம் உகு அப்பு வீட்டது குடத்திலே - மேகமானது சொரிகின்ற நீரை குடத்திலே விட்டது மகடையர்க்கு மூலை காலலே - பெண்களுக்குக் கற்பு மூளைத்தது, எருமை வாலிலே - கவரிபோன்ற வெள்ளிய கூந்தலுண்டான போது, பனை பழுத்ததும் - பார்வதி பூப்படைந்ததும், மல்லிகைக்கொடி-பார்வதியை, ஆன் ஐ - காளைகளுத தலைவனுகிய சிவபெருமான், தின்று - கூடி, ஒரு மருப்பு மாவினை யளித்ததே - ஒன்றைக கொம்பையுடைய யானைமுகக கடவுளை யளித்தார, எ - று.

சிவபெருமான்மீது நிந்தாஸ்துதி

106. தேவரீ ருமதுதுர்க் குணமதனைச் செப்பிடத்
தொலையுமோ தொண்டன்
சிறுவனை வதைத்தீர் மறலியை யுதைத்தீர்
செமமண்மைத் தனனையுங் கொன்றீர்
வாவெனு மாமண்ற லையறுப் பிததீர்
மாமியைக் காதறுப்பிததீர்
மருமகன் றலையைத் திருகினீ ரவனு
மகனையு மூக்கறுப்பிததீர்
தாவுசேர் புரத்தை நீறெழச் சுட்டீர்
சமபரன் றன்னையு மெரித்தீர்
தாருகா வனத்துவி ருடிகடங் கடையலர்
கற்பையுங் கெடுததீர்
மேவிய வுமைமப் பசுபதியென்று மேதினி
சொல்லவு மானீர்
வித்தக னித்தா வத்தனே யீசா விமலனே
யமலநா யகனே.

உரை:—வித்தக நிததா அத்தனே ஈசா விமலனே யமல நாயகனே - அறிவுடைய நிதியப்பொருளே!, எவவுயிர்க்குந் தந்தையே!, முதல்வனே!, குற்ற மற்றவனே!, பாவநி பதியே!, தேவரீர் உமது துர்க்குண மதனைச செப்பிடத் தொலையுமோ - சுவாமியே உமது தீய வியலபுகளைச சொன்னால் முடிவுறுமோ, தொண்டன் சிறுவனை வதைத்தீர - சிறுதொண்டனுடைய பிள்ளையை நீர கொன்றீர, மறலியை யுதைததீர் - இயமனைக காலாலுதைத் தீர, செம்மல் மைதனனையுங் கொன்றீர - ஆணமை யுடையவனுகிய திரு மாலைத் தக்கன் யாகததில் மடியச செய்தீர, வாவெனும் மாமன் தலை யறுப் பிததீர் - வாவெனறு உம்மை யழைத்த மாமனுகிய தக்கனை வீரபத்திர

ஞல் கொல்வித்தீர், மாமியைக் காது அறுப்பித்தீர் - அவன் மனைவியைக் காதை யிழக்கும்படி செய்தீர், மருமகன் தலையைத் திருகினீர்-திருமாலின் மகனும் உமது மருமகனுமாகிய பிரமாவின் ஒரு தலையைக் கொய்தீர், அவன் நாமகளையும் மூக்கறுப்பித்தீர் - அவன் நாவில் வீற்றிருக்கும் சரசுவதியையும் தக்கன் யாகத்தில் மூக்கினை யிழக்கும்படி செய்தீர், தாருகர் புரத்தை நீறெழச் சுட்டீர் - வலிமையுடைய திரிபுரத்தைச் சாம்பலாகும்படி எரித்தீர், சம்பரன் றன்னையும் எரித்தீர் - சம்பராசுரனையும் அழித்தீர், தாருகா வனத்து விருடிகள் தங்கள் தையலர் கற்பையுங் கெடுத்தீர்-தாருகா வனத்து முனிவர்களுடைய பெண்டிர் உம்பால் மோக முறும்படிசெய்து அவர்களுடைய கற்பையு மழித்தீர், மேவிய உம்மைப் பசுபதியென்று மேதினி சொல்லவும ஆனீர் - இசசெயல்கள் செய்யும் தனமை பொருந்திய உம்மைப் பசுக்களாகிய உயிர்களுக காகும் தலைவனென்று உலகத்தார் புகழவும் பெற்றீர், எ - று,

மாதர் சுலவி வர்ணனை

107. ஏகவெண் கவிகைநிழ லிலமபுலிய
லேகவென் றையமெனச்செயும
இராமசே துரகு நாதபூபன் மிகு
ரவிகுலாதிப துரந்தரன்
கோகமண் டலமெனக் குளிர்ந்ததுரராய
தொண்டைம னளிதமால்
கோடியத்தரகு ராமனுக்கிலைய குமணன்
மேவியுறை வரைமிஞர்
மேகமண்டல மசைசந் தசைசந்துநல
சந்திரமண்டல மறைந்தது
மேருமண்டல மசைசந்த போதுவட
விருக்ஷமொன் றுமிசை நின்றது
நாகமண்டல மசைசந் தசைசந்தமுத
சலதிபொங்கமல ரணையின்மேல்
நாலுமண்டல மசைசந்தபோதுபதி
ஞலுமண்டல மசைசந்தவே.

உரை:—ஏகவெண் கவிகை நிழலில் - தனது ஒற்றை வெண் கொற்றகுடை நிழலின் கீழ் அதனெளியில், அம்புவி அலேக ஏகவென்று ஐய மெனசசெயும - அழகிய பூமியானது வெள்ளேடோ வென்று சக்தேகப் படும்படி செய்யும், இராமசேது ரகுநாத பூபன் - இராமர் கட்டிய சேது வைக் காககும் ரகுநாத பூபதியும், மிகுரவி குலாதிப துரந்தரன் - சூரிய

குலத்திற் கதிபதியாய் அதனைப் பேணுபவனுமாகிய, கோக மண்டலமென குளிர்ந்த - சந்திர மண்டலமெனக் குளிர்ச்சியுடைய, தரைராய தொண்ட மன் அளித்தமால் - தரைராயனென்னும் தொண்டைமான் பெற்ற மன்ன னுகிய, கோடி அத்த ரகுராமனுக்கு இளைய குமணன் மேவியுரை வரை மிஞர் - கோடி பொன்னுடைய ரகுராமனுக்குத் தம்பியாகிய குமண வள் ளலது மலையிலுள்ள பெண்களுடைய, மேக மண்டலம் அசைந்தசைந்து நல சந்த்ர மண்டலம் மறைந்தது - கூந்த லசைந்தசைந்து நல்ல சந்திர மண்டலம்போன்ற முகமானது மறைவுற்றது, மேறு மண்டலம் அசைந்த போது வடவிருசு மொன்று மிசை நின்றது - மேரு மண்டலம் போன்ற தனங்களசைந்தபோது ஆலவிருட்சம் போன்ற உரோம ஒழுங்கு அதன் மீது காணப்பெற்றது, நாலு மண்டலம் அசைந்தசைந்து அமுத சலதி பொங்க - கடிதம் அசைந்தபோது சுரதநீர் பொங்கவும் மலரணையின்மேல் நாலு மண்டலம் அசைந்தபோது பதினலு மண்டலம் அசைந்தவே - பூம் படுகையில் கூந்தல் முகம் தனம் கடிதடம் என்னும் நாலு பகுதிகளும் அசையவே பதினன்கு லோகமும் மயல்கொண்டு ஆடின, எ - று.

இதுவுமது

108. ஏருடைக்கவி வாணருக்கு மிரப்பவர்க்கு நிரந்தரம்
இன்றுநாளே யெனுமலீயு மிராக்கதச்சொற் பராக்ரமன்
வீரவிக்ரம விசயராயன் விளங்குசாரல்வரை மெல்லியார்
மேவிவாழு மநுராக போகவிசித்ர மாகியவேளையில்
தாரகைக்குல முதிரவும்வட மேருபொற்கிரி யசையவும்
தாகவேலை சிவப்பவுமமதி தன்னைவந்திருண் மூடவும
காரணக்குறி யானதிப்படி காசினிக்கிது புதுமையே
காஞ்சிசூழ் தலத்திலேமிகு கலகமுள்ளது காணுமே.

உரை :—ஏருடைக் கவிவாணருக்கும் இரப்பவர்க்கும் - அழகான கவி கள் பாடும் புலவர்க்கும் யாசகர்கட்கும, நிரந்தரம் - எக்காலத்திலும், இன்று நாளே எனுமல் ஈயும் - இன்றைக்கு வாருங்கள் நாளைக்கு வாருங்களென்று சொல்லாமற் கொடுக்கின்ற, கதம் இராசசொல் பராக்கிரமன் - கோப மில் லாதவனென்று பேர் பெறற வீரனுகிய வீர விக்கிரம விசயராசன் - பரா க்கிரமத்தையுடைய விசயராசனென்னும் வள்ளலது, விளங்குசாரல் வரை மெல்லியார் - விளக்கமான பக்கங்களையுடைய மலையில் வாழும் மென்மைத் தன்மையுடைய பெண்டிர்கள், மேவி வாழும் அநுராக போக விசித்திர மாகிய வேளையில் - விரும்பிக் காதல் வாழ்க்கையை அனுபவிக்கும் அரிய சமயத்தில், தாரகைக்குலம் உதிரவும் - நட்சத்திரம்போன்ற மலர்கள் சிதற வும், வடமேரு பொற்கிரி யசையவும் - வடமேரு மலைபோன்ற அழகிய தனங்க ளசையவும், தாக வேலை சிவப்பவும் - வேட்கையை யுணர்த்தும் கடல்போன்ற கணவனது சிவக்கவும், மதிதன்னை வந்து இருள் மூட

வும் - மதிபோன்ற முகத்தை இருள்போன்ற கூந்தல் மறைக்கவும், காரணக் குறியானது இப்படிக் காணிக்கிது புதுமையே - இந்தக் குறிகளெல்லாம் ஒரு காரணத்தைக் காட்டும் அடையாளமானது உலகத்திலுள்ளார்க்கு ஒரு வியப்பாகத தோன்றும், (அக்காரியமாவது) காஞ்சி சூழுதலத்திலே மிகு கலக முள்ளது காணுமே - எழுகோவை மணியாடை மூடிய கடிதடத்தில் கலபிச செயல் நிகழ்ந்ததென்றறிக, எ - று.

109. சேர்சோனக ரீழராரியர் நிறையளந்திடு வாயிலான்
சேரையாதிப னரசகேசரி செல்வனெகிய கல்விமான்
மீனுலாவிய கண்ணியர்க்குளம் வெள்குருமய றந்தவன்
மிக்கதேவனல் வரையிலேயொரு விசிதிர மாவொரு வஞ்சி
ஆனமேலொரு பூவிருந்திட வந்தமாகிய பூவின்மேல் [கேள்
அச்சமற்றொரு குதிரைநின்றிட வந்தவாமபரி மீதிலே
காணுலாவிய புலியிருந்தது கருதுமப்புலி மீதிலே
கடியசிங்க மிருந்துலாவிடல் காசினிக்கிது புதுமையே.

உரை :—சேனர் சோனகர் ாழர் ஆரியர் நிறையளந்திடுவாயிலான் - சேனர் துலக்கர் ஈழ மண்டலதாரா ஆரிய நாட்டினர் என்பவாகள் கப்பத்தை யளந்து கட்டும் வாசலே யுடையான், சேரை யாதிபன் அரசகேசரி - சேரைப்பதிகுத தலைவனெகிய அரசகேசரி யென்னும் மன்னன், செல்வனெகிய கல்விமான் - செல்வமுங கல்வியும் ஒன்றுக வாய்க்கப்பெற்றவன், மீனுலாவிய கன்னியர்க்கு உளம் வெள்குரு மயல் தந்தவன - மீன் போன்ற கண்ணேயுடைய பெண்ணுக்த நெஞ்சம் நாணுதி ஆசைப்படும் மோகத்தை யளித்தவன், மிகக தேவன் நல் வரையில ஒரு விசிதாமாம் ஒரு வஞ்சி கேள் - மிகக தெய்வதத்தனமையுடைய அவனுடைய மலையின மீது ஒரு அதிசயத்தைப் பெணணே கேட்பாயாக, ஆனமேல் ஒரு பூ இருந்திட - விாயகக கடவுள்மேல் ஒரு மலா தங்கவும், அந்தமாகிய பூவின் மேல் அசமமற்று ஒரு குதிரை நின்றிட - அழகிய அந்தப் பூவினமேல் அசமமில்லாமல் ஒரு குதிரை அதாவது பத்திரியாகிய இலை இருந்திட, அந்தவாம் பரிமீதிலே காணுலாவிய புலி யிருந்தது - அநத அழகான இலையின்மீது வாசனைபொருந்திய தாமரைப்பூ விருந்தது; கருதும் அப்புலி மீதிலே கடிய சிஙகம இருந தூலாவிடல் - விரும்பப்பெறற அந்தத தாமரைப் பூவின்மீது அரியாகிய வண்டு இருநதது, காசினிக்கு இது புதுமை தானே - உலகதாராகு இசசொறகள் புதுமையைத தருவதாகும், எ - று.

110. வாடைப் பனிமட்டோ மதன்வாடப் பணிச்சிக்கென்
பலிவேலி யெலிக்கே நிருமலிவேலி நினைத்தாள்
கூடற்கிறை காணுதவள் கூடற்கர சேகின்
குவளைத்தொடை தாவென்றரு குவளைதழு வினியே

ஆடற்கொடி யிடையாணைகை யாடற்கிட மானுள்
அஞ்சமபுன் னடையாளிதை யஞ்சமபுக லானுள்
ஓடிதகிரி கின்றுடைய ரோடிதகிரி கின்றுள்
உறவாடுவ திவரேமைய லுறவாடுவ திவளே.

உரை :—கூடற்கு அரசே - மதுரைப்பதிக்கு மன்னனே !, வாடைப் பனிமட்டோ - வடகாற்றின் குளிராசசிகக மாத்திரமா, மதன் வாடு அப்பு அணிசசி - மன்மதன் வாட்டுதற் சேதுவாகிய அம்பு நெருங்கப்பெற்று இக்கு என் மலை - கரும்பு வில்லாகிய மலைகும், வேலை ஒலிககே - அவன் முரச மாகிய உடலின் முழகுகத்திற்கும் பயப்பட்டு, திருமலை வேலை நினைத்தாள் - ....., கூடற்கு இறை காணுது - கூடுவதற்குரிய தலைவனைக் காணுமல், அவள் நின் குவளைத தொடை தாவெனறு - அவள் உன்னுடைய குவளை மலர மாலையைக கொடுவென்று, உருகுவளைத் தழுவிலையே - மனமுருகிக கேட்பவளை யணைந்தா யில்லையே, ஆடற கொடி யிடையாள் - ஆடுகின்ற கொடிபோன்ற இடையை யுடையவள், நகையாடற்கு இடமானுள் - பல ரும் பார்த்துச சிரிப்பதற்குரியவளானுள், அஞ்சம் புகல் நடையாள் - அன னம் சரண்புகக்கூடிய நடையை யுடையவள், இதையம் சமபு உகலானுள் - இருதயததில் சுகததை யிழந்தவளானுள், ஓடித் திரிகின்றுள் துயரோடு இதது இரிகின்றுள் - ஓடித் திரிபவளாகிய அவள் துயரினுலே மனமுறிந்து அஞ்சுகின்றுள், உறவு ஆடுவது இவரே - இவரே அவளோடு கலந்து உற வாடுதற்குரியவர், மயல் உறவாடுவது இவளே - மோக மிகுதியாலே தளர் கின்றவன் இவள்தான், எ - று.

111. உழைசுமந்திடு கையரேயிள நற்பதஞ்சலி மெய்யரே
உண்பலிகொள வந்துமாதர்க ளுயிரையுமபலி கொள்கிறீர்
பிழைசுமந்திட வெங்கள்வாசலி லேணடிக்கடி வருகிறீர்
பெண்கள் வாழ்ந்திடு வீதியல்லது பின்னேவறிட மில்லையோ
இழைசுமந்தவ ருயிர்பறிப்பது தருமமோவிது தேவரீர்
இன்றுவந்தது போலநாளையு மிச்தவீதியில் வந்திடில்
பழிசுமந்திடு வீரொருத்தர் பலிக்குமந்த நிமித்தமாப் [மே.
பாவம்வந்திட வேண்டுமோவொரு பறையறைந்து பின்வாரு

உரை :—உழை சுமந்திடு கையரே - மானே யேந்திய திருக்கரத்தை யுடையவரே!, இளநற் பதஞ்சலி மெயயரே - மென்மையான நல்ல திருவடி யினு லாடுகின்ற திருமேனியை யுடையவரே!, உண் பலிகொளவந்து மாதர் கள் உயிரையும் பலி கொள்கிறீர் · உண்ணுகின்ற சோற்றினை வாங்குவதற்கு வந்து பெண்களுடைய உயிரையும் பிச்சையாகக கவர்ந்து கொள்கின்றீர், பிழை சுமந்திட எஙகள் வாசலிலேன் அடிக்கடி வருகினறீர - குற்றததிற குப் பொறுப்பாக எங்களுடைய வீட்டு வாசல்களுக்கு ஏன் அடிக்கடி வரு

கிறீர், பெண்கள் வாழ்ந்திடு வீதியல்லது பின்னே வேறிடம் இல்லையோ - பெண்கள் தெருவல்லது பிசசை யெடுக்கப் போவதற்கு வேறிடமில்லையோ, இழை சுமந்தவர் உயிர் பறிப்பது தர்மமோவிது - ஆபரணமணிந்த பெண்களுடைய உயிரைக் கொள்ளை கொள்வது நீதியாகுமா, தேவரீர் இன்று வந்ததுபோல நாளையும் இந்த வீதி வந்திடில் - ....., பழி சுமந்திடும் - பழியேற்பட்டு விடும், நீர் ஒருத்தர் பலிக்குவந்த நிமித்தமாப் பாவம் வந்திட வேண்டுமோ - நீர் பிசசைக்கு வந்த காரணமாகப் பாவ மேற்பட வேண்டுமா, ஒரு பறை யறைத்து பின் வாருமே - நீர் வருவதாஞல் பறையறைந்து விளம்பரஞ்செய்து வருவீராக, எ - று.

112. விலைமதித்திடு தமிழ்ப்புனைந்திடு வீரராகவ னுதவுமால்
வெள்ளியூர்வரு வேலபூபதி வெற்பிலேயொரு புதுமைகேள்
அலையிருக்கிற கடலிலேயொரு குவளைநிற்குது கமலமோ
அருகிருக்குது முல்லையான வருமபுநிற்குது வதனமே
கலையிருக்குது மானிருக்குது கரியமேகமு முடுகுவாள்
காணவேயிரு பிறைகணிற்குது கண்கண்முக்கண வள்ளலும
மலையிருக்குது வரவிருக்குது வஞ்சிநிற்கிற வஞ்சிகீழ்
வாழைநிற்குதுகடுவிலேதன்தொடையைவைத்திருக்குதுகாணுமே.

உரை :—விலை மதிதனிடு தமிழ புனைநதிடு வீரராகவன் உதவுமால் - விலை மதிததறகுரிய தமிழ்க கவிகளை இயற்றக்கூடிய வீரராகவப் புலவரின புதலவராகிய, வெள்ளியூர வரு வேலபூபதி வெற்பிலே ஒரு புதுமை கேள் - வெள்ளியூரில் வாழ்கின்ற வேலப்ப மனனனது மலைமீது ஒரு விசிததிரம் கேட்பாயாக, அலையிருகிற கடலிலே ஒரு குவளை நிற்குது - அலையுடைய கடலைப்போன்ற கணணிலே குவளைப் பூப்போன்ற கருமணி யிருக்கிறது, கமலமோ அருகிருகிறது - தாமரைப் பூப்போன்ற வாய் அதன் பககதது லிருகிறது, அதனுளே முல்லையான அரும்பு நிற்குது - அதற்குள்ளே முல்லை யரும்புபோன்ற பற்களிருக்கின்றன, கலை யிருக்குது - கலைச சநதிரன்போன்ற நெற்றியிருகிறது, மான் இருக்குது - மான்போன்ற பார்வை யிருக்கிறது, கரிய மேகமும் இருக்குது - கரிய முகில்போன்ற கூநதல மிருக்கிறது, முடுகுவாள் காணவே - கண்ணிலிருந்து வரும் ஒளியைக கவனித்துப் பாாக்க, இரு பிறைகள் நிற்குது - இரண்டு பிறைகள்போன்ற புருவஙகள் நிற்கின்றன, கணகண் முக்கு அணவு அள்ளலும்-கண்கள் மூனையிற் பொருந்திய சாந்துபூசிய மலையிருக்கிறது அதாவது காம்புத் துவாரஙக ளுடைய மூலைகளிருக்கினறன, அரவு இருக்கிறது - பரம்புபோன்ற உரோம ஒழுங்கிருக்கிறது, வஞ்சி நிற்கிற - வஞ்சிக கொடிபோன்ற இடை யிருகிறது, வஞ்சிக் கீழ் வாழை நிற்குது - இடைக்குக்கீழ் வாழைபோன்ற துடை யிருக்கிறது, நடுவில் தேன் தொடை வைத்திருக்கிறது - துடைக்கு நடுவே

தேன் கூடுபோன்ற அல்குலிருக்கிறது, நாணுமே - பாத்தக கொள்ளுமே' எ - று.

சொக்கநாதருக்கும் தலைவிக்கும் அரிக்கும் சிலேடை

113. அருகினத்தமர் வையையாற்றிகழ் சங்கமேமிக வுடைமையால்
ஆதரிததிடும் கூடலாலுய நாசையம்பரி மாலையால்
இரவினேப்பிரி யாமையால்விட மண்ணமாக வருந்தலால் [ய்வாய்
இரதிவேள்பகையாகையாலுமையிவளு மொத்தனளருள்செ
பரவையின்க ணடைந்து நாவலர்பின் செலப்புகழ் மேவியும
பரசுபற்றியு நாகமீது பயின்றுமானிட மாகியும
மருகிடைப்புக லுற்றுமண்டர்ம னங்களிக்க நடித்தநீள்
மாலுமாகிய சொக்கரேதமிழ் மதுரைமாநக ரீசரே.

உரை:—பரவையின் கண் அடைந்து - சிவபெருமான் பரவைபால் தூது போயும், திருமால் பாற்கடலின்கண் பள்ளிகொண்டும்!, நாவலா பின் செல - அரன் சுந்தரமூர்த்தி சுவாமிகளுக்குப் பின்னே போயும், அரி திருமழிசை யாழ்வார்க்குப் பின் சென்றும், புகழ் மேவியும - இருவரும் புகழை விரும்பி யவ்வாறு சென்றும், பரசு பற்றியும் - அரன மழுவாயுதத்தைக கொண்டும, அரி தண்டாயுதத்தைக் கைக்கொண்டும், நாகமீது பயின்றும்- அரன் கைலைமீது வீற்றிருந்தும், அரி ஆதிசேஷனுகிய பாம்பின்மீது படுத்தும், மானிடமாகியும் - இடது திருக்கரத்தில் சிவன் மானேத தரித்தும், அரி மனிதராகப் பிறந்தும், மருகிடைப் புகலுற்றும் - அரன் திருவிடை மருதூரிற் றகியும், அரி கண்ணனுய் மருத மரததினிடையிருது அசுரனேக கொன்றும், அண்டா மனங் களிக்க நடித்தும் - தேவர்கள் மகிழ்ம்படியாகச சிற்சபையில் அரன் நடனஞ் செயதும், அரி காளிகக ணெண்ணும் பாம்பின் மீது நடனஞ் செய்து மிருத்தமையால், நீள மாலுமாகிய சொகககே-நீண்ட திருமால் போன்ற அரனுகிய சொகககலிகபெருமானே !, மதுரைமா நகா ரீசரே - மதுரைப்பதிகுத தலைவரே !, அருகு நத்து அமா வையையால்- பக்கத்தில் சஙகுகள் அமர்ந்திருக்கும் வையையாற்றை யுடைமைபாலும், திகழ் சஙகமே மிகவுடைமையால்-விளங்குகின்ற தமிழச சங்கஙகளே மிகுதி யாக வுடைமையாலும், ஆதரிததிடு கூடலால் - விரும்பிப் பாதுகாகின்ற கூடல் பதியை யுடைமையாலும், உயா ஆசை அம்பரமாலையால் - உயாந்த திக்குகளே தமக்கு ஆடையாதலாலும், இரவினேப் பிரியாமையால் - ஐய மேற்றலேக் கைவிடாமையாலும, விடம் அண்ணமாக அருந்தலால்-விடத்தை யுணவாகக் கொண்டமையாலும், இரதி வேள் பகையாலையால் - இரதி யோடுகூடிய மன்மதனுக்கு நீர் விரோதியாதலாலும்.

இவள் - இப் பெண்ணுனவள், அருகு நத்து அமா வையையால் - பக்கத்தில் கூட்டமாயுள்ள உறவினர் இவளே வைதலாலும், திகழ் சஙகமே

மிக வுடைமையால் - திகழ்கின்ற சங்க வளையல்களை மிகுதியாகத் தரித்திருப்பதாலும், ஆதரிதத்திடு கூடலால் - உமமோடு கூடுதலை விரும்புதலாலும், உயர் ஆசை அம்பரமாகையால் - இவளுடைய வேட்கையானது ஆகாயம் வரையும அளாவி யிருப்பதாலும் இரவினைப் பிரியாமையால் - இராதிரி கேகப் பெறுமையாலும், விடம் அன்னமாக அருந்தலால் - அன்னதை விடம்போல வெறுத்துண்ணுதலாலும், இரதி வேள் பகை யாதலால் - இவளுக்கு மன்மதனும் சத்துருவாதலாலும், இவளும் ஒத்த னள் - இவள் உமக்கு ஒப்பாக இருக்கின்றவள், ஆதலால் அருள் செய் வாய் - இவளுக்குக் கருணை செய்வாயாக !, எ - று.

114. சோனையொத்த கொடைக்கரன்புக
ழதிகமாகிய தொண்டைமான்
துட்டரைப்பலி யிட்டுவிட்டலர்
சோணகன்வரை தன்னிலே
ஆனெய்தன்னையுண் டெளியெடுத்தது
மரசுதானெரு மூசலின்மேல்
அம்பலந்தனி லேதணழுத்தது
மன்றுதானெரு புதுமைகேள்
மீனையுண்ட பருந்திலேறி
மிகப்பருதந்து சிங்கமாம
வேனையில்லொரு பக்கிகொதந்தி
விசுபபுளாடிய பாகனர்
மானிருப்பது மலையிலேபெரு
மனிதர்நின்பது வாரணம
வண்டுமேறகில பூனையேறுதல்
வையகத்தில் வளப்பமே.

உரை:—சோனை யொதத புகழ கொடைகரன் - மேகம்போன்ற கோதனையையுடைய கொடுகரும கையையுடையவன, அதிகமாகிய தொணட மான் - மிகவுயாந்த தொணடமான அரசன், துட்டரைப் பலியிட்டு விட்ட லா சோணகனவரை தன்னிலே - துட்டராகளைக கொன்று தள்ளி வீரத தோடு விளகுகின்ற திருகக வீரனபோன்ற அவனுடைய மலையிலே, ஆனெய தனனையுணடு எலி யெடுததது - சிவாலயததில விளகளிட பசு நெயயை யுணட எலியானது அரசனுயத தோன்றியதும், அரசு தானெரு மூசலின்மேல் அமபலதனனிலே தனழததுமம - அரசனுகிய சிவபெரு மான மூயலகனை மிதிதது நின்று பொன்னம்பலதிலே நடனஞ் செயத தும், அன்றுதான் - அப்போது நடநதது, ஒரு புதுமை கேள் - இப்போது ஒரு புதுமை சொல்லுகிறேன் கேள், மீனையுண்ட பருந்திலேறி மிகப்

பருத்தது சிங்கமாம் - மீனைத் தின்கின்ற கருடன்மீதேறிய திருமால் நர சிங்காவதாரத்தில் இரணியன் இரத்தத்தைக் குடித்ததில் மிகக் கொழுப் படைந்ததும், வேலையில ஒரு பக்கி கொதறி விசும்புளாடிய பாகனர் - அச சமயத்தில சிம்புள்பறவையாக வந்து சிவபெருமான் அந் நரசிங்கத்தின் உதிரத்தை யடக்கி யாகாயத்திலுலாவினர், மானிருப்பது மலையிலே - மானுகிய உமாதேவி யிருப்பது கைலைமலையிலே, பெருமனிதர் தின்பது ஆரணம் - பெரிய மனிதாகள் அனுபவத்திலறிவது வேதப்பொருள், சில பூனை (பூநெய்) மேல் வண்டு ஏறுதல் - சில வகையான தேனிருக்குமிடத் தில் வண்டு போய்த் தங்குதல், வையகத்தில் வளப்பமே - வையகத்தில் மரபாயுள்ள செய்தி, எ - று.

115. மைதவழ்ந்த மஞ்ஞிழடிக்க ணைற்றியூரி விட்டசூள்
வழுவழுக்கச் சுந்தரற்கு மன்னிமூன் மறைந்தகண்
எய்தவே கொடுத்திரண்டு தூதுசென் றிருந்தியோ
டிணங்கினி ரிணங்கியு மிசைத்தநூலி லேயெலாம
பொய்தவிர்ந்து காமமுந் துறந்ததூய ரேயைப்
பொருந்துவார லாதபேர் பொருந்தலா ரெனச்சொல்வார்
செய்தவாறு செய்வரென்று தேறிநிற்ப தேயலால்
தெரியுமோ தியாகராயர் திருவுளத் தியற்கையே.

உரை :—மை தவழ்ந்த மஞ்ஞிழடிக்கண் - மேகங்கள் ஊர்ந்து செல்லும் படியான மஞ்ஞிழமரதத்தினடியில், ஒற்றியூரில் இட்ட சூள் வழுவழுக்க - ஒற்றி யூரிற் செய்த சபதமானது தவறவே, சுந்தரற்கு மன்னிமூன் மறைந்த கண எயதவே கொடுத்து - சுந்தரமூர்த்தி சுவாமிகளுக்கு மறைந்த கண்ணை மறுபடி நிலைபெறும்படியாக மீளக கொடுத்து, இரண்டு தூது சென்று - அவருக்காகப் பரவையாரிடத்திலே இரண்டுதரம் தூது போய், ஒருத்தி யோடு இணங்கினர் - உமையம்மைபாகிய தேவியோடு கூடியிருந்தார், இணங்கியும இசைத்த நூலிலே எல்லாம் - அப்படிப் பெண்ணோடு சோந் திருந்தும பொருததமான சாத்திரங்களிலெல்லாம், பொய் தவிராது காம மும் துறந்த னையரே - பொயயும் காமமும் ஒழிதத பரிசுத்தமானவரே, நமைப் பொருந்துவார் அலாதபோ பொருதலா ரெனச சொல்வார் - நம்மை வந்து சேரக்கூடும் மற்றவாகள் வந்து சேரக்கூடாதென்று கூறி யிருகின்ரார, செய்தவாறு செய்வதே எனறு தேறி நிற்பதே யலால் - அவர் முனனே செய்த சரிதத்திரங்களில் அருளிசசெய்த முறையிலே அரு ளிச்செய்திருப்பாரென்று நம்பி யிருப்பதேயல்லாது, தெரியுமோ தியாக ராயர் திருவுளத தியற்கையே - மற்றப்படி நாம் தியாகராசப் பெருமா னுடைய திருவுளதனை யறியமுடியுமோ? (முடியாது), எ - று.

116. எத்தலப் புறத்தினும் பிறப்பிறப்பி னுட்படும்
எவ்வுயிர்க்கு மயன்விதிப்ப தென்பதே மிகச்சொல்வார்
கைத்தலத்தி லவர்பெருங் கபாலமாய வன்பெரும்
கருந்தலைக்கு ளொன்றுபட்ட கருமமார் விதித்ததோ
அத்தனைக்கு மொருவரா யளிப்பதோ வதன்றியும்
அன்னவேத னுதியோரை யாளெனப் படைப்பதோ
சித்தமித் தனைக்கெலாந் தியக்கமா நமக்கெலாம்
தெரியுமோ தியாகராயர் திருவுளத் தியற்கையே.

உரை :—எத்தலப் புறத்தினும் பிறப்பிறப்பினுட்படும் எவ்வுயிர்க்கும் அவன் விதிப்பது என்பதே மிகச சொல்வார் - எவ்வுலகத்திலும் எந்த வகையான பிறப்பினும் எல்லா வுயிர்களுக்கும் வினையின் பயனை வரை யறைப்படுத்துவது பிரமாதனென்று மிகுதியாகச சொல்வார்கள், கைத் தலத்தில் அவர் பெருங கபாலமாய் - சிவபெருமானது கையினிடமாகத்தில யோடாய அமர்ந்த, பெரும் கருந்தலைக்குள் ஒன்றுபட்ட கருமம் ஆர் விதித்ததோ - பிரமாவினுடைய பெரிய கரியதலைப் பகுதியில் அப்படிப் பொருந்துவதற் கேதுவான வினைப்பயனை எழுதினவர் யார், அத்தனைக் கும் ஒருவராய் அளிப்பதோ - பிரமா முதலிய அவ்வளவு பேரையும் பாது காப்பது சிவபெருமான் ஒருவர்தானே, அன்றியும் அனனவேதன் ஆதி யோரை ஆள் எனப் படைப்பதோ - அது தவிரவும் அன்னவாகனமுடைய பிரமா முதலியோரை அதிகாரஞ் செலுத்துமபடி நியமித்தும் ஒருவர் தானே சித்தமித்தனைக்கெலாம் தியக்கமோ நமக்கு - இவ்வள வெல்லாம் சிந்திப்பதானால் நமகுத திகிலேற்படுமோ, எலாந் தெரியுமோ தியாகராயர் திருவுளத் தியற்கையே - தியாகராசப் பெருமான் திருவுளதின் தன்மை முழுவதும் நாமறிய முடியுமா? (முடியாது), எ - று.

117 அருணமார் மூலைக்கிடுப டூதூளி மொய்ப்பவும
அருமைபெற்ற சிரூர்தவழ்ந் தடிப்பொடிக்குண் மூழ்கவும்
பொருவிலாத யானைவா சி சேனையின் பராகமே
பொதுளவுந் திருந்தவம் புரிந்துபோக லைப்பரோ
கருவிழாத வகைநமக்கு மாலயன் புரந்தரன்
கரங்குவித் தளங்கனிந்து கண்குளிர்ந்த மாசினற்
றிருவிழா வெழுந்தபூழி யுடலமூட விடுவரோ
தெரியுமோ தியாகராயர் திருவுளத் தியற்கையே.

உரை :—அருணமார் மூலைக்கிடுபடூதூளி மொய்ப்பவும் - தனங்களுக் கிடுகின்ற சிவந்த சந்தனப் பொடியானது நெருங்கி நம்மேல் பரவவும், அருமை பெற்ற சிரூர் தவழ்ந்து அடிப்பொடிக்குள் மூழ்கவும் - அருமை

யாகப் பெற்ற சிறு குழந்தைகளுடைய பாதவூளியினுன் மூழ்கவும், பொரு விலாத யானை வாசி சேனையின் தூளிபராகமே - ஒப்பற்ற யானை குதிரை முதலியன கலந்த சேனையின் தூளியானது பொதுளவும் திருந்தவம் புரிந்துபோக வைப்பரோ - நெருக்கும்படியாகப் படையுளிருந்து அவச செயல் செய்து ஒழியும்படியாக நம்மை யமைப்பாரோ, கருவிழாத வகை - பிறவியில் விழாதபடி, நமக்கு -....., மால் அயன் புரந்தரன் - திருமாலும் பிரமாவும் இந்திரனும், கரம் குவித்து உளம் கனிந்து - கைகுவித்து வணங்கி மனமுருகி, கண் குளிர்ந்த - கண் குளிரும்படி காட்சி பெற்ற, மாலில் நல் திருவிழா எழுந்த பூழி - குற்றமற்ற நல்ல திருவிழாவிலெழுந்த நல்ல புழுதியான்து, உடலம் மூடிவிடுவரோ - நம்முடைய உடலிற் படியும் படியாக அமைப்பாரோ, தெரியுமோ தியாகராயர் திருவுளத்து இயற் கையே - தியாகராயப் பெருமானுடைய திருவுள்ளத் தன்மையை நாம் அறிய முடியுமா ? (முடியாது), எ - று.

118. செய்யோன களங்கன் வளவன் சோழகுலேசன்
சென்னிக்குல தீபன்னுபர் பொன்னித்திரு நாடன்
பொய்யோடொரு நாளுமுறை செய்யாமநு துங்கன்
போர்வல்லவன் மல்லற்பொழில் பொங்குங் குருகேரே
ஐயோவவ ரைப்போலொரு நிட்டூரரு முண்டோ
அஞ்சம்படு கைக்கேதுயர் நெஞ்சமபடு கைக்கே
வெய்யோன் விழுகைக்கேமுழு மதிவந்தெழு கைக்கே
விழிநீர்சொரி கைக்கேயெனை விட்டுப்பிரிந் தாரே.

உரை:—செய்யோன் - செம்மையான இயற்கை யுடையவன், அளங் கள் - களங்க மற்றவன், வளவன் சோழ குலசேலன் - செழிப்புடையவன் சோழவமிசத்தலைவன், சென்னிக்குல தீபன் - சென்னியென்னும் அரச குடும்பத்திற்கு விளக்குப்போல்பவன், உயர்பொன்னித் திருநாடன் - உயர்ந்த காவிரிபாயும் அழகிய தேசத்தை யுடையவன், பொய்யோடு ஒரு நாளும் முறை செயா மநுதுங்கன் - தவறான நீதி செலுத்தாத மனுநீதி யுடைய சிறப்புடையவன், போர் வல்லவன் - போரில் திறமை யுடையவன் ஆகியவனது மல்லல்பொழில் பொங்கும குருங் குருகேரே - வளம் பொருந் திய சோலையில் விளங்கும் நாரைகளே !, ஐயோ அவரைப்போல் ஒரு நிட்டூர முண்டோ - ஐயோ அவரைப்போலொரு கொடியவ ரிருக்கிறாரா, அஞ்சம் படுகைக்கே - மன்மதனுடைய பஞ்ச பாணங்கள் நம்மைத் தாக்கு வதற்கே, துயர் நெஞ்சம் படுகைக்கே - அதனால் நாம் துன்ப மடைவ தற்கே, வெய்யோன் விழுகைக்கே - சூரியன் அஸ்தமிப்பதற்கே, முழுமதி வந்து எழுகைக்கே-பூரணசந்திர னுதயமாகவே, விழி நீர் சொரிகைக்கே-

கண்ணீர் பொழிவதற்கே, எனைவிட்டுப் பிரிந்தாரே - தலைவர் என்னை விட்டகன்றாரே, எ - று.

119. தாக்கச்செறி சுடர்பட்டது தனமேல்விடு பனிநீர்
தரளத்தொகை பொடிபட்டது தழலுற்றது களபம்
வாக்குக்குழ றிப்போனது வசமற்றது கைகால்
மைதோய்விழி நிலையுற்றதென் மடிமேற்றுயில் கொள்வாள்
மூக்கிற்கரம் வைத்தாலுயி ருண்டில்லைய னங்கன்
முழுலீல மெடுத்தாலுயிர் விடுகின்றது சரதம்
காக்கத்திரு வுளமோதுயர் காணத்திரு வுளமோ
கண்ணங்குடி நின்றூர்தம தெண்ணந்தெரி யாதே.

உரை:—தனமேல் விடுபனி நீதாக்கச செறி சுடர் பட்டது - முலைகளின் மேல் தெளிகின்ற பனி நீரானது நெருங்கிய தீப்பொறி பட்டாற் போலிருந்தது, தரளத்தொகை பொடிப்பட்டது - தனங்களின் மீதுள்ள முத்துத் தொகுதிகள் வெப்பத்தினால் வெடித்து உதிர்ந்துபோயிற்று, தழலுற்றது களபம் - சந்தனமானது நெருப்புப்போல வெதுப்பிற்று, வாக்குக் குழறிப் போனது - தலைவியின் மொழியானது தடுமாற்ற மடைந்தது, வசமற்றது கைகால் - கைகளும் கால்களும் அவள் வசப்படாமற் போயின, மைதோய் விழி நிலையுற்றது - மை தடவிய கண்கள் அசையாமல் நின்றது, என் மடிமேல் துயில் கொள்வாள் என்னுடைய மடிமேல் தூக்கங கொண்டாள், மூக்கில் கரம் வைத்தால உயிர் உண்டில்லை - மூக்கில் கை வைத்துப் பார்த்தால் உயிர் உண்டோ இல்லையோ என்ற சந்தேகம் ஏற்படுகின்றது, அனங்கன் முழுலீல மெடுத்தால் உயிர் விடுகின்றது சரதம் - மன்மதன் முழுக்குவளை மலரை யெடுத்து தெயவாளுளுல் இவளுகது உயிர் போவது உண்மையாகும், காக்கத் திருவுளமோ தயாளனத திருவுளமோ - அவளைக காப்பாற்ற வேண்டுமென்ற திருவுளகருததா அல்லது அவளைத் தன் புறுத்த வேண்டுமென்கிற திருவுளகருததா, கண்ணங்குடி நின்றூர் தமது எண்ணம் தெரியாதே - கண்ணங்குடியினின்ற பெருமானுடைய நோகக மின்னதென்று தெரியவில்லையே, எ - று.

120. செங்காண்மட வண்ணமபடர் தியாமென வெருவிச்
சிறையிற்பெடை மறையக்கொடு திரியத்திரள் கழுகின்
பைங்காய்மர கதமீது படர்ந்தேறி நறுந்தண்
பாளைக்கிடை பவளக்கொடி படர்காவிரி நாடா
தங்காதலி யுடன்மைந்தரு மூடனை வணங்கித்
தலைகாவெம தூடல்காவெம துயிர்காவக ளங்கா
கொங்காமது துங்காவென மதுரேசர் வணங்குமை
கொல்யானைகள் பங்காவிவள் சூழலோசை பொருளே.

உரை:—செங்கால் மட அன்னம்படர் தீயோ மென வெருவி - சிவந்த கால்களையுடைய இள அன்னமானது பரவிய நெருப்போ வென்றஞ்சி, சிறையில் பெடை மறைய - தன்னுடைய சிறகின்கீழ்த் தன்னுடைய பெட்டை யன்னமானது புகலடைய, கொடுதிரிய - அப் பெண்ணன்னத் தோடு திரியும்படி, திரள் கமுகின - திரண்ட பாக்குமரத்தின், பைங்காய மரகத மீது - பசிய காயாகிய மரகத மணிகள்மீது, படர்ந்தேறி - படர்ந்து சென்று, நறுந்தண் பாளைக்கிடை பவளக்கொடி படர்காவிரி நாடா-வாசனை யுடைய குளிர்ந்த பாளைகளுக்கிடையில் பவளக்கொடியானது பரவி கிட கின்ற காவிரிபாயும் சோழவள நாட்டை யுடையவனே !, தன் காதலிபுடன் மைந்தரும் உடனே வணங்கி - தங்கள் மனைவி மக்களுடன் வழிபட்டு, அக ளங்கா - களங்கமற்ற மன்னனே !, கொங்கா - கொங்கிற் கதிபதியே!, மது துங்கா - தேன் போலச் சிறந்தவனே !, தலைகா எமது உடல்கா எமது உயிர்கா - எமது தலையைக காக்கவேண்டும் எமது உடலைக் காக்கவேண்டும் எமது உயிரைக காக்கவேண்டு மென்று பிராதனித்துக் கூற, மதுரேசா வணங்கும் - மதுரேசப் பெருமானை வணங்குகின்ற, கொல் யானை கள் பங்கா - கொல்லும் யானையைப் பக்கத்திலுடைய மன்னனே !, இவள் குழல் ஓசை பொருளே - ..., எ - று.

121. நீறுபட்ட கமலமெய்யர் நிலவுபட்ட வேணியர்
நித்தரத்தர் பித்தர்சுத்தர் நிமலர்காவை யீசர்செஞ்
சேறுபட்ட களபமார்பர் திருவெண்ணவ லீசனர்
திருவுளத்தி னினைவறிந்து செப்பவேண்டும் வண்டுகாள்
மாறுபட்ட வேல்கையமபி னூறுபட்ட கொங்கையும
பஞ்சுபட்ட குழலுமுட்ட மாசுபட்ட மேனியும்
ஆறுபட்ட கண்ணுமங்கன் வேறுபட்ட சிந்தையும
அந்திபட்ட போதுபாவி யாவிபட்ட பாடுமே.

உரை:—வண்டுகாள் - வண்டுகளே !, நீறுபட்ட கமல மெய்யர் - திரு நீறு பொருந்திய தாமரைப் பூப்போன்ற திருமேனியை யுடையவர், நிலவு பட்ட வேணியர் - சந்திரன் பொருந்திய சடை முடியை யுடையவர், நித்தர் - நிதனியா, அத்தர் - தாதையரானவர், பிதர - பித்தரென்ற பெயருடையவர், சுததர் - பரிசுத்தமானவர், நிமலர்-குற்றமற்றவர் அல்லது பாசமற்றவர், காவை யீசர்-திருவானைக காவிலுறையும் பெருமானர், சேறு பட்ட களப மார்பர் - சந்தனச சாந்துபட்ட திருமார்பினை யுடையவர், திரு வெண்ணவல் ஈசனர் - வெள்ளையான நாவல் மரதடியில் வதியும் பெரு மான், திருவுளதனின் நினைவறிந்து - திருவுளக் கருத்தினை யறிந்து, மாறு பட்ட வேல் கை யம்பின் ஊறுபட்ட கொங்கையும் - பகை கொண்ட மன் மதனுடைய கணை பொருந்திய தனங்களின வருத்தத்தையும், மஞ்சு பட்ட குழலும் - மேகம்போன்ற கூந்தலும், மூட்ட மாசுபட்ட மேனியும்-நிரம்பிய

அழுக்கு பொருந்திய உடம்பும், ஆறுபட்ட கண்ணும் - கண்ணீர் ஆருகப் பாய்கின்ற விழியும், அகங்கன் வேறுபட்ட சிந்தையும் - அப்படி விகார மடைந்த மனமும், அந்திபட்டபோது பாவியாவி பட்ட பாடுமே - மாலை வந்தபோது தீவினையால் பட்ட துயரமும், செப்ப வேண்டும் - பெருமானுக்கு எடுத்துக் கூறவேண்டும், எ - று.

122. பாரிகூப்பிட நெடியசோலை பரந்துகோகில நிரையெலாம்
பரிந்துகூப்பிட வன்றில்வெள்ள மிருந்துகூப்பிட நதியெனும்
நாரிகூப்பிட விறைவர்பார்வையி னலனழிந்தவ னம்பினால்
நைந்துகூப்பிடு மிவளைவத்தினி நாங்கள் கூப்பிட னீதியோ
வாரிகூப்பிட முன்னமேமத வாலிகூப்பிட விராவணன்
மறிந்துகூப்பிட மதிலிலங்கையின் மகரதோரணமறுகெலாம்
ஓரிகூப்பிட வில்வளைத்தரு ளொருவனேமழை யுருவனே
உலகையோரடி யாலளந்திடு மோங்குவேங்கட வாணனே.

உரை :—வாரி கூப்பிட - கடலானது அலை கட்டும்போது அழைக்கவும், முன்னமே மதவாலி கூப்பிட-அதற்கு முன்பாக செருக்குடைய வாலியழைக்கவும், இராவணன் மறிந்து கூப்பிட - இராவணன் மீண்டு மழைக்க, மதிலிலங்கையின் மகரதோரண மறுகெலாம் - மதிற் சுவருடைய இலங்கை நகரில் மகர தோரணங் கட்டிய தெருக்களிலெல்லாம் ஓரி கூப்பிட - நரியூளை யிடும்படியாக, வில் வளைத்தருள் ஒருவனே - வில்லை வளைத்து அம்பு விடுத்த ஒப்பற்றவனே !, மழை யுருவனே - மேகம்போன்ற திருமேனியை யுடையவனே !, உலகை யோரடியால் அளந்திடும் ஓங்கு வேங்கடவாணனே - உலகத்தைத் தமது திருவடியாலளந்த திருவேங்கடத்திலுறையும் பெருமாளே !, நெடிய சோலை பாரி கூப்பிட - பெரிய பொழில்கள் மகரந்ததை நிலதிண்மே லிடவும், பரந்து கோகில நிரையெலாம் பரிந்து கூப்பிட - குயில் வரிசைக ளெல்லாம் எங்கும் பரவி இரக்கம் வரும்படியாகக் கூவவும், அன்றில் வெள்ளம் இருந்து கூப்பிட - அன்றிற் பறவைக் கூட்டமானது மாகங்களில் தங்கிக் கூவவும், நதியெனும் நாரி கூப்பிட - ஆறுகிய பெண் ஒலி செய்யவும், இறைவர் பார்வையின் நலன் அழிந்தவன் அம்பினால் - சிவபெருமானினது கண்ணினால் உருவழிந்த மன்மதனுடைய அம்பினால், நைந்து கூப்பிடும் இவளை - நைந்து வருந்துகின்ற இப்பெண்ணின் பொருட்டு, இனி நாங்கள் கூப்பிடல் நீதியே - இனிமேல் நாங்கள் உன்னிடம் முறையிடுவது நியாயமா ?, எ - று.

123. தண்டாமரைதரு நாண்மலர்மீ தோதிமமீனத்
தாளத்திரள் பவளத்திர ளெண்றேழையர் தங்கைக்
கொண்டாடிட முன்னீக்கிது மன்னத்திரு செம்மைக்
குணநான்மடி யுளதாகிய குழகாவிரி நாடா

பண்டாலிலே யமளித்துயில் குழவிப்பரு வத்தே
பௌவத்தொடு முலகைச்சிறு பவளத்திரு வாயால்
உண்டாயக ளங்காகிக ளங்கால்கரி தொழுதாள்
உய்யத்திரு வுளமோவெது செய்யத்திரு வுளமோ.

உரை :—தண்டாமரை தரு மலர்மீது ஓதிமம் - குளிர்ந்த செந்தாமரைப் பூவினமீது அன்னமானதிருப்பதை, மீனத தாளதத்திரள் பவளத்திரள் எனறு - நட்சத்திரம்போன்ற முதலின தொகுதி பவளகூட்டத தின்மே லிருப்பதுபோலா மென்று, ஏழையா தம் கைக கொண்டாடிட - பெண்கள் தங்கள கையகத்திற் பிடிதகை கொணடாடுவதிஞலே, முன்னைக் கிது யன்ன முன் - செந்தாமரை மலரி லிருப்பதோடு பெண்களுடைய கையாகிய செந்தாமரையிலும் பொருந்துவதால், செம்மைகுணநான் மடியுளதாகிய - செந்நிறமானது நான்கு மடங்கு அதிகமாகப் பெற்ற, குழ காவிரி நாடா - புதுப் புனலுடைய காவிரி பாயும் நாட்டையுடைய வனே !, பண்டு ஆலிலே யமளிததுயில் குழவிப் பருவத்தே - முறகாலதத்தில் ஆலிலையாகிய படுகையில் படுதத துறகும் பிள்ளைப் பருவதத்திலேயே, பௌவததோடும் உலகைச சிறு பவளத திருவாயால் உணடாய் - கடலோடு உலகத்தையும் உன்னுடைய சிறிய வாயினுலே உட்கொண்டாய, அகளங்கா - களங்க மற்றவனே !, நிகளங்கால் கரிதொழுதாள் - உன்னுடைய விலங்கு பூட்டிய ஆனையினடியை அவள தொழுதாள், உய்யத திருவுளமோ - இது செய்யத திருவுளமோ அவளுய்யும்படி நீ மனம் வைகிறுயா அல்லது வேறு யாதுசெயயக கருதுகின்றுய், எ - று

124. வண்ணகுங்கும பயோவாகுவரி
கேசரிக்குரிய மருகனும
மதுரையாதிபதி சீவலச்செழியன்
வழுதிவம்சகுல தீபகன்
தன்னைமுன்பவனி கண்டுநெஞ்சுகலி
வனிகள்தோற்ற மடமங்கையர்
தாயரற்றவரு மல்லரின்றெனது
தலியெழுத்தினு மடைந்ததால்
என்னையிங்கிலவி விட்டுவப்பதவு
மன்றிவெய்யபனி நீரைமேல்
இறைத்துயித்திலமு நீறுசெய்திடுவ
ளிளமையான பருவத்திலே
அன்னையன்னயதி பாவிபாவியிவ
ளாசைகொண்டவளு மல்லண்முன்

ஆசைகொண்டசில மாதர்தங்களிட
வருகிருந்தவளு மல்லளே.

உரை :—வண்ண குங்கும பஉரவாகு அரிகேசரிக்குரிய மருகனும் - குங்குமப்பூக்கலந்த செஞ்சந்தனக் குழம்பணிந்த புயங்களையுடைய அரிகேசரி வேந்தனுக்குரிய மருமகனுமிய, மதுரையாதிபதி - மதுரைக்குத் தலைவனுமிய மும, சீவலசெழியன் வழுதிவம்சகுலதீபகன் தன்னை - பாண்டியகுலவிளக் காயுமுள்ள சீவலமாற பாண்டியனை, முன்பவனி கண்டு - முன்னுளில் ஊர் வலம் வருவதைக கண்டு, நெஞ்சு கலை வளைகள் தோற்ற மடமயிலையா - மனத்தையும ஆடையையும் வளையல்களையும் மோகததால் கழுவபபெற்ற, இளம் பெண்கள், தாயா அற்றவரு மல்லா - தாயிலலாதவர்களாயு மில்லை, என்று என தலையெழுத்தினு மடைததால் - இக்காளில் எனக்கு மாத்திரம் தாயின் கெடுதி தலையெழுதாய அமைததது, என்னை இங்கிலவிவிட்டு வைப்பதுவும் - எனக்குச சூடிருப்பதாகவெண்ணி நிலவொளியி லிருகசும்படி செய்தும், அன்றி வெயய பனிநீரை மேல் இரைத்தும் - அதுவுமல்லாமல் வெப்பந் தருகின்ற பனிநீரை என்மேல் தெளிதது, நிதகிலமும் கீறு செய் திடுவள் அன்னை - என் முத்துமாலையும் வெப்பததால் பொடிபடும்படியாகத தாய செயகின்றாள், அனனை பாவி பாவி இளமையான பருவத்திலே ஆசை கொண்டவளல்லள் - மிகப் பாவியாகிய என் தாய தனது இளமைப் பரு வததிலே காதல் கொண்டவளல்ல, முன் ஆசை கொண்ட சில மாதா தவகளிட அருகிருத்தவளும் அல்லல் - காதல்கொண்ட சில பெண்கள் பக்கத திலேகூட அவளிருநததாகத தெரியவிலலை, எ - று.

125. பூதம்பணி கொண்டாய்கடல் பாதந்தொழ நின்றாய்
புயலேத்தினை யிட்டாய்கயல் பொற்குன்று பொறிதாய்
மூதண்டபு ரேசன்கதிர் முடிசிந்தமு னிந்தாய்
மூரிச்சிலை வேளாண்மை முடிக்குந்திற மிதோ
வேதண்டமோ ரெட்டுங்கிளர் வேழங்களோ ரெட்டும
விடநாகமு முடிநொந்து விழாமற்புவி யாளும்
கோதண்டமு குந்தாவர குலசேகர மாரு
கூடற்பதி யிறைவாவுயர் கொற்கைப்பெரு மானே.

உரை :—வேதண்ட மோர் எட்டுங் கிளர் வேழங்களோர் எட்டும் - அட்டகுல பருவதங்களையும் எட்டுதிக்கு யானைகளையும், விட நாகமும் முடிநொந்து விழாமல் புவியாளும் - விடமுடைய பெரிய பாம்புகளும் வருநதாமல் பூமியை யாளுகின்ற, கோதண்ட முகுந்தா வரகுல சேகர மாரு - வில்லையுடைய திருமாலபிசமானவனே! வரத்தாற் பிறந்த குலசேகர பாண்டியனே!, கூடற்பதி இறைவா - மதுரைப்பதிக்குத் தலைவனே!, உயர் கொற்கைப் பெருமானே - உயர்ந்த கொற்கைப் பதிக்கு அதிபதியே!, பூதம்

பணிகொண்டாய் - பூதங்களே ஏவி வேலை செய்வித்தாய், கடல் பாதம் தொழ நின்றாய் - சமுத்திரமானது உன்னுடைய திருவடியை வணங்கும் படியாகப் பெருமிதத்தோடு நின்றாய், புயலைத் தளையிட்டாய் - மேகத்திற்கு விலங்கு பூட்டினாய், கயல் பொறிகொன்று பொறித்தாய் - கயல் மீன் கொடியை மேருவில் வரைந்தாய், மூதண்ட புரேரன் கதிர்முடி சிந்த முனிந்தாய் - வானுலகத்திற் கதிபதியின் மணிமுடியாகிய கிரீடம் விழும்படியாகக் கோபித்தாய், மூரிசிலை வேள் ஆணமை முடிக்குந் திறமிதோ-வலிய கரும்பு வில்லையுடைய மன்மதனுடைய வீரத்தை யழிக்குந் திறமை யுனக்குக் கடினமா ?, எ - று.

126. அண்டரண்டபகி ரண்டமூந் திசையும்
வெடிபடப்பிளிறி யடியினால்
அரவினுச்சிநெற நெறனைப் புடவி
யடவிதூளி யெழவடவையும
துண்டகண்டமுற வடுபனைக்கைமத
வேழநல்கியருள் தொண்டைமான்
துங்கவேங்கடவன் மல்லியாநிபதி
தோளின்மாலையரு ளாதநாள்
சண்டை சண்டைமத ராஜனுக்குமிவ
ளுக்குமென்பதறி யாமலே
தழலில்வெய்யபனி நீரையும புழுகு
தண்ணையுங்கொடிய வண்ணமீர
மொண்டு மொண்டிளகு சந்தனத்தொடு
குழைக்கிறீரிவள் பிழைக்கவோ
மூச்சுமில்லையொரு பேச்சுமில்லை யிவண்
முல்லையிலிட்டறிய வாருமே.

உரை :—அண்டரண்ட பகிரண்டமூந் திசையும் வெளிபட பிளிறி - வானுலகமும் அதற்கு மேற்பட்ட வுலகங்களும் எதிரொலிசெயயும்படியாக முழங்கி, அடியினால் கீழே பெலமாக அடிவைத்தது நடப்பதால், அரவின் உசசி நெறநெறென - பாம்பின் சிரசானது நெறநெறெனவும், புடவி யடவி தூளி எழ - பூமியிலும் காடுகளிலும் புழுதி கிளம்பும்படி யாகவும், வடவையும் துண்ட கண்டமுற - வடவா முகாக்கினியும் துண்டு துண்டாகும்படி யாகவும், அடுபனைகளை மதவேழம் நலகிபருள் தொண்டைமான்-கொல்லும் படியான மதம் பொருந்திய யானையைப் பரிசாகக் கொடுத்தருள்கின்ற தொண்டைமானென்னும் மன்னன், துங்க வேங்கடவன் - சிறந்த திருவேங்கட மலைக்கு அதிபன், மல்லியாதிபன் - கடல் மல்லியாகிய மாவலி புரத்திற்குத் தலைவன், தோளின் மாலை யருளாத நாள் - அவன் தோளி

லுள்ள மாலையைக் கொடுக்காத நாட்களில், சண்டை சண்டைமத ராச னுக்கு மிவளுக்கும் என்பதறியாமலே - உக்கிரமான போர் மன்மதவேந்த னுக்கும் இவளுக்கும் எற்படுமென்பது தெரியாமல், , கொடிய அன்னைமீர்- கொடுமையான தாய்மார்களே !, தழலில் வெய்ய பனி நீரையும் புழுகு தன்னையும் - தழல்போலச குடான பனி நீரையும் புனுகையும், மொண்டு மொண்டு - எடுததெடுத்து, இளகு சந்தனத்தொடு குழைக்கிறீர் - மெழிந்த சந்தனத்தோடு கலக்குகிறீர்களே!, இவள் பிழைக்கவே - இவள் உயிர் வாழ் தற்கு வழியாயித ?, இவளுக்கு - மூசசுமில்லை ஒரு பேசசுமில்லை - ....., இவள் முலையிலிட்டு அறியவாருமே - சூடு இருக்கிறதா இல்லையா என்று சோதித்துப் பாரப்பதற்கு வாருங்கள், எ - று.

127. கன்றுகொண்டு விளவெறிந்த கண்ணர்பூசை செய்திடும்
கமலமா யிரத்திலொன்று காணவில்லை யென்றுகண்
ணன்றுகொண்டு விட்டவாதி கடவுளோடு பங்குகொண்
டயலிருந்து வாழ்பவ னலங்கன்மாலை தருவனே
குன்றுகொண்டு பந்தடித்து நீழலைச் சுளித்து போய்க்
குந்தியம்பு ராசியைக் குடித்துவேழ மெட்டையும்
வென்றுகொன்று பிளிறுகின்ற களிறுநல்கி யுலகெலாம
விதரணத்தை நிலைநிறுத்து மிழலைவீதி நாதரே.

உரை :—குன்று கொண்டு பந்தடித்து நீழலைச் சுளித்துபோய் - மலை களை யெடுத்துப் பந்துபோல வீசித தன்னுடைய நிழலைக்கண்டு கோபித் தசசென்று, குந்தியம்பு ராசியைக் குடித்து - ஓரிடதிலிருந்து கடலைக் குடித்து, வேழம் எட்டையும் வென்று - எட்டுத்திக்கு யானைகளையும் தன் னுடைய ஆற்றலினாலே செயித்து, கொன்று பிளிறுகின்ற களிறு நல்கி - பலவற்றையுங்கொன்று முழங்குகின்ற யானையைக்கொடுத்து, உலகெலாம் விதரணத்தை நிலைநிறுத்தும்-எல்லா வுலகங்களிலும் ஈகையை நிலைநிறுத்து கின்ற, மிழலை வீதி நாதரே - திருவீழிமிழலை வீதியி லெழுந்தருளும் பெரு மானே!, கன்று கொண்டு விளவெறிந்த கண்ணர் பூசைசெய்திடும் - கன்றுக் குட்டியை யெடுத்து விளவாய் நின்ற அசுரனை எறிந்து கொன்ற திருஷ்ண மூர்த்தி அர்சசனைசெய்கின்ற, கமலமாயிரத்திலொன்று காணவில்லை - ஆயி ரம் தாமரைப்பூவில் ஒருபூக்காணுமல்போகவே, கண் அன்று கொண்டுவிட்ட ஆதி கடவுளோடு-அன்று கண்ணையெடுத்து ஒரு மலராக அர்ச்சிக்க அதனை ஏற்றுக்கொண்ட முதற் கடவுளாகிய சிவபெருமானோடு, பங்குகொண்டு அய லிருந்து வாழ்பவன் - ஒரு பாகம் திருமேனியிற் கொண்டு பக்கத்திலிருந்து வாழ்பவனாகிய திருமால், அலங்கல் மாலை தருவனே - விளங்குகின்ற தன் னுடைய மாலையைக் கொடுப்பானே, எ - று.

128. பேயிரங்கவு முயிரருந்திய பிள்ளைமாமுகில் சுந்தரன்
பெருகுதண்புனல் வையையந்துறை பிரிவுறுத மகன்றில்காள்
தாயிரங்குவ தற்றவர்க்கொரு தமரிறங்க நினைப்பரோ
தலையிலிப்படி யெழுதுமோவிது சதுமுகற்கிது நீதியோ
வேயிரங்குவ தொன்றுகாம விரோதமொன்றுள தல்லதால்
வெண்மதித்தழ லென்றிருத்தியை வெல்லவித்தனை வேண்டு
ஆயிரம்பகைகூடியென்செயு மாவியொன்றலதில்லையால் [மோ
ஆகிலுஞ்சொல நீரறிந்திரு மன்பர்பெண்பழி யாளரே.

உரை :—பேயிரங்கவும் உயிரருந்திய பிள்ளை மாமுகில் சுந்தரன் - பூதனையாய்ப் பால் கொடுக்கவந்த பேய் மகளின் உயிரைக்கவர்ந்த குழந்தை வடிவான பெரிய மேகம்போன்ற அழகனுடைய, பெருகுதண் புனல் வையை யந்துறை பிரிவுறுத மகன்றில்காள் - வெள்ளமாகப் பெருகுகின்ற வையை நதிக்கரையிற் வாழும் பெண்ணன்றிற் பறவைகளே!, தாயிரங்க அற்றவர்க்கு ஒரு தமரிரங்க நினைப்பரோ - அன்னே பரிவு கூறுதற்கில் லாத பெண்களுக்கு உறவினர் பரிதாபப் படுவார்களா, தலையில் இப்படி எழுதுமோ இது சதுமுகற்கு இது நீதியோ - தலையில் இவ்வாறு எழுது வானு அந்த பிரமனுக்கு இது முறையாகுமா?, வேயிரங்குவதொன்று காம விரோதம் ஒன்று அல்லாதால் - வேய்ங்குழல் ஒலிப்பது ஒரு கெடுதி மன்மதனுடைய பகை மற்றொரு கெடுதியல்லாமல், வெண்மதித் தழல் ஒன்று - வெண்மையான சந்திரன் ஒரு நீங்காகுமை, ஒருதனியை வெல்ல இத்தனை வேண்டுமா - ஒருத்தியைச செயிப்பதற்கு இவ்வளவு இடைஞ்சல் கள் வேண்டுமா, ஆயிரம் பகை கூடி யென் செயும் - விரோதமான காரி யங்கள் ஆயிரம் கூடினாலும் என்ன, ஆவி யொன்றல தில்லையால் - உயிர் ஒன்று தவிர வேறில்லை, ஆகிலுஞ் சொல நீர் அறிந்திரும் - ஆனாலும் என் னைப்பற்றித் தலைவருக்கு எடுத்துச சொல்ல நீர் இவற்றை அறிந்திருப் பீராக, அன்பர் பெண்பழியாளரே - காதலர் பெண்ணைக் கொல்லும் பாத கரே, எ - று.

129. காவிரித் துறைப்படிந்து பொருநையைக் கலக்கியே
கடைக்கணங்கிகொண்டுகொற்கை கனல்கொளுத்துமியானை
வாவுமிக்க மாவுகைக்கும் வஞ்சிவென்ற வஞ்சியான் [யான்
மதுரைவீர கஞ்சுகன் வரைப்புறத்த மாதரீர்
பாலையர்க்கு வாடைவே றெனக்குவேறு வாடையோ
பாயன்மற் றவர்க்குவே றெனக்குவேறு பாயலோ
யாவருக்கு மதியம்வே றெனக்குவேறு மதியமோ
யாளெருத்தி பெண்பிறந் திரண்டுபட்ட தூலகமே.

உரை :—காவிரித் துறைப்படிந்து பொருகையைக் கலக்கியே - காவிரி யாற்றுத் துறையில் மூழ்கி தாமிரபர்ணியிற் படிந்து கலக்கி, கடைக்கண் அங்கிகொண்டு - கடைக்கண்ணிலிருந்து தோன்றும் நெருப்புப் பொறியைக் கொண்டு, கொற்கை கனல் கொளுத்தும் யானையின் - கொற்கையில் தீப் பற்றும்படி செய்யும் யானையை யுடையவனும், வாயுமிக்க மாவுகைக்கும் வஞ்சிவென்ற வஞ்சியின் - தாவிச செல்வதில் சிறந்த குதிரைகளைச் செலுத் தும் சேர மன்னனை வென்ற வஞ்சகமற்றவனுமாகிய, மதுரைவீர கஞ்சுகன் வரைப்புறத்து மாதரீர் - மதுரையிலுள்ள வீரகஞ்சுகனென்னும் மன்ன னுடைய மலையிடத்து வாழும் பெண்களே!, பாவையர்க்கு வாடை வேறு எனக்கு வேறு வாடையோ - வாடைக் காற்றானது மற்றப் பெண்களுக்கு ஒரு வகையாகவும் எனக்கு வேறு வகையாகவும் அமைத்துளதோ, பாயல் மற்றவர்க்கு வேறு எனக்கு வேறு பாயலோ - படுகை மற்றவர்க்கு வேறு வகையாகவும் எனக்கு வேறு வகையாகவும் அமைத்துளதோ, யாவருக்கும் மதியம் வேறு எனக்கு வேறு மதியமோ - மற்றெல்லாருக்கும் சந்திரன் வேறு விதமாகவும் எனக்கு வேறு விதமாகவும் ஒளி தருகின்றதோ, யான் ஒருத்தி பெண் பிறந்து இரண்டு பட்டது உலகமே - யான் ஒருத்தி பெண ணைப் பிறந்த பிற்பாடு இவைகளெலலாம் எனக்கொரு வகையாகவும் மற்றவர்களுக்கு ஒரு வகையாகவு மிருப்பதால் உலகமே இருவேறு தன்மை யுடையதாயிற்று, எ - று.

130. திக்கயங்க ளெட்டுமுட்ட வைத்தபுட்ப தாகையான்
செழியர்கொற்ற வளவர்வந்து திறையளக்கு முன்றிலான்
மைக்கருங்கண் மாதரார் மனங்கவற்று மாரவேள்
மதுரைவீர கஞ்சுகன் மணந்ததந்த பந்தநோய்
கைக்குள்வந் தகப்படாது கண்முனிற்கு மொருவராற்
காணுனைது காணுமென்று காட்டொணாத தன்றியும்
ஒக்குமென் றுரைக்கலான வுவமையில்லை யிருவரும
உள்ளறிந்த தன்றிமற் றிவ்வூரறிந்த தல்லவே.

உரை :—திக்கயங்கள் எட்டு முட்டவைத்த புள் பதாகையான் - எட்டுத் திக்குகளிலுமுள்ள யானைகளைப்போய்த் தட்டும்படியாக பரவுகின்ற பறவைக்கொடியை யுடையவன், செழியா கொற்ற வளவர்வந்து திறை யளக்கு முன்றிலான் - பாண்டியர்களும் வீரமுடைய சோழர்களும் வந்து கப்பங் கட்டுகின்ற வாசலை யுடையவன், மைக்கருங்கண் மாதரார் மனங்க வற்று மாரவேள் - மை தீட்டிய கண்களையுடைய பெண்களின் மனத்தை மோகத்தால் வருத்துகின்ற மன்மதனைப்போல்பவன் ஆகிய, மதுரைவீர கஞ்சுகன் மணந்து தந்த பந்த நோய் - மதுரைவீர கஞ்சுக னென்பவன் என்னைக் கலியாணஞ்செய்து எனக்குக் கொடுத்த வியாதியானது, கைக் குள் வந்து அகப்படாது - நம்முடைய கையினிடத்தில் அகப்படுவது

மில்லை, கண் முன்னிற்கும் ஒருவரால் காணுணுத - கண்ணுக்கு முன்னே நிற்பதுபோலத தோன்றும ஆனல் உறுதியாகக காண முடியாது, காட்டொணுதது - இன்னொருவருக்குக் காட்டவேண்டுமென்றலும் அது முடியாததாக விருக்கிறது, அனறியும - அது வல்லாமலும், ஒக்குமென் றுரைக்கலான உவமையில்லை - அது எதைப்போலும் என்று சொல்லுதற்கு உவமானப் பொருளுமில்லை, இருவரும் உள அறிந்ததன்றி மற்று இவ்வூர் அறிந்த தல்லவே - தலைவனும நானும் அறிதோமே யன்றி மற்றும் இவ்வூரிலுள்ளவர்கள அதைத தெரியவில்லை, எ - று.

தாய் பாலனைப் பார்த்துக் கூறல்

131. மலைந்த மன்னவர்கள் வானிலேற
வடிவாள்விதிர்த்த முகில்சுந்தரன்
வாகைகொண்ட பராராஜ கேசரிதன்
மதுரையங்குரிசில் பின்புபோய்
உலைந்தலைந்து விலையாடுகின்ற வுனவன்
தெடுத்துரிய தாயலால்
உங்களையரை யழைத்து வாவென
வுரைத்தபோதவளோ டென்சொலுய்
அலைந்தலைத் தவிழ்செய் குழலுமக்குழலி
லள்ளியிட்ட சிறுபூழியும
அமுதமூறு கனிவாயு மந்தவமு
தருவியாரெழுகு பண்டியும்
கலைந்தசெம் பொன்வலையும பிசைந்திரு
கருங்கண்ணமைப்படு புறங்கையும
கழன்று தொங்குமலர் ஞாணுமாகவரு
காதலார்சிறிய களபனே.

உரை :—அலைந்து அலைந்து அவிழ்செய குழலும் - அலைந்தலைந்து அவிழந்து விடக்கின்ற தலைமயிரும், அக்குழலில் அள்ளியிட்ட சிறு பூமியும் - அதிலே யெடுத்துப் போட்டுகொண்ட புழுதிப்பொடியும், அமுத மூறும் கனிவாயும் - அமுதம்போன்ற இனிய நீர ஊறுகின்ற குழைவான நிருவாயும், அந்த அமுத அருவி யாறு ஒழுகு பண்டியும் - வாயிலிருந்து விழுகின்ற அமுத நீர வழிந்து விளகும் வயிறும், கலைந்த செம்பொன வலையும் - கழலுகின்ற செம்பொன்னினுல் செய்த கையிலிட்ட காப்பும், பிசைந்த இரு கருங்கண் ணமைப்படு புறங்கையும் - கண்ணைப் பிசைவதினுற் கண்ணிற் றீட்டிய மைபட்ட புறங்கையும், கழன்று தொங்கு மலர் ஞாணுமாக வரு காதலர் சிறிய களபனே - நெகிழாதசைகின்ற பூப்போன்றுள்ள அரைஞாணுமுடைய விருப்பதனைத் தருகின்ற யானைக்கன்று போன்ற

வனே !, மலைந்த மன்னவாகள் வானிலேற - எதிர்த்தத அரசாகள் இறந்து சுவர்ககம் புகும்படியாக, வடிவாள் விதிர்த்த முகில் சுந்தரன் - கூரிய வாளை வீசிய மேகம்போன்ற அழகுடைய, வாகை கொண்ட பராச கேசரிதன் மதுரை யகருரிசில் பின்பு போய் - வெற்றிகொண்ட பராச கேசரியென்னும் மதுரை மன்னன் பின்சென்று, உலைந்து அலைந்து வீளை யாடுகின்ற உனைவர் தெடுத்தி - உடல் வருந்த விளையாடுகின்ற வுன்னைச செவிலி தன் கையிலெடுத்து, உயரிய தாயலால் - உனது மேன்மையான தாயை யல்லாமல், உககள் ஐயரை அழைத்து வாவென உரைத்தபோது அவளோடு என் சொலுய் - உன்னுடைய தகப்பனுரையுக கூட்டிக் கொண்டு வருவாயென்று சொன்னபோது நீ அதற்குப் பதிலாக யாது கூறினுய், எ - று.

132. பாகசாதன கிரீடகோடிபொடி
படவெறிந்தகொடி மீனவன்
படவிலேறி யெழில் வாசியேறியெழு
பார்புரக்குமுகில் சுந்தரன்
நியாக தாருவென நாவலர்க்குதவு
செங்கையானரச ராகவன்
திசைதொறுந் தாளமணி கொழித்துவரு
திருவயற் றுரையிலன்னமே
மாகமவேகம்வரு திங்களா லிகாய
தென்றலாலொலி செயன்றிலால்
வாடையா லயல்சொல் வமபினுல் கடல்செய்
கமபினுல்மதன னமபினுல்
ஆகமேதுபடு நெஞ்சமேது படு
மாசையேதுபடு கிலேயிலா
அமளியேதுபடு நாணமேதுபடு
மந்திமாலைபடு நேரமே.

உரை:—பாகசாதன கிரீட கோடிபொடி படவெறிந்த கொடிமீனவன்- இந்திரர்கள் பலருடைய முடிகள் கீழே விழும்படியாக வளையெறிந்த பாண்டியனுடைய, படவிலேறி எழில் வாசியேறி - கப்பலி லேறிசென்றும் அழகிய குதிரைகள்மீது சென்றும் எழுபார புரக்கும் முகில் சுந்தரன் - ஏழு லோகத்தையும் காப்பாற்றுகின்ற மேகம்போன்ற சுந்தரனென்னும் பெயருடையவன், நியாகதாருவென நாவலர்க்குதவு செஙகையான் அரச ராகவன் - ஆகிய கற்றவாகளுக்குக் கொடையளிக்கின்ற சிறந்த கையையுடைய ராமன்போன்ற மன்னனது, திசைதொறும் தாளமணி கொழித்துவரும் திருவயல் அன்னமே - திசைகளிலிருக்கும் முத்துகளையும் இரத்தினங்களை

யும் கொழிக்கின்ற திருவயலைச சூழ்ந்துள்ள குளப் படித்துறைகளில் வதி கின்ற அன்னமே, மாகம் வேகம் வரு திங்களால் - ஆகாயதலில் வேகமாக கதிர் வீசி வருகின்ற சந்திரனாலும், இளைய தென்றலால்·மெல்லிய தெனறற் காற்றினாலும், ஒலிசெய் அன்றிலால் கூவுகின்ற அன்றிற் பறவையினாலும், வாடையால் - வாடைக் காற்றினாலும், அயல் சொல் அம்பினால் - அயலா ருடைய பழி தூற்றுதலாகிய கணையினாலும், கடல் செய் கம்பனால் - கடல் செய்கின்ற அதிர்ச்சியினாலும், மதனன் அம்பினால்-மன்மதனுடைய கணையி னாலும், அந்தி மாலைபடு நேரமே - மாலைப்பொழுதில் மயங்குகின்ற முன் னிரவு நேரத்தில், ஆகம் எதுபடும் - உடம்பு என்ன பாடுபடும், நெஞ்சம் எதுபடும் - மனம் என்னபாடுபடும், ஆசை யேதுபடும் - காதலுணர்ச்சி யெவ்வளவு தன்புறுத்தும், நிலையிலா அமளி யேதுபடும - நிறமாகப் படுக்க முடியாத படுக்கை எவவாறுகும், நாணம் ஏதுபடும் - வெட்கம் எவ வாறு நிலைபெறும், எ -று.

133. சந்தனுடவிமலைப் பிறந்த தமிழ்ச்சங்கம
வீறிவளர் கூடலான்
தாறுகொன்றுநிழல் சீறுகின்றகளை
சாய்த்தெறிந்தகளி யானையான்
மந்தரா சலமெடித்து வாசுகிபிணித்து
வாரிதி கடைந்தமால்
வாலைவாகுபெறு சுந்தரன் குவலைமாலை
கேட்டபின் மடந்தைமீர்
அந்திமாலைதனில் வந்துபோர்செயு
மனந்தவேள் பகழிவெள்ளமோ
ஆவிசோரமட நாண்வரம்பழியு
மாசைகொண்டபெரு வெள்ளமோ
இந்தவானிலவின் வெள்ளமோ மகளி
ரேசுகின்றபெரு வெள்ளமோ
இருகண்மாரி பொழிவெள்ளமோ வுலகி
லெந்தவெள்ளமிக வானதே.

உரை:—மடந்தைமீர - பாங்கிமாரே !, சந்தனுடவிமலைப் பிறந்த தமிழ்ச சங்கம் வீறி வளர் கூடலான் - சந்தன காடுகளுடைய பொதிய மலையில் தோன்றிய தமிழைச சிறப்பாக வளர்க்கின்ற சங்கங்கள் தங்கிய மதுரைப் பதியை யுடையவன், தாறு கொன்று நிழல் சீறுகின்ற கழை சாய்த்தெறிந்த களியானையான் - வாழைக் குலைகளை யழித்துத தன்னிழ லைப் பார்த்துக கோபித்துக கரும்புகளை முறிதத்துத் தள்ளுகின்ற மத யானையை யுடையவன், மந்தராசலமெடுத்து வாசுகி பிணித்து வாரிதி

கடைந்த மால் - மந்தர மலையை மத்தாக நாட்டி வாசுகியைக் கடையிறாகப் பூட்டித திருப்பாற கடலில் அமுதங் கடைந்த திருமாலின் அமிசமானவன், வாகை வாகுபெறு சுந்தரன் - வெற்றிமாலையைப் புயத்தி லணிந்த சுந்தரனென்னும் மன்னனுடைய, குவளைமாலைகேட்டபின் - குவளைமாலையை வேண்டுமென்று நான கேட்டபின், அத்திமாலைதனில் வந்து போசெயும் அனகவேள் பகழி வெள்ளமோ - சாயங்காலப் பொழுதில் சண்டை செய்கின்ற உருவிலாத மன்மதனுடைய கணைகளின் பெருகமோ, ஆவி சோர மட நாண வரம்பு அழியு மாசைகொண்ட பெரு வெள்ளமோ - உயிர் தளரும்படியாக மடமை நாணம் என்பவற்றின் எல்லைகள் அழிதற் கேது வாகிய காதல் மிகுந்த பெருகமோ, இந்தவான் நிலவின் வெள்ளமோ - ஆகாயதிற் காணப்படுகின்ற சந்திர வொளியின பெருக்கமோ, மகளி ரேசுகின்ற பெருவெள்ளமோ - பெண்கள் பழி கூறுகின்ற வசை மொழியின் பெருக்கமோ, இருகண் மாரி பொழி வெள்ளமோ - இரண்டு கண்களிலிருந்து வடிகின்ற கண்ணீரின் பெருக்கமோ, உலகில எந்த வெள்ளம் மிக ஆனதே - உலகதில் எதன் பெருகம் மிகுதிப்பட்டதாகு மென்று கூறுங்கள், எ - று.

134. பழுத்துடைந்தகனி நெக்கு நெக்குருகி
சாறுவீழவடி சேறெழும
பல்பெருஞ்சுணைய யமுதமென்று வெயில்பட
வொணுதென மறைப்பபோல்
பொழிற்புறஞ் சொரியுமுகி லினந்தழுவு
புதுவைவாழ்சடைய னுதவுசேய்
பூதலமபரவு சேதிபன்றனது
பொன்னிடைனைய பூவையார்
விழித்தனந்தலொ டெழுந்திருந்ததுவு
மெய்துவட்சியு மிழ்ச்சியும
மென்மருங்கினி லெடுத்ததடுத்ததுவும
மேகலைத்தலை யணைத்ததுமு
வழுத்திவந்துநிரு கீறுதந்துவிடை
தந்தபார்வையை மறப்பினும
வாசலின்படி பிடித்து நின்றநிலை
மனமறப்பதிலை காணுமே.

உரை:—பழுதடைந்த கனி நெக்கு நெக்குருகி - பழுத்துக் கீறிய பழங்கள் பிளவு பிளவாய வெடிததுக் கனிந்து, சாறுவீழ வடிசே றெழுமபல் பெருஞ் சுணையை - கனிரசம் கீழே விழுந்து மணலோடு கலந்து நிறைந்திருக்கும் பல பெரிய நீர் நிலைகளை, அமுதமென்று வெயில்பட வொணு

தென மறைப்ப போல்-அமுத மென்று அதன்மேல் வெயில் படாது மறைப் பதுபோல, பொழிற் புறஞ் சொரியும் - சோலையின் வெளியே மழையைப் பொழிகின்ற, முகிலினம் தழுவு புதுவை வாழ் சடையனுதவு செய்-மேகக் கூட்டங்கள் தழுவும் சோலைகள் சூழ்ந்த புதுவைப்பதியில் வாழ்கின்ற சடைய னென்பவர் புதல்வராகிய, பூதலம்பரவு சேதிபன் தனது பொன் னின் நாடனைய பூவையார் - உலகத்தார் போற்றுகின்ற சேதிப மன்னனுடைய காவிரிநாடு போன்ற வளமுடைய பெண்டிர், விழித்து அனந்தலொ டெழுந்து இருந்ததும் - தூக்கத்தோடு விடியற் காலதி லெழுந்துட்கார்ந் திருந்ததும், மெய் துவட்சியும் மகிழ்சியும் - உடம்பி னைசவும் நகைப்பும், மேகலையை மென் மருங்கினில் எடுத்து உடுத்தது வும - நல்ல ஆடையை நுட்பமான இடையி லெடுத்துக் கட்டியதுவும், தலை யணைத்ததும் - தலையில் மூடிக்கொண்டதும், வழுத்திவந்து திருநீறு தந்து விடைதந்த பார்வையை மறப்பினும் - வழிபட்டுத திருநீறு கொடுத்தப் போய வரும்படி விடை கொடுத்து நோகினனைத நான் மறதாலும், வாச லின் படி பிடித்து நின்ற நிலை மன மறபதிலை காணுமே - வாசற்படியைப் பிடிதத்க்கொண்டு நின்ற நிலையினது அழகை நான் மறக்க முடியா தென பதை அறிக, எ - று.

135. தோகைமீமழைக் காலமென்று துளங்கி
வாடுவ தென்கொலோ
சொன்னமேகினை வானமன்னவர்
சொன்னமேன்மை மறப்பரோ
நியாகமாமுகிற் செழியன் வண்புகழ்
தேக்கினனிடுக்க ணீக்கினன்
செஞ்சொல்வாணர் விளங்கவே
யொருவஞ்சவேழ்ம வழங்கினன்
மேகமேயெழ லன்றுகாண்மத
யானைநின்ற கிளர்ச்சியே
மின்விளங்கிய தன்றுகாணதன்
மிக்ககொம்பின் விளக்கமே
மாகவீழ்துளி யன்றுகாணிது
மாறிலாமத தாமரையே
வான்முழக்கம தன்றுகாணது
மாமுழக்க முழக்கமே.

உரை :—தோகை - மயில் போன்றவளே !, சொன்னமே - தவகம் போன்றவளே !, நீ மழைக்கால மென்று துளங்கி வாடுவ தென்கொலோ - நீ கார் காலமென்று மனங்கலங்கித் தளர்வது எதனாலே, நினைவானமன்ன

வர் சொன்ன மேன்மை மறப்பரோ - உன்னிடத்தில் வருகின்றேனென்று சொன்ன கினைவுடைய மன்னர் சொன்ன சொல் மறக்க மாட்டார், நியாகமா முகில் செழியன் வண்புகழ் தேக்கினன் இடுக்கண் கீக்கினன் - பெரிய மேகம்போன்ற கொடையாளியாகிய பாண்டியன் பாவலர்க்கு வறுமைத் துன்பத்தை கீக்கிவளமான புகழை கிறையப்பெற்றான், செஞ்சொல் வாணர் விளங்கவே யொருவஞ்ச வேழம் வணங்கினன் - செவ்வியமொழியில் பாடும புலவர்கள் சிறப்படையும்படியாக ஒரு கபட நாடகமுடைய யானையைக் கொடுத்தான்; மேகமே எழலன்று காண்மத யானை கின்ற கிளர்சகியே - மேகம்போலத தோற்றுவது மேகமல்ல அவனது யானையினுடைய ஊக்கமே; மின்விளங்கிய தனறுகாண் அதன்மிக்க கொம்பின் விளக்கமே - மின்னல் போலத் தோன்றுவது மின்னலல்ல அந்த யானைகொம்பினுடைய பிர காசமே, மாகம் வீழ்துளி யன்றுகாண் இது மாறிலாதமத தாரையே-மழை பெய்வதாகத தோன்றுவது ஆகாயத்திலிருந்து விழும் மழைத்துளியல்ல அந்த யானை சொரிகின்ற மத வெள்ளமே, வான் முழக்கமது அன்றுகாண் அது மாமுழக்க முழகமே - வானத்தில் தோன்றுகின்ற இடியல்ல அந்த யானையின் பெரிய கர்சனையே இடிபோல் தோன்றுகிறது; எ - று

136. வாசமேவுசொற் பொய்யாதபிள்ளை நாயன் மாதைசூழ்
வாவிமேவு சோலைசூழ மதுரகீத வண்டுகாள்
ஓசைகூர மாரனெய்ய வுள்ளுடைந்த நோயெலாம்
ஒருவரோ டுரைக்கொணு தென்னுள்ளகத் தடக்கினேன்
பேசொணுது வாய்திறந்து பேசவேண்டு மாகிலோ
பெண்பிறக் கொணுதுபெண் பிறக்கவேண்டு மாகிலோ
ஆசைகொள் ளொணுதாசை கொள்ளவேண்டு மாகிலோ
அங்கொருத்த ரிங்கொருத்த ராகொணுது காணுமே.

உரை :—வாசமேவு சொற் பொய்யாத பிள்ளை நாயன் மாதை சூழ் - மணம் பொருந்திய நற்சொல்லினையுடைய பொய்யாத பிள்ளை நாயகன் என்னும் தலைவரது மாதைப்பதியைச சுற்றியுள்ள, வாவிமேவு சோலைசூழ மதுரகீத வண்டுகள் - பொய்கைகள் பொருந்திய பொழிகள் சூழ்ந்த இனிய இசையைப்பாடும் வண்டுகளே !, ஓசைகூர மாரனெய்ய உள்ளுடைந்த நோயெலாம் - வருத்தத்தால் கூக்குரல் மிகும்படியாக மன்மத னெய்த அம்பினுலாகிய மன முறிவாகிய வியாதியை யெல்லாம், ஒருவரோடு உரைகொணுது என்னுள்ளத்து அடக்கினேன் - ஒருத்தரோடும் சொல்லக்கூடாமல் என் மனததிற் குள்ளேயே அடக்கிக்கொண்டேன், பேசொணுது வாய்திறந்து பேசவேண்டு மாகிலோ - அவற்றையெல்லாம் வாய் திறந்து பேசுதற்கு நீதியில்லை, (அவற்றைப் பேசவேண்டுமானல்) பெண் பிறக் கொணுது - பெண்ணைப் பிறததல் கூடாது, பெண் பிறக்க வேண்டு மாகிலோ ஆசை கொள்ளொணுதது - பெண்ணைப் பிறக்கவேண்டு

மானுல் ஆசை கொள்ளக்கூடாது, ஆசை கொள்ளவேண்டு மானிலோ அங் கொருத்தர் இங்கொருத்தர் ஆகொணுது காணுமே - காதல் கொண்டால் தலைவ ரொருவிடத்திலும் தலைவி மற்றொரு விடத்திலுமாகப் பிரிந்திருக் கக்கூடாது, (இருவரும் ஒன்ருய்ச் சேர்ந்திருக்கவேண்டு மென்பது கருத்து), எ - று.

137. பல்லார்பகை கொள்ளுந்தொழில் கடியாது கொல்லரவம்
பால்கைத்து வெறுக்குந்துயர் பரிகாரமி லாநோய்
பொல்லாருள மகிழுங்கதை பகையார்சொரி யனலம்
பூவும்பொரு கலகம்பிறர் போக்காமருள் கண்டும்
கொல்லாரரு ளென்னக்குளிர் குடகாவிரி யமுதம்
குடிகொண்டகு டந்தைக்கொரு கோனெங்கள்கு மண்டூர்
நல்லார்திரு மலியன்புய னளினத்தொடை யருளான்
நல்கின்றவர் நல்காதது நான்செய்திடு பிழையே.

உரை :—(காதலரது பிரிவாற்ருமையாகிய செயல்) பல்லார் பகை கொள்ளும் தொழில் - பலபோ வீரோதங் கொள்வதற்குரிய செயலாகும், கடியாது கொல் அரவம் - அது கடியாமல் கொல்லுகின்ற பாம்பாகும், பால் கைத்து வெறுக்கும் துயர் - பால் கசந்து வெறுக்கப் படுதற்கேது வாகிய துன்பமது, பரிகார மிலா நோய் - மருந்தில்லாத வியாதி, பொல் லார் உளம் மகிழும் கதை - தீயவர்கள் பார்த்து மன மகிழுகின்ற சரித்திர மாகும், புகையார் சொரி அனலம் - புகையாது எரிகின்ற தீயாகுமது, பூவும் பொரு கலகம் - பூவினுல் சண்டை விளைக்கின்ற கலகமாகும், பிறர் போக்கா மருள் கண்டும் - அது தலைவர் தவிரப் பிறரால் நீக்க மூடியாத மயக்க மென்பது தெரிந்தும் கொல்லார் அருள் என்ன - கொல்லாதவர் களுடைய கருணைபோல, குளிர் குடகாவிரி யமுதம் குடிகொண்ட குடந் தைக் கொருகோன் - குளிர்ந்த காவிரி நீராகிய அமுதம் நிலைபெற்றிருக்கும் கும்பகோணத் திருப்பதிக்குத் தலைவனும் ஆகிய, எங்கள் குமண்டூர் நல் லார் திருமலையன் - எங்களுடைய குமண்டூரிலிருக்கும் திருமலைய னென் பவர், புயன் நளினத் தொடை யருளான் - புயத்தி லணிந்துள்ள தாமரை மலர் மாலையை எனக்குக் கொடுக்கா திருக்கிறன், நல்கின்றது நல்காதது நான் செய்திடு பிழையே - கொடுக்கக் கூடிய மாலையை அவன் கொடாம லிருப்பது நான் செய்த தீவினையே, எ - று.

பரத்தையர்க் கூற்று

138. கைகொடுத்து மளகபார மயிர்கொடித்து மறைவிலே
கடிசுருட்கொடுத்து மாசைகை நகங்கள் வையென
மெய்கொடுத்து மெய்யிதென்று பொய்கொடுத்தும் விலைபெரு
விரலின்மோ திரங்கொடுத்தும் வித்தம்வாங்க வல்லமோ

மைகொடுத்த விழிசெவ்ப நுதல்வியர்ப்ப வரையிலே
மயில்கொடுத்த வமளிசோர மரகதக் கொழுந்துபோல்
நெய்கொடுத்த பொழுதிலாயர் மனையிலாடு மேகமே
நீதிகண்ட பாலிவந்த நீலகண்ட பூபனே.

உரை :—மைகொடுத்த விழி செவ்ப - மை தீட்டிய கண்கள் சிவக் கும்படியாகவும், நுதல் வியர்ப்ப - நெற்றியில் வியர்வை தோன்றும்படி யாகவும், வரையிலே மயில் கொடுத்த அமளி சோர - மலையிலுள்ள மயிலின் தோகையினுற்செய்த படுக்கை கலையும்படியாக, மரகதக் கொழுந்துபோல் - பச்சை மணியின் ஒளிபோல, நெய் கொடுத்த பொழுதில் ஆயர் மனையிலாடு மேகமே - வெண்ணெய் தந்தபோது அதை வாங்கித் தின்று இடையர்கள் வீடுகளில் விளையாடின மேகம் போன்றவனே !, நீதிகண்ட பாலிவந்த நீல கண்ட பூபனே - நீதிகண்ட பாலி யென்னும் ஊரில் தோன்றிய நீலகண்ட மன்னனே!, கைகொடுத்தும் அளகபார மயிர் கொடுத்தும் - பிடிப்பதற்குக் கையைக் கொடுத்தும் தடவுதற்குக் கூந்தல் மயிரைக் காட்டியும், மறைவிலே கடி சுருள் கொடுத்து - மறைவாகக் கடிப்பதற்கு வெற்றிலைசுருள் கொடுத் தும், ஆசை கை நகங்கள் வையென மெய் கொடுத்து - காதலினுல் நகக் குறிகள் வைக்கும்படி உடம்பைக் காட்டியும், மெய்யிதென்று பொய் கொடுத் தும் - மெய்யான மோகந் தருவதென்று பொய்யான வுடலைக் காட்டியும், வீலை பெரு விரலின் மோதிரங் கொடுத்தும் - வீலை மதிக்க முடியாத மோதிரத்தை விரலிலணிவித்தும், விதந்தம் வாங்க வல்லமோ - உன்னிடம் நாங்கள் பொன் பெற முடியுமா ?, எ - று.

139. குருத்துவாழைகள் வேள்குடைக்கொரு கோறருந்திருமங்கலம்
குடிவிளங்கிய வாவிநாயகர் கோபுரந்திரு மண்டபம்
நிருத்தமாதரோ டாடல்பாடல்கள் கண்டமாமுகில் பாலிவாய்
நீலகண்டன் வரைக்குளே யெதிர்நிற்குமாதர் முகத்திலே
பருத்திராது சிறுதுவெண்மை படாதுரேகை விடாதுசெம்
பவளமொன்றை யெடுத்துமிக்க பதப்படுத்தி வணக்கியே
அருத்துபாகி லழுத்தியண்டர் தமமுதையுள்ளி னடக்கியே
அழகுகொண்டுபொ திந்ததொன்றினை யதரமென்னுமிவ்வுல
[கமே.

உரை :—குருத்து வாழைகள் வேள் குடைக்கு ஒரு கோல் தரும் - இளம் வாழைத் தண்டுகள் மன்மதனுடைய குடைக்காம்புக்குத தடியாகப் பயன்படுவதுபோல விளங்கும், திருமங்கலம் குடி விளங்கிய வாவி நாயகர் - திருமங்கலத்திலுள்ள குடிகள் தழைக்கும்படியாக விளங்கும் உயிர்போன்ற கடவுளுக்கு, கோபுரந் திருமண்டபம் நிருத்த மாதரோடு ஆடல் பாடல்கள் கண்ட - கோபுரமும திருமண்டபமும் அமைத்து பெண்களுடைய ஆடல்

பாடல்களோடு கூடிய திருவிழாவும் ஏற்படுத்திய, மாமுகில் - பெரிய மேகம் போன்ற வள்ளலாகிய, பாலெவாய் நீலகண்டன் - பாலைப்பதியி லுறைபும் நீலகண்ட மன்னருடைய, வரைக்குளே எதிர் நிற்கு மாதர் முகத்திலே - மலையிலே உள்ள பெண்களுடைய திருமுகத்தில், பருத்திராது - அதிக மாகப் பருக்காமலும், சிறுது - சிறியதா யில்லாமலும், வெண்மை படாது - வெண்ணிறங் கலவாமலும், ரேகை விடாது - உரிய வரிகள் தவறாம லிருக் கப் பெற்றும் உள்ள, செம்பவள மொன்றை யெடுத்து மிக்கப் பதப் பண்படுத்தி வணக்கியே - செந்நிறமான பவளத் துண்டொன்றை யெடுத் துப் படுத்தி, அருத்துபாகில் அழுத்தி - உண்ணுகின்ற வெல்லப்பாகிற் ரேய்த்து, அண்டர்தம் ஆமுதை யுள்ளி னடகையே - தேவாமிர்தத்தை யதனு ளடைத்து, அழகுகொண்டு பொதிர்த்த தொன்றினை - அழகாக அமைத்துவைத்த ஒரு உறுப்பினை, அதரம் என்னும் இவ்வுலகமே - இவ் வுலகத்தார் உதடு என்று சொல்வார்கள், எ - று.

140. வனசன்கொடி லங்காபுரி நிருபன் கொடியனிலன்
மைந்தன்கொடி சேரன்கொடி மாரன்கொடி துரியோ
தனனன்கொடி நிகராகிய நடைசொல்லிடை நுதல்கண்
தடவல்குல் படைத்தாண் மயறணியத் தொடைதாராய்
கனகங்குடைது நிறண்டிகை காளங் கரிபரிதேர்
கற்றோர்களோ வாழ்வித்தருள் கார்கண்டய ரதிபன்
நனிதங்கிய கமலாசன மாதைப்பிள்ளோ நாய்கன்
நாராயண பட்டப் பொனிநன்னு டுடையாரனே.

உரை:—கனகம் குடை துகில் தண்டிகை காளம் கரி பரி தேர் - பொன்னும் குடையும் ஆடையும் சிவிகையும் ஊது சின்னமும் யானையும் குதிரையும் தேரும் கொடுத்து, கற்றோர்களோ வாழ்வித்தருள் - படித்தவர் களோ நன்ருக வாழச செய்கின்ற, கார் கண்டு அயர் அதிபன் - மேகத்தைப் பார்த்து ஈகையைச செயகின்ற தலைவன், நனிதங்கிய கமலாசன மாதைப் பிள்ளோ நாயகன் - நன்ருக வாழ்கின்ற தாமரைப்பூ விருக்கையையுடைய மாதைப்பதியில் வாழ்கின்ற பிள்ளோ நாயகனென்னும் வள்ளலே!, நாராயண பட்ட-நாராயண னென்னும் பட்ட முடையவனுகிய, பொனி நன்னு டுடை யானே - நல்ல காவிரி நாட்டிற்கு அதிபதியே, வனசன் கொடி நடை - பிரமன் கொடியி லெழுதப்பெற்ற அன்னம்போன்ற நடையும், லங்காபுரி நிருபன் கொடியான் சொல் - இராவணனது கொடியிலுள்ள வீணையைப் போன்ற சொல்லும், அனிலன் மைந்தன் கொடி இடை-வாயு புத்திரனுகிய வீமனுடைய கொடியாகிய சிங்கம்போன்ற இடையும், சேரன் கொடி நுதல்-சேரனுடைய கொடியாகிய வில்போன்ற புருவமும், மாரன் கொடி கண் - மன்மதனுடைய கொடியாகிய கயல்மீன் போன்ற கண்ணும், துரி யோதனன் கொடி அல்குல் - துரியோதனனுடைய கொடியாகிய அரவம்

போன்ற அல்குலும், படைத்தான் மயல் தணிய தொடை தாராய் - இவ்வ வவு உறுப்புகளையும் படைத்த பெண்ணின் மயக்கம் நீக்கும்படி மாலை யளிப்பாயாக, எ - று.

141. கொதித்தெழுந்த திரைக்கட னஞ்சுண்ணீ ரானீர்
குலவுதொண்டன் மகவையடிச் சுண்ணீ ரானீர்
கதித்தபன்றிக் கெட்டாத கழல ரானீர்
கருதலர்கள் புரமெரித்த மிடுக்க ரானீர்
எதிர்த்துவந்த காளியண்ட வாத ரானீர்
எந்நாளு நிருவாணி யானீர் தில்லைப்
பதிக்கரசே சிவகாமி பங்களரே
பத்தர்சித்தர் பரவுசிற் றம்பலவ ளரே.

உரை:—தில்லைப்பதிக்கரசே - தில்லைத்தலத்திற்குத் தலைவரே!, சிவ காமி பங்களரே - சிவகாமி யம்மையைப் பாகமாக வுடையவரே !, பத்தர் சித்தர் பரவு சிற்றம்பலவளரே - பத்தர்களும் சித்தர்களும் தொழுகின்ற சிற்சபையி லாடுகின்ற பெருமானே!, கொதித்தெழுந்த திரைகடல் நஞ்சு உண்ணீரானீர்-பொங்கிக் கிளம்பிய பாற்கடலிலுள்ள விஷத்தை யுண்டவ ரானீர், குலவு தொண்டன் மகவையடிச சுண்ணீரானீர் - உம்மை வழிபடு கின்ற சிறுதொண்டனுடைய பிள்ளையை யறுத்துக் கறி சமைத்து உண் டவரானீர, கதித்த பன்றிக் கெட்டாத கழல ரானீர் - உம்மைக காண வேணுமென்று பன்றி வடிவுகொண்ட திருமாலுக்குக் காண முடியாதவ ரானீர், கருதலர்கள் புரமெரித்த மிடுக்க ரானீர - பகைவர்களுடைய திரி புரதனை யெரித்த வீரரானீர, எதிர்த்து வந்த காளியண்ட வாதரானீர்- கடனஞ் செய்வதில் போட்டிபோடவந்த காளியோடு நெருங்கி வாதாடினீர், எந்நாளும் நிருவாணி யானீர்-எப்போதும் திக்கையே ஆடையாக வுடைமை யால் ஆடை யில்லாதவரானீர, எ - று.

142. ஏட்டைக்கட்டி யெழுத்தோ டெழுத்துவைத்
தினைத்துக்கட்டி யிசைகட்டி லோபர்மேற்
பாட்டைக்கட்டி யென்றெண்டையுங் கட்டிய
பாவங்கட்டிய தென்றைக்குத் தீருமோ
தோட்டைக்கட்டுங் குழலே யுனதடித்
தணையைக்கட்டிய பேர்க்குப் பரகதி
வீட்டைக்கட்டிய தாயே நெல்வேலி வாழ்
மெல்லியேதிரு வெண்ணீற்று வல்லியே.

உரை:—தோட்டைக் கட்டும் குழலே - தோட்டினைக் காதிலணிந்த கூந்தலுடைய உன்னையே!, உனதடித் தணையைக் கட்டிய பேர்க்குப் பர

ரதி வீட்டைக் கட்டிய தாயே - உனது இரு திருவடியையும் சரணுகப் பிடித்துக் கொண்டவர்களுக்கு மேலான நிலையாகிய மோட்சத்தைக கை வரும்படி செய்யும் அம்மையே !, செல்வேலி வாழ் மெல்லியே - திருநெல் வேலிப் பதியில் வீற்றிருக்கின்ற மென்மை வாய்ந்த தேவியே !, திருவெண் ணீற்று வல்லியே - திருநீற்றினை யணிந்த கொடிபோன்றவளே !, ஏட்டைக் கட்டி எழுத்தோடு எழுத்து வைத்து இணைத்துக் கட்டி - ஏடுகளைத் தயார் செய்து ஒன்றைச சேர்த்து எழுத்துக்குப்பின் எழுத்து பொருந்தும்படி எழுதி, இசை கட்டி - அதற்குரிய ராகமமைத்து, லோபர்மேல் பாட்டைக் கட்டி, ஈயாதவர்கள்மீது பாட்டியற்றி, என் தொண்டையும் கட்டியது என்றைக்குத் தீருமோ - என் தொண்டை கட்டிப்போவதற்குரிய பாவதனை யென் தலைமேற் சுமந்து கொண்டது எப்போது ஒழியுமோ ?, எ - று.

143. தனக்காறு மாதமும் போய்நாட்டிற் காட்டிற்
றங்குபட்டி விக்கிரமன் சரிதம்போல
எனக்காறு மாதமும மபோயானி யாடி
ஆவணிவந் தெய்தியபின் மாதம்போனல்
மனக்காதல் கொண்டிருந்த மாதர்பின்னே
மாதப்பே ரிட்டழைப்பார் மதுரை வாசல்
தனக்கான மதிமந்திரி யிந்திரன் றன்
தபோபலனே குடந்தைக்குந் தமிழ்க்கும் வாழ்வே.

உரை:—மதுரை வாசல் தனக்கான மதிமந்திரி இந்திரன்றன் தபோ பலனே-பாண்டியன் மதுரைப்பதி வாயிலுக்குததக்க அறிவுடைய அமைசச ரான பெருஞ் செல்வனின் தவப்பயனு லுதித்தவனே !, குடந்தைக்கும் தமிழ்க்கும் வாழ்வே - குடந்தைப்பதியில் தலைவனுய் தமிழுக்கு ஆகச் தேடு பவனே!, தனக்காறு மாதமும் போய் நாட்டில் காட்டில் தங்குபட்டி விக்கிர மன் சரிதம்போல - விக்கிரமாதித்தனும் பட்டியும் நாடாறு மாதம் காடாறு மாதம் அரசு செலுத்திய கதைபோல, எனக்காறு மாதமும் போய் - என் னைப் பிரிந்த ஆறுமாத காலமாகியும், ஆனி ஆடி ஆவணி வந்தெய்திய பின் மாதம் போனல் - ஆனி ஆடி ஆவணி புரட்டாசி என்கின்ற மாதங்கள் கழிந்தால், மனக்காதல் கொண்டிருந்த மாதர் - என்பால் உள்ளத்திலே ஆசைகொண்ட பெண்டிர், பின்னே மாதப்போ இட்டு அழைப்பாா - நீர் சொன்னபடி மீண்டும் வராததை யெண்ணி அல்பிசி யென்றழைப்பார்கள், (அல்பிசி - சீ அல்பனே), எ - று.

144. சூன்றுசூடையா வெடுத்துக் கோவைக் காத்த
கோபாலா நின்பெருமை கூறக்கேண்மோ
அன்றுமலர் வந்தவடன் வீட்டைவிட்டே
ஆயர்மனை வந்ததனு லாயர் மாதர்

கன்றுகட்டுந் தாம்புகொண்டே யுரலிற் கட்டிக்
கரியதிரு மேனிசிவப் பேற மத்தால்
என்றுமழி யாப்பெயராத் திருடனென்றே
ஏற்றியது முன்தலையி னெழுத்துத் தானே.

உரை :—குன்று குடையா எடுத்துக் கோவைக் காத்த கோபாலா - கோவர்த்தன கிரியை எடுத்துக் குடையாகப் பிடித்துப் பசுக்களைக் காப்பாற்றிய கோபால கிருஷ்ணனே !, நின் பெருமை கூறக் கேண்மோ - உன்னுடைய பெருமையைச் சொல்லக் கேட்டருள்வாயாக, அன்று மலர் வந்தவள் தன் வீட்டை விட்டே - அக்காலத்தில் தாமரைப்பூவில் தோன்றிய திருமகளின் வீட்டை விட்டு, ஆயர் மனை வந்ததனால் - இடையாகளுடைய இல்லங்களிற் போய்ச சேர்ந்ததனால், ஆயர் மாதர் - இடைப் பெண்கள், கன்று கட்டும் தாம்புகொண்டே உரலிற் கட்டி - கன்றுக்குட்டியைக் கட்டுகின்ற கயிற்றைக்கொண்டு உன்னை யுரலிற் சேர்த்துக் கட்டி, கரிய திருமேனி சிவப்பு ஏற - உன்னுடைய கருநிறமுள்ள உடம்பில் சிவந்த நிறமுள்ள இரத்தக்கரை படும்படி, மத்தால் என்றும் அழியாப் பெயராய்த் திருடனென்றே ஏற்றியதும் - மத்தைக்கொண்டு என்றும் மாறாத திருடனென்று பெயருண்டாகும்படியாக அடித்ததும், உன் தலையி னெழுத்துத்தானே - உன் தலையில் விதித்த விதியோ ?, எ - று.

145. சேல்வண்டு வசமளியே நாணன
பெண்ணின்மேற் சினத்தேலையந்து
கோல்வண்டு மூனேதீட்டிக் கழைகுழைத்தங்
கசனெய்த கொடுமைதன்னால்
பால்வண்டு நிறைபழன வாதிபுரித்
தியாகேசர் பாலிலாறு
கால்வண்டே போயுரையின் கைவண்டு
பூமுகந்த கணக்கைத்தானே.

உரை :—ஆறுகால் வண்டே - ...., சேல் வண் துவசம் - சேல்மீன் சிறந்த கொடியாகவும், அளியே நாண் ஆய் - வண்டே வில்லின் நாணாகவும் வைத்து, இப்பெணணின்மேல் சினந்தே - இந்த மானின்மேல் கோபித்து, ஐந்துகோல் வண்டு மூனே தீட்டி - கொல்லக்கூடிய ஐந்து அம்புகளின் நுனிகளைக் கூர்மையாகச செய்து, கழை குழைத்து - கரும்பு வில்லை வளைத்து, அசகசன் - மன்மதன், எய்த கொடுமை தன்னால் - அம்புகளைச் செலுத்திய கொடுஞ் செய்கைகளினாலே, மின்கை வண்டு பூமுகந்த கணக்கைத்தானே - பெண்ணின் கையிலிருந்த வளையல்கள் பூமியில் கழன்று விழுந்த அளவினை, பால் வண்டு நிறை பழன ஆதிபுரி தியாகேசர் பால் போயுரை - பால்போன்ற வெள்ளை நிறமுடைய சங்குகள் நிறைந்த வயல்க

ளுடைய திருவொற்றியூர்த் தியாகராசப் பெருமானிடம் தெரிவிப்பாயாக !, எ - று.

146. கொல்லா விரதத் தமிழ் முனிவன்
முதலோர்குண வாகடநூலில்
எல்லாப் பிணிக்கு மருந்திசைத்தா ரியாணுமவை
தேர்ந்துறுதி கண்டேன்
பொல்லாப் பசிநோய்க் கொருமருந்து
புகலாமையின்யான் றேடிநின்றன்
சொல்லா மெனவெண்ணுழி யன்கோய்
தொலைந்ததுறைசார் பறிகிலனே.

உரை :—கொல்லா விரதத் தமிழ் முனிவன் முதலோர் - அருளொழுக்கத்தை மேற்கொண்ட அகத்தியர் முதலிய முனிவர்கள், குணவாகட நூலில் - வாகடம் போன்ற வைத்திய நூல்களில், எல்லாப் பிணிக்கும் மருந்து இசைத்தார் - எல்லா நோய்களுக்கும் இன்ன இன்ன மருந்தென்று விதித்தனர், யானும் அவை தோந்து உறுதி கண்டேன் - நானும் அவற்றை யாராய்ச்சிசெய்து அவற்றின் முடிபுகளைத் தெரிந்தேன், பொல்லாப் பசி நோய்க் கொரு மருந்து புகலாமையின் - கொடிய பசியாகிய வியாதிக்கு ஒரு மருந்தும் அந் நூல்களில் விதிக்காமையால், யான் தேடி நின்றன் சொல்லா மென எண்ணுழி - யானதற்கு மருந்தை நாடி உன் மொழியே அதற்கு மருந்தென்று நினைத்தபோது, அன்நோய் தொலைந்த துறைசார்பு அறிகிலனே - அந்த நோய் ஒழிந்துபோன விதத்தையும் அதன் தொடர்பினையும் அறியாதவனானேன், எ - று.

147. கட்பூக்குழன் மாவடுவண்டார்ங்
கழைவிற்புதல் கூரெரிநாட்டம்
எட்பூத்துண்ட முருக்கோட்ட
மிலகுவிது வாணனம்பாணி
தட்பூச்சுவர்க்கஞ் சிலம்பிடைநூனி
தம்பமகிப்பை வராற்றுள்சொல்
வெட்பால்குரல் கோகிலமன்ன
நடையும்வடமீன் கற்புடையாள்.

உரை :—கண் - மாவடுவைப்போன்ற கண்ணும், பூக்குழல் வண்டாரம் - வண்டைப்போன்ற அழகிய கூர்தலும், கழை வில் புதல் - கரும்பு வில்லைப் போன்ற புருவமும், கூர் அரி நாட்டம் - கூரிய வாள்போன்ற பார்வையும், எள் பூத்துண்டம் - எள்ளின் மலரைப்போன்ற மூக்கும், முருக்கு ஓட்டம் - முருக்கம் பூப்போன்ற உதடும், இலகு விது ஆனனம் - ஒளிருகின்ற சந்திரன்போன்ற முகமும், பாணி தட்பு - குளிர்ந்த தாமரைப் பூப்போன்ற

கையும், சுவர்க்கம் இலம்பு - மலைபோன்ற தனமும், இடை நூல் - நூலிழை போன்ற இடையும், நிதம்பம் அகிபை - பாம்பின் படம்போன்ற கடிதடமும், வராள் தாள் - வரால் மீன்போன்ற கணைக்காலும், சொல் வெட்பால் - வெண்மையான பாலின் சுவைபோன்ற மொழியும், குரல் கோகிலம் - குயில் போன்ற ஒலியும், அன்ன நடையும் - அன்னம்போன்ற நடையும், வடமீன் கற்புடையாள் - அருந்ததிபோன்ற கற்புமுடையாளிப் பெண், எ - று.

வெறி விலக்கல்

148. இத்தை யனையவுரு வில்லான் விடுமலரே
வைத்தகரை யோதடுக்க மாட்டாதே—நித்தநித்தம்
அங்கமுகங் காத்துறைசை யம்பலவா ணன்புயத்திற்
செங்கழுநீர்த் தாரினையே தேடு.

உரை :—இத்தையல் நைய - இப் பெண்ணானவள் வருந்தும்படியாக, உருவில்லான் விடு மலர் ஏவை - மன்மதன் செலுத்துகின்ற பூங்கணையை, தகர் ஐயோ தடுக்கமாட்டாதே - (பலியிடப்படும்) ஆடானது தடுக்கமுடியாது, (பரிதாபம்!) நித்தம் நித்தம் - நாள்தோறும், அங்கமுகங்காதுறை சை - அழகிய பாக்கு மரங்கள் சூழ்ந்த திருவாவடுதுறையில் வீற்றிருக்கும், அம்பலவாணன் புயத்தில் - அம்பலவாண சுவாமியினுடைய தோளில் அணிந்த, செங்கழுநீர்த தாரினையே தேடு - செங்கழுநீர் மாலையினையே நாடிப்பெறுவாயாக!, எ - று.

149. பண்டுமைக்கோர் பால்கொடுத்த பண்பினைக்கோ டீச்சரத்துக்
கண்டுமையல்கொண்டவன்றாள்கண்ணுற்றுய்-ஒண்டொடியாய்
வந்துநின்றார் வந்தரக்கேண் மாலையெங்கண் மாதினுக்குத்
தந்துநின்றார் தந்திடென்று தான்.

உரை :—ஒண் தொடியாய் - ஒளியுள்ளவளே யலைத்தரித்த பாங்கியே!, பண்டு உமைக்கு ஓர் பால்கொடுத்த பண்பினை - பழைய காலத்தில் உமையம்மைக்கு ஒரு பாகமாகிய இடப்பாகத்தைத் தந்த நற்குணமுடைய சிவபெருமானை, கோடீசுரத்துக் கண்டு - கோடீச்சுரத் திருப்பதியிற் போய்ப் பார்த்து, மையல்கொண்டு - அன்புகொண்டு, அவன்தாள் கண்ணுற்று - அவனுடைய திருவடியைத் தரிசித்து, எங்கள் மாதினுக்கு - எங்கள் சிறு பெண்ணுக்கு, மாலைதந்தி - மோகத்தைக் கொடுத்தாய், நின் தார் தந்திடு என்று - உன்னுடைய மாலையைக் கொடுத்துவிட வேண்டுமென்று, வந்து நின்று - வணங்கி நின்று, ஆர்வந் தரக்கேள் - அன்போடு கேட்பாயாக, எ - று.

150. வாக்கு மனமுமெட் டாப்பர மேசர் வலியகம்மைக்
காக்கும் படிகங்க ணங்கட்டிக் கொண்டனர் காய்ந்துமைத்
தாக்கும் படியணு காதினி மாயைச் சனியனிதம்
பாக்கும் பணமும்வைத் தேயழைத் தாலும் படியகத்தே.

உரை :—வாக்கு மனமும் எட்டா பரமேசர் - சொல்லுக்கும் மனத்திற்கும் அப்பாற்பட்ட பெரிய முதல்வராகிய சிவபெருமான், வலிய நம்மைக் காக்கும்படி கங்கணங் கட்டிக்கொண்டனர் - தாமாக வந்து நம்மைக் காப்பதற்காக உறுதி செய்துகொண்டார், இனி - இனிமேல், மாயைச சனியன் - மாயையாகிய சனியனே, இதம் படியகத்தே பாக்கும் பணமும் வைத்து அழைத்தாலும் - இப்பூவுலகில் தினந்தோறும் வெற்றிலை பாக்கும் காணிக்கையும் வைத்துக் கூப்பிட்டாலும், காய்ந்து நமைத் தாக்கும்படி அணுகாது - நம்மைச சினந்து வாதனை செய்வதற்கு அண்டாது, எ - று.

151. பொருதுவட் டாடுஞ்சி ரூர்வீதி யைந்நதிப் புண்ணியமூன்
ஒருதுவட் டாமகன் செற்ரேன்பணி பரனுற் றிடுவான்
கருதுவட் டாவெனுஞ் சொல்லாய் பொறுத்துக் கணப்பொழு
திருதுவட் டாமல்விடு மோமதன னிருங்கணையே. [திங்

உரை :—வட்டாய் எனும் சொல்லாய் - சாக்கரைக்கட்டி யென்று சொல்லத்தக்க மொழியையுடையவளே !, மதனன் இருங்கணை துவட்டாமல் விடுமோ - காமனுடைய பெரிய அம்பு நம்மை வருத்தாது விடுமா, பொருது வட்டாடும் சிரூர்வீதி யைந்நதிப் புண்ணியன் - வீரியாட்டுச சண்டைசெய்து வட்டாடுகின்ற சிறு பின்னோகள் நிறைந்த தெருக்களையுடைய திருவையாற்றுப் பெருமானே !, மூன் ஒரு துவட்டா மகன் சென்ரேன் பணிபரன் - முற்காலத்தில் தனிச சிறப்புடைய துவட்டாவின் புதல்வனாகிய இராவணனைக் கொன்ற இராமபிரான் வழிபட்ட பெரியோனே, உற்றிடுவான் கருது - அடைவதற்கு எண்ணுவாயாக, பொறுத்துக் கணப் பொழுது இங்கு இரு - பிரிவாற்றுமையைத் தாங்கிகொண்டு ஒரு சிறிது நேரமிங்கே இருப்பாயாக, எ - று.

152. இளந்தென் றலைவட வானலமென்னு மெழின் மதன்கா
களந்தென் றலைநமன் காணென வேங்குங் கடலகடு
பிளந்தென் றலையென் றினியொழிப் பானெனும் பேதையிவ்வா
றளந்தென் றலையிலெழுத் தெனுங்கூ ழையரும பொருளே.

உரை :—பேதை - எனது சிறுமகளானவள், இளந் தென்றலை வடவா அனல மென்னும் - மெல்லிய தென்றற் காற்றினை வடவாமுகாக்கினி யென்று கூறுகிறாள், எழில் மதன் காகளம் தென்றலை நமன் காணென எங்கும் - அழகிய காமகடவுளது ஊது சின்னமாகிய குயிலைத் தெற்குத்

திக்கிலுள்ள காலனென்று எண்ணி யஞ்சுகிறான், என்று - பகலவன், கடல் அகடு பிளந்து - சமுத்திரத்தின் வயிற்றைக் கீறிக்கொண்டுதித்து, அலை என்று ஒழித்திடுவான் - இராத்திரியின் இருளை எப்போது தொலைப்பான், எனும் - என்று கேட்டாள், கூழையரும் பொருள் - கடைசியான நுட்பம் யாதெனில், இவ்வாறு அளந்து என் தலை எழுத்து எனும் - இப்படி என் வினைப்பயனை யளந்து என் தலையில் பிரமனெழுதிய எழுத்தே யாகுமென் பாள், எ - று.

153. ஊசிக்கழகு முனைமழுங்காமை யுயர்ந்தபர
தேசிக்கழகுந் திரியமடக்க றிரண்முலைசேர்
வேசைக்கழகின் னிசைபலநூல்கற் றவித்வசனர்
நாசிக்கழகு பொடியெனக்கூறுவர் நாவலரே.

உரை :—ஊசிக்கு அழகு முனை மழுங்காமை - ஊசிக்கு அழகு தருவது அதனுடைய நுனி கூர்மை கெடாதிருத்தல், உயர்ந்த பரதேசிக்கு அழகு இந்திரிய மடக்கல் - மேலான துறவிகளுக்கு அழகு தருவது ஐம்பொறி யடக்குதல், திரள் முலை சோ வேசிகளு அழகு இனனிசை - குவிந்த முலை களையுடைய விலைமகளிர்க்கு அழகு தருவது இனிய சங்கீதம் பல நூல் கற்ற வித்வசனர் நாசிக்கு அழகு - இலக்கியங்கள் பலவற்றையும் படித்துத் தோய்ந்த கல்விமான்களின் மூக்குக்கு அழகு தருவது, பொடியென்று கூறு வர் நாவலரே - மூக்குப் பொடியென்று நாவன்மை யுடையவர்கள் சொல் வார்கள், எ - று.

பார்வதி வழிபாடு

154. துரிசுந் தரியலர் நோயுஞ் சனனமுந் துன்மதியாம்
பரிசுந் தரியல மேமல் லுரிற்படர் செருக்காங்
கரிசுந் தரியல ரோனுக்கெட்டாத முக்கண் ணண்மகிழ்
கிரிசுந் தரியலங் காரியைப் போற்றுதி கேடறவே.

உரை :—அகமே - நெஞ்சமே!, தரியலர் நோயாம் - சதுருக்களுக்குச் சமமாகிய துருசும் - குற்றங்களையும், சனனம் - பிறப்பையும், துன்மதியாம் பரிசும் - தீயவறிவாகிய வெகுமதியையும், தரியல் - பெறக் கருதாது, படர் செருக்காம் கரிசு உந்த - மிகுந்த அகங்காரமாகிய குற்றம் தங்களைப் பிடித் துத் தள்ள, அரியலரோனுக்கு எட்டாத - திருமாலுக்கும் பிரமனுக்கு மகப் படாத, முக்கண்ணன் மகிழ் - மூன்று கண்ணுடைய சிவபெருமான் விரும் பும், கிரிசுந்தரி யலங்காரியே - மலையரசன் மகளாகிய அழகம்மையே!, கேடறவே - தீங்குகளெல்லாம் ஒழியும்படி, நல்லூரில் போற்றுதியே - நல் லூரில் வழிபடுவாயாக, எ - று.

கலவியின் பிரிவாற்றுமையால் தலைவன் கூறியது

155. விடவாளே வென்றவிழி யாளைப்பூமியின் மேலதிர
நடவாளைப் பெண்கட நாயகமாமொரு நாயகத்தை
மடவாளை யென்னுள்வதி வாளையின்ப மருவவென்சொற்
கடவாளை யென்றெய்வமே யென்றுபோயினிக் காண்பதுவே.

உரை :—என் தெய்வமே - எனது கடவுளே !, விடவாளை வென்ற விழியாளை - நஞ்சு கலந்த வாளினுஞ் சிறந்த கண்ணுடையவளை, பூமியின் மேல் அதிர நடவாளை - நிலதலத்தின்மீது ஒலியுண்டாகாமல் மெதுவாக நடக்கும் இயல்புடையவளை, பெண்கள் தம் நாயகமாம் ஒரு நாயகத்தை - பெண்களுக்குத் தலைமையான ஒப்பற்ற தலைவியை, மடவாளை - இளமை யுடையவளை, என்னுள் வதிவாளை - என் மனததில் தங்கியிருப்பவளை, இன்பம் மருவ என் சொற்கடவாளை - இன்ப நுகர்வதில் என் கட்டளைக் கடங்கி நடப்பவளை, என்று போய் இனி காண்பதுவே - இனிமேல் எக்காலிற் போய்க் காணமுடியும், எ - று.

தனக்கு நோய்தீர்த்த வீசனென்னும் ஒரு வைத்தியன்மீது பாடியது

156. தேசம் புகழும் திருநெல்லி யில்வாழு
மீசனேசம் மீசனுக்கொப் பென்னலாம்—ஈசன்
பிறவாமற் காப்பான் பிறந்தாரை நாளும
இறவாமற் காப்பா னிவன்.

உரை:—தேசம் புகழும் திருநெல்லியில் வாழும் ஈசனை - நாட்டினர் போற்றுகின்ற திருநெல்வேலிப்பதியில் வீற்றிருகும் கடவுளை, நம்மீசனுக்கு ஒப்பென்னலாம் - வைத்தியனுகிய நம்மீசனுக்குச சமானமாகச சொல்லலாம், ஈசன் பிறவாமல் காப்பான் - கடவுள் நம்மைப் பிறவி யெய்தாமற் காப்பாற்றுவான், இவன் பிறந்தாரை நாளும் இறவாமற் காப்பான் - இவவைத்தியன் பூமியிற் பிறந்தவாளை யெக்காலததிலுஞ் சாகாதபடி காப்பாற்றுவான், எ - று.

தட்டானைப்பற்றிப் பாடியது

157. மொய்வேலை சூழலகின் முத்துக்கு மாரபத்தன்
கைவேலை போலநாங் கண்டதில்லை—அவ்வேலை
செய்யுமவற் குத்திறல் விச்சுவ கருமன்
கையும்பொ ழியும்பொன் காண்.

உரை:—மொய் வேலை சூழலகில் - நெருங்கிய கடல் சூழ்ந்த பூமியின் கண், முத்துக் குமாரபத்தன் கைவேலை போல நாம் கண்டதில்லை - முத்துக் குமாரபத்தனுடைய கையினல் அணி செய்யும் வேலைத்திறம்போல

நாம் பார்த்ததில்லை, அவ்வேலை செய்யும் அவற்கு - அப்படிப்பட்ட உயர்ந்த தொழில் செய்கின்ற அப்பதத்துக்கு, திறல் விசயவ கருமன் கையும் பொன் பொழியும் - சாமர்த்திய முடைய தெய்வகம்மியனுடைய விசயவ கருமனுங் கூடத் தனது கையால் பொன்னே வளமாகக் கொடுப்பான், காண் - அசை, எ - று.

வெறி விலக்கல்

158. இந்தவச மந்தவசந் தன்மலைதற் கேதுசெய்யு
நொந்தவச முறறுட்கே நோக்குங்கால்—பைந்தொடியாய்
ஆண்டகுருத் தென்றுறைசை யம்பலவாணன்
பூண்டநிறச் செங்கழுநீர்ப் பூ.

உரை:—பைந்தொடி - புதிய வளையலணிந்த பாவையே !, நொந்த வசமுற்றுட்கே - வருந்தித் தன்னிலை மறந்த தலைவிக்கு, இந்த அசம் - இந்த ஆடானது, அந்த வசந்தன் மலைதற்கு ஏதுசெய்யும் - அந்த மன்மத னுடைய சண்டையை எதிர்த்தது என்ன செய்யக்கூடும் ?, நோக்குங்கால் - ஆராயுமிடத்து, ஆண்ட குரு - நம்மை யாட்கொண்ட ஆசாரியனுடைய, தென் துறைசையம்பல வாணன் - அழகிய திருவாவடு துறையில் வீற்றி ருக்கும் அம்பலவாண சுவாமிகளுடைய, புயத்தில் பூண்ட நிறச செங்கழு நீர்ப்பூ ஆய - தோளிற்றரித்த நல்ல நிறமுடைய செங்கழுநீர மலரை நாடுவா யாக, எ - று.

159. அருமாதவர்புகழ்சங்கரற் கூடியோரையற்பெற்ற
திருமால்பெண்ணென்பதுதேற்ற மன்றேவத்தெளிவுகொண்
ஒருவாதவற்குறித்தன்பு செய்வோர்களுலகறிய [டே
மருவாத்தந்நெற்றிமிசையோனி முத்திரைவைப்பர்களே.

உரை:—அருமாதவர் புகழ் சங்கரர்கூடி - அருமையான பெரிய தவஞ் தெய்தவர்கள் போற்றுகின்ற சிவபெருமானைப் புணர்ந்து, ஓர் ஐயன் பெற்ற - அரிகர புத்திர னென்னும் ஒரு தெயவத்தைப் பிறப்பித்த, திரு மால் - அரி, பெண்ணென்பது தேற்ற மன்றே - பெண்ணினதைச சார்ந் தவரென்பது தெளிவல்லவா ?, அத்தெளிவு கொண்டே - அந்தத் தெளிவு காரணமாக, ஒருவாது அவற்குக் குறித்து அன்பு செய்வோர்கள் - நீங் காமல் எப்போதும் அவனை நோக்கிப் பகதி செய்கின்ற அடியார்கள், உலகறிய மருவாத்தம் நெற்றி மிசை - உலகத்தார்க ளறியத் தங்கள் நெற்றியிலே பொருந்தும்படியாக, யோனி முத்திரை வைப்பர்களே - யோனி முத்திரையாகிய காமத்தை வைப்பார்கள், எ - று.

பரத்தையர்க்குஞ் சிவபெருமானுக்கும் சிலேடை

160. வரைவின்மாதராயிருத்தலாற் பதியிலாமாண்பால்
குரைகடற்புவிமாந்தர்செய் வினைத்திறங்குறித்துக்
கரைசெய்போகமங்குறுத்தலாற் கடையின்மங்கலத்தால்
உரைசெய்வேசையரா னெனற்கையமுமுளதோ.

உரை:—உரைசெய் வேசையர் - வீலை மகளிரென்று பேசப்படுவோரா, வரைவின் மாதரா யிருத்தலால் - மணமில்லாத பெண்டிரா யிருப்பதாலும், பதியிலா மாண்பால் - குறிப்பிட்ட தலைவ னில்லாத சிறப்பாலும், குரை கடல் புவி மாந்தர் செய் வினைத் திறங்குறித்து - முழங்குகின்ற கடல்சூழ்ந்த பூமியிலுள்ள மனிதர்கள் ஈகின்ற அளவினைக் கருதி, கரை செய போக மங்குறுத்ததலால் - அவ்வவர்க்கேற்ற வரம்புக்குட்பட்ட அனுபவத்தைக் கொடுத்தலாலும், கடையின் மங்கலத்தால் - விதவைகளாகாது முடிவற்ற மங்கல முடைமையாலும்,

அரன் - பரமசிவன், இல்வரை மாதரா யிருத்தலால் தன்னுடைய மனைவி மலையரசன் மகளாக இருக்கப்பெறுதலாலும் பதியிலா மாண்பால் - தனக்கு மேற்பட்ட தலைவனே யில்லாத சிறப்பாலும், குரை கடல் புவி மாந்தர் செய்வினைத் திறங் குறித்து - முழங்குகின்ற கடல் சூழ்ந்த பூமியின் மக்கள் செய்கின்ற வினைகளின் தன்மைக ளேற்ப, கரைசெய போக மங் குறுத்தலால் - அளவு படுத்தப்பட்ட வினைப்பயனை அனுபவிக்கும்படி செய்தலாலும், கடையில் மங்கலத்தால் - எல்லையற்ற மங்கலப் பொருளா யிருத்தலாலும், எனக்கு ஐயம் உளதோ - வீலை மகளிர சிவபெருமானுக்கு ஒப்பென்று சொல்வதற்குச் சந்தேக முளதோ ?, எ - று.

161. பின்னர்வந்துறுசெயலுயி ரறிதராப்பிறழ்ச்சி
முன்னர்ச்செய்திரோபவத்தி னுன்முதியவரினுஞர்
இன்னரென்றுருநின்பமங் கீதலாலிவரை
என்னரும்புகழீசனென் றியம்புதலியல்பே.

உரை:—பின்னர் வந்துறு செயல் உயிர் அறிதராப் பிறழ்சசி முன்னர்ச் செய் திரோபவத்தி - பின்னே வரப்போகிற செயற் பயனை மகளிர் முன்னே அறியாதபடி மாறுபாடு செய்கின்ற மறைப்பை வீலைமகளிருடைமையாலும், உயிர்கள் பின்னனுபவிக்க வேண்டிய வினைப்பயனை முன்னே அறியாதபடி மாற்றஞ் செய்கின்ற மறைப்புத தொழிலை யிறைவனுடைமையாலும், முதியர் இளைஞர் இன்னரென்றுருநி இன்பம அங்கு ஈதலால் - வயது சென்றவர் இளையவர் என்கின்ற வேறுபாடில்லாது வீலை மகளிர் பொருளுக்குத் தக்கபடியும் கடவுள் அன்புக்குத் தகுகபடியும் இன்பப்பயன் கொடுத்தலாலும், இவரை என்னரும் புகழ் ஈசனென்று இயம்பு

தல் இயல்பே - பரத்தையரை நினைப்பதற்கரிய புகழுடைய ஈசனுக்கு ஒப்பாகக் கூறுதலியற்கையாம், எ - று.

162. அல்லதூமவர்பாத்தையரெனும் பெயரடைவான்
நல்லவர்புகழ்பரதநூற் கேள்விகணணுகச்
செல்வமல்குநற்பொது விடையாடலாற்சிறந்த
முல்லிவெண்ணகை யினையரையரெனன்முறையே.

உரை :—அல்லதூமவர் பாதத்தையரெனும் பெயரடைவான் - அன்றியும் வீலமகளிர் பரத்தையரெனப் படுதலாலும், பரதது ஐயா - சிவஞா மேலான பரதத்துக்குத் தலைவனென்னும் பெயருடைமையாலும், நல்லவர் பரத நூல் கேள்விகள் நணுக செல்வம் மல்கு நல் பொதுவிடை யாடலால் அறிஞர்கள் போற்றுகின்ற பரத நாட்டிய நூல் முறைகளுக்குப் பொருந்த செல்வ நிறைந்த நல்ல சபை நடுவே பரத்தைய ராடுவதாலும், சிவபெருமான் சிற்சபையில் நடனஞ் செய்வதாலும், சிறந்த முல்லை வெண்ணகையினையரை அரனென முறையே - சிறந்த வெள்ளிறமுள்ள முல்லைப் பூப் போன்ற பரத்தையரை யரனுக்குச் சமமென்று கூறுதல் பொருத்த முடையதே, எ - று.

திருக்கடவூர்ச் சுவாமி துதி

163. பொன்னருகுநரருகும் பூவையாரருகுநிலம
தன்னருகுமுழன்றுழன்று தவித்திருந்தேன்கடவூரில்
முன்னருகர்தமைவென்றார் முதன்மூவர்தமிழ்மணக்கும
உன்னருகுவரப்பெற்றே னுடையாயுன்னருளியல்பே.

உரை :—பொன்னருகு நரருகும - பொன்னைப் பக்கத்திலுடைய மனிதர் பக்கத்திலும், பூவையாரருகும் - மாதர்களுக்குச் சமீபத்திலும், நிலம் தன்னருகும் - மண்ணிலுள்ள தாவர சொத்துக்களிடத்தும், உழன்று உழன்று தவித்திருந்தேன் - அலைந்தலைந்து ஆசைப்பட்டிருந்தேன், உடையாய - என்னை யாள்பவனே !, கடவூரில் - திருக்கடவூரில், முன்னருகர் தமை வென்றார் - முற்காலத்திற் சமணரை வென்றவராகிய திருஞான சம்பந்தர், முதல் மூவர் தமிழ் மணக்கும் - முதலிய மூவர்களுடைய தேவாரத்தின் வாசனை வீசும், உன்னருகு வரப்பெற்றேன் - உன் பக்கத்தில் வரப் பெற்றேன், உன்னருள் இயல்பே - இது உன் திருவருளின் தன்மையாகும் எ - று.

இராசிகளில் உதித்தவன் குணம்

164. ஆடோடெதிரிடேல் மாடோடுசேரேல்
தண்டுகொண்டிற்புகேல் நண்டுக்கிடங்கொடேல்
சிங்கத்தானேடே துங்கப்போர்செயேல்
கன்னிமகனைத் துன்னிவிடாதே
கோலாஞென்றிலும் தோலான்றேளான்
தன்னைப்பேண வுன்னிக்கொள்ளுக
வில்லான்றன்னைச் சொல்லால்வஞ்சித்திடு
மாஞேடேயா ஞவழக் கிடேல்
குடத்தான் படையெலாம் படத்தான் வெல்லுவன்
மீனத்தா னட்பைத் தானுகந் திடுகவென்
ரோதினர் மூதறி வுடைய நாவலரே.

உரை :—ஆடோடு எதிரிடேல் - மேட ராசியிற் பிறந்தவனை எதிர்க்காதே, மாடோடு சேரேல் - இடப ராசிக்காரனுடன் கூடாதே, தண்டு கொண்டு இல் புகேல் - மிதுன ராசிக்காரனுடைய வீட்டிற்குள் செல்லாதே, நண்டுக்கு இடங் கொடேல் - கடகராசி யுடையவனுக்கு இடங் கொடாதே, சிங்கத்தானேடு துங்கப் போர் செயேல் - சிங்கராசியிற் பிறந்தவனேடு உகிரமான சண்டை செயயாதே, கன்னி மகனைத் துன்னி விடாதே - கன்னி ராசியிற பிறந்தவனேடு நெருங்காதே, கோலா ஞென்றிலும் தேலான - துலா ராசியிற் பிறந்தவன் தோல்வியடைய மாட்டான், தோளான் தன்னைப் பேண உன்னிக் கொள்ளுக - விருசிக ராசியிற் பிறந்தவனைப் பாதுகாப்பதில யோசனை செயயவேண்டும், வில்லான் தன்னை சொல்லால் வஞ்சித்திடு - தனு ராசியிற் பிறந்தவனைப் பேசினுலே இணக்கிக்கொள்ளலாம், மாஞேடே யாஞ வழக்கிடேல் - மகர ராசியிற் பிறந்தவனேடு தொலையாத விவகாரஞ் செய்யாதே, குடத்தான் படையெலாம் படத்தான் வெல்லுவன் - கும்ப ராசியிற் பிறந்தவன் சேனைகளையெல்லாம் அழியசெய்து செயமடைவான், மீனத்தான் நட்பைத் தானுகந் திடுகவென்று - மீன ராசியிற் பிறந்தவனுடைய சினேகத்தைப் பிரியமாகத் தேடிக்கொள்கவென்று, ஓதினர் மூதறிவுடைய நாவலரே - இவ்வாருகப் பழமையான அறிவுடைய பெரியோர்கள் கூறினர், எ - று.

திருவாரூர்ப் பெருமானைத் தூது விடுத்ததைப்பற்றி யிகழ்ந்து பாடியது

165. தருக்காலு மலர்ப்பொழில்சூ ழாரூர்தனைப்
புலமைத்தா ருக்குத்தன்னல்
பெருக்காலு மிவரருளைப் பெம்மானென்
றெண்ணுமற் பெண்பித்தேறி

முருக்காலும் வெலற்கரிய விதழ்ப்பரவை
யிணங்கும்வகை மொழிந்துவாவென்
றிருக்காலு நடத்தினை னெருக்காலுந்
தமிழ்க்கிரங்கி யிருக்கொணுதே.

உரை :—தருக்காலு மலர்ப்பொழில் சூழ் ஆரூர் தமை - மரங்கள் சிந்து கின்ற பூக்கள் நிறைந்த சோலைகள் சூழ்ந்த திருவாரூரி லிருக்கும் பெரு மானே, புலமை தருக்குத் தன்னுல் - சுந்தரமூர்த்தி தன் கல்வித் திறமை யினு லேற்பட்ட செருக்கினுலே, பெருக்காலும் இவர் அருமைப் பெம்மா னென்று எண்ணுமல் - வளம் நிறைந்த இறைவர் கிடைப்பதற்கரிய கடவு ளென்று மதியாமல், பெண் பிததேறி,- மாதா மயகத்தின் மிகுதியால், முருக்காலும் வெலற்கரிய இதழ் பரவை இணங்கும் வகை மொழிந்து வா என்று - முருக்கம்பூவினுலும வெல்லமுடியாத சிவப்பழகுடைய உதட்டின ளாகிய பரவையா தான் வருதற் கிசையும்படி னாது போய் மொழிந்து வாவென்று, இருக்காலும் நடதினை - இரண்டு தடவை சுவாமியை நடக் கும்படி செய்தா, ஒருக்காலும் தமிழ்க்கு இரங்கி இருக்கொணுதே - ஒரு போதும் தமிழப் பாட்டின பொருட்டு ஆரூரர் தயவுசெய்திருக்ககூடாது, எ - று.

ஒரு கன்னியைப் புகழ்தல்

166. அருக்கன்மதி யுதித்துவரு மமபுவியி
லதிசயங்க ளன்பாய்க் கேளீர்
உருக்குமந்த வுடலீரா றொன்றரையு
மொன்றரையு முகந்து கொண்டு
இருக்குமந்த விடந்தனிலே நாலிரண்டு
விதமான திருக்கக் கண்டேன்
திருக்குளத்துப் படித்துறையிற் கலுக்கெனவே
சிறுக்கியவள் சிரிக்கின் றுளே.

உரை :—அருக்கன்மதி யுதித்துவரும் அம்புவியில் அதிசயங்கள் அன் பாய்க் கேளீர் - ஞாயிறும் திங்களும் தோன்றி யொளிசெய்து வருகின்ற இதப் பூமியிலுள்ள வியப்புக்களைப் பிரியமாயக் கேட்பீராக !, உருக்கு மாத உடல் ஈராறு ஒன்றரையும் ஒன்றரையும் முகந்துகொண்டு - மனதை யுருக்ககூடிய இறைவா திருமேனி பதினேந்தாவது நட்சத்திரமாகிய சோதியை யுட்கொண்டு, இருக்கும் அந்தவிடந் தன்னிலே - வீற்றிருக்கும் கோயிலிலே, நாலு இரண்டு விதமானது இருக்க கண்டேன் - ஒரு கன்னி யிருக்கப் பார்தேன், திருக்குளதது படித்துறையில் கலுக்கெனவே சிறுக்கியவள் சிரிக்கின்றுளே - ....., எ - று.

இதுவுமது

167. திருக்குளத்திற் றிருக்குள சுந்தரக்கடவுள்
விருப்பமொடு சிறந்து வாழும்
இருக்களந்த குருக்கண்மனைத் தெருக்கணிறை
புதுவையினி லெனைப்பார்த் தன்பா
மருக்கிளர்ந்த குருக்கிதழ்ச்செந் திருக்கமலம்
பெருக்கமொடு வதிந்து தோன்றும்
திருக்குளத்தங் கரையருகே சிறுக்கிறின்று
கலுக்கெனவே சிரிக்கின் ரூளே.

உரை :—திருக்குளத்திற் திருக்குள சுந்தரக் கடவுள் விருப்பமொடு சிறந்து வாழும் - அழகிய நெற்றியிற் கண்ணுடைய சோமசுந்தரக் கடவுள் கருணையோடு சிறப்பாக வீற்றிருக்கின்ற, இருக்களந்த குருக்கள் மனைத் தெருக்கள் நிறை-வேதங்களே யாராய்ந்து கற்ற அர்ச்சகர்களுடைய வீடுகள் நிறைந்த தெருக்களையுடைய, புதுவையினில் - புதுவைப் பதியில், செந் திருக கமலம் பெருக்கமொடு வதிந்து தோன்றும் திருக்குளத்தங் கரை யருகே-செந்தாமரைப் பூக்கள் மிகுதியாகத் தங்கி விளங்கும் அழகிய குளத் தங்கரைக்குச சமீபத்தில், மருக்கிளர்ந்து முருக்கிதழ் சிறுக்கி - வாசனை கம ழும் முருக்கம் பூப்போன்ற உதட்டினையுடைய சிறுமி, எனைப் பார்த்து அன்பாய் - என்னை அன்போடு பாராத்து, நின்று கலுக்கெனவே சிரிக்கின் ரூளே - ....., எ - று.

ஒரு மாதின்மீது மையல் கொண்டது

168. அக்கப்புநற்சசியை மிக்கச் சடைக்குளணி
யத்தற்கு மெய்ப்பு தல்வனர்
உக்கிரக் கோழிக்கொடியர் பச்சைப்பரிக்கும
ரருற்றுச் செழித்த வரைமேல்
லைகக்கிட்ட தன்வனியி னற்பொற்
சரத்தினெளி கப்பத்தெருக்க ளளவும்
செக்கச் சிறுக்கியவள் பக்கச்செருக்கிலுயிர்
சிக்கிக் கொளத் திரியுமே.

உரை :—அக்கு (அணி)-எலும்புமாலை யணிவதுடன், அப்பு நற்சசியை மிக்கச சடைக்குளணி - கங்கையையும் நலல சந்திரனையும் சடையினிட மாக வணிகின்ற, அத்தற்கு மெய்ப் புதல்வனர - சிவபெருமானுக்குத் திரு மேனிற் ரோன்றிய முருகக்கடவுள், உக்கிரக் கோழிக் கொடியர் - வீர மான கோழிக் கொடியை யுடையவர், பசசைப் பரிக்குமரர் - மயிலாகிய பச்சை வாகனமேறும் இளைய பெருமான், உற்றுச செழித்த வரைமேல் -

தக்கி வளமிகுந்த மலையின்மேல், கைக்கிட்ட தன் வலையின் நற்பொன் சரத்தினெளி தெருக்களவும் கப்ப - தன் கையிலணிந்த காப்பினோடு சேர்த்த பொன்சரட்டி னெளியானது வீதியின்வரை கவரப்பெற்ற, செக்கச சிறுக்கியவள் பக்கச செருக்கில் - மிகச சிவந்த நிறமுடைய சிறு பெண்ணின் ஒரு பக்கமாகச சாய்ந்தமைந்த கொண்டைச செருக்கினில்- உயிர் சிக்கிக்கொளத் திரியுமே - அகப்பட்டுச சிக்கிக்கொள்வதற்கு உயிரானது அதைச சுற்றித் திரிகின்றது, எ - று.

திருவாரூர்ப் பெருமான் துதி

169. கங்குலிலே நடப்பார்க்குக் காலிலே
கண்வேண்டுங் கண்டீரந்தச்
சங்கரனூர் திருத்தாளிற் கண்ணிடந்து
சாத்தினைவத்த சமத்தைப்பாரீர்
அங்கணனூராரூர் ஆடலே கிண்கிணிக்கா
லருமை யெல்லாம்
செங்கணெடு மாறனக்கே யல்லான்மற்
றொருவருக்குந் தெரிந்திடாதே.

உரை :—கங்குலிலே நடப்பதற்குக் காலிலே கண் வேண்டும் கண்டீர், இராத்திரியிலே வழி செல்பவருகுப் பாதத்திலே கண்ணிருக்கவேண்டு மென்று நீங்கள் அறிவீர்கள், அந்தச சங்கரனூர் திருத்தாளிற் கண்ணிடந்து சாத்தினைவத்த சமத்தைப் பாரீர் - அந்தப் பாமரனது திருப் பாதத்தில் திருமால் தன் கண்ணை அகழ்ந்தெடுத்து அர்ச்சித்த திறமையைக் கவனிப்பீராக !, அங்கணனூராரூர் ஆடலே - அழகிய அருட்கண்ணராகிய திருவாரூர்ப் பெருமான் ஆடுங்காலத்தில், கிண்கிணிக்கால் அருமையெலாம் - கிண்கிணி யணிந்த அப்பெருமானது திருவடியில் அறிதற்கரிய நுட்பங்களெல்லாம், செங்கண் நெடுமால் தனக்கு அல்லால் - சிவந்த கண்ணையுடைய நீண்ட திருமாலுக் கல்லாமல் மற்றொருவருக்குந் தெரிந்திடாதே - ....., எ - று.

செங்காட்டங் குடிப்பெருமான் நிந்தாஸ்துதி

170. ஓர்குடிக்கே யோர்மகவாஞ் சிறுத்தொண்டன்
பிள்ளைபழி யொன்று போதும
பார்குடிக்குட் செங்காட்டங் குடிமேவு
முத்தரா பதியா ரேநீர்
கார்குடிக்குங் கஞ்சுகமுங் கப்பறையும்
பொக்கணமுங் கையிற் கொண்டே

யார்குடியைக் கெடுப்பதற்கே யாண்டிவே
டங்கொண்டே யலைகின் றீரே.

உரை:—பார் குடிக்குட் செங்காட்டங் குடிமேவும் உத்தராபதியாரே - உலகத்திலுள்ள ஊர்களுக்குள் திருச்செங்காட்டங்குடியைத் தெரிந்து அங்கே வீருப்பதோடு சென்ற வடதேசத்தாரென்று தம்மைச சொல்லிக்கொண்ட பெருமானே!, ஓர் குடிக்கே ஓர் மகவாம் சிறுத்தொண்டன் பிள்ளைபழி யொன்றுபோதும் - ஒரு குடும்பத்திற்கு ஒரே பிள்ளையாயிருந்த சிறுத்தொண்டரது புதல்வரைக கொன்ற பழிச செயலொன்றுமே போதுமானதா யிருக்க, காருடிக்கும் கஞ்சகமும் கப்பறையும் பொக்கணமும் கையில் கொண்டே - கருமை மிகுந்த போர்வையையும் பிசசைப் பாத்திரத்தையும் மிகுந்த சுமையையுங் கையி லெடுத்துக்கொண்டு, இங்கு - இந்த விடத்தில், ஆண்டி வேடம் கொண்டே - ....., யார் குடியைக் கெடுப்பதற்கு அலைகின்றீர் - ....., எ - று.

குறிப்பு:—யார் பிறவியை யொழித்து ஆட்கொள்வதற்கு இத்தத் தவவேடங கொண்டு வந்தீர என்பது கருத்து.

171. அச்சுதனு ருமமுடைய மைச்சினனுர்
படியளந்தே யகிலங் காத்தார்
நிச்சயமாய் வாழ்வுதரும லட்சுமிதன்
னுடன்பிறந்தீர் நிலைமை யாக
உச்சிதமாம பொன்மலையும வெள்ளிமலையும்
படைத்தீ ருமக்குச் சார்பாய்ப்
பச்சைமர கதமிருக்கப் பிச்சையெடித்
துண்டதென்ன பட்டி யாரே.

உரை:—பட்டியாரே - திருடன் போன்றவரே !, அச்சுதனுர் உம்முடைய மைசினனுர் படியளந்தே அகிலங் காத்தார - அழியாதவரென்று போபடைத்த திருமாலாகிய உன்னுடைய மைததனர் தன்னுடைய திருவடியா லுலகததை யளந்து பூமியிலுள்ளவர்களே யெல்லாம் காப்பாற்றினுர், நிச்சயமாம் வாழ்வு தரும் லட்சுமி தன்னுடன் பிறந்தீர - உறுதியாய் வாழ்வதற்கு வேண்டும் பொருளைக் கொடுக்கக்கூடிய திருமகளுக்கு நீர சகோதரா, நிலைமையாக உசிதமாம் பொன்மலையும் வெள்ளி மலையும் படைத்தீர் - நிலைவரமாய் நிற்கு மேன்மையுடைய மேருமலையையும் கயிலை மலையையும் உடையவர் நீரே, உமக்குச சார்பாய்ப் பசசை மரகத மிருக்க - உமகுத் துணையாகப் பசசை ரதினமாகிய மரகதம் போன்ற உமாதேவியா ரிருக்கும்போது, பிச்சை யெடித்து உண்டதென்ன - ஐயம் வாங்கி யுண்டதற்கு என்ன காரணம் ?, எ - று.

ஒற்றியூர்த் தியாகர் நடனச் சிறப்பு

172. மாத்தவர்க் கெலாமுடலம் புளகிப்பவி
நோதமாய் மகிழவாடும்
கூத்தவர்க்குப் பார்த்தவர்கள் கொடுப்பதல்லாற்
பார்த்தவற்கே கொடுப்பா ருண்டோ
நீத்தவர்க ளேகலந்த வொற்றியூர்த்
தியாகேசர் நிருத்தங் கண்ணுல்
பார்த்தவர்க்குக் கேட்டதன்றிக் கிடையாத
பரகதியும் பாலிப் பாரே.

உரை:—மாத்தவர்க்கெலாம் உடலம் புளகிப்ப - பெரும் தவமுடையவ ரெல்லார்க்குங்கூட உடம்பில் மயிர்ச் சிலிர்ப்புண்டாகும்படி, விநோதமாய் மகிழ ஆடும் - ஆசசரியப்பட்டுக் களிகூரும்படியாகக் கூத்தாடுகின்றவர்களுக்கு, பார்த்தவர்கள் கொடுப்பதல்லால் பார்த்தவர்க்கே கொடுப்பா ருண்டோ - கூத்துப் பார்த்தவர்கள் ஏதாவது பரிசாகக் கொடுப்பதன்றி ஆட்டம் பார்த்தவர்களுக்குக் கூத்தாடிகள் ஏதாவது கொடுப்ப துண்டோ? நீத்தவர்களே கலந்த ஒற்றியூர்த் தியாகேசர் - துறவிகளே மிகுதியாகச சென்று தங்கிய திருவொற்றியூரி லுறையும் தியாகராசப் பெருமான், நிருத்தம கண்ணுல் பார்த்தவர்க்கு - நடனத்தைக் கண்டு மகிழ்ந்தவர்களுக்கு, கேட்டதன்றி - அவர்கள் வேண்டியதை மாத்திர மல்லாமல், கிடையாத பரகதியும் பாலிப்பாரே - பெறுதற்கரிய உயர்ந்த வீட்டின்பதத்தையும் அளித்தருள்வா, எ - று.

ரகுநாத சேதுபதியின் யானையை வியந்தது

173. கடிவாங்கு மலர்த்தடஞ்சூழ் சேதுபதி
ரகுநாதன் களிறல்யானை
அடிவாங்கி முன்னடக்கில் வடகலிங்கங்
கிடுகிடெனு மங்கதேசம்
குடிவாங்குங் கடலேழு முள்வாங்கு
மொன்னலர்கள் கோட்டைவாசற்
படிவாங்கு மரசர்மணி முடிவாங்குஞ்
சேடன்முடி படியுந்தானே.

உரை:—கடிவாங்கு மலர்த்தடஞ்சூழ் சேதுபதி ரகுநாதன் களிறல் யானை - வாசனை வீசுகின்ற பூம்பொழில்கள் சூழ்ந்த சேது சமஸ்தான மன்னனுகிய ரகுநாத சேதுபதியின் மகிழ்சியுடைய வீரமான யானை யானது, அடி வாங்கி முன்னடக்கில் - அடி யெடுத்து வைத்து முன்சென் றால், வட கலிங்கம் கிடுகி டெனும் - வடக்கேயுள்ள கலிங்க நாட்டரசர் நடு

நடுவண் அஞ்சுவர், அங்க தேசம் குடி வாங்கும் - வங்காள நாட்டுக் குடிகள் உள்ளடங்குவர், கடலேழும் உள் வாங்கும் - சித்த சமுத்திரங்களும் சுருங்கிக் கொள்ளும், ஒன்னலாகன் கோட்டை வாசற்படி வாங்கும் - சீதத்திருக்க ளுடைய அரண்மனை வாசற்படிகள் அதிர்ந்தடங்கும், அரசர் மணி முடி வாங்கும் - மன்னர்களுடைய மணிகள் பதித்த கிரீடங்கள் அசைந்து பணி யும், சேடன் முடிபடியும் - ஆதிசேடனுடைய தலை கீழே தாழும், எ-று.

வண்டோச்சி மருங்கணைதல்

174. சினம்பெரிதாய் மதனைவென்ற திருவாரூர்த்
தியாகேசர் திகழ்நாட்டில்
இனமபெரிதா மதுகரமே இவளக
மீதிருந்த லியல்போ வேறே
வனம்பெரிதாக் கிடையாதோ விடையொடிந்தாற்
பழிசுமக்கு மார்பிற் கொங்கைக்
கனம்பெரிதா யிடைசிறிதா யிருந்தாலுங்
கொடிக்குக்காய் கனத்தி ராதே.

உரை :—சினம் பெரிதாய் மதனை வென்ற திருவாரூர த தியாகேசர் திகழு நாட்டில் - கோப மதிகப்பட்டுக காமனைக் கண்ணால் எரித்து வெற்றி கொண்ட திருவாரூர்த் தியாகராசப்பெருமான் வீற்றிருக்கும் தேசத்தில், இனம் பெரிதா மதுகரமே - கூட்டம் பெரிதாகவுடைய வண்டே !, இவள் அளகமீ திருததல் இயல்போ - இவளுடைய கூந்தல்மேல் தங்குதல் முறை யாகுமா?, வேறே வனம் பெரிதாக் கிடையாதோ - வேறே பெரிய பொழில் கள் தங்குவதற்கு உங்களுக்குக் கிடைக்க மாட்டாதோ, இடை யொடிந் தால் பழி சுமக்கும் - நுண்ணிய இடுப்பானது இற்றுப்போனால் அந்தப் பழி உங்கள்மேலாகும், மார்பிற் கொங்கைக் கனம் பெரிதா யிடை சிறிதா யிருந் தாலும் - அவள் மார்பிடத்தே தனங்களின் கனம் அதிகமாயும் இடை சின்ன தாகவு மிருந்தாலும், கொடிக்குக் காய் கனத்திராதே - கொடியிலுள்ள காய் அது தாங்காதபடி கனத்திருக்க மாட்டாது, எ - று.

தலைவி கார்காலங்கண்டு கூறுதல்

175. ஞானத்தா லரிதூண்புக் கொளிப்பவேதனளினத்
தாயிரங்கதவு மடைக்கவீசன்
ஆனத்தோல் போர்த்ததுவு மன்றிக்கையி லனலேந்திச்
சுடலியினின் முடுங்காலம
வானத்தா லையும்பனியும் வாடைக்காற்றும் வருத்தாமலமப்
பிரித்தெய்வம் வகுத்தகாலம

சீனத்தார் சிங்களத்தார் செகத்தார் போற்றுஞ்
சிவந்தெழுந்த பல்லவர்கோன் சேராக்காலம்.

உரை :—சீனத்தார் சிங்களத்தார் செகத்தார் போற்றும் சிவந்தெழுந்த பல்லவர்கோன் சேராக் காலம் - சீன நாட்டினரும் சிங்கள நாட்டினரும் பிறவுலகத்தாரும் புகழ்ந்து துதிக்கின்ற சிவந்தெழுந்த பல்லவ மன்னனுடைய தலைவன் நம்மைப் புணராத காலம், வானதாரையும் பனியும் வாடைக காற்றும் நம்மை வருதலைப் பிரிதல தெய்வம் வருதல காலம் - வானதினிலிருந்து பெய்கின்ற மழைதாரையும் குளிர்சியும் வாடைகாற்றும் தியர் கொடுக்கும்படியாக நம்மைத் தலைவனிலிருந்து பிரித்த வினைத்தெயவம் ஏற படுதலிய கார் காலமாகும், (அது) ஞானதாதால் அரிணண் புகைகொளிப்ப - அதன் கொடுமையை முன்னறிந்த பயனலே திருமால் தணிற்புகுந்து ஒளித்துகொள்ள, வேதன் நளினத் தாயிரங கதவும் அடைக்க - பிரமன்தானிருக்கும் தாமரையின் ஆயிர மிதழ்க கதவுகளையும் அடைதலதுக்கொள்ள, ஈசன் - சிவபெருமான, ஆனேதாதால் போர்த்தலுவ மன்றி - தனது திரு மேனியின் மேல் யானேத்தோலைப் போர்த்துக்கொண்டது மல்லாமல், கையில் அனலேந்திச சுடலையில் நின்று ஆடும் காலம் - திருகையில் நெருப்பினை யெடுதலதுக்கொண்டு சுடுகாட்டில் நடனமாடுங காலமாகும், எ - று.

176. கன்றினிதூட்டிக் கறந்த நீம்பாலுங்
கலவியின் மகளிரும் பறவை
நின்றநீங்கனியும வேட்டையின் ஞமலி
கறிதறிதடுகின்ற மென்றசையு
மொன்றையுமெச்சி லெனவிகழ்ந்துரையா ருணர்ந்துளோ
ருறுகடன் பொருட்டும்
நன்றுடன் வேள்வி வேட்டிடும்பொருட்டு
நனிபொருள்வழங்க னன்றுமால்.

உரை :—கன்றினி னூட்டிக கறந்த நீம்பாலும - நன்றாகக் கன்றுக் குட்டிக்குப் பால் குடிப்பித்துப் பின் கறந்த இனிய பாலும, கலவியின் மகளிரும் - புணர்சிசிக் காலதிற் பெண்களது எசிலும், பறவை நின்ற நீங்கனியும் - பட்சிகள் கொத்தி வீழ்வித்த இனிய பழமும, வேட்டையில் ஞமலி கறிதறிடுகின்ற மென்றசையும் - வேட்டைக் காலதில் வேட்டை நாயப்பற்றிக கடித்து வீழ்தலிய பிராணிகளின் மெல்லிய ஊனும், உணர்ந்தோர் ஒன்றையும் எசிலென இகழ்ந்துரையா - ஆகிய இவற்றின பொருட் பயன் தெரிதவர் எதனேயும் உசிலிட்டமென்று இழிவாகக் கூறார்கள், உறுகடன் பொருட்டும் - மிகுதியான கடனைச் செலுத்துவதற்காகவும், நன்றுடன் வேள்வி வேட்டிடும் பொருட்டும் - உயிருக்குத் தீமை யில்லாத முறை

யில் வேள்வி செய்திடுதற்கும், நனி பொருள் வழங்கல் நன்றுமால் - போதுமான பொருளளித்தல் புண்ணியச செயலாகும், எ - று.

177. காம்பாயர் தெய்வத்தின் பேரீரெழுத்தின் கடையெழுத்தை
யாம்பாதி செய்தது வேகுறியாமலர்ப் பாலைவயங்கம்
பூம்பாலை யாக்குநல் லண்ணுமலையர் பொருப்பிடத்தே
தாமபாதி லைவத்தும் வாதிருந்தாலென்ன சாற்றுவதே.

உரை :—மலர்ப்பாலை - தாமரைப் பூவிலிருக்கும் இலக்குமி போன்ற வளே !, அங்கம் - எலும்பினை, பூம்பாலை யாக்கும் நல் அண்ணு மலையர் - பூம்பாலையென்ற பெண்ணுரச செய்வதற்கு அருள்புரிந்த நன்மையுடைய சிவபெருமானுகிய திருவண்ணுமலைப் பெருமானது, பொருப்பிடத்தே - மலையின்மீது, காம்பு ஆயா - மூங்கிற் குழலே பூதுகின்ற இடையருடைய, தெய்வதத்தின் பேரீர ஈரெழுத்தின் கடை யெழுததை - வழிபடு கடவுளாகிய திருமாலின் இரண்டெழுதாகப் போகிய அரி யென்பதின் ஈற்றெழுததாகிய ரி யென்பதனை, ஆம்பாதி செய்து - பாதியாகச செயது அதாவது பாதிரியெனக கொண்டு அதுவே குறியா - அதனையே இரவிற் சந்திக்கும் இடமாகக கருதி, தாம்பாதி - தாமரையை, வைததும் - இட்டிருந்தும், வாதிருந்தால் என்ன சாற்றுவதே - தலைவி வரவிலலையானுல் நாம் என்ன கூறுவது, எ - று.

குறிப்பு:—இது தோழியை நோக்கித் தலைவன் கூறியது; பாதி யென்பதற்கு நேரான சொல் அரை; அதைத் தாம் என்பதோடு சேர்த்தால் தாமரை யென்றுகும்; தலைமகன் இரவைச் சந்திக்கக் குறித்த விடததில் தான் வந்ததற்கு அடையாளமாகத் தன் கையிலிருந்த தாமரைப்பூவை அவகே இருந்த பாதிரி மரத்தின் கீழே வைததுப் போனன்; அதனை இங்கு தோழிக்கு அவன் குறிப்பித்தான்.

178. வாரண மாங்கள மாமலை யாமூலை யாரணங்கே
வாரணஞ் சூழ்புவி நாடிய தேவந்தை வந்தவன்பால்
வாரண மாமரு ணுசல வீரவசந் தன் வெற்பில்
வாரண மேலொரு வாரணமேறி வதிந்ததுவே.

உரை:—வாரணம் ஆம் களம் - சங்குபோன்ற கழுத்தினையும், மாமூலையாம் - பெரிய மலைபோன்ற தனங்களையு முடைய, ஆரணங்கே - அழகிய மாதே !, வாரணஞ் சூழ்புரி நாடிய - கடல் சூழ்ந்த பூமியிலுள்ளவர்கள் விரும்பிப் போற்றுகின்ற தேவந்தை வந்த - தேவை நகரிற் ருேன்றிய, அன்பால் வாரணமாம் - அன்பினுலே கடல்போன்றவனுகிய, அருணுசல வீர வசந்தன் வெற்பில் - அருணுசல வீர வசந்தன் என்பவனுடைய மலையிலே, வாரண மேலொரு வாரணமேறி வதிந்ததுவே - அத்திமரத்தின்மீது ஆம்பற்பூ வைக்கப்பட்டிருந்தது, எ - று.

குறிப்பு:—அத்தி யென்பதும் ஆம்பல் என்பதும் வாரணமாகிய ஆனையைக் குறிக்கும் பெயர்கள்.

179. பார்க்க வனைத்தனிக் கண்ணெறி மாயன் பகைத்திலகன்
பார்க்க வனைத்தகு சோன் வடமலைப் பார்த்தன்வெற்பில்
பார்க்கர னைக்கடிந் தேயில காணனப் பைங்கிளியே
பார்க்கர னைச்சுமந் தேயிருந் தாளெரு பார்க்கரனே.

உரை :—பார்க்கவனை - சுக்கிரனுடைய, தனிக்கண்ணெறி மாயன் - ஒரு விழியைக் குத்திய திருமால், பகைத்த - முதலிலவனை விரோதித்து, இலகு அன்பு ஆர்க்க - உள்ளத்தில் விளங்குகின்ற அன்பைப் பின்னே செலுத்த, அனைத்தகு சோன் - அவனன்பிற்குத்தக்க குணத்தைக் காட்டினவன், வடமலைப் பார்த்தன் வெற்பில் - அவன்போன்ற வடமலைப் பகியிலுள்ள பார்த்த னென்பவனது மலையிலே, பார்க்கரனைக் கடிந்தே இலகு ஆனன பைங்கிளியே - மூழுமதியை வெறுக்கசெய்யும்படி விளங்குகின்ற திருமுகத்தையுடைய இளங்கிளி போன்றவளே !, பார்க்கரனை - அலரியை, சுமந்தே இருந்தாள் ஒரு பார்க்கரனே - ஒரு மூங்கில் மரம் தாங்கி யிருந்தது, எ - று.

குறிப்பு:—பாஸ்க்கரன் என்ற சொல் பார்க்கரன் என்றாகியது, பாற்கரன் என்பது பாட்டெதுகை நோக்கிப் பார்க்கரன் என்றாயிற்று கடைசியடியிலுள்ள பார்க்கரன் என்பது சூரியனைக் குறித்தது. அலரி யென்ற சொல்லும், அரி யென்ற சொல்லும் சூரியனைக் குறிக்கும். அலரி பூவையும் அரியென்பது மூங்கிலையும் இங்கே குறித்தன.

180. சீரணி கொன்றை வினைதீர்த்த நாதர் செழுங்கிரியில்
காரண மாமிது காரண மேயரன் கன்னிகையும்
நாரணன் றேவியும் வேறுசெய் தாருடை நன்முடிமேல்
ஈரணை மூவண மாமலர் தானும்வந் தெய்தியதே.

உரை :—சீரணி கொன்றை வினை தீர்த்த நாதர்-புகழ்பெற்ற அழகிய கொன்றை மாலையை யணிந்த வினைதீர்த்த பெருமானது, செழும் கிரியில்-வளமான மலையின்மேல், காரணமா மிது காரணமே - இது வியப்பிலுஞ் சிறந்த வியப்பாகும், அரன் கன்னிகையும் அரனது தேவி கையிலுண்டாகிய கங்கை நீரையும், நாரணன் தேவியும் - திருமால் மனைவியாகிய பூதேவி யென்னும் மண்ணையும், வேறு செய்தாருடை நன்முடிமேல் - வேற்படுதலும் தேற்றாங்கொட்டை மரத்தின் நல்ல நுனியிலே, ஈரணை மூவண மாமலர் தானும் வந்தெய்தியதே - இரண்டோடு கூடிய மூன்றாகிய ஐவணப்பூ தோன்றியிருந்தது, எ - று.

குறிப்பு:—ஐவணம் என்பது மருதொன்றியைக் குறிக்கும்.

181. அலைகடலிற் றுயிலு ரணன்றேடற் கரியரண்ணு
மலையர்தம் வெற்பிணண்பா மயிலே வண்டுணுமரத்தில்
சிலைமலை கொண்டவன் சேய்மா துலன்றந்தை சேய்க்கிரங்கா
மலரினை வைத்தகன்றூர் கண்டுவந்தோ மதிசயமே.

உரை :—அலைகடலிற் றுயில் காரணன் தேடற்கரியர் - அலைகளை யுடைய திருப்பாற் கடலில் நித்திரை செய்யும் விண்டுவானவர் தேடிக் காண்பதற்கு முடியாதவராகிய, அண்ணுமலையர் தம் வெற்பில் - அண்ணு மலைப் பெருமானது மலையின் கண், நண் பாம் மயிலே - என்னிடத்தில் நட்புக்கொண்டிருந்த மயில் போன்றவளே!, வண்டுணு மரத்தில் - சண்பக மரத்தில், சிலை மலை கொண்டவன் - மலையை வில்லாக வளைத்த சிவபெரு மானது, சேய் மாதுதன் - பிள்ளையாகிய முருகக்கடவுளின் மாமனுகிய இந் திரனுடைய, தந்தை சேய்க்கு - தகப்பனுராகிய காசிபன் பிள்ளையாகிய சூரியனுக்கு, இரங்கா மலரினை - தலை யிறங்காத பூவாகிய தாமரைப் பூவினை, வைத்து அகன்றூர் - தலைவர் வைத்துவிட்டுப் போயினர், அதி சயம் கண்டு உவந்தோம் - அந்தப் புதுமையைப் பார்த்து மனமகிழ்ந்தோம், எ - று.

182. ஒருமரக்காலிட் டொன்றிட்டுப் பத்திட் டுடனரைக்காற்
பரவுமெழுத்தினிற் பாதிமுன் பின்னிற் பகிர்ந்தமலர்
கருமுகி னேர்தரு மால்சென்னிபூபன் கனவரையில்
அரிமுன் னெழுபதி னுயிரஞ்சேர்மரத் தானதுவே.

உரை :—கருமுகில் நேர்தரு மால்சென்னி பூபன் கனவரையில் - கரிய மேகம்போன்ற திருமா லமிசமான சோழமன்னனது உயர்ந்த மலைமீது, ஒரு மரக்காலிட்டு - குறுணியைக் குறிக்கும் கு என்பதை வைத்து, ஒன்று இட்டு - ஒன்றைக் குறிக்கும் கரத்தை யிட்டு, பத்திட்டு - அதற்குப் பின் பத்தைக் குறிக்கும் யகரத்தை யிட்டு, அரைக்காற் பரவும் எழுத்தினில் பாதி - அரைகாலிற் பாதியாகிய வீசத்தைக் குறிக்கும் ப8 எழுத்து என் பதில், முன் பின்னிற் பகிர்ந்த மலர் - பகரத்தை முன்னுகவும் மகரத்தை யிறுதியிலும் வைக்க பங்கய மென்பது ஏற்படுவதால் அது குறிக்கும் தாமரை மலர், அரிமுன் - திருமா லமிசமான இராமர் முற்காலத்தில் எழுபதினுயிரம் சேர் - எழுபதினுயிரத்திற்குரிய எண்ணெழுத்துக்கள் சேர்ந்த அதாவது எய்த, மரத்தானதுவே - மராமரத்தின் மேலிருந்தது, எ - று.

குறிப்பு:—எழுபதினுயிரம் என்பதில் எழு - என்பதற்கு எகரமும் பது என்பதற்கு யகர மெய்யும், ஆயிர மென்பதற்குத் தகரமும் சேர்ந்து எய்த என்ற சொல் வருவது காண்க.

183. ஆம்பன் முகன்குகன் றம்மையளித்த வருட்கடலாம்
பாம்ப ணடியைத் தொழுங்கந்தசாமி பனிவரையில்
காம்பரிவெண்மதி தோள்விழி வாண்முகக் கன்னிகையே
வேம்பன் புதல்வன் றலையுங்கலப்பையு மேந்தினனே.

உரை :—தம்மை அளித்த அருட்கடலாம் - ஆனைமுகக் கடவுளையும் குமரக் கடவுளையும் பெற்ற சிருபா சமுத்திரமாகிய, பாம்பன் அடியைத் தொழும் கந்தசாமி பனிவரையில் - பாம்பை யணிந்த சிவபெருமானை வழி படும் கந்தசாமி வள்ளலது குளிர்ந்த மலைமீது, காம்பு தோள் - மூங்கில் போன்ற தோளையும், அரி விழி - வண்டுபோன்ற கண்ணையும், வெண்மதி வாண் முகம் - வெள்ளிய திங்கள்போன்ற ஒளியுள்ள முகத்தையுமுடைய, கன்னிகையே - சிறு பெண்ணே !, வேம்பன் புதல்வன் - வேப்பமாலை யணிந்த பாண்டியனுகிய தென்னன்பிள்ளை அதாவது தென்னம்பிள்ளை, தலையும் கலப்பையும் ஏந்தினனே - கம் அலம் ஆகிய இரண்டையும் சேர்ந்ததாலாகிய கமலத்தைத் தாங்கினது, எ - று.

184. கட்டளையாகப் புவிராஜர் மெச்சக் கடியுலகைத்
திட்டமிட் டேபணி கொள்ளவல்லான்றிறை யாவரையும்
மட்டவிழ்சோலைத் திருமலைராய மகிபன் வெற்பில்
செட்டிபெண் டாட்டியை வண்ணத்திசேரச் சுமந்தனளே.

உரை :—புவிராசர் மெச்ச - பூமியிலுள்ள அரசர்கள் புகழும்படி, கடி புலகை யாவரையும் - தனது காவலுடைய வுலகத்திலுள்ள எந்த மன்னரை யும், கட்டளையாக - முறையாக, திட்டமிட்டு - உறுதியாக ஒழுங்குபடுத்தி, பணிதிறை கொள்ளவல்லான் - வேலை செய்விக்கவும் கப்பஞ் செலுத்தவிக்க வுஞ் செய்யுந் திறமை யுடையவனுகிய, மட்டவிழ் சோலைத் திருமலைராய மகிபன் வெற்பில் - தேனைச் சிந்தும் பொழில்கள் சூழ்ந்த திருமலைராய மன்னன் வரையில், செட்டி பெண்டாட்டியை - முருகன் தேவியின் பெயருடைய வள்ளிக் கொடியை, வண் ஆத்தி - வளப்பமான ஆத்தி மரம், சேரச சுமந்தனளே - முற்றிலுந் தாங்கி யிருந்தது, (வள்ளிக் கொடியை ஆத்திமரம் தாங்கியிருந்த தென்பது கருதது), எ - று.

185. நறைமலர்ச் சோலை மலிதணிகாசல நாதன்வெற்பில்
நிறைமதி நேர்முக மாதேபுதுமை நிகழ்த்திடக்கேள்
பிறவிக்குருடன் மகன்றன் கொடியும் பெருமுனிவன்
தலையிற் புனைதத்த திகிரியுமேபுலி தாங்கியதே.

உரை :—நறை மலர்ச் சோலை மலிதணிகாசல நாதன் வெற்பில் - மணங் கமழும் பூம்பொழில் நிறைந்த தணிகாசல நாதனது மலையின்மீது, நிறைமதி நேர்முக மாதே - முழு மதியை யொத்த முகத்தையுடைய

பெண்ணே!, புதுமை நிகழ்த்திடக் கேள் - ஒரு வியப்பைக் கூறக் கேட்பாயாக!, பிறவிக் குருடன் மகன்றன் கொடியும் - திருதராட்டிரன் மகனாகிய துரியோதனன் கொடியாகிய அரவம், பெரு முனிவன் தலையிற் புதைத்த திகிரியும் - பெரிய முனிவராகிய அகத்தியர் பூமிக்குள் போகும்படியாக அழுத்திய மலையாகிய விந்தமும் உண்டாகிய அரவிந்த மலரை, புலி-வேங்கை மரம், தாங்கியதே - தன்பால் கொண்டிருந்ததே, எ - று.

186. அடன்மிகு சூர்ப்பகை யாந்தணிகாசல வண்ணல்வெற்பில்
கடகரிமாவரி நற்றனங்கண்ணிடை யாகக் கொண்ட
மடமயிலேயென் புதுமைகண் டாயிந்த மாநிலத்தில்
தடவரவல்குல் வடத்தரு பூமியைத் தாங்கியதே.

உரை:—அடல் மிகு சூர்ப்பகையாந் தணிகாசல அண்ணல் வெற்பில்-மிகுந்த பலமுடைய சூரனுக்குச் சத்துருவாகிய தணிகாசலப் பெருமானின் மலைமீது, கடகரி நற்றனம் - மதயானையைப்போன்ற பெரிய கொங்கையும், மாகண் - வண்டுபோன்ற கண்ணையும், அரி இடையாகக்கொண்ட - சிங்கம் போன்ற இடையையு முடைய, மடமயிலே - இள மயில்போன்றவளே!, தடஅர அல்குல் - விசாலமான பாம்பின் படத்தைப்போன்ற கடிதடத்தையுடையவளே!, இந்த மாநிலத்தில் என் புதுமை கண்டாய் - இந்த பெரிய உலகத்தில் என்ன ஆசசரியத்தைப் பார்த்தாய், வடத்தரு - ஆலமரம், பூமியைத் தாங்கியதே - குவலயம் அதாவது குவளை மலரைத் தாங்கிக் கொண்டிருந்தது, எ - று.

187. முக்கணன்வில் வெற்பை முறித்துவரி யிட்டகால்
முக்கணனே யப்பில்விழ மோதாதோ—முக்கணன்றன்
வேணிக்காகா மலர்வைத் தேகினுன் மெல்லியலே
சாணிற் குறைந்தான் றலை.

உரை:—மெல்லியலே - மென்மைத் தன்மையுடைய தலைவியே!, முக்கணன் வில் வெற்பை முறித்தது - மூன்று கண்ணையுடைய சிவனது வில்லாகிய மேரு மலையில் சிறகுகளைப் பிடுங்கி, உவரியிட்ட கால் - கடலிற் போட்ட காற்றனது, முக்கணனே - மூன்று கண்ணையுடைய தேங்காயை, அப்பில் விழ மோதாதோ - மாததிலிருந்து குளத்துநீரில் விழும்படி தாக்காதா, முக்கணன்றன் வேணிக்காகா மலா - மூன்று கண்ணையுடைய சிவ பெருமான் சடையில் வைக்கக்கூடாத தாழம்பூவை, சாணிற் குறைந்தான் தலை - சாணளவிற்குக் குறைந்த ஒட்டை அதாவது ஒட்டைச செடியின் மீது, வைத்து ஏகினுன் - வைத்துவிட்டுச சென்றான், எ - று.

குறிப்பு:—தலைவியும் தோழியும் இரவுக்குறியில் அடைந்தபோது தண்ணீரில் தேங்காய் விழுந்த சத்தத்தைத் தலைவன் குறிப்பித்த ஒலியாகத் தலைவி கருத, அதை மறுத்துத் தோழி அது தேங்காய் விழுந்ததனு

லாய ஒலியே என்றும், தலைவன் வந்து போனதற்கு அடையாளம் அவன் ஒட்டைச்செடியில் வைத்துப்போன தாழம்பூ வென்றுங் கூறினள் என்பது கருத்து.

188. தினந்தினம் பாவலர் தம்மிடிதீர்ந்திடச் சேணுறையும்
கனந்தருநாணுங் கொடையாளன் வேலன் கனகிரிவாய்
அனந்தரு நன்னடைப் பாவைநல்லாயிவ் வதிசயங்கேள்
அனந்தன் குபேரன் வனமனையங்கி யமர்ந்தனனே.

உரை:—தினந்தினம் பாவலர் தம்மிடி தீர்ந்திட - ஒவ்வொரு நாளும் கவிஞர்களுடைய வறுமை தொலையும்படியாக, சேணுறையும் கனந்தரு நாணுங கொடையாளன் - வானில் தங்கிய மேகமும் கற்பக தருவும் வெட்கப்படும்படியாகப் பரிசு கொடுக்கின்ற வள்ளலாகிய, வேலன் கனகிரி வாய் - வேலனென்பவனது உயர்ந்த மலையின்மீது, அனந்தரு நன்னடைப் பாவை நல்லாய் - அன்னதைப்போன்ற அழகிய நடையையுள்ள அழகிய மாதே!, இவ வதிசயங்கேள் - இந்த வியப்பான செய்தியைக கேட்பாயாக!, அனந்தன் குபேரன் வனம் - அரவு இந்து அம் ஆகிய மூன்றுஞ் சேர்ந்த பூவாகிய அரவிந்த மலர், மனை யகி - அகதநியின்மீது, அமர்ந்தனனே - தங்கிற்று, எ - று.

குறிப்பு:—குபேரன் எனபது சந்திரன், வனம் என்பது நீர், அரவு+இந்து+அம் என்பன அரவிந்தமலா, அகதநீ யென்பது அகத்நியென இறுதி குறுகிற்று.

189. பாலொத்த செஞ்சொ லளகேசசுந்தரன் பாலன்வெற்பில்
வேலொத்தகண் மடவீர்பின்பு வேரொன்று மில்லைகண்டீர்
காலற்ற போதுபின் வாலுமுண்டாய்ப்பின்பு காலுமுண்டாய்
வாலற்ற போதுதன் பேர்பெற்றபாவிசெய் வஞ்சனையே.

உரை:—பாலொத்த செஞ்சொல் அளகேச சுந்தரன் பாலன் வெற் பில் - பால்போன்ற இனிமையான நன்மொழியுடைய அளகேச சுந்தர பாலனது மலையில், வேலொத்த கண் மடவீர் - வேலைப்போலும் விழியை யுடைய மாதரே!, பின்பு வேரொன்று மில்லை கண்டீர் - ஆய்ந்து பார்த்த பின் தலைவன் வரவு யாதுமில்லை, காலற்றபோது பின் வாலு முண்டாய்- காலில்லாதபோது வாலுண்டாகப்பெற்று தலைப் புரட்டையெனப் பேர் பெற்று, பின்பு காலு முண்டாய் வாலற்றபோது - கால் வளர்ந்து வால் ஒழிந்தபோது தவளை யென்ற பேர் பெற்ற நீர் பிராணியின் கபடச் செயலே தலைவன் செயல்போலத் தோன்றிற்று, எ - று.

190. கருதுங்கயல்கடு வேல்கடல்வாளி கருவிளையைப்
பொருதும் விழியணங் கேதமிழாய்ந்த புலவருக்கு
விருதும் பலகையு மீந்தருள்கூட விறைவர்வெற்பில்
எருதும்பசுவும் புலியுமோராஞாயி லேறியதே.

உரை :—கருதுங் கயல் கடு வேல் கடல் வாளி கருவிளையைப் பொருதும் விழியணங்கே - ஒப்பாக மதிக்கப்படும் கயல் மீனையும் கூறிய வேலையும் கடலையும் அம்பையும் கருவிளைப் பூவையும் தனது அழகால்வென்ற கண்ணையுடைய பெண்ணே!, தமிழாய்ந்த புலவருக்கு விருதும் பலகையும் ஈந்தருள் கூடல் இறைவர் வெற்பில் - தமிழிற் றேர்ச்சியடைந்த சங்கப்புலவர்க்கு வெற்றி யடையாளமாகச சங்கப் பலகையும் விருதும் கொடுத்த திருவால வாய்ப் பெருமான் வாழும் மலையிலே, எருதும் பசுவும் புலியும் - நந்தியும் ஆவும் வட்டையுஞ் சோந்துளதாகிய நந்தியா வட்டைப்பூ, ஓர் ஆனை ஏறியதே - ஒரு அத்தி மரத்தின்மேல் வைக்கப்பட்டிருந்தது, எ - று.

191. பாவேந்தர் மூவரின் பாக்கொண்டுபன்றிக் குருளைகொன்று
சேவேந்துபாலக் கணக்க ணிருந்திடு சீர்க்கிரிவாழ்
மாவேந்து கண்மட மானேயதிசய மானதுகேள்
பூவேந்தன் முங்கினன் பொன்னேரியாண்மனை புக்கிடமே.

உரை :—பாவேந்தர் மூவர்தம் பாக்கொண்டு - தலைமைப் பாவலராகிய மூவர் தேவாரப் பாக்களை யேற்றுக்கொண்டு, பன்றிக் குருளை கொன்று - பன்றிக் குட்டியை யழித்து, சேவேந்து - காளையாகிய நந்திகொடியையுடைய, பாலக் கண் - நெற்றிக் கண்ணைக் கூடிய, கணக்கன் - பரமசிவன், இருந்திடு சீர்கிரி வாழ் - விளங்கிடும் சீர்த்தியுடைய மலையில் வாழ்கின்ற, மாவேந்து கண் மடமானே - வண்டுபோன்ற கண்ணையுடைய இளம் பெண்ணே!, அதிசயமானது கேள் - புதுமை யொன்று கேட்பாயாக, பூவேந்தன் - பூவரசமரம், பொன்னேரியான் - வீண்டுவினுடைய, மனை - மனையிடமாகிய இலக்குமி, புக்கிடமே - சென்று தங்குமிடமாகிய தாமரையை தாங்கினன் - சுமந்திருந்தது, எ - று.

192. நாகத்து வசனசனத் தினஞ்சிட நாரணன்றன்
தேகத்தி னேர்மயிர் வீழ்த்திடப்பாண்டவர் தேறினரால்
வாகொத்த மன்மதன் சிவிலிமாறன் வரையிடதே
ஆகத் துணைமுலை யீர்குழலாலழி யாதுயிரே.

உரை :—வாகொத்த மன்மதன் சிவிலிமாறன் வரையிடதே - அழகால் மன்மதனை யொத்த சிவிலிமார பாண்டியனது மலையின்மேல், ஆகத் துணை முலையீர் - உடம்பில் ஒத்த அமைப்புடைய இரு தனங்களையுடைய பெண்டிரே!, நாகத்துவசன் - அரவக் கொடியுடைய துரியோதனன், அசனத்தில் நஞ்சிட - சோற்றில் விஷத்தைக் கலந்து வைக்கவும், நாரணன்

தன் தேகத்தில் ஓர் மயிர் வீழ்ந்திட - கண்ணன் அதைக் குறிப்பதற்காகத் தன்னுடைய உடம்பிலிருந்து ஒரு உரோமத்தை விழும்படிசெய்ய, பாண்டவர் தேறினரால் - பண்டவர் உண்மையைத் தெரிந்துகொண்டனர், குழலால் அழியாத உயிரே - நீங்கள் புறங்காட்டிடக் கூந்தலைக் காட்டுவதனால் எங்களுயிர் மாய்ந்துவிடாது, எ - று.

193. வாகான கொன்றை மழவரங்கேசன்பொன் மால்வரையீர்
சோகாதிகந்தரு மோகவிகாரச் சுரந்தனக்கு
ஆகாதபச்சை யிளநீரென்றுந்த னகத்தி லெண்ணித்
தாகாதி கத்திற்கு வெந்நீரளித்த தயவுநன்றே.

உரை :—வாகான கொன்றை மழவரங்கேசன் பொன்மால் வரையீர் - அழகிய கொன்றைப் பதியிலுள்ள மழவரங் கேசனென்னும் வள்ளலது பொன் விளையும் பெரிய மலையிலுள்ள மாதரே !, சோகாதிகம் தரும் மோக விகாரச சுரந்தனக்கு - மிகுந்த துயரத்தைத தரக்கூடிய ஆசை வேறு பாட்டா லுண்டாகிய வெப்ப நோய்க்கு, ஆகாது பசசை இளநீரென்று உந்தன் அகததில் எண்ணி - உமது மனதில் பசசை இளநீர்போனற தனங்கள் பொருந்தாதென வெண்ணி, தாகாதிகததிற்கு - தாக மிகுதியைத் தவிர்ப்பதற்கு, வெந்நீரளித்த தயவு நன்றே - முதுகை நீர் காட்டித் தந்தது அருட்செயலாக விருக்கிறது, எ - று.

194. அக்கர வம்புனை யாரூர்த்தியாக ரணிவரையில்
இக்கினை வென்ற மொழியணங்கேபுறந் தானினிது
சக்கரையோர்புறங் கைப்பதுண்டோவது தானுமன்றி
அக்கரை யிக்கரை யென்பதுண்டோகங்கை யாடுதற்கே.

உரை :—அக்கு அரவம்புனை ஆரூர்த் தியாகர் அணிவரையில் - எலும்பு மாலையையும் பாம்பையும் தரித்த திருவாரூர்த தியாகராசப் பெருமானது அழகிய மலையின்மீது, இக்கினை வென்ற மொழியணககே - கரும்பினும் மேம்பட்ட இனிமையான சொல்லினையுடைய மாதே !, புறந்தான் இனிது - உன்னுடைய பின் பக்கமும் அழகாக விருக்கிறது, சர்க்கரை யோர்புறங கைப்பதுண்டோ - வெல்லக் கட்டியி னெல்லாப் பக்கமும் இனிப்பா யிருப்பது தவிர ஒரு பககம் கசப்பா யிருக்குமா ?, அதுதானுமன்றி - அதுவு மல்லாமல், கங்கை யாடுதற்கே அக்கரை யிக்கரை யென்ப துண்டோ - கங்கை நதியில் முழுகுவதற்கு அந்தக்கரை இந்தக்கரை யென்று பார்கக வேண்டிய துண்டா ?, எ - று.

195. நதியமர் வேணிக் கரணூர்வழித்துணை நாதன்வெற்பில்
மதிநுதலீரென்ன வாறுசெய்தீர்செவ் வாய்க்கினிய
அதிரச முங்கண்டத் தோரைசையுநற்பணி யாரமுங்கேட்
டெதிரடைந் தேனதைத் தாராமற்றேங்குழ லீந்தனீயே.

உரை:—காணூர் - காணூரில் வீற்றிருக்கும், நியமர் வேணி வழித் தூணை நாதன் வெற்பில் - கங்கையைத் தரித்த சடையையுடைய மார்க்க சகாயநாதப் பெருமான் மலையிலுள்ள, மதி நுதலீர் - பிறைபோன்ற நெற் றியையுடைய பெண்டீர், என் செவ்வாய்க்கு இனிய அதிரசமும் - எனது நல்ல வாய்க்கு இனிமைதரும் அதர பானத்தையும், கண்டத்து ஓசையும் - தொண்டையி லெழும் இனிய குரலையும், நல் பணியாரமும்-நல்ல நகைகளை யும் முத்துமாலையையும் தரித்த தனங்களையும், கேட்டு எதிரடைந்தேன் - வேண்டி யுமது முன்வந்து சேர்ந்தேன், அவை தாராமல் தேங்குழல் ஈந் தனையே - அவற்றைக் கொடாமல் இனிமை சூழ்கின்ற கூந்தலைக் காட்டி னையே, என் அவாறு செய்தீர் - என் அப்படிச செய்தீர்கள், எ - று.

196. தானே தனக்கொத்த சோணைசலேசர் தனைப்பணியு
மானே யெனுங்கொடைச் சமபந்தராய னணிவரையில்
மானே யரவின்றி வெற்பின்றிச் சூழ்ந்திடும் வாரியின்றி
நானேயமுது கடைந்தே னிதுமெத்த நாணயமே.

உரை:—தானே தனக்கொத்த சோணைசலேசா தனைப்பணியும் - தனக் குத் தன்னைத் தவிர பிறரை யொப்பாகச சொல்லப்படாத அண்ணாமலை நாதரை வழிபடுகின்ற ஆனே யெனுங கொடைச சம்பந்தராயன் அணி வரையில் - காமதேனுக்கு உவமானமாகக் கூறக்கூடிய நடையுடைய சம் பந்தராயனது அழகிய மலையிலுள்ள, மானே - பெண்ணே !, அரவின்றி வெற்பின்றிச சூழ்ந்திடும் வாரியின்றி - அரவுபோன்ற அல்குலும் மலை போன்ற தனமும் சுற்றியுள்ள கடல்போன்ற கண்ணும் காட்டப்பெறுமல், நானே அமுதுகடைந்தேன் - நான் அழகிய முதுகைப் பார்க்கப் பெற் றேன், இது மெத்த நாணயமே - இது நல்ல முறையா யிருகிறது, எ - று.

197. சோமன்பதியுந் திருமால்பதியுந் துலங்கு கொன்றைத்
தாமன் பதியுகின் பங்கில்வைத்தாய்தமி யேன்புகழும
வீமன் புகழ்கொண்ட விக்ரமச்சோழன் வியன்சிலமபில்
காமன்பகைவன் பதியோவென் பங்கின் கடைப்பிரிவே.

உரை :—தமியேன் புகழும் வீமன் புகழ்கொண்ட விக்ரமச சோழன் வியன் சிலம்பில் - அடியேன் துதிக்கின்ற கருடப்பறவையின் தலைவனுகிய திருமாலின் கீர்த்தியையுடைய விக்ரமச சோழனது பெரிய மலையில், சோமன்பதியும் திருமால்பதியும் - சந்திரனிடமாகிய முகத்தையும் திருமா லிருப்பிடமாகிய ஆலிலைபோன்ற வயிற்றையும், துலங்கு கொன்றைத் தாமன்பதியும் - விளகுகின்ற கொன்றைமாலை யணிந்த சிவபெருமானது கயிலை மலைபோன்ற தனங்களையும், நின் பங்கில் வைத்தாய் - உன் பகுதி காக மறைத்து வைத்துக்கொண்டாய், காமன் பகைவன் பதியோ - கற்பகத்

காவுக்குத் தலைவனுகிய இந்திரனுக்குப் பகைவனுகிய இந்திரசித்து தங்கு மிடமாகிய மேகம்போன்ற கூந்தலோ, என் பங்கின் கடைப்பிரிவே - என் பங்குக்காக நீ பிரித்துவிட்ட முடிவான பகுதியாகும், எ - று.

198. சேலூரும் வயல்சூழ் மூலைபாகர் திருக்காமி
யீசர் நாட்டில்
பாலூறு மொழிமானே யுனக்குநல்ல வீர்ங்கலசப்
பாக்க மாச்சு
வேலூரு முனதாச்சுப் பெருங்கொண்டை யெமக்களித்தீர்
வேண்டாங் கண்டீர்
காலூரைப் பிடிப்பதற்கு விதப்பட்டே கொடுங்காணுங்
கடுகத் தானே.

உரை:—சேலூரும் வயல் சூழும் உலைபாகர் திருக்காமி யீசர் நாட்டில் - சேல்மீன்கள் செல்கின்ற வயல்கள் சூழப்பெற்ற பார்வதி பங்கராகிய திருக்காமி யீசருடைய தேசத்திலே உள்ள, பாலூறு மொழிமானே - பாலின் சுவை ததும்பும் சொல்லையுடைய பெண்ணே! உனக்கு நல்ல ஈர்ங்கலசப் பாக்கமாச்சு - உனக்கு அழகிய குளிர்ந்த கலசம்போன்ற முலையிருக்கு மிடம் உரியதாயிற்று, வேலூரும் உனதாச்சு - வேல்போன்ற கண்ணிருக்கின்ற பகுதியும் உன்னுடையதாயிற்று, பெருங கொண்டை எமக்களித்தீர் வேண்டாங் கண்டீர் - உம்முடைய பெரிய கொண்டையை எமக்குக் கொடுதலீர் அதுவே வேண்டியதில்லை, காலூரைப் பிடிப்பதற்கு- வண்டியின் உருள் போன்ற கடிதடமிருக்கு மிடத்தைப் பற்றுவதற்கு, விதப்பட்டே கொடுங்காணும் கடுத்தானே - இணங்கியே இதமாக விரைவாக இடங்கொடும், எ - று.

199. மாகத்தைமேவும் புகழ்க்குன்றையூரன் மணிவரையில்
பாகொத்த மென்மொழிப் பாலைவனல்லீ ரென்பருவிர
தாகத்தைத் தீர்க்குநற் சூமபமுந்தாம்பும் தனிக்கிணறும்
ஆகத்திருக்கவிண் மேகத்தைக்காட்டுவ தன்பல்லவே.

உரை:—மாகத்தை மேவும் புகழ்க் குன்றையூரன் மணிவரையில் - வான்முகில் புகழையுடைய திருக்குன்றையூரனது அழகிய மலைமீதுள்ள, பாகொத்த மென்மொழிப் பாலை நல்லீர் - தேன்பாகு போன்ற மெல்லிய சொற்களையுடைய அழகிய மாதர்களே!, என் பருவிரகதாபத்தைத் தீர்க்கும் - என்னுடைய பெரிய மோகவிடாயைத் தணிக்கக்கூடிய, நல் சும்பமும் தாம்பும் தனிக்கிணறும் ஆகத்திருக்க - நல்ல குடம்போன்ற தனமும் கயிறுபோன்ற உரோமமும் ஒப்பற்ற கிணறுபோன்ற கடிதடமும் உடம்பிலிருக்கும்போது, விண் மேகத்தைக் காட்டுவது அன்பல்லவே - ஆகாயத்தி

லிருக்கிற மேகம்போன்ற கூந்தலைக் காட்டுவது தயவுக் கடையாளமாகாது, எ - று.

200. மாகமதிக்கரன் பூம்பாவை வேலப்ப பூபனருள்
மோகன்குழந்தை குருநாதன் வெற்பினிற் மோடிவைத்துப்
பாகமொழிக் கவின்மாதே விரித்துப்பட மெடுக்கும்
நாகமறைத்துக் குழனமக்கீத னலமல்லவே.

உரை :—மாக மதிக்கரன் - மேகம்போன்ற நிறத்தையும் மதிபோன்ற குளிர்ச்சியுமுடைய கையையுடையவனுகிய, பூம்பாவை வேலப்ப பூபன் - பூம் பாவை வேலப்பபூபதி யென்பவன், அருள் மோகன் - பெற்ற காதலனுகிய, குழந்தை குருநாதன் வெற்பினில் - குழந்தைக் குருநாத வள்ளலது மலையின் மிசை, பாக மொழிக்கவின் மாதே - பண்பட்ட சொல்லையுடைய அழகிய பெண்ணே!, மோடி வைத்து - பிணக்கங்கொண்டு, விரித்துப் படமெடுக் கும் நாகமறைத்து - படத்தை விரித்துக் காட்டும் பாம்புபோன்ற அல்குலை மறைத்து, குழல் நமக்கீதல் நலமல்லவே - கூந்தலை நமக்குத் தருதல் நல்ல தன்று, எ - று.

201. வண்டுமதுவுண் டிசைபாடுஞ் செந்திலின் மாரன்வரக்
கண்டுமிருந்தும் வடிவேலிரண்டுங் கருப்பு வில்லும்
குண்டுமிருந்தும் பொற்றேருந் தாமற் குழலேத்தந்தால்
தண்டுகொண் டெப்படி வென்றிடலாமடி தார்குழலே.

உரை :—தார் குழலே - நீண்ட கூந்தலையுடைய பெண்ணே !, வண்டு மது உண்டு இசைபாடும் செந்திலில் - வண்டுகள் தேனைக் குடித்துவிட்டுப் பண்பாடுகின்ற திருச்செந்தூர்ப்பதியில், மாரன்வரக் கண்டிருந்தும் - காமக் கடவுள் வந்து தாக்குவதைத் தெரிந்திருந்தும், வடிவேலிரண்டும் கருப்பு வில்லும் - கூரிய வேல்போன்ற இரண்டு கண்களையும் கரும்பு வில்லுப் போன்ற புருவத்தையும், குண்டும் - திரண்ட கல்போன்ற தனத்தையும், மருந்தும் - அமுதமூறும் அதரத்தையும், பொற்றேரும் - அழகிய தேர் போன்ற அல்குலையும், தாமல் - காட்டாமல், குழலேத் தந்தால் - கூந்தலைக் காட்டினுல், தண்டுகொண்டு எப்படி வென்றிடலாம் - முதுகுத்தண்டைக் கொண்டு எவ்வாறு காமனைச் செயிக்கக் கூடும் ?, எ - று

202. ஏழைக் கிரங்கிடும் வண்மீ காதர் எழில்வரையில்
யாழைவருத்து மொழிமட வாய்நல் லனமிருக்க
வாழை வருக்கைக் கனியிரு பாற்சூட மைவைத்திருந்தும்
கூழையெனக்களித் தீர்மறு மாற்றங் கொடுத்திடுமே.

உரை :—ஏழைக்கிரங்கிடும் வண்மீக காதர் எழில் வரையில் - எளியவர் களுக்கு அருள் செய்கின்ற புற்றிடங்கொண்ட பெருமானது அழகிய மலையி

ளுள்ள, யாழை வருத்தும் மொழி மடவாய் - யாழினு மினிய குரலையுடைய இளமாதரே! நல்லன மிருக்க - அழகிய அன்னம்போன்ற நடையிருக்கவும், வாழை வருக்கைக் கனியிருபாற் குடம் வைத்திருந்தும் - வாழைத்தண்டு போன்ற தொடையையும் பலாக்கனிபோன்ற சொல்லையும் இரண்டு பாற் குடம் போன்ற தனங்களையு முடையவளாக விருந்தும், கூழை எனக் களித்தீர் - கூந்தலை யெனக்குக் கொடுத்தீர், மறுமாற்றங் கொடுதிடுமே - அதற்குக் காரணமென்ன வென்று மறுமொழி சொல்வீராக, எ - று.

203. அழலைத்தரித்த திருவிரிஞ்சேச ரணிவரையில்
மழலைச்சுரமெனு மந்த்ரோதயமு மணிமருந்தும்
தழலைப்பொருந்திய பாம்புங்குடமுந் தராமல்வெறும்
குழலைத்தந் தாலினிப் பாம்பாட்டுவதெங்ங்ண் கூறுதிரே.

உரை :—அழலைத் தரித்த திருவிரிஞ்சேசர் அணிவரையில் - அங்கினியைத் தாங்கியிருக்கும் திருவிரிஞ்சைப் பெருமானுடைய அழகிய மலைமீது, மழலைச் சுரமெனும் மந்த்ரோதயமும் - மழலைச சொல்லிசை யென்னும் மந்திரம் உதயமாகிற வாயையும், அணி மருந்து - அழகிய அதரபானத்தையும், தழலைப் பொருந்திய பாம்பும் குடமும் தராமல் - வெப்பமுடைய பாம்புபோன்ற அல்குலையும் குடம்போன்ற தனத்தையுங் காட்டாமல், வெறும் குழலைத் தந்தால் - பயனற்ற கூந்தலைக் காட்டினால், இனி பாம் பாட்டுவது எங்ங்ண் கூறுதிரே - இனிமேல் புணர்வது எப்படி முடியு மென்று சொல்லும், எ - று.

204. அறங்காட்டிய காத்தைவே லசதி யணிவரையில்
நிறங்காட்டுங் கஞ்சத் திருவனையீர்முக நீண்டகுமிழ்த்
திறங்காட்டும்வே லுஞ்சிலையுங்கொல் யானையுந் தேருங்கொண்
புறங்காட்ட வந்தகு மோசிலைக் காமன்றன் பூசலிலே. [டு

உரை :—அறங் காட்டிய காத்து ஐவேல் அசதி அணிவரையில் - அறஞ் செய்யுங் கையையுடைய ஐவேலசதி யென்பவனது அழகிய மலையின்மீது, நிறங் காட்டுங் கஞ்சத் திருவனையீர் - ஒளி வீசுகின்ற தாமரையிலுள்ள இலக்குமி போன்றவளே!, முகம் நீண்ட குமிழ்த் திறம் காட்டும் வேலும் - முகத்தினிடம் பெரிய குமிழின தன்மையைக் காட்டுகின்ற வேல்போன்ற கண்ணையும், சிலையும் - வில்போன்ற புருவத்தையும், யானையும் - கொல்கின்ற யானைபோன்ற தனங்களையும், தேருங்கொண்டு - தேர்போன்ற அல்குலையும் முன்பக்கம் வைத்துக்கொண்டு, சிலைக்காமன் பூசலிலே - வில்லுடைய மன்மதன் செய்யுஞ் சண்டை நேரத்திலே, புறங் காட்டவும் தகுமோ - பின் பக்கத்தைக் காட்டுவது தகுதியாகுமா?, எ - று.

205. மருப்பங் கயக்கண்ணன் றன்னையர்பாடி வரதன்வெற்பில்
பொருப்பங் கயக்கொம்பு நேரிளங்கொங்கைபொன் பூப்பயுயர்
தருப்பங் கயனம் புதைத்துளம்வாடித் தயங்குமிந்தத்
திருப்பங் கயமென் பழிபூண்ட தோசொலுஞ் சேடியரே.

உரை:—மருப்பங் கயக்கண்ணன் தன்னையர் பாடி வரதன் வெற்பில்- வாசனை வீசும் தாமரைபோன்ற கண்ணையுடைய கண்ணனும் குளிர்ந்த ஆயர் பாடியில் வசித்த வரகு கொடுக்கும் பெருமானுமாகியவனது மலையில், பொருப்பு அம் கயக் கொம்பு நேரிளங் கொங்கை - மலையையும் அழகிய யானைக் கொம்பையும்போன்ற மெல்லிய தனங்களின், பொன் பூப்ப-பசலை படரும்படியாக, உயர்தருப் பங்கயன் அம்புதைத்து - உயர்வு தருகின்ற தாமரைப்பூவை அம்பாகவுடைய மன்மதன் கணைபட்டு, உளம்வாடித் தயங்குமிந்த திரு - மனந்தளர்ந்து திகிலடைகின்ற இலக்குமிபோன்ற இந்தப் பெண்ணின், பங்கு - பாகத்தில், அயம் என்பழி பூண்டதோ - ஆடானது என்ன பழிசெயலை நிகழ்த்தியதோ, சேடியரே சொலும் - தோழியரே சொல்லுவீராக !, எ - று.

206. இரும்புழுத புண்ணுக் கிடுமருந்தைக் கொன்முல்
திரும்பவருந் தீராப் பழிதான்—வருமபழியைத்
தீரவருள் செய்கின்ற செல்வனரு ணைசலனைச்
சேரமனம் வைக்கநீ செப்பு

உரை:—இரும்பு உழுத புண்ணுக்கு இடு - இரும்பிலாகிய எழுத்தாணியினு லெழுதப்பட்ட, ஓலை எழுததில் போடுகின்ற, மருந்து - மருந்தாகிய மையை அதாவது ஆட்டை, கொன்முல் - பலி யிட்டால், திரும்ப வரும் தீராப் பழிதான - நீங்காத பழிதான் அதனு லேற்படும், வரும் பழியைத் தீரவருள் செயகின்ற செல்வ னருணசலனை - வரக்கூடிய பழியாகிய தலைவி மரணதைத நீக்குதற்குக் கிருபை செய்யக்கூடிய அருணசலவள்ளலிடம், சேரமனம் வைக்க - தலைவி சேர்வதற் கிசையும்படி, நீ செப்பு- தோழியே நீ கூறுவாயாக !, எ - று.

207. திருத்த னுயிரைச் செழுங்கனலால் வாட்டா
ஒருத்த னுயிரு மூடலும்—செருக்களத்துக்
கன்றினர்க் கண்டார் கரிகாலன் காவிரிநாட்
டொன்றினர் மாலையிலே யுண்டு.

உரை:—ஒருத்தன் உயிரும் உடலும் - ஆட்டினுடைய உயிரும் உடம்பும், திருத்தன் உயிரை - பெண்ணினுடைய உயிரை, செழுங்கனலால் வாட்டா - மிகுந்த வெப்பத்தால் தன்புறுத்த வில்லை, கரிகாலன் காவிரி நாட்டில் - கரிகாலச் சோழனது காவிரிபாயும் நாட்டினிலே, செருக்களத்

துக் கன்றினர் கண்டார் - போர்க்களத்தில் எதிர்ப்பவர்களை வென்று அடக்கினவராகிய, ஒன்றினர் மாலையிலே உண்டு - காதலரது மாலையிலே அதற்குப் பரிகார முண்டு?, எ - று.

208. கூப்பிட்டான் றன்மகனைக் கொன்றுனைத் தாங்கிமலர்க்
காப்பிட்டாற் போகுங்காண் கன்னிக்கு—வாய்ப்பட்ட
மஞ்சளவு சோலை மருதவன நன்னாட்டிற்
பிஞ்சிட்டாற் போகாது பேய்.

உரை:—வாய்ப்பட்ட மஞ்சளவு சோலை மருதவன நன்னாட்டு - விரிந்த மேகங்களையுடைய பொழில்கள் சூழ்ந்த மருதவனப் பெருமானுடைய நல்ல தேசத்தில், கன்னிக்கு - இந்தச் சிறு பெண்ணின் பொருட்டு, இல் பிஞ்சி - முதல் வீடு அதாவது முதல் ராசியாகிய மேடத்தை யல்லது தூட்டை, இட்டால் - பலி யிட்டால், இப்பேய் போகாது -....., கூப்பிட்டான் தன் மகனைக் கொன்றுனை - பூமியைப் பிளந்தவனாகிய பெருமாளின் மகனாகிய மன்மதனைக்கொன்ற சிவபெருமானை, தாங்கி - தாங்குகின்ற காளையின், மலக் காப்பிட்டால் - சாணத்தைத் தின்பதா லுண்டாகிய திருநீற்றுக்காப்பினை, இட்டால் - பூசினால் போகும் - அப்பேய் நீங்கும், எ - று.

209. புள்ளா ரரும்பொழில் சூழ்தணிகேசன் புயத்திலணி
கள்ளார் கடப்பங் கொணர்ந்திடின் மாற்றுங் கருத்திற்சற்றுமை
உள்ளா வகையென் னலைவையோ விவட்கிங்ங னேங்கொருவு
தள்ளா விசனத்தை மாற்றுங்கொ லோசொலுந் தாழ்குழலே.

உரை:—தாழ்குழலே - நீண்ட கூந்தலையுடைய தோழியே! இவட்கு இங்ஙன் ஓங்கு தள்ளாவிசனத்தை - இவளுக்கு இப்படி மிகுந்திப்பதின்று தவிர்க்க முடியாத துயரத்தை, ஒருவு மாற்றுவ கொலோ - ஆடானது நீக்கவல்லதோ, கருத்தில் சற்றும் உள்ளா வகை என்ன - இதைப்பற்றி உள்ளத்தில் ஒரு சிறிதும் யோசியாத முறைக்குக் காரணம் யாது, ஐயோ - பரிதாபம், புள்ளார் அரும்பொழில் சூழ் தணிகேசன் புயத்திலணி பறவைகள் தங்குகின்ற அருமையான சோலைகள் சூழ்ந்த திருத்தணிகைக்குத் தலைவனாகிய முருகப்பிரானது திருதோளில் அணியப்பெற்றுள்ள கள்ளார் கடப்பங் கொணர்ந்திடின் - தேன்நிறைந்த கடப்பம் பூமாலையைக் கொண்டுவந்தால், மாற்றும் - இவள் விசனத்தை அது நீக்கிவிடும், சொல் - இதைக் கூறுவாயாக, எ - று.

ஈற்று யிரங்கல்

210. தணிகாசலத்தி னமர்குகன் பாதந் தலைக்கணியும்
தணிகாசலத்தி னமிர்ந்திடு கற் கத் தாருவொத்தோய்
தணிகாசலத்தி னலர்கொடு மாரன் வீசுந்தணையைத்
தணிகாசலத்தி னவிந்திடு மென்றன் றனிக்கொடிக்கே.

உரை :—தணிகாசலத்தில் அமர் குகன் பாதந் தலைக்கணியும் தணிகாசல - திருத்தணிகைக் குன்றி லெழுந்தருளி யிருக்கும் குமரக்கடவுள் திருப்பாதங்களைத் தன்னுடைய தலைக்கு அணியாகக் கொண்டுள்ள தணிகாசல வள்ளலே!, தினம் ஈந்திடு கற்பகத் தாரு ஒத்தோய் - யாசிப்பவருக்கு வேண்டியதை ஒவ்வொரு நாளும் கொடுக்கின்ற கற்பக மரம் போன்றவனே!, ஆசலதத்தின் அவிர்ந்திடும் என்றன் தனிக்கொடிக்கே - துயரதத்தினால் இறந்திடுகின்ற இணையற்ற பூங்கொடிபோன்ற என் மகண்மீது, தணிகா - தணியாத, சலத்தின் - சினத்தோடு, மாரன் - மன்மதன், அலாகொடு - பூங்கணையால், வீசும் தணலை - எறிகின்ற நெருப்பை, தணிக - அவிப்பாயாக, எ - று.

நாணிக்கண் புதைத்தல்

211. அரியைத் தரித்த மதுராபுரீச ரணிவரையில்
அரியைத் தரித்த குழன்மடவீரன் றரியெடித்த
அரியைப் புதையு மரிபுதையாம லரிபுதைத்தீர்
அரியைச் சிரம்விட் டடிவால்பிடித்த வறிவொக்குமே.

உரை :—அரியைத் தரித்த மதுராபுரீசர் அணிவரையில் - சந்திரனைச் சூடிய திருவாலவாய்ப் பெருமானது அழகிய மலையில், அரியைத் தரித்த குழல் மடவீர் - வண்டுகளைச் சுமந்த அளகத்தையுடைய பெண்டிரே!, அன்று அரியெடுத்த அரியைப் புதையும் - அக்காலத்திலே திருமாலாகிய மான கண்ணன் எடுத்துப் பிடித்த மலைபோன்ற முலையை மறையுங்கள், அரி புதையாமல் அரி புதைத்தீர் - மலையை மறையாமல் கடலாகிய கண்ணை மறைத்தீர், (அது) அரியைச சிரம் விட்டு அடிவால் பிடித்த அறிவு ஒக்குமே - பாம்பின் தலையைப் பிடியாமல் கீழ் வாலைப் பிடித்த புத்தி போல்வதாகும், எ - று.

நற்ரு யிரங்கல்

212. அருணை சலஞ்செய்யுங் கங்குலிவாட்டிநல் லாய்ந்தமொழி
அருணை சலமில்லை யென்றிந்தவேளையி லாயிழையே
அருணை சலமுலைப் பாரம்பொருளினி யார்மயிலை
அருணை சலமத வேளுக்கிதோடி யறிவிப்பையே.

உரை :—ஆயிழையே - தெரிந்தெடுத்த ஆபரணமணிந்த பாவையே!, இந்த வேளையில் - இந்த சமயத்தில், மயிலை அருணைசல மதவேளுக்கு ஓடி - திருமயிலையிலிருக்கும் அருணசல வள்ளலிடம் ஓடிப்போய், அருணை - ரியனே!, சலம் செய்யுங் கங்குலை வாட்டி - துன்பப்படுத்துகின்ற இராத்திரியைத் தொலைத்து, நல் ஆய்ந்த மொழி அருள் - இனிய தேர்ந்த வாசகங்கூறி யருள்வாயாக!, நாசல மில்லை - இப் பெண்ணின் நாவில் தண்ணீ

நில்லை (நாவறண்டு போயிற்று), அருஞ்சுர முலைப்பாரம்பொறாள் - சிவந்த மலை போன்ற தனங்களின் பளுவை இவள் தாங்க மாட்டாள், இனி யார் - இனிமேல் உன்னைத்தவிர வேறு யாரு துணை, என்று அறிவிப்பையே - என்று கூறி இதனைத் தெரிவிப்பாயாக !, எ - று.

213 ஆனையைத் தோய்ந்த குழலாள் கணவற் கசனமிட
ஆனையைக் கொண்டிரண் டானையைமூடியறு சுவையோடு
ஆனையைக் குத்தியொரு சட்டியாக வவித்திறக்கி
ஆனையைச் சாறுவைத்தாள் சத்திபூசைக் கணிபெறவே.

உரை :—ஆனையைத் தோய்ந்த குழலாள் - வண்டு தங்கிய கூந்தலை யுடையவள், கணவற்கு அசனமிட - புருடனுக்கு உணவு பரிமாறுவதற்காக, ஆனையைக்கொண்டு - தனது ஆடையைக்கொண்டு, இரண்டானையை மூடி - இரண்டு யானை போன்ற முலைகளை மறைத்துக்கொண்டு, அறுசுவையோடு ஆனையைக் குத்தி - அறுசுவைக் கறிகளில் பசு நெய்யையூற்றி, ஒரு சட்டி யாக அவித்திறக்கி - ஒரு பாத்திரத்தில் வேகவைத்திறக்கி, அணிபெறவே - அழகாக, சத்தி பூசைக்கு - அம்பாள் நிவேதனத்திற்கு, ஆனையைச் சாறு வைத்தாள் - அத்திக்காயைக் குழம்பிலிட்டு வைத்தாள்; எ - று.

214. குதிரைக் கனியை நாகம்பறித்துக் கொண்டோடயிலே
குதிரை வரக்கண்டு நாகத்திலேறிடக் கூடவந்த
குதிரை யமட்டிட நாகமபயந்துபின் கூப்பிட்டதால்
குதிரை பறந்து தடாகத்திலானையைக் குத்தியதே.

உரை :—குதிரைக்கனியை - மாம்பழத்தை, நாகம் பறித்துக்கொண் டோடயிலே - குரங்கு பறித்துக்கொண்டு ஓடும்போது, குதிரை வரக் கண்டு - செந்நாய் அதைப் பிடிக்க வருவதைப்பார்த்து, நாகத்திலேறிட - புன்னை மரத்தின்மேல் குரங்கு ஏறிட, கூட வந்த குதிரை யமட்டிட - பிடிக்க வந்த செந்நாய் அசைக்குர லெழுப்ப, நாகம் பயந்து பின் கூப்பிட்ட தால் - குரங்கு அஞ்சிக் கதறவே, குதிரை பறந்து - மரத்திலிருந்த கொக் காண்டு பறந்து போய், தடாகத்தில் ஆனையைக் குத்தியதே - பொய்கையி லுள்ள களிற்று மீனைக் கொத்திற்று, எ - று.

215. அவதாரத்தாதி விழிமயி லேயங் கொருவரில்லை
அவதாரப்பாதிக் கரண்பதி யீந்திடு வல்லவென்றுல்
அவதாரப்பாதிப் பின்பின்னேன் பின்சென்ற வதிசயங்கேள்
அவதாரத்தந்தக் கனியப்பில் விழ்ந்த வதிசயமே.

உரை :—அவதாரத் தாதி விழி மயிலே - விண்டுவின் முதலவதார மாகிய மீனைப்போலுங் கண்ணையுடைய பெண்ணே!, அங்கொருவரில்லை - வீட்டில் வேறொருவரு மில்லை, அவதாரப் பாதிக்கு - பத்து அவதாரத்திற்

பாதியாகிய ஐந்தாவது அவதாரமாகிய வாமனன் அதாவது குழந்தைக்கு அரன்பதி யீந்திடு - கயிலை மலைபோன்ற மூலியின் பாலைக்கொடு, அல்ல வென்றால் - அது செய்யாமற் போனால், அவதாரப்பாதிப்பின் பின்னேன் பின் சென்ற - ஐந்தாவதற்குப் பிற்பட்ட ஆறாவதவதாரமாகிய சீராமனுக்குத் தம்பியாகிய இலக்குமணன் பின் அதாவது இலக்காகிய குறியினிடத்தில் நிகழ்ந்த, அதிசயங்கேள் - வியப்புச் செய்தியைக் கேட்பாயாக!, அவதாரத் தந்தக்கனி - கடைசி அவதாரமாகிய குதிரை அதாவது மாவின் கனி மாம்பழம், அப்பில் வீழ்ந்த அதிசயமே - மரத்திலிருந்து தண்ணீரில் வீழ்ந்த வியப்புத்தான், எ - று.

216. ஒருநாகம் விட்டுயர் நாகத்தின்மீதினி லொண்டொடியாள்
ஒருநாகம் வைத்தே யொருசுனையாட வொருபுதுமை
ஒருநாகங் காட்ட வொருநாகம் பார்த்துட னோடியிலே
ஒருநாக நாகத்தி னுச்சியிலேறி யுறைகின்றதே.

உரை:—ஒண்டொடியாள் - ஒள்ளிய வளையலணிந்த ஒரு மாது, ஒரு நாகம் விட்டு - இணையற்ற மானத்தை விட்டு, உயர் நாகதந்தின் மீதினில்- உயர்ந்த சுரபுன்னை விருட்சதந்தின் மீது, ஒரு நாகம் வைததே - ஒரு சேலையை வைத்துவிட்டு ஒரு சுனையாட - ஒரு பொய்கையில் நீராடவே, ஒரு புதுமை ஒரு நாகம் - வியக்கத்தக்கதாகக் கடிதடம் தோன்ற, ஒரு நாகம் பார்த்து உடன் ஓடையிலே-ஒரு பாம்பு பார்த்து ஓடியபோது, ஒரு நாகம்-(அதனைப் பார்த்து) ஒரு குரங்கானது நாகத்தின் உசசியிலேறி யுறைகின்றதே - மலையுசசியின்மீது சென்று தங்கிற்று, எ - று.

217. நாகத்தை நாகத்தி னுலேமறைத்தொரு நங்கைகல்லாள்
நாகத்தி லேறிமலர் கொய்யும் போதொரு நாகம்வந்து
நாகத்தை நாகமபிடித்துக்கொண் டேயொரு நாண்முழுதும்
நாகத்தை நாகமணுகக் கண்டஞ்சி நடுங்கினளே.

உரை:—நாகத்தை நாகத்தினுலே மறைத்தொரு நங்கை கல்லாள் - கடிதடத்தைத் துணியினுலே மறைத்துக்கொண்டு ஒரு பெண், நாகத்தி லேறி மலர் கொய்யும்போது - புன்னை மரத்திலேறிப் பூவெடுக்குஞ் சமயத்தில், ஒரு நாகம் வந்து - ஒரு பாம்பு வர, நாகத்தை நாகம் பிடித்துக் கொண்டே - உடையைக் குரங்கு பிடித்துக்கொள்ளவே, நாகதத்தை நாகம் அணுகக்கண்டு-மரமிருக்கு மலையை ஒரு யானை நெருங்குவதைப் பார்த்து, ஒரு நாள் முழுதும் அஞ்சி நடுங்கினளே - ஒரு நாள் முற்றிலும் அசசத்தால் நடுநடுங்கினள், எ - று.

218. ஞாயிறும் திங்களுஞ் சூடியநாத ருருணைவெற்பில்
ஞாயிறுந் திங்களு நாமருவோமந்த நாயகனர்
ஞாயிறுந் திங்களுங் கூடுமிடந்தனை நாடிநின்றுல்
ஞாயிறுந் திங்களு மொன்றுயிருந்திடு நம்மளவே.

உரை:—ஞாயிறும் திங்களும் சூடிய நாதர் அருணை வெற்பில் : தமது இரு விழிகளாகப் பகலவனையும் மதியையும் தரித்துக்கொண்ட சிவபெருமானது அண்ணுமலைக் குன்றின்மீது, ஞாயிறும் திங்களும் நாமருவோம் - வெயிலுள்ள போதும் நிலவுள்ளபோதும் அதாவது பகலிலும் இராத்திரியிலும் நாம் தழுவி யிருப்பதில்லை, அந்த நாயகனர் - நம்மோடு கூடாத அத்தக் கணவர் ஞாயிறும் திங்களும் கூடுமிடந்தனை நாடி நின்றுல் - ஞாயிறுந் திங்களுங் கூடிநின்ற மேலிடமாகிய பரம் அதாவது பரத்தையிடம் பிரியப் பட்டிருப்பாராஞல், ஞாயிறுந் திங்களும் ஒன்றுயிருந்திடும் நம்மளவே - சூரியனும் சந்திரனும் ஒன்றுபோல நம்மளவில் துன்பத்தை யுண்டாக்கும், எ - று.

219. நாகஞ்சிறந்த மலர்க்காவிற் போய்வரு நன்னுதலே
நாகஞ்சரிந் திட்டவாறு சொல்லீர்நம னர்தமைப்போல்
நாகந்துரத்திய தாலேயென்மேனி நடுநடுங்கி
நாகஞ்சரிந்த தடியெனை யீன்றரு ணையகமே

உரை:—நாகஞ் சிறந்த மயிர்க்காவிற் போய்வரும் நன்னுதலே - சுரபுன்னை மரங்கள் நெருங்கிய பூம்பொழிலிற் சென்று திரும்புகின்ற அழகிய நெற்றியையுடைய மகளே!, நாகம் சரிந்திட்ட வாறு சொல்லீர் - உன் சேலை தழுவி யிருப்பதற்குக் காரண மென்னவென்று கேட்க, (மகள் சொல்லுவாள்) எனை யீன்றருள் நாயகமே - என்னைப் பெற்ற தயவுடைய அம்மையே!, நமனர் தமைப்போல் நாகந் துரத்தியதாலே - இயமனைப் போல ஒரு யானை என்னைத் துரத்தி வந்ததினுலே என் மேனி நடுநடுங்கி என்னுடம்பு அதிக நடுக்கத்தை யடைந்து, நாகம் சரிந்தது - இந்தச சேலையானது கலைவதாயிற்று, அடி - விளிக்குறிப்பு, எ - று.

220. கண்டகந்தந்த மயிற்சாய லாள்செழுங் கைவனசம்
கண்டகந்தந்த மயில்செண் டருங்பு கனிமொழிகற்
கண்டகந்தந்த நடையாள் சூறவள்ளி காதலனைக்
கண்டகந்தந்தரந் தண்டனிட் டேன்விணைக் கட்டறவே.

உரை:—கண்டம் நந்து - சங்குபோன்ற கழுத்தையும், அந்த மயில் சாயலால் - அழகிய மயில்போன்ற சாயலையுடைய மேனியையும், செழும் கை வனசம் - தாமரைப் பூப்போன்ற வளமான கையையும், கண் அயில் - வேல்போன்ற கண்ணையும், தனம் செண்டு - பூஞ்செண்டுபோன்ற தனத்தை

யும், தந்தம் அரும்பு - முல்லை யரும்புபோன்ற பல்லையும், கனி மொழி கற்கண்டு - கற்கண்டு போன்ற இனிய சொல்லையும், அனம் தந்த நடை யாள் - அன்னம்போன்ற நடையு முடையவளாகிய, குறவள்ளி காதலனே - குறமகளிராகிய வள்ளிநாயகியின் கணவனுகிய குமரப்பெருமானே, கண்டு தரிசித்து, வினைக் கட்டற - கரும பாசம் தொலையும்படியாக, அநந்தம் தரம் தண்டனிட்டேன் - அளவற்ற பலமுறை வணக்கஞ் செய்தேன், எ - று.

221. கனகா சலங்கரிக் கும்பூ ணிளமுலைக் கன்னியுண்மேல்
கனகா சலையுற் றனள்பார் கடைகட் கருணையமோ
கனகா சலநி மூரசமதிக் குடைக் கன்னல்விலா
கனகா சலநித் தாண்டவமூர்த்தி சங்கா குலனே.

உரை :—அமோகனகா - அளவுக் கதிகமான ஒளியை யுடையவனே!, சலதி மூர சமதிக்குடை கன்னல் விலா - கடலாகிய மூரசையும் சந்திரனுகிய குடையையும் கரும்பாகிய வில்லையுமுடைய காமன் போன்றவனே!, கனகா - தேவகுரு போன்றவனே!, சலநித் தாண்டவமூர்த்தி - கடலலை போல நடனஞ் செய்கின்ற தாண்டவ மூர்த்தியே!, கங்காகுலனே - வேளாளகுலத்திற் பிறந்தவனே!, கனகாசு அலங்கரிக்கும் பூண் இள முலைக் கன்னி - மிகுந்த மணிகளால் இழைக்கப்பட்ட நகைகளே அழகாகத் தரித்துள்ள இளமைச் செவ்வியோடு கூடிய தனங்களையுடைய சிறு பெண் ணனவள், உன்மேல் - உன்னிடத்தில், கன காசலை யுற்றனள் - மிகுந்த மோகமுடையவ ளானுள், கருணைக கடைக்கண் பார் - தயவுடனே உன் கடைக்கண்ணுல் அவளைப் பார்ப்பாயாக!, எ - று.

222. மாதங்கமலி யிரண்டன கொங்கை மதர்விழிக்கு
மாதங்கமலி மருவரங் காகுல்லை மாலையருள்
மாதங்கமலி சற்றேணு முண்ணுள் வளருங் கங்குலோர்
மாதங்கமலி தூரும்பாய் மெலிந்தனள் மாதரசே.

உரை :—அம் கமலை மாது மருவு அரங்கா - அழகிய இலக்குமிப்பெண் தழுவப்பெற்ற திருவரங்கப் பெருமாளே!, மா தங்கமலை இரண்டென்ன கொங்கை - பெரிய பொன்மலைபோன்ற இரண்டு தனங்களையுடைய மாத ரசே - பெண்கள் நாயகமாகிய இவள், அங்கு - வீடாகிய அவ்விடத்தில், மாது அமலை சற்றேணும் உண்ணுள் - கல்ல சோற்றைச சிறிதும் அருந்தா திருக்கிறுள், வளரும் கங்குல் ஓர் மாதம் - விடியாத இராத்திரி ஒரு மாத காலம்போல அவளுக்கிருக்கிறது, கம் அலை திரும்பாய் மெலிந்தனள் - நீரிலலைகின்ற தருமபுபோல ஒடுங்கிப் போனுள், மதர் விழிக்கு - மோகக்

குறிப்புடைய கண்களை புடையவளுக்கு, குல்லை மாலை யருள் - நீ துளசி மாலையைக் கொடுப்பாயாக !, எ - று.

223. பஞ்ச வனத்தத்தைக் காக்குந் தென்கூடற் பதிசுந்தரன்
பஞ்ச வனத்தத்தைப் பார்ப்பதிக் கீந்தவன் பாலனக்கால்
பஞ்ச வனத்தத்தை யாளன் செந்தூரன் பதியிற்சென்று
பஞ்ச வனத்ததை காள்சொல்லுவீரென்றன் பந்தத்தையே.

உரை:—பஞ்சவனத் தத்தைகாள் - ஐந்து வர்ணக்கிளிகளே !, பஞ்ச அனத்தத்தைக் காக்கும் - கருப்பினுலுண்டாகிய கேட்டைத் தடுக்கும், தென் கூடற்பதி சுந்தரன் பஞ்சவன் - அழகிய மதுரைத் தலதத்தில் வீற்றி ருக்கின்ற சோம சுந்தர பாண்டியனும், அதத்தத்தைப் பார்ப்பதிக்கு ஈந்த வன் - பார்வதிக்குத் தன்னுடைய உடம்பிற் பாதியைக் கொடுத்தவனு மாகிய சிவபெருமானது, பாலன் - குமரனும், அக்கால் - அந்த நாளில், பஞ்ச வனத் தத்து ஐயாளன் - ஐந்து தொழில் செய்யும் இறைவனது கையில் அழகாகத் தங்கி யிருந்தவனும், செந்தூரன் பதியிற் சென்று - திருசெந்தூரில் வீற்றிருப்பவனுமாகிய முருகப்பிரானிடததே போய், என்றன் பந்தத்தைச சொல்வீர் - என்னைப் பிணித்த காதலைத் தெரிவிப் பீர்களாக !, எ - று.

224. கச்சிக் குரங்கன் மனுநீதி வேந்தன் கனவரைமேல்
கச்சிக்குச் சொல்லி முலைபூணுமோசிறு கையிலள
கச்சிக்கு வாரி முடித்திடுமோ வின்று காலைபின்னே
கச்சிக் கெனசசென் றிராமே சுரங்கண்ட காட்சிநன்றே.

உரை :—கசசிகசு அரகசன் மனுநீதி வேந்தன் கனவரைமேல் - கசசியி லிருக்கும் அரகசனென்னும் வள்ளலாகிய மனு முறை நீதி செலுத்தும் மன்னனுடைய உயர்ந்த மலையின்மீதுள்ள, இக்குச சொல்லி - கரும்புச சுவையுடைய மொழியாளாகிய பெண, முலை கசசுப் பூணுமே - தனததின் வாரை யணிவாளோ, சிறு கையில் அளகச சிக்குவாரி முடித்திடுமோ - தனது சின்னக் கைகளால் தலை மயிரிலுள்ள சிக்கைக் கோதி முடித்துக் கொள்ளுவாளா, இன்றே காளை பின்னே - இகாலத்தில் ஒரு காதலன் பின்னே, கசசிக் கெனச சென்று - காஞ்சீபுரத்திற்குப் போகிறேனென்று சொல்லிப்போய, இராமேசுவரங் கண்ட காட்சி நன்றே - இராமேசுவரம் போய்த் தரிசனம் பணணினசெயல் பாவைகசு நன்றுயிருக்கிறது, எ-று.

225. கொக்கேறி வந்தவரசே யிருவருங் கூடவென்றுல்
கொக்கே கணவனற் காவல்லவத் தானந்தக் கொக்கெழுந்து
கொக்கே கடித்திடுங் கோவே யருகுறுங் கொல்லையிலே
கொக்கே யிருக்கின்ற தங்ஙனம வந்திடிற் கூடுவனே.

உரை:—கொக்கேறி வந்த அரசே - குதிரையின்மே லேறிவந்த மன்னனே!, இருவருங்கூட வென்றால் - நாமிருவரும் கூட முயன்றால், கொக்கே கணவன் நற் காவல் வைத்தான் - செந்நாயைக் கணவன் தக்க காவலாக வைத்திருக்கிறான், அந்த கொக் கெழுந்து - அந்தச செந்நாயானது கிளம்பி, கொக்கே கடித்திடுங் கோவே - அரசனது குதிரையைக்கடித்து விடும், அருகும் கொல்லையிலே - பக்கத்திலிருக்கும் வீட்டுப் பின்புறத் தோட்டத்திலே, கொக்கே இருக்கின்றது-மாமர மிருக்கின்றது, அங்ஙனம் வந்திடில் கூடுவனே - அந்த வீடத்திற்கு வந்தால் நான் உன்னோடு சேர்வேன், எ-று.

226. சந்தநந் தந்தர ளங்களந் தந்தஞ் சரங்கணம்பு
சந்தநந் தந்தர வானுசுப் பல்குன்மின் றந்தமெய்ப
சந்தநந் தந்தர சங்கசந் தம்பரஞ் சங்கிழந்து
சந்தநந் தந்தரஞ் சொன்னுள் வரச்சொல்லிச் சண்முகனே.

உரை :—சண்முகனே - ஆறுமுகப் பெருமானே !, சந்த நந்தகளம்- அழகிய சங்குபோன்ற கழுத்தும், அம் தாளம் தந்தம் - அழகிய முத்துப் போன்ற பல்லும், சரம் கண் - அம்புபோன்ற கணணும், அம்புசம் தனமதாமரை மொட்டுப்போன்ற முலையும், தந்து நுசுப்பு - நூலிழைபோன்ற இடையும், அரவு அல்குல் - பாம்புப் படம்போன்ற கடிதடமும், மின் தந்த மெய் - மின்னல் போல ஒளி வீசுகின்ற உடம்பு முடைய பெண், பசந்து - காதலாற் பசலை படரப் பெற்று, அனம் தந்த ரசம் கசந்தி - அன்னத்தோடு கூடிய ரசதத்தை வெறுத்து, அம்பரம் சங்கு இழந்து - ஆடையும் சங்கவளையலும் நழுவப்பெற்று, வரச சொல்லி - உன்னை வரும்படியாகச சொல்வதற்கு, அனந்தம் தரம் நீ தொன்னுள் - அளவற்ற தடவை என்னைத் தூது போகும்படி சொன்னுள், எ - று.

ஒரு வித்துவானின் ஆடையைப்பற்றிப் புகழ்ந்தது

227. நத்தையார் வயல்சூழ் பெரும்பாளய நகரில்
வாழுஞ்சிதமபர மன்னவா
நத்தைநோக்கி யரிபரந் தாமச னுர்த்தனை
வென்றழு மொருபெண்ணின்மா
நத்தையன் றளித்திட் டவன்போலென் மாநத்தை
யின்றளித்திட்டாயென் றுன்னிதா
நத்தையா லென்சொல் வேனிரண் டாயிர
நாவுடைப்பணி நல்லரசன்றியே.

உரை:—நத்தையார் வயல் சூழ் பெரும்பாளய நகரில் வாழும் சிதம்பர மன்ன - சங்குகள் நிறைந்த வயலகள் சூழ்ந்த பெரிய பாளையப்பதியில் வசிக்கும் சிதம்பரமென்னும் அரசனே!, வானத்தை நோக்கி அரி பரந்தாம

சனர்த்தனை வென்றழும் ஒரு பெண்ணின் - வானை நோக்கி அரி பரந்தாம சனர்த்தனை என்ற பெயர்களைச் சொல்லித் திருமாலை அழைத்த துரௌபதையின், மானத்தை அன்று அளித்திட்டவன்போல் என் மானத்தை இன்றளித்திட்டாய் - மானத்தைக் காப்பாற்றிய கடவுளைப்போல ஆடை தந்து எனக்குப் பெருமை கொடுத்தாய், உன் நிதானத்தை - உன்னுடைய உயர்ந்த தன்மையை இரண்டாயிர நாவுடைப் பணி கல்லரசன்றியே - இரண்டாயிரம் நாக்கையுடைய ஆதிசேடனைய பாம்பு மன்னனைத் தவிர, யான் என்னென்று சொல்வேன் - யான் எத்தகையது என்று சொல்ல வல்லேன், எ - று.

228. அந்தரங் கண்டிடத் தேயுநெல் லிரும்புபோ
லிப்போதகப் பட்டேன்யான்
அந்தரங்க வாழி முரசோ னமரிற்
படுந்துயர மகற்றுதற்கே
அந்தரங் கண்வள ரமலர் முனிவருக்கு
முனிவருக்கு மமுதையீந்த
அந்தரங்க மாயனையே யந்தரங்க
மாயனையே யழைப்பிப்பாயே.

உரை :—அனையே - தாயே !, அந்து அரம் கண்டிடத் தேயும் நெல்லிரும்புபோல் இப்போது அகப்பட்டேன் யான் - அந்துப் பூச்சி படிந்த நெல்லும் போலவும் அரத்திலராவிய இரும்பு போலவும நான் இப்போது பிரிவாற்றுத துயரிலகப்பட்டுக கொண்டேன், அம் தரங்க ஆழி முரசோன் அமரிற் படும் துயர மகற்றுதற்கே - அழகிய அலையையுடைய கடலாகிய பேரிகையையுடைய மன்மதனது சண்டையிலு ளுண்டாகிற வருத்தத்தை ஒழிப்பதற்கு, அந்தரங கணவளா அமலா முனிவருக்கும முனிவருகும் அமுதை யீந்த - விண்ணிடதேதே சிறப்பாக வாழ்கின்ற தேவர் முனிவர் மனித முனிவ ரென்பவாகளுக்குத் தேவாமிர்த்தத்தைக் கொடுதத, அந்த ரங்க மாயனேயே - மூட்டப் பொருளாகிய திருமாலேயே, அந்தரங்கமா யழைப்பிப்பாயே - மறைவா யழைத்து வரும்படி சொல்வாயாக, எ - று.

229. அன்னமது வீடென்றே குடியிருக்குங்
கொண்டைமுக மரவிந்தஞ்சீர்
அன்னமது கண்டஞ்சு நடைபந்து
கொங்கைசுர ரமுதந்தன்னே
அன்னமது ரமபோன்ற சொன்மாது
சிவாஜி யரசேயென்றும
அன்னமது வேம்பாகி மயலானு
ளினிதாய்வந் தாளுவாயே.

உரை:—சிவாஜி அரசே - சிவாஜி மன்னனே', அல் நமது வீடென்றே குடி யிருக்கு கொண்டை - இருளானது தனது சொந்த வீடமென் றெண்ணித் தங்கும் கூந்தலையும், அரவிந்த முகம் - தாமரைப் பூப்போன்ற முகத்தையும், சீர் அன்னமது கண்டஞ்சு நடை - அழகிய அன்னம் பார்த்து நாணக்கூடிய நடையும், பந்து கொங்கை - பந்துபோன்ற தனமும், சுரர் அமுதத்தன்னே அன்ன மதுரம்போன்ற சொல் - தேவாமிர்தம்போலும் இனிமையான மொழியு முடைய என் பெண், என்றும் அன்னமது வேம் பாகி மயலானுன் - எப்போதும் சோறு கசக்கப்பெற்று உன்பால் காதல் கொண்டாள், இனிதாய் வாது ஆளுவாயே - விருப்பத்தோடு வந்து அவளை யாட்கொள்ளுவாயாக!, எ - று.

230. சென்னிமலே வேலருக்குச் சேர்ந்தகொம் பிரண்டுண்டு
கன்னிகுற வள்ளிக்குக் காலில்லே—முன்னமே
ஆட்டுக்குக் கொம்பில்லே ஆனைக்குக் காலில்லே
பாட்டுக்குள் ளாராய்ந்து பார்.

உரை:—சென்னிமலே வேலருக்குச சேர்ந்த கொம்பிரண்டு - சென்னி மலேயிலிருக்கும் வேலாயுதப் பெருமானுக்கு அவரோடு கூடிய மனைவியர் இருவருளா, கன்னி குற வள்ளிக்குக் காலிலலே - குறச சிறு பெண்ணுகிய வள்ளியைக குறிக்கும் பெயராகிய வள்ளியென்பது கொடியை யுணாததுங காலை கொடிகளுக் காலில்லே யென்பது தெளிவு, முன்னமே ஆட்டுக்குக கொம்பிலலே யானைகளுக் காலில்லே பாட்டுக்குள் ளாராய்ந்து பார - ஆடு என்ற சொல்லிலும் ஆனை யென்ற சொலலிலும் கால் கொம்பு என்ற எழுததுக் குறிகள் அவற்றிற்கு முன்னதாக இல்லே, எ - று

குறிப்பு:—கொண்டு கூட்டாக வெடுதது ஆட்டுக்குக் காலிலலே ! யானைகளுக கொம்பில்லே என்றபொழுது ஆட்டத்திறகேற்ற காலமைப் பில்லே யென்றும், யானைக்குத் தலையில கொமபில்லே என்றுங கூறலாம்.

231. தார்க்கொன்றை தாவென்றேன் முவேழி லொன்றென்றுன்
ஊர்க்கஞ்சி யான்மூன்றி லொன்றென்றேன்—யார்க்கும
பொதுவென்றுன் பூவென்றேன் போயினுன் மூழி
இதுவோநம் மீச னியல்பு.

உரை:—தார்க் கொன்றை தா என்றேன் - நமது இறைவனைப் பாத தக் கொன்றை மாலையை கொடுவென்றேன், எழிலொன்று தா என்றுன் - கன்னிக்கு எழாவது வீடாகிய கும்பம்போன்ற தனத்தைக கொடு என றுன், ஊர்க்கஞ்சி நான் மூன்றில் ஒன்றென்றேன - ஊராகாரர்களுப் பயப்பட்டு கன்னி மணப்பெண கைம பெண் என்ற மூன்றில் முதலாவ தாகிய கன்னி யென்றேன், யார்க்கும் பொது என்றுன் - கன்னிகையை யாரும் நாடலாமென்றுன், பூ என்றேன் - பூப்பென்று சொன்னேன்,

போயினன் - உடனே போய்விட்டான், தோழி இதுவே நம் மீசனியல்பாகி நம் பிறைவன தன்மை யிதுவோ, எ - று.

232. பறவைநாய் நாகம் பகைவிலங்கு பங்கம
செறியுமிரு ளாஞ் சிதடன்—குறிகிழவன்
என்றுரைத்த வீரைந்து மேர்தண்டத நிற்பண்பாய்
ஒன்று மெனவுரைப்ப ரால்.

உரை:—பறவை நாய் நாகம் பகைவிலங்கு பங்கம் - பட்சிகள் நாய்கள் பாம்புகள் சதுரருக்கள் நாற்காற் பிராணிகள் சகதி, செறியும் இருள் - அடர்ந்த இருள், நாரம் - தண்ணீர், சிதடன் - கண் தெரியாதவன், குறி கிழவன் - வழி வருந்திக் காணும் வயோதிகன், என்றுரைத்த பீரைந்தும் - என்றுரைதத பத்துப் பேரால்வரும் கேடும், ஏர் தண்டதநிற் பண்பாய் ஒன்றும் - அழகிய கோலின் பயனுல் மாறி பொழியும், என வுரைப்பர். என்று அறிஞர்கள் கூறுவாகள், ஆல் - அசை, எ - று.

233. நக்கனர் சோணகிரி நாதனர் வேள்வியிலே
தக்கனை ரைத்தகர்த்த தக்கனர்—பொக்கைவாய்
ஆக்கினர் சூரியனே யமபுலியைத் தேய்த்தரியைத்
தாக்கினை ரோடோடத் தான்.

உரை:—நக்கனர் சோணகிரி நாதனர்-திருவாணியாகிய அண்ணுமலைப் பெருமான், வேள்வியிலே தக்கனுரைத தகர்தத தக்கனர - தகன் யாகத் திலே தக்கனேத தாக்கி யடிதத தகுதி யுடையவர், சூரியனைப் பொக்கை வாய் ஆகினர - தக்கன் வேள்வியில் தக்கனேச சாந்த சூரியனுடைய பற்களே யுடைத்தார், அம்புலியைத் தேயதது - சந்திரனே மிதிததழுத்தி, அரியை ஓடோடத தாகினர - இந்திரனே யோட்டமெடுகும்படியாகத் தாக்கி யடிததார், எ - று.

234. ஓடினை னென்ப துணர்ந்து மூனக்குச்சரியா
நாடினர்க் கென்ன நரகமோ—வீடியே
ஆலவிடம் தோன்றியபோ தம்பலவா ணெடிய
மாலவிடஞ் சஞ்சரியா தே.

உரை:—அம்பலவாணு - சபாநாதரே!, வீடியே - பெரியதாகவே, ஆல விடம் தோன்றியபோது-ஆலகாலவிடம் திருப்பாற்கடலில எழுந்தபோது, நெடியமால் அவவிடம் சஞ்சரியாது ஓடினன் என்பது உணர்ந்தும் - பெரிய திருமால் அநத விடததில் நில்லாமலோடிப் போய்விட்டா ரென்பது தெரிந் தும், உனக்குச சரியா நாடினர்க்கு என்ன நரகமோ - உமக்கொப்பாக அவ ரைக் கருதுகிறவர்களுக்கு எவ்வகையான நரகம் கிடைக்குமோ, எ - று.

235. அசமிசைப் பகற்ரு தன்னையே நம்பால்
வசமித தவரு வாய்மை—இசைநாகைச்
சின்னப்பால் வெண்மதியஞ் சேரிமையத் தேபிறந்த
அன்னப்பா லிங்குவந்தா லாம்.

உரை:—அன்னையே - அம்மையே !, அசம் நம் இழைப்பு அகற்ரு தாடு நம்முடைய தளர்ச்சியை நீக்காது, நம்பால் வசமம் இது தவரு வாய்மை - நாம் சொல்லுகின்ற இந்த வாக்குப் பிழையில்லாத வுண்மை யாகும், இசை நாகை - கீர்த்தியுடைய நாகைப்பதியி லுறைகின்ற, சின் னப்பால் வெண்மதியஞ்சேர் - பால்போன்ற வெண்ணிறமுடைய இளம் பிறையை யணிந்த, இமயததே பிறந்த அன்னப்பால் - இமயமலையி லவ தரிதத அன்னம்போன்ற வுமையம்மையைப் பாகத்திலுடைய பெருமான், இங்கு வந்தாலாம் - இங்கே வந்தால் இழைப்புத் தீரும், எ - று.

236. சீர்கொண்ட வழகுமிகு மாரனது நாமமும்
தேவரம பையி னுமமும
திகழோரி ராகத்தி னுமமுஞ் சிவைநாமஞ்
செப்புமிப் புவி நாமமும
தார்கொண்ட சிறியநற் பெண்ணினு மமுமாகி
சார்ந்தவறு வகை மொழியினில்
தமதிடையி லுறைகின்ற தேவனது பெயர்கொண்டு
தங்குபுக ழோங்கு சுகுண
கூர்கொண்ட கொமபிலா மாடுகொல் லாவேங்கை
குயியெள் ளடாத காணம
கூறுமுக மில்லாத வுடலுவரி யின்னிதியம
குமபிடாச் சாமி வெண்ணெய்
வர்கொண்ட தயிருணு வரிமாதர் மார்புதனில்
இல்லா தன முலகினே
இன்பமுட னளாத செங்கோலி யீட்டவோர்
இனியதொழில் காட்டி யருளே.

உரை:—சீர்கொண்ட அழகு மிகு மாரனது நாமமும் - சிறப்பான அழகுடைய மன்மதனுடைய பெயரும் அதாவது மதன் என்ற சொல்லும், தேவரம்பையின் நாமமும் - விண்மாதரின் பெயராகிய உருவசி யென்ற சொல்லும், திகழ் ஓர் இராசத்தின் நாமமும் - விளங்குகின்ற ஒரு இராகத் தின் பெயரும் அதாவது இராமக்கிரியை யென்ற சொல்லும், சிவை நாமம்- சிவசத்தியின் பெயரும் அதாவது வராகி யென்ற சொல்லும், செப்பு மிப் புவிநாமமும் - சொல்லுகின்ற இத்தப் பூமியின பெயரும் அதாவது அசல

மென்ற சொல்லும், தார்கொண்ட சிறிய நற்பெண்ணின் நாமமுமாகி - மாலேதரித்த சிறு பெண்ணின் பெயரும் அதாவது கன்னியென்ற சொல்லுமாகிய, சார்ந்து அறுவகை மொழியினில் தமதிடையி லுறைகின்ற தேவனது பெயர்கொண்டு - ஆகிய ஆறு சொற்களிலும் நடுவில் நின்ற எழுத்துக்களிலுலாகிய தருமராசன் என்ற கடவுளினது பெயரைப் பூண்டு, தங்கு புகழோங்கு சுருணை - நிலேத்த புகழை யடையப்பெற்ற நற்குணவானே !, கூர்கொண்ட கொம்பிலா மாடு - கூர்மையதாகிய கொம்பில்லாத மாடு அதாவது செல்வம், கொல்லா வேங்கை-கொல்லாத வேங்கை அதாவது பொன், குவியெள்ளடாத காணம் - குவிந்த யெள்ளோடு சேராத காணம் அதாவது பொன், கூறு முகமில்லாத உடல் - முக முதலிய உறுப்பில்லாத உடல் அதாவது பொன், உவரி இல்நிதியம் - கடல் சார்பில்லாத நிதி அதாவது பொன், கும்பிடாச்சாமி - வணக்கப்படாத சாமி அதாவது பொன், வெண்ணெய் ஏர்கொண்டதயிருணு அரி - வெண்ணெய் அழகான தயிர் ஆகிய இவற்றை யுண்ணுத அரி அதாவது பொன், மாதர் மார்புதனில் இல்லாத தனம்-பெண்களது நெஞ்சில் இல்லாத தனம் அதாவது செல்வம், உலகினே இன்பமுடன் ஆளாத செங்கோலே - உலகினே இனிமையாய் ஆளுகற் கில்லாத செங்கோலை அதாவது பொன்னே, ஈட்டவோர் இனிய தொழில் காட்டி யருளே - பொருளேத் தேடுதற்குரிய ஒரு வழியை விளக்கியருள் வாயாக!, எ - று.

குறிப்பு:—மதன், உருவசி, இராமக்கிரியை, வராகி, அசலம், கன்னி என்ற ஆறு சொற்களிலுள்ள நடுவெழுத்துக்கள் சேர்ந்து தருமராசன் என்ற சொல்லாதல் காண்க, மாடு, வேங்கை, காணம், உடல், நிதி, சாமி, அரி, தனம், செங்கோல் என்னும் இந்த சொற்கள் பொன்னேயும் செல்வத்தையுங் குறிக்கும் பிறபெயர்களாதலோடு வேறு பொருளும் உடைமையால் அவவேறு பொருளேப் பிரிப்பதற்காக அடைமொழிகள் கொடுக்கப்பட்டன.

237. பேரான வீரெழுத்தை முடியி லேற்றுன்
பின்னேவந்த வீரெழுத்தை யிடக்கை யேற்றுன்
சீரான வீரெழுத்தை வலக்கை யேற்றுன்
சிறப்பான வீரெழுத்தி லேறிக்கொண்டான்
காரான வீரெழுத்தை மிடற்றிற் கொண்டான்
கருணைசெயு மீரெழுத்தைப் பாகங்கொண்டான்
ஆராகி லுமபொருளே யறிந்து சொல்லின்
அவர்கடமைப் புலவரென வறையலாமே.

உரை:—பேரான வீரெழுத்தை முடியிலேற்றுன் - இரண்டெழுத்தினுலாகிய மதியைச சிவபெருமான் சிரமே லணிந்தான், பின்னே வந்த வீரெழுதத்தை யிடக்கை யேற்றுன்-பிற்பாடு இரண்டெழுத்தினுலாகிய மான்

என்பதை இடது காதிற் ருங்கினன், சோன வீரெழுத்தை வலக்கை யேற்ருன் - சிறப்பான விரண்டெழுத்தினுலாகிய மழு என்பதை வலக் காதினுற் ருங்கினன், சிறப்பான வீரெழுத்தி லேறிக்கொண்டான்-சிறப் புடைய விரண்டெழுத்தினுலாகிய விடையின்மேல் ஏறிக்கொண்டான், காரான வீரெழுத்தை மிடற்றின் கொண்டான் - கருமையைக் குறிக்கும் இரண்டெழுத்தினுலாகிய கடு என்பதைக் கண்டத்தில் வைத்தான், கருணை செயும் ஈரெழுத்தைப் பாகங் கொண்டான் - கிருபை செய்யும் உமையை இடப்பாகத்தில் வைத்தான், ஆராயிலும் பொருளே யறிந்து சொல்வின் அவர்கள் தமைப் புலவரென அறையலாமே - ....., எ - று.

238. சோன பசுவின்பேர் சென்னிப் பேரும்
சகபுகழு மாதுலன்பேர் கன்னிப்பேரும்
பேரான மரத்தின்பேர் நிசத்தின் பேரும
பேசரிய விவ்வாறு மொன்ருச் சேர்த்து
ஏராக விவற்றினடு வொன்ருக் கூட்ட
இயல்பிரமன் சிவமெனவே யியம்பலாகும
வாரான வீராறின் முன்பின்னுன
ஆறுமொழி யவர்க்காக வமைந்ததன்றே.

உரை:—சோன பசுவின் பேர் - உயர்ந்த பசுவின் பெயராகிய கபிலை யென்ற சொல்லும், சென்னிப்பேரும் - தலையைக் குறிக்கும் பெயராகிய சிரசென்ற சொல்லும், சகம் புகழும் மாதுலன் பேர் - உலக மறிந்த மாதுலன் பெயராகிய மாமன் என்ற சொல்லும், கன்னிப்பேரும் - கன்னி யென்ற சொல்லும், பேரான மரத்தின் பேர் - பெரிய மரத்தைக் குறிக்கும் பெயராகிய ஆனி யென்ற சொல்லும், நிசதின் பேரும் - மெய்யின் பெய ராகிய சாசுவதமென்ற சொல்லும், பேசரிய இவ்வாறும் ஒன்ருய்ச சேர்த்து - சொல்லுதற்கரிய இந்த ஆறு சொற்களையும் ஒன்ருய்ச சேர்த்து, ஏராக இவற்றினடு ஒன்ருக்கூட்ட - அழகாக இவற்றின் நடுவெழுத்துக் களே யொன்ருய்ச சேர்த்தால், இயல் பிரமன் சிவமெனவே இயம்பலாகும்- பிரமன் சிவமென்ற இயற் பெயராக அமையும், வாரான ஈராறின் முன் பின்னுன ஆறுமொழி யவர்க்காக அமைந்ததன்றே-எஞ்சிய எழுத்துக்களி னுலாகிய ஆறு மொழிகளும் அவர்க் கில்லாதவற்றைக் குறிப்பதாகும், எ - று.

குறிப்பு:—கபிலை, சிரசு, மாமன், கன்னி, ஆனி, சாசுவதம் என்ற ஆறு சொற்களின் நடுவெழுதுதைச் சேர்த்தால் பிரமன் சிவ என்ற சொற்களமை யும், மற்ற எழுத்துக்களினுலாகிய சொற்கள் கலை, சிசு, மான் (பெண்), கனி, ஆனி, சா+சுதம் என்பன கடவுளுக்கில்லை; அதாவது, (கலை -) ஆடையும், (சிசு -) குழந்தைத் தன்மையும், பெண்ணுடைமையும், (கனி -) மூத்தலும், தின்பமும், இறப்பாகிய கேடும் இல்லை யென்பது கருதது.

239. மாகமுறை யுடுக்களிரு பானேழ் தம்மின்
மன்னுமோ ருடுவதன் முன்னெழுத்தை நீக்கின்
சாகசமாம் அலையாரு மிடையைத் தள்ளின்
சலதரத்தை யடுமதிலாங் கடையைத் தள்ளின்
பாகமதி லொருமானுஞ் சிரத்தோர் மானும்
பாணியிலோர் மானுநா வதிலோர் மானும்
ஆகமதி லோர்மானுங் கொண்டோர் பேராம்
அதன்பெயரை யுரைப்பவரே புலவராமே.

உரை:—மாகமுறை யுடுக்களிரு பானேழ் தம்மின் மன்னுமோ ருடுவதன் முன்னெழுத்தை நீக்கின் சாகசமாம் அலையாகும் - ஆகாயத்திலுள்ள இருபத்தேழு நட்சத்திரங்களில் ஒன்றின் பெயராகிய நட்சத்திரத்தின் முதலெழுத்தை எடுத்துவிட்டால் எளிதான ஆல யென்னும் பொருள் படும், இடையைத் தள்ளின் சலதரத்தை யடுமதிலாம் - அச சொல்லின் நடுவெழுத்தைத் தள்ளிவிட்டால் எஞ்சிய பகுதி மதிலென்று பொருள் படும், கடையைத் தள்ளின் - கடை யெழுதை நீக்கினால், பாகமதி லொரு மானும் தமது இடப்பாகத்திலே பார்வதியாகிய பெண்ணையும், சிரத்தோர் மானும் - தலையிலே கங்கையாகிய பெண்ணையும், பாணியிலோர் மானும் - இடக்கையி லொரு மானும் கொண்டவருடைய பெயரும், நாவதிலோர் மானும் - நாவில் சரஸ்வதியாகிய பெண்ணை வைத்த பிரமாவின் பெயரும், ஆகமதி லோர் மானும் கொண்டோர் பேராம் - மார்பிலே ஒரு பெண்ணைத் தரித்த திருமாலின் பெயரா ஆகும், அதன் பெயரை யுரைப்பவரே புலவராமே - அதனுடைய பெயர் சொல்பவர்களே அறிஞராவர் (அதன் பெயர் ஆதிரை யென்பது.)

குறிப்பு:—ஆதிரை, திரை - அலை, ஆரை - மதில், ஆதி - கடவுள் (இது மும்மூர்த்திகளையும் குறிப்பதாகும், சிவன், பிரமன், திருமால்)

240. வீடுகோ கிலநீலி தமமின் மூன்றின்
விளங்குபெயர் நடுவெழுத்தா னுனைநா டோறும
பீடுறுபா மாலைநூத னஞ்செய் தேத்தப்
பித்தனே நிற்குமூ விரண்டெழுத்தில்
நீடுசடை தனில்வைதது மகங்க டோறும
நின்றேற்றுந் தொடையாகவே யணிந்தும
ஆடுடையாய் மாடுடையாய் நாடுமீச
வந்தருளே வந்தெனக்குத் தந்திடாயே.

உரை:—வீடு கோகிலம் நீலி தம்மின் மூன்றின் விளங்கு பெயர் - வீடு கோகிலம் நீலி யென்ற மூன்றையுங் குறிக்கும் அகம் பல்லி அலரி யென்ற மூன்றின், நடு வெழுத்தால் உனை நாடோறும் பீடுறு பாமாலை நூதனஞ்

செய்தேத்த - நடுவெழுத்தாலாகிய 'கல்வி'யால் பெருமை பொருந்திய கவிக் கோவைகளைப் புதிதுபுதிதாகச செய்து வழிபட, பிததனே - பித்த னென்ற பெயருடைய சிவபெருமானே!, நிற்கு மூவிரண்டெழுத்தில் - எஞ்சிய பகுதியில் முதற் சொல்லிலுள்ள அம் அதாவது நீர் என்பதை, நீடு சடைதனில் வைததும் - நீண்ட சடையினிடமாக வைத்தும், அகங் கள் தோறும் கின்று ஏற்றும் - இரண்டாவது சொல்லாகிய பலி அதாவது பிசைசச் சோறு வீடுகள் தோறும் போய் வாங்கியும், தொடையாகவே அணிந்தும் - மூன்றாவது எஞ்சிய பகுதியாகிய அரியின் என்பினை மாலை யாக அணிந்தும், ஆடுடையாய் - கூத்துடையவனே!, மாடுடையாய் - காளை வாகன முடையவனே!, நாடும் ஈச - எல்லாரும் தேடுகின்ற ஈசனே!, வந்தருளே வந்தெனக்குத் தந்திடாயே - வெளிப்பட்டுவந்து உன்னருளைக் கொடுத்தருளவேண்டும், எ - று.

குறிப்பு :—அகம், பல்லி, அவிரியாகிய இவற்றின் நடுவெழுத்து கல்வி; இம்மூன்றின் தனிததனி நடுவெழுத்தை நீங்கினால், அம - கங்கை, பலி - பிசசை, அரி - விஷ்ணு என்றாகும்.

241. வாசமாளி கருமுகில் வண்ணனற்
பாசமாமபிர திப்பதந் தன்னிலே
ஓசைமுன்னடு வீறெழுத் தொக்குமே
தாசியான மலைன்மணி தங்கமே.

உரை :—வாசம் ஆளி கருமுகில் வண்ணன் - மணத்தையும் சிங்கத்தை யும் கரிய மேகம்போன்ற திருமாலைக் குறிக்கும், நற் பாசமாம் - நல்ல தன்மையுடைய, பிரதிபதம் தன்னிலே - முருகு, கோளரி, முராரி யென் னும் வேறு மூன்று சொற்களிலே, ஓசை முனனடு வீறெழுத்து - முதற் சொல்லின் முதலெழுத்தும், இரணடாஞ் சொல்லின நடு வெழுததும் மூன்றாஞ் சொல்லின கடைசி யெழுததுமாகிய வற்றாலாகிய முளாரி என்ற சொல்லின் பொருள், தாசி மலைன்மணி தங்கமே ஒக்கும - கடவுளடி மைப் பெண்ணாகிய மலைன்மணியினுடைய கண்ணைப்போலும், (அதாவது கண் தாமரையை யொக்குமென்பது கருத்து,) எ - று.

242. தலமபுகு பகைவர் மறையுமை நாவு
தருஞ்சினமாரன் றண்டிகையைச்
சாற்றுமேழ் பெயரில் வெற்றிநல் வாழ்வு
தண்ணருணிலைமிகு பொறுமை
பொலனுறு வடிவஞ் சாரிகொண் டிலங்கு
புனிதனே தலைகடை யெழுத்தைப்
புரத்துக் காவாடற் காவடிமைக்காப்
பூசைசெய் மார்க்கண்டனுக்கா

வலனுறு காளிக் காவுதை தனக்கா
மதியினுக்கா நகைத்துணர்ந்து
நடுவுறப் படுத்து வயதருள் செய்து
நடம்புரிந் தருக்கொடு முடித்துச்
சிலம்பொலி புலம்ப வருசபா பதியின்
திருவடி தொழுஞ்சபா பதியே
செப்புமூ வெழுத்தின் பெயரிடை யெழுத்தைச்
செய்குவாய் நின்மன மகிழ்ந்தே.

உரை :—தலம்புகு பகைவர் - நாட்டிற் புகக்கூடிய சத்துருவின் பெயராகிய எதிரி, மறை - மறையின் பெயராகிய சுருதி, உமை - உமையின் பெயராகிய பவானி, நாவு - நாகசு, தருஞ்சினம் - வெகுளி, மாரன் - மதன், தண்டிகை - சிவிகை, ஆய் சாற்றும் ஏழு பெயரில் - ஆகிய ஏழுபெயரின் நடு வெழுத்தினுலாகிய திருவாக்குதவிகொண்டு வெற்றி நல்வாழ்வு தண்ணருள் நிலை மிகு பொறுமை பொலனுறு வடிவம் தார் கொண்டிலகுகு புனிதனே - ஜெயமும் நல்ல வாழ்க்கையும் அதிசமான சாந்தமும் பொன்போல அழகிய வடிவும் கடையுகுகொண்டு விளங்குதற் கேதுவாகிய பரிசுத்தனே !, தலை கடையெழுத்தை - இந்த ஏழுசொற்களின் முதலெழுத்தும் ஈற்றெழுதலுஞ் சேர்ந்துண்டாகியவற்றை எடுத்துக்கொண்டு, எரியென்பதனே புரத்துக்கா - திரிபுரத்தை யழிப்பதற்காகவும், ஆடற்கா - சுதியை நடனஞ் செய்வதற்காகவும், பணி அடிமைக்கா - பணியை அடியவர்களுக்காகவும், நாகு பூசைசெய் மார்க கண்டனுக்கா - இளமையை மார்க்கண்டனுக்காகவும், வளனுறு காளிக்கா - வெளியைத திறமையுறு காளிநடனஞ் செய்வதற்காகவும், மன் உமை தனக்கா - தலைமையை யுமையம்மைக்காகவும் மதியினுக்கா - சிகையைச் சந் திரன் வைப்பதற்காகவும், மூறையே திரிபுரத்தைச சிரிததெரித்தும், உணர்த்தும் - சுதி யுணர்த்தாடியும், நடுவுறப்படுதலும் - பணியாகிய பாம்பை நடுவாக அமைதலும், வயதருள் செய்து - மார்க்கண்டனுக்காக என்றும் இளைய வயதை யருளிசசெய்தலும், நடம் புரிந்து - காளிக்காக நடனம் புரிந் தலும், உருகொடு - உமையைத் திருமேனியின் பாகத்திற் கொண்டும், முடித்து - சந்திரனைச சடையில் முடித்தலும், சிலம்பொலி புலம்ப வரு சபா பதியின் - வீரக்கழல் ஒலித்து அசைய நடனஞ்செய்து வருகின்ற நடராசப் பெருமானுடைய, திருவடி தொழும் சபாபதியே - திருப்பாதங்களே வழி படுகின்ற சபாபதி வள்ளலே !, நின்மனம் மகிழ்ந்து - உன்னுடைய உள்ளம் களிகூறும்படியாக, செப்பு மூவெழுத்தின் பெயரிடை எழுத்தை - கடைசி யில் நின்ற வெகுளி மதன் சிவிகை என்ற மூன்று எழுதலினுலாகிய உதவி என்பதை, செயகுவாய் - செய்தருளுவாயாக, எ - று.

குறிப்பு :—ஏழு பெயர் என்பன எதிரி, சுருதி, பவானி, நாகசு, வெகுளி, மதன், சிவிகை, இவற்றின் நடுவெழுதல திருவாக்குதவி யென்று

முடியும். இவற்றின் நடுவெழுத்துப் போக எஞ்சி நின்ற பகுதிகள் எரி, சுதி, பணி, நாகு, வெளி, மன், சிகை என்பன.

243. அந்தமுள்ள புவியிலொரு மாத்தின்பேரும
அலைகடலில் வாழுமொரு சீவன்பேரும்
விந்தைபெறு பட்டணப்பேர் வெகுகாலப்பேர்
விளங்குமொரு பிள்ளைப்பேர் மெல்லியாள்பேர்
சந்ததமு மிந்தவகை யாறுங்கூட்டித்
தமிழெழுத்தி னடுவெழுத்தைச் சார்ந்துபார்க்கின்
சுந்தரஞ்சேர் வைகுந்தந் தன்னில்வாழும
துய்யரங்க நாதனென்றே சொல்லலாமே

உரை :—அந்தமுள்ள புவியிலொரு மாத்தின் பேரும்-உலகதிலுள்ள அழகான ஒரு மரத்தின் பேராகிய அரசும, அலைகடலில் வாழுமொரு சீவன் பேரும் - அலையுடைய கடலில் வாழுகின்ற உயிரின் பேராகிய சுகமும், விந்தை பெறு பட்டணப்பேர் - ஆசசரியப்படத்தக்க பட்டணதின் பேராகிய நகரமும், வெகுகாலப் பேர் - நீண்ட காலதின் பெயராகிய அநாதியும், விளங்குமொரு பிள்ளைப் பேர் - விளங்குகின்ற குழந்தையின் மறு பெயராகிய சுதனும், மெல்லியாள் பேர் - சிறு பெண்ணின் பெயராகிய கன்னியும், சந்ததமும இந்த வகை யாறுங்கூட்டி - எப்பொழுதும் இந்த ஆறு பெயரையும் ஒன்றுகச சேர்த்து, தமிழெழுததின் நடுவெழுததைச் சார்ந்து பார்க்கின் - இவற்றின் நடுவெழுதசதாடி தமிழின் முதல் எழுத தாகிய அகரததைச சேர்த்தால், சுந்தரஞ்சேர வைகுந்தந் தன்னில் வாழும துய்யரங்க நாதனென்று சொல்லலாம்-அழகிய வைகுண்டலோகத்தில் வீற் றிருக்கின்ற பரிசுத்தமான அரங்கநாதன் என்னும் பெயராகும், எ - று.

குறிப்பு :—இதில் குறிக்கப்பட்டுள்ள பெயர்கள் அரசு, சுகு, நகர, அநாதி, சுதன், கன்னி; இவற்றின் நடுவெழுத்தைச சேர்ததால் ரகநாதன், அரசு என்பதிலுள்ள முதல் எழுத்தையுஞ் சேர்த்துப் பாரத்தால் அரங்க நாதன் என வரும்.

244. கட்டோம் புதலெனக் காமாதி யாறுங் கரிசறுத்து
விட்டோம புதவு திறந்தின்ப வீடுபுக் குச்செறிந்தோம
சிட்டோம புதல்விமண் ணேருந் திகஞ்சந் தெளிவுமுன்பின்
விட்டோம புதவுறு நல்லெழுத் தாண்முலை மேவப்பெற்றே.

உரை :—சிட்டோம் - நல்லொழுக்க முடையவர்களாகிய நாகுகள், புதல்வி மண் ஓர் நதி கஞ்சம்தெளிவு - இவற்றின் பிரதி பதகளாகிய குமாரி காவேரி பாலாறு தாமரை துணிவு என்பனவற்றின், முன்பின்விட்டு ஓம்ப உதவுறு நல்லெழுத்தாம் - முன்பின் எழுததுக்களைத் தவிர்த்து நடு வெழுத்துக்களாலாகிய மாலோமணிநாதனது, முலை மேவப்பெற்றே - திரு

மூல்லைவாயிலை யடையப்பெற்று, காமாதியாறும் புதலெனக் கட்டோம்-காமம் குரோதம் லோபம் மோகம் மதம் மாற்சரியம் என்னும் ஆறு உட்பகைகளையும் செடித்தூறுகளைக் களைவதுபோல ஒழிதலெறிந்தோம், களை சறுத்துவிட்டோம் - மலமாகிய குற்றம் நீங்கப் பெற்றோம், புதவு திறந்து இன்பவீடு புக்குச செறிந்தோம் - பேரின்பத்தரும் மோட்சத்தின் கதவு திறக்கப்பெற்று அதனுட் சென்று தங்கினேம், எ - று.

குறிப்பு:—குமாரி, காசினி, பாலாறு, தாமரை, துணிவு என்பவற்றின் நடுவெழுத்துக்களைச சேர்த்தால் மாசிலாமணி யென்றாகும்.

245. வேலாயுதவிழி பெட்டகமீது விறலரவைச்
சூலாயுதனை யணுமனைச் சண்பகத் தூய்மலரைப்
பாலாதரவால் வரித்தே கணவன்றன் பாங்கருய்த்தாள்
மாலாமதிப்புல வீரிதன்பாவம வகுத்திடுமே.

உரை:—வேலாயுத விழி - வேற்படையைப் போன்ற கண்ணையுடைய பெண்ணானவள், பெட்டகமீது - ஒரு பெட்டியில் ஒன்றைவைத்து, விறலரவை - வலிமையுள்ள பாம்பையும், சூலாயுதனை-சூலமுடைய அரனையும் அணுமனை - அணுமானையும், சண்பகத் தூய் மலரை - பரிசுத்தமான சண்பகப்பூவையும், பாலாதரவால் வரித்தே - தெளிவான விசுவாசதோடு வரவழைத்துப் பெட்டிகளுக் காவல் வைத்து, கணவன்றன் பாங்கருய்த்தாள் - தனது நாயகனுக்கு அனுப்பினாள், மாலா மதிப்புலவீர இதன் பாவம் வகுத்திடுமே - பேரறிவுடைய கல்விமான்களே !, இதன் நுட்பத்தை தெரிந்து சொல்வீர்களாக!, (பெட்டியிலுள்ளது தாமரைப் பூவென்பது கருத்து), எ - று.

குறிப்பு:—தாமரைப் பூவின் வாசனையைக் காற்று கொண்டுபோகாமல் காற்றை யுண்ணப் பாம்பையும், மன்மதன் கணைபாக எடுத்துக் கொள்ளாமல் அரனையும், பிரமன் இடமாகக் கைக்கொள்ளாமல் காப்பதற்கு அணுமானையும், வண்டு அணுகாம லிருப்பதற்குச சண்பகப் பூவையும் காவல் வைத்தா னென்பது குறிப்பாம்.

246. எண்ணென்குமுப்பத் திரண்டுபற்காட்டி யிசைவுடனே
பண்ணுகச் செந்தமிழ் பாடிவந்தாலுமிப் பாரிலுள்ளோர்
அண்ணுந்துகேட்ப ரழகழகென்ப ரதன்பிறகு
சுண்ணுமபுபட்ட விலேயுங்கொடார்கவி சொன்னவர்க்கே.

உரை:—எண்ணென்கு மூப்பத்திரண்டு பற் காட்டி - எண்ணென்கு மூப்பத்திரண்டாகிய தொகை கூறிய எல்லாப் பற்களையும் திறந்து காட்டி, இசைவுடனே பண்ணுச செந்தமிழைப் பாடி வந்தாலும் - சுவதேச அமைதியுடையதாய் முறையாயுள்ள செந்தமிழ்ப் பாடல்களை இயற்றிக்கொண்டு வந்தாலும், இப்பாரிலுள்ளோர் - இந்தப் பூமியிலுள்ளவர்கள், அண்ணுந்து

கேட்பர் - மேலே தலையை யுயர்த்திக் கவனமாய்க் கேட்பார்கள், அழகு அழகு என்பர் - மிக அழகா யிருக்கிறதென்று புகழுவார்கள், அதன்பிறகு கவி சொன்னவர்க்குச் சுண்ணும்புபட்ட இலையுங் கொடார் - அதன் பிற் பாடு பாட்டியற்றிய புலவர்க்குச் சுண்ணும்பு இருந்த இலையைக்கூட்கொடுக்க மாட்டார்கள், எ - று.

247. கலையள வெவ்வள வவ்வளவாம்விழி காமனுடைச்
சிலையள வெவ்வள வவ்வளவாநுதற் செந்திற்கந்தன்
மலையள வெவ்வள வவ்வளவாமுலை மாதுயிலால்
இலையள வெவ்வள வவ்வளவாம்வபி றேந்திழைக்கே.

உரை :—ஏந்திழைக்கே - ஆபரணங்களைத் தரித்த இம் மாதுக்கு, விழி கலையளவு எவ்வளவு அவ்வளவாம் - கண்ணானது மானின் கண் எத்தன்மை அளவுடையதோ அத்தன்மையும் அளவுமுடையதாம், நுதல் காமனுடைய சிலையளவு எவ்வளவு அவ்வளவாம் - நெற்றியானது மன்மதனுடைய வில்லி னளவு எவ்வளவோ அந்த அளவையுடையது, முலை செந்திற் கந்தன் மலை யளவு எவ்வளவு அவ்வளவாம் - தனமானது திருச்செந்திற் பெருமான் வீற்றிருக்கும் குன்றினளவு எவ்வளவோ அந்த அளவே யுடையது, வயிறு மால்துயில ஆல் இலையளவு எவ்வளவு அவ்வளவாம் - வயிறானது திருமால் படுத்துறங்குகின்ற ஆலிலையி னளவு எவ்வளவோ அவ்வளவே யாம், எ - று.

248. சீரான வண்டரும் பேரானபூநெயைத் தின்றுலவுங்
காரானபாணி வளைவிரிஞ்சைப்பதி காக்குநரி
வாரான பன்றியைக் கூடியன்றீந்த வளர்மதலை
ஏரானபட்சி நாகத்தலைத்தேட லியம்புதிரே.

உரை :—சீரான அண்டரும் பேரான பூநெயைத் தின்றுலவும் - சிறப் பான தேவரும் பேறு பெற்ற தேவாமிர்தத்தை யுண்டு திரிகின்ற, காரான பாணிவளை விரிஞ்சைப்பதி - கருநிறமுடைய ஆழ்மான சீருள்ள அகழி சூழப்பெற்ற விரிஞ்சைத் தலத்தினை, காத்து நரி - காகின்ற பெருமானு கிய சம்பு, வாரான பன்றியைக் கூடி - பெரிய வராகவதார மெடுத்த திரு மாலைப்புணர்ந்து, அன்று ஈந்த வளர் மதலை - அக்காலத்திற் பெற்ற விருத் தியான பிள்ளையாகிய அரிகர புத்திரன், ஏரான பட்சி - அழகான பறவை போல, நாகத்தலை - நாவிலுல் கத்துவதை, தேடலியம் புதிரே - இன்ன தென்றறிந்து சொல்லுங்கள், எ - று.

குறிப்பு :—நாகத்த லென்பது வேத மோதுதல்.

249. பாலொத்த மென்மொழி தாண்டவ பூபனிப் பாரினிலக்
காலத்தில் வந்துதித் தாலாதிசேடனுங் காற்றுண்பனே
மாலத்தரையை விழுங்குவ னேசிவன் வாய்வைப்பனே
ஆலத்தி லக்கட னீருண்பனேசொ லகத்தியனே.

உரை :—பாலொத்த மென்மொழி தாண்டவ பூபன் - பால் போன்ற இனிய சுவையையுடைய சொல்லினாலாகிய தாண்டவபூபதி யென்னும் வள்ளல், இப்பாரினில் அக்காலத்தில் வந்திருந்தால் - இத்தப் பூமியில் அந்த நாளிற் பிறந்திருந்தால் (கொடையாளி யில்லாமல்), ஆதிசேடனும் காற்றுண்பனே - ஆதிசேடன் காற்றை உணவாகக் கொள்வானே, மால் இத் தரையை விழுங்குவனே - விண்டுவானவர் மண்ணையுட்கொள்வாரோ, சிவன் ஆலத்தில் வாய் வைப்பனே - சிவபெருமான் விடத்தை வாயிற் போட்டுக் கொள்வாரோ, அகதியன் அக்கடல் நீர் உண்பனே - அகத்திய முனிவன் உப்புக்கடல் நீரைக் குடிப்பனே, சொல் - கூறுவாயாக!, எ - று.

250. உண்ணு விருந்து முதவிகொள்ளாத வுறவினர்பொன்
எண்ணுக் கணிகை யுடன்புல வோர்கணல் லேவலரும்
தண்ணரம் புல்லருந் தாமாவுங் காலுணுஞ் சற்குருவும்
கண்ணுக் காணின் மகிழ்வார்கள் செல்வக் கயவர்களே.

உரை :—உண்ணு விருந்தும் - உணவு கொள்ளாத விருந்தினரும், உதவி கொள்ளாத உறவினர் - பிறர்பால் உபசாரம் யாதும் வேண்டாத சுற்றத்தாரும், பொன் எண்ணுக் கணிகையுடன் புலவோர்கள் நல் லேவலரும் - பொருளே நாடாத விலை மகளிரும் நல்ல கல்விமான்களும் தக்க தொழிலாளி களும், தண் ஆர் அம்புல் அருந்த மாவும் - குளிர்ந்த அழகிய புல்லைத் தின்னுத குதிரையும், கால் உணும் சற்குருவும் - காற்றை உணவாகக்கொள் ளும் நல்ல ஆசாரியனும், கண்ணுக்காணின் - ஆகிய இத்தனை பேரையும் கண் குளிரக் காணப்பெற்றால், செல்வக் கயவர்கள் மகிழ்வார்கள் - பொரு ளுடைய அற்பர்கள் களிப்படைவார்கள், எ - று.

251. காயுங் கடுஞ்சுர மீதென்று காட்டிய கையுஞ்சொன்ன
வாயும் புகையெழும பாலியுள் ளேவணங் கார்மவுலி
தோயுங் கழற்பத சுந்தர பாண்டியன் றோகைவெற்பில்
தாயுந் தருமமில் லாதவர்போலத தவித்தனனே.

உரை :—கடுஞ்சுரம் ஈதென்று காட்டிய கையும் காயும் - கொடிய பாலை வனமென்று சுட்டிக் காட்டிய கைகூட வெப்பமா யிருக்கும், சொன்ன வாயும் புகை யெழும் - அங்ஙனம் சொல்லிய வாயிற்கூட புகை யுண்டாகும், பாலை யுள்ளே - அத்தகைய கடுஞ் சுரதலிலே, வணங்கார் மவுலி தோயும் கழற்பத சுந்தர பாண்டியன் தோகை வெற்பில் - பகைவருடைய முடிகள்

பதிகின்ற லெம்பு தரித்த பாதங்களையுடைய சுந்தர பாண்டிய மன்னனுடைய மலையில், தாயும் தமரும் இல்லாதவர் போலத் தனித்தனளே - அன்னையும் உறவினரு மில்லாதவள்போல அகப்பட்டு வருந்தினள், எ - று.

252. வாதாம் பலகலை கற்றுவந் தாலுமிவ் வையகத்தன்னில்
ஏதாம் பொருணல மில்லா னெழினல் லிடமூந்தந்து
பீதாம் பரற்கொரு பெண்டந்த பாற்கடல் பின்புவந்த
வேதாந்த வித்தெனுங் கல்லாம்பரற்கு விடந்தந்ததே.

உரை:—வாதாம் பலகலை கற்றுவந்தாலும் - வாது செய்தற்குரிய பல கல்வித் துறைகளில் பயின்றுவரினும், இவ்வையகத்தன்னில் - இந்த உலகத்தில், பொருள் நலம் இல்லான் எனில் ஏதாம்-செல்வத்தின் நன்மை சேரப் பெறுவிடில் என்ன பயனைத்தரும், பீதாம்பரற்கு நல்லிடமும் தந்து ஒரு பெண் தந்த பாற்கடல் பெண்ணுடை தரித்த திருமாலுக்குத் தன்னிடத்தே இருக்க நல்ல இடமும் மணந்துகொள்ளத் திருமகளையும் உதவிய பாற்கடல், பின்பு வந்த வேதாந்த வித்தெனும் கல்லாம்பரற்கு - பிற்பாடு வந்த வேத முடிவின் கூறப்படும் உண்மைப் பொருளுக்கு மூலமென்று சொல்லப்படும் காலியுடை தரித்த சிவபெருமானுக்கு, விடம் தந்ததே - நஞ்சைக் கொடுத்தது, எ - று.

253. தேமன் சுதனுக் கிளையோன் பிதாவைத் திகிரியினல்
கோமன் மறைத்து விசயனுயிரைக் கொடுத்ததுபோல்
காமன் பகைவன் றென்கூடற் சொக்கேசன் கனகிரிமேல்
வீமன் சுடரொளி மீக்கிரும மாருயிர் மீட்டதுவே.

உரை :—தேமன் சுதனுக்கு இளையோன் பிதாவை - தேவர்களுக்கு அரசனுகிய இந்திரனுடைய மகனுகிய வாலியின் தம்பியாகிய சுகிரீவனுக்குத் தந்தையாகிய சூரியனை, திகிரியினல் கோமன் மறைத்து விசயனுயிரைக் கொடுத்ததுபோல் - சக்கராயுதத்தினல் சோபாலன் மறைத்த அரசகுமாரனுடைய உயிரைக் காப்பாற்றிக் கொடுத்ததுபோல, காமன் பகைவன் தென்கூடல் சொக்கேசன் கனகிரிமேல் - மன்மதனுக்கு நெற்றிக்கண்ணாகிய அழகிய மதுரைப்பதியி லுறையும் சொக்கலிங்கப் பெருமான்று உயர்ந்த மலையின்மீது, வீமன - வண்டானது, சுடரொளி மீக்கி - தீபத்தின் பிரகாசத்தை யொளித்து, நம்மாருயிர் மீட்டதுவே - பெறுதற்கரிய நம்முடைய வுயிரை மீள வுய்வித்தது, எ - று.

254. பாலான மென்மொழி தாண்டவ பூபன் பனிவரையில்
மாலான வஞ்சியை மீபிரிந் தாற்கண்கள் வாரிதியாம்
சேலா மறுமுகன் வேலாந் தமிழ்தெரி தென்னவன்றன்
காலாங் குறுமுனி கையாமிம மங்கை கனதனமே.

உரை:—பாலான மென்மொழி தாண்டவபூபன் பனிவரையில் - பால் போன்ற சொல்லையுடைய தாண்டவமன்னனது குளிர்ச்சியிருந்த மலைமேல், மாலான வஞ்சியை நீ பிரிந்தால் - உன்பால் மோகங்கொண்ட பெண்ணை நீ விட்டுப் பிரிந்துபோனால், கண்கள் வாரிதியாம் - கண்கள் கடல்போல நீரைச் சொரியும், சேலாம் - நீரினின்றெடுத்த மீன்போலாகும், அறுமுகன் வேலாம் - அறுமுகக் கடவுளுடைய வேல்போல ராவப்படும், இம் மகளை கனதனமே-இம் மாதின் உயர்ந்த முலைகள், தமிழ்தெரி தென்னவன்றன் காலாம் - தமிழ் தெரிந்த உக்கிரகுமார பாண்டியனது காலிலும், குறுமுனி கையாம் - அகத்தியர் கையிலும், வாரிதியாம் - அகப்பட்ட கடல்போல ஒடுங்கிப்போம், எ - று.

255. பாலாறு பாய்தென் பழனபுரீசர் பனிவரைமேல்
மேலாறு பாய்ந்திட நின்றனள்கா ணந்திவேளை தனில்
காலா லரைப்பண மோராளைக் கீந்து கடைபுகுந்து
நாலாறி யாளையைக் கொண்டே கைவீசி நடந்தனளே.

உரை:—பாலாறு பாய் தென்பழனபுரீசர் பனிவரைமேல் - பாலாறு அறுகிற் செல்லுகின்ற தென்பழனபுரியில் வீற்றிருக்கும் குளிர்ந்த மலையின் மீது, மேலாறு பாய்ந்திட நின்றனள் - அருவி தன்மேல் விழும்படியாக நின்ற பெண்ணானவள், அந்தி வேளைதனில் - மாலைப் பொழுதில், கடை புகுந்து-கடைதெருவிற் சென்று, ஓர் யாளைக்கு - ஒரு களிற்று மீனுக்கு, காலாலரைப் பணம் ஈந்து - அரைக்காற் பணம் கொடுத்துவிட்டு, நாலாறி யாளையைக் கைக்கொண்டு - கையிலிரண்டு கடகத்தைப் போட்டுக்கொண்டு, வீசி நடந்தனளே - கைவீசிச் சென்றாள், எ - று.

256. கடிவளைக்குங் கண்ணி காரென்ற போதினிற் கைகழன்று
விடுவளைக்குள்ள விசையிலை யேமிதி லிச்சிலையே
நடுவளைக் குங்கொண்ட ஞாணன் கோள நாட்டிலண்டத்
தொடுவளைக் குமபரித் தேர்வல வாநம தூர்பரிக்கே.

உரை:—மிதிலைச் சிலையே - மிதிலையிலிருந்த வில்லே, நடுவளைக்குங் கொண்டல் நாரணன் - நடுவிற் பிடித்து வளைத்து ஒடித்த மேகம்போன்ற நிறமுடைய திருமாலின், கோள நாட்டில் - சேரதேசத்திலுள்ள, அண்டத் தொடு வளைக்கும் பரிததேர் வலவா - உலகதலத்தை சுற்றிவரும் குதிரை பூட்டிய தேரைச செலுத்துபவனே!, கடுவளைக்குங் கண்ணி - நஞ்சின் றன்மையைத் தன்பாற் கொண்ட கணையையுடைய தலைவி, காரென்ற போதினில் - கார்என்று சொன்ன அளவிலே, கைகழன்று விடுவளைக் குள்ள விசை-கையிலிருந்து எழுவவிடுகின்ற வளையலுக்குண்டான வேகம், நமது ஊர்பரிக்கு இலையே - நாம் செலுத்துகின்ற குதிரைக்கில்லையே, எ - று.

257. பவள விதழ்ச்சிவெண் ணீறென்ற போதினிற் பைந்தாளத்
தவள வடத்தணி நீறுதந்தா ளிளஞ் சாலிகளோங்
குவள வயற்குழந் தாபுரி வேலவர் கோலவெற்பில்
இவள வுனக்கிலையோ வலவாபரி யேகுதற்கே.

உரை:—இளஞ் சாலிகளோங்கு வளவயற் குழந்தாபுரி வேலவர் கோல வெற்பில் - மெல்லிய நெற்கதிர்கள் வளர்கின்ற செழிப்பான வயல்கள் சூழ்ந்த குழந்தாபுரி வேலவர் சூழ்ந்த அழகிய மலைமீது, வலவா - தேரப் பாகனே!, பவள விதழ்சசி வெணணீறென்ற போதினில் - பவளம்போன்ற உதட்டினையுடைய தலைவி வெள்ளிய திருநீறு என்று சொன்ன அளவில், பைந்தாளத தவளவடத் தணிநீறு தந்தாள் - புதிய வெள்ளிய முத்து மாலை காம வெப்பததால் பொரிந்துபோனதா லுண்டாகிய பொடியை விரைவாக எடுதது்க கொடுத்தால், பரி ஏகுதற்கே இவளவு உனக கிலையோ - குதிரையைச செலுத்துதற்கு இவவளவு விரைவு உனக்கு ஏற படவில்லை போலும், எ - று.

258. அக்காண்டி யக்கை யணிவாண்டியாடை யவிழ்க்கச் சற்றும்
வெக்காண்டி மாமறைமீதிருப் பாண்டிநம் வீட்டில்வந்து
சிக்காண்டி தேடித் திரிவாண்டி கேளிந்தத் தென்மதுரைச்
சொக்காண்டி நாளைவரு வாண்டியேண்டி துயருனக்கே.

உரை :—கேள் - நான் சொல்வதைக் கேட்பாயாக!, இந்த தென் மதுரைச சொக்காண்டி - இந்த அழகிய மதுரைப்பதியி லுறையும் சொகக நாதராகிய துறவி, அக்காணடி - எலும்பை யணிந்த துறவி, அக்கையணி வாணடி - உருத்திராக்க மணிபைத தரிதத்துக் கொள்வான், ஆடை யவிழ்க் கச சற்றும் வெககாண்டி - உடையை யவிழ்ததுப் போடுதற்குச சிறிதும் நாணப்படாதவன் (அதாவது திகமபரன), மாமறை மீதிருப்பாண்டி - உயர்ந்த ஞான நூல்களின முடிவிலிருப்பவன், நம் வீட்டில வந்து சிக காண்டி - நமது வீடாகிய மோட்சததில வந்து அகப்படுவான், தேடித் திரிவாண்டி - பகருவர்களுககு அருள்செயய அவாகளே நாடியலைவான, நாளை வருவாண்டி - நாளைக்கு உனனே நாடி வருவான், துயா உனககு ஏண்டி - உனக்கென்ன கவலையடி, எ - று.

259. ஆடுஞ் சிதமபர னம்பலவாண னணிவரையில்
நீடுங் கயற்கண்ணி யாடந்த மோக நிறையவெங்கும்
கோடுங் குளமுங் குளத்தருகே நின்ற குன்றுகளும்
காடுஞ் செடியு மவளாகத் தோன்றுதென் கண்ணிணைக்கே.

உரை :—ஆடுஞ் சிதம்பரன் அம்பலவாணன் அணிவரையில் - நிருததஞ் செய்கின்ற சிதம்பரத்திலுறையும் பெருமானுராகிய சபாநாயகரது அழகிய

மலைமீதுள்ள, நீடும் கயற்கண்ணியாள் - நீண்ட கயல்மீன்போன்ற கண்ணை யுடைய மாது, தந்த மோகம் நிறைய - எழுப்பிய காதலானது உள்ளத்தில் நிறைந்திருப்பதால், என்றும் - எப்போதும், என் கண்ணிணைகளே - ....., கோடும் குளமும் குளததருகே நின்ற குன்றுகளும் காடும் செடியும் - குளததின் கரையும் குளமும் குளததிற்குப் பகதததிலிருந்த மலைகளும் அவற்றின் மேலுள்ள பெருமரங்களும் சிறு செடியுமாகிய எல்லாவற்றி லும், அவளாகத தோன்றும் - அவளுடைய உருவெளித் தோற்றமே காணப்படுகின்றன, எ - று.

260. இந்திரன் மைந்தன் பகைவனுக்குப் பகை யேய்ந்தநகர்
வெந்தணலாக்கினவன் றந்தைமைந்தன் பின்னென்றன்மூன்
வந்தவ னுண்ண மறையோர்களோட மயங்குநஞ்சிற் [னே
சிந்தின நஞ்சின் பகைவன்றன் சேவைக்குச் சென்றனனே.

உரை :—இந்திரன் மைந்தன் பகைவனுக்குப் பகை யேய்ந்த நகர் - இந்திரன் மகனாகிய வாலியின் எதிரியாகிய இராமனுக்குப் பகையாகிய இராவணன் தங்கிய இலங்கை நகரை, வெந்தணலாக்கினவன் தந்தை மைந்தன் - கொடிய தீக்கிரையாக்கிய அனுமானின் தந்தையாகிய வாயு வின் புதல்வனாகிய வீமனுக்கு, பின் தோன்றல் முன்னே வந்தவன் - தம்பி யாகிய அர்ச்சுனன்முன் எழுந்தருளின சிவபெருமான், உண்ண - உட் கொள்ளவும், மறையோர்கள் ஓட மயங்கு நஞ்சில் - தேவர்கள் ஓடவும் அசசம் விளைதத விடததிலே, சிதறின நஞ்சின் - சிதறிய விடததிற் கொண்டுள்ள பாம்பின், பகைவன்தன் சேவைகருச சென்றனனே - பகைவ னாகிய கருடனைக கும்பிடுதறகு நான் போனேன், எ - று.

261. ஒருகா லெழுதி மூன்மாக்கொம் பெழுதி யுரைத்தவஞ்சி
இருகா லெழுத மறந்தனளோ வித்த வெண்டிசையும
தருகாம சுந்தரன் காளத்தி வாணன் றடங்கிரியில்
உருகாத வஞ்சியர்க் கென்றே யெழுத முயனண்பனே.

உரை :—இத்த எண்டிசையும் தருகாம சுந்தரன் - இத்த எட்டுத் திசையிலுள்ளாரும் விரும்புகின்ற அழகனாகிய, காளத்திவாணன் தடங்கிரி யில் - காளத்திவாண வள்ளலது பெரிய மலையில், உருகாத வஞ்சியாக்கு என்றே எழுத முயல் நண்பனே - மனமிளகாத பெணகளுககென்றே கடிதத மெழுத முயல்கின்ற நேகிதனே!, ஒருகால் எழுதி - எழுதத துப்பாகிய காலே (ர) எழுதி, மூன்மாக் கொம்பு எழுதி - மகரததிற்கு முன்னுகிய பகரததையும் அதற்கு முற்பட்ட கொம்பையுமெழுதி அதாவது போவென் றெழுதி, உறைத்த வஞ்சி - போவென்று கூறிய பெண்ணானவள், இரு கால் எழுத மறைந்தனளோ - ஒருகா லுழுப்பையும் கால் என்கின்ற

எண் பகுதியைக் குறிக்கும் வகரத்தையும் அதாவது வா என்பதை எழுத மறந்து விட்டாளோ, எ - று.

குறிப்பு:—ஒருகால் 'ா' முன்மா என்பது 'ப' கொம்பு என்பது 'ே' ஆகிய இம் மூன்றுஞ் சேர்ந்தால் 'போ' என்றுதும் இருகா லென்பதில் வகரம் ஒருகால், உறுப்பு ஒருகால் ஆகிய விரண்டுஞ் சோந்து 'வா' என்றுகும்.

262. பேயோ வெயினா ரமுதலா யத்திற் பிறந்தவுண்ணை
ஏயோ தினைப்புனங் காவல்வைத் தாரெழு பாரைபுண்ட
மாயோன் றிருவுந்தி வந்தோ னரங்கன் வரையிடத்தே
ஆயோ வெனுங் குரலேயோ புனத்தை யழிக்கின்றதே.

உரை:—ஏழுயிரை யுண்ட மாயோன் - ஏழுலகதையும் வயிற்றினுட் கொண்ட வாயை யுடையவனும், திருவுந்தி வந்தோன் - அழகிய உந்திக் கமலம் பூக்கப்பெற்றவனும் அரங்கன் - திருவரங்கப் பெருமானுமாகிய வனது, வரை யிடத்தே - மலையில், எயினர் அமுதாலயத்திற் பிறந்த உன்னை ஏயோதினைப் புனங்காவல் வைத்தார் - வேடர்கள் திருப்பாற்கடலி லவதரித்த உன்னையா தினைவிளையும் காட்டைக் காக்கும்படி நிய மித்தார்கள், பேயோ - அவர்கள் பேயத் தன்மையுடையவர்களோ, ஆயோ வெனும் குரலேயோ புனதையை யழிக்கின்றதே - ஆயோ வென்று கூவு கின்ற குரலைகேட்டுக் கிளிகள் தன்னினமென்று உன்னைக் கருதி அசை மில்லாது தினைப்பயிரைக் கொள்ளை அளிக்கின்றன, எ - று.

263. போரேற்று வந்த மதன்படைக் கஞ்சிப் புகுந்தவெனைக்
காரேற்றி லீலக் கருங்கட லேற்றிக் கனத்தகொங்கை
மேரேற்றி யுந்திச் சுழியாற்றி லேற்றி விரகவல்குல்
தேரேற்றி வைக்கின்ற மாதையெப் போகண்டு சேருவதே.

உரை:—போரேற்று வந்த மதன்படைக் கஞ்சிப் புகுந்த எனை-சண்டை செய்வதற்கு எதிர்த்து வந்த காமன் கணைகளுக்குப் பயந்து தனபால் சோந்த என்னை, காரேற்று - மேகமபோன்ற கூந்தலை எண்மீது சார்த்தி, நீலக் கருங்கடலேற்றி - நீல நிறமாகிய பெரிய கடல்போன்ற கணணினால் பிரியமாகப் பார்த்து, கனத்த கொங்கை மேரேற்றி - பருத்த தனகள் என்னும் மேருமலை மேலேறச செய்து, உந்திச சுழியாற்றி லேற்றி - கொப்புளாகிய சுழியையுடைய உரோம ஒழுங்கில் சாதித், விரத அல்குல் தேரேற்றி - மோகதைதைத் தணிக்கும் கடிதடமாகிய தேரிலேற்றுவித்து, வைக்கின்ற மாதை எப்போது கண்டு சேருவதே - என்னை ஆதரிக்கின்ற பெண்ணை எப்போது நான் பார்த்துக் கூடுவது, எ - று.

264. மதிசூடிய தில்லை யம்பலவாணர் வரையிடத்தே
அதிசயமான வதிசயமே யரன் வீதிவரத்
துதிசெய்து மூவெட்டுத் தும்பியுங்கொண்டு துவண்டொரு
எதிர்நின் றிரண்டுமரங் கரத்தேபிடித் தேகினளே. [பெண்

உரை:—மதி சூடிய தில்லையம்பல வாணர் வரையிடத்தே - திங்களைத் தரிதத தில்லைச சபாநாதருடைய மலையிடத்தில், அதிசயமான அதிசயமே-வியப்பினுமிக்க வியப்பு யாதெனில், அரன் வீதிவர - சிவபெருமான் வீதியில் பவனிவருங காலத்தில், ஒரு பெண துதி செயது - ஒரு பெண் தோததிரஞ் செயது, மூவெட்டு தும்பியுங் கொண்டு - இருபதது நான்கு யானையும் அதாவது இரண்டு கடகமுந் தரித்துக்கொண்டு, துவண்டு-அசைந்து, எதிர் நின்று-சுவாமிக்கு எதிரே போய், இரண்டு மரம் கரத்தே பிடித் தேகினளே - ஆல் அத்தி (ஆலதத்தி) இரண்டு கையிலும் பிடித துக் காட்டிவிட்டுப் போயினள், எ - று.

265. பூமன் சிரங்கொய்த வண்ணமலையர் பொருப்பிடத்தே
காமன் கணையுண் டலைவரக் காண்கிலன் கந்தனிட
மாமன் மறைத்தவன் மைந்தன் பகைக்கொடித் தந்தைவந்
நாமுங் கலந்திடலாங் காமனுர்பத நாணிடவே. [தால்

உரை:—பூமன் சிரங்கொய்த அண்ணமலையர் பொருப்பிடததே - தாமரைப் பூவுக்குத் தலைவனுகிய பிரமனது தலையைக் கிள்ளிய அண்ணமலைப் பெருமானது மலைபினிடததே, காமன் கணையுண்ட அலைவரக் காண்கிலேன் - காமனது அம்பாகிய ஐவகைப் பூக்களும், பூகின்ற காலம் வருவதை நான் பார்க்கவில்லை, கந்தனுக்கு மாமன் - முருகப்பெருமானுக்கு மாமனுராகிய திருமால், மறைத்தவன - சக்காராயுதததால் மறைக்கப்பட்டவனுகிய சூரியனது, மைந்தன் பகை - மகனுகிய கர்னனின் எதிரியாகிய அர்சுனனுடைய, கொடித் தந்தை - கொடியாகிய அனுமானின் தந்தையாகிய வாயு அல்லது தென்றல், வந்தால் - வருமானுல், காமனுர பதம் நாணிடவே - கற்பகச சோலைக்குத தலைவனுகிய இந்திரனுடைய பதவியும் வெட்கப் படும்படியாக, நாமுங் கலந்திடலாம் - நாமும் ஒன்று சேரலாம், எ - று.

266 செவ்வந்திமாலை சிவந்ததென் முடிங்கள் வந்ததென்முள்
கைவந்தவண்டு கழன்றதென் முள்கலை சோர்ந்ததென்முள்
மைவந்த கண்ணி திருவொற்றியூரை மதுரை யென்முள்
எவ்வந்தி யோவறியே னிவள்சொன்ன விடுவந்தியே.

உரை:—செவ்வந்தி மாலை சிவந்த தென்முள் - வானம் சிவந்திருக்கும் மாலைக் காலம் கோபிதததென்று கூறினுள், திங்கள் வந்த தென்முள் -

சந்திரன் உதய மாயிற்றென்றாள், கைவந்த வண்டு கழன்ற தென்றாள் - கையிலே வந்த வளையல் நழுவிற்றென்றாள், கலை சோர்ந்தது என்றாள் - உடை நெகிழ்ந்ததென்றாள், மைவந்த கண்ணி திருவொற்றியூரை மதுரை யென்றாள் - மை தீட்டிய கண்ணையுடைய பெண்ணானவள் திருவொற்றி யூரைக் கூட லென்றாள் அதாவது கூடுமிட மென்றாள், இவள் சொன்ன இடுவந்தி எவ்வந்தியோ - இவள் சொன்ன அரிதியானது எந்த மாலையோ வென்று, அறியேன் - தெரியவில்லை, எ - று

267. அலைகுளிர்ப் பாட்டுஞ் சலராசி வெள்ள மடங்கவுண்டு [வே,ர் மலைகுளிர்ப்பாட்ட வருங்கொண்டல் காடெவ்வர் மார்பில்வெவ் கொலைகுளிர்ப்பாட்டுங் குலசேகரன்கொற்கைக்கொம்பின்கண் முலைகுளிர்ப்பாட்டவன் றேருவெமமை நீர்விட்டுமுந்தியதே [ணீர்

உரை :—அலை குளிர்ப்பாட்டுஞ் சலராசி வெள்ளம் அடங்க வுண்டு - அலைகளை முழுகச செய்து வீசுகின்ற கடலேழு மூற்றிலும் பருகி, மலை குளிர்ப்பாட்ட வரும் கொண்டல் கார் - மலைகளைக் குளிர்ச செயய வரு கின்ற மேகங்களே !, தெய்வர் மார்பில வெவவேற் கொலை குளிர்ப் பாட்டும் - பகைவர்களுடைய நெஞ்சிற் கொடிய வேல்கள் பதிந்து கொல் லிக்கக்கூடிய, குலசேகரன் கொற்கை - குலசேகர பாண்டியனது கொற் கைப் பட்டினத்திலுள்ள, கொம்பின் கண்ணீர் முலை குளிர்ப்பாட்ட அன்றே - தலைவி கார்காலமானது வந்தும் தாம் வரவில்லையே என்று விடும் கண்ணீரானது அவள் தனங்களை முழுகுவிக்கும்படியாக வல்லவா, எம்மை நீவிட்டு முந்தியதே - எங்களைப் பின் விட்டு நீங்கள் முன் செல்வ தாகும், எ - று.

குறிப்பு :—கார் காலத்திற் போர் முடிதது மீள்கின்ற தலைவன் அக் காலத்து மேகங்களைப் பார்த்துக் கூறியது.

268. குடக்கோடக் கொற்றக் குடைநீரி லோடக் கொடித்தடந்தேர்
வடக்கோட வாரியின் வாயோட வின்மத னேடமைமாத்
தடக்கோ டணியுஞ் சிவகயிலாயத்துத் தையலர்வாய்
இடக்கோட நம்மன்பர் தேரோடிவந்த இளங்கொடியே.

உரை :—இளங் கொடியே - மெல்லிய கொடிபோன்ற தலைவியே, குடக் கோடு அக கொற்றக் குடைநீரி லோட - மேலை மலையில் உதிக்கின்ற சந்திரனுடைய மன்மதனது வெற்றிக்குடை சமுத்திரத்திற்போ யொழியும், கொடித்த தடந்தேர் வடக்கோட - கொடி கட்டிய விசாலமாகிய தென்றல் வட திசையை நோக்கி ஓடிப்போகவும், வாரியின் வாயோட - கடலின் முழக்க மடங்கவும், வில் மதனோட - வில்லையுடைய மன்மதனோடிப் போக வும், தையலர் வாய் இடக்கோட - பெண்கள் பேசுகின்ற வம்பு மொழி,

யொழியவும், மை மாத்தடக் கோடு அணியும் சிவ கயிலாயத்து - மேகங்கள் பெரிய மரக்கிளைகளிலே அழகாகத் தங்கக்கூடிய சிவ கயிலாயமலைக் கருகில், நம் அன்பர் தேர் ஓடி வந்தது - நமது தலைவர் தேர் உருண்டு வந்தது, எ - று.

269. அத்திக்கொம் பாலை மிகநம்பினுலு மணிதாளப்
பத்திக்குவேறு பழுதுவந்தாலும் பழுதுபடாப்
புத்திக்கு யூகிநந் தாண்டவபூபன் பொருப்பின் மன்னு
எத்திக்குமில்லை யுன்றிக்கு மல்லா லென்ற னேந்திழைக்கே.

உரை :—பழுது படாப் புத்திக்கு யூகி நம் தாண்டவ பூபன் பொருப்பின் மன்னு - குற்றமற்ற அறிவோடுகூடிய யூகத்தில் வல்லவனுகிய நமது தாண்டவ பூபதியின் மலையின்மீதுள்ள அரசனே!, என்றன் ஏந்திழைக்கு ஆபரணமணிந்த என் மாதுக்கு, அத்திக் கொம்பு ஆலை மிக நம்பினுலும் - யானைக் கொம்புபோன்ற முலையானது ஆலிலைபோன்ற வயிற்றிற் போய் அதிகமாகப் படிந்தாலும், அணி தாளப் பத்திக்கு வேறு பழுதுவந்தாலும் - அழகிய முதுகுப்போன்ற பல்லுக்கு ஏதாவது கெடுதி வந்தாலும், உன்னிசகுமல்லால் எதற்கு மில்லை - நீயே கதியல்லாமல் வேறு கதியில்லை, எ - று

270. தென்னன் பொருநைத் துறைவாசன் விக்ரமச் சிங்கன்வெற்பில்
பொன்னம்புரிசை யுறையூர்நின் ரூர்க்குமிப் போதிரவின்
மன்னன்பிறந்த மதுராபுரிக்குநென் மாகர்க்குமை
என்னன்ப ரானவர் காவிரிப்பூம் பட்டண மணங்கே.

உரை :—தென்னன் பொருநைத் துறைவாசன் விக்ரமசிங்கன் வெற்பில் - பாண்டியன் தாமிரபரணிக் கரையில் வசிப்பவனுமாகிய விகிரம சிங்கன் மலையில், பொன்னம்புரிசை யுறையூர் நின்ரூர்க்கும் இப்போது இரவின் - அழகிய பொன்மதில் சூழ்ந்த உறையூர் அதாவது கோழி நின்று கூவுகின்ற இரவு நேரத்தில், மன்னன் பிறந்த மதுராபுரிக்கு - அரசன் பிறந்த கூடல் அதாவது கூடுதற்கு, நென்மாகர்க்கும் - நெல் வளமுடைய அரண்மனைகளும், அணைகே - பாகனியே!, என் அன்பரானவர் காவிரிப்பூம் பட்டணம் - எனனுடைய காதலர் புகார் அதாவது வந்து சேரமாட்டார், எ - று.

271. வில்லும பிறையுந் நிறையிடுவாணுதன் மெல்லியலாய்
எல்லுங் குழுத மலருங்கண் டாயிரு கோங்கரும்புமை
வல்லும பொருதும் வனமுலைக்கான மணியதன்பேர்
சொல்லும பொழுது பிரமனு மாலுந் தொழத்தகுமே.

உரை:—வில்லும் பிறையும் நிறையிடுவாணுதல் மெல்லியலாய் - வில்லும் பிறைச் சந்திரனும் அழகில் தோற்றுக் கப்பங் கட்டக்கூடிய பிரகாசமுடைய நெற்றியையுடைய இளமாதே !, எல்லும் குமுதம் அலரும் கண்டாய் - பகலிலும் அல்லிப்பூ விரிவதுண்டு, இருகோங்கு அரும்பும் - இரண்டு கோங்கு முகைகளேயொத்த கும்பு உடைய, வல்லும் பொருதும் வனமுலைக கான மணி - சொக்கட்டான் காயொத்த அழகிய தனங்களுக்கு மணிபோல்வார், அதாவது அழகிய திருமுல்லைவாயிலுக்குரிய பாலாமணியீசர், அதன் பேர் சொல்லும் பொழுது - அந்த மாசிலாமணியின நாமத்தைக் கூறும் காலத்தில், பிரமனும் மாலும் தொழுத்தகுமோ - அது அயனும் அரியும் கும்பிடும்படியான தகுதியுடையது, எ - று.

272. அலையாழி நஞ்சை யமுதா வருந்தி யமரரெல்லாம்
நலியாமற் காத்த வருணை லேசர்தன் னல்வரைமேல்
நிலையா யிருக்கும் விலைமாத ரேயென்னை நீ கொடுபோய்ப்
புலியூரைக் காட்டிக் கலியூரிற் சேர்த்திடிற் புண்ணியமே.

உரை:—அலையாழி நஞ்சை - அலைகளையுடைய திருப்பாற்கடலிலெழுந்த விடத்தை, அமுதா அருந்தி யமரா எல்லாம் நலியாமல் காத்த அருணைலேசர்தன் நல்வரைமேல் - அமுதம்போல வுட்கொண்டு தேவர்களை யெல்லாம் அழியாமற் காப்பாற்றிய அண்ணுமலை நாதருடைய அழகிய மலை மீது, நிலையாயிருக்கும் விலை மாதரே - உறுதியாகக் குடியிருக்கின்ற வேசையரே !, என்னை நீர் கொடுபோய் - எனனை நீங்கள் அழைத்துக்கொண்டு போய், புலியூரைக காட்டி - சுசமாகிய தனங்களைக காட்டி, கலியூரில் - ஆடை தங்குமிடமாகிய கடிதடத்தில், சேர்த்திடில் - சேரும்படி செய்தால், புண்ணியமே - நன்மையாகும், எ - று.

273. தானேர் வலியினுந் தாழ்வுபடாமற் சகலரையும
வானேரை யுங்கொண்டு வாரிக்கு ளாலித்து வானரத்தின்
கோனே டெழுபது வெள்ளத்தி லேவந்து கொக்கைக்கொன்ற
மீனே திருவல்லிக் கேணிக்குள் ளேவந்து மேவியதே.

உரை:—தானேர் வலியினும் தாழ்வு படாமல - மசசாவதார மெடுத்தும் தான் ஒரு வலியினும் சிகிக் கொள்ளாமல், சகலரையும் வானேரையும் கொண்டு-மக்களி லெல்லாரையும் தேவர்களேயும் அழைத்துகொண்டு, வாரிக்குள் ஆலித்து - கடலில் ஆரவாரமாய்க கலகி, வானரத்தின் கோனேடு எழுபது வெள்ளத்திலே வந்து - குரங்கு மன்னனுடைய சுகிரீவனேடு எழுபது வெள்ளம் குரங்குகளேச் சேர்த்து வந்து, கொக்கைக் கொன்ற - மூலகட்சத்திரதிற் றோன்றிய அரக்கரை யழித்த, மீனே - மசசாவதாரப் பெருமாளோ திருவலலிகேணிகுளளே வந்து மேவியது - திருவல்லிக்கேணியில வந்து விரும்பித் தங்கியது, எ - று.

274. கிழக்கோ தந்தெற்கி லிளந்தென்றன் மேற்கினிற் கீற்றுப்பிறை
அழற்கோலு முத்தர திக்கினில் வாடையதுவு மன்றிக்
குழற்கோகிலமென் குலக்கோகி லத்தைக் கொடுமைசெய்ய
வழக்கோசொல் சண்பக மாறுமதுரை வரோதயனே.

உரை:—சண்பக மாறு மதுரை வரோதயனே - சண்பக மாற பாண்டியனே!, மதுரையில் வரத்திஞல் பிறந்தவனே!, கிழக்கு ஓதம் - கிழக்கே உள்ள கடலும், தெற்கில் இளந்தென்றல் - தெற்கேயுள்ள இளந் தென்றற் காற்றும், மேற்கினில் கீற்றுப்பிறை அழற்கோலும் - மேற்குத் திசையிற் பிறைச சந்திராஞகிய நெருப்புக் கம்பியும், உத்தர திக்கினில் வாடை-வட திசையில் வாடைக் காற்றும், அதுவும் அன்றி - அதுவுமல்லாமலும், குழல் கோகிலம் - வேய்ங்குழலும் குயிலும், என் குலக் கோகிலத்தைக் கொடுமை செய்ய வழக்கோ - என் குடும்பத்திற் பிறந்த குயில்போன்ற குரலேயுடைய என் மகளுக்கு வருத்தத்தை விளைத்தல் நியாயமாகுமா ?, சொல் - கூறுவாயாக !, எ - று.

275. காவியனந்த மெடுத்தான்மதன் கைக்கரும் பெடுத்தான்
மேவியனந்த வனம்புகுந் தானினி வேட்டஞ்செய்வான்
ஆவியனந்த முண்டோ வுயிர்தான் விட்டகலுமுன்னே
தேவியனந்திக் கெதிரோடி விண்ணப்பஞ் செய்பவரார்.

உரை:—மதன் கைக்கரும்பு எடுத்தான் - மன்மதன் தன் கையிலுள்ள கரும்பு வில்லை எடுத்து வளைத்தான், காவி யனந்தம் எடுத்தான் - குவளைப் பூ பல எய்வதற்காக எடுதத்துக்கொண்டான், இயல் மேவு நந்தவனம் புகுந் தான் - அழகு பொருந்திய பூங்காவில் நுழைந்தான், இனி வேட்டஞ் செய்வான் - இனிமேல் வேட்டை யாடுவான், ஆவி யனந்தமுண்டோ - என் மகளுக்கு உயிர் பலவுளவோ, உயிர்தான் விட்டு அகலு முன்னே - இருக்கின்ற ஒரு உயிர்விட்டு நீங்குவதற்கு முன்னே, தேவியல் நந்திக்கு எதிரோடி - தெய்வத்தன்மை பொருந்திய சோதியாகிய சிவபெருமானுக்கு முன் விரைந்து சென்று, விண்ணப்பஞ் செய்பவரார் - ....., எ - று.

276. ஒன்றைவிட் டொன்றைவிட்
டொன்றுவிட்டான் மதனென்றுவிட்டான்
நின்றைந்தி லொன்றெடுத் தேவநின்
முனெடுத் தேவுமுன்னே
குன்றையில் வாழ்க்கைத் தளவாகுமார
நற்சாமி முன்செங்
குன்றையிற் சென்றெரு காலிரு
காற்சொலுங் கோதையரே.

உரை :—கோதையரே - பாவையரே !, மதன் - மன்மதன், ஒன்றை விட்டு - தாமரைப் பூவாகிய ஒரு கணையைச் செலுத்தி, ஒன்றை விட்டு - மாம்பூவாகிய கணையை மறுபடியும் செலுத்தி, ஒன்று விட்டான் - முல்லைப் பூவையுஞ் செலுத்தினான், ஒன்று விட்டான் - அசோக மலரையும் செலுத்தினான், நின்று ஐந்தில் ஒன்று எடுத்து ஏவ நின்றான் - எஞ்சிய குவளை மலரை யெடுத்துச் செலுத்த நின்றான், எடுத்து ஏவு முன்னே - அதனைச் செலுத்துவதற்கு முன்பாக, செங்குன்றையில் - திருச்செங்குன்றூரிலிருக்கும், குன்றையில் வாழ்க்கைத் தளவா குமார நற்சாமி முன்சென்று - குறைவற்ற வாழ்க்கை நலங்களையுடைய தளவாய் குமாரசாமி வள்ளலிடம் போய், ஒருகால் இருகால் சொலும் - மூன்றுதரம் முறையிடுவீர்களாக !, எ - று.

277. தண்டுஞ் சிவிகையுஞ் சிங்காதனமுந் தமிழ்க்குதவும்
கண்டன் புகார்வரைக் காரிகையேகழு நீரதனின்
உண்டுண் டெனக்குறி காட்டியவேந்தர் குயிரளித்த
வண்டுண் டுமிழ்ந்ததன்றே மடவீரிந்த வையகமே.

உரை :—தண்டும் சிவிகையும் சிங்காதனமும் தமிழ்க்குதவும் கண்டன் புகார்வரைக் காரிகையே - கோலும் பல்லக்கும் அரியணையும் தமிழ்வாணருக்குப் பரிசாக ஈயும் சோழனது காவிரிப்பூம் பட்டினத்தைச் சார்ந்த மலையிலுள்ள பெண்ணே !, கழுநீரதனில் உண்டுண்டெனக் குறிகாட்டி - துரியோதனன் மறைவாகக் கழுக்கள் காட்டிய தண்ணீருக்குள் தீங்கு உண்டென்று அடையாளங் காட்டி, அவ் வேந்தர்க்கு உயிரளித்த வண்டு - வீமனுடைய அந்த அரசனுக்கு உயிரைத் தப்பித்துக் கொடுத்த வண்டாகிய திருமால், உண்டு உமிழ்ந்ததன்றே மடவீரிந்த வையகமே - உட்கொண்டு வெளிப்படுத்திய எச்சிலல்லவா இந்த வுலகமென்று தெரியாதவர்களில்லை, எ - று.

278. கைத்தலந் தன்னிற் பசும்பொன் வளையல் கலகலெனச்
சத்த மொலித்திட நூபுரமபாதச் சதங்கை கொஞ்சத்
தத்திமி ரென்று நடஞ்செய்சம் பீசர்தஞ் சந்நிதிப்பெண்
செத்த சூரங்கைத் தலைமேற் சுமந்து திரிந்தனளே.

உரை :—கைத்தலம் தன்னில் பசும்பொன் வளையல் கலகலெனச் சத்தம் ஒலித்திட - கைகளிலிட்ட புதிய தங்க வளையல்கள் கலகலவென்று ஓசை செய்யவும், நூபுரம் பாதச் சதங்கை கொஞ்ச - காலிலிட்ட சிலம்பும் கிங்கிணியும் மெதுவாய் ஓசை செய்யவும், தத்திமி யென்று நடனஞ்செய - தத்திம் என்ற ஓசையோடு நிருத்தஞ் செய்கின்ற, சம்பீசர்தம் சந்நிதிப் பெண் - சம்புகேசுரப் பெருமானது சந்நிதிக்குரிய மாது, செத்தச் சூரங்

கைத் தலைமேற் சுமந்து திரிந்தனளே - சாமந்திப் பூவைத் தலையில் வைத் துக்கொண்டு திரிந்தாள், எ - று.

குறிப்பு :—சா + மந்தி செத்த குரங்கு

279. பரிக்கொம்பு போலப் பகவான் சரிதை பகர்ந்திடினும்
உரிக்கமப தாயினு மீயார் கடனுட னேடிச்சென்று
கரிக்கொமபு போன்முலை மின்னுக் கீவரக் கன்னியர்கை
நரிக்கொமபு தானுமுண்டோ வேங்கடாசல நாயகனே.

உரை :—வேங்கடாசல நாயகனே - வேங்கடாசல நாயகனென்னும் வள்ளலே!, பரிகொம்புபோலப் பகவான் சரிதை பகர்ந்திடினும் - குதிரைக் கொம்புபோல அருமையான தெய்வ வரலாறுகளே யெடுத்துக கூறினாலும், உரிக் கம்பதாயினும் ஈயார் - அரைப்படி கம்பம்புல்கூட கொடுக்காதவர்கள், கடனுடன் ஓடிசசென்று - கடன்வாஙகுகிற பணததோடு ஓடிப்போய், கரிக் கொம்பு போல் முலை மின்னுக்கு ஈவார் - யானைக் கொமபுபோன்ற தனங் களையுடைய வேசையாக்குக் கொடுப்பார்கள், அக்கண்ணியர் கைநரிக் கொம்புதானு முண்டோ - அத்தப் பெணகள் கையில் காரியசித்தி பெறுதற் குரிய நரிகொம்பாவது இருகஙகிறதா ?, எ - று.

280. கேளந்த நாளையின் மைந்தாகின் னேயரைக் கிட்டிமத
வேள்வந்து பூச லிடமதிகாய வெருண்டெனது [ன
நாள்வந்து பற்றிமுன் வாய்புதைத் தேகின்று தாழ்மைசொன்
நாளந்த நாளல்ல வேயிந்த நாளந்த நாயகர்க்கே.

உரை :—மைந்தா - புதல்வனே !, கேள் - கேட்பாயாக !, அந்த நாளை யில் - அநதக காலததில், மதவேள் நினனேயரைக் கிட்டிவந்து பூசலிட - மன்மதன் உன் தகப்பனுருக்கு அருகே போய்ச் சணடையிடவும், மதிகாய - சந்திரன வெப்பநதாவும, வெருண்டு - அத் தின்பஙகளுக்கு அஞ்சி, எனது தாள் வநது பற்றி - என்னிடம் வந்து என் காலைப் பிடிததுகொண்டு, முன் வாய புதைததே கின்று தாழ்மை சொன்ன நாள் - முன் வாயைப் பொத்திகொணடு எனக்கு உபசாரம் சொல்லிய காலமாகிய, அந்த நாள் - அந்தக காலம், அநத நாயகர்க்கு இந்த நாள் அல்ல - அந்தக் கணவருககு இந்தக் காலமாயிலலை, எ - று.

281. பக்குவமாகக் கவிநூறு செய்து பரிசுபெற
முக்காணம மெதிர் பல்காலும போட்டு முயன்றிடினும்
அக்கட போவெனும லோபரைப்பாடி யலுத்துவந்த
லுக்கனே யாண்டருள் வில்வவனத்துக் குயிலம்மையே.

உரை :—வில்வ வனத்திக குயிலமமையே - வில்வாரண்யத் தலத்தி லுறையும் குயிலம்மை யென்னும் பெயருடைய தாயே!, பரிசு பெற

வெகுமதி வாங்குவதற்காக, பக்குவமாக கவிநூறு செய்து - நல்ல முறையில் நூறு பாட்டுப் பாடிக்கொண்டுபோய், மூக்காரணம் எதிர் பல் காலும் போட்டு முயன்றிடினும் - பல முறை மூன்று காரணம் போட்டு முன்னே நின்று வேண்டினாலும், அக்கடை போவெனும் லோபரைப் பாடி யலுத்து வந்த - அப்பாற் செல்லுகவெனக் கடிந்து கூறும் லோபிகளைப் புகழ்ந்து போற்றித் தளர்ந்து வந்த, குக்கனே யாண்டருள் - நாயினேனை யருள்செய்து ஆட்கொள்வாயாக!, எ - று.

282. பொல்லா மதப்பய லேந்நேரமுஞ் செயும் போருமெனைக்
கொல்லாமற் கொல்லு மதியுங்கடலுங் குயிலுமிவை
எல்லாந் தொலைந்ததென் றெண்ணினன் பாவியிப்போ துன்மன
கல்லா யிருக்குமென் றெவ்வள வேணுமுன் கண்டிலனே. [ம

உரை:—பொல்லாத மதப்பயல் - கொடிய மன்மதச் சிறுவன், எந்நேரமுஞ் செயும் போரும் - எப்போதும் போடுகின்ற சண்டையும், எனைக கொல்லாமற் கொல்லு மதியும் - என்னை உயிரினைப் போகாமல் வருதது கின்ற சந்திரனும், கடலும் குயிலும் - சமுத்திரமும் குயிற் பறவையும், இவை யெல்லாம் தொலைந்தது என்று எண்ணினன் - ஆகிய இவைகளெல்லாம் ஒழிந்தனவென்று நினைத்தேன், பாவி இப்போது உன் மனம் கல்லா யிருக்கு மென்று எவவளவேணு முன் கண்டிலனே - பாவிப் பெண்ணே! உன்னுடைய நெஞ்சம் என்மீது இரக்கம் வையாது கல்லுபோலக் கடிமையா யிருக்குமென்று ஒரு சிறிதும் முன்னே நான் தெரிந்துகொளளவில்லையே, எ - று.

283. காலையுபாதி மலஞ்சல மாமன்றிக் கட்டுச்சியிற்
சாலவுபாதி பசிதாக மாகுமுற் சஞ்சிதமாம்
மாலையுபாதி துயில்காம மாமிவை மாற்றிவிட்டே
ஆலமுகந்தரு ளம்பல வாவென்னை யாண்டருளே.

உரை:—காலை யுபாதிமலம் சலமாம் - காலை நேரததிற்றுன்பந் தருவது மலசு கழித்தலும் நீர் கழித்தலும் பற்றியாகும், அன்றி இக்கட்டு உசசியில் சாலவுபாதி பசிதாக மாகும் - வெயில் தன்பமுள்ள மதியான நேரததில் மிகுந்த வருததந்தருவது பசியும் தாகமுமாகும், முற் சஞ்சிதமாம் மாலையுபாதி துயில் காமமுமாம் - முன் வினைப்பயனல் வருகின்ற மாலைக்காலத்துத் தன்பங்கள் தூக்கத்தையும் பெண்ணிசசையையும் பற்றியவே, ஆலமுகந்தருள் அம்பலவா - விடததை விரும்பி யுண்டு அருள் செய்த சபாநாதரே!, இவை மாற்றிவிட்டே என்னை யாண்டருளே - இததன்பங்களைத் தொலைத்து என்னை யாட்கொள்வாயாக!, எ - று.

284. நாலடி வள்ளுவ ராமேயிப்பாலை நடந்தபெருங்
காலடி மேலடி மானடியேகட் டுரலிற்பட்டும
பாலடிசில் வெண்ணெயுண்டோ னரங்கன் பனிவரையில்
வேலடி முள்ளுக் குபாயமிட் டேகும் விரகுகன்றே.

உரை :—கட்டுரலிற் பட்டும் பாலடிசில் வெண்ணெ யுண்டோன் அரங்கன் பனி வரையில் - ஆய்ச்சியரால் உரலில் வெண்ணெய் தின்பதற்காகக் கட்டப்பட்டாலும் பாற்சோறும் வெண்ணெயும் அருந்திய திருவரங்கப் பெருமானது குளிர்ந்த மலைமீது, நாலடி வள்ளுவ ராமே - தலைவன் தலைவி இருவருடைய நான்கு அடிசில் சுவடுகள் இரண்டடிசில் சுவடுகளாகக் காணப் படுகின்றன, இப் பாலை நடந்த பெரும் காலடி மேலடி மானடியே - இச் சுரதத்தில் நடந்ததாலுண்டாகிய பெரிய இரண்டு அடிசில் சுவடுக்கு மேலுள்ள சிற்றடிசில் சுவடு என் பெண்ணின் அடிச் சுவடே, வேலடி முள்ளுக்கு உபாயமிட் டேகும் விரகு கன்றே - கருவேல மரத்தடியிலுள்ள முள்ளு பெண்ணின் காலிற் படாதபடி முதலிற்றான் கால் வைத்துத் தன் காலடிசில் சுவட்டில் அவள் மிதித்து வரும்படித தந்திரஞ்செய்து போகின்ற தலைவர் காதல் மிகவும் இனிதா யிருக்கிறது, எ - று.

285. அரியெச்சில் செய்யு மரவெச்சி லும்மை யரியெச்சிலும்
எரியெச்சி லோடுமுனி யெச்சிலுமபொர வேந்திழையாள்
கரியெச்சி லாயினள் விக்ரமச்சோழன் கனத்த குன்றின்
புரியெச்சி லுண்ட வரியெச்சி லுளும் புரப்பவனே.

உரை :—விக்கிரமச சோழன் கனத்த குன்றின் - விக்கிரமச சோழனுடைய உயர்ந்த மலைமீது, புரி யெசிலுண்ட அரி யெசில் நாளும் புரப்பவனே - (நந்தகோபனது மனையில) கயிற்றுத் துண்டா லடியுண்ட திருமாலின் எசிலாகிய உலகதனைத் தினந்தோறும் காக்கின்றவனே!, அரி எசில் செய்யும் அர எசிலும் - கடலை எச்சில் செயகின்ற பாம்பின் எசிலாகிய தென்றலும், மை அரி எசிலும - கரிய வண்டின் ஒலியும், எரி எசிலோடு - வெப்பத்தில் மிசசப்பட்ட கோளமாகிய சந்திரனும், முனி எசிலும் - அகத்திய முனிவருடைய உசிட்டமாகிய கடலும், பொர - சண்டை யிடுவதால், ஏந்திழையாள் - ஆபரணமணிந்த என் மகளானவள், கரி எசியிலாயினள் - ஆனையுண்ட விளாங்கனிபோலச சத்தற்றுப் போயினள், எ - று.

நாணிக்கண் புதைத்தல்

286. ஒருமானைச் சீதை பிடிக்கறியாம லுலகளந்த
பெருமானை மானைப் பிடியுமென்றேபிடி யாமற்கொல்ல
வருமானை யேந்தி யலைகத்தலத்தார் திருவல்லிவெற்பில்
இருமானைச் சேர்ந்தொரு ஐயாற்பிடித்தது மெவ்வணமே.

உரை :—ஒரு மானைச் சிதை பிடிக் கறியாமல் - சிதா பிராட்டியார் மாரீசனுய் வந்த மானைப் பிடிக்கத் தெரியாமல், உலகளந்த பெருமானே மானைப் பிடியு மென்றே - உலகத்தை யளந்த திருமாலின் அமிசமான இராமபிரானே அந்த மானைப்பிடிக்கும்படி கூற, பிடியாமற் கொல்ல - அந்த ராமபிரான் அதனைப் பிடிக்க முடியாமற் கொன்று விடவும், வருமானே யேந்திய கைத்தலத்தார் திருவல்லி வெற்பில் - முனிவர்கள் செய்த வேள்வியில் வந்த மானைப் பிடித்துத் தமது இடக்கையில் வைத்துக்கொண்ட சிவனாரது திருவல்லி மலையில், இருமானைச் சேர்த்தொரு கையிற் பிடித்தது மெவ்வணமே - (கண்களாகிய) இரண்டு மானையுஞ் சேர்த்து ஒரு கையினுல் மூடிக்கொண்டது எவ்வாறென்று தெரியவில்லை, எ - று.

இதுவுமது

287. கங்கையந் தாளுடை யானரங்கேசன் கனகிரிமேல்
மங்கையென் ஞவிகொல் கூற்றங்கொ லோமற்றுங் கன்னல்வி
துங்கையன் றூதே தெரியாத சோகஞ்செய் சூதமுல்லை [லேங்
பங்கையம் விட்டிங்ங னேமுழு நீலங்கைப் பற்றியதே.

உரை :—கங்கையந் தாளுடையான் அரங்கேசன் கனகிரிமேல் - கங்கையை அழகிய தமது திருப்பாதத்தி லுடையவராகிய திருவரங்கப் பெருமானது உயர்ந்த மலையின்மீதுள்ள, மங்கை - பெண்ணனவள், அசோகம செய் சூதம் முல்லை பங்கயம் விட்டு-அசோக மலர் சிவந்தமாம்பூ முல்லைப்பூ தாமரைப்பூ என்பவற்றை விடுத்து, இங்ஙனே முழுநீலம் கைப்பற்றியதே. இவ்வாறு கண்ணுகிய முழுக்குவளைப் பூவைப் பிடித்ததால், அவள் என்னுயிரைக் கொல் கூற்றங கொலோ - என்னுயிரைக் கொல்லும் எமனே, மற்றுங கன்னல்வில்லேந்துங கையன் தானே தெரியாது - அல்லது கருப்பு வில்லேத் தரித்த கையினனுகிய காமன் தானே தெரியவில்லை, எ - று.

இதுவுமது

288. விண்டிரு வர்க்கு வேதப்பொருளைமெல் லாலடிக்கீழ்ப்
பண்டிரங் கொண்டு பகர்பிரமீசர் பனிவரையிற்
கண்டிரவமெனு நுண்ணிடை யீரிந்தக் காவியங்கை
கொண்டிருத்தமுஞ் செப்பிடினீரென் சூலகுருவே.

உரை :—ஈரிருவர்க்கு வேதப் பொருளை - சனகா முதலிய நான்கு முனிவர்களுக்கு மறைக் கருதுதை, மெல்லா லடிக்கீழ் - மென்மையான கல்லால மர நிழலின் கண்ணே தங்கி யிருந்து, பண்டு - ஆதிக்காலத்தில், ஈரம் கொண்டு - முனிவர்கள்மீது இரக்கம் வைத்து, விண்டு பகர் - வெளிப்படையாகக் கூறிய, பிரமீசர் பனி வரையில் - பிரமீசரது குளிர்ந்த மலைமீதுள்ள, கண்டிரவ மெனும் நுண்ணிடையீர் - சிங்கம்போலும் நுட்பம்

போன்ற இடையையுடைய மாதரே[1], இந்தக் காலியன் கைக் கொண்டார் - குவளைபோன்ற கண்ணைக் கையினால் பற்றினீர், அருத்தமும் செப்பிடில் - அதற்குப் பொருள் அதாவது காரணத்தைக் கூறுவீர்களானால், நீரே என் குலகுருவே - நீர் எங்கள் பரம்பரையா சாரியராவீர், எ - று.

289. எறிக்கும் புகழ்க்கச்சி யேகாம்பரசம்ப னெண்டிசையும்
பொறிக்கும புலியான் புயம்வேட்ட பின்னிற்பூசையன்னாள்
வெறிச்சுங் குமக்கொங்கை மீதேவிழிசொரி வெள்ளந்துள்ளித்
தெறிக்குந் திவலே யழிக்குஞ் சிந்தூர திலகத்தையே.

உரை :—எறிக்கும் புகழ்க்கச்சி ஏகாம்பர சம்பன் - எங்கும் பரவிய கீர்த்தியையுடைய ஏகாம்பர சம்ப னென்பவன்; எண்டிசையும் பொறிக்கும் புலியான் - எட்டுத் திசையிலும் வரைந்த புலிகொடியையுடையவன், இந்தப் பூவை இன்னாள் புயம் வேட்ட பின் - நாகண வாய்ப்புள்போன்ற பேச சுடைய இந்தப் பெண்ணைனவள் அவன் தோளினைததழுவ ஆசைகொண்ட பின், வெறிக் குங்குமக் கொங்கை மீதே - மணமான குங்குமப்பூக் கலந்த சந்தனம் பூசிய அவள் தனத்தின்மேல், விழி சொரி வெள்ளம் - அவள் கண் சிந்துகின்ற நீர்ப்பெருக்கு, துள்ளித் தெளிக்கும் திவலை - குதித்துப் பாய்வ தால் இளம்புகின்ற துளியானது, சிந்தூர திலகத்தையே அழிக்கும் - அவள் நெற்றியிலுள்ள செங்குங்குமப் பொட்டினை யில்லாமற் செய்கின்றது; எ-று.

290. நேற்றினுமின்று மிருந்ததுகாத னிலவெனுங்கூன்
கூற்றினுமன்னே கொடியள்கண்டாய் மள்ளர் கொன்றபழஞ்
சேற்றினுமேதிக் குளம்பா னெருக்குண்ட செங்கருப்பஞ்
சாற்றினுஞ்சங்கம தவழுங் கொல்லாபுரிச் சந்திரனே.

உரை:—மள்ளர் கொன்ற பழஞ் சேற்றினும் - வயலி லுழுகின்றவர் கள் மிதித்த உழுகிய நாட்பட்ட சகதியிலும, மேதிக் குளம்பால நெருக் குண்ட செங்கருப்பஞ் சாற்றினும் - எருமைகளின் காற் குளம்பு பட்டு நெரிந்து பரவிய சிவப்பான கருப்பஞ் சாற்றினும், சங்கம் தவழும் - சங்குகள் நிலவப்பெற்ற, கொல்லா புரிச சந்திரனே - கொல்லா புரியில் வசிக்கும் சந்திரனென்னும் வள்ளலே!, நேற்றினும் இன்று காதல் மிகுந் தது-நேற்றைவிட இன்றைக்கு மோகம் மிகுதிப்பட்டது, நிலவெனும் கூன் கூற்றினும் அன்னை கொடியவள் - பிறைச் சந்திர னென்கிற வளைந்த வடிவுடைய காலனைப் பார்க்கிலும் தாய் பொல்லாதவளா யிருக்கிறாள், எ - று.

291. நீரகங்கொண்ட வயித்திய நாதர் நெடுங்கிரிவாய்
சீரகங்கண்டுநற் காஞ்சித்தலத்தையுஞ் சேவைசெய்து
வாரகங்கொண்ட வடமலைமாலை மனத்தடக்கித்
தீரகங்கொண்ட நமன்பணைப்போலச் செகத்தில்லையே.

உரை :—சேரகங் கொண்ட வயித்திய நாதர் கொடுங்கிரிவாய் - கீர் வளத்தைத் தன்னிடத்தே யுடைய வயிதநியாதப் பெருமானது உயர்ந்த மலையின்மீதுள்ள, சேரகங் கண்டு - புகழ்பெற்ற விடங்களைத் தரிசித்து அல்லது அழகிய உடம்புடைய பெண்ணைப் பார்த்து, நற் காஞ்சித் தலத்தையும் சேவைசெய்து - நல்ல காஞ்சிபுரமாகிய திருப்பதியையும் வழிபட்டு அல்லது காஞ்சி யென்னும் மேகலை தங்குதற்கிடமாகிய கடிதடத்தையும் பார்த்து, வாரகங் கொண்ட வடமலை மாலை மனத்தடகி - நீட்சி பொருந்திய திருவேங்கட மலையிலுள்ள திருமாலை மனத்தில் வைத்து அல்லது கசணிந்தீ முத்துமாலை யலைகின்ற தனத்தின்மீதுள்ள வேட்கையை யுள்ளத்திலடக்கிகொண்டு, தீரகங்கொண்ட - தைரியத்தையுடைய, நம் அன்பனைப் போலச சகத்திலேயே - நம்மிடத்தில் அன்புள்ள தலைவனைப்போல இந்த உலகத்தில் யாருமில்லை, எ - று.

குறிப்பு :—இது தலைவனைப் பாங்கன் வியந்தது.

292. புலியைக் கொடுத்துப் பசுவாங்கி யோர்புலிப் பூங்குழலாள்
புலியைப் பசுதின்ன விட்டுப்புலியைத் தினைதகறறிப்
புலியை யரைத்துப் பலகாரஞ்செய்து பொருந்தமுகப்
புலியைக் களிப்புடன் சாறுவைத்தாடன் புருஷனுக்கீக.

உரை :—புலியைக் கொடுத்துப் பசு வாங்கி - வேங்கை யதாவது பொன்னைக் கொடுத்துப் பசுவைப் பெற்று, ஓர் புலிப் பூங்குழலாள் - ஒப்பற்ற மயிர்சசாந்து பூசிய அழகிய கூந்தலுடைய பெண், புலியைப் பசுத்தின்ன விட்டு - பசு புல்லைத தின்னும்படியாக அதனைவிட்டு, புலியைத் தினைதகற்றி - புலியானது பசுவைத் தினைதபடி விலகி விட்டு (பசுவின் பாலுடன்) புலியை அரைத்து - நெல்லினின்றெடுத்த அரிசியை யரைதது, பலகாரஞ் செய்து - பலவகைப் பண்டங்களையுஞ் சமைத்து, முகப்புலியைப் பொருந்து களிப்புடன் - முகத்தாமரையைப் பொருந்திய மகிழ்சசியுடன், தன் புருஷனுககே சாறு வைததாள் - தன்னாயகனுக்கு விருந்து செயதாள், எ - று.

குறிப்பு :—புலி என்ற சொல் பொன், மயிர்ச சாந்து, புல், புலி, ஒரு வகை நெல், தாமரை என்னும் பொருள்களில் பாட்டில் உபயோகப்பட்டுளளது.

பாலனைப் பழித்தல்

293. வேளாமழகன் றுரைசிதக் காதியென் வீட்டிலொரு
நாளாகி லும்வரக் காண்கில னேயெந்த நாளுமவன்
தோளா லணைபுஞ் சுகவாலிபத்தைத் துணிக்கவொரு
வாளாப் பிறந்தனையே மைந்தனே யென்ன வாயுனக்கே.

உரை :—மைந்தனே - பாலனே !, வேளாமழகன் துரை சேக்காதி - மன்மதன்போன்ற வனப்புடையவனுகிய சேக்காதி எஜமான், என் வீட்டில் ஒரு நாளாகிலும் வரக் காண்கிலனே - ....., எந்நாளும் அவன் தோளால் அணையும் சுகவாலிபத்தை - எந்நாளிலும் அவன் புயத்தைத் தழுவுவதா லுண்டாகிய இன்பத்திற்குரிய இளமையை, துணிக்க ஒரு வாளாப் பிறந் தனையே - வெட்டித் தொலைப்பதற்கு ஒரு வாளாயுதம்போலத் தோன்றி னையே, என்ன வாயுனக்கு - நீ என் வீணைய்க் கதறுகிறாய், எ - று.

294. நடந்தா ளொருகன்னி மாராசகேசரி நாட்டிற்கொங்கைக்
குடந்தா னனைய வொயிலா யதுகண்டு கொற்றவரும்
தொடர்ந்தார் சந்நியாசிகள் யோகம்விட்டார்சுத்தசைவரெல்லா
மடந்தா னடைத்துச் சிவபூசை யுங்கட்டி வைத்தனரே. [ம்

உரை:—மாராசகேசரி நாட்டில் - பெரிய ராசகேசரி யென்பவனுடைய தேசத்தில், ஒரு கன்னி - ஒரு சிறு பெண், கொங்கைக் குடந்தா னனைய - தனங்களாகிய குடங்க ளசையும்படி, ஒழிலாய் நடந்தாள் - கெம்பீரமாக நடந்து சென்றாள், அதுகண்டு கொற்றவரும் தொடர்ந்தார - அதைக் கண்ட மன்னரும் அவளைப் பின் தொடர்ந்தார்கள், சன்னியாசிகள் யோகம் விட் டார் - துறவிகள் யோக முயற்சியைக் கைவிட்டு மயங்கினார்கள், சுத்தசைவ ரெல்லாம் - தூய வொழுக்கமுடைய சைவர்கள் யாவரும் மயக்கத்தால், மடந் தானடைத்துச சிவபூசையுங கட்டி வைத்தனரே - ....., எ - று.

295. நாலா கலைதெரி யேகமபவாணனன் ஞட்டில்வளர்
சேலாகக் கண்கள் படைத்த பெண்ணேநின் றிகழுமவயி
ருலாகவு மல்குற் பாமபாகவுமவ் வணையின்மிசை
மாலாக யான்பள்ளி கொள்ளவந் தேனுன்றன் மாளிகைக்கே.

உரை:—நாலா கலைதெரி யேகம்பவாணன் நன்ஞட்டில் - பலவகை யான கலைகளைக்கற்ற ஏகம்பவாணனது நல்ல தேசத்தில், வளர்ச சேலாகக் கண்கள் படைத்த பெண்ணே - வளாகின்ற சேல்மீன்கள் போன்ற கண்க ளுடைய பெண்ணே !, நின் திகழும் வயிறு ஆலாகவும் - அழகிய உன்னு டைய வயிறு ஆலிலைபோல விளங்கவும், அல்குல் பாம்பாகவும் - கடிதடம் பாம்புபோலிருக்கவும், அவவணையின் மிசை - அத்தகைய படுக்கையின் மேல், மாலாக யான் பள்ளிகொள்ள - திருமாலைப்போல யான் படுத்துறங்க, உன் மாளிகைக்கே வந்தேன் - உன்னுடைய பெரிய வீட்டிற்கு வந்தேன், எ - று.

296. அரவிந்த நண்பன் சுதன்றமபி மைத்துன னண்ணன்மகயில்
வரமுந்தி யாயுதம் பூண்டவன் காணுமற் றங்கவனே
பரமன் றிகிரியை யேந்தினன் மைந்தன் பகைவன்வெற்பை
உரமொன்றெடுத்தவன் மாற்றுன்றன் சேவகனெண்டோடியே.

உரை:—அரவிந்த நண்பன் - தாமரைக்குச் சிநேகிதனுகிய சூரிய னது, சுதன் தம்பி மைத்துனன் - புதல்வனுகிய கர்ணனின் தம்பியாகிய அர்ச்சுனனின் மைத்துனனுகிய கண்ணனுடைய, அண்ணன் கையில் - சகோதரனுகிய பலராமன் கையில், வர மூந்திய ஆயுதம் - ஆயுதமாக வரு வதற்கு முன்னே இருந்த கலப்பையை, பூண்டவன் காணும - கழுத்திற் கொண்ட எருமைக்கடா போன்றவனவன் (என்று ஒரு வேசி தன்னிடம் வந்த காமுகனைப்பற்றி மற்றொரு வேசிக்குக் கூற அவள் கூறுவதாவது) ஒண்டொடியே - ஒள்ளிய வளையலணிந்த கண்பியே!, பரமன் திகிரியை ஏந்தினன் - அரனளித்த சக்காயுதத்தைக் கொண்டவனுகிய திருமாலின், மைந்தன் பகைவன் - புதல்வனுகிய காமக்கடவுளின் எதிரியாகிய சிவனது வெற்பை உரமொன்று எடுத்தவன் - கயிலை மலையைத் தன் முழுப்பலத் தோடு எடுத்தவனுகிய ராவணனது, மாற்ருன் தன் சேவகன் - சதகுரு வாகிய இராமனுடைய தொண்டனுகிய அனுமான் (என்பால் வந்தவனென் ருன்), எ - று.

297. சங்கரன்றேவி தமயன்மனைவி தனக்குமுன்னும்
மங்கையரேறிய வாகனங் காணுமற் றங்கவளோ
கொங்கைக ளீரைந் துடையவளாயிக் குவலயத்தில்
எங்குந்திரியும் வயிரவ ரூர்தியென் றேகினையே.

உரை:—சங்கரன் தேவி தமையன் மனைவி - சிவபெருமான் தேவி யாகிய பார்வதியின் தமையனுகிய திருமாலின் மனைவியாகிய இலக்குமிக்கு முன்னும் மங்கையர் - முன் றோன்றியவளாகிய மூதேவி, ஏறிய வாகனங் காணும் - ஏறிய ஊர்தியாகிய கழுதை யென்று ஒருவன் கூற, (மற்றொரு வன் கூறுவான்) அங்கு அவளோ - என்னிடம் அங்கே வந்தவள் எப்படி எனில், கொங்கைகள் ஈரைந்து உடையவளாய் - பத்துத் தனங்களோடு கூடி, இக் குவலயதலில் எங்கும் திரியும் - இப் பூமியீது எவ்விடத்திலும் திரிகின்ற, வயிரவா ஊர்தி யென்றே னினையே - வயிரவக் கடவுளேறும் வாகனமாகிய நாய் என்றே கருதுக வென்ருன், எ - று.

298. மாத்தானைப் பித்தனை மாடேறுவானை மதகரித்தோல்
போர்த்தானை வேதப் பொடிபூசுவானையிப் பூதலத்தென்
ஆத்தா ளுடனெதிர்த் தம்பலத்தேயென்று மாடிநிற்கும்
கூத்தாடிப் பையலுக் கோமகளேமையல் கொண்டனையே.

உரை:—மகளே - ....., மாத்தானைப் பித்தனை - பெரியபூத சேனை யுடைய பித்தனெனப்படுபவனை, மாடேறுவானை - காளையை வாகனமாக வுடையவனை, மதகரிதோல் போர்த்தானை - (வேள்வியில் வந்த) மத யானையினுடைய தோலை யுரித்துப் போர்வையாக அணிந்தவனை, வேதப் பொடி பூசுவானை - வேதத்திற் சிறப்பாகப் பேசப்பட்ட திருநீற்றினைத்

தரித்தவனே, இப் பூதலத்து என் ஆத்தாளுட னெதிர்த்து - இப் பூமியின் கண் எனது அன்னையாகிய காளியோடு போட்டிபோட்டு, அம்பலததே என்றும் ஆடி நிற்கும் கூத்தாடிப் பையலுக்கோ - சபையிலே எப்போதும் கூத்தாடிக் கொண்டிருக்கிற ஆண்மகனிடமோ, மயல் கொண்டனை - நீ ஆசை யுடையவளாகினை, எ - று.

299. கானவர் தான்றினை கொய்தனரோ கண்ட கண்ணலவோ
தேனமர் வண்டினங் காள்கிள்ளை காள்செழுங் காணவிட்டுப்
போனவன் றுனல்லவோ நெடுங்கானிப் புனமல்லவோ
நானவன் றுனல்லவோ சொல்லவேண்டு நடுக்கண்டதே.

உரை:—தேனமர் வண்டினங்காள் கிள்ளைகாள் - தேனை விரும்பிச் செல்லுகின்ற வண்டுக் கூட்டங்களே ! கிளிகளே !; கானவர் தான் றினை கொய்தனரோ - (நான் முன் தலைவியைக் கண்ட இந்த விடத்தில் தான்) வேடர்கள் தினைப் பயிரை யறுத்தெடுத்தார்களோ, கண்ட கண அலவோ - நான் முன்னே கண்ட கண்களிவை யல்லவோ, செழுங்காணை விட்டுப் போனவன்றுனல்லவோ - இந்த வளமான காட்டைவிட்டு முன் போன வன் நானல்லனே, நெடும் கான் இப் புனமல்லவோ - நான் முன்னே தலைவியைக் கண்ட பெரிய காடு இது அலவோ, நான் அவன்றுனல் லவோ - அவளைக் கண்டவன் நானல்லனே, நடுக்கண்டதே சொல்ல வேணடும் - நியாயமாக நீங்கள் பார்த்ததையே கூறும்படியாக வேண்டு கிறேன, எ - று.

300. தாராள னெங்கடிரு நின்றைச்சேஷன் சயிலத்தின்பால்
நீரார் முகிற்குழற் பெண்பேதை யைவிட்டு நீபிரிந்தால்
சீராம னில்லை யமுதில்லை யஞ்சனைச் செல்வனிலலை
காராரர் பொழில்வளர் காழிப்பிரா னில்லை காப்பதற்கே.

உரை:—தாராளன் எங்கள் திருநின்றைச சேஷன் சயிலத்தின்பால் - திருநின்றையூரி லிருக்கும் எங்கள் வள்ளலாகிய சேஷனென்னும் பிரபு வின் மலையினமீது, நீரார் முகில் குழல் பெண் பேதையைவிட்டு நீ பிரிந் தால் - மழை மேகம்போலக கருத்த கூர்தலையுடைய பேதைப் பருவத்துச் சிறு பெண்ணைவிட்டு நீ யகல்வாயானால், காப்பதற்கே - அவளை யிறவாமற் காப்பாற்றுவதற்கு, சீராமனில்லை - கல்லைப் பெண்ணுக்கிய இராமபிரா னிடமே இல்லை, அமுதில்லை - சாவை நீக்கக்கூடிய மருந்தாகிய தேவாமுத மிடமே இல்லை, அஞ்சனைச செல்வனில்லை - சஞ்சீவி மலையைக் கொணர்ந்த அஞ்சனையின் புதல்வனுகிய அனுமா னிங்கில்லை, காரார் பொழில் வளர் காழிப்பிரானில்லை - மேகந் தங்கிய சோலைகள் வளர்ந்தோங்கும் சோழியி லவதரித்த திருஞான சம்பந்தரிடமே இல்லை, எ - று.

301. அம்பள வெவ்வள வவ்வளவே விழியார்ந்த கொவ்வைச்
செம்பள மெவ்வள வவ்வளவேயிதழ் சீர்கொள் வஞ்சிக்
கொம்பள வெவ்வள வவ்வளவேயிடை கூறெலுமிச்
சம்பள மெவ்வள வவ்வளவேதனந் தையலுக்கே.

உரை :—தையலுக்கே - இம் மாதுக்கு, விழி அம்பளவு எவ்வளவு அவ்வளவே - கண்ணுனது அம்பின் தன்மையினளவு எத்துணையோ அத்துணையே உளது, இதழ் ஆழ்ந்த கொவ்வைச செம்பவளம் எவ்வளவு அவ்வளவே - உதடானது சிவப்பான முழு கொவ்வைக்கனி எத்தன்மையதோ அத்தன்மையதே, இடை சீர் கொள் வஞ்சிக் கொம்பளவு எவ்வளவு அவ்வளவே - இடையானது அழகுள்ள வஞ்சிக்கொடி எத்தன்மையதோ அத்தன்மையதே, தனம் கூறு எலுமிச்சம்பளம் எவ்வளவு அவ்வளவே - முலையானது எல்லாரும் புகழ்ந்து சொல்லும் எலுமிசசம் பழம் எந்த அளவிலிருகின்றதோ அந்த அளவிலிருகின்றது, எ - று.

302. நச்சணிகண்டத்த ராரூர்தியாகர் ளினவெற்பில்
கச்சணியுமமூலை மாதேயிதுவென்ன காரணமோ
அச்சுதனுமத் திரண்டாமெழுத்தி லரையெழுத்தில்
வச்சிரபாணி மனையாள்பகைவந்து வாய்ததுவே.

உரை :—நச்சணி கண்டத்தர் ஆரூர்த் தியாகர் ளின வெற்பில் - விஷத்தையணிந்த கழுத்தை யுடையவராகிய திருவாரூர்த் தியாகராசப் பெருமானது தாமரைச் சுனைகள் நிறைந்த மலையின்மீது, கசசணியும் முலை மாதே - வார் அணிகின்ற தனங்களையுடைய பெண்ணே!, அசுசுதன் நாமத்து இரண்டாம் எழுத்தில் - விண்டுவின் பெயராகிய அரி யெனபதின் இரணடாவது எழுதாகிய ரி யென்பதில், அரையெழுத்தில் - பாதிரியில், வசிரபாணி மனையாள் பகை - வச்சிராயுதத்தைக் கையி லுடையவனாகிய இந்திரனது மனைவியாகிய சசி அதாவது சந்திரனுடைய விரோதியாகிய தாமரை, வந்து வாயத்ததுவே - வந்து பொருந்தி யிருந்தது, இது என்ன காரணமோ - இது என்ன காரணத்தினாலோ, எ - று.

303. போமேபொழுது வருமேமதியம் புரண்டெனங்கம்
வேமேமதனன் சரந்தைக்கு மேதைத்த புண்வழியிற்
பூமேவு தென்றல் புகுமேயென் பெண்புத்தி போய்விடுமே
கோமேதகப் புயலே மழவாபள்ளி கொண்டவனே.

உரை :—கோமேதகப் புயலே - கோமேதக ரதினம்போலக் கரு நிறமும் பளபளப்புமுள்ள மழை மேகம் போன்றவனே!, மழவா - மழவராயனே!, பள்ளிகொண்டவனே - பள்ளிகொண்டான் என்னும் வள்ளலே!, பொழுது போமே - பகல் நேரம் கழிந்துவிடுமே, மதியம் வருமே - சந்திரன்

உதித்துவிடுமே, என் அங்கம் புரண்டு வேமே - என்னுடைய தேகம் புரளுவ துடன் வெப்ப மடையுமே, மதனன் சரம் தைக்குமே - காமனது கணைகள் பாய்ந்து அழுத்துமே, தைத்த புண் வழியே - அக் கணைகள் அழுந்திய காயத்தினூடு, பூமேவு தென்றல் புகுமே - பூக்களிற் பட்டு வரும் தென்றற் காற்றனது உட்புகுந்து செல்லுமே, என் பெண் புத்தி போய் விடுமே - பெண் தன்மைக்குரிய எனது நல்லறிவு ஒழிந்துபோகும், எ - று.

304. பாலினுமின்சொற் குயிலினுமென்மொழிப் பாவைநல்லாள்
மேலினுங்காமன் சரந்தைக்குமேவட வேங்கடம்விட்
டாலினுமேலை நடுவினும்பாம்பினு மாத்துரத்தும்
கோலினுங்கண்வளர் வாய்மழவாபள்ளி கொண்டவனே.

உரை :—வட வேங்கடம் விட்டு - வடக்கே யுள்ள திருவேங்கட மலையை விட்டு நீங்கி, ஆலினும் - ஆலிலைமீதும், வேலை நடுவில் - திருப்பாற் கடல் மத்தியிலும், பாம்பினும் - அனந்த சயனத்திலும், ஆத்துரத்தும் கோலினும் - பசுக்களை யோட்டுகின்ற தண்டின்மேலும், கண் வளர்வாய் - துயில்கின்ற திருமாலமிச மானவனே !, மழவா பள்ளிகொண்டவனே - மழவராயனே பள்ளிகொண்டா னென்னும் வள்ளலே!, பாலினும் இன் சொல் குயிலினும் மென்மொழி - பாலைப் பார்க்கிலும் இனிமையான வாக்கும் குயிலைப் பார்க்கிலும் மெல்லிய குரலுமுடைய, பாவை நல்லாள் மேலினும் காமன் சரம் தைக்குமே - பதுமைபோன்ற அழகிய பெண்ணின் உடம்பி லும் மன்மதனுடைய கணையானது அழுந்துமே, எ - று.

305. மெய்யினுநல்லவ ரீனமபொரூர்மயிர் வீழ்தொடக்கம்
செய்யினுமானக் கவரியுய்யாசிற்றினக் கயவர்
வய்யினுமவாழ்வர் தகரையக்காது மயிருமொக்கக்
கொய்யினும பின்செலுமே மழவாபள்ளி கொண்டவனே.

உரை :—மழவா பள்ளி கொண்டவனே - மழவ ராயனே ! பள்ளி கொண்டானென்னும் வள்ளலே !, மயிர் வீழ் தொடக்கம் செயினு மானக் கவரி யுய்யா - தன்னுடம்பிலுள்ள உரோமமானது கீழே விழ ஆரம்பித் தாலும் மான மிகுந்த கவரிமானனது உயிர் வாழாது சாகும், (அதுபோல) நல்லவர் மெய்யினும் ஈனம் பொரூர் - நல்ல வியல்புடையவர்கள் உடம் பிற்கூட ஏதாவது குறை யேற்பட்டால் தாங்கமாட்டார், தகரை அக்காது மயிரும் ஒக்க கொய்யினும் பின் செலுமே - ஆட்டினது செவியையும் உரோமத்தையும் ஒருங்கறுத்தாலும் அங்ஙனஞ் செய்தவருடைய புறத்தே செல்லும் (அதுபோல) சிற்றினக் கயவர் வய்யினும் வாழ்வர் - கீழ் மக்கள் கூட்டத்தைச் சார்ந்த அற்பர் ஒருவர் தம்மை யேசினாலும் மான மிலலாமல் சகமா யிருப்பார், எ - று.

பாலனைப் பழித்தல்

306. மாலாக்கியென்னைப் பெருவயதாக்கியென் மார்பின்மூலைப்
பாலாக்கியங்கம் பசுநரம்பாக்கி யப்பாலையரை [சும்
மேலாக்கிச்சிக்கு விளக்கெண்ணெ யாக்கியென் மேனியெங்
தோலாக்கவோமகனே பிள்ளையாய்வந்து தோன்றினையே

உரை:—மகனே -....., என்னை மாலாக்கி - உன்னைப் பெறுங்கால் அறிவு மயக்க முடையவளாக்கி, பெருவயதாக்கி - பின்னைப் பல வீனத்தால் என்னை வயோதிக முடையவளாகச் செய்து, என் மார்பில் மூலைப் பாலாக்கி - என் னெஞ்சிலுள்ள தனங்களைப் பால்மயமாகசெய்து, அங்கம் பசு நரம்பாகி - உறுப்புகளெல்லாம் பசிய நரம்பு தோன்றும்படி செய்து, அப்பாலையரை மேலாக்கி-தலைவன் விரும்புகின்ற அந்தப் பெண்களை என் னிலும் அழகிற் சிறந்தவளாகத் தோன்றும்படி செய்து, விளக்கெண்ணெய்ச சிக்காக்கி -....., என் மேனி யெங்கும் தோலாக்கவோ - என்னுடம் பெங் கும் தசை யில்லாமற் செய்வதற்கோ, பிள்ளையாய் வந்து தோன்றினையே- நீ குழந்தையாய் வந்து உதித்தாய், எ - று.

307. சதிராயிருந்தரதி மாமிமன்மதன் சற்பனைசெய்
தெதிராளியாயைங் கணைதூவவானத் திருந்துகனல்
மதிவாரி வீசவிளைவைமறந்து மதிமயங்கிப்
பதினெயிரங்கொட்டைப் பாக்காயிருந்தனள் பைங்கொடியே.

உரை :—ரதிமாமி - இலக்குமிபோல, சதுரமாயிருந்த பைங்கொடியே- அழகோடு விளங்கிய புதிய கொடிபோன்ற என் பெண்ணானவள், மன்மதன் சற்பனை செய்து - காமன் கபடமாய்த்தோன்றி, எதிராளியாய் ஐங்கணை தூவ - சதுருவாய் ஐந்து பூ அம்புகளை அவன்மீது விடுக்கவும், வானத்தி லிருந்து மதி கனல்வாரி வீச - விண்ணிலிருந்து சந்திரனானவன் தீயை யிகுதியாய் எறியவும், மதி மயங்கி - அறிவுகெட்டு, விளைவை மறந்து-ஏதா வது கேட்பதற்குக்கூட நினைவில்லாமல், பதினெயிரங் கொட்டைப்பாக்கா யிருந்தனள் - அம்மணமாய் அதாவது உடையற் றிருந்தாள், எ - று.

308. அன்பட்ட திக்கெங்கும் போற்றுந்தென் கோட்டுக்கதிபதியாய்
பொன்பட்டஞ்சூடும ரகுநாதபூபவிப் பூதலத்தே [ப்
பின்பட்டமேபட்ட நீயேதுரைமற்றிந் நீணிலதேதார்
தன்பட்டமென்பட்டந் தோலாலடிபடுந் தம்பட்டமே.

உரை:—அன்பு அட்ட திக்கெங்கும் போற்றும் தென் கோட்டுக் கதி பதியாய் - அன்போடு எட்டுத திசையிலும் எவவிடதிலும் உள்ளவர் களும் புகழ்கின்ற தென் கோட்டுக்குத் தலைவனாய், பொனபட்டஞ் சூடும் ரகுநாதபூப - தனகுக் கிரீடம் தரித்த ரகுநாத மன்னனே ! இப்பூதலததே -

இந்த உலகத்திலே, நின் பட்டமே பட்டம் - உன்னுடைய அரசே தக்க அரசாகும், நீயே துரை - நீயே தக்க எஜமான், மற்றிந் நிலத்தோர் தன் பட்டம் என் பட்டம் - மற்றப்படி இந்த அகன்ற பூமியிலுள்ள பிற அரசர்களின் விருதுகள் எவ்வகையான வெற்றி யுடையாளமாம், தோலால் அடிபடும் தன் பட்டமே - அவைகள் அடிக்கப்படுகிற தோற் பறைகள் போல்வனவே, எ - று.

309. சேமன்புதல்வன் செழுங்குன்றவேலன் செழுங்கிரியில்
காமன்பகைவன் கரிமுந்துமாயினங் ஙகவலவா
பூமன்கணியு மதியுமிவ்வாடையும் பூசலிட
மாமன்றமையன் றகப்பனென்றேவஞ்சி வாடுவளே.

உரை:—வலவா - தேர்ப்பாகனே !, சேமன்-காளைக்கு அதிபதியாகிய சிவபெருமானது, புதல்வன் செழுங்குன்ற வேலன் செழுங்கிரியில்-குமார ஞகிய திருசெழுங் குன்றத்தில் வீற்றிருக்கும் வேலாயுதப் பெருமானது வளமான குன்றினிடத்தே, காமன் கரிவன் பகைமுந்து மாதில் - கற்பக சோலைக்கு அதிபதியாகிய இந்திரன் யானை.யெனப் படும் கிறமையான நமது சதுரங்வாகிய மேகமானது நமக்கு முற்பட்டுப் போகுமாஞல், வஞ்சி நங்கை - கொடிபோன்ற தலைவி, பூமன் கணியும் மதியும் இவ்வாடையும் பூசலிட - மன்மதனுடைய அம்பும் சந்திரனும் இந்த வாடைக்காற்றும் அவளோடு சண்டை யிடவே, மாமன் - குறிஞ்சிக்கு வல்லவனகிய நகுல னுடைய, தமையன் - மூத்த சகோதரனகிய தருமனுடைய-தாதைபாகிய எமனென்றே, அஞ்சி - பயந்து, வாடுவளே - தளாசசி யடைவாள், எ - று.

குறிப்பு:—மேகத்திற்கு முன் தேரைச் செலுத்த வேண்டுமென்று பாகனுக்குக் குறித்ததவாறு.

310. சூலேறிச்சங்க மடவார்குடையுந் துறைக்கொதுங்கி
வேலேறுங்கண்ணியர் கைக்குடநீபுகரு மீண்டுமுழும்
சாலேறிமுத்தந் தனையீனுந்தண்வய லூரணமபால்
மாலேறுவான்பரி மாவேறினைடி மாமயிலே.

உரை:—அடி மாமயிலே - அழகிய மயில்போலும் சாயலுடைய தலை வியே!, சங்கம் - சங்குகள், சூலேறி - நன்றாகக் கருக்கொண்டு, மடவார் குடையும் துறைக்கு ஒதுங்கி - பெண்கள் ஸ்நானஞ் செயகின்ற படித்துறை யிற் போய்ச சேர்ந்து, வேலேறுங் கணணியர் கைக்குட நீர்புக்கு - வேல் போன்ற கண்ணையுடைய பெண்களது கையிலுள்ள தண்ணீர்க் குடத்திற் குட் சென்று, மீண்டும்-திரும்பவும், உழும் சாலேறி - கலப்பை யுழுத விடங் களில் தங்கி, முத்தந்தனை யீனும் - முத்துக்களைச சொரிகின்ற, தண் வயலூரன் - குளிர்ந்த வயலையுடைய தலைவன், நம்பால் மால் ஏறுவான் -

நம்மிடத்தில் மயக்க முடையவனாய், பரிமாவேறினான் - குதிரைமேல் ஏறி வந்தான், எ - று.

311. எறிக்கு மதிச்சடை யண்ணலையெ ழிற்கிரியில்
பறிக்கின்றபூவை மிதிக்கப் பொருளந்தப் பாதத்தினல்
பொறிக்கண் பிசாசுக ணெற்கூத்தஞப் பொரிபொரித்துக்
கொறிக்கின்ற பாலியி லெப்படிப்போயினள் கோமளமே.

உரை :—எறிக்கு மதிச்சடை யண்ணலையர் எழிற்கிரியில் - கிலவு வீசுகின்ற திங்களைத் தரித்த சடைமுடியையுடைய நிருவண்ணமலைப் பெருமானது அழகிய மலைமீது, கோமளம் - இளங் கன்னியாகிய மகள், பறிக்கின்ற பூவை மிதிக்கப் பொருள் - கொய்கின்ற பூக்களைக் காலினல் மிதித்தாலும் அதைத் தாங்க முடியாமல் கால் நோகுமென்பான், அந்தப் பாதத்தினல் - ....., பொறிக்கண் பிசாசுகள் - தீப் பொறிகளைச் சிதறுகின்ற கண்ணையுடைய பேய்கள், நெற்களைத் தனிப் பொரி பொரிததுக் கொறிக்கின்ற பாலையில் - நெற்களைப் பரப்பிக நீழ்ள வெப்பத்தினல் அவை பொரியாகிவிட அவற்றை ஒவ்வொன்றாய் எடுத்துத் தின்னுதற்குரிய அவ்வளவு கொடிய வெப்பமுடைய பாலை வழியில், எப்படிப் போயினள் - எவ்வாறு சென்றாள், எ - று.

312. திரைகட லோடித் திரவியந் தேடென்று செப்புமெளவை
உரைபழு தன்றெனச் சோர்ந்தாள் கழுக்குன்றத் தோர்மடமா
அரைபனிநீர் சந்தனங் கொண்டுபாங்கிய ராற்றியபின் [ன்
இரைகடல் போய்வர வெத்தனைநாளென் றெழுந்தனளே.

உரை :—திரைகடலோடித் திரவியம் தேடென்று செப்பும் ஔவை உரை பழுது அன்று என - அலையுடைய கடலின்மீது கப்பலிற் சென்றாவது பொருள் சம்பாதிக்க வேண்டுமென்று சொன்ன ஔவையார் வாக்குக் குற்றமற்ற தென்று சொன்னவுடனே, கழுக்குன்றத்து ஓர் மடமான் சோர்ந்தாள் - திருக்கழுக்குன்றத்திலுள்ள ஓர் இளம் பெண் (நாயகன் தன்னைப் பிரிந்து கடல் யாத்திரை செய்யப்போகிறான் என்றெண்ணி) மூர்சித்து மயக்க மடைந்தாள், பாங்கியர் - அவளது தோழிகள், அரை பனி நீர் சந்தனங் கொண்டு ஆற்றிய பின் - அரைத்த சந்தனத்தோடு சேர்ந்த பன்னீரைத் தெளித்து மூர்ச்சையின் வேகத்தைத் தணித்த பின், இரை கடல் போய்வர எத்தனை நாள் என்று எழுந்தனளே - முழங்குகின்ற கடலின்மீது யாத்திரையை முடித்துக்கொண்டு வருவதற்கு எத்தனை நாளாகுமென்று மூர்ச்சை தெளிந்தெழுந்தாள், எ - று.

கன்னிக் காட்சி

313. மேகம்பிறைவில் வேல்குமிழ் வள்ளைவெண் முத்தந்தொண்டை
பூகம்பசுங்கழை தேனுமிழ் காந்தள்வெற் பாலிலைநூல்
நாகங்கதலி யலவன்வராலன் னளினமுண்டு
மாகம் பொழிற்றிருத் தில்லையிலேயொரு வல்லியிலே.

உரை :—மாகம் பொழில் திருத் தில்லையிலே - வானளாவிய சோலை சூழ்ந்துள்ள தில்லைப்பதியிலே, ஒரு வல்லியிலே - ஒரு கொடியிலே (ஒரு மாதினிடத்தே),. மேகம் -.மேகம்போன்ற கூந்தலும், பிறை - பிறை போன்ற நெற்றியும், வில் - வில்போன்ற புருவமும், வேல் - வேல்போன்ற கண்ணும், குமிழ் - குமிழ மலர்போன்ற மூக்கும், வள்ளை - வள்ளைத்தண்டு போன்ற காதும், வெண் முத்தம் - வெள்ளிய முத்துப்போன்ற பல்லும், தொண்டை - கொவ்வைக் கனிபோன்ற உதடும், பூகம் - கமுகுபோன்ற கழுத்தும், பசும் கழை - இள மூங்கில்போன்ற தோளும், தேனுமிழ் காந்தள் - தேனைச் சிந்துகின்ற காந்தட் பூப்போன்ற கையும், வெற்பு - மலை போன்ற தனமும், ஆலிலை - ஆலிலைபோன்ற வயிறும், நூல் - நூலிடை போன்ற இடையும், நாகம் - பாம்பின் படம்போன்ற அல்குலும், கதலி - வாழைத்தண்டுபோன்ற தொடையும், அலவன் - நண்டுபோன்ற முழங்காலும், வரால் - வரால் மீன்போன்ற கணைக்காலும், நல் நளினம் - அழகிய தாமரை போன்ற அடியும், உண்டு - உள்ளன, எ - று.

கிளிவிடு தூது

314. இளந்தத்தையேநல் லமுதத்தை யேபுரித் தென்கரத்தில்
வளர்ந்தத்தையாது முணர்ந்திலை யேமய லாகிமனம
தளர்ந்தத்தை யேயென் றிருவரங்கேசற்குச் சாற்றச்சொன்னல்
அளந்தத்தை யேயளந் தாப்பின்னையாது மளந்திலையே.

உரை :—இளந் தத்தையே - மடக்கிளியே!, நல் அமுததையே புரித்து என் கரதத்தில் வளார்ந்ததை - வளமான பாலுணவையே உண்டு என் கையில் வளர்க்கப்பெற்றதை, யாதும் உணர்ந்திலையே - கொஞ்சமும் நீ அறியவில்லையே, மயலாகி மனம் தளார்ந்தத்தையே - காதல் மயக்கங் கொண்டு உள்ளம் தளர்சியுற்றதை, என் திருவரங கேசர்க்குச சாற்றச சொன்னல் - என் காதலராகிய சீரங்கப் பெருமானுக்குத தெரிவிக்கும்படி எவினல், அளர்ந்ததையே அளந்தாய் - சொன்னதையே திருப்பித் திருப்பிச் சொல்லுகிறாய், பின்னை யாதும் அளந்திலையே - வேறொன்றையும் நன்றாகப் பேசித் தெரியவில்லையே, எ - று.

315. ஆயத்துறையிற் பிறந்துவந் தந்தணர் பால்குடித்து
மாயக்கண்வேசை யிடத்தே வளர்ந்துவண் ணஞ்ஞருநாள்
ஏயப்புலவ ரிடத்தெட்டு நாள்செட்டி யேனென்றுபின்
போயக்கசாலை புகுந்தனள் காணந்தப் பொய்ம்மகளே.

உரை:—அந்தப் பொய் மகளே - பொய் யென்கின்ற அந்த மாதானவள், ஆயத் துறையிற் பிறந்து - சூதாடுகளத்தி லவதரித்து, வந்து அந்தணர் பால் குடித்து - பார்ப்பாரிடத்திற் போய்ப் பாலைப்பருகி, மாயக்கண் வேசை யிடதே வளர்ந்து - தந்திரப் பார்வையுடைய விலைமகளி ரிடத்திலே வளர்சசி யடைந்து, வண்ணான் ஒருநாள் ஏய - வண்ணனிடத்தில் ஒருநாள் தங்கி, புலவ ரிடத்தே எட்டு நாள் - பாவலரிடதில் எட்டுநாளிருந்து, செட்டி ஏனென்று பின் போய - வியாபாரியை என்னுவென்று வினவிக்கொண்டு அவனைத் தொடர்ந்துபோய, அக்க சாலை புகுந்தனள்- தட்டார் பணி செய்யு மிடத்திற் சென்றுறைந்தனன், காண்-அசை, எ - று.

316. பூச்சிலைக் கன்னற்கைச் சேஷாசலேந்ரன் பொருப்பிடத்தே
காய்ச்சியபாலைக் குடிபோவென் றேனந்தக் காரிகையும்
பேச்சிலைத் துக்கள்ளி பின்கைகராமற்கு முன்சொன்னதா
வாய்ச்சுதென் றேநடந் தாள்பாலையான வனந்தனிலே.

உரை:—பூசிலைக் கன்னல் கை சேஷா சலேந்திரன் பொருப்பிடத்தே - கரும்பாகிய வில்லேபும் கை நிறைந்த பூவைபு முடைய மன்மதன்போன்ற சேஷா சலேந்திரனுடைய மலையிடததே, காய்சிய பாலை குடி போ என்றேன் - சுட வைத்த பாலைக குடிகும்படி போசச சொன்னேன், அந்தக் காரிகையும் - அந்தப் பெண்ணாகிய என் மகளும், பேச்சில் எத்துக் களளி - சொல்லுகின்ற சொல்லுக்குப் பொருள் வேறு கொண்டு ஏமாற்றுகின்ற திருட்டுக் குணமுடையவ ளாதலால், கைகை ராமற்கு முன் சொன்னதா வாசசு தென்று - கைகேசி இராமபிராணுக்குக் காட்டுக்குப் போகும்படி சொன்னதுபோலத தனக்கும் என் பேசசு பொருத்தமானதென்றெண்ணி, பாலையான வனந்தனிலே பின் நடந்தாள் - சுரநெறியிலே தலைவன் பின் சென்றாள், எ - று.

குறிப்பு:—பாலைக் குடிபோ வென்றதை தலைவனோடு பாலையிற்போய்க் குடி யிருக்கும்படி தாய் சொல்லியதாக மகள் கருதியது.

317. அணியார் கரிக்கை நறுந்தும்பை கங்கை யறுகுடனே
பணியார் சடாடவிக் கச்சாலேசாதர் பனிவரையில்
தணியாத மாமதப் பேய்பிடித் தாடுமித் தையலுக்கு
மணியாட்டி ஞல்விடுமோ சொல்லுவி ரிந்த மாநிலத்தே.

உரை :—அணியார் கடுக்கை நறுந்தும்பை யறுகுடனே - அழகான கொன்றைப்பூ வாசனையுள்ள தும்பைப்பூ கங்கை அறுகென்னு மிவற்றோடு, பணியார் - பாம்பும் சேர்ந்து தங்கும், சடாடவி - காடுபோன்ற சடையையுடைய, கசசாலை நாதர் பனி வரையில் - கச்சாலேசுவரருடைய குளிர்ந்த குன்றின்மேல், தணியாத மாமதப் பேய் பிடித்தாடும் இத் தையலுக்கு - தீராத பெரிய மோகப் பிசாசின் வசப்பட்டு வருந்தும் இப்பெண்ணுக்கு, மணியாட்டினுல் - அதர் தொங்கும் கழுத்தையுடைய ஆட்டுப் பலியினுல், வீடுமோ - அப்பேய் நீங்குமோ, இந்த மாநிலத்தே சொல்லுவீர் - இந்த உலகத்தில் உள்ளவர்களே சொல்லுவீர்களாக!, எ - று.

318. பாதாதிகேச முதலா யிவளைப் படைத்தமலர்
வேதாமருங்குல் வெளிவைப்ப னேவிரி பூதலத்துன்
ஆதாரமின்றி யிரண்டிளநீரைத் தரிற்குமோ
ஏதாகிலுஞ்சற்றங் கில்லா திராதிடை யேந்திழைக்கே.

உரை :—மலர் வேதா - தாமரைப் பூவிலிருக்கும் அயன், இவளைப் பாதாதி கேச முதலாய்ப் படைத்து - இவளுக்கு அடிமுதல் முடிவரையெல்லா வுறுப்புக்களையு முண்டாக்கி, மருங்குல் வெளி வைப்பனே - இடையை ஆகாசமாக ஒன்று மில்லாமல் வைத்து விடுவனே, விரி பூதலத்துள்-அகன்ற பூவுலகத்தின்கண், ஆதார மின்றி இரண்டு இளநீர் அந்தரம் நிற்குமோ - கீழே தாங்குவது யாது மில்லாமல் இரண்டு இளநீர் போன்ற தனங்கள் ஆகாசத்தில் நிலை பெறுமோ, ஏந்திழைக்கே - ஆபரண மணிந்த இப்பெண்ணுக்கு, இடை ஏதாகிலும் சற்று அவகில்லாது இராது - இடை பானது ஏதாவது ஒரு சிறிது அது இருக்கவேண்டிய விடத்தில் இருந்தே தீரும், எ - று.

319. குணமிருந்தாலுங் குலமிருந்தாலுங் கொழுந்தமிழின்
மணமிருந்தாலு மதியிருந்தாலும வழுத்திடுவங்
கணமிருந்தாலு மொர்காசும பெறுதலிங் காரவரைப்
பணமிருந்தாலவர்க் கெல்லாரு மஞ்சலி பண்ணுவரே.

உரை :—குண மிருந்தாலும் - நல்ல பண்பு ஒருவனிடத்திலிருந்தாலும், குல மிருந்தாலும் - உயர்ந்த குலத்திற் பிறந்திருந்தாலும், கொடுந்தமிழின் மண மிருந்தாலும் - வளமான தமிழ் வாசனையோடு கூடிய கல்வியிருந்தாலும், மதி யிருந்தாலும் - இயற்கை யறிவு இருந்தாலும், வழுதலிடுவகண மிருந்தாலும் - யாவரும் பாராட்டும் நட்புத் தனமை யிருந்தாலும், ஒரு காசும் பெறுதி - அவைகள் சமயதத்தில் ஒரு காசு அளவுகூட மதிப்புத்தர மாட்டாது, சிவகாச அரைப்பண மிருந்தால் - பார்ப்பதற்கு அழகாகிய அரைப்பணக் காசு மாத்திரம் ஒருவனிடமிருந்தால், எல்லாரும் அஞ்சலி பண்ணுவர் - அக் காசுடையவர்களே யெல்லாரும் வணங்குவர், எ - று.

குறிப்பு :—அரைப்பணம் என்பதற்கு அரையிடத்துள்ள பாம்புப் படம் போன்ற அல்குலென்று பொருள்கொண்டு, அதனையுடைய மாதரை யெல்லாரும் மதிப்பா என்று பொருள் கூறுவாரு முளர்.

320. உரகத்தி லேகிடப் பான்சக்ரபாணி யுயர்ந்தகும்பக்
கரகத்தி லேகிடப் பான்குறு மாமுனி கன்னியர்கள்
விரகத்தி லேகிடப் பான்காம ராசன் மிகுந்தவெழு
நரகத்தி லேகிடப் பான்கொழு மூர்முத்து நாகப்பனே.

உரை :—சக்ரபாணி உரகத்திலே கிடப்பான் - சக்கராயுதத்தைக் கையிலேந்திய திருமால் பாம்பணையின்மேற் பள்ளிகொள்ளுவார், குறுமாமுனி யுயர்ந்த கும்பக் கரகத்திலே கிடப்பான் - அகத்தியர் உயர்ந்த குடமபோன்ற கலசம் அல்லது கமண்டலத்திற்கருகே பள்ளிகொள்ளுவார், காமராசன் கன்னியர்கள் விரகத்திலே கிடப்பான் - மன்மத மன்னன் சிறு பெண்களுடைய மயலிலே தோய்வான், கொழுமூர் முத்து நாகப்பன் மிகுந்த ஏழு நரகத்திலே கிடப்பான் - கொழுமூரிலுள்ள முத்து நாகப்பனென்பவன் கொடுமையான ஏழு நரகவகளிலுங் கிடந்து வருந்துவான், எ - று.

321. சேய்க்கறியுண்ட சிவன்மேலன் பற்றவன் சீசியவன்
வாய்க்கறியாத விடக்கா னதுமில்லை மாக்கறியும்
காய்க்கறி யென்பதுவும்வேண்டான்சம்பாரங் கனக்கவிட்ட
நாய்க்கறி யும்புசிப் பான்கொழு மூர்முத்து நாகப்பனே.

உரை :—கொழுமூர் முத்து நாகப்பன் - கொழுமூரிலுள்ள முத்து நாகப்பனென்பவன், சேய்க்கறியுண்ட சிவன்மேல் அன்பற்றவன் - பிள்ளைக்கறி யருந்திய சிவபெருமானிடத்தே பக்தியில்லாதவன், சீசி அவன் வாய்க்கறியாத விடக்கானதுமில்லை - அருவருக்கத்தக்க அவனுடைய நாவினால் சுவை பார்க்கப்படாத ஊன் யாதுமில்லை, மாக்கறியும் காயக்கறி யென்பதும் வேண்டான் - மாவினால் செய்த பண்டங்களும் காய்களினால் சமைத்த தின்னு யுணவுகளும் அவன் விரும்புவதில்லை, சம்பாரங் கனக்க விட்ட நாய்க்கறியும் புசிப்பான் - மசாலை மிகுதியாகக் கலந்த நாயின் மாமிசத்தையும் அவன் உட்கொள்ளுவான், எ - று.

322. தருணிகரான கரன்செல்வ நாளுந் தழைக்கும் புல்லூர்ப்
பெருவயனடு தனிலெஹைப் போலொர் பிடாரன்வந்தே
ஒருகுடங் கொண்டொரு பாம்பாட் டினனிவ் வுலகினுள்ளே
இருகுடங்கொண்டரைப்பாம்பாட்டுவதென்னவேத்திழையே

உரை :—வேத்திழையே - நகையணிந்த மாதே!, தருணிகரான கரன் - கற்பகத் தருப்போன்ற வண்மையுள்ள கரனென்பவனுடைய, செல்வம் நாளும் தழைக்கும் - ஐசுவரியம் ஒவ்வொரு நாளும் ஓங்கி வளர்கின்ற,

புல்லூர்ப் பெருவயல் நாடுதனில் - புல்லூரைச சார்ந்த பெரிய வயல்களை யுடைய நாட்டுப்புறத்தில், என்னைப்போல ஒரு பிடாரன் வந்து - என்னைப் போல ஓர் பாம்பாட்டி போய் ஒரு குடம் கொண்டு ஒரு பாம்பு ஆட்டினன் - ஒரு குடத்தை வைத்துகொண்டு அதிலுள்ள பாம்பை வினையாடச செயு தான், இவ்வுலகிலுள்ளோர் இரு குடம் கொண்டு அரைப் பாம்பு ஆட்டுவது என்ன - இந்தப் பூமியின்கண் இரண்டு குடத்தை வைத்துக்கொண்டு அரைப் பாம்பை யாட்டுவது என்ன? (அதாவது குடம்போன்ற இரண்டு தனங்களை வைதத்துக்கொண்டு அரைப் பக்கதிலுள்ள பாம்புபோன்ற அல்குலை நீ அசைப்பது) என்ன அதிசயம், எ - று.

323. தேனுட்டு முல்லைத் தொடைரகுநாதன் செழித்தகழல்
பூநாட்டு மனனர் தொழாம லிராமணிப் பூணணிந்த
வானுட்ட ரமஸபயர் மண்ணுட்டரசர் மணததினுக்குங்
காணுட்டு வரிவன் கைநாட்டும் வேலினைக் கண்டுகொண்டே.

உரை:—தேனுட்டு முல்லைத் தொடை ரகுநாதன் - தேன் நிலையாகத தங்கிய முல்லைப் பூமாலையைத் தரித்த ரகுநாத மன்னனது, செழித்த கழல் - மிகுதியான வீரத்தை, பூ நாட்டு மன்னர் தொழாமல் இரார் - உலகத்திலுள்ள பல தேசத்து வேந்தர்கள் போற்றுதிருக்க மாட்டார்கள், இவன் கை நாட்டும் வேலினைக் கண்டு கொண்டே - இவன் பகைவரை வெல்லுதற்குக் கையில் நிலையாகத தரிக்கின்ற வேலாயுதத்தைப் பாரதது, வான் நாட்டு அரம்பையர் - தெய்வலோக மாதர்கள், மண்ணுட்டு அரசர் மணததினுக்குங் கால நாட்டுவர் - பூவுலக மன்னர் அவன் வேலினைவிறந்து வீரசுவர்கமம் வருங்கால் அவர்களை மணந்து கொள்வதற்குத் தொடக்கமாக மணத் தூண் நிறுத்தவர், எ - று.

324. ஞாயிறு போய்விழத் திங்கள்வந் தெய்திட நண்ணியசெவ்
வாயனல் தூவப் புதனமபு காயநல் வியாழம்வர
மேயிரு வெள்ளிக் கலிசோர நானுன்னை மேவுதற்குத்
தாய்சனி யாயின ரேரகுநாத தளசிங்கமே.

உரை:—ரகுநாத தளசிங்கமே - ரகுநாத னென்னும் பெயருடைய சிங்கம்போன்ற சேனைத தலைவனே!, ஞாயிறு போய விழ - சூரியன் அஸ்த மிக்கவும், திங்கள் வந்து எய்திட - சந்திரனுதயமாய், நண்ணிய செவவாய் அனல் தூவ - நெருங்கிய செவவாயானது நெருப்பைச் சிதற அல்லது நெருங்கிச சிவப்பு நிறமுடைய நெருப்பைத் திங்கள் தூவ, புதன் அம்பு காய - அதனையறிந்த மன்மதன் வெப்பமுண்டாக்கவும், நல் வியாழன் வர - நல்ல வியாழ நோக்கேற்பட அல்லது நல்ல பொன் வந்து சேர, மேயிரு வெள்ளிக் கலிசோர - வீரும்பத்தக்க பெரிய வெள்ளிய சேலை நழுவவும்,

நான் உன்னை மேவுதற்கே - நான் உன்னோடு புணர்வதற்கு, தாய் சனியாயினளே - தாய் சனியன்போல இடைஞ்சல் செய்பவளானாள், எ-று.

325. ஆடியநாகஞ் சரோருகம் பாணுநல் லம்புலியும்
சூடியநாதர் நயனமு மாலம்புஞ் சொற்பனுவல்
பாடியபாலணு மாய்வந்த தால்வெண் பணிலவயல்
கோடிய கோன்சிவந் தான்றிருமார்பிற் குளிர்தொங்கலே.

உரை :—வெண் பணில வயல் கோடிய கோன் - வெள்ளைச் சங்குகள் வயல்களிலே வளைந்து செல்லப்பெற்ற நிலத்திற்பதியாகிய, சிவந்தான் திருமார்பில் குளிர் தொங்கலே - சிவந்தானென்ற பிரபுவின் அழகிய மார்பில் தரித்த தண்ணிய மாலையானது, ஆடிய நாகம் சரோருகம் பாணு நல்லம்புலியும் சூடிய நாதர் நயனமும் - ஆடிய பாம்பையும் தாமரைப் பூவையும் திருமார்பினமேலும் சூரியனையும் அழகிய சந்திரனையும் திருக் கண்களாகவும் அணிந்தடைய மன்மதனை யெரித்த சிவனது கண் போலவும், மால் அம்பும் - சேதுபந்தனத்தில் கடலை யடைத்த இராமபிரானது அம்புபோலவும், சொற்பனுவல் பாடிய பாலணுமாய் - சிறந்த அருட்பதிகங்களை எழும்பைப் பெண்ணுக்கும் பொருட்டுப் பாடிய திருஞானசம்பந்தர் போலவும், வந்தது - கிடைக்கப்பெற்றது, ஆல் - அசை, எ - று.

326. முருகார் முளரியு முள்ளியு முண்டக மூரியரம்
பொருகா நிரும்புங் கனகமும் பொன்பொரித் தாரகையும்
குருகாருங் கெண்டையு மீனெனல் போலெண் குரிசிலுக்கு
வருகாத லேதந்த மங்கையுநாணு மடந்தையரே.

உரை :—முருகார் முளரியு முள்ளியு முண்டக மெனல்போல் - வாசனை நிறைந்த தாமரையும் முள்ளிப் பூவும் முண்டகமென்று சொல்லப்படுதல் போலவும், மூரி யரம் பொருகார் இரும்பும் கனகமும் பொன எனல்போல் - வலிமையான அரத்தினால் தேய்க்கப்படுகின்ற கருநிறமான இரும்பும் தங்கமும் பொன்னென்று பேசப்படுதல் போலவும், பொரித்த தாரகையும் குருகாருங் கெண்டையும் மீனெனல் போல் - ஒளிப்புள்ளியாகத் தோன்றும் நட்சத்திரங்களும் நாரையைத் தின்னும் கெண்டைமீனும் மீனென்ற பெயாபெற்றதுபோலும், என்குரிசலுக்கு வருகாதலே தந்த மடமையும் நாணும் - என்கணவனுக்குப் புதிய மோகத்தை விளைவித்த பரத்தையும் அவன மனைவியாகிய நாணும், மடந்தையரே - ஒரு தனமையான பெண்களாவோம், எ - று.

இரப்பா ரியல்பு

327. எண்சாணுக மிடியனுக்கிங் கிரத்தலினிலேழ் நடையாரும்
கண்காணுமூன் கூந்தாகுங் காணினன்காங் கையேந்தில்
தண்காரிதியேயெனவோதிற்றவர்போன்மூன்றுமிரண்டாகும்
நண்பாவித லிலையென்றுன் மன்பாலாம்பொன் பாலுபிரே.

உரை :—இங்கு - இப்பூமியில், மிடியனுக்கு - வறியனுக்கு, எண் சாண் ஆகம் - எட்டுச் சாண் உயரமுள்ள தேகமானது, இரத்தல் எனில் ஏழ் - பிச்சை யேற்பதைக் கருதிய மாத்திரத்தில் ஏழு சாணுகக் குறுகும், நடை ஆறும் - பிசைசைக்குச் செல்வதால் அது ஆறு சாணுகும், கண் காணுமூன் ஐந்தாகும் - ஈபவனை நேரிற் பார்ப்பதற்கு முன் அது ஐந்து சாணுகும், காணில நான்கும் - அவனைப் பார்த்தால் நான்கு சாணளவிற் குறுகும், கையேந்தில் தவர்போல் மூன்றும் - கையை நீட்டினல் தவவேடம் பூண்ட வாமனன்போன்ற மூன்று சாணுயரமாகும், தண் கார் நிதியே என ஓதில் - குளிர்ந்த மேகம்போன்ற செல்வனே யென்று புகழுங்கால், இரண்டாகும் - இரண்டு சாணுயரமாகும், நண்பா ஈதல் இலை என்றல-பிரியமாயப் பரிசளிப் பது ஒன்றுமில்லை யெனறல், பொன் பால் உயிர் - பொன்னினமே லாசை வைத்த அவனுயிரானது, நமன் பாலாம் - காலன் கைப்படும், எ - று.

வாழ்வு நிலையாமையின் அறத்தை விரைந்து செய்க வென்பது

328. இன்றருணே தயங்கண்டோ முயர்ககன
முகட்டின்மிசை யிந்தப் பானு
சென்றடைய நாங்காண்ப தையமதைக்
காண்கினுமேற் றிசையி ருக்குங்
குன்றடையு மளவுநா முயிர்வாழ்வ
தரிததன்மூன் குறுகுங் கூற்றம்
என்றச்சத் துடன்மனமே மறவாம
லறவழியி லேகுவாயே.

உரை :—மனமே - உள்ளமே !, இன்று அருண உதயம் கண்டோம் - இப்போது சூரிய னுதித்ததை நாம் பார்த்தோம், உயர் ககன முகட்டின் மிசை இந்தப் பானு சென்றடைய நாம் காண்பது ஐயம் - உயர்ந்த வானத் தின் உசிமீது இந்தச சூரியன் வருவதை நாம் பார்ப்பது சந்தேகம், அதைக் காணினும் - சூரியன் உசியில் வருவதைப் பார்க்கக் கிடைத்தா லும், மேற்றிசையிருகும் குன்றடையும் அளவும் நாம் உயிர் வாழ்வது அரிது - மேலைத் திகினுள்ள அத்தமன கிரியை யது சேரும்வரை நாம் பிழைத்திருப்பது கடினமாகும், அதன் மூன் குறுகும் கூற்றம் - அங்ஙனத் திற்கு முன்னே நம்பால் எமன் வரக் கூடும், என்று அச்சத்துடன் மறவா

மல் அறவழியில் ஏகுவாயே - என்று நினைத்து இலேயாமையை அஞ்சி மறுத்
தில்லாமல் தருமநெறியில் நடப்பாயாக !, எ - று.

விருந்தோம்பு முறை

329. விருந்தின னாக வொருவன்வந் தெதிரின்
வியத்தனன் மொழியினி துரைத்தல்
திருந்துற நோக்கல் வருகென வுரைத்த
லெழுதல்முன் மகிழ்வன செப்பல்
பொருந்துமற் றவன்றனருகுற விருத்தல்
போமெனிற் பின்செல்வ தாதல்
பரிந்துநன் முகமன் வழங்கலிவ் வொன்பா
னெழுக்கமும் வழிபடும் பண்பே.

உரை:—விருந்தினனாக ஒருவன் வந்தெதிரின் - ஒருவர் புதிய அதிதி யாக எதிர்ப்பட்டால், வியத்தல் - அவரைக் கண்டதுபற்றிப் புது மகிழ்ச்சி காட்டுதல், நன்மொழி இனிதுரைத்தல் - உபசார சொற்களே மென்மை யாகப் பேசுதல், திருந்துற நோக்கல் நல்ல விருப்பத்தோடு பார்த்தல், வருகென வுரைத்தல் - (வீட்டிற்கு வந்தால்) வாருங்களென்று வரவேற் றல், எழுதல் - இருக்கையிலிருந்தால் எழுந்து வரவேற்றல், முன் மகிழ் வன செப்பல் - மகிழ்ச்சி விளக்கத்தக்கனவற்றைக் கூறுதல், பொருந்து மற்று அவன்றன் அருகுற விருத்தல் - விருந்தாளிக்குத் தகுந்த முறையி லிருக்கவேண்டிய நெருக்கத்தி லிருத்தல், போமெனிற் பின் செல்வதா தல் - விருந்தாளி செல்லக் கருதினால் அவர் பின்னே சிறிது தூரம் செல்லு தல், பரிந்து நன்முகமன் வழங்கல் - பிரியமாய் உபசார வார்த்தை சொலலி வெற்றிலே பாக்கு சிற்றுண்டி முதலியன கொடுத்தல், இவ வொன்பான் ஒழுக்கமும் வழிபடும் பண்பே - ஆகிய இவ்வொன்பது வகைச செயல்களும் விருந்தினரைப் போற்றும் நன்முறை யாகும், எ - று.

பொருளாசைப் பல தீமைகளே விளைவிக்கு மென்பது

330. எவரை யும்மனந் திரிப்பது மீன்றவர் தமக்குத்
தவறி ழைத்திடப் புரிவதுந் தையலார் தங்கள்
கவறில் கற்பினை யொழிப்பதுங் கற்குநூல் கலைகள்
அவையெ லாங்கெடக் கெடுப்பதும பொருள்விருப் பன்றே.

உரை:—எவரையும் மனம் திரிப்பதும் - எத்தன்மையருடைய வுள் ளத்தையும் நல்லியற்கைக்கு மாறுசெய்வதும், ஈன்றவர் தமக்குத் தவ றிழைத்திடப் புரிவதும் - பெற்றோர்களுக்குக் கெடுதி செய்யும்படி தூண்டு வதும், தையலார் தங்கள் கவறில் கற்பினை யொழிப்பதும் - பெண்களு

டைய பிளவுபடாத சற்பு நிலையை மாற்றுவதும், சற்கு நூல்களே அவை யெலாம் கெடக் கெடுப்பதும் - படிக்கின்ற இலக்கியங்களுக்குச் சபைகளி லெங்கும் தவறுகப் பொருள் கூறிக் கெடுப்பதும், பொருள் விருப்பு - பொரு ளிடத்திற் கொண்ட பேராசையே ஆகும் அன்றே - அசை, எ - று.

சந்ததியற்ற இல்வாழ்க்கை பயனற்றது

331. உந்து நீர்க்கட லுடுத்தபார் முழுவது மொருங்கே
வந்து தாடொழு மரசியல் வளமெலாம் பெறினும்
இந்தி ராதிபர் பெரும்பதத் திருக்கையெய் திடினும்
மைந்த ரின்றியே வாழ்வது வாழ்வுமற் றன்றே.

உரை:—உந்து நீர்க்கடலுடுத்த பார் முழுவதும் - அலைகள் வீசுகின்ற சமுத்திரத்தை யுடையாகக் கொண்ட பூமியிலுள்ள மனித ரெல்லாரும் ஒருங்கே வந்து தாள் தொழும் - ஏகமனதாய் நெருங்கித் தனது அடிகளைக் கும்பிடக்கூடிய, அரசியல் வளமெலாம் பெறினும் - இராஜபதவியின் செழிப்பெல்லாம் ஒருவன் பெற்றாலும், இந்திராதிபர் பெரும்பதவி இருக்கை எய்திடினும் - இந்திரன் முதலிய தெய்வத் தலைவர்களுடைய உயர்ந்த பதவிகளில் போய் இருக்கும் பேற்றினைப் பெற்றாலும், மைந்தர் இன்றியே வாழ்வது வாழ்வு மற்றன்றே - பிள்ளைகளின்றி வாழ்கின்ற வாழ்க்கை இனிமையான வாழ்க்கையாகாது, எ - று.

வியபிசாரியின் செய்கை பூனையின் செய்கை

332. ஒருவரு மறிகிலா ரெனவோ ரொண்ணுதல்
கரவினிற் குமரரைக் கலத்தல் பூசைதன்
இருவிழி மூடிமற் றெவர்கள் பார்வையும்
தெரிகிலா தெனப்பயன் றிருட லொக்குமே.

உரை:—ஓர் ஒண்ணுதல் - ஒளியுடைய நெற்றியுடைய ஒரு பெண்ணு னவள், ஒருவரு மறிகிலாரென - தன் செய்கை யுலகத்தில் பிற ஒருவருக் கும் தெரியாதென்று எண்ணிக்கொண்டு, கரவினில் குமரரைக் கலத்தல் - ஒளிப்பாக இளைஞரோடு புணர்தல், பூசை தன் இருவிழி மூடி - பூனை யானது தனது இரண்டு கண்ணையும் மூடிக்கொண்டு, மற்று எவர்கள் பார் வையும் தெரிகிலாது என - தனக்கு உலகம் இருட்டாய் இருப்பதுபோலப் பிற யாருக்கும் கண் தெரியாதென்று எண்ணிக்கொண்டு, பயன் திருடல் ஒக்குமே - பாலைக் கள்ளத்தனமாய்க் குடிப்பது போலாகும், எ - று.

பெரியோர் எத்தொழிலைச் செய்யினும் கடவுளையே
நினைத்துக்கொண்டிருப்பர்

333. சோரமனை யாட்டிமிகச் சோரபிரான் மேன்மனதாச்
சேரத் தொழில்செய்யுந் திட்டம்போல்—பேர்பெரியர்
அத்தனடி மேன்மனத்தை யானது வைத்துகந்தே
எத்தொழிலுஞ் செய்வ ரிசைந்து.

உரை :—சோர மனையாட்டி மிகச சோர பிரான் மேல்மனதாய் - வியபிசாரஞ் செய்யும் கள்ளத் தனமையுடைய ஒருவன் மனைவி உண்மை நாயகனைப் பாக்கிலும் கள்ளப் புருடன்மீது தன் உள்ளம் அதிகமாய்த் தாவும்படி, சேரத தொழில் செய்யும் திட்டம்போல் - அவனைத தான் போய அடைவதற்கு வேலைகளைச செய்யும் உறுதியைப்போல, பேர் பெரியா - மிக வுயர்ந்த பெரியோர்கள், அத்தன் அடிமேல் மனத்தே ஆனது வைத்து உவந்தே - கடவுளுடைய திருப்பாதத்தை தங்கள் நெஞ்சில் நீங்காமல் வைத்து மகிழ்ந்து கொண்டே, இசைந்து எத்தொழிலும் செய்வர் - அவன் கருணைக்குப் பொருத்தமாகவே இசைந்து எந்தத் தொழிலையும் நிகழ்த்துவர், எ - று.

உழுதொழிலின் சிறப்பு

331. அலகில்லா மறைவிளங்கு மந்தணர்சா ஞ்சிவிளங்கும்
பலகலையாம் தொகைவிளங்கும பாவலர்தம பாவிளங்கும
மலர்குலாம் திருவிளங்கு மழைவிளங்கு மனுவிளங்கும
உலகெலா மொளிவிளங்கு முழவருழு முழவாலே.

உரை :—உலகெலாம் ஒளி விளகும் உழவர் உழும் உழவாலே - உலகத்திலுள்ளார் எல்லாரும் புகழும்படியாக உழவர்கள் செய்யும் உழவு தொழிலினாலே, அலகில்லா மறை விளங்கும் - எல்லையற்ற நுட்பமான சமயநூல்கள் பிரகாசததை யடையும், அந்தணர் ஆவுதி விளங்கும் - பிராமணர் செய்கின்ற (குற்றமற்ற) வேள்விகள் நடைபெறும், பலகலையாம் தொகை விளங்கும் - பல நூல்களின் பயிற்சி யினைத்தும் விளக்க மடையும், பாவலர்கள் பா விளங்கும் - புலவர்களுடைய பாடல்கள் சிறப்பாகப் பாடப்பெறும், மலர் குலாம் திரு விளங்கும் - தாமரைப் பூவில் வதியும் இலக்குமியின் கடாட்சம் எங்கும் ஏற்படும், மழை விளங்கும் - மேகங்கள் நன்கு மழை பெய்யும், மனுவிளங்கும் - அரசனது நீதிமுறை தழைத்தோங்கும், எ - று.

திரவியத்தை நல்வழியிற் செலவிடாவிடின் அது விருத்தியாகாது

335. *திரவியம் வந்தபோது சேர்ந்தபல் லோர்க்கு மீந்தால்*
வரவர வளரு மந்த வகைசெயா விடிற்கெட் டேகும்
ஒருகலிங் கினைவிட் டக்கா லோதநீர் போக்குப் போகப்
பெருகுறு மேரி யில்லா விடினடு வணையப் போக்கும்.

உரை :—திரவியம் வந்தபோது சேர்ந்த பல்லோர்க்கும் ஈந்தால் - செல்வங் கிடைத்தபோது அதனைத் தன்பால் வந்தடைந்த உறவினர்க்கும் இரவலர்க்கும் நன்கு கொடுத்தால், வரவர வளரும் - அது நாளுக்கு நாள் விருத்தியடையும், அந்த வகை செய்யாவிடில் கெட்டேகும் - அந்த முறையாக அதனை வழங்காமற் போனால் அது அழிந்தொழியும் (அது எப்படி எனில்), ஒரு கலிங்கினை விட்டக்கால் - ஒரு ஏரியின் மதகுகளில் ஒன்றைத் திறந்துவிட்டால், ஓதநீர் போக்குப் போக - பெரிய வெள்ளமானது தன் போக்கிலே செல்ல, பெருகுறும் ஏரி - பெரிய குளமானது பெருகிக் கொண்டிருக்கும், இல்லாவிடின் - போக்கு இல்லாவிட்டால் நடு அணையைப் போக்கும் - அதன் மத்தியிலுள்ள கரையை உடைத்து ஏரியில் நீரில்லாமற் போகும், எ - று.

இன்ன காரியங்களால் வியாதி தோன்றுமெனல்

336. *தன்னைத்தான் பேணு தாலுஞ் சரீரத்தின் தண்டிப்பாலும்*
பின்னுற்ற விசாரத் தாலும் பின்சல மலத்தி னாலும்
அன்னத்தை யொறுப்ப தாலு மரையுடன் முழுகு வாலும்
தன்மத்தை யிகழ்வ தாலுஞ் சரீரத்தில் வியாதி தோன்றும்.

உரை :—தன்னைத்தான் பேணுதாலும் - ஒருவன் தன்னுடைய உடம்பைத தக்க உணவு முதலியவைகளால் காப்பாற்றிவிட்டாலும், சரீரத்தின் தண்டிப்பாலும் - உடம்பை மிகுந்த வேலை முதலியவற்றால் துன்புறுத்துவதனாலும், பின்னுற்ற விசாரத்தாலும் - அறிவு நன்றாக வுதித்த பின்னேற்பட்ட கவலையினாலும், பின் சல மலத்தினாலும் - மல சலங்கள் சரியாகக் கழியாமல் உடம்பிற் றங்குவதினாலும், அன்னத்தை ஒறுப்பதாலும் - உணவை வெறுத்துத் தள்ளுவதினாலும், அரை உடல் முழுகலாலும் - பாதி புடம்பை மாத்திரம் நனைத்து முழுகுவதாலும், தன்மத்தை இகழ்வதாலும் - அறச செய்கையை அவமதிப்பதாலும், சரீரத்தில் வியாதி தோன்றும் - உடம்பிலே நோயுண்டாகும், எ - று.

பகைக்கத் தகாதவர்கள்

337. மன்னவன் கணக்கன் பார்ப்பான் வலுவுள்ளோன் மந்திரவாதி
பொன்னுள வன்கு ருக்கள் புலவன்பண் டிதனமைச்சன்
அன்னஞ்செய் திடுவோ னெங்கு மடங்காத துட்ட னுமிப்
பன்னிரு பேரோ டென்றும் பகைகன விலுங்கூ டாதே.

உரை:—மன்னவன் - வேந்தன், கணக்கன் - ஊர்க்கணக்கன், பார்ப்பான் - முனிவனுயிருப்பவன், வலுவுள்ளவன் - திறமையுள்ளவன், மந்திரவாதி - மந்திர நூலுணர்ந்தவன், பொன்னுளவன் - செல்வவான், குருக்கள் - ஆசாரியன், புலவன் - கற்றவன், பண்டிதன் - மருத்துவன், அமைசசின் - மந்திரி, அன்னஞ் செய்திடுவோன் - பரிசாரகன் அல்லது சமையற்காரன், எங்கும் அடங்காத துட்டன் - யாவரும் அடக்க முடியாத குறும்புகாரன், ஆம் இப் பன்னிரு பேரோடு என்றும் பகை கனவிலும் கூடாது - என்ற இந்தப் பன்னிரண்டு பேர்களோடும் சொப்பனத்திலுங் கூட விரோதங் கூடாது, எ - று.

பொருட்பற்றின் இழிவு

338. என்பொருளென் பொருளென்று சீவன்விடு மனமேயொன்
றியம்பக் கேளாய்
உன்பொருளா னுலதன்மே லுன்னமம் வரைந்துளதோ
வுன்ற னோடும்
முன்பிறந்து வளர்ந்ததுகொ லினியுனைவிட் டகலாதோ
முதிர்ந்த நீதான்
பின்பிறக்கும் போததுவுங் கூடவிறந் திடுங்கொல்லோ
பேசு வாயே.

உரை:—என் பொருள் என் பொருள் என்று சீவன் விடும் மனமே - என்னுடையது என்னுடையதென்று செல்வத்தில் மிகுந்த பற்று வைத்து உயிரைப் போக்குகின்ற நெஞ்சமே!, ஒன்று இயம்பக் கேளாய் - நான் சொல்லுகின்ற ஒரு காரியத்தை நீ கேட்பாயாக!, உன் பொருளானுல் அதன்மேல் உன் நாமம் வரைந்துளதோ - உனக்குரிய சொத்தானுல் உன் பெயர் அதன்மேல் இயற்கையாக எழுதப்பட்டுளதோ?, உன்றனோடு முன் பிறந்து வளர்ந்தது கொல் - உனக்குச் சகோதரன்போல முன்னே பிறந்து வளர்ந்ததோ?, இனியுனை விட்டகலாதோ - இனிமேல் உன்னை விட்டு இந்த வாழ்க்கையில் நீங்காதிருக்குமா?, முதிர்ந்து நீதான் பின்பு இறக்கும் போது அதுவும் கூட இறந்திடுங் கொல்லோ - வயோதிகம் அடைந்து சாகும்போது அது உன்னோடு சாகுமா?, பேசுவாயே - இவற்றிற்குப் பதில் கூறுவாயாக!, எ - று.

வியபிசாரத்தின் கேடுகள்

339. மற்றொரு வனைச்சேர் மாதிறந் தாலும்
வனசகிற்கு முலகமுள் ளளவும
சுற்றமும வாழ்வுந் துணையுமே நீங்குஞ்
சோரநா யகனுமே மதியான்
பெற்றசந் ததியு மிழிவுறு மாண்ட
பின்னுறுங் கொடுவெறி நரகம்
சற்றுமே ரங்கொள் சுகத்தினல் விளையுந்
தன்மையீ தரிவையீ ருணர்வீர்.

உரை:—மற்றொருவனைச சேர்மாது இறந்தாலும் - தன் நாயகனன்றிப்பிற நாயகனைச சோகின்ற பெண் செத்தாலும், உலகம் உள்ளளவும் வசை நிற்கும் - உலகமுள்ள காலமெல்லாம் அவளுடைய அபகீர்த்தி நிலை பெறும், சுற்றமும் வாழ்வும துணையுமே நீங்கும் - உறவினரும் சிநேகிதரும் நீங்குவதால் மனதிற்குத் திருப்தியான வாழ்க்கை தொலைந்துபோம், சோர நாயகனுமே மதியான - கள்ளப்புருடன் கூட அவளை நன்கு மதிக்கமாட்டான், பெற்ற சந்ததியும் இழிவுறும் - பெற்ற பிள்ளைக்கும் தாழ்வான பெயரேற்படும், மாண்டபின் கொடுவெறி நரகம் உறும் - இறந்த பின்னும் கொடிய அஞ்சத்தக்க நரகதனப முண்டாகும், சற்றுநேரங் கொள் சுகத தினல் விளையும் தன்மை இது-சிறிது பொழுது அனுபவிக்கின்ற இன்பத்தினல் அடையும் பயன் இவ்வியல்பாகும், அரிவையீர் உணர்வீர் - பெண்களே இதனை அறியக் கடவீர்களாக!, எ - று.

எல்லார்க்கும் கவலை ஒரு தன்மைத்தே பென்பது

340. பாலுக்குச் சர்க்கரை யில்லையென் பார்க்கும் பருக்கையற்ற
கூழுக்குப் போடவுப் பில்லையென் பார்க்குமுட் குதிதித்தைத்த
காலுக்குத் தோற்செருப் பில்லையென் பார்க்குங் கனகதண்டி
மேலுக்குப் பஞ்சணை யில்லையென் பார்க்கும் விசனமொன்றே.

உரை:—பாலுககுச சர்க்கரை இல்லை யென்பார்க்கும் - பாலுணவு கொள்ளும் செல்வர்களுள் அதற்கு இனிமையை மிகுதிப் படுத்தக்கூடிய சர்க்கரை கிடையாது என்று வருந்துகிறவர்களுக்கும், பருக்கையற்ற கூழுக்குப் போட உப்பு இல்லை என்பார்க்கும்-சோற்று அவித்தமில்லாமல் அரிசி வெந்து கரைந்துபோன கஞ்சிக்குச் சேர்த்துக் கொள்வதற்கு உப்பில்லை என்று வருந்துகின்றவர்களுக்கும், முள் குத்தித் தைத்த காலுக்குத் தோல் செருப்பில்லை என்பார்க்கும் - காலில் முள் அழுந்தி வருந்துகின்ற பாதத்தில் போடுவதற்கு தோலினலாகிய மிதியடி கிடையாமல் வருந்துகின்றவர்களுக்கும், கனகதண்டி மேலுக்குப் பஞ்சணை யில்லை என்பார்க்

கும் - பொன் கட்டில்மேலே போடுவதற்குப் பஞ்சு மெத்தை கிடையாது வருந்தின்றவர்களுக்கும், வீசனம் ஒன்றே - கவலை யொரு தன்மைத்தா யிருப்பது, எ - று.

புத்திரர்க்குக் கல்வி புகட்டாமையால் வரும் தீங்கு

341. மாலினு லிருவரு மருவி மாசிலாப்
பாலனைப் பயந்தபின் படிப்பி யாதுயர்
தாலமேற் செல்வமா வளர்த்தல் தங்கட்கோர்
காலனை வளர்க்கின்ற காட்சி போலுமால்.

உரை:—மாலினால் இருவரும் மருவி - காம மயக்கத்தினால் ஒரு ஆணும் ஒரு பெண்ணும் கூடி, மாசிலாப் பாலனைப் பயந்தபின் - குற்றமற்ற குமார னைப் பெற்ற பிற்பாடு, படிப்பியாது உயர் தாலமேல் செல்வமா வளர்த்தல் - அக் குமாரனுக்குக் கல்வி கற்பியாது பயன்பெறக்கூடிய உயர்ந்த வுலகத் தில் தாட்சண்யமாகப் பிள்ளையை அவன் மனம்போனபடி போகவிட்டு வளர்ப்பது, தங்கட்கு ஓர் காலனை வளர்க்கின்ற காட்சிபோலும் - தங்களுக்கு அவமானத்தையும் துன்பத்தையும் தருகின்ற எமன்போன்ற ஒருவனைப் பேணுகின்ற தோற்றத்தை யுடையதாகும், எ - று.

சார்ந்தவர்கள் சத்துருக்களா யிருத்தல்

342. கடன்படு பிதாவு மென்றுங் கற்பினிற் றவறித் தீங்கிற்
குடன்படு மன்னை தானு மூபகர்ந்திடு மழகு தானே
அடர்ந்திடும பாரி வித்தை யறிந்துகல் லாத பிள்ளை
தடங்கட லுலகுள் ளோர்க்குச் சார்ந்தசத் துருக்க ளன்றே.

உரை :—கடன்படு பிதாவும் - கடன் மிகுதியாக வாங்கித் துன்பப்படு கின்ற தகப்பனாரும், என்றும் கற்பினில் தவறித் தீங்கிற்கு உடன்படும் அன்னை தானும் - எப்போதும் மகள் கற்புநிலை தவறிச செயலும் ஒழுக்கக் கேட்டிற்கு ஒத்திருக்கின்றதாயும், உயர்ந்திடும் அழகுதானே அடாதகிடும் பாரி - பிறர் உள்ளத்தைக் கவரத்தக்க மிகுந்த அழகுடைய மனைவியும், வித்தை யறிந்து கல்லாத பிள்ளை - கல்வியைச சரியாக ஆராய்ந்து படியாத மக்களும், தடங்கடலுலகுள்ளோர்க்கு - அகன்ற சமுதாயஞ் சூழ்ந்த வுல கத்திலுள்ள மனிதர்களுக்கு சார்ந்த சத்துருக்களன்றே - குடும்பத்தி லேற் படும் பகைவர்களாகும், எ - று.

மனிதப் பிறவியில் வரும் இன்பமும் இடைஞ்சல்களும்

343. அடுகரி தொடர வீழ லைவந்தலை நாகங் காண
விடிகிணற் றறுகின் வேரைப் பற்றிநான் றிடவவ் வேரைக்
கடுகவோ ரெலியும் வந்து கறித்திட வதினின் றேனுக்
கிடைதுளித் தேனக் கின்பம் போலுமிப் பிறவியின்பம்.

உரை :—அடுகரி தொடர - ஒரு வனத்தில் கொல்ல வருகின்ற யானை யானது ஒருவனைப் பின்தொடர்ந்து துரத்த, இடிகிணைற்றின் அறுகின் வேரைப்பற்றி - இடிந்து விழும் நிலையிலிருக்கின்ற கிணற்றின் பக்கத்தில் முளைத்த அறுகம் புல்லின் வேரைப் பிடித்துக்கொண்டு, வீழ - உள்ளே குதிக்கப்போன சமயத்தில், ஐந்தலைநாகம் காண - ஐந்து தலையுடைய பாம்பு கிணற்றிற் கிடப்பது தோன்றியதால், நான்றிட - அவ் வேரைப் பற்றிய படியே தொங்கிக்கொண்டிருக்கும்போது, அவ்வேரைக் கடுக ஓர் எலியும் வந்து கறித்திட - அந்த வேரை விரைவாக ஒரு எலி வந்து கடித்துக் கொண்டிருக்கும் நேரத்தில், அதில் நின்றோனுக்கு இடை - அப்படி நின்ற ஒருவனுக்கு இத்தனை அபாயங்களுக் கிடையில், தளித் தேன் நக்கு இன்பம் - மேலே இருக்கும் தேன் கூட்டிலிருந்து சிதறிய ஒரு தேன் துளியை நக்குகின்ற இன்பத்தை, இப்பிறவி இன்பம் போலும் - இப் பிறவியிற் கிடைக்கும் அற்ப இன்பமொக்கும், எ - று.

கொடியனுக்கு அரச பதவியளித்தல் தகாதெனல்

344. தற்சனன் றனக்கு மேலாந் துரைத்தனங் கொடுத்தலென்றும்
சற்பனை துரோகங் கேடு தரணியின் மிகவே செய்வான்
மற்கடந் தனக்கு நீண்ட வாலிலே தேளுங் கொட்ட
உற்றிடங் கொள்ளி யீந்தா னூரெலாங் கொளுத்து மன்றே.

உரை :—தற்சனன் தனக்கு மேலாம் துரைத்தனங் கொடுத்தால் - குறும்பு செய்கின்ற தீயவனுக்கு உயர்ந்த அதிகாரம் அளித்தால், என்றும் சற்பனை - எப்போதும் சதியாலோசனையும், துரோகம் - நன்றி மறந்த செயல்களும், கேடு - நட்டம் விளைக்கக்கூடிய செயல்களும், தரணியின் மிகவே செய்வான் - உலகத்தில் அளவுக்கு மிஞ்சி யியற்றுவான் (அது எப்படி எனில்), மற்கடம் தனக்கு நீண்ட வாலிலே தேளும் கொட்ட - சேட்டைகள் செய்யும் தன்மையுடைய குரங்குக்கு அதன் நீளமான வாலில் தேள் கொட்டிவிட, உற்றிடம் கொள்ளி யீந்தால் - அது பொருத்த மாகப் பிடிக்கக்கூடிய கையில் கொள்ளிக் கட்டையையுங் கொடுத்துவிட் டால், ஊரெலாம் கொளுத்துமன்றே - நகர முழுவதையும் அது நீகரை யாக்கி விடுமல்லவா ?, எ - று.

தரித்திரத்தின் கொடுமை

345. தரித்திர மிக்க வனப்பினை யொடுக்கிச்
சரீரத்தை யுலர்த்த வாட்டும்
தரித்திரமளவாச் சோம்பலை யெழுப்புஞ்
சாற்றரு மூலோபத்தை மிகுக்கும்

தரித்திரந் தலைவன் றலைவியர்க் கிடையே
தடுப்பருங் கலாம்பல விளைக்கும்
தரித்திர மவமா னம்பொய்பே ராசை
தருமிதிற் கொடியதொன் றிலையே.

உரை:—தரித்திரம் மிக்க வனப்பினை யொடுக்கிச் சரீரத்தை யுலர்தர வாட்டும்-வறுமையானது உடம்பின் மிகுந்த அழகைக் குறைத்து இரத்தம் வற்றும்படியாகச் செய்யும், தரித்திரம் அளவாச சோம்பலை எழுப்பும்-வறுமையானது மிகுந்த வேலை செய்யும் சக்தியைக் குறைத்தச சோம்பலை யுண்டாக்கும், சாற்றரும் உலோபத்தை மிகுக்கும் - சொல்லுதற்கு முடியாத செட்டுத் தன்மையை அதிகப்படுத்தும், தரித்திரம் தலைவன் தலைவியர்க்கு இடையே தடுப்பருங் கலாம்பல விளைக்கும் - வறுமையானது கணவன் மனைவியர்களுக்குள் தடுக்க முடியாத சண்டையை யுண்டாக்கும், தரித்திரம் அவமானம் பொய் பேராசை தரும் - வறுமையானது மதிப்புக் குறைவையும் பொய் சொல்லும் தன்மையையும் அளவுக்கு மிஞ்சிய ஆசையையும் கொடுக்கும், இதில் கொடியது ஒன்று இலையே - இந்த வறுமையைப் போலவும் பொல்லாதது வேறொன்றில்லை, எ - று.

இதுவுமது

346. தரித்திரங் களிப்பாங் கடலுக்கோர் வடவை
சாற்றுமெண் ணங்கள்வா ழிடமாம
தரித்திரம் பற்ப றுக்கமுந் தோன்றத்
தக்கபே ராகர மென்ப
தரித்திர நன்மை சாலொழுங் கென்னுந்
தழைவனந் தனக்கழ லெனலாந்
தரித்திரங் கொடிய வெவற்றினுங் கொடிதத்
தகையதை யொழித்தனன் றுமே.

உரை:—தரித்திரம் களிப்பாம் கடலுக்கோர் வடவை - வறுமையானது மகிழ்ச்சியாகிய கடலை யுறிஞ்சுகின்ற வடவாமு காக்கினிபோலும், சாற்றும் எண்ணங்கள் வாழிடமாம் - பேசப்பட்ட கெட்ட நினைவுகள் குடியிருக்கின்ற விடமாகும், தரித்திரம் பல் பல் துக்கமுந் தோன்றத் தக்க பேராகரம் என்ப - வறுமையானது பலப்பல துயரங்களும் தோன்றுவதற்குரிய களஞ்சியம் போல்வது, தரிதரிரம் நன்மை சால் ஒழுகலென்னும் தழை வனம் தனக்கு அனல் எனலாம் - வறுமையானது நன்மை உயர்வு முறை யென்பவை வளர்ந்தோங்குஞ் சோலையை சுட்டெரிக்கின்ற தீயாகும், தரிதரிரம் கொடிய எவற்றினும் கொடிது - வறுமையானது பொல்லாத எக்காரியத்திலும் தீயதாதலினால், அதை யொழிதல் நன்றுமே-அதனை நீக்குதல் பெரிய நன்மையாகும், எ - று.

டம்பக்காரனை மன்னர் முதலியோர் மதித்தல்

347. பொருணனி யுளனென் றியாரும் புகழுமோர்
வார்த்தை வேண்டும்
இருகையுங் கடகம் வேண்டு மிலங்குகுண்
டலடங்கள் வேண்டும்
வருவிர லாழி வேண்டு மார்பிடை
மதாணி வேண்டும்
உருவமுத் தாரம் வேண்டு முயர்ந்தபட்
டாடை வேண்டும்.

உரை:—பொருள் நனி யுளனன்றி யாரும் புகழுமோர் வார்த்தை வேண்டும் - செல்வம் மிகுதி யுள்ளவனென்று பலரும் பாராட்டிப் பேசுகின்ற சொல் லேற்படவேண்டும், இரு கையும் கடகம் வேண்டும் - இரண்டு கைகளிலும் பொற் காப்புக்க ளணியப் பெற்றிருத்தல் வேண்டும், இலங்கு குண்டலங்கள் வேண்டும் - காதலில் ஒளி வீசுகின்ற கடுக்கன்போன்ற அணிகள் வேண்டும், வருவிர லாழி வேண்டும் - விரல்களில் மோதிர மணிந்திருக்க வேண்டும், மார்பிடை மதாணி வேண்டும் - மார்பின்மீது பதக்க மணியப்படல் வேண்டும், உருவ முத்தாரம் வேண்டும் - கழுத்தி லழகிய முத்து மாலை யிட்டிருக்கவேண்டும், உயர்ந்த பட்டாடை வேண்டும் - அரையில் நயமான பட்டுடை தரித்திருக்கவேண்டும், எ - று.

இதுவுமது

348. சிவிகைமுன் னூர்தி வேண்டுஞ் செழுமபொருட்
செலவு வேண்டும
குவிகையே வலரும் வேண்டுங் கோலமார்ந்
திருக்க வேண்டுமம
கவிகைதாங் குரவும் வேண்டுங் கையுறை
சிறப்ப வேண்டுமம
அவிகையில் விளக்கம் வேண்டு மரசனை
குறுகு வார்க்கே.

உரை:—சிவிகை முன் ஊர்தி வேண்டும் - பல்லக்கு முதலிய வாகனங்கள் வேண்டும், செழும் பொருட் செலவு வேண்டும் - வாகனஞ் சுமப்பவர் முதலிய பரிசனங்களுக்கு மிகுந்த பொருளாச செலவு செய்வதாய்த் தெரிதல் வேண்டும், குவிகை ஏவலரும் வேண்டும் - தன்னைக் கும்பிட்டுக் கொண்டு வருகிற கையையுடைய வேலையாட்களும் வேண்டும், கோல மார்ந்திருக்க வேண்டும் - தோற்றப் பொலிவு பொருந்தி யிருக்கவேண்டும், கவிதாங்குனரும் வேண்டும் - குடை பிடிக்கின்றவர்களும் வேண்டும், கையுறை

சிறப்ப வேண்டும் - காணிக்கையாகக் கொடுக்கும் பொருள்கள் வளமா யிருத்தல்வேண்டும், அவிகையில் விளக்கும் வேண்டும் - அணைந்து போகாத தீவர்த்தி முதலிய விளக்குகள் வேண்டும், அரசவை குறுகுவார்க்கே - இவை யெல்லாம் வேந்தனது சபையை விரும்பி யடைகின்றவர்களுக்கு வேண்டத்தக்கன, எ - று.

தள்ளக் கூடாதவை

349. செந்தமி ழடைகாய் நீறு சிவிகைபொன் ஞர மாடை
சுந்தர மான தோகை துலங்குமிவ் வகைக ளேழும்
வந்தபோ திருகை யேந்தி வாங்கலக் குமியுஞ் சேர்வள்
அந்தநா ளாகா வென்ரு லவனிவிட் டகலுவாளே.

உரை :—செந்தமிழ் - செந்தமிழ் நூல் அல்லது பாடலெழுதிய வேடு, அடைகாய் - வெற்றிலைபாக்கு, நீறு - திருநீறு, சிவிகை - பல்லக்கு, பொன் ஞரம் - பொன் மாலை, ஆடை - உடை, சுந்தரமான தோகை - அழகிய கன்னி, துலங்கும் இவ் வகைகள் ஏழும் - சிறந்த இந்த ஏழு வகைப் பொருட்களும், வந்த போது இரு கை ஏந்தி வாங்க - ஒருவன் முயலாமல் அவனுக்குக் கிடைத்தபோது இரண்டு கைகளேயும் நீட்டிப் பெற்றுக்கொண் டால், இலக்குமியும் சேர்வள் - திருமகள் வாங்கினவனே வந்தடைவாள்; அந்த நாள் ஆகா என்ரல் - இவை வந்த நாளில் அவற்றை வேண்டா மென்று கூறினால், அவளே விட்டு அகலுவாளே - திருமகள் அவனிடத்தி லிருந்து மகன்று செல்லுவாள், எ - று.

பொருளை நல்வழியிற் செலவிடு முறை

350. கைப்பொருள் பெற்ற ஞான்றே கடவுளா லயத்திற் கீந்து
மெய்ப்படு புராண நூல்கள் விருப்பொடு கேட்டு வந்து
வைப்பென விரப்போர்க் கீந்து வருபவ ருளரேற் கூற்ற
மொய்ப்புயத் தண்டந் தப்பி முன்னவ னின்பத் தாழ்வார்.

உரை :—கைப் பொருள் பெற்ற ஞான்றே - ஒருவன் தன் கைக்கு வரக்கூடிய செல்வம் கிடைக்கப்பெற்ற அன்றே, கடவுள் ஆலயத்திற்கு ஈந்து - தெய்வதத்திருக் கோயிலுக்கு ஒரு பகுதியைக் கொடுத்து, மெய்ப் படு புராண நூல்கள் விருப்பொடு கேட்டு வந்து - உண்மை யன்பா வர லாறு முதலிய அற நூல்களைப் பக்தியோடு கேட்டு மகிழ்ந்து, வைப்பென இரப்போர்க்கு ஈந்து - தஞ்சமென வந்த யாசகர்களுக்கு இயன்றதைக் கொடுத்து, வருபவர் உளரேல் - இவற்றை நியதியாக செய்து வருபவர்க ளிருப்பாராஞல், (அவர்கள்) கூற்றம் மொய்ப் புயம் தண்டம் தப்பி - எமனுடைய வலிய தோளில் சாற்றப்பெற்ற தண்டாயுதத்தினின்றும்

பிழைத்து, முன்னவன் இன்பத்தில் ஆழ்வார் - முதல்வனுடைய கடவுளுடைய பேரின்பத்தில் வாழ்வார்கள், எ - று.

காலத்தில் அறஞ்செய வேண்டுமெனல்

351. பசிமிகுந்த பின்னெல்லை விதைப்பதுபோல்
வீட்டிடைந்தீப் பற்றிக் கொண்டு
நசியும்போ தடையவிக்க வாறுவெட்டல்
போலும்போர் நடக்குங் காலை
விசிகநூல் கற்கமுயல் வதுபோலுங்
கபமிஞ்சி விக்கிச் சிக்கி
இசிவுகொண்டி சாங்காலத் தெப்படிநீ
யறம்புரிவா ரிதயப் பேயே.

உரை :—பசி மிகுந்த பின் நெல்லை விதைப்பதுபோல் - பசி யொருவனுக்கு அதிகப்பட்ட பின சோற்றுக்கு வேண்டிய அரிசியைப் பெறுவதற்கு நெல் விதையை வயலில் விதைப்பது போலவும், வீட்டிடைத் தீப்பற்றிக் கொண்டு நசியும்போது - குடி யிருக்கும் வீட்டில் தீப்பிடித்து எல்லாரும் இறந்துகொண் டிருக்கும்போது, அதை அவிக்க ஆறு வெட்டல் போலும் அந்நெருப்பை யணைத்தற்கு வேண்டிய தண்ணீர்க்காக ஆற்றில் ஊற்றினைத் தோண்டுதல் போலவும், போர நடக்கும் காலை - சண்டை நடக்குஞ் சமயத்தில், விசிக நூல் கற்க முயல்வது போலும் - அம்புவிடும் வித்தையைப் படிப்பதற்கு முயற்சி செய்தல் போலவும், கபம் மிஞ்சி விக்கிச் சிக்கி இசிவு கொண்டு சாவகாலத்தில - தொணடையில் கோழை மிகுத்து விக்கலும் தடுமாற்றமும் ஏற்பட்டு நரம்புகளுக்கு இழுப்புண்டாகி இறக்கும் தருணத்தில், இதயப் பேயே நீ எப்படி அறம் புரிவாய் - மனமென்னும் பிசாசே நீ எவ்வாறு தருமம் செய்யக்கூடும்?, எ - று.

குறிப்பு :—முன் கூறிய செயல்கள் வேண்டிய பயனைக் கொடாமை போல வாழ்நாள் எல்லாம் சும்மாயிருந்து மரணகாலத்தில் தருமஞ் செய்ய முயலுதல் உரிய பயனைத் தராது என்பது கருத்து.

பெண் கொடுத்தற்கு உரியவரல்லாதார்

352. மூத்தியில் விருப்ப முடையவன் மிடியன்
மூர்க்கன்சேண் டேயத்தி லுள்ளோன்
புத்தியில் வயிரம் பொருந்திய சூரன்
புதல்விதன் வயதின்மும் மடங்கு

தத்திய வயது ளோனினர் தமக்குத்
தரணியி லொருவரு மூள்ள
நத்திரன் மகளைத் தரத்தகா தென்னுக்
கணிதநூல் நவின்றிடு மன்னே.

உரை:—மூத்தியில் விருப்பம் உடையவன் - மோட்ச மடைவதிலேயே ஆசையுடையவன், மிடியன் - வறியவன், மூர்க்கன்-பிடிவாதமுள்ள மூடன், சேண் தேயதனிலுள்ளோன் - தூரமா யிருக்கும் காட்டிலிருப்பவன், புத்தி யில் வயிரம் பொருந்திய சூரன் - ஞாபகத்தில் செய்த தீமையை அழுதத மாக வைத்திக்கொண்டு தீமை செய்யக் கருதும் உறுதியுடைய வீரன், புதல்வீதன் வயதின் மும்மடங்கு தத்திய வயதுளோன் - மணமகளின் வயதைப் பார்கிலும் மூன்று மடங்கு அதிகமான வயதுடையவன், இஞ்ஞா தமக்கு - இப்படிப்பட்டவர்களுக்கு, தரணியில் ஒருவரும் உள்ளம் நதி-பூமியில யாரும் மனமிசைந்து, நன்மகளைத தரததகாது இன்னு - நல்ல பெண்ணைக் கொடுக்ககூடாது என்று, கணித நூல் நவின்றிடினும் - சோதிட நூல் கூறும், மன், ஓ - அசை, எ - று.

பெண்ணை மணத்தற் குரியவராவார்

353. புரைதபு குணனுஞ் சிலமும் வனப்பும்
பூரண வாயுளுந் துப்புங்
கரையில்விற் பனமும் பாலனம புரியுங்
கத்தருங் குறைவிலா தாக
விரவுசெல் வமுமா மெண்வகை யுடைய
வாடவர் விருப்புறு வண்ணம
பரவிநின் றவர்க்கு மகட்கொடை யுதவல்
பருணிதர் கடமைய தாமால்.

உரை:—புரைதபு குணனும் - குற்றமில்லாத நற்பண்பும், சிலமும் - சிறந்த வொழுக்கமும், வனப்பும் - அழகும், பூரண ஆயுளும் - நூலிற் கூறப் பட்ட முழு ஆயுசும், துப்பும் - வலிமையும், கரையில் விற்பனமும் - அள வில்லாத கல்வியும், பாலனம் புரியும் கருத்து - தன்னைச் சேர்ந்தவரைக் காப்பாற்றுகின்ற நோக்கமும், அரும் குறைவிலாதாகவிரவு செல்வமும் - குற்றமில்லாத வழியிற் கிடைத்த அருமையான ஐசுவரியமும், ஆம் எண் வகையுடைய ஆடவர் - ஆகிய எட்டுவகை நலன்களையுடைய ஆண்மக்கள், விருப்புற்று வண்ணம் பரவி நின்று - விரும்புகின்ற முறையில் அவர்களைத் துதித்து, அவர்க்கு மகள் கொடை யுதவல்-அவர்களுக்குக் கன்னிகாதானஞ் செய்தல், பருணிதர் கடமையதாம் - அறிஞரது கடமையாகும், ஆல் - அசை, எ - று.

ஈசனுக் காட்படலி னருமை

354. மக்க ளாக்கையிற் பிறத்தலே யரிதுமற் றதிலுங்
கூக்க கூன்குரு டூமைமையத் துறத்தலு மரிது
நற்கு லத்திடை வருதலு மரிதுஞா னத்தான்
மூக்க ணீசனுக் காட்படல் மூற்றிலு மரிதே.

உரை:—மக்கள் ஆக்கையில் பிறத்தலே அரிது - (விலங்கு, பறவை முதலிய பிற வுயிர்களாகப் பிறவாமல்) மனித வுடம்பெடுத்துப் பிறப்பது மிகவும் அரிய செயலாகும், அதிலும் - அப்படி மனிதராய்ப் பிறப்பதிலும், கூக்க கூன் குருடு ஊமையைத் துறத்தலும் அரிது - துயரந்தரும் கோணல், கண் தெரியாமை, வாய் பேசாமை முதலிய குற்றங்களினின்று நீங்குதல் மிக அருமையாகும், நற்குலத்திடை வருதலும் அரிது - உயர்ந்த குடியிற் பிறத்தல் அதனினும் அருமையானதாகும், ஞானத்தால் மூக்கண் ஈசனுக்கு ஆட்படல் முற்றிலும் அரிதே - அதனோடு தக்க அறிவு பெற்று மூன்று கண் களையுடைய சிவபெருமானுக்கு ஆளாதல் எல்லாவற்றிலும் அரிய செயலாகும், ஈ - று.

காமத்தின் தீமை

355. காமத்தா லிந்திரன் கலக்க மெய்தினன்
காமத்தா லிராவணன் கருத்த ழிந்தனன்
காமத்தாற் கீசகன் கவலை யுற்றனன்
காமத்தா லிறந்தவர் கணக்கி லார்களே.

உரை :—காமத்தால் இந்திரன் கலக்க மெய்தினன் - பெண் மோகத்தால் விண்ணவர்க்கு அதிபதியாகிய இந்திரன் கவுதமர் மனைவியாகிய அகலிகையைக் காதலித்து மனக் கலக்கத்திற் கேதுவாகிய சாபத்தைப் பெற்றான், காமத்தால் இராவணன் கருத்து அழிந்தனன் - பெண் மயலால் இராவணன் சீதாபிராட்டியைக் கவர்ந்தும் தன் எண்ணம் நிறைவேறப் பெறாமலழிந்தான், காமத்தால் கீசகன் கவலையுற்றனன் - பெண வேட்கையால் விராடன் மைத்துனனாகிய கீசகனென்பவன் துரௌபதையை விரும்பிப் பெறாது கவலைப்பட்டிறந்தான், காமத்தால் இறந்தவர் கணக்கிலாகளே - இவர்களைப்போலத் தவறான பெண்காதல் காரணமாக உயிரிழந்தவர்கள் அளவில்லாதவர்கள், எ - று.

சினத்தின் தீமை

356. மூங்கிலிற் பிறந்த முழங்குதீ மூங்கின்
முதலற முருக்குமா போலத்
தாங்கருஞ் சினத்தீ தன்னுளே பிறந்து
தன்னுறு தினையெலாஞ் சாய்க்கும்

ஆங்கதன் வெம்மை யறிந்தவர் கமையா
லதனையுள் ளடக்கவு மடங்கா
தோங்கிய கோபத் தீயினை யொக்கு
மூட்பகை யுலகில்வே றுண்டோ.

உரை :—மூங்கிலில் பிறந்த முழங்கு தீ - மூங்கி லுராய்தலினால் தோன்றி யோசையோடு விளக்கமாய் எரியும் சுவாலையானது, மூங்கில் முதலற முருக்குமாபோல - அந்த மூங்கில்களையே வேரறும்படியாக முற்றிலும் அழித்து விடுதல் போலும், தாங்கரும் சினத்தீ தன்னுளே பிறந்து - பொறுக்க முடியாத கோபத் தீயானது ஒருவனது உள்ளத்திலேயே தோன்றி, தன்னுறு கிளையெலாம் சாய்க்கும் - கோபப்பட்டவனை யழிப்பதோடு அவனுடைய நெருங்கிய உறவினரை யெல்லாம் மாய்விக்கும், ஆங்கதன் வெம்மை யறிந்தவர் - அப்படிப்பட்ட அதன் கொடுமையை யுணர்ந்தவர்கள், கமையாலதனை உள்ளடக்கவும் - சாந்தமாய் அதனை மனத்திலேயே அடக்க முயன்றாலும், அடங்காது - அது எளிதில் லடங்கமாட்டாது, ஓங்கிய கோபத்தீயினை யொக்கும் உட்பகை யுலகில் வேறுண்டோ - மிகுதிப்பட்ட சிற்றமாகிய நெருப்புப்போல ஒருவனுக்கு அதிச சதுரு வேறு யாருமிலலை, எ - று.

தலைவைத்துப் படுக்கு முறை

357. இணையிறன தினிலொருவன் கீழ்த்திசையிற்
றலைவைக்க வினிய மாமன்
மணிநிகழ்பொன் னெடுமாடத் துறைந்திடிற்றென்
றிசையதனில் வைக்க வேண்டும்
அணிபெறுவேற் றாருணையிற் குடதிசையிற்
சாரவைக்க வடுத்தெப் போதும்
உணர்வின்றி யுத்தரத்தே தலைவைத்துத்
துயில்புரித லொண்ணு தாமால்.

உரை :—இணையில் தனது இலில் ஒருவன் கீழ்த்திசையில் தலைவைக்க-ஒப்பற்ற தன்னுடைய வீட்டில் ஒருவன் படுக்கும்போது கீழ்த்திசையில் அவன் தலைவைத்துப் படுத்தல் வேண்டும், இனிய மாமன் மணி நிகழ் பொன் நெடுமாடத்து உறந்திடில் - நல்ல மாமனாரது இரத்தினங்கள் விளங்கும் பொன்னினால் அலங்கரிக்கப்பெற்ற உயர்ந்த மாளிகையில் தங்கினால் தென்றிசை யதனில் வைக்கவேண்டும் - படுக்குங்கால் தெற்குதிக்கில் தலைவைத்தல் வேண்டும், அணிபெறு வேற்றூர் உறையில் குடதிசையில் சார வைக்க - அழகான அயலூரிற் றங்குமிடத்தில் மேலைத் திசையில் தலையை வைத்துக்கொள்க, எப்போதும் - எக்காலத்திலும், உணர்வு-

இன்றி - ஞாபகமில்லாமல், அடுத்த உத்தாரத்தே தலைவைத்துத் துயில் புரிதல் - அடிக்கடி வடதிசையில் தலைவைத்துத் தூங்குதல், ஒண்ணுதாம் - சுகத்திற்குப் பொருத்தமில்லாத செயலாகும், ஆல் - அசை, எ - று.

கடவுள் பக்தியினின்றி யமையாமை

358. அன்பிலா நெஞ்ச மரும்பிணி யெனவு
மளவிலாப் பலைகநமக் கெனவுந்
துன்பமார் சோக மோகமே முதலாந்
துயரெலாம் விளைநில மெனவும்
இன்பவீ டெய்தி டற்கிடை யூரு
மிருளுமென் றியம்புவர் பெரியோர்
துன்பிலா விறைவர்க் கன்பிலா நெஞ்சே
துணையிலை துணையிலை யெனக்கே.

உரை :—அன்பிலா நெஞ்சம் அரும் பிணியெனவும் - கடவுளிடத்தில் பக்தியில்லாத உள்ளமானது தீரா நோய் போல்வதென்றும், அளவிலா பலை நமக்கெனவும் - எல்லையற்ற வீரோதத்தை நமக்கு விளைக்கக்கூடிய தெனவும், துன்பமார் சோக மோகமே முதலாம் துயரெலாம் விளை நில மெனவும் - துன்பத்தைத் தரக்கூடிய கவலைகள் ஆசைகள் முதலிய இடைஞ் சல்களுக்கெல்லாம் அது உற்பத்தி யிடமெனவும், இன்ப வீடு எய்திடற்கு இடையூரும் இருளும் என்று - நிலைத்த இன்பத்தைத் தரக்கூடிய மோட் சத்தை யடைவதற்குத் தடையாயுள்ள அறியாமைக்கும் அது இடமாமென் றும், பெரியோர் இயம்புவர் - பெரியோர்கள் கூறுவார்களாதலால், துன் பிலா இறைவர்க்கு அன்பிலா நெஞ்சே - யாதொரு துன்பமும் அணுகப் பெறாத கடவுளிடத்தில் பக்தியில்லாத மனமே!, துணை இலை துணை இலை எனக்கே - கேடு விளைப்பதினாலும் நன்மை செய்யாமையினாலும் நீ எவ விதத்திலும் எனக்கு உதவியில்லாதவனா யிருக்கிறாய், எ - று.

தொழில் முயற்சியின் அவசியம்

359. கடவுளீ ரூவனென் றெண்ணிநித் தியமுங்
கருதுறு முயற்சிசெய் யானேல்
அடலுறு செல்வ மடைகுவ னேகொ
லருங்கலத் திட்டபா லடிசில்
மிடலுறு காத்தா லெடுததுணை தெங்ங்ன்
வீங்குமவெம பசிப்பிணி யொழிப்பன்
உடல்பவந் தனக்கோ ராகர மாமென்
றுடனனி வாட்டுமெய்த் தவத்தோய்.

உரை :—உடல் பலம் தனக்கோர் ஆகாரமாம் என்று - உடம்பு பிறவிகளின் வித்துக்கோ நிருப்பிடமென்று எண்ணி, உடல்நனி வாட்டும் மெய்த் தவத்தோய் - அவ் வுடம்பை மிகவும் விரதங்களால் தளர்விக்கின்ற உடற் சார்பான தவ முயற்சி யுடையவனே !, கடவுள் ஈகுவனென்று எண்ணி - முயற்சி செய்யாவிட்டாலும் கடவுள் வேண்டியதை அளிப்பா ரென்று நினைத்துக்கொண்டு, நித்தியமும் கருதுறு முயற்சி செய்யானேல் - தினந் தோறும் ஒருவன் ஆலோசித்துச் செய்யக்கூடிய தொழிலேச செய்யாமலிருந்தால், அடலுறு செல்வம் அடைகுவனே கொல்-திறமை பொருந்திய ஐசுவரியத்தை யொருவன் பெற்று விடுவானு ?, அருங்கலத்திட்ட பாலடியில் - அருமையான உணவு பாத்திரத்திலிட்ட பாலுணவை, மிடலுறு கரத்தால் எடுத்துணுது - வலிமையுள்ள தன் கையாலெடுத்து ஒருவன் உட்கொள்ளாது, எவனன் வீங்கும் வெம்பசிப்பிணி யொழிப்பன் - எவனாறு மிகுதியாய் வளர்கின்ற கொடிய பசிநோயைத் தீர்க்கக் கூடும் ? எ - று.

தங்கள் தாழ்வை யறியாதவர்கள்

360. மங்கையர் விருந்தினர் வயித்திய ரிரப்போர்
பங்குபிணி யாளரொடு பாலகர் விருத்தர்
அங்கமறை வேதியரு மந்தகரு மன்னர்
தங்கள்குறை யால்வருமோர் தாழ்வுமறி யாரே.

உரை :—மங்கையர் - மங்கைப் பருவமாகிய யௌவன மடைந்த மாதரும், விருந்தினர் - விருந்துண்ண வந்திருப்பவர்களும், வைத்தியர் - மருத்துவத் தொழில் செய்பவர்களும், இரப்போர் - பிசசை யெடுப்பவர்களும், பங்கு - நொண்டிகளும், பிணியாளரொடு - நோயாளிகளும், பாலகர் விருத்தர் - குழந்தைகளும் வயோதிகர்களும், அங்கமறை வேதியரும் - ஆறங்க நூல்களோ யோதுகின்ற பிராமணரும், அந்தகரும் - குருடரும், மன்னர் - வேந்தரும், தங்கள் குறையால் வருமோர் தாழ்வு மறியாரே - தங்களுடைய குற்றத்தால் வருகின்ற கேவலத்தை யுணரமாட்டார்கள், எ - று.

திருமகள் பிரியக் காரணம்

361. காலை மாலை யுறங்குவர் காரிகை
கோல மேனி குலைத்தபின் கூடுவர்
சாலி ராத்தயிர் சாதமொ டுண்பவர்
மாலை நேரினு மாது பிரிவளே.

உரை :—காலை மாலை உறங்குவார் - காலைப் பொழுதிலும் மாலைப் பொழுதிலும் தூங்குகின்றவர்களும், காரிகை கோல மேனி குலைத்த பின் கூடுவர் - பெண்கள் மணக் கோலங் குலைத்து விதவையான பின் அவர்களைப் புணர்கின்றவர்களும், சால் இராத் தயிர் சாதமோ டுண்பவர் - தெளி

வான இராத்திரிநேரத்தில் அன்னத்தோடு தயிரைக் கலந்து புசிப்பவர் களும், மாலே நேரினும் - அவர்கள் திருமாலைப் போன்ற சிறப்புடையவர் களா யிருந்தாலும், மாது பிரிவளே - திருமகள் அவர்களே விட்டு அகலு வாள், எ - று.

ஞானத்தின் தனிச் சிறப்பு

362. வெள்ளத்தே போகாது வெந்தணலில் வேகாது
கொள்ளத்தான் போகாது கொடுத்தாலும் குறையாது
கள்ளருக்கு மெட்டாது கூவலுக்கு ளமையாது
உள்ளத்தே பொருளிருக்க வூரிலுழைத் தழல்வானேன்.

உரை :—வெள்ளத்தே போகாது - ஆற்றுநீர்ப் பெருக்கிலே அடித்துக் கொண்டு போகப்படாமல், வெம் தணலில் வேகாது - கொடிய நெருப்பில் வெந்து சாம்பலாகாமலும், கொள்ளதாதான் போகாது - ஒருவரால் எடுக்கப் பட்டு ஒழிந்து போகாமலும், கொடுத்தாலும் குறையாது - ஒருவருக்குக் கொடுத்தால் குறைவுபடாமலும், கள்ளருக்கும் எட்டாது - திருடர்களுடைய கைக்கு எட்டாமலும், காவலுக்குள் அமையாது - ஒருவரால் சிறைப்படுத்தக் கூடாமலும், உள்ளத்தே பொருளிருக்க - நெஞ்சிலே ஞானமாகிய ஐசுவரிய மிருக்குங் காலத்தில், ஊரில் உழைத்து உழல்வானேன் - அதனல் பெறக் கூடிய பேரின்பத்தைப் பெருமல் செல்வத்திற்காக நாட்டிலே முயன்று திரிவது எதற்காக, எ - று

மூதேவி வருவதற்குக் காரணம்

363. இஞ்சி நெல்லி யிலைக்கறி பாவற்காய்
கஞ்சி வெண்டயிர் கங்கு லருந்திடில்
பொஞ்சு பூமகள் போயுடன் மூத்தவள்
கொஞ்சிக் கொஞ்சிக் குலாவி நடிப்பளே.

உரை:—இஞ்சி நெல்லி இலைக்கறி பாகற்காய் - இஞ்சியையும் நெல்லிக் காயையும் கீரை யுணவுகளையும் பாகற்காய்க் கறியையும், கஞ்சி வெண் தயிர் - கஞ்சியையும் வெண்மையான தயிரையும், கங்குல் அருந்திடில் - இராத்திரியிற் புசித்தால், பொங்கு பூமகள் போய் - பொகுகி விளகுகின்ற தாமரைப்பூத் தேவியாகிய இலக்குமி யகன்றுவிட, உடன் மூத்தவள் - உடனே அவளுக்கு மூத்தவளாகிய மூதேவி, கொஞ்சிக் கொஞ்சி குலாவி நடிப்பளே - மெல்ல மெல்ல வந்து நட்பாகி நடனம் புரிவாள், எ - று.

அடா என்பது இன்சொ லாகுமிடம்

364. கடாவி டுஞ்சமர்க் களத்தினு மடந்தைய ரிடத்தும
விடாம லோதிய கவிதைபா ராட்டிய விடத்தும்
நடாவி டுஞ்சிறு பிள்ளைக ணவிலு மவ் விடத்தும
அடாவெ னுஞ்சொலை யின்சொலா மதிப்பர்கற் றறிந்தோர்.

உரை:—கடாவிடுஞ் சமர்க்களத்தினும் - கொழுத்த வீரப் படைகளைச செலுத்தும் யுத்தகளத்திலும், மடந்தையரிடத்தும் - காதல் வைத்துள்ள பெண்களோடு பழகுமிடத்திலும், விடாமலோதிய கவிதை பாராட்டிய விடதத்தும் - நயங்களைத் தவறவிடாமல் இயற்றிய பாடல்களைப் புகழ்ந்து கூறுமிடதத்தும், நடாவிடும் சிறுபிள்ளைகள் கவிலும் அவவிடத்தும் - ஓடியாடி நடக்கும் சிறு குழந்தைகள் மழலைச சொல் பேசுகின்ற விடத்திலும், அடாவெனும் சொலை - (வீரர் பெண்டிர் கற்றவர் குழந்தைகள் என்பவர் உபயோகிக்கும்) அடாவென்ற வார்த்தையை, கற்றறிந்தோர் இன்சொலா மதிப்பர் - உலக நடை தெரிந்த அறிஞர் இனிய மொழியாகக் கருதுவர், எ - று.

அடக்கமிலா மனைவியின் தன்மை

365. அடுத்தமனை தொறுந்திரிவாள் கணவனுக்கு
முன்னுண்பா ளடக்க மில்லாள்
கடுத்தமொழி பேசிடுவாள் சிறுதனந்தே
டுவளிவளைக் கலந்து வாழ்தல்
எடுத்தவிடைக் கொடியாரே தண்டலையா
ரேயெவர்க்கு மின்ப மாகக்
குடித்தனமே செயவேண்டிப் பிடாரிதனைப்
பெண்ணைவத்துக் கொண்ட தாமே.

உரை:—எடுத்த விடைக் கொடியாரே தண்டலையாரே - உயர்வாக எடுக்கப்பட்ட நந்திக் கொடியையுடைய பெருமானே !, தண்டலைப் பதியில் வீற்றிருக்கும் பெருமானே !, அடுத்த மனைதொறும் திரிவாள் - பக்கத்து வீடுகளெல்லாஞ்சென்று வீண் பொழுது போக்குபவளும், கணவனுக்கு முன் உண்பாள் - சுவை நயமாகப் புருஷனுக்கு முன்னே உணவு கொள்பவளும், அடக்கமில்லாள் - சாந்த மில்லாதவளும், கடுத்தமொழி பேசிடுவாள் - பிறரை வருத்தக் கூடிய கோபச் சொல் கூறுபவளும், சிறுதனம் தேடுவாள்-வீட்டிலுள்ளவற்றிற் சிறு பகுதியைத்திருடித தனக்குரிய சொத்தாக வைத்துக் கொள்பவளும், இவளைக் கலந்து வாழ்தல் - ஆகிய தன்மையுடையவளோடு கூடி இல்லற வாழ்க்கை நடத்துதல், எவர்க்கும் இன்பமாகக் குடித்தனமே செயவேண்டி - எல்லார்க்கும் நன்மை தரக்கூடிய இல்லற

வாழ்க்கை நடத்த விரும்பி பிடாரிதனைப் பெண் வைத்துக் கொண்ட தாமே - பெரும் பேயொன்றை மனையாளாகக் கட்டிக்கொண்ட தொக் கும், எ - று.

பயனற்றவை

366. மாடில்லான் வாழ்வு மதியில்லான் வாணிபமும்
நாடில்லான் செங்கோ னடாத்துவதுங்—கூடுங்
குருவில்லா வித்தை குணமில்லாப் பெண்டும்
விருந்தில்லான் வீடும் விழல்.

உரை :—மாடு இல்லான் வாழ்வும் - செல்வ மில்லாதவனுடைய குடும்ப வாழ்க்கையும, மதியில்லான் வாணிபமும் - அறிவில்லாதவன் செய்யும் வர்த்தகமும், நாடு இல்லான் செங்கோல் நடாத்துவதும் - தனக்கெனத் தேசமில்லாத மன்னன் நீதி செலுத்துவதும், கூடும் குரு வில்லா வித்தை - பொருத்தமான ஆசாரியனில்லாத கல்வியும் குணமில்லாப் பெண்டும் - நற் பண்பில்லாத மகளிரும், விருந்தில்லான் வீடும் - விருந்தினரை உபசரி யாத குடி யிருப்பும், விழல் - விழற் புல்லைப்போல பயனற்றவையாகும், எ - று.

பிறரிடத்து வெளிப்படுத்தத் தக்கவை

367. தகுதிகொள் கடனைக் கடன்றனைத் தீர்த்த
முன்பொருள் கோடல்பின் பகர்தல்
மகளிரைக் கொடுத்தல் தன்னுடை யொழுக்க
மரபினிற் புரிந்ததன் பாவம்
புகலரு மயலோர் நற்குண மென்னப்
புகன்றவிவ் வொன்பது மெவர்க்கு
மிகலற மறையா துரைத்திட லொழுக்கத்
தியல்பென மொழிவர்நன் குணர்ந்தோர்.

உரை:—தகுதி - தகுதியைத் தெரியாதவனிடத்தில் அதனைக் கூறுத லும், கொள் கடன் - கொண்ட கடனைத் தெரிவித்தலும், அக் கடன்தனைத் தீர்த்தல் - அந்தக் கடனைத் தீர்க்கும் வழியைக் கூறுதலும், தான் பொருள் கோடல் - வியாபாரத்திற்கு வேண்டிய பொருளை இன்னவென்று தெரிவித்து வாங்கிக்கொள்ளுதலும், பின் பகர்தல் - பிற்பாடு விலைகூறி விற்றலும், மகளிரைக் கொடுத்தல் - பெண்ணைக் கொடுத்து மணம்புரி வித்தலும், தன்னுடைய ஒழுக்கம் - தன்னுடைய வழக்கத்தைக் கூறுத லும், மரபினில் புரிந்ததன் பாவம் - வழக்கம்பற்றித் தான் செய்த குற்றம் கூறுதலும், புகலரும் அயலோர் நற்குணம் - சொல்லுதற்கரிய பிறருடைய நல்ல குணங்கள், என்னப் புகன்ற இவ்வொன்பதும் - என்று கூறப்பட்ட

இந்த ஒன்பதினையும், எவர்க்கும் இசைய மறையாது உரைத்திட - யாவருக்கும் விரோத மில்லாமல் வெளிப்படக் கூறுதல், ஒழுக்கத் தியல்பென நன்குணர்ந்தோர் மொழிவர் - நல்லொழுக்கத்தின் தன்மையாதுமென்று செவிதினறிந்தவர் கூறுவார்கள், எ - று.

பேய்த்தன்மை யுடையவர்கள்

368. தன்னைப் புகழ்வானுஞ் சாட்சிசொல்லி நிற்பானும்
பொன்னைமிகத் தேடிப் புதைப்பானும்—ஒன்னலர்தம்
நண்புத்தி கேட்பானு நாணமில் லாதானும்
பெண்புத்தி கேட்பானும் பேய்.

உரை :—தன்னைப் புகழ்வானும் - செருக்கினால் தன்னைப் பெரியவனாகப் பாராட்டிப் பேசுகின்றவனும், சாட்சி சொல்லி நிற்பானும் - பொய்ச் சாட்சி வழக்கமாகச் சொல்லி வருபவனும், பொன்னை மிகத் தேடிப் புதைப்பானும் - பொருளை அதிகமாகத் தேடித் தனக்கும் பிறர்க்கும் பயன் படுத்தாமல் அதனை மண்ணிற் புதைத்து வைக்கின்றவனும், ஒன்னலர் தம் நண்புத்தி கேட்பானும் - பகைவர்களுடைய நட்பாய்த் தோன்றும் பொய்யான புத்திமதியை ஏற்றுக்கொள்பவனும், நாணம் இல்லாதானும் - தீய காரியங்கள் செய்வதில் கூசசமில்லாதவனும், பெண்புதி கேட்பானும் - காமமயக்கத்தால் பெண்கள் கூறும் தவறான வுரையைக் கேட்டு நடப்பவனும், பேய் - பேய்த்தன்மை யுடையவராவர், எ - று.

மனைவியின் சிறப்பியல்புகள்

369. அன்னை தயையு மடியாள் பணியுமலர்ப்
பொன்னி னழகும் புவிப்பொறையும்—வன்னமுறுமை
வேசி துயிலும் விறன்மந் திரிமதியும்
பேசி னிலையுடையாள் பெண்.

உரை :—அன்னை தயையும் - கணவனைப் பேணுவதில் தாய்போன்ற கருணையும், அடியாள் பணியும் - எவல் கேட்பதில் அடிமைபோன்ற தாழ்மையும், மலர் பொன்னின் அழகும் - தாமரைப் பூவிலுறையும் இலக்குமியின் வனப்பும், புவிப்புறையும் - பூமாதேவிபோன்ற பொறுமையும், வன்னமுறுமை வேசி துயிலும் - நயங்கள் பொருந்திய விலைமகளிர்போல இன்பம் விளைத்தல் முதலாகிய இயல்பும், விறல் மந்திரி மதியும் - தைரியமான அமைச்சர்க்குள்ள அறிவும், பேசில் இவை யுடையாள் பெண் - சிறப்பாகக் கூறுமிடத்து ஆகிய இத்தன்மைகளை யுடையவன் உத்தமமான மனைவியாவாள், எ - று.

இன்னவர் தாய்மாரெனல்

370. தன்னை யளித்தா டமையன் மனைகுருவின்
பன்னி யரசன் பயிறேவி—தன்மனையைப்
பெற்ற ளிவரையே பேசி லெவருக்கும்
நற்றா யரென்றே நவில்.

உரை :—பேசில் - ஆராய்ந்து கூறுமிடத்து, எவர்க்கும் - எல்லார்க்கும், தன்னை அளித்தாள் - தன்னைப் பெற்றவள், தமையன் மனை - மூத்த சகோதரனது மனைவி, குருவின் பன்னி - ஆசாரியனது பத்தினி, அரசன் பயில் தேவி - மன்னனது பட்டத்துத தேவி, தன் மனையைப் பெற்றாள் - தன் மனைவியின் தாயாகிய மாமி, இவரையே - என்னும் இவர்களையே, நல் தாயர் என்றே நவில் - நல்ல தாய்மார்கள் என்று கூறுக, எ - று.

பொருளின் சிறப்பு

371. நற்பொரு ளறத்தை யின்ப நலத்தைஞா னத்தை மிக்க
பற்பல நூறவைப் பொல்லாப் பலகதவிர்த் திடுந்தி றத்தைச்
சொற்பெரும புகழை யென்றுந் துகளிலாப் பெருமை தன்னைப்
பொற்புறுங் கதியை வாய்ந்த பொருளலாற் பெறுவ தின்றே.

உரை :—நற் பொருள் - நல்ல உடைமைகளையும், அறத்தை - தருமத தையும், இன்ப நலத்தை - இன்பந்தரும் நன்மையையும், ஞானத்தை - அறிவையும், மிக்க பற்பலா உறவை - பலவகைப்பட்டவர்களுடைய மிகுந்த நட்பையும், பொல்லாப் பகை தவிர்த்திடும் திறத்தை - கொடிய பகைகளை யொழிக்கும் வகைகளையும், சொல் பெரும் புகழை - உயர்வாகப் பேசப்படு கின்ற பெரிய கீர்த்தியையும், துகளிலாப் பெருமை தன்னை - குற்றமற்ற சால்பையும், பொற்புறும் கதியை - சிறப்பு மிக்க நல்ல மார்க்கத்தையும், வாய்ந்த பொருள் அலால பெறுவதின்றே - அவ்வவற்றிற்கு வேண்டிய பொருளில்லாமல் தேடிப் பெறுவது இயலாததாகும், எ - று.

வெளியிடக் கூடாதவைகள்

372. மந்திரந் தன்னைப் பிறரவ மதித்தல்
மகளிரைச் சேர்தல்வஞ் சனைதன்
நந்தலி லாயுள் பிறந்தநா ளில்லி
னண்ணிய குற்றமீ ணிதியும்
மூன்றிய கற்பின் மனைவிதன் குணங்கண்
மொழிந்தவிவ் வொன்பது மாலி
னின்றுற வரிணும் பிறரொடு மொழிக
மீதென வுரைப்பரே தெளிந்தோர்.

உரை:—மந்திரம் - இரகசியமாய் உபதேசித்த மந்திரத்தையும், தன்னைப் பிறர் அவமதித்தல் - தன்னைப் பிறர்கள் இழ்வதையும், மகளிரைச சேர்தல் - பெண்டிர் தொடர்பையும், வஞ்சனை - எதிரிக்குச் செய்யும் கபடத்தையும் தன் நந்தலில் ஆயுள் - குன்றக் கூடாத வயதையும், பிறந்த நாள் - சென்ம நட்சத்திரத்தையும், இல்லில் நண்ணிய குற்றம் - வீட்டில் நிகழ்ந்த குறைகளையும், ஈன் நிதியும் - தனக்குள்ள பெருஞ் சொத்தையும், மூன்றிய கற்பின்மனைவி தன் குணங்கள் - இல்லாளின் கற்பு முதலிய சிறந்த தன்மைகளையும், மொழிந்த இவவொன்பதும் - சொல்லப்பட்ட இவ்வொன்பது காரியங்களையும், ஆவி சிந்துற வரினும் - உயிர்போகும் தருணமா யிருந்தாலும், பிறரொடு மொழிதல் நீதென - பிறரிடத்திற் கூறுதல் நீமைக் கேதுவாமென்று, தெளிர்தோர் உரைப்பரே - அறிஞர் செப்புவாராகள், எ - று.

பொய் மிகுதியாய் இருக்குமிடம்

373. பூசாரி பொய்யும் புலவோ ருறைத்தபொய்யுங்
காசாசை வேசியர்கள் கற்றபொய்யுங்—கூசாமல்
தட்டா ருரைத்த பொய்யுஞ் சவுளிக் கடைப்பொய்க்குக்
கட்டாவே கால்வாசி காண்.

உரை:—பூசாரி பொய்யும் - சிறு தெய்வக் கோயில்களில் பூசனை புரிகின்ற குருக்கள் கூறிய பொய்யும், புலவோர் உரைத்த பொய்யும் - பாவலர்கள் கற்பனையாகக் கூறிய பொயயும், காசாசை வேசியர்கள் கற்ற பொய்யும் - பொருளில் ஆசை மிகுந்த விலைமகளிர் படிததிக் கூறிய பொய்யும், கூசாமல் தட்டார் உரைத்த பொய்யும்-வெட்க மில்லாமல் நகை செயகின்ற தட்டார்கள் கூறிய பொய்யும், சவுளிக்கடை பொய்க்கு - சவுளிக்கடைக் காரர்கள் கூறும் பொய்க்கு, கால்வாசி கட்டாவே - காற்பங்களவு கூட ஈடாக மாட்டா, காண - அசை, எ - று.

செல்வன் மதிக்கப்படுதலும் வறியவன் மதிக்கப் படாமையும்

374. கோதறு கல்வி சாலூர்க் குடியிருந் தறியா னேனும்
ஒதருஞ் செல்வ மிக்கோ னொருவனே சிறந்தோ னுவன்
காதலின் வேத முன்னுக் கலைகள்கற் றுணர்ந்தா னேனுந்
தீதமை மிடிய னயிற் சிறந்திடான் வேத்த வைக்கே.

உரை:—வேத்த வைக்கே - அரசனுடைய சபைக்கு, கோதறு கல்வி சால்ஊர் குடியிருந்து அறியானேனும் - குற்றமற்ற கல்வி மிகுதியாக வுள்ள ஊரில் ஒருவன் வசித்திருந்தகூட யாதும் தெரியாமலிருந்தாலும், ஒதரும் செல்வம் மிக்கோன் ஒருவனே சிறந்தோனுவன் - சொல்ல முடியாத பொருள் மிகுதியாகவுடைய ஐசுவரியவான் ஒருவனே உயர்ந்தவனாக

மதிக்கப்படுவான், காதலின் வேதம் முன்னூன் கதைகள் கற்றுணர்ந்தா னேனும் - ஆசையோடு வேத முதலாகவுள்ள பலகலை நூல்களையும் ஒரு வன் படித்தறிந்திருந்தாலும், நீதமை மிடியனையின் - கெடுதி விளைக்கும் தரித்திர முடையவனையின், சிறந்திடான் - அவன் சிறப்பாக மதிக்கப் படமாட்டான், எ - று.

முயற்சியின் பயன்

375. செயத்தகு முயற்சி செய்திடில் செயிர்தீர்
செய்யவள் மணாளனும இரங்கி
வியத்தக வேண்டும் யாவையும அளிப்பன்
விளம்புறு முயற்சிசெய் யானேல்
நயத்தகு போகம் அளித்திடான் என்னு
ஞானிலத் தறிஞர்நன் னூரைப்பர்
உயத்தகு நெறிமா லடிஉன லென்றே
ஓர்ந்தமா தவப்பெருங் கடலே.

உரை:—உயத்தகு நெறிமா லடிஉனல் என்றே ஓர்ந்தமா தவப்பெருங் கடலே-நல்ல கதிப்பெற்றுப் பிழைப்பதற்கு உரிய வழி பெருமாளின் திரு வடியைத் தியானித்தல் ஒன்றே யாருமென ஆய்ந்து தெளிந்த பெருந்தவ வடிவமாகிய பெரிய சமுத்திரம் போன்றவரே!, செயத்தகு முயற்சி செய் திடில் - ஒவ்வொருவரும் தாங்கள் செய்வதற்கேற்ற தொழிலைச செய்து முடித்தால், செயிர்தீர் செய்யவள் மணாளனும் - குற்றமற்ற இலக்குமி கணவனுகிய திருமாலும், இரங்கி - கருணை கூர்ந்து, வியதக வேண்டும் யாவையும் அளிப்பன் - ஆசசரியப்படக் கூடியதாய் நாம் விரும்புகின்ற எல்லாவற்றையுங் கொடுத்தருளுவன், விளம்புறு முயற்சி செய்யானேல் - சொல்லப்படுகின்ற அவனவன் தொழிலைச செய்யா விட்டால், நயத்தகு போகம் அளித்திடான் என்னு - பாராட்டத்தக்க அனுபவப் பொருள்களை இறைவன் தரமாட்டானென்று, ஞானிலத் தறிஞர் நன்னூரைப்பர் - உலகி லுள்ள கல்விமான்கள் தெளிவாகக் கூறுவார்கள், எ - று.

புத்திரப் பேற்றின் றுன்பம்

376. மதலையைப் பெறுநாள் துன்பம் வளர்த்திடு நாளும் துன்பம்
விதலைநோய் அடையில் துன்பம் வியன்பரு வத்தும் துன்பம
கதமுறு காலர் வந்து கைப்பற்றில் கணக்கில் துன்பம
இதமுறல் எந்நாள் சேயால் எற்றைக்கும் துன்ப மானால்

உரை :—மதலையைப் பெறுநாள் துன்பம் - பின்னையைப்பெறுங்காலத் தில் பெறுகின்ற தாய்க்கும் அவள் சுகத்தைப்பற்றிக் கவலைப்படுகின்ற உறவினர்க்கும் பிறக்கின்ற குழந்தைக்கும் துன்பம் சேர்கின்றது, வளர்த்

நிடு நாளும் துன்பம் - பின்னே பிறந்தபின் அதற்கு நோயாலும் பிறராலும் இடையூறு நிகழாதபடி அதனை வளர்த்திடுங் காலத்திலும் துன்பம் ஏற்படுகின்றது, விதலை நோய் அடையில் துன்பம் - நோவு செய்கின்ற வியாதி பிள்ளைக்கு வந்து சேர்ந்தால் அப்போதும் துன்பமே ஏற்படுகின்றது, வியன் பருவத்தும் துன்பம் - வளர்ந்து தக்க பிராயம் வந்தபோதும் குழந்தையின் நல்வாழ்வைபற்றிக் கவலைப்படக்கூடிய துன்பம் சேர்கின்றது, கதமுறு காலர் வந்து கைப்பற்றில் கணக்கில் துன்பம் - கோபப்படுகின்ற எமனுதர் வந்து குழந்தையின் உயிரைக் கைப்பற்றிக் கொண்டுபோனால் அளவற்ற மனவருத்தம் அதனாலுண்டாகிறது, சேயால் இதமுறல் என்னுவ் - குழந்தையால் இன்பமடைதல் எந்நாளில் ஏற்படுகின்றது, எற்றைக்கும் துன்பமானால் - எந்த நாளிலும் துன்பம் வருவதானால் ஒரு நாளும் குழந்தைப்பேற்றால் சுகமடைவதில்லை, எ - று.

நல்லொழுக்கம்

377. கொல்லான் கொலைபுரியான் பெய்யான் பிறர்பொருண்மேல்
செல்லான் சிறியார் இனஞ் சேரான்—பல்லார்
மறையிற் செவியிலன் தீச்சொற்கண் மூங்கை
இறையிற் பெரியார்க் கிறை.

உரை :—கொல்லான் - உயிர்களை யுடம்பினின்று பிரியாதிருப்பவனும், கொலைபுரியான் - உயிர்களுக்கு வருத்தம் விளைவியாதவனும், பொய்யான் - பொய் கூறாதவனும், பிறர் பொருள்மேல் செல்லான் - மற்றவர்களுடைய உடைமையைக் கவர்ந்து கொள்ளும் எண்ணத்தோடு அவற்றை யணுகாதவனும், சிறியார் இனஞ் சேரான் - கீழ்மக்களுடைய கூட்டத்திற் சேர்ந்து பழகாதவனும், பல்லார் மறையில் செவியிலன் - பல பேர்களுடைய விரகசியங்களைக் கேட்க விருப்பமில்லாது அவை சம்பந்தமாகச் செவிடாய இருப்பவனும், தீசொற்கண் மூங்கை - கொடிய சொற்கள் கூறுவதில் ஊமையனும், இறையில் - இருப்பானுயின் அவன், பெரியார்க்கு இறை - பெரியோர்களுக்குத் தலைவனுவான், எ - று.

ஆராய்ச்சியில் நடுவு நிலைமை

378. காய்தல் உவத்தல் அகற்றி ஒருபொருட்கண்
ஆய்தல் அறிவுடையார் கண்ணதே—காய்வதன்கண்
உற்ற குணந்தோன்று தாகும் உவப்பதன்கண்
குற்றமுந் தோன்றுக் கெடும.

உரை :—காய்தல் உவத்தல் அகற்றி - வெறுப்பையும் விருப்பத்தையும் நீக்கிவிட்டு, ஒரு பொருட்கண் ஆய்தல் அறிவுடையார் கண்ணதே - ஒரு பொருளினிடத்தே ஆராய்ச்சி செய்தல் தக்க புலவரிடத்துக் காணப்படும்,

காய்வதன்கண் உற்ற குணம் தோன்றுதாகும் - ஒரு பொருளை வெறுப்பதாலல் அதன்பால் பொருந்திய நல்லியல்பு நமக்குப் புலனுகாது, உவப்பதன்கண் குற்றமும் தோன்றுக் கெடும் - அவ்வாறே ஒரு பொருளை ஆராயுமிடத்து அதன்கண் பிரியம் வைப்பதாலல் அதனுடைய குறைபாடு நமக்குத் தோன்றுமல் மறைந்துபோகும், எ - று.

நகைப்புக் குரியன

379. நாணிலான் சால்பும் நடையிலான் கல்நோன்பும்
ஊணிலான் செய்யும் உதார்ரதையும்—எணிலான்
சேவகமும் செந்தமிழ் தேற்றுன் கவிசெயலும்
நாவகமே நாடின் நகை.

உரை :—நாணிலான் சால்பும் - மானக்கேட்டிற்கும் தீயவை செய்தற்கும் கூசாதவனுடைய உயர்வும், நடையிலான் நல் நோன்பும் - ஒழுக்கமில்லாதவனுடைய நல்ல விரதமும், ஊணிலான் செயும் உதாரதையும் - சாப்பாட்டிற்கில்லாதவன் செய்யும் தாராளச செயலும், எணிலான் சேவகமும் - வலிமையிலாதவனுடைய வீரசெயலும், செந்தமிழ் தேற்றுன் கவி செயலும் - செவ்விய தமிழைக் கற்றுத தெளிவு பெறுதவன் பாட்டியற்றுதலும், நாடின் - நினைத்துப் பார்த்தால், நாவகமே நகை - வாயிலும் நெஞ்சத்திலும் சிரிப்புண்டாதற்கு ஏதுவாகும், எ - று.

ஒரு பொய் பல பொய்க்கிடனுதல்

380. முன்னமோர் பொய்யுரைக்க அப்பொய்வெளி
ஆகாமல் மூடும் வண்ணம
பின்னுமோர் பொய்யுரைக்க அதையும்நிலை
நிறுத்திடவோர் பெரும்பொய் சொல்ல
இன்னவகை கைதவம்ஒன் றிருநூறு
கைதவத்துக் கிடமாம வாய்மை
தன்னையே முன்பகரில் சங்கடமஒன்
றிலைஅதுவே தகைமை நெஞ்சே.

உரை :—நெஞ்சே - மனமே!, முன்னம் ஓர் பொய்யுரைக்க - முதலில் ஒரு பொய் சொன்னுல், அப் பொய் வெளியாகாமல் மூடும்வண்ணம் - அது பொய்யென்பது மற்றவர்களுக்குத தெரியாதபடி மறைப்பதற்காக, பின்னும் ஓர் பொய்யுரைக்க - இன்னுரு பொய் கூறும்படி நேரவே, அதையும் நிலை நிறுத்திட ஓர் பெரும் பொய் சொல்ல - இரண்டாவது கூறிய பொய்யை யுண்மையென்று சாதிக்கத் திரும்பவும் ஒரு பெரிய பொய்யைக்கூற, இன்ன வகை கைதவம் ஒன்று இருநூறு கைதவத்திற்கு இடமாம் - இத்த முறையாக வஞ்சகம் ஒன்று செய்தால் அது இருநூறு வஞ்சகச செயலுக்குக்

காரணமாகும், வாய்மை தன்னையே முன் பகரில் - உண்மையை முதலிற் சொல்லிவிட்டால், சங்கடம் ஒன்று இலை - இடைஞ்சல் யாது மில்லை, அதுவே தகைமை - அதுவே தக்க செயலாகும், எ - று.

தழை வியத்தல்

381. கத்தனூர் மகிழ்ந்த கச்சிவெற் புடையாய்
காமனும மயங்குறு கவினூர்
அத்தநீ அளித்த மாந்தழை அரிவைக்
காருயிர் அளித்தகா ரணத்தால்
சுத்தனும் அனுமன் சானகிக் களித்த
தூணியமை யாழியோ இந்த்ர
சித்தனுன் மடிந்த கவிக்குலம் பிழைப்பச்
செய்தசஞ் சீவியோ தானே.

உரை:—கத்தனூர் மகிழ்ந்த கசசி வெற்புடையாய்-இறைவர் மகிழ்ந்து தங்கும் காஞ்சிப்பதியை சார்ந்த மலையை யுடையவனே !, காமனும் மயங்குறு கவினூர் அத்த - மன்மதனும் பாராத்து மயக்கங் கொள்வதற் கேது வாகிய அழகு நிறைந்த இறைவனே !, நீ அளிதத மாந்தழை - நீ கொடுதத மாந்தளிரினு லமைத்த ஆடை, அரிவைக்கு ஆருயிர அளிதத காரணத்தால் - தலைவிக்கு அருமையான உயிரைக காப்பாற்றின காரணதனிலே, சுத்தனும் அனுமன் சானகிக்களித்த தூணியமை யாழியோ - புனிதனுகிய பிரம சரிய வாழக்கை நடத்திய அனுமான சீதையை அசோகவனத்திற் கண்ட போது கொடுதத அவள் உயிர்துணையாயப் பொருந்திய மோதிரம் போன் றதோ அது அல்லது, இந்திரசித்தனுல் மடிந்த கவிகுலம் பிழைப்பச செய்த சஞ்சீவியோதானே - இராவணன் மகனுகிய இந்திரசித்து விடுதத நாகாஸ்திரத்தால் மூர்சையுற்ற குரங்குக் கூட்டங்களெல்லாம் மீளவும் மயக்கம் தெளிந்து எழும்படி அனுமான் கொணர்ந்த சஞ்சீவி மலை போல் வதோ அது ?, எ - று.

குறிப்பு:—இது தலைவிக்குத் தலைவன் கொடுத்த தழையுடையை யியர்து பாங்கி தலைவனுக்குக் கூறியது.

தவம் பழித்தல்

382. தேறுது வனம்போய் யெள்வணும் போனீர்
சிறுகிழங்கைக் கொண்டுபெருங் கிழங்கைக்கொண்
டூறுத பலஞ்சுவைத்தோர் பலமுங் காணீர் [டூர்
இலைமேய்ந்தும் பேறிலையே இதுவோ யோகம

மாறுத சருகுதின்று சருகுபட்டீர்
வாயுநுகர்ந் தீர்வாயும் மௌன மானீர்
ஆறுத தீயில்நிற்பீர் தீயரே நும்
அருந்தவமே தவம்அழகர்க் காட்ப டீரே.

உரை:—தேறுத வனம் போய் யௌவனமும் போனீர் - காட்டிற் கடுந்தவஞ் செய்யும் தவசிகளே ! வீட்டிற்கு உபாயத்தை தெளிவாக அறிந்து கொள்ளாது காட்டுக்குப் போய் இளமையையும் இழந்தீர்கள், சிறு கிழங்கைக் கொண்டு பெருங கிழங்கைக் கொண்டீர் - சிறிய கிழங்குகளை யுணவாகக் கொண்டு பெரிய வயோதிகத் தன்மையை யடைந்தீர்கள், ஏறுத பலம் சுவைததோர் பலமுங் காணீர் - ஏறியெடாமல் கீழே விழுந்து கிடந்த கனிகளை யருந்தியும் ஒரு பயனையும் நீங்கள் கண்டதில்லை, இலை மேய்ந்தும் பேறிலையே - தளிர்களைத் தின்றும் ஊதியம் ஒன்றும் நீங்கள் பெறவில்லையே, இதுவோ யோகம் - இதுவோ யோக முயற்சியாகும், மாறுத சருகுதின்று சருகுபட்டீர் - காய்ந்துபோன நிலைமை மாறுத சருகு களைத தின்று சருகுபோல வாடிப்போயினீர், வாயு நுகர்ந்தீர் - காற்றை யும் புசித்தீர்கள், வாயும் மௌனமானீர் - பேசா நிலைமையு மடைந்தீர்கள், ஆறுத தீயில் நிற்பீர் - அணைந்து போகாமல் எப்போதும் எரிந்து கொண் டிருக்கும் நெருப்பு மத்தியில் நிற்பீர்கள், தீயரே - உடலை வருத்துகின்ற கொடியவர்களே !, நும் அருந்தவம் ஏது அவம் - நீங்கள் செய்யும் தவம் தவமா அவமேயாகும், அழகாக் காட்படீரே - இவை யெல்லாம் செயது வருந்துவதற்குப் பதிலாகப் (பெரும் பயன் பெறவேண்டுமானால்) அழக ராகிய பெருமானுக்கு அடிமையாய்த தொண்டு செய்யுங்கள், எ - று.

நிலையாமை

383. மண்ணுடு மன்னவரும் அவர்தனமும்
மாண்டனநுண் மணலே யொக்கும்
விண்ணுடும் இந்திரரும் அவர்வாழ்வும்
போயினவிண் மீனே யொக்கும்
எண்ணுடும் பிரமருமண் டமும்பூதங்
களுமிறந்த எல்லே இல்லே
கண்ணுடுமு அலையெங்கே நின்வாழ்க்கை
நிலையென்னே கலுலும் நெஞ்சே.

உரை :—கலுலும் நெஞ்சே - கலலேப்படுகின்ற மனமே !, மண்ணுடு மன்னவரும் அவர் தனமும் - உலக ஆட்சியை விரும்பிய மன்னரும் அவர் களுடைய செல்வமும், மாண்டனநுண் மணலே யொக்கும் - அழிந்து போயினவற்றைக் கணக்கிட்டால் அப்பமான மணலே எண்ணிமுற்போலும்,

விண்ணுடும் இந்திரரும் அவர் வாழ்வும் - வானுலக வாழ்வை நாடிய இந்திர பதவியி லிருந்தவர்களும் அவர்களுடைய செல்வமும், போயின வின்மீனை யொக்கும் - நில்லாது ஒழிந்தவற்றைக் கணக்கிட்டால் வானத்திலுள்ள நட்சத்திரங்களை எண்ணுவது போலாகும், எண்ணுடும் பிரமரும் அண்டமும் பூதங்களு மிறந்த எல்லை இல்லை - எண் மிகுதியான தேவர்களும் பிரம பதவியி லிருந்தவர்களும் பூதங்களா யிருந்தவர்களும் அழிந்து போனவற்றைக் கணக்கிட்டால் அதற்கு வரம்பு இல்லை, கண்ணுடும் அவை எங்கே - கண்ணினாற் பார்க்கப்பட்ட அவைகளெல்லாம் எங்கேயோ போயினவென்றல், நின் வாழ்க்கை நிலை என்னே - நின் வாழ்க்கையின் தன்மை யென்னவாகும்?, எ - று.

நிலையாமையை யுணராமை

384. தழுவுறு கிளைஞர் தந்தை தாய்முதல் எவரும் நாளில்
கழிவது கண்டுங் கண்டுங் கண்டிலார் போல வாழ்வார்
ஒழிவற உள்ளத் துள்ளே உறைபரஞ் சுடரை ஓரார்
விழைவென நின்ற துன்ப வித்தினை விளைப்பா ரம்மா.

உரை :—விழைவன நின்ற துன்ப வித்தினை விளைப்பார் - துன்பத்திற்கு மூலவித்தாகிய ஆசை யென்பதை விளக்கின்றவர்கள், தழுவுறு கிளைஞர் தந்தை தாய்முதல் எவரும் - தழுவப்படுகின்ற சுற்றதாதோ பெற்றோர் முதலிய எல்லோரும், நாளில் கழிவதும் கண்டும் கண்டும் - அவரவராக்குரிய நாட்களின் முடிவில் மாண்டுபோவதைப் பலமுறை பார்த்திருந்தும், கண்டிலார்போல வாழ்வார் - அதனைப் பாராதவர்கள்போல யாக்கை நிலையாமையை மறந்து தங்கள் வாழ்க்கையை நடத்துவார்கள், ஒழிவற உள்ளத் துள்ளே உறைபரஞ் சுடரை ஓரார் - நீக்கமற நெஞ்சில் நிறைந்து நிற்கும் மேலான பரஞ்சோதியை ஆய்ந்துணரமாட்டார், அம்மா - அவர் தன்மையதிசயத்தை விளைப்பதாகும், எ - று.

சிவபெருமானைப் பாடியதன் காரணம்

385. செப்பரிய தமிழ்க்களெல்லாம் அரியயனே முதலான
தேவர்க் கோதி
ஒப்புவிக்க அறியாமல் அரனிடத்தே வினைத்துவகைத்
தலையா நின்றேன்
மைப்பரவை தருவிடமும் ஆடரவும் நீறும் என்பும்
அன்பாய்க் கொண்டார்
அப்பெருமை உடையவரென் புன்கவியும் பொறுப்பரென
அறிந்து தானே.

உரை :—செப்பரிய தமிழ்களெல்லாம் - இயற்றுதற்கு அருமையான தமிழ்ப் பாடல்களே யெல்லாம், அரி அயனே முதலான தேவர்க்கோதி ஒப்பு விகக அறியாமல் - பிரமா விஷ்ணு முதலிய கடவுளர்களைப் பாடி அவர்களுக்குச் சமர்ப்பிக்கத தெரியாமல், அரனிடத்தே வளைத்து வளைத்து உரையா நின்றேன் - சிவபெருமானிடத்தே சுற்றிச சுற்றி அவற்றை யோதுவதாயினேன் (ஏனெனில), மைப்பரவ்வ தருவிடமும் ஆடரவும் நீறும் என்பும் அன்பாய்க கொண்டார் - கருங்கடல் கொடுத்த நஞ்சையும் ஆடுகின்ற பாம்பையும் சாம்பலாகிய திருநீற்றையும் இழிவான எலும்பு மாலையையும் விருப்ப மாயக் கொண்டவராகிய, அப் பெருமை யுடையவர் என் புன்கவியும் பொறுப்பரென அறிந்ததாலே - அவவளவு பெரும் தன்மையுடைய பெருமான் எனது இழிவான பாட்டையும் அமைதியாய் ஏற்றுக்கொள்வர் என்னும் கருத்துப்பற்றியே என்க.

உயர்ந்தோர் மனம்

386. ஓடும் பொன்னும் உறவும பகையுமோர்
கேடுஞ் செல்வமுங் கீர்த்தியும நிந்தையும
வீடுங் கானமும வேறற நோக்குதல்
கூடுந் தன்மை கொளுமனம் நன்மனம்

உரை :—ஓடும் பொன்னும் - ஓட்டையும் பொன்னையும், உறவும் பகையும் - நட்பினையும எதிர்ப்பையும், ஓர் கேடும் செல்வமும - நிகரற்ற வறுமையையும் ஐசுவரியதையும், கீர்தியும் நிந்தையும் - புகழ்சினையும் இகழ்சினையும், வீடும் கானமும் - வீட்டையும் காட்டையும், வேறற நோக்குதல் - வித்தியாச மில்லாமற் சமமாக எண்ணுதலும், கூடும் தன்மை கொளு மனம் - பொருந்திய இயல்புடைய உள்ளமானது, நன் மனம் - நல்ல வுள்ள மாகும், எ - று.

கிரத்தினியல்பு

387. எண்ணிலாக் கல்வியாலும் இலங்கிய கேள்வியாலும
திண்ணிதா மதியினாலும் தெளியவா ராதுதீரம
நண்ணிய ஞானிதானே நயந்தன்பு செய்யில்ஞானக
கண்ணினாற் காணலாகுங் கரத்திலா மலகம்போல.

உரை :—எண்ணிலாக் கல்வியாலும் - அளவற்ற கல்விப் பயிற்சியாலும், இலகுகிய கேள்வியாலும் - கற்றவர்களிடம் விளக்கமாய் உண்மைகளைக கேட்டுத தெரிந்ததனாலும், திண்ணிதா மதியினாலும் - உறுதியான இயற்கை அறிவினாலும், தெளிய வாராது - தெளிவாகக் கைவரமாட்டாது, நண்ணிய ஞானிதானே நயந்தன்பு செய்யில் - பிரம்ம ஞானத்தை யடைந்தவன் விரும்பி பக்தி செலுத்துவானேனில், கரதலா மலகம்போல ஞானக் கண்ணி

ஞற் காணலாகும் - உள்ளங்கை நெல்லிக்கனிபோல ஞான அனுபவத்தில் அது கைவரப் பெறும், எ - று.

சீவன் முத்தரியல்பு

388. சென்றது கருதார் நாளைச் சேர்வது நினையார் கண்முன்
நின்றது புசிப்பார் வெய்யில் நிலவாய்விண் விழுது வீழ்ந்து
பொன்றின சவம்வாழ்ந் தாலும் புதுமையா ஒன்றும பாரார்
நன்றுதீ தென்னார் சாட்சி நடுவான சீவன் முத்தர்.

உரை:—சாட்சி நடுவான சீவன் முத்தர் - எல்லாவற்றையும் பார்க்கின்ற கடவுளே யுள்ளத்திற் கண்டு முத்தி நிலையை உடம்புள்ளபோதே யடைந்தவர், சென்றது கருதார் - போனதைப்பற்றி வருத்தப்பட மாட்டார்கள், நாளைச சேர்வது நினையார் - பின்னாளில் வரப்போவதைப்பற்றி கவலைப்படமாட்டார்கள், கண் முன் நின்றது புசிப்பார் - தமக்கு நேரே கிடைத்ததை யுட்கொள்வார்கள், வெய்யில் நிலவாய் - வெய்யிலானது நில வாகுலும், விண் விழுது வீழ்ந்து - ஆகாயத்திலிருந்து அமுதம் நில வுலகத் தில் வீழ்ந்து, பொன்றின சவம் வாழ்ந்தாலும் - இறந்துபோன பிணம் உயிர்தெழுந்து வாழினும், புதுமையாய் ஒன்றும் பாரார் - அதிசயமாக எதனையுங் கருதமாட்டார்கள், நன்று தீது என்னார் - இது நல்லது இது தீயது என்று சொல்லமாட்டார்கள், எ - று.

கல்வியின் பயன்

389. இருவிழிகள் வாண்முகத்தில் இருந்தாலும்
வானிரவி எழுந்தா லன்றிக்
கருதுநிலப் பல்பொருளுங் காண்டல்அரி
தாமலகில் கண்போல் யாரும
பெருகியசெல் வமும்அறிவும் பெற்றாலும
நூற்கேள்வி பெறுவார்க் கன்றித்
திருவளர்புண் ணியபாவம் இமையமமறு
மையுமவீடும் தெரியா வன்றே.

உரை:—இருவிழிகள் வான் முகத்தி லிருந்தாலும் - இரண்டு கண்கள் ஒளியுள்ள முகதது லிருப்பதாலும், வான் இரவி எழுந்தாலன்று - ஆகாயத் திற் சூரியனுதிததாலல்லாமல், உலகில் - இப்பூமியினமீது, கருது நிலப்பல் பொருளும் காண்டலரிதாம் - மதிக்கப்படுகினற நில முதலாகிய பல பொருள்களையும் பார்ப்பதற்கு இயலாததாகும், கண்போல் பெருகிய செல்வ மும் அறிவும் பெற்றாலும் - கண்களைப் போன்ற மிகுந்த பொருளும் இயற்கை யறிவும் பெற்றிருந்தாலும், நூற் கேள்வி பெறுவார்க்கனறி - நூல்களைக் கற்றல் கேட்டல் உடையவர்களுக் கல்லாமல், திருவளர் புண்

ணிய பாவம் - நற்கதி யோம்புதற் கேதுவாகிய புண்ணியமும் அதற்கு மாறுகிய பாவமும் இன்ன என்பதும், இம்மை மறுமையும் வீடும் - இப் பிறவி மறுபிறவி முத்தி யென்பனவற்றி னியல்பும், தெரியா அன்றே - தெரியமாட்டாதனவாகும், எ - று.

இராஜராஜேசுவரி துதி

390. ஆரிய முதற்கலைகள் பலவுணர்ந் தாலும்என்
ஆகம புராண விதிகள்
அநேகமுறை கற்றறிந் தாலும்என் அரசராய்
அனைவரும் தொழுது போற்றப்
பார்புகழ் தனித்திகிரி கொண்டவனி ஆளில்என்
பரிமேத மேசெயினும் என்
பலசால வகைதெரிந் தலகமுழுதும் தமது
பணிசெயும் பெருமைபெறின் என்
சேர்புரிதல் யாவுநற் பயனுக எளிமையினில்
கிறுவுகின் மலரடி தனின்
நீடுமன் பில்லாத மூடர்கள் செயுங்கருமம்
நிந்தையல தொன்று தருமோ
சீரிய மறைக்குமுடி யாயிலகும் அன்னையே
சீராஜ ராஜேசு வரீ
திகழ்செழிய கழனிசூழ் முகலைவள நகரில்வாழ்
தேவி திரிசூலி யுமையே.

உரை:—சீரிய மறைக்கு முடியா யிலகும் அன்னையே - சிறந்த மூப்பமான ஞான நூல்களுக்குக் கிரீடம்போல் விளங்கும் தாயே !, சீராச ராசேசுவரி - அரசர்க்கு அரசியாகிய திருமுதல்வியே !, திகழ் செழிய கழனி சூழ் - விளங்குகின்ற வளமான வயல்கள் சூழ்ந்த, முகலை வளநகரில் வாழ்- இராமநாதபுரமென்னும் செல்வப்பதியில் வீற்றிருக்கும், தேவி திரிசூலி யுமையே - தேவியே! முத்தலைச் சூலமுடைய வுமையம்மையே !, ஆரிய முதற் கலைகள் பல உணர்ந்தாலும் என் - உயர்ந்த முதல் நூல்கள் பலவற்றைக் கற்றாலும் என்ன பயன், ஆகம புராண விதிகள் அநேக முறை கற்றறிந்தாலும் என் - ஆகமங்களிலும் புராணங்களிலும் கூறப்பட்ட சமயாசார ஒழுங்கு முறைகளைப் பலமுறை படித்துத் தேர்ந்தாலும் என்ன பயன், அரசராய் அனைவரும் தொழுது போற்ற - வேந்தராய் வீற்றிருந்து எல்லாரும் வணங்கித் துதிக்கவும், பார் புகழ் தனித் திகிரி கொண்டு - உலகம் போற்றுகின்ற ஏக சக்ராதிபத்தியம் உடையவனுய், அவனியாளில் என் - பூமியை ஆண்டாலுமென்ன, பரிமேதமே செய்யினும் என் - அசுவமேதயாகஞ் செய்தாலுமென்ன, பல சால வகை தெரிந்து - பல வகையான இர்

திர சாலவித்தைகளே யறிந்து, உலக முழுதும் தமது பணிசெயும் பெருமை பெறின் என் - உலகத்தார் எல்லாரும் தான் ஏயியதைச் செய்யும் மேன்மை யைப் பெற்றாலு மென்ன, நோ புரிதல் யாவும் நற்பயனுக - உன்னை மூன் னுகக் கொண்டு செய்யும் எவற்றையும் நல்ல பிரயோசன முடையதாரு, எளிமையினில் நிறுவும் - எளிதாக நிலைநாட்ட வல்ல, நின்மலாடி தன் னில் - உன்னுடைய திருவடித் தாமரையின் கண்ணே, நீடும் அன்பில்லாத மூடர்கள் செயும் கருமம் - நீடித்த பக்தியில்லாத அறிவிலிகள் செயகின்ற முயற்சியானது, நிச்சயமது ஒன்று தருமோ - இசைச்சியே யன்றி வேறொரு பயனையும் தராது, எ - று

முருகன் துதி

391. சந்தனமும் செந்தமிழும் தவமும்அர
மகளிர்குழற் சவரிக் காடும்
அந்தகனே வென்றசித்தர் ஆகமுமதோய்
தருசிறுகால் அதனே யேவி
லைமந்தருடற் பிணிமுழுதும் ஆற்றிவட
கடற்பருகும் வடவைவத னியை
எந்தமலை அவிப்பதுவோ அந்தமலை
சொந்தமலை எமக்கு மாதோ.

உரை:—சந்தனமும் செந்தமிழும் - சந்தனக் காவிலும் செந்தமிழிடத் திலும், தவமும் - தவத்தினரிடத்திலும், அரமகளிர் குழல் சவரிக்காடும் - தேவ மாதர்களின் கூந்தலாகிய சாமரவனத்திலும், அந்தகனே வென்ற சித்தர் ஆகமும் - எமனைச செயித்த சித்தர்களின உடம்பிலும், தோயதரு சிறுகால் அதனே ஏவி - படிகின்ற தனது சிறிய திருவடிகளே விடுத்து, மைந்தர் உடல் பிணி முழுதும் ஆற்றி - மனிதர்களது உடலிலுள்ள நோய் எல்லாவற்றையும் நீக்கி, வடகடல் பருகும் வடவைவதனியை - வடக்குச சமுத் திரத்தி லிருந்து அதனை வற்றச செயயும் வடவாமுகாக்கினியை, எந்த மலை அவிப்பதுவோ அந்த மலை - எந்த மலைத தலைவன் அணைக்கினறானே அந்தமலைத் தலைவனாகிய முருகன், எமக்குச சொந்த மலை மாதோ-எமக்குச சொந்தமான மலைபோல்பவனனவன் அல்லது எனகு மாததிரம் உரிததா யில்லாமல் எல்லாக்கும் உரியவனே, எ - று.

குறிப்பு:—சொந்த மலை என்பதற்குச் சொந்தமலை எனவும், சொந்தம்+அலை எனவும் பிரித்தும் பொருள் கொள்ளலாம்.

அருகன் துதி

392. இருட்பார வினைநீக்கி எவ்வுயிர்க்கும் காவலென
அருட்பாரந் தனிசுமந்த அன்றுமுத லின்றளவும்
மதுவொன்று மலரடிக்கீழ் வந்தடைந்தோர் யாவர்க்கும்
பொதுவன்றி நினக்குரித்தோ புண்ணியநின் திருமேனி.

உரை:—இருட்பார வினை நீக்கி - அறியாமை காரணமாக வருகின்ற கருமச சுமைகளைத் தொலைத்து, எவ்வுயிர்க்கும் காவலென - எல்லா வுயிர் களையும் காக்கின்ற கடவுள்போல, அருள் பாரம் தனி சுமந்த - இருபை யாகிய சுமையைத் தமக்கே உரியதென்று மேற்கொண்ட, அன்றுமுதல் இன்றளவும் - அந்தக் காலமுதல் இற்றைநாள் வரைக்கும், மதுவொன்று மலரடிக் கீழ் வந்தடைந்தோர் யாவர்க்கும் - தேன் பொருந்திய தாமரைப் பூப்போன்ற உன்னுடைய திருவடிக்கீழ் வந்து சரண்புகுந்த எல்லார்க்கும், புண்ணிய நின் திருமேனி - நன்மை நிறைந்த உன்னுடைய புனித வுடம்பா னது, பொதுவன்றி நினகு உரிததோ - எல்லாாக்கும் பொதுவில் பயன் படுவதன்றி உனக்கு மாத்திரம் உரியதல்லவே, எ - று.

பொருளி னின்றியாமை

393. பொருளிலார்க் கின்பம் இல்லை புண்ணியம் இல்லை என்றும
மருவுறு கீர்த்தி யில்லை மாந்தருட் பெருமை யில்லை
கருதிய கருமம இல்லை கதிபெறு வழியும இல்லை
பெருநிலத் திடைந டக்கும பிணமெனப் படுவ ரன்றே.

உரை :—பொருளில்லார்க்கு இன்பம் இல்லை - ஐசுவரிய மில்லாதவர் களுக்கு சுகமில்லை, புண்ணியம் இல்லை - நன்மை விளைவதிலலை, என்றும் மருவுறு கீர்த்தி இல்லை - எப்பொழுதும் பொருந்தக்கூடிய புகழ் எற் படாது, மாந்தருள் பெருமை இல்லை - மனிதர்கள் நடுவே மதிப்பில்லை, கருதிய கருமம் இல்லை - நினைதத காரியத்தை முடிப்பதியலாது, கதி பெறு வழியும் இல்லை - நல்ல கதியை யடைவதற்குரிய சாதனமும் அமையாது, பெருநிலதிடை நடக்கும் பிணமெனப் படுவரன்றே - பெரிய பூமியின் கண் நடப்பிணமாக வதியவர் கருதப்படுவா, எ - று.

திருமால் வழிபாட்டின் பயன்

394 மாளாத வினையனைத்தும் மாள நாம்போய்
வானேறி மலர்மகளார் அன்பு பூணும்
தோளாத மாமணிக்குத் தொண்டு பூண்டு
தொழுதுகந்து தோத்திரங்கள் பாடியாடிக்

கேளாத பழமறையின் கீதங் கேட்டுக்
கிடையாத பேரின்பம் பெருக நாளும்
மீளாத போடிமைக் கன்பு பெற்றேமும்
மேதினியில் இருக்கின்றேமும விதியி னாலே.

உரை :—மாளாத வினையனைத்தும் மாள - பிறவழியில் தீராத கர்மங்க ளெல்லாம் ஒழியும்படி, நாம் போய வானேறி - நாம் சென்று பிண்டத்தி லுள்ள வைகுந்த லோக நிலையை யடைந்து, மலர் மகளார் அன்பு பூணும் - திருமகளார் காதலை யேற்றுக்கொள்ளும், தோளாத மாமணிக்குத் தொண்டு பூண்டு - துலைக்கப்படாத பெரிய விரதினம்போன்ற திருமாலுக்குப் பணி விடை செய்து, தொழுதுகந்து தோததிரங்கள் பாடியாடி - வணங்கி வீருப் புடன் புகழ்ப் பாடல்களைப் பாடி யானந்தக் கூத்தாடி, கேளாத பழமறை யின் கீதம் கேட்டு - உலகத்திற் கேட்கப்படாத பழமையான வேதங்களின் இசையினைச் செவி மடுத்து, நாளும் கிடையாத பேரின்பம் பெருக - நான் தோறும் பெறுதற்கரிய பேரின்பமானது நமக்கு மிகும்படியாக, மீளாத போடிமைக்கு அன்பு பெற்றேம் - என்றும் நிலைபெற்ற பெரிய அடியார்களா யிருப்பதற்குரிய பக்தியை யுடையவராகினும், விதியினாலே மேதினியில் இருக்கின்றேம் - ஊழின் வலியினாலே இந்த உலகத்திலே நாம் வாழ்ந்திருக் கின்றேம், (ஊழ்வினை யனுபவ முடிந்தால் முக்தியடைவோ மென்பது கருத்து, எ - று.

கந்தப்பெருமான் வணக்கம்

396. ஒருமையுடன் நினதுதிரு மலரடி நினைக்கின்ற
உத்தமர்தம உறவு வேண்டும்
உள்ளொன்று வைத்துப் புறம்பொன்று பேசுவார்
உறவுகல வாமை வேண்டும்
பெருமைபெறு நினதுபுகழ் பேசவேண்டும பொய்மை
பேசாதி ருக்க வேண்டும
பெருநெறி பிடித்தொழுக வேண்டுமமத மானபேய்
பிடியாதி ருக்க வேண்டும
மருவுபெண் ணாசையை மறக்கவே வேண்டுமஉனை
மறவாதி ருக்க வேண்டும்
மதிவேண்டும நின்கருணை நிதிவேண்டும நோயற்ற
வாழ்வினுன் வாழ வேண்டும
தருமமிகு சென்னையிற் கந்தகோட் டத்துள்வளர்
தலமோங்கு கந்த வேளே
தண்முகத் துய்யமணி உண்முகச் சைவமணி
சண்முகத் தெய்வ மணியே.

உரை :—தருமமிகு சென்னையில் - அறச் செயல்கள் அதிகப்பட்ட சென்னை மா நகரில், கந்தகோட்டத்துள் வளர் தலமோங்கு கந்தவேளே - கந்தாலயமென்னும் மிடத்தில் சென்னைப்பதி தழைத்தோங்கும் பொருட்டு வீற்றிருக்கும் குமரப் பெருமானுகிய வள்ளலே !, தண்முகத் தூய்யமணி - குளிர்ந்த கருணையையுடைய பரிசுத்த விரத்தினம் போன்றவனே !, உண் முகச் சைவமணி - அகத்தி லொளிர்கின்ற சைவ விரத்தினமே!, சண்முகத் தெய்வமணியே - ஆறுமுக கடவுளாகிய விரத்தினமே !, ஒருமையுடன் நினது திருமலரடி நினைகின்ற உத்தமாதம் உறவு வேண்டும் - ஒரே நினை வுடன் உன்னுடைய பாத தாமரையைத் தியானிக்கின்ற முதல் தரமான குணமுடையவரது சினேக மெனக்குக் கிடைக்க வேண்டும், உள்ளொன்று வைத்துப் புறம்பொன்று பேசுவார் உறவு கலவாமை வேண்டும் - மனதில் ஒரு கருதலை வைத்துக்கொண்டு வெளியே அதற்கு மாறான தொன்றைப் பேசுகின்ற வஞ்சகரின் இணக்கம் இல்லாதிருத்தல் வேண்டும், பெருமை பெறு நினது புகழ் பேசவேண்டும் - மாட்சிமையுடைய உன்னுடைய கீர்த் தியையே எப்பொழுதும எடுத்துச சொல்லும் பேறு எனக்குக் கிடைக்க வேண்டும், பொயமை பேசாதிருக்க வேண்டும் - அசத்தியத்தை எப்பொழு தும் சொல்லாதிருக்குங குணம் வேண்டும், பெரு நெறி பிடித்து ஒழுக வேண்டும் - நற்கதிகுரிய பெரிய வழியில் இடைவிடாது நான் செல்ல வேண்டும், மதமான பேய் பிடியாதிருக்க வேண்டும் - தவறான சமயப் பற் றென்கின்ற பிசாசானது என்னைப் பற்றுதிருக்க வேண்டும், மருவு பெண் ணாசையை மறக்கவே வேண்டும் - மாதரைச சேர்வதற் கேதுவாகிய மோகத்தை முற்றிலும் மறத்தல் வேண்டும், உனை மறவாதிருக்க வேண் டும் - உன்னை எப்போதும் நினைத்துகொண்டிருக்க வேண்டும், மதி வேண்டும் - நல்லறிவு வேண்டும், நின் கருணை நிதி வேண்டும் - உனது திருப்பயாகிய செல்வம் எனக்குக் கிடைக்க வேண்டும், நோயற்ற வாழ்வி னை வாழ வேண்டும் - வியாதியில்லாத சுக வாழ்வை நான் அனுபவிக்க வேண்டும், எ - று.

திருமாலைப் பிரார்த்தித்தல்

396. உலகெனும் கொடுவெங் கானில்
உணர்வெனும் அணிகோட் பட்டே
அலைசெய்கா மாதி வேடர்க்
கடிமையாய் அலக்க ணுற்றேன்
நிலையுணர்ந் தெனைமீட் கில்லாய்
நினக்கன்றே அடிமை பூண்டேன்
பலர்புகழ் அல்லிக் கேணி
பார்த்தசா ரதியம் மானே.

உரை :—பலர் புகழ் அல்லிக்கேணி பார்த்தசாரதி யம்மானே - எல்லாரும் துதிக்கின்ற திருவல்லிக்கேணியில் வீற்றிருக்கும் பார்த்தசாரதி சுவாமியென்னும் அழகிய பெரியோனே!, உலகெனும் கொடு வெங்காணில உணாவெனும் அணிகோட்பட்டே - உலகமாகிய கொடிய காட்டிலே உலகாநுபவமென்னும் அழகிய மாகதியிற் சிக்கி, அலசெய் காமாதி வேடர்க்கு அடிமையாய் அலகணுற்றேன் - துன்பத்தைத் தருகின்ற காமம் வெகுளி மயக்கமென்னும் வேடர்களுக்கு ஆட்பட்டு மிகுந்த வருத்தத்தை யனுபவித்தேன், நினக்கன்றே அடிமை பூண்டேன் - உனக்கல்லவா தொண்டனாயிருப்பதற்குரியேனானை, நிலை யுணர்ந்து எனை மீட்கில்லாய - என்னுடைய பரிதாப நிலையைத் தெரிந்து அதினின்று தப்பி மீளும்படியாக நீ செய்ய வேண்டும்; எ - று.

சிவபெருமானைத் திரிகரணங்களால் வழிபடுதல்

397. சிந்தனை செய்ய மனமமைத் தேன்செப்ப நாவமைத்தேன்
வந்தனை செய்யத் தலையமைத் தேன்கை தொழுவமைதனேன்
பந்தனை செய்வதற் கன்பமைத் தேன்மெய் யருமப வைதனேன்
வெந்தவெண் ணீறணி யீசற் கிவையான் விதித்தனவே.

உரை :—சிந்தனை செய்ய மனம் அமைத்தேன் - தியானத்தையே செய்துகொண்டிருப்பதற்கு எனது நெஞ்சத்தைத் தயார் செய்தேன், செப்ப நாவமைதனேன் - துதிசெய்வதற் கெனவே நாவினை வைத்துக்கொண்டேன், வந்தனை செய்யத் தலை யமைத்தேன் - வணக்கஞ் செய்வதை என் தலையின் கடமையாக நியமித்தேன், கை தொழ அமைதனேன் - என்னுடைய கரத்தினைக் கும்பிடுவதற்கெனவே வைத்தேன், பாதனை செயவதற்கு அன்பு அமைத்தேன் - மனத்தினில் இறைவனைக் கட்டுப்படுத்துவதற்கு அவனைப்பற்றிப் பக்தி செலுத்தினேன், மெய் அரும்பு வைதேன்- அந்த பக்தியினால் உடம்பு மயிர் சிலிர்க்கப்பெற்றேன், வெந்த வெண்ணீறு அணி யீசாக்கு இவை யான் விதித்தனவே - பற்பமாகிய வெள்ளிய திருநீற்றினை யணிந்த சிவபெருமான் பொருட்டு இம் முறைகளை யான் வகுத்துக் கொண்டேன் எ - று.

முதற்பொருளொன்றே யென்பது

398. பண்ணியிடும் பணிபலவே பொன்னென் றேயாம்
பாண்டத்தின் பேர்பலவே மண்ணென் றேயாம்
வண்ணமிகும் பசுபலவே பாலொன் றேயாம
வகையேழின் உடல்பலவே சிவனென்றும்

நண்ணுமறு சமயங்கள் பேர்வே றல்லால்
நாதன்நீ ஒருவனே அவர்கள் தம்மை
எண்ணியே செயுந்தொண்டர் பூசைக்கெல்லாம
இரங்கிவரந் தருகின்றாய் எம்பிரானே.

உரை:—எம்பிரானே - எனது தலைவனே!, பண்ணியிடும் பணிபலவே பொன் ஒன்றேயாம் - செய்யப்படுகின்ற ஆபரணம் பலவகை யாஞலும் அவற்றிற்கு ஆதாரமான தங்கம் ஒரே பொருளாகும், பாண்டத்தின் பேர் பலவே மண ஒன்றேயாம் - பானை முதலிய பாத்திரங்கள் பலவகையாஞலும் அவற்றிற்கு மூதற் காரணமாகிய மண் ஒன்றே யாகும், வண்ண மிகும் பசு பலவே பால் ஒன்றேயாம் - பசுக்கள் நிறஙகள் பலவகைப் பட்டாலும் அவற்றின் பால் ஒரு நிறமுடைய வெண்மையாகும், வகை யேழின் உடல் பலவே சீவன் ஒன்றும் - எழுவகைப் பிரவி வெவவேறாயினும் அவற்றை இயகும் உயிரின் தன்மை யொன்றே யாகும், நண்ணுமறு சமயஙகள் பேர் வேறல்லால் நாதன் நீ ஒருவனே - சனஙகள் போயடையு ம மதஙகள் ஆறாஞலும் அவற்றில் வழிபடக்கூடிய தெய்வம் நீ ஒருவனே ஆகும், அவர் கள் தம்மை எணணியே செயுந் தொண்டா பூசைகெல்லாம் இரஙகி வரந் தருகினறாய - அவ வறுசமயததோா செய்கினற வழிபாட்டிற் கெல்லாம் இருபபவைத்து அவர்கள் விரும்பியவற்றை யளிக்கின்றாய், எ - று.

அகிலாண்ட நாயகி துதி

399. பொன்னே வருக மூவுலகும் பூத்தாய் வருக நாயேனைப்
புரந்தாய் வருக வழுதியர்கோன் புதல்வி வருக முகிற்கிளைய
மின்னே வருக மெய்ஞ்ஞான விளக்கே வருக மறைநான்கின்
விரிவே வருக பேரின்ப விளைவே வருக மிகுங்கருணை
அன்னே வருக அகிலெலுவார்க் கணியாய் வருக அலர்மடவார்க்
கரசே வருக உரைப்பருஞ்சீர் அமமே வருக அழற்காத்து
மன்னேர் உடலம பகிர்ந்தவிள மயிலே வருக வருகவே
மதமா தங்க வனத்துமட மானே வருகவே.

உரை :—பொன்னே வருக - பொன் போன்ற னயவளே வருக !, மூவுலகும் பூத்தாய் வருக - மேல் கீழ் நடு வென்னும் மூன்றுலகங்களையும் படைத்தவளே வருக, நாயேனைப் புரந்தாய் வருக - நாய் போன்ற அடி யேனைக் காப்பாற்றியவளே வருக, வழுதியர் கோன் புதல்வி வருக-பாண்டி யர் தலைவரின் மகளே வருக, முதற்கு இளைய மின்னே வருக - முதற் பொருளாகிய பரம்பொருளுக்கு இளமையான மாதே வருக, மெய்ஞ்ஞான விளக்கே வருக-உண்மை யறிவு வடிவமான ஒளியே வருக, மறை நான்கின் விரிவே வருக - நான்கு வேதங்களின் விரிந்த பொருள் வடிவானவளே

வருக, பேரின்ப வினவே வருக - பேரின்பம் விளைதற்குக் காரணமாயெ வளே வருக, மிகுங் கருணை அன்னே வருக - மிகுந்த தயையுடைய தாயே வருக, அகம் நெகு வார்க்கு அணியாய் வருக-உள்ள முருகுகின்றவர்களுக்கு நெருக்கமாய்ப் பிரசன்னமாகும் தாயே வருக, அலர் மடவார்க்கு அரசே வருக - பூவில் வீற்றிருக்கின்ற திருமகட்குத் தலைவியே வருக, உரைப்பருஞ் சீர் அம்மே வருக-சொல்லுதற்கு முடியாத சிறப்புடைய அன்னேயே வருக, அழற் காத்து மன்னோ உடலம் பகிர்ந்த வீளமயிலே வருக வருகவே - நெருப்பைத் திருக்கையிற் கொண்ட சிவபெருமானது திருமேனியி லொரு பாகங் கொண்ட மெல்லிய மயில் போன்றவளே வருக வருகவே, மதமா தங்க வனத்து மடமானே வருக வருகவே - திருவானைக் காவிலுறையும் இளம் மான்போன்ற அம்மையே வருக வருகவே, எ - று.

கடவுளுக்கு விண்ணப்பம்

400. பலர்பல பெயரால் பனிபரம் பொருளே
உலகில் ஓர்அணுவும உனையலா தசையா
தென்னும உரைதினேந் துன்னேவேண் டுவல்இது
முன்னேநாள் இளமையும முடிவிலா வாழ்வும்
உதவினே சிலர்க்கென ஒதுவர் ஒருகதை
இதமுற அவ்வரன் எனக்குநீ உதவினும்
கொள்ளேன் தள்ளொணச் சள்ளேயே கொடுக்குமால்
செல்வமும இன்பமும செல்கினச் செருக்கும
நல்குரவென நயவேன் நன்மைதீர் வறுமையும்
பலப்பல இன்னலும் விலக்குளனப் பணிகிலேன்
நன்றே வருகினும தீதே விளைகினும
ஒன்றே எனமதித் தேற்கும் என்உள்ளம
வேண்டிலேன் கீர்த்தி ஈண்டது நிகர்க்கும
வறியபேய்த் தேர்என அறிவேன் மற்றியான்.

உன்னே இன்று இரப்ப தென்னே யெனின் கேள் :—

என்னின் எளியவர்க் கென்னுல் இயன்றதை
மன்னுமனன் அகஒளி காட்டிய வழியினில்
உன்னி உழைக்க உகந்தருள் அதன்பொருட்
டிந்தனன் உடலம் இருக்குநாள் மட்டும்
நொந்துநோ வாதருள் நோய்வரு மாயினும
மனமும் அறிவும் மயங்கிவிடா தருள்

தினமும் இதுவே செய்யும் அவா அருள்
உடல்வலி ஒடுமேல் உளவலி சாயுமேல்
உடனே உயிர்ஒழிந் துலக
நடனசா லேயைநான் நழுவிட அருள்கவே.

உரை:—பலர் பல பெயரால் பணிபரம் பொருளே - பல சமயத்தாரும் பல் வேறு பெயர்களைக் கூறி வழிபடுகின்ற மேலான கடவுளே !, உலகில் ஓர் அணுவும் உனையலாது அசையாது - இந்த உலகத்தில் மிகச சிறிய பொருளுங்கூட நீ அசைக்காமல் அசைவதில்லை, என்னும் உரை நினைந்து உன்னை வேண்டுவல் இது - என்கின்ற வாக்கியத்தை மனத்தில் வைத்துக் கொண்டு உனக்கு இந்தப் பிரார்த்தனையைச் செய்கின்றேன், முன்னை நாள் இளமையும் முடிவிலா வாழ்வும் - முக்கிய காலத்திலே வாலிபத்தையும் அழிவிலா வாழ்க்கையையும், உதவினை சிலர்க்கு என ஓதுவர் ஒரு கதை- சில மக்களுக்கு நீ கொடுத்தாயென்று ஒரு கதை சொல்வதுண்டு, இதுமுற அவ்வரன் எனக்கு நீ உதவினும் - இனிமையாக அந்த வரத்தை எனக்கு நீ கொடுத்தாலும், கொள்ளேன் - அது எனக்கு வேண்டாம், (ஏனெனில்) தன்னொருசை சன்னியே கொடுக்குமால் - நீக்க முடியாத துன்பத்தையே அது தருவதாகும், செல்வமும் இன்பமும் - பொருளையும் சிற்றின்பத்தை யும், செல் வினைச் செருக்கும் - கோபத்தைச செலுத்தக்கூடிய அகந்தையும, நல்கு என நயவேன் - நீர் கொடுக்கவேண்டு மென்று நான் வேண்ட மாட்டேன், நன்மைதீர் வறுமையும் - நலமில்லாத தரித்திரத்தையும், பலப் பல இன்னலும் விலக்கு - அநேக விதமான துன்பங்களையும் நீக்கிவிடு, எனப் பணிகிலேன் - என்று வேண்டி உன்னை நான் வணங்கவில்லை, நன்றே வருகினும் தீதே விளைகினும் - நன்மையே வந்தாலும் தீமையே யுண்டானாலும், ஒன்றே என மதித்து ஏற்கும் என் உள்ளம் - அவை யொரு தன்மையனவே என்றெண்ணி என் மனம் அவற்றை யேற்றுக் கொள்ளும், வேண்டிலேன் கீர்த்தி - புகழை நான் விரும்பவில்லை (ஏனெனில்), நண்டு அது வறிய பேய்த்தேர் நிகர்க்கும் என அறிவேன்- இவ்வுலகத்திலது பயனற்ற கானலைப் போல்வதென்பது எனக்குத் தெரியும் மற்று யான் உன்னை இன்று இரப்பது என்ன வெனில் - இவை யெல்லாம் ஒரு புறமிருக்க உன்னிடம் இப்போது யாசிப்பது யாது எனில், கேள் - கேட்டருள்வாயாக !, என்னின் எளியவர்க்கு என்னால் இயன் றதை - என்னைப் பார்க்கிலும் ஏழையா யிருப்பவர்களுக்கு என்னாலாகக் கூடியதை, மன்னும் என் அக ஒளி காட்டும் வழியினில் - நிலைபெற்ற எனது உள்ளறிவு தெரிவிக்கின்ற முறையில், உன்னி யுழைக்க உகந்தருள் - விரும்பி யுழைக்கும்படி நீ தயவுசெய் தருள்வாயாக!, அதன் பொருட்டு - அகங்கனம் உழைப்பதற்காக, இந்த என் உடலம் இருக்கு நாள் மட்டும் - இந்த என்னுடைய உடம்பானது உலகத்தில் வாழ்திருக்கும் நாள் வரை,

சொந்து சோவதருள் - நோய்ப்பட்டு வருத்தப்படாம லிருக்கும்படி அருள் செய்வாயாக!, நோய் வருமாயினும் - வியாதி சேர்ந்தாலும், மனமும் அறிவும் மயங்கி விடாது அருள் - உணர்ச்சியும் ஆராய்சியும் மறைத்து போகாமல் அருள் செய்வாயாக!, தினமும் இதுவே செய்யும் அவா அருள் - நாள்தோ றும் இக்கடமையே செய்கின்ற விருப்பத்தைக் கொடுப்பாயாக!, உடல் வலி யோயுமேல் - தேக பல முடிவடையுமானால், உள வலி சாயுமேல் - மனோ வலி நிலைபெரு வீடில், உடனே உயிர் ஒழிந்து - உடனே உயிரானது உடம்பைவிட்டு நீங்க, உலக நடனசாலையை நான் நழுவிட அருள்கவே - உலகமாகிய நாடகசாலையை விட்டு நான் தப்பி மறையும்படி யருள் புரிவா யாக!, எ - று.

எல்லாம் ஈசன் செயல்

401. வைதிடினும் வாழ்த்திடினும் இன்பதுன்பம்
வந்திடினும் வம்பு கோடி
செய்திடினும் தண்டலீலீள் நெறியார்தஞ்
செயலென்றே தெளிவ தல்லால்
மெய்தவிர அவர்செய்தார் இவர்செய்தார்
எனநாடி வெறுக்க லாமோ
எய்தவர்தம் மருகிருக்க அம்பைகொந்த
கருமமென்ன இயம்பு வீரே.

உரை:—வைதிடினும் - ஒருவர் ஏசினாலும், வாழ்த்திடினும் - நம்மைத் துதித்தாலும், இன்ப துன்பம் வந்திடினும் - இன்பதனைக் கொடுத்தாலும் துன்பத்தைக் கொடுத்தாலும், வம்பு கோடி செயதிடினும - சேட்டைகள் அளவில்லாதன செயதாலும், தண்டலை நீள் நெறியார் தம் செயல் என்ற தெளிவதல்லால் - அவை யெல்லாம் தண்டலை நீள் நெறியிலிருக்கின்ற கடவுளது திருவருட் செயலென்றே எண்ணித தோசியடைவதல்லாமல், மெய் தவிர அவர் செய்தார் இவர் செயதார் என நாடி வெறுக்கலாமோ - உண்மைக்கு மாறாக அவர் செய்தார் இவர் செயதார் என்றெண்ணிச செய்த வர்களைப் பகைததல் பொருத்தமா?, எயதவர்தம் மருகிருக்க அம்பைகொந்த கருமமென்ன - அம்பினால் எய்தவர் பக்கதில் விருக்கும்பொழுது அவரிடம் நம் வருத்தத்தைக் கூறாமல் அம்பைக குறைகூறுவதால் பயனென்ன?. இயம்புவீரே - சொல்வீராக!, எ - று.

எல்லாம் கடவுளே எனல்

402. அறக்கடல் நீயே அருட்கடல் நீயே அருங்கரு ணாகரன் நீயே
நிறக்கடல் நீயே நிருக்கடல் நீயே நிருந்துளம ஒளிபட ஞான
நிறக்கடல் நீயே நிகர்கடந் தலகில் நிலையுநீ உயிருநீ நிலைநான்
பெறக்கடல்நீயேதாயுநீ எனக்குப்பிதாவுநீ அனைத்துநீயன்றே.

உரை :—அறக்கடல் நீயே - தருமமாகிய சமுத்திரம் நீயே ஆவாய், அருட்கடல் நீயே - கிருபா சமுத்திரம் நீயே ஆவாய், அரும் கருணாகரன் நீயே - செய்வதற்கரிய அருட் செயல்களுக்கெல்லாம் இருப்பிடம் நீயே ஆவாய், திறக்கடல் நீயே - வலிமைக்குச் சமுத்திரம் போன்றவன் நீயே ஆவாய், திருக்கடல் நீயே - செல்வக்கடலும் நீயே ஆவாய், திருத்தளம் ஒளிபட ஞான நிறக்கடல் நீயே - திருத்தமடைகின்ற மக்களுடைய மனத்தில் அறிவுண்டாகும்படி ஞானம் பிரகாசிக்கின்ற கடல் நீயே ஆவாய், நிகர் கடந்த உலகில் நிலையும் நீ - ஒப்பில்லாதவனுய் உலகத்தில் நிலைபெறுபவனும் நீயே, உயிரும் நீ - ஆத்மாவும் நீயே, நான் நிலைபெற அக்கடல் நீயே - நான் நிலையாக இருத்தற்கு இடமாகிய பேரின்பக்கடலும் நீயே, எனக்குத் தாயும் நீ பிதாவும் நீ - எனக்கு அன்னையும் அப்பனுமாகிய பெற்றோர் நீயே, அனைத்தும் நீ யன்றே - எல்லாம் நீயே அல்லவா ?, எ - று.

கடவுள் வாழ்த்து

403. வானுகி மண்ணுகி வளியாகி ஒளியாகி
ஊனுகி உயிராகி உண்மையுமாய் இன்மையுமாய்க்
கோனுகி யானெனதென் றவரவரைக் கூத்தாட்டு
வானுகி நின்றுயை என்சொல்லி வாழ்த்துவனே.

உரை:—வானுகி மண்ணுகி வளியாகி ஒளியாகி - அண்டத்திலுள்ள ஆகாயம் நிலம் காற்று தீ முதலிய ஐம்பூதவடிவங்களுமாகி, ஊனுகிஉயிராகி-பிண்டத்திலுள்ள உடம்பும் உயிரும் தன் வடிவமேயாகக் கொண்டு, உண்மையுமாய இன்மையுமாய் - அருளாளாக்குத தோன்றியும அலலாதவாக்கு மறைந்தும் நின்று, கோனுகி - எல்லாவற்றிற்குந் தலைவனுமாகி, யான் எனது என்று அவரவரைக் கூத்தாட்டுவானுகி - தன் தலைமையை மறந்து அகங்கார மமகாரத்தோடு நடகின்ற உயிர்களை உள் நின்றியற்றுகின்ற முதல்வனுமாகி, நின்றுயை என் சொல்லி வாழ்த்துவனே - நிற்கின்ற உன்னை யான் என்ன சொல்லி வாழ்த்துதல் கூடும், எ - று

தாய்க் கூற்று

404. உற்றுர் யென்னும உன்னையன்றி மற்றென்
றுணரேன் என்னும உணர்வுகள் கலக்கப்
பெற்றுய ஐந்தெழுத்தும் பிதற்றிப் பிணிதீர
வெண்ணீ றிடப்பெற்றேன் என்னும்
சுற்றுய சோதி மகேந்திரஞ்சூழ் மனத்திருள்
வாங்கிச் சூழாத நெஞ்சிற்
குற்றுய் என்னும குணக்குன்றே யென்னும
குலாத்தில்லை அம்பலக் கூத்தனையே.

உரை :—(என் மகள்) குலாத் தில்லை யம்பலக் கூத்தனையே - தில்லைப் பதியில் விளங்கும் திருச் சபையிலாடும் நடேசப்பெருமானே, உற்ற யென்னும் - நெருங்கிய நண்பனே என்று கூறுவாள், உன்னையன்றி மற்றொன்று உணரேன் என்னும் - உன்னைத் தவிர நான் வேறொன்றையும் அறிய மாட்டே னென்று சொல்வாள், உணர்வுகள கலக்கப்பெற்று - ஐம்பொறி யறிவுகளில் நீ வந்து சாரப்பெற்று, ஆய ஐந்தெழுத்தும் பிதற்றி - உன்னை யடைதற் கேதுவாகிய பஞ்சாட்சர மந்திரத்தைக் கூறிச் செபித்து, பிணி தீர வெண்ணீறு இடப்பெற்றேன் என்னும் - நோய் நீங்கும்படி வெள்ளிய விபூதி தரிக்கப் பெற்றேனென்பாள், மகேந்திரஞ் சூழ் சுற்றிய சோதி - மகேந்திர மலைமீது சூழ்ந்து நின்று எங்கும் விளங்கிய அறிவொளியான பெருமானே!, மனத்திருள் வாங்கிச சூழாத நெஞ்சிற்கு உற்றாய் என்னும் - உன்னை நினையாத நெஞ்சில் நிலைபெற்ற இருளைத் தொலைத்து நீ அங்கே பொருந்தினாய் என்பாள், குணக்குன்றே என்னும் - நற்குண மலையே என்பாள், எ - று.

நீதியின் சிறப்பு

405. நடுவுநின் றார்க்கன்றி ஞானமு மில்லை
நடுவுநின் றார்க்கு நரகமு மில்லை
நடுவுநின் றார்நல்ல தேவரு மாவர்
நடுவுநின் றார்வழி நாணுநின் றேனே.

உரை:—நடுவு நின்றார்க்கன்றி ஞானமுமில்லை-ஒரு பக்கமுஞ் சாராமல் நடுவு நிலையில நீதியாயிருப்பவர்க்கல்லது உயர்ந்த அறிவு உண்டாகாது, நடுவு நின்றார்க்கு நரகமுமில்லை - நீதியாயிருப்பவர்களுக்கு நரகத துன்பங் கிடையாது, நடுவு நின்றார நல்ல தேவருமாவர் - நீதியாளர்கள் நன்மையிற் சிறந்த தேவ பதவியடைவார்கள், நடுவு நின்றார் வழி நாணும் நின்றேனே- நீதியாளர் நெறியில் நாணும் நிற்பேனுயினேன், எ - று.

பஞ்சாட்சரத்தை யோதெனல்

406. மற்றும் பலபிதற்ற வேண்டா மடநெஞ்சே
கற்றைச் சடையண்ணல் காளத்தி—நெற்றிக்கண்
ஆரா வமுதின் திருநாமம அஞ்செழுத்துஞ்
சோராமல் எப்பொழுதுஞ் சொல்.

உரை:—மட நெஞ்சே - மூட மனமே!, மற்றும் பல பிதற்ற வேண்டாம் - இறைவனுக்கு வேறுகிய பல பொருள்களைப்பற்றி நினைத்துப்பேச வேண்டாம், கற்றைச சடையண்ணல் - தொகுதியான சடை முடியை வுடைய பெருமானுகிய, காளததி - திருக்காளததியி லிருக்கும், நெற்றிக் கண் ஆரா அமுதின் - நெற்றிக் கண்ணையுடைய தெவிட்டாத அமுதம்

போன்றவனின், திருநாமம் அஞ்செழுத்தும் - பெருமையை யுணர்த்தும் திருமந்திரமாகிய பஞ்சாட்சரத்தை, சோராமல் எப்பொழுதும் சொல் - தளர்ச்சி யடையாமல் ஊக்கமாக எப்போதும் ஓதிக் கொண்டிருப்பாயாக!, எ - று.

பக்தியி னுயர்வு

407. சங்கநிதி பதுமநிதி யிரண்டுந் தந்து
தாணியொடு வானளத் தருவ ரேனும்
மங்குவா ரவர்செல்வம் மதிப்போ மல்லோம
மாதேவர்க் கேகாந்த ரல்ல ராகில்
அங்கமெலாம் குறைந்தழுகு தொழுநோ யராய்
ஆவுரித்துத் தின்றுழலும் புலையரேனும்
கங்கைவார் சடைக்கரந்தார்க் கன்பராகில்
அவர்கண்டீர் நாம் வணங்குங் கடவு ளாரே.

உரை:—சங்கநிதி பதுமநிதி இரண்டும் தந்து - சங்குவடிவான தெய்வ நிதியையும் தாமரை வடிவான தெய்வ நிதியையு முடையவர்களாய், தாணி யொடு வான் ஆளத் தருவரேனும் - பூவுலகத்தையும் வானுலகத்தையும் ஆளக்கூடிய அதிகாரம் பெற்றவர்களா யிருந்தாலும், மாதேவாக்கு ஏகாந்தர் அல்லர் ஆகில் - பெருங் கடவுளாகிய சிவபெருமானிடத்தில் ஒருமையோடு கூடிய பக்தி யுடையவர்கள் அல்லாரானால், மங்குவார் அவா செல்வம் மதிப் போம் அல்லோம் - மறைந்து போகக்கூடிய அவர்களுடைய பெருஞ் செல் வத்தை நாம் பொருட்படுத்த மாட்டோம், அங்கமெலாம் குறைந்தழுகு தொழு நோயராய் - உறுப்புக்களெல்லாம் குறுகி யழுகி யொழுகுவதற் கேதுவாகிய குட்ட நோயுடையராய், ஆவுரித்துத் தின்றுழலும புலைய ரேனும் - பசுவினுடலை யுரித்து அதன் ஊனைத் தின்று திரிகின்ற கீழ்க் குல மக்களா யிருந்தாலும், கங்கைவார் சடைக்கரந்தார்க் கன்பராகில் - கங்கையை நீண்ட சடையில் அடக்கி வைத்தற்குரிய சிவபெருமானுக்கு அவர்கள் பக்தர்களா யிருப்பார்களானால், அவர் கண்டீர் நாம் வணங்கும் கடவுளாரே - அவர்கள் நாம் வணங்கும தெய்வமென்றறிக, எ - று.

இதுவுமது

408. பாதியா யழுகியகால் கைய ரேனும்
பழிதொழிலும் இழிகுலமும படைத்தா ரேனும்
ஆதியாய் அரவணியாய் என்ப ராகில்
அவரன்றே யாம்வணங்கும் அடிக ளாவார்

சாதியால் ஒழுக்கத்தால் மிக்கோ ரேனும்
சதுர்மறையால் வேள்வியால் தக்கோ ரேனும
போதினுள் முகன்பணியப் பள்ளி கொள்வான்
பொன்னரங்கம் போற்றுதார் புலையர் தாமே.

உரை :—பாதியா யழுகிய கால் கையரேனும் - குட்ட நோயினால் கை கால்கள் பாதியாகக் குறையப்பெற்று அவை யழுகப்பெற்றவரா யிருந்தாலும், பழிதொழிலும் இழிகுலமும் படைத்தாரேனும் - பாவச் செயலும் தாழ்ந்த குடிப்பிறப்பு முடையவராயிருந்தாலும், ஆதியாய் அரவணையாய் என்பராகில் - ஆதிமூலமே! ஆதிசேடன்மீது பள்ளிகொண்டவரே! என்று பக்தியாயக கூறித திருமாலே வழிபடுவராயின், அவரன்றே யாம் வணங்கும் அடிகளாவார் - அவரல்லவா நாம் வழிபடுகின்ற சுவாமிகளாவார், சாதியால் ஒழுக்கத்தால் மிக்கோரேனும் - குலதனாலும் நடையினாலும் சிறந்தவரா யிருந்தாலும், சதுர்மறையால் வேள்வியால் தக்கோரேனும் - நான்கு வேதப் பயிற்சியினாலும் யாகங்கள் செய்வதனாலும் தகுதிபுடையவர்களாக மதிக்கப் பட்டாலும், போதில் நான்முகன் பணியப் பள்ளிகொள்வான் - தாமரைப் பூவில் வீற்றிருக்கும் பிரமன் வணங்குகின்ற திருப்பாற்கடலிற் பள்ளி கொண்ட பெருமாளுடைய, பொன்னரங்கம் போற்றுதார் புலையர் தாமே - சேரங்கத்தைத் துதியாதவர்கள் தீழ்மக்களேயாவார், எ - று.

மெய்யறிவினருமை

409. பெறவரிது மக்கட் பிறவிபெற் றாலும
அறிவுநூல் ஆய்தல் அரிதே—அதினும
துறவுடையன் ஆதல் அரிதே அதின்மெய்
அறிவுடையன் ஆதல் அரிது.

உரை :—மக்கள் பிறவி பெறவரிது - எல்லாப் பிறவிகளையுங கடந்து மனிதனாய்ப் பிறக்கக் கிடைப்பது அருமையாகும், பெற்றாலும் அறிவு நூல ஆய்தல் அரிதே - மனிதப் பிறப்படைந்தாலும் ஞான நூல்களை ஆராய்சசி செயயக் கிடைப்பது அதனிலும் அரியதாகும், அதினும் துறவுடையன் ஆதல் அரிதே - அதைப் பார்க்கிலும் பற்று நீங்கப்பெறுதல் மிகவும அருமை யாகும், அதின் மெய் அறிவுடையன் ஆதல் அரிது - அதனைப் பார்க்கிலும் உண்மைப் பொருளுணர்சசி பெறுதல் மிகக் கடினமாகும், எ - று.

410. எங்கும் பரவடிவாய் என்வடிவு நின்வடிவாய்க்
கங்குல்பகல் இன்றியுனைக் கண்டிருப்ப தெக்காலம்
மனைதையொரு வில்லாக்கி வான்பொறியை நாணாக்கி
எனதறிவை அம்பாக்கி எய்வதினி எக்காலம்.

உரை :—எங்கும் பரவடிவாய் - எவ்விடங்களிலும் பரம்பொருளின் வடிவமாயும், என் வடிவும் நின் வடிவாய் - என்னுடைய உருவமும் உன்னுடைய திருமேனியாயும், கங்குல் பகல் இன்றி - இராப் பகலென்ற வுணர்ச்சியில்லாமல், உனைக் கண்டிருப்பதெக்காலம் - உன்னைத் தரிசித்துச் சுகமாயிருப்பது எந்தக் காலத்தில் எனக்குக் கைவரும், மனதை யொரு வில்லாகவி - நெஞ்சத்தை யொரு வில்லாக வளைத்து, வான் பொறியை நாணுக்கி - பெரிய ஐம்பொறிகளே யதிற்கட்டும் நாணுகொண்டு, என தறிவை அம்பாக்கி - என்னுடைய பகுத்தறிவை அந்த வில்லின் வழியாக எய்யும் அம்பாகக்கொண்டு, எய்வதினி எக்காலம் - நான் அடையவேண்டிய கதியாகிய கற்குறியைப் பொருந்துவது எந்த நாளில் நடைபெறும், எ - று.

வாய்மையின் பெருமை

411. புலையனும் விரும்பாதவிப் புன்புலால் யாக்கை
நிலையெனுமருண் டுயிரினு நெடிதுறச் சிறந்தே
தலைமைசேர்தரு சத்தியம் பிறழ்வது தரியேம
கலையுணர்ந்தநீ யெமக்கிது கழறுவ தழகோ.

உரை :—புலையனும் விரும்பாத இப் புன்புலால் யாக்கை - இறந்தால் அதன் ஊனைப் பறையன் அல்லது புலையன்கூட விரும்பாத நிலையிலுள்ள இந்த வுடம்பை, நிலையெனு மருண்டு உயிரினும் நெடிதுறச சிறந்தே - நிலைபெற்று நிற்பதென மயங்கி யுயிரைப் பார்க்கினும் மிகவும் அதிகமான சிறப்புடைய, தலைமை சேர்தரு சதியம் பிறழ்வது தரியேம் - மூதன்மையான மெய்ம்மையைப் பிறழவிடுவதைப் பொறுக்கமாட்டோம், கலையுணர்ந்த நீ எமக்கிது கழறுவதழகோ - நல்ல நூல்களைக் கற்றறிந்த நீ (எமக்குப் பொய்யுரைகூறும்படி) சொல்வது பொருத்தமாகுமா? (ஆகாதென்பது கருத்து), எ - று.

இதுவுமது

412. இம்மையமமைவீ டெனமறை புலங்கொள வியம்பும்
மூமமையுந்தரும் மூறையுடைத் தெனுநிலை மூரணி
எமமையாழ்வயிற் றடக்கிநீ டுமிழ்கலா வெரிவாய்
வெமமைகூர்நர குய்க்கினும மெய்மமையை விடேமால்.

உரை :—இம்மை யம்மை வீடென மறை புலங்கொள இயம்பும் - இப் பிறப்பு மறு பிறப்பு மோட்ச மென்பனவாக நுட்பமான ஞான நூல்கள் அறிவுக்குப் பொருத்தமாகக் கூறுகின்ற, மும்மையும் தரும் முறையுடைத் தெனும் நிலை மிரணி - மூன்றிலும் சத்தியமானது நன்மை தருமென்ற வுண்மை நீதிக்கு மாறாக, எம்மை யாழ்வயிற் றடக்கி நீடு உமிழ்கலா எரி

வாய் வெம்மைகூர் நரகுய்க்கினும் - எம்மைத் தனது ஆழமான வயிற்றில் வைத்து நெடுநாள் வெளியே உமிழாத தீப்பற்றி யெரிகின்ற வாயையுடைய கொடுமை மிகுந்த நரகத்திலே போட்டாலும், மெய்ம்மையை வீடேம் - சத்தியத்தை நாம் கைவிடமாட்டோம், ஆல் - அசை, எ - று.

413. மாசு படினும் மனிதன்சீர் குன்றுதாம்
பூசிக் கொளினும் இரும்பின்கண் — மாசொட்டும்
பாசத்து ளிட்டு விளக்கினுங் கீழ்தன்னை
மாசுடைமை காட்டி விடும.

உரை :—மணி மாசுபடினும் தன்சீர் குன்றுதாம் - இரத்தினமானது அழுக்கொடு சேர்ந்தாலும் தன்னுடைய சிறந்த தன்மையிற் குறைவுபடாது, பூசிக்கொளினும் இரும்பின்கண் மாசொட்டும் - இரும்பைக் கழுவிப் பயன் படுத்தினாலும் அதிற் றுருப்பிடித்தல் கூடும், பாசத்துளிட்டு விளக்கினும் - கட்டுப்பாட்டில் வைத்து அறிவு விளக்கினாலும், கீழ் தன்னை மாசுடைமை காட்டி விடும் - கீழ் மக்கள் தம்முடைய குற்றதையச செயலிற் காட்டி விடு வார்கள், எ - று.

414. மனைக்கு விளக்கு மடவாள் மடவாள்
தனக்குச்சால் பாகும் புதல்வர்—மனைக்கினிய
காதற் புதல்வர்க்குங் கல்வியே கல்விக்கும
ஓதிற் புகழ்சா லுணர்வு.

உரை :—மனைக்கு விளக்கு மடவாள் - வீட்டுக்குத் தீபம்போல்பவள் மனைவி யாவள், மடவாள் தனக்குச சால்பாகும் புதல்வர் - பெண்களுக்கு உயர்வு தருபவர்கள் புத்திரர்களாவர், மனைகினிய காதல் புதல்வர்களுங் கல்வியே - வீட்டிற்குச சிறந்த அன்பு செய்தற்குரிய பிள்ளைகளுக்கு உயாவு தருவது கல்வியாகும், கல்விக்கும் ஓதில் புகல் சால் உணாவு - கல்விக்குச சிறப்புத் தருவது புகழ்மிகுதற்கு ஏதுவாகிய நல்லுணர்வாகும், எ - று.

இவர்க்கு விஷம் இவ்விடத்தெனல்

415. திருடர்க்கு விடமெலாங் கையிலே காமமிகு
தெரிவைக்கு விடமுலையிலே
தீயபொய் யர்க்குவிட நாவிலே மதமுடன்
றிரிவோர்க்கு விடமதியிலே
கருதரிய கோளர்க்கு விடமுதடு தன்னிலே
காமுகர் விடங்கண்ணிலே
கட்செவி விடங்கள்பல் லடியிலே தேட்கெனிற்
கனவிடங் கடைவாயிலே

அரியதுஷ் டர்க்கென்னி லெட்டிமர மென்னவே
யங்கமெல் லாம்விடமதா
மடுத்துக் கெடுத்திடும் பகைவர்விட மனதிலே
யபபொன்விலை மாதருக்கு
மருவுவிட மல்குலிற் றெரியவச மன்றுகாண்
மணவாள நாராயணன்
மனதிலுறை யலர்மேலு மங்கைமண வாளனே
வரதவேங் கடராயனே.

உரை :—மணவாள நாராயணன் மனதிலுறை - மணவாள நாராயண னென்னும் தொண்டரது உள்ளத்தில் வீற்றிருக்கின்ற, அலாமேலு மங்கை மணவாளனே - தாமரைப்பூவில் வீற்றிருக்கும் இலக்குமிக்குக் கணவனே!, வரத வேங்கட ராயனே - கேட்ட வரங்களை எளிதாகக் கொடுக்கும் திரு வேங்கட மலையில் வாழும் பெருமானே !, திரடருக்கு விடமெலாம் கை யிலே - கள்ளருடைய நசசுத் தன்மையெல்லாம் அவர் கையிலே காணப் படும், காமமிகு தெரிவையர்க்கு விடம் முலையிலே - காதல் மிகுந்த பெண் களுக்கு அவரது தனங்களிலே நஞ்சுத்தன்மை யுண்டு, தீய பொய்யருக்கு விடம் நாவிலே - கொடிய பொய் சொல்லுகின்றவர்களுக்கு அவர்கள் நாக் கிலே விஷமுண்டு, மதமுடன் திரிவோர்க்கு விடம் கதியிலே - செருக் குற்றுத் திரிகின்றவர்களுக்கு அவர்களுடைய செல்வத்திலே விஷ மிருக் கின்றது, கருதரிய கோளர்க்கு விடம் உதடு தன்னிலே - கினைப்பதற் கரிய கோட் சொற் கூறுகின்றவர்களுக்கு அவாகள் உதட்டிலே விஷ மிருப்பது, காமுகர் விடம் கண்ணிலே - பெண்களை இசசிப்பவாகளுக்கு விஷம் அவர்கள் கண்ணிலே இருக்கின்றது, கட்செவி விடங்கள் பல்லடி யிலே - பாமபுக்கு விஷம் அதன் பல்லின் கீழிருக்கிறது, தேளுக்கு எனில் கனவிடம் கடை வாலிலே - தேளுக்கு என்றல் மிகுந்த விஷம் அதன் வால் நுனியிலே இருகின்றது, அரிய திஷ்டர்க்கென்னில் எட்டிமரம் என் னவே அங்கமெலாம் விடமதாம் - திருத்துதற்கு முடியாத தீசசெயல் செய் கின்றவர்களுக்கு கசப்பு எட்டிமரத்தி லிருப்பதுபோல உடம்பு முழுவதும் விஷ முண்டு, அடுதடுக் கெடுத்திடும் பகைவர் விடம் மனதிலே - நெருங் கிச சினேகஞ்செய்து கெடுக்கின்ற சித்திருக்களுக்கு விஷம் அவர் நெஞ் சதிலேயிருகிறது, அம்பொன் விலை மாதருக்கு மருவுவிடம் அல்குலில் அழகிய பொன்னை விரும்பும் வேசியர்களுக்கு விடம் அவர்கள் நிதம்பத்தி லிருகிறது, தெரிய வசமன்று - அது எளிதாகத் தெரியுந் தரமுடைய தல்ல, காண் - அசை, எ - று.

இவர்க்கிவை யுளவேனு மிவை வேண்டுமெனல்

416. அதிவீர னென்னிலுந் தந்திரவு பாயமுட
னடையலரை வெல்லல்வேண்டும்
ஆயிரம் வித்தைகற் றாலுமுல கந்தனி
லடக்கம திருத்தல்வேண்டும்
நதிகோடி நீந்திவந் தாலுமோ டந்தனை
நயந்துகரை சேரல்வேண்டும்
ஞானதத் துவமுணர்ந் தாலுமுல கத்தினி
னடக்கைதனை யறிதல்வேண்டும்
குதிசேர் குபேரனென் றாலுமொரு லாபமுறு
தொழிலுட னிருத்தல்வேண்டும்
துய்யவலிமையுடைய னெனினுமொரு சார்பினற்
றுணைகளைக் காணல்வேண்டும்
மதியூகி யென்னினும் பெரியசொற் கொளல்வேண்டும்
மணவாள நாராயணன்
மனதிலுறை யலர்மேலு மங்கைமண வாளனே
வரதவேங் கடராயனே.

உரை:—மணவாள நாராயணன்-....., வரத வேங்கடராயனே- ....., அதிவீரன் என்னிலும் தந்திர வுபாயமுடன் அடையலரை வெல்லல் வேண்டும் - ஒருவன் பெரிய வீரனாயிருந்தாலும் எதிரியை நேராக எதிர்ப்பதைப் பார்க்கிலும் தந்திரமாகச் சூழ்ச்சி செய்து செயமடையவேண்டும், ஆயிரம் வித்தை கற்றாலும் உலகந்தனில் அடக்கமது இருத்தல் வேண்டும் - ஒருவன் பல கலைகளைக் கற்றிருந்தாலும் அவன் கலவிச் செருக்கில்லாது பணிவாயிருத்தல் வேண்டும், நதிகோடி நீந்தி வந்தாலும் ஓடந்தனை நயந்துகரை சேரல் வேண்டும் - கோடி யாறுகளை நீந்தி வரக்கூடிய வல்லமை யிருந்தாலும் தக்க சமயத்தில் தோணியை விரும்பி யதிலேறிக் கரைசேர்வது நல்லது, ஞானதத்துவம் உணர்ந்தாலும் உலகத்தினில் நடக்கைதனை அறிதல் வேண்டும் - நூல்களிலுள்ள அறிவுண்மைகளை யொருவன் கற்றாலும் உலக வழக்க மறிந்திருத்தல் வேண்டும், குதிசேர் குபேரனென்றாலும் ஒரு லாப மூறு தொழிலுடன் இருத்தல் வேண்டும் - புகழப்படுகின்ற குபேரன் போன்ற பெருஞ் செல்வமுடையவனாயிருந்தாலும் ஒருவன் ஊதியம் தருகின்ற முயற்சி யுடையவனாயிருத்தல் வேண்டும், துய்ய வலிமையுடையன் எனினும் ஒரு சார்பினால் துணைகளைக் காணல் வேண்டும் - பரிசுத்தமான திறமை யுடையவனாயிருந்தாலும் ஒரு ஆதரவுபற்றி மூதலாளிகளைப் பார்த்தல் வேண்டும், மதியூகி என்னினும் பெரியர் சொற் கொளல் வேண்டும்

இயற்கையான அறிவு நூட்பமுடைய னெனினும் அநுபவமுடைய பெரியவர்களுடைய வார்த்தையை அனுசரிக்க வேண்டும், எ - று.

வேசியர் இயல்பு

417. புருடனைக் கண்டவுட னேகத விடுக்கினிற்
போயொளித் திடுவர் பின்பு
பொல்லாத தாய்க்கிழவி தன்னையவர் பாலினிற்
போக்கிவச னிக்க விடுவார்
மருடருங் கண்ணினர் சற்றருகிலே வந்து
மயல்வினைத் துறவு செய்வார்
மன்னனின் னடிகளிச் சிறுகுடிலில் வைத்ததெம்
மாதவ மெனச் சொல்லுவா
ரருணிறைந் தவர்போல விருகையி னுற்றமுழு
யாவலொடு முத்த மிடுவா
ரையநீ பிரியிலெம துயிர்பிரியு மென்றவர்க
ளாவிமுழு தும்ப ரிப்பார்
கருமையணி வேசியர்கண் முறைமையிது காணென்பர்
கற்பக விராச மேவுங்
கங்கைபுனை யீசனே மங்கைமகிழ் நேசனே
கயிலையங் கிரிவாசனே.

உரை :—கற்பக விராச மேவும் கங்கைபுனை யீசனே - கற்பக விராசப் பதியில் வீற்றிருக்கும் கங்கையைத் தரித்த கடவுளே !, மங்கை மகிழ் நேசனே - உமையம்மை விரும்புங் காதலனே !, கயிலையங்கிரி வாசனே - அழகிய கயிலையில் வசிப்பவனே !, புருடனைக் கண்டவுடனே கதவிடுக்கதனில் போய் ஒளித்திடுவர் - காதலித்து வருகின்ற மனிதனைக் கண்டவுடனே வாசற் கதவின் மறைவிற்போய் வேலைமகளானவள் ஒளித்திருப்பாள், பின்பு பொல்லாத தாய்க் கிழவி தன்னை யவர்பாலினில் போக்கி வசனிக்க விடுவார் - அதற்குப் பின் வம்பு பேசுவதில் வல்ல தாய்க்கிழவி யென்னும் மாதினை வந்த மனிதனோடு பேசும்படி யனுப்புவாள், மருள்தரும் கண்ணினுல் சற்றருகிலே வந்து மயல் வினைத்து உறவு செய்வார் - மயக்கத்தை யுண்டாக்கக்கூடிய கண்ணினை யுடையவளாகிய வேசி கொஞ்சம் சமீபத்தில் வந்து மோகத்தை யுண்டாக்கிச சினேகஞ்செய்வாள், மன்னனின் அடிகள் இச சிறு குடிலில் வைத்தது எம் மாதவம் எனச் சொல்லுவார் - இராசாவே உங்களுடைய திருவடிகள் இத்தச் சிறிய குடிசையில் வைப்பதற்குக் கிடைக்க நாங்கள் என்ன பெரிய தவம் செய்தோ மென்பாள், அருள் நிறைந்தவர்போல இரு கையினுல் தழுவி யாவலொடு முத்தமிடுவார் - கருணை மிகுந்தவர்கள்போல இரண்டு கையினுலும் ஆலிங்கனஞ் செய்து

பொய்யான ஆசை காட்டி முத்தமிடுவாள், ஐயீ பிரியில் எமதுயிர்ப் பிரியு மென்று அவர்களாவி முழுதும் பரிப்பார் - ஐயனே நீ என்னைப் பிரிந்து போயினால் என்னுடைய உயிர் போய்விடுமென்று சொல்லி உயிர் முழு வதையுங் கொள்ளை கொள்வள், கருமையணி வேலியர்கள் முறைமை இது காண் என்பர் - நெஞ்சத்தில் வஞ்சகங் கொண்ட வில்லமாதர் தன்மையிது வென்று அறிஞர்கள் கூறுவார்கள், எ - று.

கருவத்தூற் பங்க முற்றிற்று

418. பிரமனது கருவமும மாரன் புகழ்ச்சியும்
பீடுபெறு வாலி யகமும்
பேரிலங் கைக்கரச ஞற்றலு மிராட்சசப்
பெண்தா டகைச் சமர்த்தும்
திரிபுரர்க ளெண்ணமுந் தக்கனது வேள்வியுந்
தீங்குபுரி துரிய னினைவுஞ்
சினங்கொள்கபி டவண்மதத் தொடுசூர பன்மன்
செருக்குமிகு வீரர் வலியு
மிரணியன் பிடிமான மும்பகா சூரன்
நியம்பொரு வுயிர் பழிப்பு
மின்னும் பராக்ரம மிகுந்தபுர வலர்மதமு
மிறவாது நிலைநின்றதோ
கரியமால் தேடியுங் காணுத பாதனே
கற்பக விராச மேவுங்
கங்கைபுனை சேசனே மங்கைமகிழ் நேசனே
கயிலையங் கிரிவா சனே.

உரை:—கரியமால் தேடியுங் காணுத பாதனே - கரிய நிறமுடைய திருமால் தேடியும் காணப்படாத திருவடிகளை யுடையவனே!, கற்பக விராச மேவும் - ....., கயிலையங்கிரி வாசனே - ....., பிரமனது கருவ மும் - ஐந்து தலையில் ஒரு தலை யிழந்ததற் கேதுவாகிய அயனுடைய செருக் கும், மாரன் புகழ்ச்சியும் - நெற்றிக் கண்ணால் எரிதற்குக் காரணமாகிய மன்மதனது தற்புகழ்ச்சியும், பீடுபெறு வாலி அகமும்-பெரிய வரம் பெற்ற வாலியினுடைய செருக்கும், பேர் இலங்கைக்கு அரசன் ஆற்றலும் - பெரிய இலங்கை வேந்தனாயிருந்த இராவணனுடைய செருக்கோடு கூடிய திறமை யும், இராட்சசப் பெண் தாடகைச சமர்த்தும் - அரக்கியாகிய தாடகையின் யாகத்தை யழிக்கும் சாமர்த்தியமும், திரிபுரர்கள் எண்ணமும் - வானில் திரிந்த திரிபுரத்து அசுரர்களுடைய தற்பெருமையான நினைவும், தக்கனது வேள்வியும் - தக்கப்பிரசாபதி சிவபெருமானை நீக்கிச் செருக்கோடு நடத் திய யாகமும், தீங்குபுரி துரியன் நினைவும் - பஞ்ச பாண்டவர்களுக்குத்

கெடுதி செய்த துரியோதனனுடைய அகந்தை எண்ணமும், எனக்கொள் கயிடவன் மதத்தொடு சூரபன்மன் செருக்கு மிகு வீரர் வலியும் - கண்ணனை எதிர்த்த மதகயிடவ னென்னும் அசுரனுடைய அகங்காரமும் முருகப் பெருமானை எதிர்த்த சூரபன்மனுடைய அகந்தையோடு கூடிய பெரிய வலிமையும், இரணியன் பிடிவாதமும் - இரணியனுடைய பிடிவாதமான தன்மதிப்பும் பகாசுரனது இயம்பொரு வுயிர் பழிப்பும் - வீமனை எதிர்த்த பகாசுர னென்பவன் உயிர்களைப் பொருட்படுத்தாது கொன்று தின்ற செருக்கும், இன்னும் பராக்கிரம மிகுந்த புரவலர் மதமும் - இவ்வாறு வீரமிகுதியால் செருக்குற்ற மன்னரது கொள்கையும், இறவாது நிலை நின்றதோ - அழியாமல் உலகத்தில் நிலைபெற வில்லையே, எ - று.

கலிகால வியல்பு

419. தாலமர நிழலினல் லோரமுத முண்கினும்
தப்பாது குடிய ரென்பர்
தனமிகுந் தூளபேர்கள் பித்தளை யணிந்திடிற்
தங்கமென் றேமொழி குவார்
வாலிபந் தன்னிலே யதிலே ராகவே
வைகினும் விடனென் பர்காண்
வறுமைசே ரெளியவர்கள் வயிரமது பூண்கினும்
வலையற்க லெனவு ரைப்பார்
சீலம் புறத்தினு மகத்தினக் கிரமமுஞ்
செயுமீன ரைப்பு கழுவார்
சித்தசுத் தியதாகி ஞானநெறி தேர்ந்திடுந்
திவ்யபெரி யோரை யிகழ்வார்
காலகலி யுகதரும மீதென வுரைத்திடுவர்
கற்பக விராச மேவுங்
கங்கைகபுனி யீசனே மங்கைமகிழ் நேசனே
கயிலையங் கிரி வாசனே.

உரை:—கற்பக விராச மேவும் - ....., கயிலயகிரி வாசனே - ....., தாலமர நிழலில் நல்லோர் அமுதமுண்கினும் தப்பாது குடியர் என்பர்-பனை மரத்து நிழலிலிருந்து நல்ல மனிதர்கள் அமுதம் போன்ற பாலெயுண்டாலும் அவர்கள் திட்டமாகக் கள் குடிப்பவர்களே என்று (கலிகாலத்தினர்) சொல்வார்கள், தனமிகுந்துள பேர்கள் பித்தளை யணிந்திடில் தங்கம் என்றே மொழிகுவார் - செல்வமிகுந்தவர்கள் பித்தளையினும் செய்த நகையை யணிந்து கொண்டாலும் அது பொன்னுற் செய்யப்பட்டதென்று உறுதி கூறுவர், வாலிபந்தன்னிலே யதிலேராகவே வைகினும் விடனென்பர் காண் - இளமைப் பருவத்திலே மிகுந்த நல்லொழுக்க முடையவர்களா

யிருந்தாலும் அப்படி இருப்பவர்களைக் காமுகரென்று கூறுவர், வறுமை சேர் எளியவர்கள் வயிரமது பூண்கினும் வளையல் கல் என உரைப்பார் - தரித்திரமுடைய ஏழைகள் வயிர நகைகளே யணிந்தாலும் அது வளையல் செய்யப்படுதற்குரிய கண்ணுடிக் கல்லென்று கூறுவார்கள், சிலம் புறத்தி னும் அகத்தின் அக்கிரமமும் செயும் ஈனரைப் புகழுவார் - புறததே நன் மைத் தோற்றமும் உள்ளதே அநீதியான செயலுமுடைய அற்பரை நல்லவரென்று துதிப்பர், சித்த சுத்தியதாகி ஞானநெறி நோக்கிடுக் கிவ வீய பெரியோரை இகழ்வார் - மனமாசு நீங்கப் பெற்று அறிவு வழியிற் றெளிவு பெற்ற தெய்வத் தன்மையுடைய பெரியோர்களே யவமதித்துப் பேசுவார், எ - று.

உற்ரு ருறவினர்க்கு உதவாமல் வம்பர்க்கு உதவுதல்

420. விருமபி அடைந்தார்க்கும் சுற்றத் தவர்க்கும்
வருந்தும் பசிகளையார் வம்பர்க் குதவல்
இரும் பணைவில் வென்ற புருவத்தாய் ஆற்றக்
கரும்பனை யன்ன துடைத்து.

உரை:—இரும்பணைவில் வென்ற புருவத்தாய் - பெரிய மூவகிலினு லாகிய வில்லினை அழகால் செயித்த புருவத்தை யுடைய பெண்ணே !, விரும்பி அடைந்தார்க்கும் சுற்றத்தவர்க்கும் - உணவு பெறுதல் வேண்டி விசுவாசத்தோடு தன்பால் வந்தவர்களுக்கும் உறவினர்களுக்கும் உணவு கொடுத்து, வருந்தும் பசி களையார் - அவர்கள் துன்புறுதற்குக் காரண மாகிய பசியைப் போக்கமாட்டாது, வம்பர்க்கு உதவல் - குறும்பு செய்யும் பிறர்க்குதவுதல், ஆற்றக் கரும்பனை யன்னது உடைத்து - மிகவும் பெரிய பனையானது தன்னை வளர்த்தவர்களுக்கு வேண்டுங் காலத்துப் பயன்பெரு மல் நெடுநாள் கழித்துப் பிறர்க்குப் பயன்படுதல் போன்ற வியல்பினை யுடையது, எ - று.

ஈயாதான் செல்வம் பொலிவு பெறாது

421. முழவொலி முந்நீர் முழுதுட ணுண்டார்
விழவூரில் கூத்தேபோல் வீழ்ந்தவிதல் கண்டும்
இழவென் றொருபொருள் ஈயாதான் செல்வம்
அழகொடு கண்ணி னிழவு.

உரை:—முழவொலி முந்நீர் முழுதுடன் ஆண்டார் - மத்தளத்தி னோசையுடைய கடல் சூழ்ந்த பூமி முழுவதையும் ஆட்சி செய்த மன்னர்கள், விழவூரில் கூத்தேபோல் வீழ்ந்த விதல் கண்டும் - திருவிழா நடந்த நகரத தில் ஆடப்பட்ட கூத்தானது முடிவு பெறுதல் போலச் செல்வம் இழந்து இறந்தலைப் பார்த்திருந்தும், இழவென்று ஒரு பொருள் ஈயாதான் செல்

வம் - ஒரு பொருளைக் கொடுத்தால் கொடுத்த அளவில் நமக்கது நட்டம் தானே என்றெண்ணி அறஞ் செய்யாதானுடைய ஐசுவரியமானது அழகொடு கண்ணின் இழவு - அழகிருக்கும்போது கண்ணை யிழந்தாற் போலவாகும், எ - று.

பூர்வ புண்ணியத்தால் பொல்லார் பொருள் பெறுவர்

422. வழங்கார் வலியிலார் வாய்ச்சொல்லும் பொல்லார்
உழந்தொருவர்க் குற்றுல் உதவலு மில்லார்
இழந்ததில் செல்வம பெறுதலும் இன்னர்
பழஞ்செய்போர் பின்று விடல்.

உரை :—வழங்கார் - ஒருவாக்கும் ஒரு பொருளையும் கொடுக்கமாட்டாதவர்கள், வலியிலார் - திறமை யில்லாதவர்கள், வாயச சொல்லும் பொல்லார் - வாயினலே சொல்கின்ற சொற்களைக கவனித்தால் கொடியரென்று சொல்லப்படுவார்கள், ஒருவர்க்கு உற்றுல் - வேண்டியவர்கள் யாருக்காவது அபாயம் சேர்ந்தால், உழந்து உதவலுமில்லார் - முயற்சி செய்து உதவி செய்யாதவர்கள், இன்னர் - இப்படிப்பட்டவர்கள், இழந்ததில் செல்வம் பெறுதலும் - அழிந்து போகாத ஐசுவரியத்தை யடைதல், பழஞ்செயபோர் பின்றுவிடல் - முன்னம் உரமிடப்பெற்ற வயல் பிற்காலத்தில் உரமில்லாமலும் மிகுந்த குளியலாக நெல்லைக் கொடுப்பது போலாம், எ - று.

மதிப்பு மிக்கவரை அழிக்க முயலுதல்

423. மிக்குடைய ராகி மிகமதிக்கப் பட்டாரை
ஒற்கப் படமுயலும் என்றல் இழுக்காகும
நற்கெளி தாகி விடினும் நளிர்வரைமேல்
கற்கிள்ளிக் கையுய்ந்தா நில்.

உரை:—மிக்குடையராகி மிக மதிக்கப் பட்டாரை - மிகுந்த செல்வ முதலிய சிறப்புக்களுடையராய் எல்லாராலும் அதிகமாகப் போற்றப்பட்டவர்களை, ஒற்கப்பட முயல்தும் என்றல் இழுக்காம் - எளிமை யுறும்படி செய்வோமென்று எண்ணுதல் தவருகும், நற்கு எளிதாகி விடினும் - மிகவும் இலேசான செயலாகதோன்றினாலும், நளிர் வரைமேல் - உயர்ந்த மலையின்மீதுள்ள, கற்கிள்ளிக் கையுய்ந்தார் இல் - கல்லைக்கிள்ளி யெடுக்க முயன்று கை சோவில்லாமற் பிழைத்தவர்களில்லை. (அதுபோல அப்படி முயல்கின்றவர்களுக்குத் தன்பம் சேரிடுமென்பது கருத்து), எ - று.

அறிமடமும் அணியாதல்

424. முல்லைக்குத் தேரும் மயிலுக்குப் போர்வையும்
தொல்லை யளித்தாரைக் கேட்டறிதும்—சொல்லின்
நெறிமடற் பூந்தாழை நீடுநீர்ச் சேர்ப்ப
அறிமடமும் சான்றோர்க் கணி.

உரை :—நெறிமடற் பூந்தாழை நீடுநீர்ச் சேர்ப்ப - நிரண்ட மடல்களை யுடைய அழகிய தாழை மரங்கள் வளர்ந்தோங்கிய நெய்தல் நிலத்தலைவனே!, முல்லைக்குத் தேரும் மயிலுக்குப் போர்வையும் - முல்லைக் கொடிக்குச் சார் பாகத் தேரையும் மயிலுக்குக் குளிர் நீங்குவதற்குப் போர்வையையும், தொல்லையளித்தாரை - முன்னாளில் கொடுத்த பாரி, பேகன் முதலிய வள்ளல்களை, கேட்டறிதும் - கேட்டு உண்மையறிவோமாக, சொல்லின் - ஆராய்ந்து கூறுமிடத்து, அறிமடமும் சான்றோர்க்கு அணி - தெரிந்தும் தெரியாமல் போலிருக்கின்ற தன்மை குணத்தாலுயர்ந்த பெரியோர்களுக்கு அழகு செய்வதாகும், எ - று.

எளியார்க்கு இன்னு செய்யாமை

425. பூவுட்கும் கண்ணாய் பொறுப்பர் எனக்கருதி
யாவர்க்கே யாயினும் இன்னு செயல்வேண்டா
தேவர்க்கும் கைகூடாத் திண்ணன்பி னர்க்கேயும்
நோவச்செய் நோயின்மை யில்.

உரை :—பூவுட்கும் கண்ணாய் - குவளைப்பூ தான் கண்ணுக்கு ஒப்பாக முடியவில்லையே என்று அஞ்சத்தக்க கண்ணையுடையவளே!, பொறுப்பர் எனக் கருதி - நாம் கெடுதி செய்தால் எளியர்களா யிருப்பதால் தாங்கிக் கொள்வார்களென் றெண்ணி, யாவர்க்கே யாயினும் இன்னாசெயல் வேண் டாம் - எவ்வளவு தாழ்ந்தவர்களுக்காயினும் தீங்கு செய்தல் கூடாது, தேவர்க்கும் கைகூடா திண் அன்பினர்க்கேயும் - தேவர்களுக்குள்ளும் ஏற் படுதற்கரிய உறுதியான நட்புடையவர்களுக்கும், நோவச செய் நோவின் மையில் - தன்புறும்படி செய்தால் அதனைச சகித்துக்கொள்ளும் பொறுமை இல்லை என்றறிக, எ - று.

அடாது சொன்னவனைக் கோடியாமை

426. எய்தா நகைச்சொல் எடுத்துரைக்கப் பட்டவர்
வைதாராக் கொண்டு விடுவர்மன் அஃதால்
புனற்பொய்கை ஊர விளக்கெலி கொண்டு
தனக்குநோய் செய்து விடல்.

உரை:—புனல் பொய்கை யூர - நீர்வளமுடைய குளங்களுள்ளவூரனே!, எய்தா ஈகைச் சொல் - தமக்குச் சாரக்கூடாத இகழ்ச்சி மொழியை, எடுத் துரைக்கப்பட்டவர் - பிறரால் வீதந்து பேசப்பட்டவர், வைதாராக்கொண்டு விடுவர் - அப்படிப் பேசியவர் தம்மை பேசியதாக வெண்ணிச் சினத்தல் செய்பவர் பலர், அஃது - அப்படிச் செய்தல், எலி விளக்குக் கொண்டு எலியானது தீபத்தின்மேலேறி, தனக்கு நோய் செய்து விடல் - தனக்குத் துன்பத்தைத் தேடிக்கொள்வது போலாகும், எ - று.

குறிப்பு :—தனக்குப் பொருத்தமில்லாத சொல்லை ஒருவன் சொன்னால், அச் சொல் சொல்பவன் எரிகின்ற தீப்போலப் பொல்லாங்கின் சார்பிலிருப் பவன்; அவனோடு கோபங்கொள்ளுதலால் அப் பொல்லாங்கின் தொடர்பு நமக்கும் வந்து சேருமாதலின், நாம் அவனோடு கோபியாது விலகுதலே நல்லது என்பது கருத்து.

பெரியாரைக் கைப்பிடித்தல் தீது

427. எல்லாத் திறத்தும் இறப்பப் பெரியாரைக்
கல்லாத் துணையார்தாம் கைப்பிடித்தல் சொல்லின்
நிறைந்தார் வளையினுய் அஃதால் எருக்கு
மறைந்தியானை பாய்ச்சி விடல்.

உரை :—நிறைந்தார் வளையினுய் - கைகளில் நிறம்பப் பொருந்திய வளையல்களையுடையவளே!, சொல்லின் - ஆராய்ந்து கூறுமிடத்து, எல் லாத் திறத்தும் இறப்பப் பெரியாரை - எல்லாவற்றாலும் மிகவும் உயர்ந்த நிலை யடைந்தவரை, கல்லாத்துணையார்தாம் கைப்பிடித்தல் - நன்கு படியாத அளவுபட்ட அறிவுடையவர்கள் வெறுக்கச் செய்தல், அது எருக்கு மறைந்து ஆனைப் பாய்சி விடல் - எருக்குச் செடிமறைவிலே நின்று ஆனையைக் கோபித்து மதம் பிடிக்கச் செய்வது போலாம், எ - று.

குறிப்பு :—பெரிய மரத்தில் மறைந்து ஆனையைக் கோபமூட்டினால் அதினின்று ஒரு வேளை தப்பிப் பிழைத்தாலும், சிறு எருக்கம் புதரிலே மறைந்து யானையை வெகுண்டிப்பவன் அதனால் உயிரிழத்தல் திண்ணம். அதுபோல, கல்லாமை அல்லது சிறு கல்வி யென்பதைப் பாதுகாப்பாகக் கொண்டு உன்னத நிலையிலுள்ளவர்களை இகழ்ந்தால் இகழ்ந்தவர் கெடுவது திணமென்றறிக.

மறைவிலும் தீவினை செய்யாமை

428. எனக்குத் தகவன்றால் என்பதே நோக்கித்
தனக்குக் கரியாவான் தானுய்த் தவற்றை
நினைத்துத்தன் கைகுறைத்தான் தென்னவனும் காணர்
எனச்செய்யார் மாணா வினை.

உரை:—எனக்குத் தகவன்று என்பதே நோக்கி - இது நான் செய்யத் தகாது என்பதை மாத்திரம் கருதி, தனக்குக் கரியாவான் தானுய் - தான் செய்த பிழைக்குத் தன்னையே சாட்சியாக வைத்துக்கொண்டு, தென்னவன் - பொற்கைப் பாண்டியனென்ற மன்னன், தவற்றை நினைத்து - தன்னுடைய குற்றத்தை எண்ணி, தன் கைக்குறைத்தான் - அதற்குத் தண்டனையாகத் தன் கையை வெட்டிக்கொண்டான், (அதுபோல, தக்க பெரியோர்) காணுர் என - தங் குற்றத்தைப் பிறர் காண முடியாதென்றெண்ணி, மாணு வினை செய்யார் - தீவினையான கருமத்தைச செய்யமாட்டார்கள், எ - று.

குறிப்பு:—கோசலை யென்ற அந்தணன் வீட்டில் அவனுக்கு ஐயமுண்டாகும்படி கதவைத் தட்டினதற்காகத் தன் கையை ஒரு பாண்டியன் வெட்டி இழந்த கைக்காகப் பொற்கை போட்டுக் கொண்டான். கதவைத் தட்டியது அவனென்று ஒருவரு மறியாதிருந்தும் தனக்குத் தண்டனை விதித்துக் கொண்டதனுல் பெரியோர மறைவிலும் தீயன செய்யாமைக்கு அவன் கதையை யுதாரணமாகக் கூறினர.

விலக்குவார்மேல் வெகுண்டெழுதல்

429. குலத்துச் சிறியார் கலாந்தணிப்பான் புக்கு
விலக்குவார் மேலும் எழுதல்—நிலத்து
நிலையழுங்க வேண்டிப் புடைத்தக்கால் வெண்மாத்
தலைகீழாக் காதி விடல்.

உரை:—குலாம் தணிப்பான் புக்கு - குலகத்தை நீக்குவதற்காக இடையிற் புகுந்து, விலக்குவார் மேலும் - சண்டையிடுகின்றவர்களை விலக்குகின்றவாகளிடத்திலும், குலத்துசசிறியா எழுதல் - இழிந்த குடிபிறப்பிற் பிறந்த அற்பாகள் கோபித்துச சீறிப் பாயுதல், நிலத்து நிலை அழுந்த வேண்டி - பூமிமீது செல்லாமல் நிற்கின்ற குதிரையின் நிலையை மாற்றக்கருதி, புடைத்தக்கால் - அக் குதிரையை யடித்ததபோது, வெண்மாத் தலைகீழாய் காதி விடல் - வெள்ளிய குதிரைமேலேறி யிருப்பவன் சவாரி பண்ணத தெரியாமையால் தலைகீழாக வீழ்ந்து தன்புறுதல் போலாகும் எ - று.

அன்பிலார் நட்பின் பழமைபற்றிப் புது நட்பை நீக்காமை

430. தீர்ந்தே மெனக்கருதித் தேற்ரு தொழுகித்தாம
ஊர்ந்த பரிவும இலராகிச்—சேர்ந்தார்
பழமைமகந் தாகப் பரியார் புதுமை
முழுநட்பிற் சாணுட்கு நன்று.

உரை:—தீர்ந்தேம் எனக் கருதி - நாம் முடிவான நட்புடையோமென்றெண்ணி, தேற்ரு தொழுகி - நட்புடையவர்களிடத்தே தெளிவில்லாத காரியங்களைச செய்து நடந்து, தாம் ஊர்ந்த பரிவும இலராகி - தாம்

பழைய அன்புங் கூட வில்லாதவராகி, சேர்ந்தோர் பழமை கருதாத - தம்மைச் சார்ந்தொழுகுபவருடைய நட்பின் பழமையை ஆதரவாகக் கொண்டு, புதுமை பரியார் - அறிஞர் புதிதாய் வந்த நல்ல நட்பை விலக்க மாட்டார்கள், முழம் நட்பின் சாண் உட்கு கண்று - ஒரு முழங் கூடா நட்பைப் பார்க்கினும் சாணளவு தூரமுள்ள அசசம் நல்லதாகும், எ - று.

குறிப்பு:—நெடுநாட் பழகியவராகிலும் தீமை செய்தலும் அன்பு செய்யாமையு முடையவரைப் பழமைபற்றி நண்பராகக் கருதுதல் தவறு என்றும், நற்குணமுடையார் நட்புப் புதுமையா யிருந்தாலும் தழுவிக கொள்ளுதலே நல்லதென்றும் அறிவுறுத்தியவாறு காண்க

431. யானும் தானு மொழிந்தானை யாதும் எவர்க்கும் முன்னேனைத்
தானும் சிவனும பிரமனும் ஆகிப் பணைத்த தனிமுதலை
தேனும் பாலும் கன்னலும் அமுது மாகித் திதித்தென்
ஊனில் உயிரில் உணர்வினில் நின்ற வொன்றை யுணர்ந்தேனே.

உரை:—யானும் தானு மொழிந்தானை - என்னையும் தன்மயமாக்கித் தானேயாய் முடிந்தவனை, யாது எவர்கும் முன்னேனை - எவ்வகையான அறிவுப் பொருளும் எவ்வகையான சடப் பொருளும் தோன்றுதற்கு முன்னிருந்தவனை, தானும் சிவனும் பிரமனும் ஆகிப் பணைத்த தனிமுதலை - விண்டு பிரமன் உருதிரமென்ற மூர்த்திகளாய் விரிந்த ஒப்பற்ற முதற் பரம் பொருளாயிருப்பவனை, தேனும பாலும் கன்னலும் அமுதுமாகித் தித்தித்து - தேன், பால, கற்கண்டு தேவாமுத முதலிய எல்லாவற்றின் சுவைபோலப் பேரின்ப வனுபவமெனக்குத தந்து, என் ஊனில் உயிரில் உணாவினில் நின்ற ஒன்றை யுணாந்தேனே - என்னுடைய உடம்பிலும் உயிரிலும் உணாசசியிலும் கலந்து நின்ற ஒரு பொருளானவனை யான் அனுபவத்திற் கண்டேன், எ- று.

432. கருத்தே புகுந்து கதிகாட்டுங்
கண்ணே வருக மெய்ஞ்ஞானக்
கருமமே வருக கருணைபொழி
காரே வருக ஆனந்தப்
பெருக்கே வருக யாங்கள்பெறும
பேறே வருக மறைசொல்கிளிப்
பிள்ளாய் வருக பிறங்கு தெய்வப்
பெம்மான் வருக குறமடந்தை
தருக்கே வருக மிடியகற்றுந்
தருவே வருக மன்பதைக்கோர்
தஞ்சே வருக எமையளிக்குந்
தாயே வருக பவப்பிணிக்கு

மருந்தே வருக சமரபுரி
வாழ்வே வருக வருகவே
மறையின் சிரமெய்ப் பொருளான
வள்ளல் வருக வருகவே.

உரை :—கருத்தே புகுந்து கதிகாட்டுங் கண்ணே வருக - உள்ளத்திற் புகுந்து நாம் உய்வதற்குரிய நல்வழியைக் காட்டியருள்கின்ற ஞானக் கண் போன்றவனே எம்மிடம் வந்தருள்க !, மெய்ஞ்ஞானக் கரும்பே வருக - உண்மை யறிவுடைய கரும்பு போன்ற பேரின்பப் பொருளே வந்தருள்க !, கருணைபொழி காரே வருக - அருளாகிய நீரைப் பொழிகின்ற மேகம் போன்றவனே வந்தருள்க !, ஆனந்தப் பெருக்கே வருக - பேரின்ப வெள்ளமே வந்தருள்க !, யாகங்கள் பெறும் பேறே வருக - யாகங்கள் பெறக்கூடிய பெரிய லாபமாக விருப்பவனே வந்தருள்க !, மறை சொல் கிளிப் பிள்ளாய வருக - மந்திரங்களை யோதுகின்ற கிளிப்பிள்ளை போன்றவனே வந்தருள்க !, பிறவகு தெயவப் பெம்மான் வருக - விளங்குகின்ற தெயவத்தன்மை யுடைய முதல்வனே வந்தருள்க !, குற மடந்தை தருகவே வருக - குறவர் குலத்தில் உதித்த வள்ளிநாயகிக்குக் களிப்பைத் தருகின்ற பெருமானே வந்தருள்க !, மிடியகற்றுந் தருவே வருக - வறுமையை நீக்குகின்ற கற்பகமரம் போன்றவனே வந்தருள்க !, மன்பதைக் கோர் தஞ்சே வருக - மக்களெல்லாரும் அடைக்கலம் புகத் தக்கவனே வந்தருள்க !, எமை யளிக்குந் தாயே வருக - எங்களைப் பாதுகாக்கின்ற அன்னை போன்றவனே வந்தருள்க !, பவப் பிணிக்கு மருந்தே வருக - பிறவி நோய்க்கு மருந்தா யிருப்பவனே வந்தருள்க !, சமரபுரி வாழ்வே வருக வருகவே - சமரபுரியில வீற்றிருக்கும் பெருஞ் செல்வமானவனே வந்தருள்க !, மறையின சிரமெயப் பொருளான வள்ளல் வருக வருகவே - மூட்ப நூல்களின் முடிவிலுள்ள உண்மைப் பொருளான அருளாளனே வந்தருள்க !; எ - று.

தனிப்பாடற்றிரட்டு - உரையுடன்

இரண்டாம் பாகம் - முற்றுப்பெற்றது.

திருமகள் விலாச அசசு நிலையம் சென்னை :—1955.

திருக்குறள் மூலமும் - உரையும் விலை ரூ. 8-0-0

ஷெ உயர்ந்த கிளேஸ் கடிதம் ,, ரூ. 10-0-0

இதனில், பரிமேலழகர் உரையும், எளிய நடையில் செய்துள்ள தெளிபொருள் விளக்கப் பதவுரையும், கருத்துரையும், மேற்கோளுடனும் அசசிட்டுள்ளன. உயர்ந்த காலிகோ பைண்டு செய்யப்பட்டிருக்கிறது. டெம்மி 1+8 அளவில் 840-பக்கங்கள் கொண்ட பெரிய புத்தகம்.

திருக்குறள் பரிமேலழகர் உரை ,, ரூ. 5-0-0

டபிள் கிரௌன் 1+16 அளவில் சுமார் 600-பக்கங்கள் கொண்டது நல்ல கிளேஸ் கடிதத்தில் அசசிட்டு உயர்ந்த காலிகோ பைண்டு செய்தது. தமிழில் பயிற்சி யடைய விரும்பும் மாணவர்களுக்கு இன்றியமையாத கையடக்கமான பரிசுப் பதிப்பு.

திருக்குறள் மூலம் ராப்பர் அட்டை பைண்டு ,, அணா 0-8-0

$3\frac{1}{2}+2\frac{1}{2}$ அங்குல அளவில் நூதன உருவமைந்த அழகான தோற்ற முடைய அசசு எழுத்துக்களைக் கொண்டு தயாரித்தது. உயர்ந்த கிளேஸ் கடிதத்தில் சுத்தப் பிரதியாக வெளியிட்டுள்ளோம் இதுவரையில் வெளிவந்துள்ள பதிப்புகளிலும் இப்பதிப்பு முதலிடம் பெற்று விளங்குகிறது.

திருக்குறள் தெளி பொருள் உரை ,, ரூ. 1-12-0

$4\frac{1}{2}+3\frac{1}{2}$ அங்குல அளவில் கிளேஸ் கடிதத்தில் அசசிட்டு காலிகோ பைண்டு செய்துள்ளது. இதைபோன்ற கையடக்கமான பதிப்பு இதற்கு முன்னர் வெளிவந்ததில்லை.

சாதாரணசொல்லி விளங்க வைக்கக்கூடிய முறையில் பண்டிதர்களுக்கும் பாமரர்களுக்கும் எளிதில் பொருளுணர்த்தத் தக்கவாறு இவ்வுரை யமைந்துள்ளது. தமிழ மகள் அனைவரும் படித்தறிய வேண்டிய பொதுநிஷமாக விளங்குகிறது இப் பதிப்பு.

திருவாசகம் மூலமும - உரையும ,, ரூ. 5-0-0

திருநெல்வேலி சைவசித்தாந்தப் பேராசிரியர் திரு. கா. சுப்பிரமணியப் பிள்ளை எம் ஏ., எம். எல்., (அட்வொகேட்) அவர்கள் இயற்றிய இவ்வுரை தமிழறிஞர்கள் யாவராலும ஒருமனே பாராட்டுந்தகையதே எனக கூறுவது மிகையாகாது. இவ்வுரை ஒன்றே மாணிக்கவாசக சுவாமிகளின கருத்திற்கமைய எழுதப்பட்டதென்பது இந்நூலை வாசிப்போர் நன்குணர்வார்கள்.

சுவனிப்பு:—எம்மிடம் கிடைக்கக்கூடிய இதர தமிழ்ப் புத்தகங்கள் தேவையுள்ளவர்கள் தங்கள் விலாசத்தைத் தெரிவித்தால் விலை விவரமடங்கிய விலைப்பட்டி இலவசமாக அனுப்பப்படும்.

கிடைக்குமிடம்: B. இரத்தின நாயகர் சன்ஸ்,
57, வெங்கட்டாமய்யர் தெரு, சென்னை-1.